# தமிழரசு

1992

மலர் 22-23 இதழ் 19-23

மே 1

ஜன — ஜூலை —

JL
V21 N46
N92.22 & 23
1 893


தமிழரசு

Khadi Kraft HONEY!
A pure product of nectar and pollen now comes your way!

For Babies Health
PURE HONEY







Nature's bounty comes your way. Now from Khadi Kraft. In the shape of honey a sweetener, so pure and divine. A food product for the family.

Khadi Kraft Honey brings a lost tradition to your home. It contains vitamins and necessary ingredients to ensure perfect health, nourishment and strength. It can be used with every meal or as a soft drink. A true miracle food. Khadi Kraft Honey comes in enticing bottles.






Honey-Nature's own gift!
For you and the family.

Available at all
Khadi Kraft

Tamilnadu Khadi and Village Industries Board,
Kuralagam, Madras-600 108




## இந்த இதழில்...


| | |
|---|---|
| சட்டமன்றத்தில் ... | 2 |
| காவிரி (கவிதை) ... | 4 |
| தமிழகத்தில் மின்வெட்டே இல்லை! —மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு ... | 5 |
| மதுவிலக்கு ஆயத்தீர்வை, தீயணைப்புத்துறை, காவல்துறை - விவாதங்களுக்குச் சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் பதிலுரை ... | 9 |
| நெஞ்சையள்ளும் செஞ்சி ... | 19 |
| பெரியார் மாவட்டத்தில் சமுதாய நலப்பணிகள் ... | 22 |
| காவியமும் கற்பனையும் (இலக்கியம்) ... | 24 |
| தண்டமிழ் வளர்க்கும் தமிழ்ப் பல்கலைக் கழகம் ... | 27 |
| கீரைகளின் மருத்துவக் குணங்கள் (மருத்துவம்) ... | 30 |
| சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு அரசின் சலுகைகள் மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு ... | 44 |
| பயணிகளின் சொர்க்கம் கன்னியாகுமரி ... | 46 |



தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2023
பங்குனித் திங்கள் - 19
மலர்: 22 இதழ்: 19
1-4-1992


## சென்னையில் குழந்தைகள் திரைப்பட விழா!

குழந்தைகள் திரைப்பட விழா சென்னையில் ஜூன் மாதம் நடத்தப் படஉள்ளது. தமிழக அரசும் இந்தியக் குழந்தைகள் சங்கமும் இவ்விழாவை நடத்தும்.

இந்தியக் குழந்தைகள் திரைப்பட சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட அல்லது அந்தச் சங்கத்திடம் உரிமம் பெற்று வெளியிடப்படும் திரைப் படங்களுக்குக் கேளிக்கை வரி ரத்து செய்யப்படும். இதன்மூலம் அதிக அளவில் குழந்தைகளுக்கான திரைப் படங்களைத் தமிழ் மொழியில் தயாரிக்க வாய்ப்பு உருவாகும்.



மதுவின் தீமையைப் பிரச்சாரம் செய்யும் நோக்குடன் அரசு சார்பில் ரூ.85 இலட்சம் செலவில் தயாரிக் கப்படும் திரைப்படம், மகாத்மா காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2-ஆம் தேதி வெளியிடப்படும். இதேபோலத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றச் செயலாளர் ஆர்.எஸ். மனோகர் ரூ.2 இலட்சம் செலவில் தயாரிக்கும் 'வெளிச்சம்' என்ற நாடகம் மே மாதம் முதல் தேதி அரங்கேற்றப்படும்.

### ஆபாச சுவரொட்டி

ஆபாசமான சுவரொட்டிகள் ஒட்டினால் அரசு கடுமையான நட வடிக்கை எடுக்கும்.

திரையரங்குகளில் போலி நுழை வுச் சீட்டுகள் விற்கப்படுவதைத் தடுக்கவும் அரசு கடுமையான நட வடிக்கை எடுத்து வருகிறது.

## அண்ணா சாலை மேம்பாலம்

சென்னையில் உள்ள அண்ணா சாலையில், போக்குவரத்து நெரி சலைக் குறைக்க 12.8 கி.மீ. தூரத் திற்குத் தனிவழிப் பேருந்து மேம் பாலம் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

உலக வங்கியின் உதவியுடன் செயல்பட உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டம் குறித்துப் பொறியாளர் களின் ஆய்வுக்கு விடப்பட்டுள்ளது. 1987-இல் நாள் ஒன்றுக்கு அண்ணா சாலையில் 94,600 மோட்டார் வாகனங்கள் ஓடியதாகவும், 2011-இல் 1,77,800 வாகனங்கள் ஓடக்கூடும் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

1989-இல் சென்னைப் பெரு நகர் வளர்ச்சிக் குழுமத்தின் உதவி யுடன் பல்லவன் போக்குவரத்து ஆய்வுக்குழுவால் 2000-ஆம் ஆண்டில் வாகனக் கொள்ளளவு பற்றி ஆராயப்பட்டது.



# சட்டமன்றத்தில்...

159893

## பிற்படுத்தப்பட்டோர் நலனை ஆராய புதிய கமிஷன்

பிற்படுத்தப்பட்டோர் நலன்களை ஆராய மூன்றாவதாக ஒரு கமிஷனை அமைக்கத் தமிழக அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார் (23.3.1992).

தமிழ்நாட்டில் வறட்சிப் பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க ரூ.9 கோடியே 72 இலட்சம் வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் அறிவித்தார்

இந்த தொகையில் 1,500 ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்கு 4 கோடியே 75 இலட்சம் ரூபாயும், வேலைவாய்ப்புக்காக ரூபாய் 3 கோடியும், இதர பணிகளுக்காக ரூபாய் ஒரு கோடியே 97 இலட்சமும் ஆக மொத்தம் 9 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

(23.3.1992).

## மாணவிகளுக்கு 13 புதிய விடுதிகள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவிகளுக்காக இவ்வாண்டு தமிழ்நாட்டில் 23 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் செலவில் 13 புதிய விடுதிகள் கட்டப்படும்.



மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, 31.3.92 அன்று, இராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த ஸ்ரீதுளசி எனும் சமணப் பெரியாரின் மடத்தைச் சார்ந்த சமணப் பெண் துறவிகள் சந்தித்தனர்.

## அருங்காட்சியகத்தில் குளிர் சாதன வசதி

சென்னையிலுள்ள அருங்காட்சியகக் கலையரங்கில் குளிர்சாதன வசதி செய்யப்பட உள்ளது. கட்டட விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

அருங்காட்சியக வளாகத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றத் தனியார் ஒத்துழைப்பை நாட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அருங்காட்சியகத்தின் சிறப்புகளைப் பல வழிகளில் விளம்பரம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மதுரை திருமலைநாயக்கர் அரண்மனையின் அடித்தளத்தை வலுப்படுத்தும் பணி இந்த ஆண்டு தொடங்கப்படும்.

இதே போல் தஞ்சை அரண்மனையில் தர்பார் மண்டபம், மணிக்கோபுரம், ஆயுதக் கோபுரம், சர்ஜா மண்டபம் போன்றவைகளை சீராக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகளில் ரூபாய் 15 இலட்சம் செலவில் நூலகங்கள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார் (23.3.1992).

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பணிகளுக்குத் தேர்வு எழுத மாணவ- மாணவிகளுக்குப் பயிற்சி அளிக்க ரூ.35 இலட்சம் செலவில் தனிப்பயிற்சி நிலையம் ஒன்று சென்னையில் கட்டப்படும் என்று மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார் (23.3.1992).

## எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம்

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் மற்றும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகங்களைப் பிரித்து 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம்' என்ற பெயரில் புதிய போக்குவரத்துக் கழகம் ஒன்று 1.4.1992 முதல் காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் அறிவித்தார். (24.3.1992).

## 3 புதிய பாலிடெக்னிக்குகள்

போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்காகச் சென்னை, தருமபுரி மற்றும் திருநெல்வேலியில் மூன்று புதிய பாலிடெக்னிக்குகள் அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார் என மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தெரிவித்தார் (24.3.1992).

## மின்சாரத்தில் ஓடும் பஸ்

தமிழகத்திலேயே முதன்முறையாகச் சென்னையில் பல்லவன் போக்குவரத்துக் கழகமும், கோவையில் சேரன் போக்குவரத்துக் கழகமும் மின்கலத்தால் (பேட்டரி) இயக்கப்படும் பேருந்துகளைப் பரீட்சார்த்தமாக இயக்கும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் அறிவித்தார் (24.3.1992).

வனப்பகுதிகளில் திருட்டுகளைத் தடுக்க ரூ.52 இலட்சம் செலவில் 45 வயர்லெஸ் கருவிகள் அமைக்கப்படும் என்றும் - நடப்பு ஆண்டில் புதிதாக 2,000 பேருந்துகள் இயக்கப்படும். 1,842 பேருந்துகள் புதுப்பிக்கப்படும் என்றும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைசசர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தெரிவித்தார் (24.3.1992).

## பார்வையாளருக்குக் கட்டணம்

அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளை பார்க்கச் செல்லும் பார்வையாளர்களிடம் இனி கட்டணம் வசூலிக்கப்படும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எஸ். முத்துசாமி அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தார் (20.3.1992).

## மக்கள் குறை நீக்க...

மாவட்ட மக்களின் குறைகளைக் கேட்டு நடவடிக்கை எடுப்பதற்காக மாவட்டத்துக்கு ஒருவர் வீதம் 22 புதிய துணை மாவட்ட ஆட்சியரை நியமிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்தார் (19.3.1992).

## சத்யஜித்ரேக்குப் 'பாரத ரத்னா' விருது

உலகப் புகழ்பெற்ற வங்காளத் திரைப்பட இயக்குநர் திரு. சத்யஜித்ரேக்கு இந்தியாவில் வழங்கப்படும் விருதுகளில் மிக உயர்ந்த விருதான 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டுள்ளது. திரைப்படத் துறைக்கு இவர் ஆற்றியுள்ள சேவையைப் பாராட்டி இவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

திரு. சத்யஜித்ரேக்கு 1959-இல் 'பத்ம ஸ்ரீ' பட்டமும், 1965-இல் 'பத்ம பூஷன்' பட்டமும், 1976-இல் 'பத்ம விபூஷன்' பட்டமும் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



# காவிரி

மடந்தையெழில் காவிரியாள் கடலை யடைய
மகிழ்ச்சியுடன் வருகின்றாள் தமிழகந்தான்
அடைந்திடத்தான் செய்வதும்நம் கடமையாகும்
அஃதேதான் நடுவர்தம் தீர்ப்பும் ஆகும்.
''நடந்தாய்வாழி காவேரி'' என்று சொல்லும்
நல்லுரைக்குப் பொருளாகும் அவள் நடந்தால்!
நடந்துஅவள் வருவதாலே செழிக்கும் நாடே!
நீருக்குத் தடை போட்டால் நேரும் கேடே!

தென்னாட்டுக் கங்கைதானே காவிரி யாறும்?
தடுத்தாலதைச் செழித்திடுமா ஒருமைப்பாடும்
தென்னகந்தான் செழித்திடவே கங்கை நீரைத்
திருப்பிடுவார், அதுவரைக்கும் காவிரிதானே!
இந்தியத்தாய் பெற்றெடுத்த மக்கள் நாமே.
இனிதேதான் ஒற்றுமையாய் வாழ்வதாலே
தண்ணீரை யிரக்கமின்றித் தடுத்தா லங்கே
தழைப்பதெங்கே தமிழர்கள்நாம் மடிவோமிங்கே

தஞ்சையுந்தான் சிறந்திடுமா பொன்னி யின்றி?
தானழியும் மனித நேயம் அன்பும் குன்றி
கொஞ்சுமந்த யியற்கையினி யழிந்தே போகும்
குழந்தைகூட சிரிப்பதற்கு மறந்தே போகும்
நஞ்சைநிலம் என்பதப்போ ஏது நாட்டில்?
நெல்மணிகள் வீட்டிலிரா, இருக்கும்ஏட்டில்
புஞ்சைக்கும் பஞ்சந்தான் இனிமேல், வானம்
பருவமழை தருவதில்லை தந்தால் சேதம்!

தண்ணீர்தான் காவிரியில் இல்லை யென்றால்
தமிழ்நாடே சுடுகாடாய் வறண்டு போகும்
கண்ணீரே பின்நாளில் செந்நீராகும்
குடிப்பதற்கும் நீரின்றி உயிர்கள் சாகும்
அன்னையினும் தயவுடைய முதல்வர் தம்மின்
அறிவுத்திறம், அணுகுமுறை, ஆற்றல் தம்மால்
மண்ணகமே போற்றப் பல வெற்றி கொண்டார்
மகத்தான வெற்றிதனை யிதிலும் கொள்வார்.

கேசவாநந்த கிருஷ்ண குரு



# 'தமிழகத்தில் மின்வெட்டே இல்லை'

## மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு



தமிழகத்தின் ஈடில்லாத் தொழில் வளர்ச்சிக்கும், தொழில் பெருக்கத்திற்கும் மின்சாரம் இன்றியமையாதது என்பதை நன்கு உணர்ந்த இந்த அரசு பொறுப்பு ஏற்ற நாள் முதல் மின் உற்பத்தியை அதிகரிப்பதில் முன்னுரிமை கொடுத்து நடவடிக்கைகள் மேற்கொண்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

கடுமையான சூழ்நிலையினிடையே இந்த அரசு பொறுப்பு ஏற்றபொழுது உயர் அழுத்தத் தொழிற்சாலைகளில் மின் உபயோகத்தில் 25 சதவிகித மின் வெட்டும், மின் சுமையில் (Maximum Demand) 30 சதவிகித மின் வெட்டும் அமலில் இருந்து வந்தது. இதனால் தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறன் வெகுவாகப் பாதிக்கப்பட்டதோடு, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விலையும் கணிசமாக அதிகரித்தது.

மின்னாக்கிகள் (Generators) மிக அதிக அளவில் உபயோகப்படுத்தப்பட்டதால், டீசல்.

### சென்னை துரித இரயில் திட்டம்: கூட்டு நிறுவனம் அமைப்பு

சென்னை விரைவு போக்குவரத்துத் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகளைச் செயல்படுத்தத் தனி நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இந்த நிறுவனத்துக்குச் ''சென்னை மாநகர விரைவுப்போக்குவரத்து நிறுவனம்'' எனப் பெயரிடப்படும். கூட்டுத்துறை நிறுவனமாக இது செயல்படும். சென்னை துரித இரயில் இரண்டாம் கட்டப் பணிகள் மயிலாப்பூர்லஸ்ஸிருந்து தரமணி வரை செயல்படுத்தப்படும்.

முதற்கட்டமாக இந்த நிறுவனத்தின் பங்குத் தொகைக்கு அரசின் பங்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற 190 கோடி ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. விரைவாகச் செயல்படுத்தத் தேவைப்படும் நிதி ஆதாரங்கள் பல்வேறு நிதி நிறுவனங்கள், கூட்டுத்துறை தொழிலதிபர்கள் ஆகியோரிடமிருந்து பெறப்படும் என்று மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. டி.எம்.செல்வகணபதி அவர்கள் அறிவித்தார் (27.3.'92).

நுகர்வும் (Consumption) அதிகரித்து, பல பிரச்சினைகளுக்கு வழி வகுத்தது. இயற்கை ஒரு புறம் உதவாத நிலையில், மற்றொருபுறம் அனல் மின் நிலையங்களை இயக்குவதற்குத் தேவையான நிலக்கரி கிடைக்காது ஓரிரு நாட்களுக்கு மட்டுமே நிலக்கரி கையிருப்பு உள்ள அவல நிலை இருந்தது.

மக்கள் நலனில் தீவிர ஆர்வம் கொண்ட இந்த அரசு எடுத்துக் கொண்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளின் காரணமாக, இந்நிலை தற்போது முற்றிலும் மாற்றப்பட்டு ஒரு மாதத்திற்குத் தேவையான நிலக்கரி நம் கைவசம் தாராளமாக உள்ளது.

எண்ணூர், தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்கள் இந்த அரசு எடுத்துக்கொண்ட துரித நடவடிக்கைகளின் காரணமாகத் தற்போது நன்முறையில் இயக்கப்பட்டு, தங்களுடைய முழுமையான உற்பத்தித் திறனை எட்டியுள்ளன. புனல் மின் சக்தி நிலையங்களும் சிறந்த முறையில் தங்கள் முழு உற்பத்தித் திறன் அளவிற்கு மின் உற்பத்தி செய்ய தேவையான நீரையும் இயற்கை நமக்கு ஒரு வரப்பிரசாதமாக இந்த ஆண்டு அளித்துள்ளது.

நாங்கள் எடுத்துக்கொண்ட சீரிய முயற்சிகளின் பலனாகச் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு மின் உற்பத்தி சுமார் 10 சதவிகிதம் உயர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின் உற்பத்தியில் நாம் எடுத்துக் கொண்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளின் காரணமாக, மின் வினியோகத்தில் தற்போது அமலில் உள்ள மின் சுமையில் 10 சதவிகித மின் வெட்டையும் (Power cut) இன்று முதல் முழுமையாக நீக்க ஆணையிட்டுள்ளேன்.

தமிழகத்தின் சரித்திரத்தில் இது ஒரு மாபெரும் திருப்பு முனை ஆகும். கோடைக்காலத்தில் மின் வெட்டு அதிகரிக்கப்படும் என்ற அறிவிப்புகளை எதிர்பார்த்த தமிழக மக்களுக்கு, மின்வெட்டே இல்லை என்ற இந்தச் செய்தி தேனாக இனிக்கும் என நான் நம்புகிறேன்.

(மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டப்பேரவையில் 26.3.92ல் வெளியிட்ட அறிவிப்பு)

## டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகம் இந்த ஆண்டே புதுப்பிக்கப்படும்

கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர். நினைவகத்தை மாற்றி அமைக்கும் பணி அவரது நினைவு நாளான டிசம்பர் 24- ஆம் தேதிக்குள் முடிவடையும்.

எம்.ஜி.ஆரின் நினைவகத்தை மாற்றி அமைக்க ரூ.1.25 கோடியில்



திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதேபோல ராஜீவ் காந்திக்கு ஸ்ரீபெரும்புதூரில் 12.19 ஏக்கர் நிலப்பரப்பில் நினைவகம் அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதற்காகப் பிரதமர் நரசிம்ம ராவ் தலைமையில் உள்ள குழுவில் நானும் உறுப்பினராக இருக்கிறேன். ராஜீவ் காந்தி நினைவகத்துக்கு வடிவமைக்கப்பட்டு விரைவில் பணிகள் தொடங்கப்படும்.

### திருவள்ளுவர் சிலை

கன்னியாகுமரியில் 135 அடி உயரத் திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி, சிறபக் கலைஞர் கணபதி ஸ்தபதியிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. சிலை, பீடம் ஆகியவற்றை அமைக்கும் பணி சோளிங்கநல்லூர், கன்னியாகுமரி, அம்பாசமுத்திரம் ஆகிய இடங்களில் நடந்து வருகிறது. கடந்த ஆண்டு இதற்காக ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டது. பணியின் தன்மைக்கு ஏற்ப அவ்வப்போது தேவையான தொகை ஒதுக்கப்படும்.

### தந்தை பெரியார் நினைவகம்

தந்தை பெரியாருக்குக் கேரள மாநிலம் வைக்கத்தில் நினைவகம் அமைக்கும் பணி முடிந்துவிட்டது. அவரது நினைவகம் விரைவில் திறக்கப்படும்.

சிவகங்கையில் சிறப்பாக ஆட்சி புரிந்த மாமன்னர்கள் பெரிய மருது, சின்ன மருது சகோதரர்களுக்குப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் காளையார் கோயிலில் நினைவுச் சின்னமும் சிலையும் அமைக்கும் பணி முடியும் நிலையில் உள்ளது. திறப்பு விழா விரைவில் நடைபெறும்.

### திரைப்பட நகர்

திரைப்படத் தொழிலுக்காகச் சென்னையில் திரைப்பட நகர் அமைக்க ரூ:70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா ஏப்ரல் 16-ஆம் தேதி நடத்தப்படும். இந்நகர் அரசுக்கு அதிக வருவாயை ஈட்டித்தரக் கூடியதாக அமையும்.

பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதியம் ரூ.400-லிருந்து ரூ.500 ஆக ஏப்ரல் மாதத்திலிருந்து உயர்த்தப்படும்.

மாவட்டத் தலைமையகத்திலிருந்து செய்திகளையும் புகைப்படங்களையும் விரைவாகப் பெற்றிடவும் செய்திகளை அனுப்பவும் ஃபாக்ஸிமிலி என்ற நவீன சாதனம் ரூ.4 இலட்சம் செலவில் சென்னை கோட்டையில் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை அலுவலகத்தில் வைக்கப்படும்.

### கேபிள் டி.வி.

தமிழ்நாடு வீடியோ கேசட் மூலம் தொலைக்காட்சியில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) தொடர்பாகச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் வெளி



யிடப்பட்டுள்ளன. இதன்மூலம் கேபிள் டி.வி. தொழில் உரிமம் வழங்கும் முறையின் கீழ், கொண்டு வரப்பட்டுள்ளது. மாவட்டங்களில் ஆட்சித் தலைவர்களும், சென்னை நகரில் காவல்துறை ஆணையரும் கேபிள் டி.வி.-க்கு உரிமம் வழங்குவார்கள்.

### வள்ளுவர் கோட்டம்

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ரூ.50 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதி செய்யப்படும்.

### செய்தி மையம்

வெளி மாநில மக்களுக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் உதவும் வகையில் தில்லியில் தமிழக அரசின் செய்தி மையம் ஒன்று அமைக்கப்படும்.

### ஊர்ப்பெயர் பிழைதிருத்தத் தனிக் குழு

தமிழகத்தில் சில ஊர்ப் பெயர்களில் உள்ள இலக்கணப் பிழை, பொருள் பிழைகளைத் திருத்தி சரியான பெயர்களை நடைமுறைக்குக் கொண்டுவர தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்காக ஒரு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் உலகத்தமிழ் மாநாடு

டாக்டர் எம்.ஜி.ஆர். முன்பு மதுரையில் நடத்தியதைப் போலத் தமிழ்நாட்டில் மீண்டும் உலகத் தமிழ் மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்த எண்ணியுள்ளதாக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்.

செய்தி-தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைகளுக்கான மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளித்துப் (25.3.'92) பேசுகையில் அவர் கூறியதாவது:

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை மேலும் வலுப்படுத்த உரிய வழிவகைகளைக் கண்டறிய மூத்த தமிழ் அறிஞர்களைக்



கொண்ட குழு ஒன்று விரைவில் அமைக்கப்படும்.

சென்னையிலுள்ள அரசு அருங்காட்சியக அரங்கில் மாதந்தோறும் 'பண்பாட்டுப் பலகணி' என்ற பெயரில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதைப் போல இனி வாரம் இரு முறை கலை நிகழ்ச்சிகளை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த அருங்காட்சியகத்திலுள்ள 2,000-க்கும் மேற்பட்ட கலைப் படிமங்களை வைத்து அரிய கண்காட்சியை அடுத்த மாதத்தில் தொடங்க அரசு உத்தேசித்துள்ளது.

அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சி மொழியாக நடைமுறைப்படுத்தி ஊக்கம் அளிக்கும் வகையில் எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட, வட்ட நிலை அலுவலர்கள் பங்குபெறும் ஆட்சி மொழிக் கருத்தரங்குகளை அரசு தொடர்ந்து நடத்தும்.

## பாரதிதாசன் பாடல்கள் 3 மொழிகளில் மொழிபெயர்ப்பு

பாவேந்தர் பாரதிதாசனின் 100 பாடல்களை கன்னடம், மலையாளம், தெலுங்கில் மொழி பெயர்த்து வெளியிடும் பணி தொடங்கிவிட்டது.

செந்தமிழ்ச்சொற்பிறப்பியல் தயாரிப்புத் திட்டத்தில் இந்த ஆண்டில் 'ஆ' முதல் 'ஔ' முடிய உள்ள இரு பகுதிகள் வெளியிடப்படும்.

தேவநேயப் பாவாணரால் ஆராய்ச்சி செய்து தொகுக்கப்பட்ட அகரத்தில் தொடங்கும் 6,500 சொற்கள் பேரகர முதலியின் முதல் பகுதி 1985-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதன்பின் 1989-ஆம் ஆண்டு முதல் தன் இயக்கமாகச் செயல்படும் அகர முதலித் திட்ட இயக்ககம் பேரகர முதலி முழுமைக்கும் தேவையான 60,000 சொற்களைச் சொல்லடைவு செய்துள்ளது.

தமிழக மரபு வழிக் கலையை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் அவற்றைப் பதிவு செய்யத் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் முடிவு செய்துள்ளது.



தமிழகத்திலுள்ள புகழ் வாய்ந்த வாய்ப்பாட்டுக் கலைஞர்களின் இசையையும் மன்றம் ஒலியிழையில் பதிவு செய்யும்.

உதகை, மதுரை ஆகிய இடங்களில் ஓவியக் கலையரங்கு அமைக்கப்படும்.

ஆட்சிச் சொல்லகராதியின் கையடக்கப் பதிப்பு அச்சில் உள்ளது. அரசு ஊழியருக்குப் பயன்படும் புதிய ஆங்கிலம் தமிழ், தமிழ்-ஆங்கிலம் அகராதிகளை வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

- மாண்புமிகு முதல்வர் அவர்கள், சட்டமன்றத்தில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை மானிய விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய உரையிலிருந்து (25.3.1992).

# நூல் நயம்

### இதழியல் உலகில் 'தமிழரசு'

**ஆசிரியர்:** புலவர் தமிழ்ப்பித்தன்

**வெளியீடு:**

மணிவாசகர் பதிப்பகம்
55, லிங்கி தெரு
சென்னை-600 001

**விலை:** ரூ.35 பக்கம்: 288

தமிழக அரசின் அதிகாரபூர்வ ஏடான 'தமிழரசு' [illegible] கடந்த 21 ஆண்டுகளாக, தகவல் அறிவிப்புச் சாதனங்களில் [illegible] முக்கியப் பங்காற்றி வருகின்றது.

'தமிழரசு' வெறும் அரசு இதழாக மட்டுமின்றி, பல்சுவைத் திங்களிருமுறை இதழாகவும் வெளிவருவதை நாம் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

அரசின் திட்டங்களையும், சட்டங் களையும், செயல்பாடுகளையும் தெள்ளத் தெளிவாகக் கூறும் இதழாக மட்டுமின்றி, வெண்பாப் போட்டி, தமிழ் வளர்த்த பெரியார், இலக்கிய விருந்து போன்ற பகுதிகளையும் கொண்டு தமிழிலக்கியத் தொண்டையும் ஆற்றி வருகின்றது.

இதேபோல தலைவர்கள், அறிஞர்கள் நினைவாகச் சிறப்பு மலர்களையும், அரசின் வளர்ச்சிப் பணிகளை விளக் கிடும் மாவட்டச் சிறப்பு மலர்களையும், அரசின் சாதனைகளை விளக்கிடும் தொகுப்பு மலர்களையும், தமிழர் திரு நாள் போன்ற சிறப்பிதழ்களையும் வெளியிட்டு வாசகர்களின் மனமுவந்த பாராட்டுகளைப் பெற்று வருகின்றது.

அத்துடன் சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரைகளைத் தொகுத்து இலவச இணைப்புகளையும் அவ்வப்போது இது வழங்கி வருகின்றது.

அரசு இதழ்களிலேயே வடிவமைப் பிலும், அச்சமைப்பிலும் இது தன்னிகரற்று விளங்குவது, இதன் தனிச் சிறப்பாகும்.

இத்தனைச் சிறப்புகளையும் உள்ளடக் கிய இந்த நூலை, புலவர் தமிழ்ப்பித்தன் அவர்கள் எழுதியிருப்பது இன்னொரு சிறப்பு அம்சமாகும்.

புலவர் தமிழ்ப்பித்தன் தமிழரசு தொடங்கப்பட்ட காலம் முதலே பணி ஆற்றி வந்தவர். தமிழரசோடு இணைந்து இழைந்து உழைத்தவர். இந்தத் தொகுப்பை எழுத இவரே ஏற்றவர்.

அந்த வகையில் இந்த நூலை மிக அழகாக, தெளிவாக நல்ல தமிழில் எழுதித் தந்திருப்பது பாராட்டுக்குரிய செயலாகும்.

ஒரு அரசு இதழின் ஏறக்குறைய கால் நூற்றாண்டுப் பணிகளைத் தொகுத்தும் பகுத்தும், வகுத்தும் தருவது என்பது அவ்வளவு எளிதான செயலல்ல. அந்த அருஞ்செயலை ஆற்றியிருக்கின்ற நூலா சிரியரை எவ்வளவு போற்றினாலும் தகும்.

இதழியல் உலகில் தமிழரசுக்கு ஒரு' நிலையான இடமுண்டு என்பதைக் காட்டும் காலக் கண்ணாடியாக இந்நூல் விளங்குகிறது.

இளைய தலைமுறையினர்க்கு, குறிப் பாக இதழாராய்ச்சியாளர்க்கு இந்நூல் மிகச் சிறந்த வழிகாட்டியாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயப்பாடில்லை.

- பொ. மறைமலை

### ஆரோக்கிய வாழ்விற்குப் பயன்தரும் கீரை வகைகள்

**ஆசிரியர்:** டாக்டர் ஏ.ஆர்.என்.துரைராஜ்

**வெளியீடு:**

கற்பகம் புத்தகாலயம்
59, ஆடம் தெரு
மைலாப்பூர், சென்னை-600 004

விலை: ரூ.25 பக்கம்: 222

கீரைகளின் பயன்கள் பற்றி நாம் ஓரளவேனும் அறிந்திருந்தாலும், அவற் றின் முழுப் பயன்கள் மற்றும் செய் முறைகள் பற்றி இந்நூலில் ஆசிரியர் நன்கு விளக்கியிருக்கிறார். இந்திய நாடெங்கும் பரந்து காணப்படுகின்ற சுமார் 27 கீரை வகைகளின் குண இயல்புகளையும், இந்தக் கீரைகளின் சிறப்பான குணங்கள் பற்றிய சித்தர் பாடல்கள் மற்றும் சங்கப் புலவர்களின் பாடல்களையும் கோடிட்டுக் காட்டி இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக, சிறுநீரகம் நன்றாகச் செயல்பட, தீராத இருமலை நிறுத்த, சிலந்திக் கடிக்கு என்று இன்னும் பல் வேறு பிணிகளுக்கு 'ஆடாதொடை' என்ற மூலிகை எவ்வாறு பயன்படுகிறது என்பதை ஆசிரியர் நன்கு விளக்கியிருக் கிறார். 'துளசி'யின் பயன் நமக்குத் தெரிந்திருந்தாலும், அதன் மூலம் குண மாகும் நோய்கள் பற்றியும் ஆசிரியர் விரிவாகக் கூறியிருக்கிறார்.

நோயின்றி நீண்ட நாள் நலமுடன் வாழ, எளிதாகக் கிடைக்கும் கீரைகளின் பயன்கள் பற்றி நாம் அறிந்து கொள்ள இந்நூல் பெரிதும் பயன்படும்.

- ஜெ. சந்திரன்.

### சிந்தனை மொழிகள்

**ஆசிரியர்:** பெ. வேலுச்சாமி

**வெளியீடு:**

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
(பி) லிமிடெட்,
சென்னை-600 098.

பக்கம்:59 விலை:ரூ.6/-

பழமொழிகள் சுவையானவை. சிந்தனையைத் தூண்டுபவை. ஆன்றோர் களின் அனுபவ மொழிகளாகவும் அவை இருப்பதால் வாழ்க்கைக்கு வழிகாட்டி யாகவும் விளங்குபவை. இந்நூலின் ஆசிரியர் அகர வரிசையில் தொடங்கி, பல அரிய பழமொழிகளைத் தொகுத்து வழங்கியுள்ளார்.

''ஒரு துளி மை பத்து இலட்சம் பேர்களைச் சிந்தனை செய்யத் தூண்டக் கூடியது''

''ஒரு மனிதனின் கெட்ட குணங்களை வெறுத்து விடு. ஆனால் அம்மனிதனை வெறுக்காதே'' - போன்ற புதுமொழி களை இடையே புகுத்தியுள்ளது பாராட்டு தற்குரியது.

—சுகுமாரன்

### மங்கையர் அனுபவத் தையற்கலை ஆசான் (முதல் மற்றும் இரண்டாம் பாகங்கள்)

**ஆசிரியர்:** பி. தாமோதரன்

**வெளியீடு:**

வாணி கலாமந்திர் கலைநூற் பதிப்பகம்
மயிலாப்பூர்,
சென்னை-600 004

விலை: (இரண்டு பாகங்களும் தலா ரூ.45)

இந்நூல், இரண்டு பாகங்களாக வெளிவந்துள்ளது. இவை, தையற் கலையின் அடித்தளத்தைப் பலப்படுத்த வும், அதன்மேல் மிகவும் உறுதியான 'தையற்கலை' என்னும் கட்டடத்தை ஏற்றவும் உதவும்.

சாதாரண முறைமட்டுமல்ல இக் கலையின் நூதன முறையும் மிகத் தெளி வாகக் கூறப்பட்டுள்ளது.

இந்நூலாசிரியர், முதல் பக்கத்தில் மங்கையரின் அத்தியாவசியமான உடை களைப் பற்றிய விளக்கம் கூறியிருக் கிறார். இதில் சோலியைப் பற்றி நான்கு வகைகளைக் குறிப்பிட்டு விளக்கம் கொடுத்திருக்கிறார். சோலியைத் தைக்க அவர் கொடுத்திருக்கும் தெளிவான வரை படம், விளக்கவுரை, நூதன முறையைச் சொல்லி இருக்கும் விதம், மிகச் சுலப மாக நாம் மாதிரி பேப்பர் பேட்டர்ன் எடுத்து தைத்து விடலாம். ஆங்காங்கே இவர் கொடுத்திருக்கும் குறிப்பு மிகவும் உதவியாக இருக்கிறது. இப்புத்தகத்தில் மேலும் சில நவநாகரீக ஆடைகளை குறிப்பாகத் தேர்ந்தெடுத்து விளக்கம் தந்திருக்கிறார். — இ. நித்தியக்கல்யாணி



# மதுவிலக்கு - ஆயத்தீர்வை
# தீயணைப்புத்துறை - காவல்துறை
# விவாதங்களுக்குச் சட்டமன்றத்தில்
# மாண்புமிகு முதல்வர் பதிலுரை !

அரசியல் சாதுரியமும், தொலைநோக்குப் பார்வையும் படைத்த தமிழக மக்கள், தமிழகத்தில் முந்தைய ஆட்சிக் காலத்தில் நடந்த அநியாயங்கள், அக்கிரமங்கள், அலங்கோலங்கள், அருவருக்கத் தக்க நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் அதிருப்தி அடைந்து, தங்களுக்குப் பாதுகாப்பு வழங்குகிற, மக்கள் பணி செய்கிற ஒரு நல்ல நிலையான, முறையான ஆட்சி தமிழகத்திற்கு வரவேண்டும் என எண்ணினார்கள். அந்த எண்ணத்திற்குச் செயல்வடிவம் தந்து, அ.இ.அ.தி.மு.க.-வைச் சேர்ந்த எங்களைப் பெருவாரியாகத் தேர்ந் தெடுத்து, மகத்தான தேர்தல் வெற்றியை வழங்கி, இந்த மாமன்றத்திற்கு, அனுப்பி வைத்தார்கள். நல்லது நடக்கும், பாதுகாப்புக் கிடைக்கும் என்று கருதிய மக்களின் பெரும் எதிர்பார்ப்புகளையும், ஏக்கங்களையும் நிறைவேற்றுகிற வகையில், நாங்கள் உழைத்து வருகிறோம்; இனியும் மக்களுக்கு உழைத்திடத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். ஆட்சிக்கு வந்த 9 மாதங்களுக்குள், இரண்டாவது வரவு-செலவுத் திட்டத்தினை இப்போது சமர்ப்பித்துள்ளோம். விண்ணை முட்டும் அளவில் மக்களின் பல்வேறு எதிர்பார்ப்புகள் ஒரு புறம், எதையுமே செய்ய முடியாத அளவுக்கு நிதிப் பற்றாக்குறை மறுபுறம். இவற்றோடு-தேர்தல் களத்திலே படுதோல்வியைச் சந்தித்தவர்கள், எங்களின் மாபெரும் வெற்றியைக் கண்டு பொறாமைப்பட்டுப் பொறுக்க முடியாத வர்கள், நாங்கள் செய்யும் எதையுமே குற்ற நோக்கோடும், குறுகிய மனப்பான்மையோடும் பார்த்துக்கொண்டு, வசைபாடிக் கொண்டிருக் கிறார்கள்.

மக்களின் நலன்களுக்காகவும், வசதிகளுக்காக வும் செய்யப்படும் மாபெரும் நற்காரியங்களுக்குக் கூட, மாசு கற்பிக்கிறார்கள்; மனக்குழப்பம் அடை கிறார்கள். இவற்றை எல்லாம் நான் இங்கே சூசகமாகச் சொல்லுவதற்குக் காரணம், எப்படிப் பட்ட சூழ்நிலையில் இந்த அரசு தனது கடமையைச் செய்ய வேண்டி இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டத்தானே தவிர, யார் மீதும் சுடுசொல்லை வீச வேண்டும் என்பதற்காக அல்ல. மக்களுக்காகச் செயல்படத் தயாராக உள்ள, எங்கள் அரசின் அணுகுமுறை பற்றிய விளக்கங்களை, நான் பல முறை இந்த மாமன்றத்தில் பேசியிருந்தாலும், அவைகளை மீண்டும் உங்களுக்கு நினைவுபடுத்த நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளதைக் கருதி, எனது பதிலுரையை வழங்க விழைகிறேன்.

**மதுவிலக்கு**

நமது மாநிலத்தில் 31 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அவை சர்க்கரையை உற்பத்தி செய்வதோடு, உபபொருளாக (By product) கருப்பஞ்சாற்றுக் கசண்டையையும் (Molasses) உற் பத்தி செய்கின்றன. வடிசாலைகளில் (Distilleries) கருப்பஞ்சாற்றுக் கசண்டிலிருந்து சாராவியைத் (Alcohol/Sprit) தயாரிக்கின்றனர். அவ்வாறு தயாரிக்கப்பட்ட சாராவியில் இருந்துதான் சாராயம், மது தயாரிக்கப்படுகிறது. அவை மட்டுமின்றித் தொழிற்சாலைகளுக்குத் தேவையான பல்வேறு இரசாயனப் பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபோது, சர்க்கரை ஆலைகளில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு வெகுவாகத் தேங்கிக் கிடந்தது. அவற்றை இரும்புத் தொட்டிகளில் சேமித்து வைக்க இடமில்லாததால், திறந்த வெளிகளில் வெட்டப்பட்ட குழிகளில் சேமித்து வைக்க வேண்டிய கட்டாய நிலையில் சர்க்கரை ஆலைகள் இருந்தன. இதனால் ஆலை களுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டது. இதற்கு உடனடியாகத் தீர்வு காணவேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டது. இப்பிரச்சினையைத் தீர்க்க, நீண்ட காலத் திட்டங்களையும், குறுகிய காலத் திட்டங்களையும், தொலைநோக்குப் பார்வை யோடு வகுக்க, இந்த அரசு பல முயற்சிகளை மேற் கொண்டது. மத்திய அரசின் மூலமாக, ஒரு இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு, வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

கருப்பஞ்சாற்றுக் கசண்டு தொழிற்சாலைகளுக்கு வழங்குவதில், இருந்துவந்த தடை தளர்த்தப்பட்டது. இந்திய அரசின் மூலமாக வெளி மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. இது போன்ற குறுகிய கால நடவடிக்கைகளை, உடனடியாக மேற்கொண்டதால், இந்தப் பிரச்சினை கணிசமான அளவிற்குத் தீர்க்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, சர்க்கரை ஆலைகளால் அதிகமாக உற்பத்தி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டை வீணாக விடாமல், நாமே நிரந்தரமாகப் பயன்படுத்தும் தொலைநோக்கு எண்ணத்தில், புது வடிசாலைகளை (Distilleries) அமைப்பதற்கு அனுமதி வழங்குவது, என்ற ஒரு கொள்கை முடிவினை இந்த அரசு எடுத்தது. அதில் குறிப்பாகச் சர்க்கரை ஆலைகளுக்கு முன்னுரிமை கொடுக்கலாம். அப்படிக் கொடுக்கப்படும் சர்க்கரை ஆலைகளில் தனியாருக்கும் வாய்ப்பு அளிக்கலாம்; அதே நேரத்தில் கூட்டுறவு நிறுவனங்களுக்கும், அரசு நிறுவனங்களுக்கும் முன்னுரிமை கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கொள்கை அடிப்படையில் Aruna Sugars, Arooran Sugar Mills, Kothari Sugars & Chemicals Limited, Rajashree Sugars & Chemicals Limited ஆகிய நான்கு தனியார் சர்க்கரை ஆலை நிறுவனங்களுக்கு, ஒரு இலட்சத்து 80 ஆயிரம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டை, ஆண்டுதோறும் வழங்குவது என்ற ஒரு முடிவை இந்த அரசு எடுத்துள்ளது. இது தவிர, ஏற்கெனவே இயங்கி வரும் வடிசாலைகளை விரிவாக்க விரும்பினால், அவர்களுக்கும் தகுதி அடிப்படையில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு வழங்கலாம் என்ற முடிவினையும் இந்த அரசு எடுத்து இருக்கிறது.

அடுத்து, மாநில ஆயத்தீர்வை பற்றிய கருத்தைச் சொல்லுகின்றபோது, டாஸ்கோ நிறுவனத்திடமிருந்து பீர் தொழிற்சாலையை ஏன் விற்றீர்கள்? என்ற ஒரு பெரும் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. இந்த மாமன்றத்திற்கு நன்றாகவே தெரியும். மலிவு விலை மதுவை ஒழிப்பது இந்த அரசின் கொள்கை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதுதான் மலிவு விலை மதுவைத் தயாரிக்கும் பிளண்டிங் யூனிட்டுகளை நிறுவுவதற்காகத் தமிழ்நாடு சாராவிக் கழகம் (TASCO) என்ற ஒரு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. அரசுக்குச் சொந்தமான டாஸ்கோ நிறுவனம்தான், சாராவிக் கலவைத் தொழிற்சாலைகளை நிறுவி நடத்தி வந்தது. இந்தக் கழகம் EMPEE DISTILLERY என்னும் தனியார் பீர் தொழிற்சாலையை அரசுத் தரப்பில் எடுத்துக் கொண்டு பீர் உற்பத்தி செய்யத் தொடங்கியது.

இந்த அரசு பதவி ஏற்றவுடன், மலிவு விலை மதுவை ஒழித்து, அரசுத் துறையில் பீர், மது போன்றவற்றை உற்பத்தி செய்வதைக் கைவிட வேண்டும் என்ற கொள்கை முடிவு எடுத்தது.



மலிவு விலை மதுவை ஒழித்ததால், அதைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை (பிளண்டிங் யூனிட்டுகளை) மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. டாஸ்கோ நிறுவனத்தின் பெரும் வேலையாகிய 'சாராயத் தயாரிப்பு ஒழிக்கப்பட்டபின், டாஸ்கோ நிறுவனத்தின் வேலை வெகுவாகக் குறைந்து விட்டது. அந்த நேரத்தில் இந்த பீர் தொழிற்சாலையை மட்டும் நடத்துகின்ற ஒரு சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டது.

அதன் தொடர்ச்சியாக முந்தைய அரசு வாங்கிய பீர் தொழிற்சாலையைத் திரும்பக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையில், யாரிடமிருந்து அந்தத் தொழிற்சாலையை எடுக்கப்பட்டதோ, அவருக்கே, அவர் விரும்பினால், திருப்பிக் கொடுப்பதில் முன்னுரிமை வழங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இது நியாயமும் கூட. அதன்படி, ஏற்கெனவே யாரிடமிருந்து இந்தத் தொழிற்சாலையை அரசு வாங்கியதோ - அவருக்கே தற்போதைய விலை நிர்ணயிக்கப்பட்டு, அதுவும் உயர்மட்ட அதிகாரிகளையும், வல்லுநர்களையும் கொண்ட குழு நிர்ணயித்த விலைக்கே விற்கப்பட்டிருக்கிறது. கொள்கைக் குறிப்பில் சுட்டிக் காட்டியபடி, ரூ.8.02 கோடிக்கு 1989-இல் வாங்கிய இந்தத் தொழிற்சாலை இப்போது ரூ.10.44 கோடிக்கு விற்கப்பட்டுள்ளது என்பதை நினைவுப்படுத்த விரும்புகிறேன். ஒரு வேளை Empee Distillery - தனக்கு இந்த பீர் தொழிற்சாலையை வேண்டாம் என்று சொல்லியிருந்தால், டெண்டர் முறையைப் பின்பற்றி அது விற்பனை செய்யப்பட்டிருக்கும். எனவே, இதனை விற்றதில், அரசுக்கு இலாபமே தவிர எவ்வித இழப்பும் இல்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதே சந்தர்ப்பத்தில் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இப்போது மூடிக்கிடக்கின்ற சாராவிக் கலவை ஆலைகள், ஆவினுக்குக் கொடுப்பதாகக் கொள்கைக் குறிப்பில் சொல்லியிருக்கிறதே, இதை வைத்து ஆவின் நிறுவனத்தார் என்ன செய்ய போகிறார்கள்? அவர்கள் சாராயமா தயாரிக்கப் போகிறார்கள் என்று கேட்டார்.

'ஆவின்' மிகப் பெரிய கூட்டுறவு நிறுவனம், சென்னை மாநகரத்தில் 'ஆவின்' மூலமாகப் பால் பொட்டலங்கள் வழங்கப்படுவது, உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். இதைப்போல ஏனைய நகரங்களில் பால் பொட்டலங்கள் வழங்குவதற்கு, இந்தச் சாராவி கலவைத் தொழிற்சாலைகள் மூலமாக ஏற்பாடு செய்வதற்காகத்தான், 'ஆவின்' நிறுவனத்தார் சில பிளண்டிங் யூனிட்டுகளைக் கேட்கிறார்கள். சாராயப் பாக்கெட் போடும் அதே மெஷின்களைச் சிறிது மாற்றம் செய்து, பால் பாக்கெட் போட 'ஆவின்' நிறுவனத்தால் பயன்படுத்த இயலும் என்பதற்குத்தான் அவர்கள் கேட்கிறார்கள். ஆகவே அவர்களுக்குக் கொடுத்ததுபோக எஞ்சிய இயந்திரங்களை ஏனையவர்களுக்கும், மற்றவர்களுக்கும் விற்கலாம். எப்படி விற்பது, என்ன விலைக்கு விற்பது என்பதற்கு, அதிகாரிகளைக் கொண்டு ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சாராவி கலவை ஆலைகளின் மொத்த மதிப்பு சுமார் ரூ.22 கோடி ஆகும்.

இதே பொருள் குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு பி.வி. ராஜேந்திரன் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்தார். அவருக்கும் இதில் விளக்கம் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன்.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் அயல் நாட்டு மது, பீர் போன்றவற்றைப் பொருத்த வரையில், முந்தைய காலங்களில் நடந்து வந்ததைப் போல, 5 தனியார் நிறுவனங்கள் மூலமாக அவை தயாரிக்கப்பட்டு, அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (TASMAC) மூலம் மொத்தமாக வாங்கப்பட்டு, மூவாயிரத்திற்கும் மேற்பட்ட சில்லரை விற்பனைக் கடைகளின் மூலம், விற்பனை செய்யப்படுகிறது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

முந்தைய (தி.மு.க.) அரசின் காலத்தில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மது வகைகளுக்கும் பீர்களுக்கும், விலை நிர்ணயித்துப் பரிந்துரைக்க ஒரு குழு அமைக்கப்பட்டிருந்தது. இம்முறையினால் பல குறைபாடுகளும், அரசிற்கு இழப்புகளும் ஏற்பட்டன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் மொத்த வியாபாரதாரராகிய தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், மார்க்கெட் நிலவரத்தை அறிந்து உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடி, விலை நிர்ணயிக்கும் முறை இருந்தது. எங்கள் அரசும் அந்த முறையையே பின்பற்றலாம் என்று முடிவு செய்துள்ளது. சில்லரைக் கடையாளர்களுக்கும் மொத்த வியாபாரிகளுக்கும், ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்திற்குமேல் இலாபம் வைத்து விற்கக் கூடாது என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. சில்லறைக் கடைகள் எல்லாம் உரிய காலத்தில் ஏலத்திற்கு விடப்படும் என்பதையும், இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

**பூவுக்குள்ளே நாகம் போல...**

மலிவு விலை சாராயத்தை ஒழித்ததில் மெத்த மகிழ்ச்சி அடையும் அதேநேரத்தில், 'கள்ளச் சாராயம் தாராளமாகவும், ஏராளமாகவும் கிடைக்கிறது' என்ற ஒரு சில மாண்புமிகு உறுப்பினர்கள் பழித்தும்; இல்லை, இல்லை அவை கட்டுப்படுத்தப் பட்டுள்ளது, ஏன்; பல பகுதிகளில் அறவே ஒழிக்கப்பட்டுள்ளது' என்று பலர் பாராட்டியும் குறிப்பிட்ட கருத்துக்கள், என் கவனத்தை ஈர்த்துள்ளன.

என்னைப் பொறுத்த வரையில், ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையை உறிஞ்சி, அவர்களது உயிரைக் குடிக்கும் மலிவு விலை சாராயத்தை, இந்த மாநிலத்தை விட்டே விரட்ட வேண்டும்; முழுமையாக ஒழிக்க வேண்டும் என்பதில் நான் தீவிரமாக இருக்கின்றேன் என்பதை, ஆணித்தரமாக மீண்டும் கூற விரும்புகிறேன். எக்காரணத்தை முன்னிட்டும் இந்த முடிவினைத் தளர்த்த நாங்கள் தயாராக இல்லை என்பதை, இந்த மாமன்றத்திற்குத் தெளிவாக எடுத்துரைக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

இதற்காக வெளியிடப்பட்டுள்ள ஆணைகளும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் முடிவில்லாத் தொடர்கதையாகத் தொடருமே தவிர, முடிந்து விட்ட சிறுகதையாக இருக்காது என்பதையும், இங்கே உறுதியாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நோக்கத்தை அடைவதற்காக உருவாக்கப் பட்ட சிறப்புப் பிரிவைச் சார்ந்த காவல்துறை அலுவலர்களும், வருவாய்த்துறை அலுவலர்களும், சமீப காலத்தில் எடுத்துள்ள அதிரடி நடவடிக்கைகள், அதன்மூலம் கைப்பற்றிய பொருட்கள், கையாண்ட கெடுபிடி யுக்திகள், மற்றும் அவர்கள் பணியாற்றிய பாங்கு, செயல்படுத்திய வேகம், அனைத்தும் நமது பாராட்டுக்கு உரியவை ஆகும். அண்டை மாநிலத்திலிருந்து கடத்தி வரப்படும் சாராயங்களைக் கைப்பற்றுவது, கள்ளச்சாராயம் காய்ச்சும் இடங்களைக் கண்டறிந்து சோதனையிட்டு அவற்றை அழிப்பது, மேலும் இந்த வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரிகளையும், பெரும் புள்ளிகளையும், கடத்தல்காரர்களையும் உடன் கைது செய்வது, போன்ற தீவிர நடவடிக்கைகளால், இவர்களின் கொட்டம் பெருமளவு அடக்கப்பட்டு இருக்கிறது; இருந்தாலும் பூவுக்குள்ளே நாகம் இருப்பதுபோல, சில புல்லுருவிகள், கொடியவர்கள், நமது கண்காணிப்பையும், கவனத்தையும் தாண்டி, ஏதுமறியாத ஏழை மக்களின் இன்னுயிரைப் போக்கிடும் ஈனச் செயல்களைத் திட்டமிட்டுச் சில இடங்களில் செய்து விடுகிறார்கள்.

அவர்கள் சில காலம் தப்பி வாழலாம். ஆனால் மக்களின் ஒத்துழைப்பு இருந்தால், மறு நாளே அவர்கள் கைது செய்யப்படுகிற நிலைமை உருவாகிவிடும்.

ஒருபுறம் கள்ளச்சாராயத்தைத் தடுப்பது, மறுபுறம் மதுவைக் குடிப்பதால் மன வளத்திற்கும்,

உடல் நலத்திற்கும் கேடு என்ற கருத்தை நாடெங்கிலும், குறிப்பாக ஏழை எளியவர்கள் மத்தியில் வேகமாகப் பரப்பவேண்டும் என்பதில், இந்த அரசு மிகுந்த தீவிரத்தைக் கடைப்பிடித்து வருகிறது என்பதை, இந்த மாமன்றம் நன்றாக அறியும். எந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும், மதுவை விலக்க வேண்டும் என்பதில், மாறுபட்ட, வேறுபட்ட கருத்துக்கள் எவரிடமும் இருப்பதற்கு நியாயம் இல்லை.

**ஓரணியில் திரளுவோம்**

மதுவை விலக்குவதை, கள்ளச் சாராயத்தை ஒழிப்பதை, ஒரு மாபெரும் சமுதாய இயக்கமாக மாற்றுவதற்கு மக்கள் முன்வர வேண்டும். மக்களிடம் அதற்குரிய பொதுக் கருத்து உருவாக்கப் பட வேண்டும்; அந்த நோக்கத்தில்தான் மாநில மட்டத்தில், பிரச்சாரக் குழு ஒன்று ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட, வட்டார, கிராம அளவிலும் இதுபோன்ற குழுக்களை அமைத்து, மதுவிலக்குக் கொள்கைகளின் அவசியத்தை மக்களிடம் வலியுறுத்த ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

அதுமட்டுமின்றி, நாடகம், சினிமா, போன்ற மக்கள் தொடர்புச் சாதனங்களை முழுமையாகப் பயன்படுத்தி, மக்கள் மத்தியில் ஒரு எழுச்சியை உருவாக்க நாம் அனைவரும் ஒரே அணியில் திரண்டிட வேண்டும்.

தீயால் ஏற்பட்ட சேதத்தைத் தடுப்பதும், அதில் சிக்குண்டோரின் உயிரையும், உடைமைகளையும் காப்பதும், அரசின் தலையாய கடமை என்ற எண்ணத்தின் செயல்பாடாகத்தான், தீயணைப்புத் துறை நிறுவப்பட்டுள்ளது. தீ விபத்தோடு நில்லாது, ஏனைய விபத்துக் காலங்களிலும், மீட்புப் பணிக்குத் தீயணைப்புத் துறையினர் பயன்பட்டு வருகிறார்கள். இதுபோன்ற பயனுள்ள மற்ற பல சேவைகளிலும் இவர்களுக்குப் பங்குண்டு.

நமது தீயணைப்புத் துறையைப் பொறுத்த வரையில், கடந்த 25 ஆண்டுக் காலமாக, நற்பணியை ஆற்றி நல்ல பெயர் எடுத்துள்ளது. நடப்பு நிதியாண்டில், ஜனவரி 1992 முடிய, தமிழகம் முழுமையும் உள்ள தீயணைப்பு நிலையங்களில், 11,982 'தீ' அழைப்புகள் வரப்பெற்று, அவற்றிற்குத் தகுந்த மேல் நடவடிக்கையும் எடுத்துள்ளது. மாநிலம் முழுவதும் தீ விபத்துக்களினால் ஏற்பட்ட பொருட்சேதத்தின் மதிப்பு, ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 10.50 கோடி ரூபாய் ஆகும். இந்தத் துறையினரால் காப்பாற்றப்பட்ட உடைமைகளின் மதிப்பு, சுமார் 53.50 கோடி ரூபாய் என்ற உண்மையும் குறிப்பிடத்தக்கது. 2,763 மீட்பு அழைப்புகளையும், 3,500-க்கு மேற்பட்ட நோயாளி ஊர்தி அழைப்புகளையும், இத்துறை சந்தித்து, நன்முறையில் கையாண்டுள்ளது.

பெரும் தீ விபத்துக்களில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், கடந்த 12.7.91 அன்று காமராசர் மாவட்டம், மீனப்பட்டி கிராமத்திலுள்ள Dawn Fireworks Industries என்ற பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இந்தத் தீ விபத்தில் 39 பேர் உயிர் இழந்தனர். உரிய நேரத்தில் சென்று தீயணைப்புப் படை அலுவலர்களும், பணியாளர்களும் தங்கள் உயிரைத் துச்சமென மதித்துப் போராடி, 72 நபர்களைத் தீ விபத்து நடந்த இடத்திலிருந்து உயிருடன் மீட்ட சாதனை, இந்தத் துறையின் பணிகளுக்கு வைத்த மகுடம் ஆகும். இந்தத் தீ விபத்தில் சுமார் 3 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களுக்குச் சேதம் ஏற்பட்டிருந்தாலும், 7 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் காப்பாற்றப்பட்டுள்ளது என்பதையும், இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**எந்த மாநிலத்தையும்விட...**

அடுத்து, சமீபத்தில் கும்பகோணத்தில் நடந்த மகாமகம் திருவிழாவில் எடுத்த முன் எச்சரிக்கை நடவடிக்கைகளின் பயனாக, 18.2.92 அன்று எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில், இறந்தவர்களையும், காயமடைந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்களையும் திறமையாக மீட்டு, மிகக் குறுகிய கால கட்டத்திற்குள் அவர்களை அரசு மருத்துவமனையில் அனுமதித்து, தீயணைப்புத் துறையினர் காத்தனர் என்பதை அனைவரும் அறிவர். தமிழ்நாடு தீயணைப்புத் துறை, அகில இந்திய அளவில் தனக்கெனத் தனியொரு பெயரையும், புகழையும் பெற்றுள்ளது என்றால், அது மிகையாகாது.

மேலும் தீயணைப்பு நிலையங்களின் தேவை பற்றிப் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் பல சந்தர்ப்பங்களில் வினவியபோதிலும், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்குத் தமிழகத்தில்தான் தீயணைப்பு நிலையங்கள் அதிகமாக நிறுவப் பட்டுள்ளன என்பதைப் பெருமையோடு இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஆடு

ஆடுதானே என்று அலட்சியம் வேண்டாம். பால், உரோமம், உரம் இவற்றோடு அதன் இறைச்சியும், தோலும் கூட நமக்கு உபயோகப்படுகின்றன. ஆண்டொன்றுக்கு நம்நாட்டில் 41 இலட்சம் டன் இறைச்சியும், 18 இலட்சம் டன் பாலும் ஆட்டினால். கிடைக்கின்றன என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

உலகில் 557 மில்லியன் ஆடுகள் உள்ளன; ஆசியாவில் மட்டும் 322 மில்லியன். உலக உற்பத்தியோடு ஒப்பிடுகையில், ஆசிய ஆடுகள் மூலம் பெறப்படும் பால், இறைச்சி அளவு முறையே 47 சதவிகிதம், 64 சதவிகிதம் ஆகும்.

எனவே, கிராம ஏழைகளின் வருமானம்-வேலை வாய்ப்பு பெருகவும், சத்தான பால்-இறைச்சி கிடைக்கவும் ஆடுகள் அவசியம்தானே! இதற்காகத்தான், அண்மையில் புது தில்லியில் 'ஆடுகள்' பற்றி ஐந்தாவது சர்வதேச மாநாடு நடைபெற்றது.



தற்போது 205 தீயணைப்பு நிலையங்கள் உள்ள இத்துறையில், சுமார் 5,763 பேர் பணிபுரிகின்றனர். இத்துறையில் 237 நீர்தாங்கி வண்டிகளும், 75 நோயாளர் ஊர்திகளும், 193 இதர ஊர்திகளும், 59 சிறப்புச் சாதனங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஊர்திகளைப் பழுது பார்க்கத் தனிப் பணிமனையும், பட்டறையும் இருக்கின்றன. பணியில் செம்மை சேர்த்திட, பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்திட ஒரு பயிற்சிப் பள்ளியும் இயங்குகின்றது. பழைய பழுதடைந்த ஊர்திகள் படிப்படியாக மாற்றப்பட்டு வருகின்றன.

**நவீன தீயணைப்பு இயந்திரங்கள்**

குறிப்பிட்ட உழைப்புக் காலத்தை முடித்து, பயன்படுத்த இயலா நிலையை அடைந்த ஊர்திகளை ஒதுக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாகப் புதிய ஊர்திகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இவைகளைத் தவிர, நமது தீயணைப்புத் துறையின் இன்னொரு முக்கிய அம்சம், அடுக்கு மாடிக் கட்டடங்களிலும், பாதையே இல்லாத குடிசைப் பகுதிகளிலும், தீ விபத்தைத் தடுப்பதற்கும், அதில் சிக்குண்டவர்களை மீட்பதற்கெனவும் மிக நவீன தீயணைப்பு இயந்திரங்களை ரூ.3.32 கோடிக்கு ஜப்பான் நாட்டிலிருந்து வாங்கி, அதை இப்பொழுது பயன்படுத்திக் கொண்டு வருகிறோம்.

இந்த இஸுசு (ISUZU) சுழல் மேஜை ஏணி, அடுக்கு மாடிக் கட்டடங்களில் விபத்துக்களில் சிக்கியவர்களை, வேகமாக வெளியேற்றி மீட்க உதவும் கருவியாகும். இந்தியாவிலேயே, நாக்பூர் தேசிய தீயணைப்புக் கல்லூரியைத் தவிர, தமிழகத்தில்தான் இதுபோன்ற நவீன சுழல் மேஜை ஏணி பயன்படுத்தப்படுகிறது.

தமிழகத்தின் எல்லா இடங்களிலும் 25 கி.மீ. தொலைவுக்கும், ஒரு தீயணைப்பு நிலையம் இருந்தாக வேண்டும்; உடனடி சேவைக்கு அது தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்பதில், இந்த அரசு தீவிரமாக இருக்கிறது. குறிப்பாகத் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகள், குடிசைகள், மண்டிக் கிடக்கும் பகுதிகள் போன்ற இடங்களுக்குத் தனி முக்கியத்துவம் அளித்து, தீயணைப்பு நிலையங்கள் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. கோடைக் காலங்களில், குறிப்பாக அதிக அளவு தீ விபத்து ஏற்படா வண்ணம் தடுப்பதற்காகப் பற்கோல், (Fire Rake) கூரை கொக்கி (Ceiling Hook) போன்ற எளிய தீயணைப்புச் சாதனங்களை, குடிசைப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள புறநகர் தீயணைப்பு நிலையங்களில் தயாராக வைத்திருந்து, அப்பகுதிகளில் இத்துறை அலுவலர்கள் இரவு பகல் எந்நேரமும் பணியாற்றுவதுடன், தீ விபத்து பற்றித் தொடர்பு கொள்வதற்கு 'வாக்கி டாக்கி' கருவிகளும் வழங்கப்படுகின்றன. இதன் காரணமாகக் குடிசைப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துக்கள் பெருமளவு கட்டுப்படுத்துவதோடு, உயிர்ச் சேதமும், பொருட்சேதமும் குறைக்கப்பட்டுள்ளன.

**மனம் உண்டு பணம் இல்லை!**

இந்த அரசு ஆட்சிக்கு வந்த உடனேயே, 9 தீயணைப்பு நிலையங்களைத் திறக்க ஆணை பிறப்பித்தது. இந்த ஆண்டில் மட்டும் குளச்சல், தென்கனிக்கோட்டை, சேத்தியாத்தோப்பு, வேதாரண்யம், மண்டபம், வில்லிவாக்கம் ஆகிய இடங்களில், புதிதாகத் தீயணைப்பு நிலையங்கள் திறக்கவிருக்கிறோம் என்ற செய்தியை, மகிழ்ச்சியுடன் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்ற மனம் எனக்கு இருக்கிறது; ஆனால் அரசு கஜானாவில் போதிய பணம்தான் இல்லை. தற்போது வரையறுத்த வருவாயும், நிதிப்பற்றாக்குறையும் இருந்தபோதிலும், தீயணைப்புப் பணியில் ஈடுபடுவோரின் நலன் பேணப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு முனைப்பாக உள்ளது.

**நல நிதி உயர்வு**

இதனை மனதில் கொண்டுதான், சென்ற வரவு-செலவுத் திட்டத்தில், இத்துறையில் பணிபுரிவோருக்கு வழங்கும் உணவுப்படியை, இந்த அரசு உயர்த்தி வழங்கியது. பஞ்சால் ஆன சீருடை டெரிகாட்டன் சீருடையாக மாற்றப்பட்டது; தீயணைப்புப் படையினருக்கான நல நிதி (Benevolent Fund) அறுபது ஆயிரம் ரூபாயிலிருந்து, ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி இந்த அரசு வழங்கியது.

தீயணைப்புப் பணியாளர்களின் நலன், இந்த ஆண்டு இந்தத் துறையில் பணிபுரிவோருக்குச் சீருடை சலவைப் படி மாதந்தோறும் பின்வருமாறு உயர்த்தி வழங்கப்படும்.

1. கோட்ட தீயணைப்பு அலுவலரின் படி ரூ.30 என்பது ரூ.40 ஆக உயர்த்தப்படுகிறது.

2. துணைக் கோட்ட தீயணைப்பு அலுவலர் மற்றும் தீயணைப்பு நிலைய அலுவலர் (நிலையப் போக்குவரத்து அலுவலர் உட்பட) ஆகியோரின் படி ரூ.20 என்பது ரூ.30 ஆக உயர்த்தப்படுகிறது.

3. லீடிங் பயர்மென் மற்றும் அவருக்குக் கீழ் (Leading Fireman & below) உள்ளோரின் படி ரூ.15 என்பது ரூ.25 ஆக உயர்த்தப்படுகிறது.

இதனால் அரசுக்கு ஏற்படும் மொத்த செலவு, ஆண்டொன்றுக்குச் சுமார் ரூபாய் 6.50 இலட்சம் ஆகும். இதனால் 5,427 பேர்கள் பயனடைவார்கள்.

வளரும் தேவைகளை விரைந்து சந்திக்க இருக்கும் அமைப்பையும், வாய்ப்பு வசதிகளையும் நவீனப்படுத்தி, புதுப்புது அணுகுமுறைகளைக் கையாண்டு, இந்தத் துறையை மென்மேலும் பயனுள்ள ஒரு சிறந்த துறையாக ஆக்கி, இதில் பணிபுரிவோர்களின் குறைகளைக் கனிவோடு பரிசீலித்து, அவர்களைப் பேணிக் காத்து, நாட்டு

மக்களின் நலம் காக்க அவர்களை முழுமையாகப் பயன்படுத்த, இந்த அரசு தீவிரமான முயற்சிகளை மேற்கொள்ளும்.

### பொது அமைதிகாக்கும் காவல் துறை

நாட்டில் அமைதியான ஒரு சூழ்நிலையை ஆக்கித் தருவது ஆட்சியின் தலையாய பொறுப்பு. குறிப்பாக மக்களின் மன அமைதிக்குச் சுற்றுச் சூழ்நிலை மிக மிக இன்றியமையாதது. இதற்கத் தான், கற்காலத்தில் இருந்து தற்காலம் வரை ஆட்சியாளர்கள் முன்னுரிமையும் முக்கியத்துவமும் கொடுத்துக் கொண்டு இருந்திருக்கிறார்கள். பப்ளிக் ஆர்டர் (Public Order) என்று சொல்லப் படுகின்ற பொது அமைதியை நேரடியாகச் செயல் படுத்தும் அரசு இயந்திரம்தான் காவல் துறை. குற்றம், கொடுமைகளைக் களைந்து, அமைதி காத்து மக்களின் உயிரையும், உடமையையும் பேணிப்பாதுகாத்துச் செயல்படும் பொறுப்பு காவல் துறையினரைச் சார்ந்ததாகும்.

சுருக்கமாகச் சொன்னால் கடமை ஆற்றும் போது தன் உயிரைப் பணயம் வைத்து மற்றவர் உயிரையும், உடமையையும் காக்க வேண்டிய கட்டாயமும் காவல்துறையினருக்கு உண்டு. எனக்குக் கிடைத்த தகவலின்படி இந்த நாட்டில், இராணுவ வீரர்கள் சண்டையிட்டு ஆண்டுதோறும் மடியும் எண்ணிக்கையைவிட, கடமையில் இறக் கின்ற காவல்துறையினர் அதிகம் எனக் கணக்கிடப் பட்டுள்ளது.

இருந்தும் இவர்களின் பணியை, பணியாற்றும் விதத்தை இங்கே பேசிய உறுப்பினர்களில் சிலர் விமர்சித்து இருக்கிறார்கள். நல்ல விமர்சனங்கள் நன்மைகளையும் வழங்கும் ஆற்றல் பெற்றவை என்பது எனக்குத் தெரியும். உறுப்பினர்களில் சிலர் காவல் நிலையங்களில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது பற்றிக் கடுமையாக இங்கே சாடி இருக்கிறார்கள். காவல்துறையினர், பரிகாரம் தேடி வருவோரிடம் பக்குவம் காட் டாது, கடுமையைக் காட்டியிருக்கிறார்கள் என் பதையும் சில இடங்களில் காவல் துறையினரே குற்றவாளிகள் உருவாகக் காரணமாக இருக் கிறார்கள் என்ற பெரும் குறைபாட்டையும் கோபத் தோடு இங்கே கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். நாட்டில் குற்றங்கள் மலிந்துவிட்டன, நடவடிக்கை எடுக்கும் தரம் போதாது என்பது போன்ற பல் வேறு கோணங்களிலிருந்து காவல் துறையினரின் செயல்பாட்டினை நமது கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தப் பின்னணியில் நீங்கள் கூறியவை அனைத்தும் உண்மையற்றவை என்று ஒதுக்கவும் முடியாது; அத்தனையும் முழுக்க முழுக்கச் சரியானது எனவும் எடுத்துக் கொள்ள வும் முடியாது.

அதே நேரத்தில், உண்மையான குறைபாடுகள் உடனடியாகக் களையப்படவேண்டும்; அவை களுக்குக் காரணமானவர்கள் இனம் கண்டு கண்டிக்கப்படவும், தண்டிக்கப்படவும் வேண்டும்



### காலை உணவு வாழைப்பழம்!

நம் நாட்டில் காலை உணவாக அரிசி அல்லது கோதுமைப் பண்டங் களை உண்ணுகின்றனர். ஆனால், ஜப்பானில் காலை உணவாகப் பெரும்பாலும் பாலையும், வாழைப் பழத்தையும் பயன்படுத்துகிறார்கள்.

வாழைப்பழத்தை ஜப்பான் இறக்குமதி செய்கிறது. விளை யாட்டு வீரர்கள்கூடப் போட்டிக்குப் போகும் முன்பு அதிக வைட்டமின் அடங்கிய, எளிதில் செரிக்கக்கூடிய உணவாக வாழைப்பழத்தைச் சாப் பிடுகிறார்கள். வாழைப்பழத்தை யும், பாலையும் கலந்து சுவைக்கப் பானமாகச் செய்து பருகுகிறார்கள். இதில் வைட்டமின்கள், தாதுக்கள் உள்ளன. மேலும், இந்த வாழைப் பழத்தில் பூரி கூடச் செய்து சாப்பிடு கின்றனர் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

என்பதில் இந்த அரசுக்கு மாற்றுக் கருத்து கிடை யாது. காவல் துறை தக்கன செய்தால் தட்டிக் கொடுப்பதும், தகாதன செய்தால் தட்டிக் கேட் பதும் இவ்வரசின் அணுகுமுறை என்பதை இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். காவல்துறையின் இயக்கத்தில் தயக்கம் ஏற்படாதவாறு, என்னென்ன நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டுமோ அதைச் செய்ய இந்த அரசு தயங்காது என்பதையும் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைய சூழ்நிலையில், அரசாக இருந்தாலும் சரி; அதைச் சார்ந்த எந்த அமைப்பாக இருந் தாலும் சரி - விரைந்து செயல்படுவதில், சட்ட வழியில் தொடர்ந்து இயங்குவதில் எத்தனையோ சங்கடங்கள் இருக்கின்றன என்பதை நீங்களும் அறிவீர்கள்; நானும் அறிவேன். அளவுக்கு மீறிய மக்கள் பெருக்கம், அதனால் விளைந்த சமூக பொருளாதார சிக்கல்கள், கேடுகள் மனித நேயத் தின் வீழ்ச்சிக்கு வழி வகுத்துள்ளன. அதே நேரம் மக்கள் தமது கடமையை மறந்து உரிமையைப் பாதுகாத்துக் கொள்ளத் துடிக்கும் ஆர்வம் அதிக மாக வளர்ந்துள்ளது. இன்னொரு பக்கம், சட்டம் மற்றும்அதிகாரத்தைப்போற்றாத தன்மை, அரசியல் குறுக்கீடு, ஆகியவை சமூகத்தின் பூதாகார பிரச் சினையாக இருக்கின்றன.

இன்றைய சூழ்நிலையில், காவல் பணி ஆற்று வது மிக மிகக் கடினமான வேலைதான் என்பது நம் அனைவருக்கும் தெரியும். காவல்துறையைப் பொருத்த வரையில், இவை எல்லாவற்றிற்கும் மேலாக, அதில் போதுமான ஆட்கள் இல்லாத தோடு, துரிதமாகப் பணி புரிய உதவும் ஆயு தங்கள், சாதனங்கள் வண்டிகள் போதாத நிலை யும் உள்ளது.

### காவல்துறை சாதனைகள்

இத்தனை இடர்ப்பாடுகளுக்கு மத்தியில், நமது காவல்துறை சந்தித்த சவால்கள், நிகழ்த்திய சாதனைகள், குவித்த வெற்றிகள், கடமையின் போது காட்டிய வீரம், மற்றும் வினைத் திட்பம், இவற்றையெல்லாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க் கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். அவர்களின் செயல்பாடு களைச் சில சமயங்களில் நேரடியாகவும் நான் கண்ட அனுபவத்தையும் நினைவு கூர்கிறேன். விடுதலைப் புலிகள், அவர்களுக்கு உதவிய தீவிர வாதிகள் மற்றும் பயங்கரவாதிகள், ஆகியோரின் கொட்டத்தை அடக்கி, அமளிக்காடாகி இருந்த தமிழகத்தின் ஆயுத கலாச்சாரத்தை விரட்டி அடித்து, எங்கள் ஆட்சியின் மூலம் தமிழகத்தில் அமைதியை நிலவ வைத்த பெருமை, தமிழகக் காவல்துறையினரை வெகுவாகச் சாரும் என்கிற என் கருத்தை, நீங்கள் அனைவரும் ஏற்று இருக் கிறீர்கள் என எண்ணுகிறேன்.

இந்த அரசு பொறுப்பு ஏற்கும் முன், முந்தைய அரசு காலத்தில், விடுதலைப் புலியினருக்கு அளித்த ஆதரவு, அனுசரணை, பரிவு, பச்சா தாபம், அதனால் இந்த மாநிலத்திற்கும், இந்திய நாட்டிற்கும் விளைந்த கேடு, அவர்கள் அடித்த கொள்ளை, செய்த கொலை, அச்சுறுத்தல், அடா வடித்தனம், நடத்திய கடத்தல் மற்றும் சுரண்டல் ஆகியன பற்றியும், அதன்பின் எங்கள் ஆட்சி வந்த உடன், எடுத்த அதிரடி நடவடிக்கையால், அடுக் கடுக்கான திட்டங்களால், செயல்பாடுகளால், அவர்கள் எப்படி அடக்கப்பட்டனர் என்பதையும், நான் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையில் நீங்கள் இல்லை.

இன்றைய தினம் விடுதலைப் புலியினர் நட மாட்டம் வெகுவாகக் குறைந்து விட்டது என்ற நிலையை, இந்த அரசு உருவாக்கி இருக்கிறது. இதற்குப் பெரும் பின்னணியாக நின்றவர்கள் காவல் துறையினர் என்றால், அது மிகையாகாது. அதே நேரத்தில் இந்தப் பிரச்சினையைத் தீர்ந்து விட்ட ஒன்றாகவும் கொள்ள முடியவில்லை. எனவே இவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பு தொடர்கிறது.

காவல்துறையினரைக் கொண்டு கடற்படைப் பகுதிகளில் விடுதலைப்புலிகளின் நடமாட்டம் கண்காணிக்கப்படுகிறது; தமிழ்நாட்டைச் சேர்ந்த கடத்தல்காரர்களுக்கும், விடுதலைப் புலியினருக் கும் இடையே உள்ள தீய தொடர்புகளையும் அதன் விளைவாக எழக்கூடிய சட்ட விரோத நடவடிக்கைகளையும் தகர்த்தெறிய உன்னிப்பாகக் கவனிக்கப்படுகிறது. தமிழ்நாட்டிற்குள்ளே விடுதலைப் புலிகளின்பால் பரிவு காட்டி அவர் களுக்கு அடைக்கலம் கொடுத்து அவர்களின் சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு ஆதரவு தருவோர் களைச் செயலிழக்கச் செய்யப்படுகிறது; விடுதலைப் புலிகளின் பல்வேறு மறைவிடங்களைக் கண்டு பிடித்து அவர்களை வெளியேற்றும் முயற்சி தொடர்கிறது; விடுதலைப் புலிகளின் தகவல் தொடர்புச் சாதனங்கள் இன்னும் இருப்பின் அவற்றைக் கண்டுபிடித்து அழிக்கும் வேலை நடந்து வருகிறது.

விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களுடைய அனுதாபிகள் யாரேனும் சட்டவிரோத நடவடிக் கைகளில் ஈடுபட்டால் அவர்களை ஒடுக்குவது போன்ற பணிகள் இன்னும் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. மேற்கூறிய நோக்கங்களுக்காகக் கடற்கரையை ஒட்டிய முக்கியப் பகுதிகளில் 34 சோதனைச் சாவடிகள் இயங்கிக் கொண்டிருக் கின்றன. இந்தச் சோதனைச் சாவடிகளில் லைட் மெஷின் துப்பாக்கி, ஸ்டேன் கன் (Sten Gun) துப்பாக்கி, ஏ.கே. 47 துப்பாக்கி ஆகியவற்றைக் கொண்டு காவல் துறையினர் பணியாற்றி வரு கின்றனர். கடற்கரைப் பகுதி முழுவதையும் கண் காணிக்கின்ற வகையில் வாகன ரோந்தும் நடை ரோந்தும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. வான் வசதித் தகவல் தொடர்புச் சாதனங்களும் அதிரடிப் படையினரும், அதிவேகமாக ஓடும் வாகனங்களும், முக்கியப் பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பணியில் 10 கம்பெனி மத்திய ரிசர்வ் படையினரும், 10 கம்பெனி தமிழ்நாடு சிறப்புக் காவல் படை யினரும் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அகதிகள் முகாம்கள் முறைப்படுத்தப்பட்டு உள்ளன. அகதி முகாம்களில் இல்லாத இலங்கைத் தமிழர்களும் இனம் காணப்பட்டுள்ளனர். சுருங்கக் கூறின் விடுதலைப் புலிகளுக்காக வெடிகுண்டு, வெடிமருந்து, எரிபொருள்கள், மருந்து வகைகள், சீருடை துணிகள் மற்றும் இதர பொருட்கள் வழங்கும் நபர்கள் முழு அளவில் ஒடுக்கப்பட்டுள் ளனர். கள்ளத்தனமாக வெடிகுண்டுகள் தயாரிக்கப் பட்ட இடமும் கண்டுபிடிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் கள்ளத்தனமாகப் பயன்படுத்திய திறம் வாய்ந்த தகவல் தொடர்புச் சாதனங்களும், பெரும் அளவில் கண்டுபிடிக்கப்பட்டு விட்டன. இயந்திரங்களையும் ஆயுதங்களையும் வாங்குவதற் காக உலகம் முழுவதும் உள்ள இலங்கைத் தமிழர்கள் அந்நியச் செலாவணியில் செலுத்தி யுள்ள பணத்தில் இதற்கான செலவினங்கள் கண்டுபிடிக்கப்பட்டுத் தடுக்கப்பட்டுவிட்டன. விடுதலைப் புலிகளின் கொள்கை பரப்புப் பிரிவின் சார்பாகத் தமிழகத்தில் கள்ளத்தனமாக இயங்கி வந்த அச்சகம் ஒன்று காவல்துறை யினரால் கண்டுபிடித்து நிறுத்தப்பட்டுள்ளது.

### காவல்துறையினரின் மகத்தான பணி

நமது காவல்துறையைக் கொண்டு நாகப் பட்டினம், இராமேஸ்வரம் எல்லையில் ஏற் கெனவே இயங்கி வரும் கடற்படைப் பிரிவு தவிர, புதிதாக 5 கடற்படைப் பிரிவுகள் விடுதலைப் புலிகளின் கடல் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டு உள்ளனர் இந்தியக் கடற்படை,

## சுற்றுலா

நமது நாட்டின் இயற்கை அழகினைக் கண்டு களிக்க வெளிநாட்டினர் வந்தவண்ணம் உள்ளனர். கடந்த ஆண்டு 16,77,461 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவைச் சுற்றிப் பார்த்து உள்ளனர். அந்நியச் சுற்றுலாப் பயணிகளின் வரவால் ரூ.2,918 கோடி அந்நியச் செலாவணி நமக்குக் கிடைத்தது.

வெளிநாட்டுப் பயணிகளின் வரவை அதிகரிப்பதற்காக, சிறப்பு சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துதல், சுற்றுலாப் பயணிகளுக்கான வசதியைப் பெருக்குதல், வெளிநாடுகளில் விளம்பரங்களைச் செய்தல் முதலிய பணிகளில் அரசு ஈடுபட்டுள்ளது. காலத்தால் அழியாத ஓவியங்களையும், இயற்கை எழில் கொஞ்சும் இடங்களையும் காண வரும் 'வெளிநாட்டினர் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருவது கண்கூடு!

—நன்றி: 'தூவானம்'

கடலோரப் பாதுகாப்புப் படை, தமிழ்நாடு காவல் துறையினர் ஆகியோர் இணைந்து எல்லா வகையிலும் செயல்படுவதால் விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டில் அடங்கி விட்டார்கள், ஒடுங்கி இருக்கிறார்கள் என்று என்னால் சொல்ல முடிகிறது.

நூற்றுக்கணக்கான விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த விஷயத்தில் காவல் துறையினரின் பணி மகத்தானது.

தி.மு.க. அரசு காலத்தில் விநியோகிக்கப்பட்ட மலிவு சாராயத்தை இந்த அரசு ஆட்சிக்கு வந்த சில நாட்களிலேயே (16.7.91-லிருந்து) ஒழித்து விட்டது என்பதை இந்த மாமன்றம் நன்கு அறியும். மலிவு சாராயத்தை ஒழித்த அதே நேரத்தில் கள்ளச் சாராயம் தனது கை வரிசையைக் காட்டிவிடும் என்பதை இந்த அரசு உணர்ந்த காரணத்தால் இதற்கென ஒரு சிறப்புக் காவல் துறைப் பிரிவினை உருவாக்கியதை நீங்கள் அறிவீர்கள். அதன்பின் இந்தச் சிறப்புக் காவல் துறை பிரிவினர் தமிழகம் முழுவதும் பம்பரமாகச் சுழன்று பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டனர். கள்ளச் சாராயம் காய்ச்சும் இடங்களையெல்லாம் கண்டுபிடித்துச் சோதனையிட்டு, கள்ளச் சாராயத்தைக் கைப்பற்றி அழித்தனர்.

காவல் துறையினரும் கிராம அலுவலர்களும் இணைந்து எடுத்த நடவடிக்கைகளின் பயனால் இன்று கள்ளச்சாராயம் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சருக்கும், முக்கியப் பிரமுகர்களுக்கும் சிறப்புப் பாதுகாப்பு அளிப்பதற்கென ஒரு தனிப் பாதுகாப்புக் குழு காவல் துறையினரைக் கொண்டு அண்மையில் தொடங்கப்பட்டது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பயிற்சி; வழங்கப்பட்டுள்ள ஆயுதங்கள் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளினால், இவர்கள் எல்லாம் மத்திய அரசின் கருப்புப் பூனைப் படையினருக்குச் சமமாக அமையும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளனர் என்ற நல்ல செய்தியை உங்களுக்குத் தெரிவிக்க விழைகிறேன். தமிழகக் காவல்துறையினரின் சில சிறப்புகளை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

### அகில இந்திய அந்தஸ்து

சமீபத்தில் நடந்தேறிய அகில இந்திய பணி சார்ந்த போட்டியில், நமது மாநிலக் காவல் துறையினர், பிற மாநிலக் காவல்துறையினரை வென்று பல பதக்கங்களைப் பெற்றுத் தமது அகில இந்திய அந்தஸ்த்தை நிலை நாட்டியுள்ளனர் என்ற செய்தியும் நமக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தத்துவத்தை உலகிற்கு வழங்கிய தமிழ் மண்ணில் சாதி, சமய, இனக் கலவரங்கள் எழுவது எந்த வகையிலும் நியாயம் இல்லைதான். ஆனால் பல்வேறு மாநிலங்களில் வீசுகின்ற இந்த விஷக்காற்று, சிற்சில சமயங்களில் தமிழகத்தை நோக்கியும் தனது வீச்சை விரிவுபடுத்தி வருகிறது. இந்த வகையில் நிகழ்ந்த ஒருசில நிகழ்ச்சிகள் மிகச் சிறு சிறு காரணங்களாலும் விரும்பத்தகாதவர்களின் தலையீட்டினாலும், ஒரு சில அரசியல்வாதிகளின் தூண்டுதலாலும் உருவானவை, என்பதை இந்த மாமன்றம் நன்கு அறியும். அதே நேரத்தில் சாதி மத அடிப்படையில் வெறுப்பு உணர்ச்சியைத் தூண்டும் வகுப்புவாத சக்திகளை இந்த அரசு இனம் கண்டு, இரும்புக்கரம் கொண்டு அடக்கி உள்ளது.

1991-ஆம் ஆண்டில் 33 வகுப்புவாத மோதல்கள் நிகழ்ந்தன. அதில் 5 பேர் உயிர் இழந்தனர்; 88 பேர் காயம் அடைந்தனர். சட்டம் ஒழுங்கைக் காக்க காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 11 முறை துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்ந்து 13 பேர் உயிர் இழந்தனர் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அந்தச் சம்பவங்களின்பொழுது 207 காவல் துறையினரும், அதிகாரிகளும் பலத்த காயமடைந்தனர் என்ற உண்மையும் நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும். அவ்வாறு காயம் பட்டபோதும் காவல் துறையினர் கோபத்தைக் கட்டவிழ்த்துவிடாது, நிதானத்தைக் கடைப்பிடித்தனர் என்பது பாராட்டுதலுக்குரியது; பலராலும் வரவேற்கக் கூடியது. எந்தப் பிரச்சினையையும் தீர்த்துவைக்கிற முயற்சியில், தேவையான விமர்சனங்கள் செய்யப்படுவதில் தவறில்லை. ஆனால்

(தொடர்ச்சி. 33.—ஆம் பக்கம் பார்க்க)



## திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்

# கதர் கிராமத் தொழில் பணிகள்

கிராமப்புற ஏழை, எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும், அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்திடவும், கதர் கிராமத் தொழில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### கதர் அலகுகள்

இம்மாவட்டத்தில் 28 கிராமிய நூற்பு நிலையங்கள், 5 கதர்த் துணைக் கிளைகள், 8 கதர் அங்காடிகள், ஒரு நேபாளித் தறி அலகு, ஒரு ஜக்காடு அலகு, ஒரு பஞ்சடைக்கும் அலகு, ஒரு பிடைம் கிடங்கு ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

கிராமிய நூற்பு நிலையங்கள் மூலம் 585 நூற்பாளர்களுக்கு ரூ 5.90 இலட்சம் கூலியாகவும், கதர்த் துணைக் கிளைகள் மூலம் 172 நெசவாளர்களுக்கு ரூ.1.16 இலட்சம் கூலியாகவும் வழங்கப்பட்டுள்ளது.

### கதர் மற்றும் பாலிஸ்டர் நூல் உற்பத்தி மற்றும் துணி உற்பத்தி

கதர்நூல் உற்பத்தி 16.30 இலட்சம் சிட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் ஜனவரித் திங்கள் முடிய 6.64 இலட்சம் சிட்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. பாலிஸ்டர் நூல் 7 இலட்சம் சிட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், ஜனவரித் திங்கள் முடிய 5.07 இலட்சம் சிட்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

### கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை

கதர் விற்பனை இந்த ஆண்டுக்கு ரூ.65 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், ஜனவரித் திங்கள் முடிய ரூ.67.20 இலட்சம் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் இலக்கை விஞ்சியுள்ளது. கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை இலக்கு ரூ.20 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டதில் ஜனவரித் திங்கள் முடிய ரூ.16.73 இலட்சம் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

காலணி உற்பத்தி நிலையம் ஒன்றும், காலணி விற்பனை நிலையம் ஒன்றும், சோப்பு அலகு ஒன்றும், கிராம சில்பா ஒன்றும், தேன் பக்குவப்படுத்தும் அலகு ஒன்றும், தேனீப்பண்ணை இரண்டும், தேன் வளர்ப்பு நிலையம் நான்கும் கிராமத் தொழில் திட்டங்களைச் செயல்படுத்த இயங்கி வருகின்றன.

காலணி உற்பத்தி நிலையத்திற்கு இவ்வாண்டு ரூ.25 இலட்சம் உற்பத்திக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு ஜனவரித் திங்கள் முடிய ரூ.3.40 இலட்சம் கூலியாக வழங்கப்பட்டுள்ளது.

காலணி விற்பனை நிலையத்திற்கு இந்த ஆண்டிற்கு விற்பனைக் குறியீடு ரூ.7 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டதில் ஜனவரித் திங்கள் முடிய ரூ.4.63 இலட்சம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கிராம சில்பாவிற்கு நடப்பாண்டிற்கு ரூ.7 இலட்சம் விற்பனைக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு





ஜனவரித் திங்கள் முடிய ரூ.4.63 இலட்சம் குறியீட்டளவு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்களுக்குக் கிளஸ்டர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 100 சதவிகிதம் மானியத்துடன் 91 நபர்களுக்கு ரூ.6.37 இலட்சம் ஜனவரித் திங்கள் முடிய வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் பின்தங்கிய மக்களுக்காக 13 பலவகைக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துச் செயல்பட்டு வருகின்றன.

தேனீ வளர்ப்புத் தொழில் இம்மாவட்டத்தில் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. காமனூர், வெள்ளி நீர் வீழ்ச்சி ஆகிய இடங்களில் தேனீ பண்ணை வைத்து, தேனீக் குடும்பங்கள் பெருகவும், தேன் உற்பத்தி பெருக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் 4 தேனீ வளர்ப்பு நிலையங்கள் அமைத்துத் தேன் உற்பத்தி அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கிளை நிலையங்களில் உற்பத்தியாகும் தேன்களைத் திண்டுக்கல் தேன் பக்குவப்படுத்தும் அலகில் பக்குவப்படுத்தி, அவை கதர் அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சுயதொழில் செய்திட 130 நபர்களுக்குத் தேனீ வளர்ப்புப் பயிற்சியும், 25 நபர்களுக்குக் காகிதப் பொம்மைத் தயாரிக்கும் பயிற்சியும், 10 நபர்களுக்குச் சோப்பு செய்யும் பயிற்சியும், 10 நபர்களுக்குக் காலணி செய்யும் பயிற்சியும், 10 நபர்களுக்குத் தச்சுத் தொழில் பயிற்சியும், 40 நபர்களுக்கு நூற்பு, நெசவுப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

**மு. பிச்சையா**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்.

## திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் பேரூராட்சிகளின் வளர்ச்சித் திட்டங்கள்

**தி**ண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் உள்ள 24 பேரூராட்சிகளின் வளர்ச்சித் திட்டத்திற்கு, தமிழக அரசு ரூ.38 இலட்சத்து 22 ஆயிரத்து 391 அனுமதித்துள்ளது.

**ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்**

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 22 பேரூராட்சிகளில் 276 வீடுகள் கட்டவும், 12 பேரூராட்சிகளில் 23 சாலைகள் அமைக்கவும், 24 பேரூராட்சிகளில் 33 தார்ச் சாலைகள் அமைக்கவும், 8 பேரூராட்சிகளில் 12 கழிவுநீர்ச் சாக்கடை அமைக்கவும், 10 பேரூராட்சிகளில் 11 சமுதாயக் கூடம் கட்டவும், மேலும் பிற பணிகளுக்காக 16 பேரூராட்சிகளில் 30 பணிகள் செய்திடவும் தமிழக அரசு ரூ.38,22,391 அனுமதியளித்துள்ளது. இப்பணி தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டம்**

சித்தையன்கோட்டை, வத்தலகுண்டு, [illegible]த்தம், பண்ணைக்காடு, நிலக்கோட்டை ஆகிய பேரூராட்சிகளில் ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ், கடைகள், கிட்டங்கிகள், தங்கும் விடுதிகள், ஆடு அறுக்கும் இடங்கள், பேருந்து நிலையங்கள் கட்டுதல் போன்ற பணிகளுக்காக ரூ.97.55 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இப்பணிகள் வைப்பு நிதி திட்டத்தின்கீழ் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

**குறைந்த அளவு சுகாதாரப் பணிகள்**

ஒட்டன்சத்திரம் பேரூராட்சியில் தனிநபர் கழிப்பறை கட்டுதல் திட்டத்தின்கீழ், 295 கழிப்பறைகள் கட்டுவதற்கு ரூபாய் ஒரு இலட்சத்து, 45 ஆயிரத்து 66 தமிழக அரசு அனுமதித்துள்ளது.

வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 'குடிநீர் வசதி மற்றும் குடிநீர்க் குழாய் விரிவாக்கப் பணிகளுக்காக நிலக்கோட்டை மற்றும் அம்மையநாயக்கனூர் பேரூராட்சிகளுக்குத் தமிழக அரசு ரூபாய் ஒரு இலட்சம் அனுமதித்துள்ளது.

**கே.பி. நல்லதம்பி**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல் அண்ணா மாவட்டம்





# நெஞ்சையள்ளும் செஞ்சி

தென்னார்க்காடு
மாவட்டத்தில்,
திண்டிவனத்திலிருந்து
திருவண்ணாமலை மார்க்கத்தில்,
25 கி.மீ. தூரம்
சென்றோமானால், எழுந்து நிற்கும்
மலைமீது, விண்தொட நிமிர்ந்து
நிற்கின்ற செஞ்சிக்கோட்டையைக்
காணலாம். ராஜாதேசிங்கால்
புகழ்பெற்ற இந்தக் கோட்டையின்
வயது 700- க்கு மேலாகிறது.
நாயக்க வம்சத்தாரும்,
மராட்டியர்களும்,
மொகலாயர்களும், கர்நாடக
நவாபுகளும்,
ஃபிரெஞ்சுக்காரர்களும்,
ஆங்கிலேயர்களும் கொலுவிருந்து
அரசோச்சிய சிறப்பு மிக்கதான
நெஞ்சையள்ளும்
செஞ்சிக்கோட்டை வரலாறு
தெரிவிக்கும் கட்டுரை இது:

**தெ**ன்னாட்டில் பல்வேறு மன்னர்கள் எழுப்பிய எழில்மிகு கோட்டைகள் பல உண்டு; எனினும், இன்றைக்கும் பழைய மெருகோடு கவர்ச்சிகரமாகக் காணப்படுவது, தென்னார்க்காடு மாவட்டத்தின் வடமேற்கே, 15 மைல் பரப்பளவில் அமைந்திருக்கின்ற செஞ்சிக்கோட்டை மட்டுமேயாகும்.

ஏறத்தாழ 13-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகுதான், இந்தக் கோட்டைகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்கிறார்கள் வரலாற்றாசிரியர்கள்.

நெஞ்சையள்ளும் செஞ்சிக் கோட்டைப் பற்றி எண்ணுகிற போது, நமக்குத் தேசிங்குராஜனைத் தான் நினைவு வரும்; ஆனால், தொடக்க காலத்தில் மலையுச்சிக் கோட்டையை உருவாக்கியவன் ஆனந்தக்கோன் என்ற சிற்றரசனே என்கிறது வரலாறு.

இளமையில் அப்பகுதியில் ஆடு மாடு மேய்த்து வந்த ஆனந்த கோனுக்கு, ஆங்கோர் பெரும் புதையல் கிடைத்ததாகவும், அதன் மூலம் தனது செல்வாக்கைப் பெருக்கிக் கொண்ட அவனே அப்பகுதிக்குத் தன்னை அரசனாக்கிக் கொண்டான் என்றும், அப்போதுதான் அந்த மூன்று மலைகளில் ஒன்றின் மீது முதன்முதல் அவனால் கோட்டை கட்டப்பட்டது என்றும் கூறப்படுகிறது. அவனது ஆட்சிக் காலத்தில்

இம்மலைக்கு 'ஆனந்த கிரி' என்ற பெயர் இருந்திருக்கிறது. பிறகு அதுவே 'இராசகிரி' என்று மாற்றம் பெற்றிருக்கிறது.

ஆனந்தக்கோனுக்குப் பிறகு 'கிருஷ்ணக்கோன்' என்பாரின் ஆட்சி அங்கே நிலவியிருக்கிறது. அப்போது, இராசகிரிக் கோட்டைக்குப் பக்கத்துக் குன்றில் இன்னொரு பாதுகாப்பு அரண் உருவாக்கப்பட்டிருக்கிறது; அப்போது முதலே இப்பகுதி 'கிருஷ்ணகிரி' என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

கோனார் வமிச ஆட்சிக்குப் பின், இங்கே குறும்ப வம்சத்தார் ஆட்சிக்கு வந்தார்கள்; 'கோபிலிங்கன்' என்பான் அவர்கள் தலைவனாக இருந்தான்.

அதன்பின், விஜயநகர மன்னர்களின் ஆட்சி தொடங்கியது; கிருஷ்ண தேவராயர், கி.பி.1490-இல் இங்கே துப்பாக்கி கிருஷ்ணப்ப நாயக்கர் என்பவரை ஆட்சியில் அமர்த்தினார். கி.பி. 1521 வரை இந்த ஆட்சி நீடித்தது.

செஞ்சியை ஆண்ட முதலாவது மன்னர் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

நாயக்க மன்னர்கள் ஆட்சிக் காலத்திலேதான் செஞ்சிக்கோட்டை பலப்படுத்தப்பட்டது; செஞ்சி நகரும் விரிவாக்கப்பட்டது.

கி.பி.1649-இல் இப்பகுதியில் பீஜப்பூர் சுல்தான் ஆட்சிக் கொடி உயர்ந்தது. மாவீரன் சிவாஜி, தெற்கு நோக்கிப் பெரும்படையுடன் வந்தபோது, செஞ்சியை ஆண்ட பீஜப்பூர் சுல்தானின் ஆளுநர் நாசர் முகமது - சிவாஜியின் படைத் தளபதி சந்திப்பு நடைபெற்றது. அப்போது ரூ.50 ஆயிரம் வருவாய் உள்ள ஜாகீரைக் கொடுத்து, செஞ்சியின் ஆட்சி உரிமையைப் பெற்றுக் கொண்டான் அவன்.

மராட்டிய மன்னராட்சிக் காலத்திலும் செஞ்சிக்கோட்டை பலப்படுத்தப்பட்டதுண்டு. சிவாஜியும், சம்பாஜியும், இராமராஜா ஆகியோரும் அரசாண்ட பின் - செஞ்சிக்கோட்டையின் ஆட்சிபீடத்தில் மொகலாயர்கள் அமர்ந்தனர். ஔரங்கசீப் அரசில் பெரும் திறமையாளராக இருந்து புகழ்பெற்ற சுல்பீர் என்பவராலேயே மொகலாயர்கள் இங்கே ஆட்சிக்கு வர முடிந்தது.

பண்டில்கண்டின் தலைவர் சொரூபசிங்கிடம், செஞ்சியை அரசாளும் பொறுப்பை ஒப்படைத்தார் ஔரங்கசீப்.

மன்னர் சொரூபசிங்கிறகுச் சிங்கக்குட்டிபோல் பிறந்தவனே தேசிங்குராஜன்.

இளமை முதலே இணையற்ற வீரனாகத் திகழ்ந்தவன் தேசிங்கு. முகமதுகான் என்னும் முஸ்லீம் சிறுவனே சிறுவயது முதல் தேசிங்குடன் குறைவற்ற நட்புக் கொண்டிருந்தான்.

டில்லி பாதுஷாவிடம் - 'பஞ்சகல்யாணி' அல்லது 'பாராசாரி' என்று குறிப்பிடப்படும் முரட்டுக் குதிரையொன்று அப்போது இருந்தது; அதை அடக்குகிற வீரனுக்கே அக்குதிரை சொந்தம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தம்முடைய வீரத்தை வெளிப்படுத்த தக்க தருணம் வாய்த்ததாக எண்ணிச் சென்ற சொரூபசிங், அப்பந்தயத்தில் தோற்றுப்போய் டில்லிச் சிறையில் அடைக்கப்பட்டார்.

இது பற்றிய விவரங்களைத் தாய் மூலம் அறிந்தான் தேசிங்கு; குதிரையேற்றத்தில் சிறு வயதிலிருந்தே சிறந்த பயிற்சி பெற்றவனான தேசிங்கு 'அந்த முரட்டுக் குதிரையை அடக்கி எப்படியும் தந்தையை மீட்பேன்' என்று தூளுரைத்தான்.

நெஞ்சுறுதியோடும், நண்பன் முகமது கானோடும் டில்லிக்குச் சென்றான்.



செஞ்சிக்கோட்டைக்கு அருகிலுள்ள வெங்கட்ரமணா கோவிலையொட்டிக் காணப்படும் மண்டபத் தூண்கள் சிறந்த கலை நுணுக்கமும் சிறப்பும் மிக்கவை. ஆயிரங்கால் மண்டபம் அமைப்பதற்காகத் தொடங்கப்பட்ட இப்பணி பாதியில் நின்றுபோனதாகத் தெரிகிறது.



குறிப்பிட்ட நாளில் - டில்லி பாதுஷாவின் அந்த முரட்டுக் குதிரையை - திரண்டு நின்று வேடிக்கை பார்த்த மக்களெல்லாம் திகைத்துப் போகும் வண்ணம் அடக்கிக் காட்டி, அதன் மீதேறி அமைதியாகச் சவாரி செய்தும் காட்டினான் வீர இளைஞன் தேசிங்கு.

அப்போது அவனுக்கு வயது என்ன தெரியுமா? வெறும் பதினைந்து மட்டுமே!

டில்லி பாதுஷா, தேசிங்கின் விருப்பப்படி அவன் தந்தையை விடுவித்தது மட்டுமல்ல; அந்தப் பஞ்சகல்யாணி குதிரையோடு, விலை மதிப்பற்ற வேறு பல பரிசுப் பொருட்களையும் சிறுவன் தேசிங்கிற்குச் சிந்தை மகிழ்ந்து தந்தனுப்பினார்.

டில்லியிலிருந்து வெற்றி வீரனாகச் செஞ்சிக்குத் திரும்பினான் தேசிங்கு. வயது முதிர்ந்த அவன் தந்தை சொரூபசிங், கி.பி.1716-இல் இயற்கை எய்தினார். அதற்கு அடுத்த ஆண்டே தேசிங்கு ஆட்சி பீடமேறினான். அது முதலே அவன் ராஜா தேசிங்கு எனப்பட்டான்.

கப்பத்தொகை தொடர்பாக - ஆர்க்காடு நவாப் சதாத் உல்லா கானுக்கும் ராஜாதேசிங்கிற்கும் பெரும்பூசல் ஏற்பட்டது.

ராஜாதேசிங்கின் படைத்தலைவனான அவன் தோழன் முகமது கான், தன் திருமணத்தின் பொருட்டு தனது சொந்த ஊரான வழுதாவூருக்குப் போயிருந்தான்.

இதுதான் சமயம் என்று ஆர்க்காட்டு நவாப் செஞ்சியின் மீது முன்னறிவிப்பு ஏதுமின்றிப் போர் தொடுத்தான். ஆர்க்காட்டுப் படையானது அணிவகுத்து வருவது பற்றி, ஒற்றர் மூலம் அறிந்த ராஜா தேசிங்கு, உடனே தன் உயிர் நண்பனும் படைத்தலைவனுமான முகமது கானுக்குச் செய்தியனுப்பினான். மணமேடையில் இருந்த முகமதுகான் இதையறிந்து இதயம் குமுறினான்.

'முதலில் தேசிங்குராஜனுக்கு வெற்றி தேடித்தருவேன்; பிறகுதான் திருமணம்' என்று கூறிக் கொதித்தவனாய்க் குதிரை மீதேறி செஞ்சிக்குப் பறந்தான்.

ராஜாதேசிங்கைச் சந்தித்து 'நானிருக்க பயமேன்' என்று சொல்லாமல் சொல்லி, புயல் வேகத்தில் போர்க்களம் புகுந்தான். அவன் வாள் வேகத்திற்கு ஈடுகொடுக்க அங்கே யாராலும் முடியவில்லை. எதிர்ப்பட்டோர் தலைகளெல்லாம் பந்தாடப்பட்டன.



**★ மாவட்டங்கள் நம்மைப் பிரிப்பதில்லை; இதுபோன்றே மாநிலங்களும் நம்மைப் பிரிக்க முடியாது; மொழி வேறுபாடுகளும் நம்மைப் பிரிக்க முடியாது!**

'களத்தில் இனி எவருமில்லை வெற்றி நமதே' என்ற களிப்போடு வெற்றிச் செய்தியை ராஜாதேசிங்கிற்கு அறிவிக்க வீரன் முகம்மது கான் அரண்மனைக்குத் திரும்பினான்.

அப்போது, போர் மரபை எண்ணாமல்-எதிர்பாராமல் மறைந்திருந்து தாக்கிய கொடியவன் ஒருவனால் முகமதுகான் கொல்லப்பட்டான்.

தோழன் முகமதுகான் சூழ்ச்சியால் வீழ்த்தப்பட்டதறிந்து, பெரும் படையோடு களம் நோக்கிக் கனல் போல் எழுந்தான் ராஜாதேசிங்கு. நீலவேணி எனப்பட்ட பஞ்சகல்யாணிக் குதிரை, வாயு வேகம் மனோ வேகம் என்பார்களே? அப்படிப் பறந்தது அமர்க்களம் நோக்கி.

இதைக் கேள்விப்பட்டுக் குலை நடுங்கிப் போனான் ஆர்க்காட்டு நவாப். செஞ்சியை அடுத்த சங்கராபரணியாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படுத்திவிட்டால் தேசிங்கின் போர்க்களப் பயணத்திற்குப் புள்ளி வைக்கப்பட்டுவிடும் என்று எண்ணினான்; முடிவில் - மேல்மலையனூர் ஏரி, தேவனூர் ஏரி, மேலச்சேரி ஏரி ஆகியவைகளின் கரைகளை உடைத்து, ஆற்றில் நீர் பெருகச் செய்தான்.

'பெருநெருப்புக்கு ஈரமில்லை' என்பார்களே? அதேபோல ஆர்க்காட்டு நவாபு இந்த வகையில் போட்ட கணக்கு தப்புக் கணக்காகி விட்டது; அந்த வெள்ளப் பெருக்கையெல்லாம் துச்சமெனக் கடந்து பறந்தது தேசிங்கின் குதிரை.

ஆர்க்காட்டு நவாப் முகாமிட்டிருந்த இடத்தை நோக்கி - அவனது படைவியூகங்களைத் தகர்த்து ராஜா தேசிங்கு பறந்து சென்றபோது, பகைவனொருவனால் - பஞ்சகல்யாணியாம் குதிரை நீலவேணியின் ஒரு கால் வெட்டப்பட்டது. துள்ளித் துடித்துக் குதிரை கீழே விழ- பாய்ந்தெழுந்த தேசிங்கு ராஜன் எதிர்பாராமல் எதிரி முகாமிலிருந்து வெடித்த பீரங்கிக் குண்டுக்குப் பலியானான். இந்தக் கொடுமை நடந்தது கி.பி. 1714 அக்டோபர் 14-ஆம் நாளில் ஆகும்.

நடுங்கிப் போயிருந்த நவாப், பெருமூச்சு விட்டுக் கொண்டான். 22 வயதே உடைய இளைஞனான தேசிங்குராஜனின் உடலை செஞ்சிக்கு உரிய மரியாதையுடன் எடுத்து வரச் செய்தான்; இந்து சமய முறைப்படி தன் முன்னிலையிலேயே இறுதிச் சடங்குகள் நடைபெறச் செய்தான்.

கணவன் தேசிங்குராஜனின் பிரிவுத்துயரால் அவனது இளம் மனைவியும் உடன் உயிர்நீத்தாள்.

செஞ்சியைக் கைப்பற்றிய நவாப் சாதத் உல்லாகான் இந்த வெற்றிக்காக மகிழ முடியாத அளவுக்கு மனம் கலங்கிப் போனான்; இத்தனை இளமையில் இவ்வளவு வீரமா? என்று ராஜாதேசிங்கைப் போற்றி வியந்தான். ஆர்க்காட்டுக்கு அருகிலேயே ஓர் சிற்றூர் உருவாக்கி. அதற்கு 'இராணிப்பேட்டை' என்று பெயரிட்டான்.

நெஞ்சையள்ளும் நினைவுச் சின்னமான செஞ்சிக்கோட்டை மட்டுமல்ல; இராணிப்பேட்டையும் கூட தேசிங்குராஜனின் தேயாப் புகழை நினைவூட்டிக் கொண்டிருப்பதை நாம் இன்றும் காணலாம்; அவனாண்ட அந்தக் கால வீர வாழ்வை எண்ணிக் களிக்கலாம்.

- புலவர் பழனி. சாமியப்பன்.

பெரியார் மாவட்டத்தில்

# சமுதாய நலப் பணிகள்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு 1991-92-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடாக 7,870 நபர்களுக்கு ரூ.245.945 இலட்சம் பெறப்பட்டுள்ளது. பயன்தாரர்கள் தேர்வு 20 ஊராட்சி ஒன்றியங்களிலும் நடத்தப்பட்டு தகுதியுள்ள பயன்தாரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். வங்கிகளில் கடன் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இதுவரை 7,500 பயனாளிகளுக்கு ரூ.162 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் 3,025 நபர்களுக்கும் மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

### ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்

1991-92-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் செயல்திறன் மற்றும் நிதி ஒதுக்கீடு நிர்ணயிக்கப்பட்டு அரசு ஆணை வரப்பெற்றுள்ளது. 1,950 தொகுப்பு வீடுகள், 110 தார்ச் சாலைகள், 125 கப்பிச் சாலைகள், 79 ஊராட்சி மன்றக் கட்டடங்கள், 22 பள்ளிக் கட்டடங்கள், 22 சத்துணவு மையக் கட்டடங்கள், 18 பாலங்கள், 761 ஊராட்சிப் பணிகள் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைப் பணிகளுக்காகவும், 450 சமூகக் காடுகள் அமைக்கவும் 20 கசிவுநீர்க் குட்டைகள் மற்றும் 17 சிறு பாசனக் குளங்கள் அமைக்கவும் ரூ.846.69 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ரூ.146.550 இலட்சம் மதிப்பில் 106 பள்ளிக் கட்டடங்களும், ரூ.64.653 இலட்சம் மதிப்பீட்டில் 92 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்களும், ரூ.7.200 இலட்சம் மதிப்பீட்டில் 48 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கவும், ரூ.135.670 இலட்சம் மதிப்பீட்டில் 404 ஊரகக் குடிநீர்களுக்காகவும், ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் 3,500 தெரு விளக்குகள் அமைக்கவும், ரூ.381.71 இலட்சம் மதிப்பீட்டில் 196 கி.மீ. சாலைப் பராமரிப்பு மற்றும் ரூ.27.640 இலட்சம் மதிப்பீட்டில் 22 கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ.833.423 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண ஊக்குவிப்புத் திட்டம்:

விதவை மறுமண ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் 1991-92-ஆம் ஆண்டிற்கு ரூ.35,000 கூடுதல் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது. தற்போது ரூ.5,000 மட்டும் உள்ளது. உரிய பயன்தாரர் பெரியார் மாவட்ட சமூக நல அலுவலருக்கு விண்ணப்பித்து பயன்பெறக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

### கருப்புக் கண்ணாடி மற்றும் மடக்கு ஊன்றுகோல் வழங்குதல்

கண் பார்வையற்ற நபர்களுக்குச் சமூக நலத்துறை மூலம் கருப்புக் கண்ணாடி மற்றும் மடக்கு ஊன்றுகோல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வுதவியை இதுகாறும் பெறாத, இரண்டு கண்களிலும் பார்வையற்ற நபர்கள், மாவட்டச் சமூகநல அலுவலருடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு மேற்படி உதவியைப் பெற்றுக் கொள்ளலாம்.

### ஆதிதிராவிட விவசாயிகளுக்குப் பாதி விலையில் வேளாண் இடுபொருட்கள்

பெரியார் மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிட விவசாயிகளின் நலனுக்காக ஆதிதிராவிட சிறப்பு நலத் திட்டத்தின் கீழ், ரூ.3.3 இலட்சம் மானிய உதவியுடன் வேளாண் இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அமோக விளைச்சல் தரும் புதிய ரக நெல் மற்றும் சிறுதானிய விதைகள், பருத்தி மற்றும் பயறுவகை விதைகள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், நுண்ணூட்டச் சத்து உரங்கள் ஆகியவற்றை வாங்கிடும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் 50 சத மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன.







விவசாயி ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.750 வரை மானிய உதவிகள் கிடைக்கும். சிறப்பு உணவு தானிய உற்பத்தித் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே மானிய உதவிகள் பெற்றிருந்தால் அதையும் சேர்த்து மொத்தம் ரூ.750 வரை மானிய உதவியைப் பெறலாம். ஆண்டுதோறும் ஒரே விவசாயியே தொடர்ந்து மேற்கண்ட பயன்களைப் பெறுவதைக் கட்டுப்படுத்தும் பொருட்டு புதிய விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் பயனடைய ஆவன செய்யப்பட்டுள்ளது. இவை தவிர, எண்ணெய் வித்து விதைகள், தென்னங் கன்றுகள் ஆகியன ரூ.1.7 இலட்சம் மானிய உதவியுடன் விவசாயிகளுக்குப் பாதி விலையில் வழங்கப்படுகின்றன.

சிறப்பு அரிசி உற்பத்தி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இதுவரை ரூ.19 இலட்சம் மதிப்புள்ள மானிய உதவிகள் இம்மாவட்டத்திலுள்ள நெல் சாகுபடியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 32,480 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

வேளாண்மைக்குத் தேவைப்படும் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன் வசதிகளைப் பெரியார் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியும் அதனுடன் இணைக்கப்பட்ட 230 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் வழங்கிவருகின்றன.

1992 ஜனவரி திங்கள் முடிய குறுகிய காலக் கடன் ரூ.1327.54 இலட்சமும், மத்திய காலக் கடன் ரூ.203.32 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன. இதில் குறுகிய காலக் கடன் நலிவுற்ற பிரிவினருக்கு ரூ.753.21 இலட்சமும், மத்தியக் காலக் கடன் நலிவுற்ற பிரிவினருக்கு 193.72 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண்மை முன்னேற்றத்திற்குத் தேவையான நீண்ட காலக் கடன் வசதிகளை அளிக்கப் பெரியார் மாவட்டத்தில் 12 கூட்டுறவு நிலவள வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. 1991-92-ஆம் ஆண்டுக்கு ஜனவரி 1992 திங்கள் முடிய ரூ.174.71 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

### பட்டு வளர்ச்சித் துறை - தாளவாடி

தாளவாடி உதவி இயக்குநர் அலுவலகம் பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் வட்டத்தில் தாளவாடி மற்றும் கடம்பூர் மலைப்பகுதிகளை உள்ளடக்கியது. இங்கு சுமார் 4,000 மல்பரி பரப்புச் சாகுபடியில் உள்ளது.

1991-92-ஆம் ஆண்டு குறியீடு 400 ஏக்கருக்கு 1992 ஜனவரித் திங்கள் முடிய 436 மல்பரி புதிய நடவு மேற்கொண்டு சாதனை அடைந்துள்ளது.

### மாவட்டத் தொழில் மையம்

படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1990-91-ஆம் ஆண்டிற்கான 400 நபர்களுக்கு எதிராக 1992 ஜனவரி மாதம் முடிய மொத்தம் 365 நபர்களுக்கு ரூ.72.80 இலட்சம் வழங்கப்பட்டது. இதில் 3 ஆதிதிராவிடர்களுக்காக ரூ.0.65 இலட்சம் அடங்கும். இத்திட்டத்தின்கீழ் 1991-92-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 400 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 1992 வரை 721 நபர்களுக்கு ரூ.160.35 இலட்சம் கடன் வழங்க வங்கிக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதில் 200 நபர்களுக்கு ரூ.43.43 இலட்சம் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மற்றும் 100 நபர்களுக்கு ரூ.25.13 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்ற 18 வயது முதல் 35 வயதுக்குட்பட்டுள்ள ஆண்/பெண்களுக்குக் குடும்ப வருமானம் ஓராண்டுக்கு வருடம் ரூ.10,000-க்கு மிகாமல் இருந்தால் சொந்தமாகத் தொழில் அமைத்து வாழ்க்கையில் முன்னேற வாய்ப்புள்ளது.

### பட்டு வளர்ப்புத் துறை - ஈரோடு

கடந்த ஆண்டில் 3.50 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டன. நடப்பாண்டில் 4 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளன. ஜனவரி 1992 வரை 3,12,945.650 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூ.469.41750 இலட்சம் ஆகும்.

நடப்பாண்டில் 600 ஏக்கர்கள் அளவில் மல்பரி பயிர் இறைவை சாகுபடியின் கீழ் கொண்டுவர இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஜனவரி 1992 வரை 601.00 ஏக்கர்களில் மல்பரி இறைவையின் கீழ் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

பட்டு வளர்ச்சி பயிற்சிக்கென நடப்பாண்டிற்கு 200 பட்டு விவசாயிகளக்குப் பயிற்சியளிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ரூ.60 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஜனவரி 1992 வரை 200 பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற விவசாயிகளுக்கு 1992 ஜனவரி மாதம் வரை ரூ.34,358 உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

1991-92-ஆம் ஆண்டிற்கு 15 பட்டு நூற்பகங்கள் அமைக்கக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஜனவரி 1992 வரை 24 நூற்பு இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

### மாவட்டப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை

பிற்பட்ட வகுப்பினர்களுக்குப் பிரிமெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் ரூ.1,52,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.76,211 செலவு செய்யப்பட்டு இதனால் 3,299 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர். போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் ரூ.15,08,000 ஒதுக்கீட்டில் ரூ.14,62,456 செலவு செய்யப்பட்டு 5,615 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள். இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் ரூ.8,62,000 ஒதுக்கீட்டில் ரூ.8,61,136 செலவு செய்யப்பட்டு 1,112 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள்.

இலக்கிய விருந்து:



# காவியமும் கற்பனையும்

**வித்துவான் எம்.சி.கண்ணபிரான்**

காவியம் கற்பேர்ருக்கு ஒரு பெரும் நந்தவனம், மலர் வனத்தில் பல நிறமுள்ள மலர்கள் ஒளிர் கின்றன. மணமிகுந்த மலர்கள் கமழ் கின்றன. நிறமும் மணமும் இனிமை யும் அழகும் அமைந்த அரும்புகள் மலர்ந்து மகிழ்ச்சி தருகின்றன. அது போல் கவிஞரின் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்கள் அழகும் இனிமையும் சுவையும் உணர்வும் தரும் கவிகளாக மலர்ந்து மகிழ்ச்சி தருகின்றன. பாக்களாகிய மலர் களுக்குக் கவிஞர் உணர்வும் கவர்ச்சி யும் ஊட்டி உணர்த்துகின்றனர். அங் ஙனம் செய்வதே கற்பனை அல்லது புனைந்துரை எனப்படும். கற்போர் உள்ளத்தில் உவகை தோற்றுவிப் பதே கற்பனை செய்வதன் முக்கிய நோக்கமாகும். கவிஞர், மக்கள் மனப்பாங்குக்கு ஏற்றவாறே கற் பனை செய்து தம் கவிகளை இயற்று கின்றனர். ஆதலால் காவிய வனங் களில் கற்பனை நிறைந்த கவிமலர் பலவற்றைக் காண்கிறோம். மக்கள் வழக்கத்தில் பயன்படுத்தும் முறை களைக் கவிஞர் மேற்கொண்டு காவியங்களை இயற்றுகின்றனர்.

மணி அடிக்கிறது. அப்போது, 'பள்ளிக்குச் செல்லும் நேரமாயிற்று; பாடசாலைக்குப் போ' என்கிறாள் பாட்டி. 'பாடசாலைக்குப் பிள் ளைகள் வரும் நேரமாயிற்று என்று விரைந்து செல்லுகிறார் , ஆசிரியர்' 'வண்டி புறப்படும் காலம் நெருங் கிற்று' எனப் பிரயாணம் செய்யும் ஒருவன் வேகமாகச் செல்லுகிறான். வியாபார சம்பந்தமாய் வெளியூர் சென்ற மகன் 'வரவில்லையே' என்று ஏங்கி எதிர்பார்க்கும் ஒரு தாய்க்கு 'இன்று வருவான்' என்றும் கூறும் பாட்டி 'அதோ மணி கூட அடிக்கிறது. கட்டாயம் இன்று வருவான்' என்கிறாள். மணி அடிப்பது எதற்கு என்பதை அப் பாட்டியும் அறிவாள். ஆனாலும், அப்போது பாட்டி கூறும் கருத் தோடு அம்மணியோசையாகிய நிகழ்ச் சியைச் சம்பந்தப்படுத்திக் காட்டு கிறாள். தான் கூறுவதை அம்மணி யோசை ஆமோதிப்பதாக உறுதி செய்வதாக எடுத்துக் காட்டுகிறாள். மக்கள் இது போலவே, ஏதேனும் ஒன்றைக் குறித்துப் பேசும்போது அப்போது நிகழும் பல்லி சொல் லுக்கோ மக்கள் தும்மலுக்கோ மதிப்புத் தந்து தங்கள் பேச்சோடு அவற்றையும் சம்பந்தப்படுத்திக் கூறு கின்றனர்.

வெளியே சென்ற தலைவன் வருவதாகக் கூறிய மாலைக் காலம் வந்ததும் ஒரு காதலி தன் நாயகன் வருவான் என்று எதிர்பார்த்து வராதபடியால் வருத்தப்படுகிறாள்.

மன்னன் வரக் காணேன்
மாலை வந்தது ஈதோ;
மாலை கட்டி நானே,
மகிழ்வாய் சூடுவேனே.

என்று தலைவியின் வருத்தத்தை நாம் எளிய பாடலில் எழுதி மகிழ் கின்றோம். இவ்வாறே இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்னே எழுதிய 'முல்லைப் பாட்டு' என் னும் ஒரு நூலில் தலைவி தன் தலைவன் வருகையை எதிர்பார்த்து வராமையால் வருந்தியிருக்கிறாள். அதை அறிந்த தோழி ஆற்றுவிக் கிறாள். அதற்கு, அவள் நான் வெளியே போய் நின்று, 'தலைவர் இப்போது வருவாரா?' என்று எண்ணி நின்றேன். அங்கே ஒரு நற்சொற் கேட்டது. அதாவது, வீட்டி லிருந்து காலையில் மந்தைக்குச் சென்ற தாய்ப் பசு, அந்திப் பொழு தாகியும் வராமையால்தூணில் கட்டப் பட்டிருந்த கன்று 'அம்மா எனக் கதறியது. ஆங்கிருந்த ஆயர் மங்கை 'இப்பொழுது வருகுவார் தாயார்' என்று கூறினாள். அந்தச் சொல் லைக் கேட்டு வந்தேன் 'ஆனால் தலைவர் வருவார்' என்று கூறித் தோழி தலைவியை ஆற்றுவிக் கிறாள். இந்நிலையினை இலக்கணத் தில் விரிச்சிக் கேட்டல் என இலக் கணமும் வகுத்துள்ளனர். பிற்காலத் தார் இவ்வாறு கேட்டு வந்ததைத் தான் அசரீரி என்று கூறினர். போலும், சரீரம்-உடல், அ-சரீரம்-உடலற்றது. நேரில் உருவத்தைக் காணாமல் குரல் ஓசை ஒன்றை மட்டுமே கேட்பதனால் பிற்காலத் தார் அங்ஙனம் கூறினர் என்று கொள்வதற்கும் இடமுண்டு.

இன்றும் ஒரு வேலையின் பொருட்டு நாம் வெளியே செல்லும் போது வாயிற்படி தடுத்தாலும், காலில் கல் பட்டாலும், 'போகும், வேலை முடியாது; புறப்படும்போது தடுக்கிறது' என்று கூறுகின்றோம். காலிலோ தலையிலோ படுவதற் கும், கருதிச் செல்லும் வேலைக்கும் யாதொரு தொடர்பும் இல்லாதிருந் தும் வழக்கில் தொடர்புபடுத்திக் கூறுகின்றதை நம்மிற் பலரும் அறிகின்றோம். அவ்வகையான உலக இயற்கையை உணர்ந்த புலவர்கள் உலகிற்கு இயற்றித் தரும் காவியங்களில் அதை அமைத்து அழகு செய்கின்றனர்.

வில்லிபாரதத்தில் கூறும் ஒரு நிகழ்ச்சியைக் காணுவோம்; துரி யோதனன் கண்ணபிரானைத் தன் படையில் சேர்த்துக் கொள்ளு வதற்கு அழைப்பதற்காக அஸ்தினா புரத்திலிருந்து துவாரகைக்குச் செல்லு கின்றான். அப்போது துவாரகை யின் மதில் மேல் அமைக்கப் பட்டுள்ள துணி கட்டிய கொடிகள், காற்றால் அசைகின்றன. அந்நிகழ்ச்சி இயற்கையில் நிகழ்கிறது. ஆனால், அதை ஆசிரியர் கதை நிகழ்ச்சி யோடு சம்பந்தப்படுத்துகிறார், கதைப் போக்குடன் தொடர்பு படுத்துவதிலும் கதாபாத்திரமாகிய துரியோதனன் மனநிலை உணர்ந்து செய்வதாகக் கூறுகிறார். 'கொடிகள் தன் துணிகளாகிய கைகளால், 'பாண்டவர்க்கு அல்லாமல் கண்ணன் படைத்துணை ஆக மாட்டான்; மீண்டு நீ போ' என்று தடுப்பன போன்றன' என்கிறார்.

'ஈண்டுநீ வரினும் எங்கள்
எழிலுடை எழிலி வண்ணன்
பாண்டவர் தங்கட்கு அல்லால்
படைத்துணை ஆகமாட்டான்
மீண்டுபோ கென்றென்று
அந்தவியன் மதில் குடுமிதோறும்
காண்தகு பதாகை ஆடைகைகளால்
தடுப்ப போன்ற.'

என்பது வில்லியின் வாக்கு.

இதே கொடி அசைவைக் கம்பர் இராமாயணத்துள் இராமனை வர வேற்பதற்காகப் புனைந்துரைக்கின் றார். விசுவாமித்திரர் இராம இலக்குமணரை அழைத்துக் கொண்டு மிதிலை நகர்நோக்கிச் செல்லுகின் றார். முன்னே இராமரும் விசுவா



மித்திரர்க்குப் பின்னே இலக்குமணரு மாக மிதிலை நகரின் மதிலுக்கு அருகே நடந்து செல்லுகின்றனர். மதில்மேலுள்ள கொடிகள் அசைக் கப்படுகின்றன. 'தாமரை போன்ற கண்களுடைய இராமபிரானே, நாங்கள் செய்த தவத்தால் செந் தாமரையில் இருந்து நீங்கி இலக்குமி இங்கு வந்திருக்கிறாள். விரைந்து வாருங்கள்' என்று அழைப்பது போலக் கொடிகள் அசைந்தன என்று கம்பர் கற்பனை செய்கிறார்.

'மையறு மலரினீங்கி யான்
செய்மாதவத்தின் வந்து
செய்யவள் இருந்தாள்' என்று
செழுமணிக்கொடிகள் என்னும்
கைகளை நீட்டி அந்தக் கடிநகர்
கமலச் செங்கண்
ஐயனை ஒல்லைவா என்றழைப்பது
போன்ற தம்மா.'

என்பது கம்பர் கூறும் கற்பனைச் செய்யுள்.

இவ்வாறு இயற்கை நிகழ்ச்சி யைத் தடுப்பது வரவேற்பது எனக் கற்பனை செய்து கூறும் நிலை பெரிய புராணத்திலிருந்து எடுத் தாளப்பட்டதாகக் கருத இடமுண்டு. சேக்கிழார் பெரிய புராணத்தில் இரு வேறுவகைக் கொடிகள் மாளிகை மேல் ஆடின என்று கூறுகிறார். திருக்கோவலூரில் தங்கிச் சேதி நாட்டை ஆண்டு வந்த மலை நாட்டு மன்னனாகிய மெய்ப்பொருள் நாயனாரை வெல்லக் கருதிய பகை மன்னன் சிவனடியார் வேடந் தாங்கி முத்தநாதன் என்னும் பெயருடன் செல்லுகிறான். அவன் செல்லும் வீதியில் மாளிகை மீது இரு கொடிகள் ஆடுகின்றன. ஒன்று பெண்களின் கூந்தலாகிய கருநிற முள்ள கொடிகள், மற்றொன்று ஒளியுள்ள வெண்ணிறக் கொடிகள், பகை மன்னன் மெய்ப்பொருள் நாயனாரின் பக்தியை அறிந்து வஞ்சகமாக வெல்ல எண்ணி,

'மெய்யெலாம் நீறுபூசி
வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினில் படைகரந்த புத்தகக்
கவளி ஏந்தி
மைபொதி விளக்கே என்ன
மனத்தினுள் கறுப்புவைத்துப்
பொய்தவ வேடங்கொண்டு
புகுந்தனன் முத்தநாதன்'.

என்கிறார். அதற்கேற்றவாறு வெளிக் கோலத்தை வெண்ணிறக் கொடிகள் வரவேற்கின்றன. உட்கோலத்தைக் கூந்தலாகிய கருநிறக் கொடிகள் வரவேற்கின்றன. வஞ்சகமாய் மன்னனை வெல்ல எண்ணிய தீய எண்ணத்தைக் கொண்ட மனத்திற் கேற்றவாறு கருநிறக்கொடி மாதவ வேடத்திற்குத் தக்கவாறு வெண் ணிறக் கொடி என இரு கொடி ஆடு வதை ஆசிரியர் கூறுகிறார். இவை முறையே, மாறித் தடுப்பன போன் றன என்பதும் கொள்ளலாம்.

'மாதவ வேடங்கொண்ட
வன்கணான் மாடந்தோறும்
கோதைசூழ் அளகபாரக்
குழைக்கொடி ஆட, மீது
சோதிவெண் கொடிகள் ஆடும்
சுடர்நெடு மறுகிற் போகிச்
சேதியர் பெருமான் கோயில்
திருமணி வாயில் சேர்ந்தான்.'

என்பது சேக்கிழார் செம்மொழி யாகும். இப் பாடலில் வரவேற்றன கொடிகள் என்று கூறாவிட்டாலும், உட்கோலத்தைக் கண்டு கூந்தலாகிய கொடிகள் ஆட அதற்கு மேலே இருக்கும் கொடிகள் மறுப்பதுபோல ஆடுகின்றன என்னும் குறிப்பையே எடுத்துக் கொண்டு இரு ஆசிரியர் களும் மேலும் புனைந்துரை செய் துள்ளனர் போலும்,

இனி, சூரியன், சந்திரன் மறை வதையும் தோன்றுவதையும் இவை போன்ற பிற இயற்கை நிகழ்ச்சி களையும் கதைக்கேற்றவாறு கதா பாத்திரங்களோடு சம்பந்தப்படுத்திக் கூறுகின்றனர். காவியங்களில் பல இடங்களில் இவைகளைக் காண லாம். ஓர் உதாரணங் காட்டுவேன். சூரியன் மறைவதைக் கம்பர் தசரதன் இறந்ததால் குலத்திற்குத் தலைவனா கிய சூரியன் கடலில் மூழ்கினான் எனக் கற்பிக்கிறார். உறவினர் ஒருவர் இறந்ததால் உடனே தலை முழுகுவர். அதனால், சூரியன் கடலில் மூழ்கினான் என்கிறார். சூரியனுக்கும் தசரதனுக்கும் உள்ள தொடர்பை விளக்க ஆசிரியர். ஆழ்ந்து யோசிக்கிறார். இராமர் பிறப்பதற்கு இடமாக இருந்து பழங் குலத்திற்குச் சூரியன் தலைவன் ஆதலால் கடமையைச் செய்வது போலக் கடலில் மூழ்கினான் என் கிறார்.

'படஞ்செய் நாகனைப் பள்ளி
நீங்கினான்
இடஞ்செய் தொல்குலத்
திறைவன் ஆதலால்
தடஞ்செய் தேரினான்
தானும் நீரினால்
கடஞ்செய் வானெனக் கடலில்
மூழ்கினான்.

இவ்வாறு கவிஞர் உலகில் உணரும் இயற்கைகளை, காவியங் களில் அழகு செய்து அமைத்துச் செல்லுகின்றனர்.

- நன்றி: 'ஆவண அமுதம்'.

## உலக செஸ் வீரர்கள் வரிசையில் சென்னையைச் சேர்ந்த ஆனந்த்

உலக செஸ் வீரர்கள் வரிசை யில் சென்னையைச் சேர்ந்த விஸ்வநாதன் ஆனந்த் 5-வது இடத்தைப் பெற்றிருக்கிறார். உலக செஸ் சங்கம், ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச செஸ் வீரர்களைத் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுத்து அறி விப்பு செய்து வருகிறது. இந்த ஆண்டு முடிவடைவதையொட்டி, 1992-ஆம் ஆண்டின் முன்னணி செஸ் வீரர்கள் 10 பேரைத் தேர்ந் தெடுத்து இந்தச் சங்கம் அண்மை யில் அறிவித்தது. இந்த 10 முன்னணி வீரர்களில் இந்தியாவின் ''கிராண்ட் மாஸ்டர்'' விஸ்வநாதன் ஆனந்த் 5-வது இடத்தைப் பிடித்திருக்கிறார். உலக செஸ் அரங்கின் பத்தாவது நிலையில் இருந்து ஐந்தாவது நிலைக்கு உயர்ந்துள்ளார் இந்தியா வின் செஸ் மேதை ஆனந்த்.

1992-ஆம் ஆண்டின் முன்னணி செஸ் வீரர்கள் 10 பேரில் ஆசியா கண்டத்திலிருந்து ஆனந்த் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என் பது குறிப்பிடத்தக்கதும், மகிழ்ச்சிக் குரியதுமாகும். இந்த வரிசையில் ரஷியாவைச் சேர்ந்த காரி காஸ்பரோவ் முதலிடத்தில் இருக் கிறார்.





# தண்டமிழ் வளர்க்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம்

முனைவர்
**சி. பாலசுப்பிரமணியன்**
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழ்மொழி இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழாய் அதன் இலக்கிய இலக்கணங்களுடன் செம்மையாக அமைந்துள்ளது. இலக்கணத்தில் எழுத்து, சொல், யாப்பு, அணி என்ற நான்கினோடு பொருளுக்கு அகம், புறம் என இருவகை இலக்கணம் வகுக்கப் பட்டுள்ளது. இப்பொருள் இலக்கணம் இடைக்காலச் சோழர் ஆட்சியில் முறையே அமைக்கப்பட்டுள்ளது. சோழ வளநாட்டின் காவிரித் தாயின் நற்கருணையால் வளங் கொழிக்கும் சோறுடைத்த வள நாடாம் தஞ்சைத் தரணியில் மாமன்னன் இராசராசன் புகழ் பாடும் பொதுவுடையார் வீற்றிருக் கும் பெருநகரில் தமிழ் மணம் பரப்ப வந்துதித்த சிகரமே 'தமிழ்ப் பல்கலைக்கழகம்'.

தமிழுக்குத் தமிழ்ச் சங்கம் ஏற் படுத்திய 'தமிழவேள் உமாமகேசு வரனார்' அவர்கள் அறுபது ஆண்டு களுக்கு முன்பே 'நம் தமிழ்நாட்டில், நம் மொழிக்கெனப் பல்கலைக் கழகம் காணமுயன்றோமா?' என ஏக்கம் தெரிவித்தார்கள். அத் தமிழ்ச் சான்றோரின் ஏக்கம் 1981 செப்டம்பர் 15-ஆம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று அன்றைய தமிழக முதல்வராக இருந்த மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.இராமச் சந்திரனார் அவர்களின் பெரு முயற்சியால் அப்போதைய மேதகு தமிழக ஆளுநராக இருந்த திரு. சாதிக் அலி அவர்கள் கொண்டு வந்த ஒரு விரைவுச் சட்டத்தின்கீழ், நிறைவேறியது. முழுமையாக அகவை பத்து நிறைவெய்துள்ள இப் பல்கலைக் கழகத்தின் முதலாவது துணைவேந்த ராக முதுமுனைவர் வ.அய்.சுப்பிர மணியனார் அவர்கள் பொறுப்பேற் றார். இவரது முயற்சியால், பல் கலைக்கழக நல்கைக் குழுவின் (U.G.C.) சட்டவிதி 2(அ) பிரிவின் கீழ்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை, நடுவண் நிறுவனங்களின் நல்கை பெறத்தக்கது என ஏற்றுக்கொண்டது.

தண்டமிழின் வளர்ச்சிக்கென்றே மாண்புமிகு முன்னால் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களால் இதனுடன் இணைப்புப் பெற்ற கல்லூரி (Affiliated College) எதுவும் இல்லாத ஓர் உயர் ஆய்வு மைய மாகத் தோற்றுவிக்கப் பெற்ற இப் பல்கலைக்கழகம், இலங்கை, மலேசியா, மொரீசியசு, தென் ஆப்பிரிக்கா, பிஜி போன்ற பிற நாடுகளில் வாழுகின்ற தமிழர் நலன் காத்து, பண்டையச் சுவடிகள், கல் வெட்டுகள் ஆகியவற்றை ஆய்ந்து உண்மையை வரலாற்றுச் சான்று களை வெளிக்கொணர்தல், தமிழ்க் கல்வியை மேம்பாடடையச் செய்து, தமிழ் ஆராய்ச்சியினை வளப் படுத்தி, தமிழ் மொழியைப் பயிற்று மொழியாக்கி தமிழ்மொழியை உலக அரங்கில் தனக்குரிய இடத்தைப் பெறவதைத் தலையாயக் குறிக் கோளாகக் கெண்டு விளங்குகிறது.

தொடங்கப்பெற்ற காலத்தில் தஞ்சை 'அரண்மனை வளாகத்தில்' பணியினைத் தொடங்கிய இப் பல்கலைக்கழகத்தினை, விரிவான

அளவில் உலக அளவில் பலரும் போற்றவேண்டுமன்ற உயர்ந்த நோக்கங்கொண்ட அந்நாளைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர், புலக் கட்டடங்களின் உருவ அமைப்பினை 'தமிழ்நாடு' என்ற சொல்லில் வருகிற 'த, மி, ழ், நா, டு' ஆகிய எழுத்து வடிவங்களைப் போல இருக்கவேண்டும் எனவும், தமிழ்நாட்டின் வரைபடத்திலுள்ள மாவட்டத் தலைநகர் மற்றும் ஆறுகளின் வழித் தடங்களையொத்த அலுவலக வளாகம் இருக்கவேண்டுமெனவும் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள்.

தற்போது 'ழ்' வடிவக் கட்டடம் செயல்பாட்டில் இருந்து வருகிறது. மையத்தில் அமைந்துள்ள நூலகக் கட்டடம் வட்ட வடிவில் அமைத்து, பார்வைக்கு நம் நாடாளுமன்றக் கட்டடத்தினை ஒத்த அமைப்பில் அமைந்துள்ளது. இந் நூலகக் கட்டடத்தினைச் சுற்றி அரைவட்ட வடிவில் 'தமிழ்நாடு' என்ற எழுத்தமைப்பில் தனித்தனிக் கட்டடங்கள் விரைவில் உருவாக இருக்கின்றன.

ஐம்பெரும் காப்பியங்களால் அணிசெய்யப்பட்ட தமிழ் மொழியைப் போல ஐம்புலத்துறையால் தமிழ்ப் பல்கலைக்கழகம் அணி செய்யப்பட்டுள்ளது எனலாம்.

இலக்கியம், மொழியியல், நாட்டுப்புறவியல், இந்திய மொழிகள் பள்ளி, தத்துவமையம், மலையின மக்கள் ஆய்வுமையம் (உதகை) இவற்றைக் கொண்டது மொழிப் புலம்.

ஓலைச்சுவடித் துறை, அரிய கையெழுத்துச் சுவடித்துறை, கல்வெட்டியல் துறை, நீரகழாய்வு மையம் ஆகியற்றைக் கொண்டது சுவடிப்புலம்.

இசை, நாடகம், சிற்பம் என்ற மூன்று துறைகளைக் கொண்டது கலைப்புலம். அயல்நாட்டுத் தமிழ்க் கல்வி, மொழிபெயர்ப்பு, தொகுப்பியல் சமூகவியல், அறிவியல் தமிழ்-வளர்ச்சி முதலான துறைகளைக் கொண்டமைந்தது வளர்தமிழ்ப் புலம். மற்றும் அறிவியல் புலத்தில் சித்த மருத்துவம், தொல் அறிவியல், தொழில், கட்டடக் கலை, கணிப்பொறி ஆகியன அடங்கியுள்ளன.

இவை தவிர, நீண்ட கால-குறுகிய கால ஆய்வுத் திட்டங்களை உள்ளடக்கிய சில துறைகளும் உள்ளன.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் பல்துறைகளிலும் பல்துறை அறிஞர்களைக் கொண்டு அவர்களின் ஆய்வுப் பணிகளை மக்கள் பெறுகின்ற வகையில் அதனை அச்சுருவாக்கி வருவதில் முதலிடம் வகித்து வருகின்றது.

இந் நூற்றாண்டின் இறுதிக்குள் அனைவருக்கும் கல்வி என்ற அரசின் இலக்கினைக் கருத்தில்கொண்டு, தஞ்சைத் தரணியை அடுத்துள்ள பகுதிகளில் முதியோர்க்குக் கல்வி புகட்டும் உயர்நோக்கில் 'எழுத்தறிவுத் திட்டம்' ஒன்றினையும் நடத்தி வருகின்றது. இப் பல்கலைக்கழகத்தின் நூலகம் 'செய்திச் சேகரிப்பும் நூலகக் கண்காணிப்பும்' என்னும் துறையின்கீழ் தமிழில் உள்ள அனைத்துத் தரவுகளையும் (Data) சேகரித்துத் தொகுத்து ஆய்வுக்கு உதவும் சீரிய நோக்கத்துடன் செயல்பட்டுவருகின்றது. தமிழ்ப் புலவர் பெருமக்கள் தம் சொந்தப் பயன்பாட்டிற்காகத் தங்கள் இல்லங்களில் சேகரித்து வைத்திருந்த பல அரிய நூல்களையெல்லாம் வாங்கிப் பாதுகாப்பாக இந் நூலகத்தில் வைத்துள்ளோம். ஓர் இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்களைக் கொண்ட இந்நூலகத்தில், தமிழில் வெளிவருகின்ற அனைத்துப் பருவ இதழ்களும் (Journals) ஆங்கிலத்தில் நூறு பருவ இதழ்களும் வரவழைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மொழிப் பயிற்சிக்கென ஒலித்தட்டுகள், பன்னாட்டு நில வரைபடங்கள், ஒளி வில்லைகள், நுண்படச் சுருள்கள் (Micro film) முதுபெரும் தமிழ் அறிஞர் பெருமக்களின் உருவப் படங்கள் ஆகியனவற்றை இங்குக் காணலாம். கணிப்பொறித் தகவல் மையம் (Computerized Information System) மூலம் இங்குள்ள நூற்பட்டியலைப் பெற்று எளிதில் நூல்களை எடுக்கக்கூடிய அளவிற்கு உயர்ந்துள்ள இந் நூலகம், இந்தியாவிலேயே தலைசிறந்ததொரு நூலகம் என்று சொல்லுமளவிற்கு மேலோங்கி வருகின்றது எனலாம்.

பண்டைய தமிழர் நாகரிகம், அவர்களின் சமுதாய வரலாறு, பண்பாடு ஆகியனவற்றை நமக்குப் புலப்படுத்தவல்ல ஓர் அருங்காட்சியகத்தை உள்ளடக்கியது இப் பல்கலைக்கழகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

துறைதோறும் துறைதோறும் தமிழ்மொழியை வளர்க்கவேண்டும்; வளப்படுத்தவேண்டும்; உயர்த்த வேண்டும், அதனோடு தமிழராகிய நாமும் உயர்ந்து தலைநிமிர்ந்து நிற்கவேண்டுமென்கிற வகையில் தமிழில் பல்துறை ஆராய்ச்சி நூல்களை நாளும் அழகுற வெளியிட இப் பல்கலைக்கழகத்தில் அண்மைப் புதுமையுடன்கூடிய அச்சுக்கூடம் ஒன்றும் செயல்பட்டுவருகின்றது. இதன் வாயிலாக இலக்கணம்; இலக்கியம், கல்வெட்டு, நாட்டுப்புறக் கலைகள், இசை, நாட்டியம், சமயம், அறிவியல் ஆகிய பல்வேறு துறை சார்ந்த இருநூறுக்கும் மேற்பட்ட அரிய ஆராய்ச்சி நூல்களை





வெளியிட்டுள்ளது. அவற்றில் சில நூல்கள் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசினைப் பெற்றுள்ளன. தமிழில் அறிவியல், மருத்துவம், பொறியியல் ஆகிய துறைகளில் பல விளக்க நூல்களையும் இப் பல்கலைக்கழகம் வெளியிட்டுக் கொண்டு வருகின்றது.

இப் பல்கலைக்கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழா 24.3.1984-இல் நடைபெற்றது. இவ் விழாவில் தமிழ் மொழி, கலை, பண்பாடு இவற்றிற்காகப் பாடுபட்ட ஐவருக்கு முனைவர் (டாக்டர்) பட்டங்கள் வழங்கப்பட்டன. மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர், சு.மு. கௌரி சங்கர தபதி, திருவெண்காடு ப. சுப்பிரமணிய பிள்ளை, தவத்திரு. தனிநாயக அடிகள் ஆகியோர்க்கு 'இலக்கிய முதுமுனைவர்' பட்டமும், தி.சு. அவினாசிலிங்கம் செட்டியாருக்கு 'அறிவியல் முதுமுனைவர்'ப் பட்டமும், வழங்கப்பட்டன. தற்பொழுது 11.12.1991-இல் நடந்த சிறப்புப் பட்டமளிப்பு விழாவின்போது 'அருள்மொழி அரசு' என அனைவராலும் புகழ்ந்து போற்றப்படும் திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்கள், தமிழ் இலக்கிய வரலாற்றுத் துறை ஆராய்ச்சியில் சிறப்புப் பெற்று விளங்கும் பேராசிரியர் மு. அருணாசலம் அவர்கள்; சைவசித்தாந்தத்தில் வித்தகச் செல்வராக விளங்கும் சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள்; பத்தூர் நடராசத் திருமேனியை மீட்டுத் தமிழகத்திற்குக் கொண்டுவந்து சேர்த்த செம்மல் டாக்டர் எல்.எம். சிங்கி அவர்கள் ஆகிய இந் நால்வர்க்கும் 'மதிப்புறு முதுமுனைவர்'ப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இப் பல்கலைக்கழகப் புது வளாகத்தில் மரக்கன்றுகள் வளர்க்கும் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி நடுவண் அரசிடமிருந்து இதற்காகச் சுமார் பதினைந்து இலட்ச ரூபாயினைப் பெறுவதற்கான இசைவோடு இதுகாறும் சுமார் 50,000-க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இதன்படி சுற்றுச் சூழலைக் காக்கவும், சக்தி வளங்களைப் பெருக்கவும் 'சக்தி மரக்காடுகள்' எனும் திட்டத்தின்கீழ் 3,75,000 மரக்கன்றுகள் நான்கு ஆண்டுகளுக்குள் நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கல்லூரி அளவிலான மொழியியல் ஆசிரியர்களுக்கு மைய அரசின் நிதி உதவியுடன் 'கணிப்பொறிப் பயிற்சி வகுப்பு' நடத்தி 'இயற்கை மொழியாய்வு-ஆசிரியப் பயிற்சித் திட்டம்' (Natural Language Processing-Teacher Training Programme) என்ற சான்றிதழ் வகுப்பும் (Certificate Course) இங்கே நடத்தப்பட்டுவருகின்றது.

வடமொழியில் உள்ள ஆகமங்கள், இயந்திரங்கள் இவற்றை எளிதில் புரிந்துகொள்ள ஏதுவாக, தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதற்காகத் தமிழக அரசு ஐந்தேகால் இலட்ச ரூபாய் நல்கை அளிக்கப் பெருமனத்துடன் இசைந்துள்ளது. பல்கலைக்கழக நூலக முகப்பில் 'மகரத் தோரண வாயில்' ஒன்று, ரூபாய் ஒன்பது இலட்சம் மதிப்பில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனைத் தமிழக அரசு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

ஆய்வாளர்களின் நீண்ட நாள் கனவினை நனவாக்குகின்ற வகையில், இவ்வாண்டு முதல் பல துறைகளில் எம்.ஃபில்., பிஎச்.டி., முழு நேரப் பட்டப்படிப்பு வகுப்பாகத் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், பரதக் கலைக்கென்றே பயிற்சி வகுப்பு ஒன்றும் இவ்வாண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது.

மருத்துவத் துறையினை எடுத்துக் கொண்டால், இங்குள்ள சித்த மருத்துவத் துறையில் மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகள்மூலம் நீரிழிவினைத் தடுக்கவும், கொழுப்புச் சத்தினைக் குறைக்கவும், கொடிய பாம்புக் கடிக்கு மருந்தும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், சென்னை, தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகத்தின் நல்கையுடன் (TNSCS & T) 'சேராங்கொட்டை திசு வளர்ப்புத் (Tissue Culture of Emdamgered Medicinal Plant Semecarpus, Anacardium) திட்டம் தற்பொழுது செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

இப் பெருமைமிகு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் நாளும் ஆற்றிவருகின்ற தமிழ்த்தொண்டு எண்ணில. இப் பல்கலைக்கழக வளர்ச்சி மென்மேலும் பெருகித் தமிழின் பெருமைகளை உலகறியச் செய்து, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் எனச் செய்வோம்.

# கீரைகளின் மருத்துவக் குணங்கள்

**நா**ம் எப்போதாவது, ஏதா வது ஒரு கீரையை உணவோடு சேர்த்துக்கொள்கிறோம்; ஆனால், அந்தக் கீரை எந்தவிதத்தில் நம் உடலுக்குப் பயன்படுகிறது என்பது பற்றியெல்லாம் நமக்குத் தெரியாது.

'இந்தக் கீரையைச் சாப்பிடு - அதற்கு நல்லது' ..... 'அந்தக் கீரையைச் சேர்த்துக் கொள் - இதற்கு நல்லது' என்று நம் வீட்டில் உள்ள பெரியவர்கள் சொல்லுவதுண்டு.

எந்தெந்தக் கீரைகள் உட்கொள்ளுவது எதற்கெல்லாம் நல்லது என்பதை முறைப்படி தெரிந்துகொள்ளுவது - சைவ உணவை உட்கொள்ளுகிறவர்களுக்கு மட்டுமல்ல; அசைவர்களுக்கும் நல்லதுதானே?

முக்கியமாகச் சில கீரைகளுக்கு உள்ள மருத்துவக் குணங்கள் என்னென்ன? அவைகளால் எந்தெந்த நோய்கள் நீங்கும்?... என்று பிரபல சித்தவைத்திய நிபுணர் டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ், R.I.M.P., அவர்களைப் பேட்டி கண்டோம்.

நாம் அவரிடம் கேட்ட வினாக்களும், அவர் நமக்களித்த விடைகளும் இங்கே தொகுத்தளிக்கப் படுகின்றன:

- சந்திப்பு பி.எல்.ஆர்.


கொடிப் பசலை

**வீட்டுத் தோட்டத்தில் பயிரிடும் அரைக்கீரை, நமது உடல்நலத்திற்கு எந்த விதத்திலாவது உதவுகிறதா?**

ஆமாம்; நிறையவே உதவுகிறது. அரைக்கீரையை ஓர் உன்னத சஞ்வீசி என்றேகூட சொல்லலாம். அந்த அளவிற்கு நம் உடல்நலிவை நீக்குவதாக இருக்கிறது இந்தக் கீரை.

ஜுரம், நடுக்கம், வளி நோய், மலச்சிக்கல், குளிர் ஜுரம், ஜல தோஷம், ஜன்னி, சீதளம், நரம்புத் தளர்ச்சி, பலவீனம், கபரோகம், வாய்வு சம்பந்தமான வியாதிகள் - உடல்வலி, நீரக்கோவை, வாத நோய், சளி, இருமல், வாத ஜுரம், பிடரி நரம்பு வேதனை, நரம்பு வலி, மண்டைப் பீநீசம் - போன்ற பல துன்பங்களைப் போக்க வல்லது அரைக்கீரை.

இதில் உள்ள நார்ச்சத்தானது செரிமானத்திற்கும் நல்லது; ஆகவே இதைத் தினசரி சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளலாம். இழந்த தாதுவைத் திரும்பப் பெறவைக்கிற இந்தக் கீரையானது, சிறுவர் சிறுமியர் நல்ல நினைவாற்றல் கொள்ளவும்கூட உதவி செய்யும். தலைமுடி கருகருவென்று வளரவும் உதவுகின்றது இக்கீரை. இதைப் பத்தியத்தில் இருப்பவர்களும் சேர்த்துக் கொள்ளலாம்.

**அருகம் புல்லுக்கு மருத்துவக் குணம் ஏதாவது உண்டா?**

உண்டு. அதிகாலையில், அருகம் புல் சாறு ஒரு மண்டலம் - அதாவது 48 நாட்கள் அருந்தி வந்தால் உஷ்ணம், பித்தம் சம்பந்தமான வியாதிகள் அடியோடு நீங்கிவிடும். முக்கியமாக இதயநோய்க்கும் இது நல்லது.

இரத்தக் கொதிப்பு, பலவீனம், மூலநோய், வெட்டை, ஆஸ்த்துமா, தலைபாரம், வயிற்றுநோய், உதிரப் பெருக்கு, மார்பு வலி, மூளை பாதிப்பு, [illegible] வலி, குடைச்சல், சொறி, சிரங்கு, ரண காயங்கள் ஆகியவற்றைக்கூட அருகம் புல் உதவியால் குணப்படுத்திவிட முடியும்.

**அகத்திக் கீரையில் என்னென்ன சத்துக்கள் இருக்கின்றன; அவை மனித உடலுக்கு எந்த வகைகளிலெல்லாம் பயன்படுகின்றன?**

இந்தக் கீரையில் இரும்புச் சத்து, சுண்ணாம்புச் சத்து, உயிர்ச்சத்து, விட்டமின் 'ஏ' ஆகியவை உள்ளன. நம் உடலில் உள்ள எலும்புகள் வலிவடையவும், பற்கள் உறுதிபெறவும் இவை உதவும். மலச்சிக்கல் இதனால் நீங்கும்.


டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்

பச்சையாக இந்தக் கீரையை


வெந்தயக் கீரை

மென்றுதின்றாலே - வாய்ப்புண், தொண்டை ரணம், தொண்டை வலி ஆகியவை நீங்கிவிடும். மூளைக் கோளாறு உள்ளவர்கள், உணவோடு அகத்திக் கீரையை அதிகம் சேர்த்துவந்தால், விரைவில் அவர்கள் நலம்பெறும் வாய்ப்பு உண்டு. தோல் வியாதிகள், கண் கோளாறு, தலைவலி, சிறுநீர் நோய், இரத்தக் கொதிப்பு ஆகியவற்றையும் இந்தக் கீரையானது நீக்கிவிடும். இதன் இலை, காய், பூ, பட்டை, வேர் ஆகிய எல்லாமே மருத்துவத்தில் பலவகையில் கையாளப்படுகிறது.

[illegible]யுக் கோளாறு உள்ளவர்கள் இதைச் சாப்பிடா[illegible] நல்லது; இன்னொன்று-அகத்திக் கீரைக்குப் பத்தியத்தை முறித்துவிடும் குணமும் உண்டு; ஆகையால் பத்தியம் இருப்பவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

**ஆடோ, மாடோ தொடாத அளவிற்குக் கசப்புடைய 'ஆடா தொடை'க்கு மருத்துவக் குணம் உண்டா?**

உண்டு. உண்டு. நம் நாட்டுக் கிராமப்புற வேலிகளிலெல்லலாம் ஆடாதொடைச் செடி காணப்படுவதால், இதைச் சாதாரணமாக நினைத்துவிட்டீர்கள் போலிருக்கிறது; நம் முன்னோர்கள் கண்டுபிடித்த மிகச் சிறந்த மூலிகைகளில் ஆடாதொடையும் ஒன்றாகும்.

இதன்மூலம் குணமாகும் நோய்கள் பற்றி ஒரு பட்டியலையே சொல்லுகிறேன் கேளுங்கள் - ஜுரம், சளி, ஜலதோஷம், இருமல், தும்மல், அடிக்கடி மூச்சுத் திணறல், இரைப்பு, ஈஸனோபீலியா, மூக்கடைப்பு, மூக்கில் நீர் ஒழுகுதல், கபம், மூச்சு வாங்குதல், ஆஸ்த்துமா, பிரசவச் சிக்கல், கப ஜுரம், விஷம், கக்குவான் இருமல், காமாலை, சிலந்திக் கடி, வயிற்றுநோய், மலடு, இரத்த விக்கல், ஜன்னி, பித்த ஜுரம், கோழைக் கட்டு முதலான பல துன்பங்களை நீக்கக் கூடிய அருமருந்து ஆகும் இந்த ஆடாதொடை.

இதனுடைய இலைமட்டுமல்ல; பூ, பட்டை, வேர் ஆகியவைகளும்கூட மருத்துவத்தில் நன்றாகப் பயன்படுபவைகளாகும்.

**ஈஸனோபீலியா நோய்க்கு ஆடா தொடையை எப்படிப் பயன்படுத்துவது?**

ஆடாதொடை இலை, வேப்ப இலை, அத்தி இலை, துளசி, முருங்கைக் கீரை ஆகியவற்றைச் சம அளவில் எடுத்துக் கொண்டு சாதம் வடித்த நீரை(கஞ்சி) ஊற்றி நன்றாக அரைத்துச் சுண்டைக் காயளவு மாத்திரை களாக உருட்டி மூன்று நாட்கள் வெயிலில் நன்றாகக் காய வைத்துக் கொள்ளவேண்டும். சாப்பாட்டுக்குப் பிறகு வேளைக்கு இரண்டு மாத்திரை வீதம் உட்கொண்டு தண்ணீர் குடிக்க வேண்டும். இப்படி முப்பது நாட்கள் சாப்பிட்டு வந்தாலே ஈஸனோபீலியா நோய் நீங்கிச் சுகம் பெறலாம்.

**ஆடு தீண்டாப்பாளை என்கிறார்களே அது என்ன?**

அதுவும்கூட கீரை வகையைச் சேர்ந்ததுதான். ஆங்கிலத்தில் இதை Worm-Killer என்பார்கள். தமிழில் போலவே மலையாளத்திலும் இதன் பெயர் ஆடுதீண்டாப் பாளைதான்!

குடற்புழு நீங்கவும், விஷப் பூச்சிக்கடி, மேகவாய்வு, கபால வலி, கருங்குஷ்டம், கரும்படை கரப்பான், அரையாப்புக் கட்டி, ரணம் ஆகியவற்றை நீக்கவும், தாது விருத்திக்கும் இது மிகவும் நல்ல மருந்தாக உதவக்கூடியது ஆகும். இதை உபயோகிக்கிறபோது உப்பு, புளி, மாமிசம், புகை ஆகியவை கூடவே கூடாது.

**மஞ்சட்காமாலைக்கு உதவுவதாகச் சொல்லப்படும் கீழாநெல்லி வேறு எதற்கெல்லாம் உதவும்?**

சோகை நோய், கல்லீரல் - மண்ணீரல் - சிறுநீரக நோய்கள், மாலைக்கண், நீரிழிவு, பெரும்பாடு, வெள்ளை வெட்டை, மேகவெட்டை, தாபம், அரிப்பு, இரத்தக் கழிச்சல் போன்ற பல பிணிகளுக்கும் இந்தக் கீழாநெல்லிக் கீரை மிக அருமையான மருந்துப் பொருளாகப் பயன்படுவதாகும்.

**நாம் அன்றாடம் உணவில் சேர்த்துக் கொள்ளுகிற கொத்து மல்லிக் கீரையால் என்னென்ன நோய்கள் விலகக்கூடும்?**

இரத்தச் சூடு, வயிறு சம்பந்தமான நோய்கள், கண் நோய், அக்னி மாந்தம், மயக்கம், பித்த வாந்தி, மனநோய், நாவறட்சி, வாய்வு, சிறுநீர்க் கடுப்பு, பலவீனம், உறக்கமின்மை, சளி, மூச்சடைப்பு, மலச்சிக்கல், ஆண்குறியில் ஏற்படும் ரணம், பேதி, பல் நோய்கள், தாது நஷ்டம், வீக்கம் ஆகியவற்றை நீக்க கொத்துமல்லிக் கீரை மிகவும் நல்லது. அதிக அளவு இரும்புச் சத்து உடையது இக்கீரை; விட்டமின் 'சி' உயிர்ச்சத்தும் இதில் உண்டு.

**நரைமுடியைக் கறுப்பாக்கும் வகையில் உதவுகிற கீரைகள் ஏதாவது இருக்கின்றனவா?**

கரிசலாங்கண்ணி கீரை மூலம் இதைச் சாதிக்க முடியுமே! எப்படி

புளிச்சக் கீரை


யென்றால், கரிசலாங்கண்ணி இலை 50 கிராம், கொட்டைக் கரந்தை இலை 50 கிராம் எடுத்து நன்றாகக் காய வைத்துச் சருகாக்கிக் கொள்ள வேண்டும்; பிறகு அம்மியில் வைத்துத் தட்டி சூரணம் செய்து, மெல்லியதுணியில் சலித்து வைத்துக்கொள்ள வேண்டும். தினசரி இரண்டு கிராம் சூரணத்துடன் தேன்கலந்து 40 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் போதும்; நரைமுடி படிப்படியாகக் கருநிறம் அடையும். கரிசலாங்கண்ணி இலையைத் தேங்காயெண்ணெயில் போட்டுத் தேய்த்து வந்தால் தலைப்பொடுகும்கூட நீங்கிவிடும்.

உடலுக்கு உரம் ஊட்டவல்ல இந்தக் கீரை இரத்தத்தைச் சுத்திகரிக்கும்; மங்கலான கண்ணொளியைக் கூர்மையாக்கும்.

கரிசலாங்கண்ணி இலைச்சாறை 5 கிராம் எடுத்து, அதனுடன் மோர் கலந்து கொடுத்தால் பாம்புக் கடியால் உண்டான நஞ்சுகூட நீங்கும்; இலையைக் கசக்கி வைத்துக் கட்டினாலே தேள்கடி நஞ்சும் விலகும். இப்படி இன்னும் ஏராளமான நல்லகுணம் இந்தக் கீரைக்கு இருக்கிறது.

**உணவில் மணம் ஊட்டப் பயன்படுத்தும் கறிவேப்பிலையின் மருத்துவக் குணம் என்ன?**

பழஞ்சுரம், மந்தம், மந்தபேதி, மலக்கட்டு, வாந்தி, அம்மைத் தழும்பு, வயிற்றுவலி, அஜீரணபேதி, பித்தம், உடல் சூடு, கிரகணி, பைத்தியம் ஆகியவற்றை நிறுத்தம் மருத்துவக் குணம் கறிவேப்பிலைக்கு உண்டு. இது ஜீரணத்தைச் செம்மையாக்கிப் பசி உண்டாக்கக் கூடியதும் ஆகும்.

**அம்மைத் தழும்பு மாற அதை எப்படிப் பயன்படுத்துவது?**

ஒரு கைப்பிடி கறிவேப்பிலை இலையோடு, கசகசா 9 கிராம், கஸ்தூரி மஞ்சள் 4 கிராம் ஆகியவைகளும் சேர்த்து அம்மியில் வைத்து அரைத்துக் கொள்ள வேண்டும்; அம்மைத் தழும்புள்ள இடத்தில் அதைத் தடவி, அரை மணி நேரம் வைத்திருக்க வேண்டும்; பிறகு கடலை மாவோ, பச்சைப் பயிறு மாவோ போட்டுக் குளித்து விடலாம்.

இப்படி இரண்டு வாரம் குளித்து வந்தாலே அம்மைத் தழும்பு நிரந்தரமாக மாறிவிடும்.

**மனத்தக்காளி கீரையினுடைய சிறப்புக் குணத்தைச் சொல்லுங்களேன்?**

மணத்தக்காளி கீரையால் நமக்கு நிறையப் பலனிருக்கிறது. காய்ச்சல், உடல்வலி, களைப்பு, வலிப்பு நோய், தலைவலி, கட்டி, கல்லீரல், மலச்சிக்கல், மர்மநோய், காமாலை, வீக்கம், வைசூரி நோய், தேமல், கோழை, இருமல், வாய்ப்புண், குடல்புண், பித்த நீர், கரப்பான் நோய், க்ஷயம் போன்ற பிணிகளையெல்லாம் நீக்குகின்ற மருத்துவக் குணம் மணத்தக்காளிக்கு இருக்கிறது.

எலிக்கடி, தேள்கடி, பாம்புக்கடி ஆகியவற்றிற்கெல்லாம்கூட இது நல்லது. மணத்தக்காளிக் கீரை நம் வாய் நாற்றத்தை நீக்கும்; களைப்பைப் போக்கும்; நல்ல தூக்கம் உண்டாக்கும்; நீர்ப்பாண்டு, பெரு வயிறு ஆகியவற்றிற்கெல்லாமும் இது நல்லது.

இதனுடைய காய், பழம், வேர் எல்லாம்கூட சில மருந்துகளுக்கு உதவும்.

**முருங்கைக் கீரை எவ்வாறெல்லாம் நம்முடைய உடலுக்கு உதவுகிறது?**

பொதுவாக முருங்கைக் கீரை இரத்த விருத்திக்கு ஏற்றது. இதன் மூலம் நம் உடல் வலிமை பெறும்; மேலும், தாது புஷ்டி பெறுகிற வாய்ப்பும் கிட்டும்.

இதில் 'ஏ-பி-சி' விட்டமின்களும், தாது உப்புகளும், மாவு, புரதப் பொருட்களும், சுண்ணாம்புச் சத்து, இரும்புச் சத்து ஆகியவைகளும் அடங்கியுள்ளன. சர்க்கரை வியாதி, ஆஸ்த்துமா நோய், மாலைக்கண் போன்றவை இருப்பவர்களுக்கு இது மிகவும் நல்லது; அப்படிப்பட்டவர்கள் அடிக்கடி உணவோடு இதைச் சேர்த்துக்கொள்ளலாம்.

முருங்கைக் கீரை, பிஞ்சு, விதை, முருங்கைக் காய், மரப்பட்டை, வேர், பிசின் ஆகிய எல்லாமே பல விதத்திலும் மிக நல்ல மருந்துப் பொருளாக நமக்குப் பயன்பட்டு வருகின்றன.



சுக்காங் கீரை

**முளைக் கீரை, பொன்னாங்கண்ணிக் கீரை, வெந்தயக் கீரை, புதினா கீரை ஆகியவற்றில் ஏதாவது நோய் நீக்கும் தன்மைகள் இருந்தால் சுருக்கமாகச் சொல்லுங்களேன்?**

உட்சூடு, இரத்தக் கொதிப்பு, பித்த எரிச்சல், சொறி- சிரங்கு, உடல் உஷ்ணம், நரம்புத் தளர்ச்சி, வயிற்றுப் புண் ஆகியவற்றைப் போக்கும் சக்தி முளைக்கீரைக்கு உண்டு. இது கண்ணுக்குக் குளிர்ச்சியைக் கொடுத்து, உடலின் பலத்தைப் பெருக்கி, செரிமான சக்தியை அதிகரிக்கவும் செய்யும்.

இதயத்திற்கும் மூளைக்கும் வலிமை தரும் சக்தி பொன்னாங்கண்ணிக் கீரைக்கு இருக்கிறது. இக் கீரையில் ஏ-பி- சி போன்ற விட்டமின்களும், தாதுப்புகளும், மாவு, புரதப் பொருட்களும், சுண்ணாம்புச் சத்தும், மணிச் சத்தும், அயச் சத்தும் நிறைய அடங்கியிருக்கின்றன.

காச நோய், சொறி சிரங்கு, பார்வைக் கோளாறு ஆகியவை வெந்தயக் கீரையால் நீங்கும். இதன் இலைகள் மட்டும் உண்ணத் தகுந்தவை; தண்டும் காயும் உணவாகப் பயன்படாது. இந்தக் கீரை - பித்தக் கிறுகிறுப்பு, மாதவிடாய்க் கோளாறு, வாதநோய், மேக நோய், அக்கினி மாந்தம், வாயு, இடுப்பு வலி, மார்புவலி, மூச்சடைப்பு ஆகியவற்றுக்கெல்லாம்கூட நல்ல மருந்து ஆகும்.

மாதவிடாய்க் கோளாறுக்குப் புதினாக் கீரையும் நல்ல மருந்தாகும். வாதநோய், நரம்புத் தளர்ச்சி, பல்நோய், மலச்சிக்கல், சிறுநீர்ப் பெருக்கு ஆகியவற்றையும் இந்தக் கீரை போக்கும்.

மொத்தத்தில் - நாள்தோறும் ஏதாவது ஒரு கீரையை நாம் உணவோடு சேர்த்துக் கொண்டோமானால் எந்தவிதமான நோய்நொடியும் நம்மை அண்டாது; மிகப்பெரிய செலவு எதுவும் இல்லாமலே நோயற்ற நல் வாழ்வு நாம் வாழலாம்.



16ஆம் பக்கத் தொடர்ச்சி

விமர்சனங்களுக்காகப் பிரச்சினையைத் தேடி அலையும் நிலை உருவாகக்கூடாது.

**குடந்தை மகாமகம்**

கும்பகோணத்தில் நடந்த மகாமகம் திருவிழாவில் நடந்த சம்பவம் குறித்து தஞ்சாவூர் மாவட்டக் கூடுதல் ஆட்சியாளர், கூடுதல் மாவட்ட மாஜிஸ்திரேட் ஒரு விசாரணை நடத்தி வருகிறார். எனவே, இது பற்றி இந்த மன்றத்தில் இப்போது குறிப்பிடுவதைத் தவிர்க்க விரும்பினேன். விசாரணை அறிக்கை அரசுக்குக் கிடைத்தவுடன் இந்த மன்றத்திற்கு விவரங்களைத் தெரிவிக்கிறேன். இருந்தாலும்கூட, இதைப்பற்றி எதுவுமே தெரிவிக்கவில்லை என்றால் இதைப் பற்றிப் பேசுவதற்கே பின்வாங்குகிறேன், அஞ்சுகிறேன் என்கிற ஒரு தவறான எண்ணம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, இது குறித்து ஒரு சில கருத்துக்களை மட்டும் இந்த அவை முன் வைக்கலாம் என்று நினைக்கிறேன்.

கும்பகோணம் மகாமக விழாவில் மாண்டு போன பக்தர்களைப் பற்றி என்னையும் இந்த அரசையும் பலத்த விமர்சனத்திற்கு உள்ளாக்கி இருக்கிறார்கள். அந்த விழாவிற்கு வந்த பக்தர்கள் நெரிசலில் அகால மரணம் அடைந்தது துயரச் சம்பவம்தான்; துக்கச் சம்பவம்தான், சோகமானதுதான்; நான் அந்நிகழ்ச்சிக்குப் பெரிதும் மனம் வருந்தி இன்னும் அந்த சோகச் சுமையிலிருந்து விடுபட முடியாமல் தவித்துக் கொண்டு இருக்கிறேன். எனக்குக் கிடைத்த தகவலை வைத்து இந்நிகழ்ச்சியின் பின்னணியை இந்த மாமன்றத்திற்கு விளக்கிச் சொல்லி அதன் மூலம் மக்களுக்குப் புரிய வைப்பது எனது கடமை என்று கருதுகிறேன்.

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடப்படும் இந்த மகாமகத் திருவிழாவை இம்முறை கொண்டாடுவதற்குச் சிறப்புக் கவனம் செலுத்தி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அளவுக்கு மீறிய ஆன்மீகக் கூட்டம் இப்பெருவிழாவிற்கு வரக்கூடும் என்று கணிக்கப்பட்டு, பாதுகாப்புக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதோடு விழாவிற்கான சீரமைப்புப் பணிகள், கட்டுமான ஏற்பாடுகள், நிவாரண ஏற்பாடுகள் ஆகியவைகளெல்லாம் முன்னுரிமையோடு செய்யப்பட்டு, குறிப்பாக மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கவும், கூட்டத்தைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்தவும் காவல்துறையினர் சிறப்புக் கவனம் செலுத்தினர்.

இந்த விழா ஏற்பாடுகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து நானே உயர் அலுவலர்கள் கூட்டங்களைக் கூட்டி ஆய்வு செய்தேன். தேவையான ஆலோசனை கூறினேன்; வேண்டிய நிதியை வழங்கினேன்; அந்த வகையில் சாலைகளை மேம்படுத்த ஒரு வழிப்பாதை, இரு வழிப்பாதை ஆகியவற்றை அகலப்படுத்த - சுமார் 1.32 கோடி ரூபாயும், நகராட்சிப் பணிக்குச் சுமார் 1.75 கோடி ரூபாயும், கோவில் திருப்பணிக்காகச் சுமார் 50 இலட்சம் ரூபாயுமாகப் பல்வேறு பணிகளுக்குப் பல்வேறு கட்டங்களில் நிதி வழங்கப்பட்டது.

காவல்துறையினர் பணியில் ஈடுபடுத்தப் பட்டனர். 1980-ஆம் ஆண்டு நடைபெற்ற மகாமகத்தின்போது பணியில் அமர்த்தப்பட்ட காவல் துறையினரை விட இது சுமார் இருமடங்காகும்.

**இறக்க நேரிட்டதேன்?**

கும்பகோண மகாமகக் குளத்தில் ஒரு சமயத்தில் சுமார் 40 ஆயிரம் பக்தர்கள் நீராட இயலும். எனவே, பக்தர்கள் தொகுதி தொகுதியாகச் சென்ற குளத்தினுள் நீராடி வெளியேறும் வண்ணம் காவல்துறையினர் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தினர். பக்தர்கள் வடக்குப் பக்கத்திலிருந்தும் தெற்குப் பக்கத்திலிருந்தும் உள்ளே நுழையவும்; மேற்குப் பக்கம் வழியாகவும் கிழக்குப் பக்க வழியாகவும் வெளியே வரவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

இதேபோன்ற ஏற்பாடுகள்தான் கடந்த 1968, 1980 ஆண்டுகளில் நடந்த மகாமக விழாவின் போதும் செய்யப்பட்டிருந்தன. இம்முறை மகாமகத்திற்கு 50 இலட்சத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் வருகை தந்திருக்கிறார்கள் எனக் கணக்கிட்டு இருக்கின்றனர். மகாமக விழாவை ஒட்டிய மூன்று நாட்களில் மட்டும் 4,205 பேருந்துகள் இயக்கப்பட்டன; 62 தனி இரயில்கள் விடப்பட்டன. மகாமகக் குளத்திற்கு உள்ளும், குளத்திற்கு வெளியேயும், கரைகளிலும் மற்றும் அவற்றை ஒட்டியுள்ள பல வீடுகளிலும் நிரம்பி வழிந்த கூட்டத்தில், விஸ்வ இந்து பரிஷத் வைத்து நடத்திய தர்ம சாலைக்கு அருகே உள்ள பகுதியில் அச்சாலையை ஒட்டியிருந்த சுற்றுச் சுவர் மீதிருந்த இரும்புக் கம்பிகளும், தூண்களும் இடிந்து விழுந்து, அங்கு குழுமியிருந்த மக்களிடம் பீதியை ஏற்படுத்தவே, மக்கள் முண்டியடித்துக்கொண்டு தாறுமாறாக ஓட நேர்ந்தது. அப்போது ஏற்பட்ட பதட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு பக்தர்கள் இறக்க நேரிட்டது.

மக்கள் கூட்டம் குளத்தில் இறங்க நெருங்கியடித்துக் கொண்டதாலேயே இறந்துவிட்டனர் எனச் சொல்வது சரியல்ல. காவல்துறையினர் தடியடி நடத்தியதாலேயே மக்கள் சிதறி ஓட நேரிட்டது என்று கூறுவதும், அதனால் மரணம் நிகழ்ந்தது என்று கூறுவதும் உண்மைக்கு முற்றிலும் புறம்பானது. இந்த விபத்தில் பலியானவர்கள் அனைவருமே இடிந்துபோன சுற்றுச் சுவர்கம்பிகளுக்கு அண்மையிலே கிடந்திருக்கின்றார்கள்.

குளத்திற்குள்ளே நெரிசல் ஏற்பட்டு மரணங்கள் நிகழ்ந்திருந்தால் காவலர்களில் ஒரு சிலரும் இறந்திருக்கக்கூடும். இந்த விபத்தில் காவல்துறையினர் முறை கேடாகவோ, முரட்டுத்தனமாகவோ நடந்து கொள்ளவில்லை. அப்படி நடந்துகொண்டு இருந்தால் பொதுமக்கள் மத்தியில் அமளியும் கொந்தளிப்பும் ஏற்பட்டு இருக்கக்கூடும். காவல்துறையினர்கூட தாக்கப்பட்டிருக்கக்கூடும். இந்தத் துர்மரணங்களுக்கு முக்கியக் காரணமாக இருந்தது, உணவுப் பொட்டலங்களையும், ரட்சை மஞ்சளை

யும் மக்களை நோக்கி விஸ்வஹிந்து பரிஷத் இயக்கத்தினர் வீசியதுதான் என்று கருதவேண்டி இருக்கிறது. அதோடு காவல்துறையினரின் கட்டுப்பாட்டையும் வழிநடத்தலையும் விஸ்வஹிந்து பரிஷத் இயக்கத்தினர் அங்கங்கே எதிர்த்துச் சிறு குழப்பங்களை உண்டாக்கியிருக்கிறார்கள். போக்குவரத்து ஏற்பாடுகள் சரியாகச் செய்யப்பட்டு இருந்ததால்தான், விபத்து நடந்த இடத்திற்கு மிக அருகில் அவசர சிகிச்சை வண்டிகளைக் கொண்டு வர முடிந்தது; காயமுற்றவர்களை மருத்துவமனைக்கு விரைந்து எடுத்துச் செல்ல முடிந்தது; அதனால் பலரைக் காப்பாற்ற முடிந்தது.

### தவறான செய்திகள்

இந்நிலையில் எனக்குப் பாதுகாப்புக்காகச் செல்லும் பல வண்டிகள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டதால் பக்தர்கள் வெளியே செல்ல இயலாமல் போய்விட்டது என்ற கூற்று முற்றிலும் தவறானது. அதுபோலவே குளத்தின் பெரும்பகுதி என்னுடைய வருகைக்காக ஒதுக்கப்பட்டது என்ற செய்தியும் தவறானதாகும். மேற்குக் கரையில் ஒரு சிறு பகுதி நீங்கலாக, எஞ்சிய பகுதி முழுவதையும் பக்தர்கள் பயன்படுத்திக் கொண்டுதான் இருந்தார்கள். எனது பாதுகாப்பிற்காகச் சென்ற வண்டிகள் கூட, பக்தர்களின் பாதைகளைப் பாதிக்காதவாறு சாலையின் ஓரத்தில்தான் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்ட கார்களால் பக்தர்களின் போக்குவரத்து எந்தவிதத்திலும் தடைப்படவில்லை இத்துயரச் சம்பவம் நடந்த வடகிழக்குப் பகுதி, நான் வழிபட்டுச் சென்ற இடத்திலிருந்து மிகத் தொலைவில் அமைந்துள்ளது.

> **தனக்கென்று வாழாது பிறர்க்கென்று வாழ்பவனே மனிதன்.**
> **அவனது வாழ்க்கையே வாழ்க்கை.**
>
> **—தமிழ்த்தென்றல் திரு.வி.க.**

நடக்கக்கூடாத இந்தச் சோக நிகழ்ச்சி நடந்து விட்டது துரதிர்ஷ்டவசமானதுதான். அதற்காக நான் வருந்துகிறேன். இந்த அரசும் வருந்துகிறது. ஆனால் அந்நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு, என்னுடைய வருகையை அதனுடன் இணைத்து, என் மீது மாசு கற்பிக்கும் நோக்கத்தோடு விஸ்வஹிந்து பரிஷத் இயக்கத்தினரும், என்னை விரும்பாதவர்களும் திரித்துக் கூறுகிற உண்மைக்குப் புறம்பான தகவல்களும், பொய்களும் எனக்குப் பெரும் வேதனையை அளிக்கின்றன.

### ஆண்டவனே கூலி கொடுப்பான்

கொஞ்சமும் சம்பந்தப்படாத என்னையும், எனது பெயரையும் இழிவு படுத்த எண்ணி, களங்கப்படுத்த முனையும், விஸ்வஹிந்து பரிஷத் இயக்கத்தினருக்கும், ஏனைய விமர்சகர்களுக்கும், ஆண்டவனே தக்க கூலி கொடுப்பான் என மட்டும் கூறிக் கொள்ள விழைகிறேன்.

இலங்கைப் போராளிகள்த் /தீவிரவாதிகள்/ விடுதலைப் புலிகள் தமிழகத்தில் நடமாடத் தொடங்கியதை நாம் அறிவோம். முந்தைய அரசின் காலத்தில் வெடிமருந்துவைத்துத் தகர்க்கும் நிகழ்ச்சிகள் அதிகமாகிவிட்டிருந்தன. 30-க்கும் மேற்பட்ட வெடிகுண்டு வெடிப்புகள் நிகழ்ந்தன. அதனால் பலர் இறந்தும், காயப்பட்டும் ஆக வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்படிப்பட்ட பின்னணியை மனதில் வைத்துத்தான், எங்களின் அரசு ஆட்சிக்கு வந்த பிறகு பயங்கரவாதிகளின் கொட்டத்தை ஒருபுறம் அடக்கவும் அதற்குத் துணையிருக்கின்ற ஏனைய சக்திகளை ஒடுக்கவும், 'தடா' சட்டத்தையும் தமிழகத்தில் செயல்படுத்த ஆரம்பித்தோம்.

தவறு செய்து பாதிக்கப்பட்ட சிலர், இந்தச் சட்டத்தைத் துஷ்பிரயோகம் பண்ணுகிறோம். அரசியல் நோக்கத்திற்காக அதை அனாவசியமாகப் பயன்படுத்துகிறோம் என்று கூப்பாடு போட்டதெல்லாம் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நான் தொடக்கத்தில் சொன்னதைப்போல, விடுதலைப் புலிகளை ஒடுக்கி இருக்கிறோம். ஆனால், அவர்களை ஒழித்துவிட்டோம் என்று சொல்லவில்லை. அவர்களுடைய நடமாட்டம் முழுவதும் கட்டுப்படுத்தப்படவில்லை. இலங்கைக்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்பு இன்னும் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

### தடா சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறதா?

இந்த மாமன்றத்தில் மீண்டும் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். தடா சட்டத்தை இந்த அரசு வேண்டாதவர்கள் மீது நிச்சயமாகப் பாயவிடாது. எந்த நிலையிலும் தடா சட்டம் அனாவசியமாகப் பயன்படுத்தமாட்டாது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களின் பட்டியலையும், அதன் தேவைகளையும், மாநில மட்டத்தில் உள்துறைச் செயலாளர் ஆய்வு செய்வதோடு, மத்திய அரசும் இதைக் கவனிக்கிறது. இந்நிலையில் இச்சட்டம் துஷ்பிரயோகப் படுத்தப்படுவதற்கான வாய்ப்பு இல்லை என்பதை, இந்த மாமன்றத்திற்கு விளக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மானியக் கோரிக்கையின் மீது பேசிய சில மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள், திருட்டு, களவு போன்ற குற்றங்கள் (Property Crimes) தமிழகத்தில் மிகுந்து கொண்டு இருப்பதாகவும், அவை இன்னும் அதிகமாகி வருவதாகவும் கூறினார்கள். கொடுக்கப்பட்ட கொள்கைக் குறிப்பில் 1990-ஆம் ஆண்டில் 36,731 குற்றங்கள் பதிவாகி இருக்கின்ற நிலையில், 1991-இல் 37,283 குற்றங்கள் பதிவாகி இருக்கின்றன. ஆனால் 1990-ஆம் ஆண்டில் களவு போன சொத்துக்களின் மதிப்பு 1[illegible]0 கோடி ரூபாய். 1991-இல் அவ்வாறு களவாடப்பட்ட பொருள்களின் மதிப்பு 13.30 கோடி ரூபாய் ஆகும். முந்தைய ஆண்டுகளில் எல்லாம் சுமார் 5 கோடியிலிருந்து 8 கோடி வரை இருந்த களவுபோன சொத்துக்களின் மதிப்பு, 1989-90-ஆம் ஆண்டுகளில்தான், அதிக அளவுக்கு உயர்ந்து உள்ளது. இந்த ஆண்டுகளில் ஆட்சியில் இருந்தவர்கள் யார் என்பதை நான் குறிப்பிட வேண்டியதில்லை. அக்காலங்களில் தான் விடுதலைப் புலிகளும், பயங்கரவாதிகளும் தமது அடாவடித்தனத்தை அவிழ்த்து விட்டு, கடும் குற்றங்களைப் புரிந்தார்கள் என ஏற்கெனவே சொன்னேன். கொள்கைக் குறிப்பில் 1990-ஆம் ஆண்டு களவுக் குற்றக் கண்டுபிடிப்பு 65.1 சதவிகிதம் என்ற நிலையில் வைத்திருந்த தமிழகக் காவல்துறை, 1991-ஆம் ஆண்டில் 64 சதவிகிதம் என்ற நிலைக்குக் குறைந்துவிட்டது என்பதை நான் அறியாமல் இல்லை. அந்தந்த ஆண்டுகளில் நடக்கும் குற்றங்கள், அந்தந்த ஆண்டுகளிலேயே கண்டுபிடிக்கப்படுவதில்லை. நீதிமன்றத்தில் குற்றவாளிகள் தண்டனை அடைவதை வைத்துத்தான் இந்தச் சதவிகிதம் நிர்ணயிக்கப்படுகிறது. 1991- ஆம் ஆண்டிற்கான பல வழக்குகள் தற்பொழுது நீதிமன்றங்களில் விசாரணையில் உள்ளன. அவை முடியும்போது, குற்றவாளிகள் தண்டனை பெறும்பொழுது, 1991-ஆம் ஆண்டிற்கான குற்றக் கண்டுபிடிப்பு மேலும் அதிகமாக உயர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும் கூட, நாட்டில் நடக்கும் களவு, கொள்ளை போன்ற குற்றங்கள் விரைவாகக் கண்டுபிடிக்கப்பட வேண்டும். அதற்கு உதவுகிற வகையில் நவீன சாதனங்களைக் காவல்துறை பயன்படுத்த வேண்டும். உங்களின் கருத்து எனக்கும் ஏற்புடையது என்பதால், இதைக் காவல்துறையினரும் கவனத்தில் ஏற்க வேண்டும் என்பதை அறிவுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### காவல்துறை நவீனப்படுத்தப்படும்

நமது காவல்துறையினருக்கு உதவுகிற வகையில், நவீன ஆயுதங்கள், பயிற்சிகள், அடிப்படை வசதிகள் ஆகியவற்றை வலுப்படுத்த, ஒரு மாபெரும் திட்டம் 80.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரித்து, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மத்திய அரசும் ரூபாய் 10 கோடியை அதற்காக இதுவரை வழங்கியுள்ளது. தற்போது, ஆயுதங்கள், வெடி மருந்துகள், 200-க்கும் மேற்பட்ட ஜீப்புகள், காவல்துறைக்கான நவீன தகவல் தொடர்புச் சாதனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் காவல்துறையை நவீனப்படுத்தும் முயற்சியில் சுமார் 2.25 கோடி ரூபாய்க்கு மேல், வெவ்வேறு இனங்களில் செலவிடவும் இந்த ஆண்டில் திட்டங்கள் உள்ளன.

கடந்த வரவு செலவுக் கூட்டத் தொடரிலேயே காவல்துறையினர், தீயணைப்புத் துறையினர், சிறைத் துறையினர் ஆகியோரைத் தேர்வு செய்வதற்கென, ஒரு வாரியத்தை நியமிக்க இந்த அரசு அறிவித்து ஆணை பிறப்பித்துள்ளது. காவல்துறைத் தலைவர் பணித் தகுதியுள்ள ஒரு உயர் அலுவலரைத் தலைவராகக் கொண்டு அந்த வாரியம் இயங்கிக் கொண்டு இருக்கிறது. காவல்துறையில் தற்போது காலியாக உள்ள சுமார் 4,000 இடங்களுக்குப் பணியாளர்களை இந்த வாரியம் விரைந்து தேர்ந்தெடுத்துத் தரும். இன்னும் ஓரிரு மாதங்களில் இந்தத் தேர்வுப் பணி தொடங்கும் என்ற நல்ல செய்தியை உங்களுக்குச் சொல்வதில், மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த வரவு செலவுக் கூட்டத் தொடரில் மீண்டும் தொடங்குவதாக அறிவிக்கப்பட்டு, தற்போது இயங்கி வரும் காவல் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம், இந்த ஆண்டிலேயே வீடு கட்டுவதற்கென 8 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, 1,000 வீடுகளைக் கட்டி வழங்கும் செயலில், அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது.

எத்தனையோ நிதி நெருக்கடிக்கு இடையிலும் கூட, சென்ற வரவு செலவுக் கூட்டத் தொடரின் பொழுது, காவல் துறையினருக்கெனச் சில நல்ல திட்டங்களை அறிவித்தேன். அவர்களுக்கான உணவுப் படி உயர்த்தப்பட்டது. சீருடை பணியாளர் தேர்வாணை வாரியம் ஏற்படுத்தப்பட்டது. கடமை ஆற்றும்பொழுது வீர மரணம் எய்திய காவல்துறையினரின் குடும்பத்திற்கு உதவி வழங்கப்பட்டது. பயணப்படி, தினப்படிகளில் சலுகைகள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு காவல்துறை சேமநல நிதி உயர்த்தப்பட்டது. சீருடை மானியம் உயர்த்தப்பட்டது. அதுபோலவே இந்த ஆண்டிற்கென 21 புதிய திட்டங்களை வழங்க அரசு முடிவெடுத்திருக்கிறது. அவை இந்தத்துறை விரைந்து செயல்படுத்துவதற்கென அடிப்படை வசதிகளை வழங்குகின்ற பல்வேறு திட்டங்கள் ஆகும். ஏறத்தாழ 80 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இத்திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

### காவல்துறை குடியிருப்புகளில் கழிப்பிடம்

தற்போது 17 மாவட்டங்களில் உள்ள 135 காவல்நிலைய, காவல்துறை குடியிருப்புகளில் உலர் கழிப்பிடங்கள் (Dry Latrines) பல ஆண்டுகளாக உள்ளன. சுகாதாரக் கேடு விளைவிக்கும் இந்தக் கழிப்பிடங்களையெல்லாம் நீக்கி, அதற்குப் பதிலாக நீரடிக் கழிப்பிடங்களாக (Flush out latrines) அவற்றை அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.

அனைத்துச் சுகாதார வசதிகளும் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் ரூபாய் 70 இலட்சம் செலவில் உடனடியாக நிறுவப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### காவல்துறை ஓய்வு விடுதி

பணி நிமித்தம் சென்னை நகருக்கு வரும் காவலர், தலைமைக் காவலர், உதவி ஆய்வாளர் போன்ற கீழ்நிலைப் பணியாளர்கள் குறைந்த

வாடகையில் தங்கிப்போகிற வகையில், நடப்பு ஆண்டில் ஓய்வு விடுதியொன்று ரூபாய் 10 இலட்சம் செலவில் கட்ட இந்த அரசு தீர்மானித்துள்ளது.

### காவல்துறை உணவுமானியத் திட்டம்

1980-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது வரை நடைமுறையில் உள்ள, காவலர்களுக்கு இன்றியமையாப் பொருட்களை, உணவுப் பொருட்களை 50 சதவிகித மானியத்தில் வழங்கும் திட்டம் சீரமைக்கப்பட்டு, இன்றைய விலைவாசி நிலையில் 50 சதவிகித மானியம் என்று உயர்த்தி வழங்க ஆணையிடப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த முடிவு 1.4.92 முதல் செயல்படுத்தப்படும். இதனால் அரசுக்கு ரூபாய் 1.50 கோடி வரை ஆண்டொன்றுக்குக் கூடுதலாகச் செலவாகும். இத்திட்டத்தினால் 68,000-க்கு மேற்பட்ட பணியாளர்களின் குடும்பங்கள் பயன்பெறும்.

### கூடுதல் அமைச்சுப் பணியாளர்கள்

காவல்துறையில் அமைச்சுப் பணியின் வேலைப் பளுவைக் கருத்தில் கொண்டு, அரசால் நியமிக்கப்பட்ட 1981-ஆம் ஆண்டு ஆய்வுக்குழு பரிந்துரைத்த 2,150 கூடுதல் அமைச்சுப் பணியிடங்களில் இதுவரை பல்வேறு காலகட்டங்களில் வழங்கப்படாமல் உள்ள, 80 கூடுதல் அமைச்சுப் பணியாளர்களையும் ஒட்டு மொத்தமாக இந்த அரசு இந்த ஆண்டு வழங்கும் என அறிவிக்கிறேன். இதனால் ஆண்டொன்றிற்கு ஏற்படும் மொத்தச் செலவு ரூபாய் 30 இலட்சம் ஆகும்.

### காவல்துறையில் சார் ஆய்வாளர் நேரடி நியமன விகிதம்

காவல்துறையில் சார் ஆய்வாளர் பதவிக்கு நேரடித் தேர்வு மூலமும், பதவி உயர்வு மூலமும், நடைமுறையில் உள்ள சிறப்பு விதிகளின்படி, 70 சதவிகிதம் நேரடி நியமனமாகவும், 30 சதவிகிதம் பதவி உயர்வு மூலமாகவும் நிரப்பப்படுகிறது. பல ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருகின்ற காவலர்களுக்கு, காவலர் நிலையிலிருந்து பதவி உயர்வு வழங்கி ஊக்கப்படுத்தும் வாய்ப்பை விரிவுபடுத்தும் நோக்கத்தில், இப்போதுள்ள 30 சதவிகித பதவி உயர்வு 1.4.1992 முதல் 40 சதவிகிதமாக உயர்த்தப்படும்.

### சில ஆய்வாளர்களின் பதவிகளைத் துணைக் கண்காணிப்பாளர் பதவிகளாகத் தரம் உயர்த்தல்

காவல்துறையில் பணிபுரியும் ஆய்வாளர்களில் பலர், 15 ஆண்டுகளுக்கு மேலாகப் பதவி உயர்வு பெற வாய்ப்பில்லாமல் உள்ள தேக்க நிலைக்குத் தீர்வு காணும் நோக்கத்திலும், காவல்துறையிலுள்ள சில பிரிவுகளின் செயல்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையிலும், மாவட்டங்களிலுள்ள தனிப் பிரிவு (Special Branch) ஆய்வாளர்கள் பதவிகளையும் மாவட்டங்களிலுள்ள புலனாய்வுப் பிரிவு (Intelligence Wing) ஆய்வாளர்கள் பதவிகளையும், துணைக் கண்காணிப்பாளர் நிலைக்குத் தரம் உயர்த்த, இந்த அரசு முன் வந்திருக்கிறது என்பதையும், இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இதனால் பயன்பெறும் ஆய்வாளர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 50 ஆகும். அரசுக்கு இதனால் ஆகும் செலவு ரூபாய் 40,000.

> ★ பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு, அளவுக்கு மீறிய நாணயமும், கட்டுப்பாடும், உறுதியும், தியாக உணர்வும் வேண்டும்.
>
> — தந்தை பெரியார்

### புறக்காவல் நிலையங்களை உயர்த்துதல்

தமிழகக் காவல்துறையின்கீழ் இயங்கும் 175 புறக்காவல் நிலையங்கள் சிலவற்றை, அப்பகுதியிலுள்ள மக்களின் தேவைக்கும், சேவைக்கும் போதுமான அளவில் பயன்படுகிற வகையில், முழு அளவிலான காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்த அரசு முன் வந்துள்ளது. இந்த நிதி ஆண்டில், பதினோரு புறக்காவல் நிலையங்களை முழுமையான தகுதியுடைய காவல் நிலையங்களாக மாற்றி ஆணையிட, இந்த அரசு முன் வந்துள்ளது என்பதை உங்களுக்குச் சொல்லுவதில் பேருவகை கொள்கிறேன்.

### சரித்திரம் படைக்கும் செயல்பாடுகள்

அதன்படி தற்போது,திருவாலங்காடு, ஓரத்தி, ஆசனூர், மல்லிக்கரை, ஆயில்பட்டி, கோட்டப்பட்டி, பாகலூர், பொன்னை, தேரூர், கொப்பம்பட்டி, வாசுதேவநல்லூர் ஆகிய இடங்களில் இயங்கிவரும் புறக்காவல் நிலையங்கள், முழுமையான காவல் நிலையங்களாக உயர்த்தப்படும்.

இந்த அரசைப் பொருத்தவரையில், காவல் துறையை ஒரு வலிவுள்ள, திறமையான, பயனுள்ள துறையாக மாற்ற வேண்டும் என்பதோடு, அதில் பணியாற்றுகிற காவலர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் சரியான நேரத்தில், மனிதாபிமான எண்ணத்தில் வழங்க வேண்டும் என்பது தான். இந்த அரசின் நோக்கம் சரியாக இருப்பதால், காவல்துறையின் செயல்பாடுகள் நிச்சயம் இனி சரித்திரம் படைக்கும் என்று நம்புகிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ அவர்கள் பேசும்பொழுது, சேலத்திற்கு அருகே விடுதலைப் புலிகள் பயன்படுத்துகிற மிகவும் சக்தி வாய்ந்த ஒரு வயர்லெஸ் செட் கண்டுபிடிக்கப்பட்டதாகவும்; 'என்னைக் கொலை செய்வதற்குத் தற்கொலைப் படையினர் தமிழ் நாட்டுக்கு வந்திருக்கிறார்கள் என்பன போன்ற தவறான செய்திகளைச் சிலர் திட்டமிட்டுப் பரப்பி வருகின்றனர்' என்றும் குறிப்பிட்டார்.

இது குறித்த உண்மை நிலையினை இந்த அவைக்கு எடுத்துக்கூற நான் விரும்புகிறேன்.

சேலம் மாவட்டம் ஏர்க்காட்டில் அமைந்துள்ள காவல்துறையின் 'வயர்லெஸ் ரிபீட்டர்' நிலையத்தில், (Wireless Repeater Station) ஏதோ ஒரு சக்தி வாய்ந்த வயர்லெஸ் கருவி இயக்கப்படுவதால், தொலைத் தொடர்பில் குறுக்கீடுகள் ஏற்படுவது தெரிய வந்தது. அது எங்கே இருக்கிறது, எவ்வாறு இயக்கப்படுகிறது என்று காவல்துறையினர் சேலம் மாவட்டப் பகுதியில் தேடி வருகின்றனர். அதை இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

### கவலைப்படுகிற நபர் நானில்லை!

விடுதலைப்புலியினரின் தற்கொலைப் படையினர் தமிழகத்திற்கு வந்துள்ளனர் என்ற செய்தியும் உண்மையானது. இந்தச் செய்தி நமது இராணுவத்தினராலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தத் தற்கொலைப் படையில் எத்தனை விடுதலைப் புலிகள் வந்தனர் என்ற விவரம் தெரியவில்லை. ஆனால், அவர்கள் என்னைக் கொலை செய்வதற்காகவும், ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரித்து வரும் சிறப்புப் புலனாய்வுக் குழு (SIT) அமைந்துள்ள 'மல்லிகை' கட்டடத்தைத் தகர்ப்பதற்காகவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்பதும், அவர்கள் தமிழகத்திற்குள் நுழைந்து விட்டனர் என்பதும் தெரிய வந்துள்ளது.

மேலும், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுச் சிறைச் சாலையில் உள்ள கைதிகளை மீட்பதற்கு, அல்லது கொலை செய்வதற்கும், அவர்கள் திட்டம் தீட்டியுள்ளதாகவும் காவல் துறையினருக்குத் தகவல் தெரிய வந்துள்ளது. எது எப்படி இருந்தபோதிலும், இதற்கெல்லாம் கவலைப்படுகிற நபர் நானில்லை என்பது உங்களுக்கும் தெரியும்; எனது எதிரிகளுக்கும் தெரியும்.

தமிழக மக்களின் நல்லெண்ணமும், பாசமும் என்னுடன் என்றென்றும் இருப்பதால், அவர்களுக்காகப் பணியாற்றுகின்ற பெருமையைத்தான் நான் என் வாழ்வின் பேறாகக் கருதுவேனே தவிர, என் உயிரை அல்ல. எனவே என் உயிரென மதிக்கும் தமிழக மக்களின் நல் வாழ்விற்காக, நான் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறேன்.

எங்கே, எந்த இடத்தில் எந்த ஒரு அசம்பாவிதம் நடந்தாலும், பொதுமக்களும் அரசியல்வாதிகளும், காவல்துறையைத்தான் வழக்கமாகக் குறை கூறுகின்றனர். எடுத்துக்காட்டாகக் கூற வேண்டுமென்றால், கடந்த பிப்ரவரி, 18-ஆம் நாள், கும்பகோணம் மகாமகம் திருவிழாவில், 12,000 காவலர்கள் தொடர்ந்து பணியாற்றி, சுமார் 50 இலட்சம் பக்தர்களின் வழிபாட்டிற்கு உதவுகிற வகையில், சிறப்பாகக் காவல் பணி புரிந்தனர். ஆனால் அவர்களது பாராட்டத்தக்க பணி மறைக்கப்பட்டு, பத்திரிகைகளின் மூலம் சிலர் காவல்துறையினரைக் கடுமையாகச் சாடுகிற நிலைமை உருவாகிவிட்டது.

என்னையும் சிலர் விடவில்லை. சமயத் தலைவர்களும் அரசியல்வாதிகளும், நான் அங்கு சென்றதால்தான் காவல்துறையின் கவனம் போதுமான அளவு மக்கள் பக்கம் செலுத்த முடியாமல் போய்விட்டது, என்ற தவறான கருத்தை இன்று வரை பரப்ப முயற்சித்து வருகிறார்கள். மகாமகம் விபத்து பற்றி, நடந்த உண்மைகள் பற்றி, தேவையான அனைத்துக் கருத்துக்களும் மக்களுக்கு நிரம்பவே சொல்லப்பட்டு விட்டன. ஆனால் தனிப்பட்ட முறையிலும், அரசியல் ரீதியாகவும் என்னை விரும்பாத ஒரு சிலரே இதில் தவறான கருத்துக்களைக் காவல்துறையின் மீது தொடர்ந்து தெரிவித்து வருகிறார்கள். சொந்த விருப்பு, வெறுப்புகளுக்காகக் காவல்துறை மீது பழிபோடுகிறவர்களுக்கு எந்தப் பதிலும் நிறைவைத் தந்துவிட முடியாது.

### காவல்துறையினருக்கு உறுதுணையாய் இருப்பீர்!

காவல்துறையின் பணி மேலும் சிறக்க வேண்டுமென்றால், பொதுமக்களும், அரசியல்வாதிகளும், அவர்களுக்கு ஊக்கமூட்ட வேண்டிய காலத்தில் ஊக்கமூட்டி, உறுதுணையாக இருக்கவேண்டும். குறிப்பாக அவர்கள் புரியும் பெருமைமிகு சாதனைகளையும், செயற்பாடுகளையும் மனமாரப் பாராட்ட வேண்டும். அவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களது ஆற்றல் வெளிப்படும்; மக்களுக்காக அவர்கள் ஆற்றும் பணிகளில் ஆர்வம் ஏற்படும்.

'காவல் துறையினருக்கு மனத்தெம்பு ஊட்ட வேண்டும் அவர்கள் Demoralise ஆகி இருக்கிறார்கள்' என்று திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், இன்னும் சிலரும் கருத்துத் தெரிவித்தார்கள்.

காவல்துறையினரைச் சதா சர்வகாலமும் குறை கூறிக் கொண்டே இருந்தால் - அவர்கள் எதைச் செய்தாலும் தவறு என்று கடுமையாக விமர்சித்துக்கொண்டே இருந்தால் - அவர்களுக்கு மனச்சோர்வு ஏற்படாமல் வேறு என்ன நடக்கும்? கடமையாற்றுவதில் எப்படி ஆர்வம் இருக்கும்?

காவல்துறையினரை மனச்சோர்வு அடையச் செய்வதில் பத்திரிகைகளுக்கும் பெரும் பங்கு உண்டு. அரசியல்வாதிகளும் சரி, பத்திரிகைகளும் சரி, நாட்டு மக்களின் நன்மையைக் கருதி பொறுப்புடன் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசும்பொழுது, 'பழங்கி

மலை புறநகா காவல் நிலையத்தில் மத்திய இரயில்வே காவலர் அடையாளம் தெரியாத ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்' என்று கூறினார். மாண்புமிகு உறுப்பினர் பேசும் பொழுது, யாருடைய ஆட்சியில் அந்தச் சம்பவம் நடந்தது என்று தெரிவித்துப் பேசி இருந்தால், மகிழ்ச்சி அடைந்திருப்பேன். ஆனால் 3.5.1991 அன்று, அதாவது நாங்கள் ஆட்சிக் கட்டிலில் ஏறுவதற்கு முன்பு, குடியரசுத் தலைவர் ஆட்சியில் நடந்த நிகழ்ச்சி குறித்துக் குறை கூறி இருக்கிறார்.

3.5.1991 அன்று, காலை 9.45 மணிக்கு, மத்திய இரயில்வே காவலர் திரு ஹுமாயூன் கபீர், பரங்கிமலை புறநகர் காவல் நிலையத்தில், பயணச் சீட்டு இல்லாத ஆண் பயணி ஒருவரை விசாரணைக்கு, பயணச்சீட்டு சேகரிப்பவர் அறைக்குக் கொண்டு வரும்போது, அந்த இளைஞர் 9 எம்.எம். கைத்துப்பாக்கியால் மேற்படி காவலரைச் சுட்டுவிட்டு ஓடிவிட்டார். அந்தக் காவலர் அன்று மாலையே மரணம் அடைந்து விட்டார். தற்போது இவ்வழக்கினைக் கியூ பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றம் செய்து, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. பீட்டர் அல்போன்ஸ் இந்தச் சம்பவத்தைப் பற்றி கூறுகிறபோது, ஏதோ இந்த அரசு ஆட்சிக் காலத்தில் இது நிகழ்ந்துவிட்டதைப்போல இருந்தது. எனக்கே தெரியாமல் இப்படியொரு சம்பவம் எப்போது நடந்தது என்று நானும் வியப்படைந்தேன். விசாரித்தபோதுதான் இது குடியரசுத் தலைவர் காலத்தில் நடந்தது என்று தெரிய வந்தது. இத்தகைய நிகழ்ச்சிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகிறபோது, யாருடைய ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தது என்று தெரிவிப்பதுதான் முறையாகும்.

### கண்டுபிடிக்கப்பட்டவை

மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், பெருங்குற்றங்களில் கண்டுபிடிக்கப்பட்டவை குறைவாகவும், சில குற்றங்களில் கண்டுபிடிக்கப்பட்டவை அதிகமாகவும் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

கொள்கைக் குறிப்பில் கொடுக்கப்பட்ட விவரங்கள் பற்றித் தெளிவுபடுத்த விரும்புகிறேன். கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள் என்று குறிப்பிட்டிருப்பது, வழக்குகள் முடிக்கப்பட்டு குற்றவாளி என்று தண்டனை வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை மட்டுமே. இதில் நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ள வழக்குகள் சேர்க்கப்படவில்லை.

எனவே, காவல்துறையினர் குற்றவாளிகளைக் கண்டுபிடித்த வழக்குகளின் எண்ணிக்கை, மிக அதிகமாக இருந்தபோதிலும், நீதிமன்றங்களில் முடிவு செய்யப்பட்டு, தண்டனை வழங்கப்பட்ட விவரங்களை மட்டுமே 'கண்டுபிடிக்கப்பட்டவை' என்ற தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன். சிறு வழக்குகளை நீதிமன்றங்களில் விரைவாக முடிவு செய்ய



ஜனநாயகவாதி சிறிதளவுகூட சுயநலம் இல்லாதவனாக இருக்க வேண்டும். அவனுடைய கருத்தும், கனவும், ஜனநாயகத்தைப் பற்றியதாகவே இருக்க வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா

இயலும்; ஆனால் பெருங்குற்றங்களுக்கான வழக்குகளை முடிவு செய்ய, நீண்ட காலம் ஆகும் என்பது நீங்கள் அறிந்த ஒன்றுதான்.

### பூரண மதுவிலக்கை அமலாக்கத் தயார்

மதுவிலக்கை ஏன் தமிழகத்தில் முழுமையாக அமல்படுத்தக் கூடாது என்றும், இங்கே வினா எழுப்பப்பட்டது. ஏழை, எளிய தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்க மலிவு விலை மதுவைத் தமிழகத்தில் ஒழித்து, அதனால் ஏற்பட்ட ரூ.322 கோடி வருவாய் இழப்பு முழுமையும், இந்த அரசு தானே ஏற்று இருப்பதை அனைவரும் அறிவார்கள். இந்தச் சீரிய முயற்சிற்கு, ஏதேனும் உதவி மத்திய அரசிடமிருந்து கிடைத்ததா என்றால், ஒன்றும் இல்லை.

திரும்பத் திரும்ப நாங்கள் மத்திய அரசை, எங்களது இந்த வருவாய் இழப்பைச் சிறிதேனும் ஈடுகட்ட வேண்டும் என்று கேட்டு வந்தும், இதுவரை எந்த உதவியும் கிடைக்கவில்லை. இந்நிலையில் இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுபானங்களையும் (I.M.F.S.) ஒழித்துவிட்டு, பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எங்கள் அரசிற்கு முழுமையாக இருந்த போதிலும், அதனைச் செயல்படுத்த நிதிநிலை இடம் தரவில்லை என்பதைத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

பூரண மதுவிலக்கினால் ஏற்படும் இழப்பை மத்திய அரசு ஈடுசெய்ய முன்வந்தால், தமிழகத்தில் உடனடியாகப் பூரண மதுவிலக்கை அமல்படுத்த, எங்கள் அரசு எப்போதும் தயாராக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கோரிக்கையை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### காவல்துறையினர் சிறக்க வேண்டும்

தமிழகக் காவல்துறையின் திறமை இந்தியா வெங்கும் புகழ்பரப்பும் வண்ணம், ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டாக வேண்டும்.

டெல்லியிலுள்ள திகார் ஜெயிலில் பன்னாட்டுக் குற்றவாளிகளும், கடுங்குற்றவாளிகளும் அடைக்கப்பட்டு உள்ளது யாவருக்கும் தெரிந்ததாகும். இந்தச் சிறைச்சாலையின் வெளிப்புறச் சுவரிலிருந்து, காவல் காக்கும் தமிழகச் சிறப்புக் காவல் படையைச் சார்ந்த காவலர்கள்



ஆரோக்கியராஜ், ஏசுபி என்ற இருவர், அன்றாட ரோந்துப் பணியைச் செய்து வரும்போது, இந்த ஆண்டு ஜனவரி 28-ஆம் தேதி சிறைச்சாலைக்கு வெளியே, ஒரு தோண்டப்பட்ட பள்ளத்தைக் கண்டு, புலனாய்வு செய்தபோது ஒரு (Tunnel) சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு இருப்பது தெரிய வந்தது. இதன் வழியே சிறையில் அடைக்கப்பட்டிருந்த குற்றவாளிகள் தப்பிக்கச் செய்த முயற்சியும் தெரிந்து முறியடிக்கப்பட்டது.

அண்மையில் நான் டெல்லி சென்றிருந்த போது, அவர்களின் பணித்திறமையைக் கேட்டு மகிழ்ந்தேன்; பாராட்டினேன். இப்படி எங்கு பணிபுரிந்தாலும், தம் திறமையை வெளிப்படுத்தும் தமிழகக் காவல் துறையினர், மென்மேலும் சிறக்க வேண்டும் என்பதே என் அவா.

சென்ற வரவு செலவுக் கூட்டத்தொடரில், காவல்துறையினருக்குப் பல சலுகைகளையும் நலத்திட்டங்களையும் ஒருங்கிணைத்து, 14 அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவித்திருந்தேன். அவை எல்லாம் ஆணையாகப் பிறப்பிக்கப்பட்டு, அவை உரியவர்களுக்குச் சேரவில்லை என்ற குறைபாட்டை திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னார்கள். நான் அறிவித்த 14 இனங்களிலும், ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு விட்டன என்ற செய்தியை, உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு குறையைச் சுட்டிக் காட்டினார்கள். காவலர் குடியிருப்புகளில் தனித்தனியாக மீட்டர் வைக்காது, மின் கட்டணம் ரூபாய் 4 ஆயிரம் வரை வசூலிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். தமிழகத்திலுள்ள 4,344 குடியிருப்புகளில், ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் ஆகியோரின் குடியிருப்புகளுக்குத் தனித்தனி மின் அளவுகள் உள்ளன. தலைமைக் காவலர் மற்றும் காவலர்களுக்கான குடியிருப்புகளில் 3876-இல், 1,476 குடியிருப்புகளுக்கு மட்டும் தனி மின் அளவைகள் பொருத்தப்பட்டுள்ளன. அதை மாற்றி 2431 குடியிருப்புகளில் பயன்படுத்தப்படும் மின்சாரத்தை, புது மின் அளவைகள் மூலம் கணக்கிட்டு, ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படும் 20 யூனிட் சலுகைக்கு மேலும் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு, மொத்த உபயோகிப்போர்களில் சமமாகப் பங்கிடப்பட்டு, கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

1984 முதல் 1991-ஆம் ஆண்டு வரை, சென்னை நகரக் காவலர்களிடம் இருந்து, மின் கட்டணம் வசூலிக்காமல் விடப்பட்டதால், 7 ஆண்டுகளுக்கு நிலுவையில் உள்ள தொகையை, மாநிலக் கணக்காயர் தணிக்கையில் சுட்டிக்காட்டியதன் பேரில், வசூலிக்க வேண்டிய நிலை ஏற்பட்டபோது, மாதம் ஒன்றுக்குச் சுமார் 200 ரூபாய் சுலபத் தவணையில் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் கூறியதைப்போல, ஒரு ஆண்டுக்குக் காவலரிடம் ரூ.4,000 வசூலிக்கப்படுகிறது என்பது சரியல்ல. 7 ஆண்டு பழைய பாக்கியைத் தவணை முறையில் வசூலிக்க வேண்டிய நிலைதான் ஏற்பட்டுள்ளது.

### காவலரின் விடுமுறைகள்

காவல் பணியாளர்களுக்கு சனி, ஞாயிறு விடுமுறை கிடைப்பது இல்லை. எனவே அவர்களுடைய தற்செயல் விடுப்பை உயர்த்தி, 20 நாட்கள் ஆக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

காவல்துறையில் போதுமான ஆட்கள் தற்சமயம் இல்லை. சுமார் 4,000 பணியிடங்கள் காலியாக உள்ளன. அவற்றை நிரப்புவதற்கு நியமனக் குழு ஏற்கெனவே நியமிக்கப்பட்டுள்ளது. காலியாக உள்ள இந்தக் காவல் பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்பட்டுவிட்டால், இந்தப் பிரச்சினை பெருமளவு தீரும் என்று கருதுகிறேன்.

தென்னார்க்காடு மாவட்டம், குள்ளஞ்சாவடி காவல் நிலையத்தில் 16.3.1992 அன்று நடைபெற்ற துப்பாக்கிச் சூடு பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள், நியாயம் கேட்கப்போன பொதுமக்கள் மீது காவல்துறையினர் அநியாயமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

உண்மையில் நடந்தது என்னவென்றால் அன்று குள்ளஞ்சாவடி காவல்துறையினர் சமட்டிக்குப்பம் என்ற கிராமத்தில் இருந்து 9 நபர்களை கள்ளச் சாராயம் காய்ச்சிய குற்றத்திற்காகக் கைது செய்து கொண்டுவந்தனர். அதே கிராமத்தைச் சேர்ந்த திரு. விருப்பலிங்கம் என்பவர், 100 அடி ஆட்களுடன் பயங்கர ஆயுதங்களைக் கையில் ஏந்தி, குள்ளஞ்சாவடி காவல் நிலையத்திற்கு வந்து கைது செய்யப்பட்ட அவரது மைத்துனரை விடுவிக்க வேண்டும் என்றும், இல்லையேல் காவல் நிலையத்தைத் தாக்கி விடுவதாகவும் மிரட்டினார். திரு. விருப்பலிங்கம் ஏற்கெனவே ஒரு கொலை வழக்கில் குற்றவாளி என்று ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, தற்போது உயர்நீதிமன்றத்தின் ஆணையின்படி பெயிலில் இருப்பவர். காவல் நிலையத்தில் இருந்த அதிகாரிகள் எவ்வளவோ எடுத்துக் கூறியும், கூட்டத்தினர் வன்முறையில் ஈடுபட்டு துணை ஆய்வாளரையும், காவலர்களையும் கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்தினார்கள். கூட்டத்தைக் கலைந்து செல்லுமாறு எச்சரித்தும் பயனற்றுப் போகவே, வானத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டு எச்சரித்தும், கூட்டம் கலையாத சூழ்நிலையில், தற்பாதுகாப்பிற்காக இரண்டு ரவுண்டு சுடப்பட்டது. இதில் விருப்பலிங்கம் தொடையில் காயம் அடைந்து, கீழே விழுந்த போது தலையில் அடிபட்டது. அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியில் மரணமடைந்தார். மற்றொருவரான செல்வராஜ், கடலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவர் ஆபத்தான நிலையில் இல்லை. இறந்துபோன விருப்பலிங்கம், ஆயுள் தண்டனை பெற்றவர் மட்டுமல்ல, இரண்டு கொலை முயற்சி வழக்குகளும் அவர்மீது நிலுவையில் இருக்கின்றன.

இதே வழக்கைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களும் சுட்டிக்காட்டினார். ஆனால் அவர் - 'காவல் துறையினருக்குப் பாதுகாப்பு இல்லையே, இது போன்ற காவல் நிலையத்தைத் தாக்கும் பொது மக்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது?' என்று தான் குறிப்பிட்டார். நியாயமாகப் பேசினார்.

**ஒருதலைப் பட்சமான குறைகள்**

போலீஸ் துப்பாக்கிச் சூடு என்றவுடனே, காவல்துறையினர்தான் தவறு செய்துவிட்டார்கள் என்ற தவறான கருத்து பொதுவாகப் பரப்பப்பட்டு வருகின்றது. அந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான காரணமோ, அப்போது இருந்த சூழ்நிலையோ வெளிப்படுத்தப்படாமல், ஒருதலைப்பட்சமாகவே குறைகள் கூறப்படுகின்றன. இவ்வாறு நடைபெறும் துயரச் சம்பவங்கள் ஒவ்வொன்றுக்கும், காவல்துறையினரைக் குறை கூறி, பத்திரிகையாளர்களும், அரசியல்வாதிகளும், சமூக விரோத சக்திகளும், ஒரு பொய்யான மாயையை உருவாக்கி வருகின்றனர். நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சுமார் 6 கோடி மக்கள்தொகை கொண்ட தமிழகத்தில், 68,987 காவல் துறையினர்தான் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க வேண்டியுள்ளது; குற்றங்களைக் கட்டுப்படுத்திக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது; மற்றும் பல்வேறு சட்டபூர்வமான நடவடிக்கைகளைத் தொடர வேண்டி உள்ளது. சராசரியாகத் தமிழகத்தில் ஒவ்வொரு ஆயிரம் மக்களுக்கும் ஒரு காவலர் என்ற நிலைதான் தற்பொழுது உள்ளது. இந்தச் சக்தியை வைத்துக்கொண்டு, தமிழகத்தில் இன்றைய தினம் காவல்துறையினர் சட்டம்-ஒழுங்கை நிலைநிறுத்தி உள்ளனர் என்றால், நிச்சயமாக அவர்கள் பாராட்டுக்குரியவர்கள் மட்டுமன்றிப், போற்றுதலுக்கும் உரியவர்கள் ஆவார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன் காவல்துறையில் உள்ள காலியிடங்களை விரைவாக நிரப்பும்படி கேட்டுக்கொண்டுள்ளார். இது விரைவில் நிரப்பப்படும். அடுத்து, தம் தொகுதியில் கள்ளச்சாராயம் நிரம்பி உள்ளதாகவும், குறிப்பாக சினிமா கொட்டகைகளில் பாக்கெட் சாராயம் விற்கப்படுவதாகவும் கூறினார்.

திரு. போளூர் வரதன் சுட்டிக்காட்டிய குறைபாடுகளைப் பரிசீலித்ததில், இவரது தொகுதியில் காவல்துறையினர் நிறைய சாராய வழக்குகள் பதிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது. ஸ்ரீபெரும்புதூரிலுள்ள சுமதி சினிமா தியேட்டரை ஒட்டி உள்ள பகுதியில், சாராயம் விற்பனை இல்லையெனச் சொல்லப்படுகிறது. இருப்பினும், பாப்பாம்மாள் என்பவர், சுமதி தியேட்டரிலிருந்து சுமார் 1½ கிலோமீட்டர் தூரத்தில் சாராயம் விற்பனை செய்தார். அவரை இருமுறை கைது செய்துள்ளார்கள்.

அடுத்துப் பேசிய டாக்டர் குமாரதாஸ் அவர்கள், குற்றங்களின் கண்டுபிடிப்புச் சதவிகிதம் ஏன் குறைந்துள்ளது எனக் கேள்வி எழுப்பியுள்ளார். இதற்கு ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன். தமது விவாத உரையின்போது, காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் ஒருவர் தாமே பயங்கர ஆயுதங்களுடன் சென்று, கொள்ளை அடித்து இருக்கிறார் என்று சொன்ன பிறகும், நடவடிக்கை இல்லையென்று ஒரு புகார் இங்கே கூறினார்.



## தொழிலாளர்களுக்கு ஊட்டி, கொடைக்கானலில் தங்கும் விடுதிகள்

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் எண்ணூர் அனல் மின்நிலைய ஊழியர்கள் குடியிருப்பில் தையல் பயிற்சி நிலையம் நடத்தி வருகிறது. இந்தப் பயிற்சி நிலையத்தில் வெற்ற பெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்கும் விழாவில் தொழிலாளர் நல ஆணையாளர் திரு. நா. ஆதிமூலம் கலந்து கொண்டு பேசியதாவது:

தொழிலாளர் நல வாரியம் மூலமாக தமிழ்நாட்டில் 68 தொழிலாளர் நல மையங்கள் உள்ளன. இவற்றில் 58 மையங்களில் தையல் பயிற்சி நிலையமும், குழந்தைகள் காப்பகமும் உள்ளன. மற்ற 10 இடங்களில் தையல் பயிற்சி நிலையம் மட்டும் இயங்கி வருகிறது.

இந்த மையங்களில் தொழிலாளர்களின் மனைவி, மகள் அல்லது திருமணம் ஆகாத தங்கை ஆகியோருக்கு ஒரு வருடம் தையல் பயிற்சி அளிக்கப்படுகிறது. அத்துடன் உதவித் தொகையாக மாதம் ரூ.80 வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தொழிலாளர் நலத்துறை மிகச் சிறப்பாக இயங்குகிறது. மற்ற மாநிலங்களைவிட இங்கு தொழில் உறவு சுமுகமாக உள்ளது. தொழிலாளர் துறையினர் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் இடையே பேச்சு வார்த்தை நடத்தி இரு பிரிவினருக்கும் பாதகம் இல்லாமல் பல பிரச்சினைகளைத் தீர்த்து உள்ளனர்.

தொழிலாளர் நலத்துறைக்கு தொழிலாளர் மூலம் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் வருமானம் வருகிறது. ஆனால் செலவோ ஆண்டுக்கு 2 கோடி ரூபாய் ஆகிறது. தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் செலுத்தும் கட்டணம் ரூ.2. இது மற்ற மாநிலங்களைவிட மிக குறைவாகும்.

தொழிலாளர்கள் குடும்பத்துடன் சென்றால் குறைந்த கட்டணத்தில் தங்குவதற்குக் குற்றலாம், மகாபலிபுரம், சென்னை போன்ற இடங்களில் தங்கும் விடுதிகள் கட்டப்பட உள்ளன. அத்துடன் ஊட்டி, கொடைக்கானல், இராமேசுவரம் போன்ற சுற்றுலா மையங்களில் விரைவில் தங்கும் விடுதிகள் கட்டப்படும்.

சட்டமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியது - துணைக் கண்காணிப்பாளர் திரு. பெருமாள் என்பவர், தனிப்பட்ட முறையில் சம்பந்தப்பட்டிருக்கிற வழக்கே தவிர, அவருக்கும், அவரது அலுவலகப் பணிக்கும் சம்பந்தம் இல்லை என்பது, பல உறுப்பினர்களாலேயே இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சம்பவம் நடந்த இடத்தில் துணைக் கண்காணிப்பாளர் இல்லவே இல்லை. இருப்பினும், புகார் கொடுக்கப்பட்ட காரணத்தால், வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினை தனிப்பட்ட முறையில் நிலம் விற்றது பற்றியதாகும்.

மேலும் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் பேசும்போது, காவல் நிலையங்களில் அடைத்து வைக்கப்பட்ட விசாரணைக் கைதிகள் நிறையப் பேர்கள் இறக்கிறார்கள் என்றும், குறிப்பாகத் தமது தொகுதியில் ஜோசப் என்பவர் இறந்து விட்டதாகவும், அதன்மீது விசாரணை என்ன ஆனது என்றும் கேட்டார்.

1989-90-இல் 12 பேர் இதுபோன்ற இறப்புக்கு ஆளாகி உள்ளார்கள் என்றும், 1990-91-இல் 9 பேர் என்றும், 1991-92-இல் 7 பேர் என்றும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இதிலிருந்து அடைத்து வைக்கப்பட்ட விசாரணைக் கைதிகளின் இறப்பு எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது என்பது வெளிப்படை. எந்த ஒரு நபரும் அடைத்து வைக்கப்பட்டு, விசாரணையில் இருக்கும்போது இறந்தால், விதிமுறையின்படி கோட்டாட்சியர் விசாரணை நடத்தி, அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஜோசப் இறந்ததைப் பற்றிக் கோட்டாட்சியர் விசாரணை நடத்தியிருக்கிறார். அந்த அறிக்கையின் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. குமாரதாஸ் அவர்கள் கோவை மாவட்டத்தில் மாவட்டக் கருவூலக் கழிப்பறையில், இரண்டு அரசு ஊழியர்கள் கொலை செய்யப்பட்டது இன்னும் கண்டுபிடிக்கப்படாமலேயே உள்ளது என்று அங்கலாய்த்துக் கொண்டார். 23.9.91 அன்று மகாலஷ்மி, கோமதி ஆகிய இருவரும், கோவை மாவட்டக் கருவூலக் கழிப்பறையில் கொலையுண்டு கிடந்த சம்பவத்தின் வழக்குப் பதிவு செய்து, இதற்கான தனிப்படை அமைக்கப்பட்டு, வழக்கு தீவிர புலன் விசாரணையில் உள்ளது.

**தாழ்த்தப்பட்டோர் மீது பரிவு - பச்சாதாபம்**

அடுத்துப் பேசிய திரு. செ.கு. தமிழரசன் அவர்கள், காவல்துறையில் உயர் பதவிகளை உருவாக்கியதில், கோஷ்டிப் பூசல் உருவாவதாகக் கூறினார். காவல்துறையில் தேவையான பதவிகள், தேவையான நேரங்களில் மட்டும் உருவாக்கப்படும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, காக்கிச் சட்டையைக் காவல்துறையினர் மட்டுமே அணிய வேண்டுமென்று கேட்டார். இது எவ்வளவு தூரம் சாத்தியம் என்று நாம் யோசிக்க வேண்டியதுதான். தொடர்ந்து பேசிய அவர், சார்பு ஆய்வாளர்களை நியமிக்கும்போது, ஆயுதப் படையிலிருந்து சட்டம் ஒழுங்குப் பிரிவிற்கு மாறுதல் செய்யும் வசதி வேண்டுமென்று சொன்னார். இதனுடைய சாத்தியக்கூறுகள் பற்றிப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரது பேச்சில் அழுத்திச் சொன்னது, நடக்கும் துப்பாக்கிச் சூட்டில் எல்லாம், பாதிக்கப்படுபவர்கள் அதிகமாகத் தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொன்னார். இந்த அரசைப் பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது பச்சாதாபமும், பரிவும் அதிக அளவில் கொண்டிருக்கிறது, என்று சொல்லிக்கொள்ள நான் விரும்புகிறேன். காவல்துறையினரால் துப்பாக்கிப் பிரயோகம் எப்போதும் நடத்தப்படுவதில்லை. மாறாக, தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில், நிலைமை கட்டுக்கடங்காது போகும்போது, துப்பாக்கிப் பிரயோகம் தவிர்க்கமுடியாததாக ஆகிப் போகின்றது. அந்தச் சமயத்தில் பாதிக்கப்படுபவர்கள் தாழ்த்தப்பட்டவர்களா, மற்றவர்களா என்று பார்க்க முடிவது இல்லை. இருப்பினும் திரு. தமிழரசன் அவர்கள் சுட்டிக்காட்டிய கருத்து, என் மனதிலேயே பதிந்துள்ளது என்பதை மட்டும் இங்கே சொல்லிக் கொள்கிறேன்.

கள்ளச்சாராயம் வெகுவாக ஒழிக்கப்பட்டுள்ளது என்று சொல்லும் அவர், பதனீர் இறக்கும் பேரில் கள் இறக்குகிறார்கள் என்று சுட்டிக்காட்டினார். இதைக் காவல் துறையினருக்கு அறிவுறுத்தி, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**நன்கு செயல்படும் அமைதிக் குழு**

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் போடப்படுகின்ற வழக்குகள், திறமையாக நடத்தப்படுவது இல்லை. அதற்குரிய அழுத்தம் கொடுக்கப்படுவது இல்லை என்றும் சுட்டிக்காட்டினார். அது சம்பந்தமாகத் தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். மேலும், இனக் கொடுமைகளைத் தடுக்க வேண்டும், அதற்கு மேல்மட்ட ஆலோசனைக் குழு அமைத்தால் நல்லது என்று சொன்னார்கள்.

மாவட்ட ரீதியில் ஒவ்வொரு மாவட்டத்திலும், எல்லா இனங்களையும் சேர்த்து, அமைதிக் குழு ஒன்று நன்றாகச் செயல்பட்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையில் இது தேவை இருக்காது என்று கருதுகிறேன்.

சங்கரன்கோவிலை அடுத்துள்ள திருவேங்கடத்தில் நடந்த கொலை வழக்குப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். ஆதிதிராவிடர்கள் மற்றும் நாயக்கர்கள் கோவில் கட்டும் பணியில், முன் விரோதம் காரணமாக, 14.3.92 அன்று இரவு திரைப்படம் பார்த்துவிட்டு வந்த 6 ஆதிதிராவிட நபர்களை, திருவேங்கடத்தில் சுமார் 20 நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வழிமறித்து, ஆயுதங்களால் தாக்கி, ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த 3 நபர்களைக்



**"பொதுத்தொண்டு செய்பவனுக்கு ஏற்படும் தொல்லை, அவன்தன் இலட்சியத்திற்குக் கொடுக்கும் விலையாகும்."**

கொலை செய்துவிட்டதாக வழக்குப் பதிவாகி, இதைத் தீவிரமாக விசாரணை செய்வதற்காகத் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 3 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்கு விசாரிக்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**தடா சட்டம் பற்றிச் சிந்திக்கலாம்**

அடுத்துப் பேசிய திரு. சிவசுப்பிரமணியன், இலங்கை விடுதலைப் புலிகளுக்குத் துணை போகும் யாராக இருந்தாலும் (திரு. பண்ருட்டி ராமச்சந்திரன், திரு. திருநாவுக்கரசு போன்றவர்கள்) அவர்களைத் 'தடா' சட்டத்தின்கீழ் தக்க நடவடிக்கை எடுத்து கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

இதுபோன்ற கருத்தைப் பல உறுப்பினர்கள் வலியுறுத்தி இருக்கின்றார்கள். சட்டப்படி, நிலமைக்கு ஏற்றபடி, இதில் என்ன செய்ய முடியும் என்பதைச் சிந்திக்கலாம்.

நமது சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்கள், ஒரு எதிர்க்கட்சித் தலைவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்பவர். பேசுகிறபோது, ஆழ்ந்த கருத்துச் செறிவோடு விஷயங்களை அவர் பேசுவதால், அனைவரும் கவனத்தோடு அவரது பேச்சுக்குச் செவி மடுக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் பாராட்ட வேண்டிய அம்சங்களைத் தாராளமாகப் பாராட்டுவார். அவரது வாழ்த்து, அளவானது: அதே நேரத்தில் விமர்சிக்க வேண்டிய விஷயங்களை விவரத்தோடும், ஆதாரத்தோடும் சுட்டிக் காட்டுவார். அவரது விமர்சனம் தெளிவானது: எத்தனை மணி நேரம் உழைத்து, எத்தனைப் புத்தகங்களைப் படித்திருந்தால், இத்தனைக் கருத்துக்களை அவர் கூற முடியும் என்கிற வியப்பு நமக்கு ஏற்படும். அது அவரது உழைப்பின் விளைவு!

சிலருக்குக் குற்றம் மட்டுமே கூற வரும். பாராட்ட மனமே வராது. தனது சொந்தக் குரலைத் தானே திரும்ப திரும்பக் கேட்பதற்காக, சத்தம் போட்டுப் பேசுகிற உறுப்பினர்களும் உண்டு. சிலர் கூச்சல் போடுவதற்காகவே சட்டமன்றத்திற்கு வந்து, சத்தற்ற வாதங்களை எழுப்பி, மன்ற நடவடிக்கைகளுக்குத் தொந்தரவு தருவதும், நமக்குத் தெரிந்த விஷயம்தான். ஆனால் திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியம், தனது சட்டமன்றப் பணிகளின் மூலம், மக்களது எதிர்பார்ப்புகளின் நியாயத்தையும், தான் சார்ந்திருக்கிற இயக்கத்திற்கு மரியாதையையும் என்றென்றும் நிலைக்க வைக்கிறவர். அவரை மனந்திறந்து பாராட்டுகிற வாய்ப்பாக, இந்தச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக் கொள்கிறேன்.

சில சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், விமர்சனங்களை எடுத்துரைத்தாலும், ஆக்கப்பூர்வமான வகையில் அவர்களது விமர்சனங்கள் அரசுக்குப் பயன்பட வேண்டும் - நிர்வாகத்தில் குறைபாடுகள் இருப்பின், அவற்றைச் சீர் செய்து, நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் கூறப்படுபவை ஆகும். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், திரு. பீட்டர் அல்போன்ஸ், திரு. சிங்காரம் ஆகியோரும், அவர்களைப் போன்ற இன்னும் சிலரும் பேசுகிறபோது, அரசு நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டத் தவறுவதில்லை; பாராட்ட வேண்டியவற்றைப் பாராட்டுகிறார்கள். ஆனால், அதே சமயம் அவர்கள் அரசை விமர்சிக்கவும் பின் வாங்குவது இல்லை. ஆனால் எப்பொழுதுமே ஆக்கபூர்வமான யோசனைகளைத்தான் கூறுகிறார்கள். அவர்களுடைய அடிப்படை நோக்கமே, தங்களது விமர்சனங்களினால், நிர்வாகத்திலுள்ள தவறுகள் திருத்தப்பட வேண்டும், அதனால் மக்களுக்கு நன்மைபயக்க வேண்டும் என்பதுதான்.

**விளம்பர தாகத்தினால், மோகத்தினால்...**

ஒரு சில உறுப்பினர்கள் பேசுகிறபோது, ஆளுங்கட்சிக்கு எரிச்சலை மூட்ட வேண்டும், ஆட்சியில் உள்ளவர்களின் மனதைப் புண்படுத்த வேண்டும், அவர்களுக்கு மனச்சோர்வை ஏற்படுத்த வேண்டும், முடிந்தவரை சட்டப் பேரவைக்குள் அமளி, துமளியை ஏற்படுத்த வேண்டும், என்ற அடிப்படை நோக்கத்துடன்தான் சில குற்றச்சாட்டுக்களை கூறி, அரசு மீது பழி சுமத்துகிறார்களே தவிர, எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண வேண்டும் என்றோ, மக்களுக்கு நல்லது நடக்க வேண்டும் என்றோ, அவர்கள் எண்ணுவதில்லை. அபாண்டமான பழிகளை அரசு மீது சுமத்தி, தாக்குகிற தொனியிலேயே பேசி, சரமாரியாகக் குற்றச்சாட்டுக்களை அடுக்கிக்கொண்ட போனால், அப்படியாவது தங்கள் பெயர், பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் வராதா, என்ற விளம்பர தாகத்தினால், மோகத்தினால், ஏக்கத்தினால் இப்படியெல்லாம் பேசுகிறார்களே தவிர- உண்மையில் அவர்களுடைய விமர்சனங்களினால் எந்த நன்மையும் விளைய வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை. அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் ஒரு நபரைப் பிடிக்கவில்லை, அவர்களுக்கு அரசியல் வாழ்க்கையில் விரக்தியே மிஞ்சியுள்ளது என்பதால், அந்த நபர் எதைச் செய்தாலும் எதிர்க்கவேண்டும் என்ற முடிவுடன், கண்மூடித்தனமாக எதிர்க்கிறார்களே தவிர, அவர்களுடைய வாதங்களில் சத்தும் இல்லை அவர்களுடைய கூற்றுக்களில் உண்மையும் இல்லை.

எல்லோரும் பாராட்டும் இந்த அரசின் சாதனைகளைக்கூட பாராட்ட மனமில்லாமல், எல்லாவற்றையும் குறை கூறுவதால், யாரும் இவர்களுடைய பேச்சுக்களை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்வதில்லை. இம்மாநில மக்களில் பெரும்பான்மையானவர்களுக்கு, இவர்களைப் பற்றிய நினைப்பும் இல்லை; இவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் இல்லை. இவர்களும் ஆங்காங்கே சில பொதுக்கூட்டங்களில் பேசிக் கொண்டுதான் இருக்கிறார்கள். கூட்டந்தான் கூடுவதில்லை. இவர்களுடைய பேச்சுக்கள் பத்திரிகைகளில் மட்டும் தவறாமல் வருகின்றன. நம் மாநிலத்தில் பத்திரிகை படிப்பவர்கள், மொத்த மக்கள் தொகையில் 10 சதவிகிதம் கூட இல்லை. ஆனால் அந்த 10 சதவிகித மக்கள்கூட, பத்திரிகைகளில் இவர்களுடைய பேச்சுக்களைப் படிக்கும்போது, 'இவர்கள் எப்போதும் இப்படித்தான் - குறை சொல்வதைத் தவிர இவர்களுக்கு வேறு வேலையே இல்லை' என்று அலுத்துக் கொள்கிறார்கள்.

இருப்பினும், இப்படிப்பட்ட சிலர் இந்த மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களாக இருப்பதால், அவர்களுக்கும் பதில் அளிக்க வேண்டியது எனது கடமையாகிறது.

நேற்று சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. திருநாவுக்கரசு அவர்களும், திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்களும் இங்கு தெரிவித்த சில கருத்துக்களுக்கு, எனது பதிலைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**பாதிவிலையில் உணவுப் பொருட்கள்**

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேசும்பொழுது காவல் துறையினருக்கு மலிவு விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டத்தில், குறிப்பிட்ட தொகைக்குப் பதிலாக, விலையில் 50 சதவிகிதம் மானியமாக வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டார். காவல்துறை அலுவலர்கள் மீது அக்கறை கொண்ட எங்கள் அரசு ஏற்கெனவே சில வாரங்களுக்கு முன்னரே இது குறித்து எடுத்த நல்ல முடிவினை நான் எனது பதிலுரையிலேயே தெரிவித்தேன்.

மீண்டும் அதனை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இனி, காவலர்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்கள் இன்றைய விலையில் 50 சதவிகிதம் மானியம் அளித்து பாதிவிலையில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மனித நேயத்தோடு அணுகவும்**

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் உரையாற்றும் பொழுது பொதுவாக 'மனித நேயத்தை'ப் பற்றிக் குறிப்பிட்டார். மனித நேயம் என்பது அடுத்தவரை தன்னைப்போல் கருதி நடத்தும் மாபெரும் பண்பு ஆகும். அவ்வாறு பார்க்கும்போது அரசு காவல் துறையினரை மனித நேயத்தோடும், காவல்துறையினர் பொதுமக்களை மனித நேயத்தோடும் நடத்த வேண்டும். அதே நேரத்தில் பொதுமக்களும் அரசியல்வாதிகளும் காவல்துறையினரின் பல்வேறு பணிகளில் உள்ள சிக்கல்களையும் இடர்ப்பாடுகளையும் கருத்தில் கொண்டு அவர்களையும் மனித நேயத்தோடு அணுகுவதுதான் சிறந்த பண்பாகும்.

**உலகத்திலே மிகவும் மலிவான பொருள் அன்பு தான். வாங்குகின்றவனுக்கும், கொடுக்கின்றவனுக்கும் அது பன்மடங்கு மிகுதியான இலாபத்தைத் தரும்.**

**—இங்கர்சால்**

மக்கள் - குறிப்பாக ஏழை எளியோர், நீதிக்காகக் காவலரை அணுகும்போது, காவலர்கள் அவர்களை மதித்து, உதவியாக இருந்து, அவர்களுக்கு நீதி கிடைக்கப் பணியாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் தான், எங்கள் அரசு காவலர்களைப் பலவகைகளில் ஊக்குவித்து வருகின்றது. அவர்களிடையே மனித நேய மனப்பான்மையையும் எங்கள் அரசு வளர்த்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நெஞ்சார்ந்த நன்றி**

மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை, தீயணைப்புத் துறை மற்றும் காவல்துறை மானியக் கோரிக்கைகளின் மீது, தேவையான விளக்கங்களோடு நான் ஆற்றிய பதில் உரை, இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மன நிறைவு அளித்திருக்கும் என நம்புகிறேன். இம்மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு, அரசுக்கு அறிவுரைகளையும், தேவையான யோசனைகளையும் வழங்கியுள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த அறிவுரைகளும், யோசனைகளும், கருத்துக்களும் அரசால் கவனத்தோடு கவனிக்கப்படவும், அவசியத்தின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அடிக்கடி விமரிசனத்திற்கு உள்ளாகும் இம்மூன்று துறைகளின் செயல்பாட்டைச் செப்பனிடுகிற வகையில், மாண்புமிகு உறுப்பினர்களால் வழங்கப்பட்டுள்ள கருத்துக்கள் அரசின் கவனத்தை வெகுவாகவே கவர்ந்திருப்பதால், அது குறித்த செயல்பாடுகள் துரிதப்படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களுக்கு என்னுடைய உரையில் தேவையான பதில் வழங்கப்பட்டுள்ளது என நான் நம்புகிறேன்.

என்னால் பதில் சொல்லப்படாத கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய கருத்துக்கள் அனைத்தும் குறிப்பேட்டில் இருப்பதால், அவைகள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன். ● ●

# சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு அரசின் பல்வேறு சலுகைகள்! சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

சுற்றுலா மையங்களில் நீர் விளையாட்டு, மலையேறுதல், மலைப் பாதை நடைப்பயணம், வானில் பறத்தல் ஆகிய வசதிகளை ஏற்படுத்தத் தமிழக அரசு முடிவு செய்து உள்ளது.

முட்டுக்காட்டில் தேசீய நீர் விளையாட்டுப் போட்டி நடத்தும் நிறுவனம் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இங்கு நீர் விளையாட்டுப் போட்டிகள் நடத்தத் தேவையான வசதிகள் செய்யப்படும். முட்டுக்காடு உப்பங்கழி ஆழப் படுத்தப்படும்.

மன்னார் வளைகுடா முயல் தீவில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் உணவகம் அமைக்கப்படும். முயல் தீவிற்கும் இதர தேசீய கடல் பூங்கா தீவுகளுக்கும் சென்று வர படகு வசதிகள் ஏற்படுத்தப்படுத்தித் தரப்படும்.

**பண்பாட்டு நகரங்கள்**

மாமல்லபுரம், தரங்கம்பாடி, காஞ்சிபுரம், தஞ்சாவூர், இராமேசுவரம், சிதம்பரம், கும்பகோணம், ஸ்ரீரங்கம், திருத்தணி, கன்னியாகுமரி, பழனி ஆகிய நகரங்கள் பண்பாட்டுப் பாரம்பரிய நகரங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒவ்வொரு நகருக்கும் சிறப்புச் சுற்றுலா மேம்பாட்டுக் குழுமம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நகரங்களில் பொது மக்களுக்காகச் சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படும். திட்டமிடப்படாத ஒழுங்கற்ற வளர்ச்சிகள் அனுமதிக்கப்படமாட்டாது.

இதேபோல் உதகமண்டலம், குன்னூர் அடங்கிய நீலகிரி மலைப் பகுதி, கொடைக்கானல் அடங்கிய பழனி மலைப்பகுதி, ஏர்க்காடு அடங்கிய சேர்வராயன் மலைப் பகுதி, குற்றாலம் ஆகியவை இயற்கையெழில் பாரம்பரியப் பகுதிகளாக இனம் பிரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படும்.

**சிறப்புச் சுற்றுலாப் பகுதிகள்**

முட்டுக்காடு, மாமல்லபுரம், காஞ்சிபுரம், தரங்கம்பாடி ஆகிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைச் சிறப்புச் சுற்றுலாப் பகுதிகளாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும்.

போதிய வசதிகள் இல்லாததால் அயல்நாட்டுப் பயணிகள் இங்கு செல்வதைத் தவிர்க்கிறார்கள். மத்திய அரசின் நிதியுதவியோடு இந்தப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

தரங்கம்பாடிக்கு அயல்நாட்டுப் பயணிகள் விரும்பி வரும் வகையில்





# வெளிநாடுகளில் சுற்றுலாப் பிரச்சாரம்

தமிழகச் சுற்றுலா மையங்கள், தமிழகக் கலை, கைவினை, பண்பாடு குறித்து வெளிநாடுகளில் பிரசாரம் செய்யும் வகையில் விளம்பரச் சுவரொட்டிகள், சிறு புத்தகங்கள், வீடியோ மற்றும் திரைப்படங்களைத் தயாரிக்க அரசு திட்டமிட்டு உள்ளது.

வெளிநாடுகளில் உள்ள மத்திய அரசு சுற்றுலா அலுவலகங்கள், இந்தியத் தூதரகங்கள், ஏர்-இந்தியாவின் விற்பனை நிலையங்கள் முக்கியச் சுற்றுலா முகவர் அமைப்புகள் (ஏஜென்சிகள்) ஆகியவற்றிலும், இந்தியாவுக்கு வரும் முக்கிய ஏர்லைன்ஸ் விமானங்களிலும் வீடியோ, திரைப் படங்கள் காட்டப்படும். மோரிஷஸ் நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தொடர்ந்து வரும் வகையில் மோரிஷஸ் நாட்டுச் சுற்றுலா வணிக நிறுவனத்துடன் தொடர்பு ஏற்படுத்தப்படும்.

தமிழகச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் உதகை, கொடைக்கானல், மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் தொலைபேசி இணைப்பகம் ஏற்படுத்தப்படும். உணவுக் கலை நிறுவன உணவகப் பணியாளர்களுக்குப் பயிற்சி தரப்படும். இந்திய எண்ணெய்க் கார்ப்பரேஷன் (ஐஓசி) பணியாளர்களுக்கெனச் சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் அறைகள் ஒதுக்கப்படும். எல்.டி.சி. பயன்படுத்துவோருக்குத் தனிச்சுற்றுலா வசதிகள் ஏற்படுத்தப்படும். திருச்சி, தஞ்சை, குமரி ஆகிய இடங்களில் ஓட்டல்கள் அமைக்கப்படும்.

**கேபிள் கார்**

உதகைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளையும், பொதுமக்களையும், குழந்தைகளையும் கவரும் வகையில் அங்கு ஒரு 'கேபிள் கார்' அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

கடலூர், சேலம், நெல்லை, குடந்தை, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்கள் கட்டப்படும். மத்திய அரசின் உதவியுடன் நீலகிரியில் வட்டார உணவுக் கலை நிறுவனம் அமைக்கப்படும்.

**மாம்பழ விழா**

தருமபுரி மாவட்டத்தில் புதிதாக மாம்பழ விழா இந்த ஆண்டு நடத்தப்படும்.

சென்னை சட்டக் கல்லூரியின் பழைய விடுதியைப் புதுப்பித்துச் சுற்றுலா ஓட்டலாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**- மாண்புமிகு முதல்வர் அவர்கள் 25.3.1992 அன்று சட்டமன்றப் பேரவையில் வைத்த சுற்றுலாத் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து.**

ஒரு மேம்பாட்டுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

தனியார் துறையும் கூட்டுத் துறையும் சுற்றுலாத் திட்டங்களைச் செயல்படுத்த வழிவகைகள் செய்யப்படும்.

**ஈட்டுத்தொகை உயர்வு**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பணிக்காலத்தில் இறந்தால் ஏனைய அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது போல் ரூ.60,000 ஈட்டுத் தொகை வழங்கப்படும்.

இதுவரை இந்த ஊழியர்கள் இறந்தால் ரூ.25,000 ஈட்டுத் தொகையாக வழங்கப்பட்டது.

சுற்றுலா வளர்ச்சிக் கழக ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படியும் வீட்டு வாடகைப் படியும் வழங்கப்படும்.

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வரும் ஓட்டல்கள், சிற்றுண்டி விடுதிகள், சாலையோர உணவகங்கள் நன்முறையில் செயல்படவும், ஓட்டல்களில் உள்ள தோட்டங்கள் சீரிய முறையில் பராமரிக்கப்படவும் அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கு ஊக்கப் பரிசுகள் வழங்கப்படும்.

சிறந்த ஓட்டலின் மேலாளருக்கு ரூ.5,000 ரொக்கப் பரிசும், பணியாளர் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.500-ம் பரிசாக வழங்கப்படும்.

**புதிய சுற்றுலாக் கழக ஓட்டல்**

சென்னை மாநகரத்தில் பிராட்வேயில் பழைய சட்டக் கல்லூரி மாணவர் விடுதி நவீனமயமாக்கப்பட்டு நட்சத்திர ஓட்டலாக மாற்றப்படும். இதற்கு ரூ.2 கோடி செலவாகும்.

புதிதாக இரண்டு குளிர் சாதன வசதியுடைய சொகுசுப் பேருந்துகள் ரூ.20 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

**சுற்றுலாத் தொழிலுக்குச் சலுகை**

சுற்றுலா, ஒரு தொழிலாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பல சலுகைகளை மாநில அரசு வழங்குகிறது. சலுகை வட்டி வீதத்தில் சுற்றுலாத் தொழில்களுக்கு கடனுதவி வழங்கப்படுகிறது. புதிதாகத் தொடங்கப்பட்ட அங்கீகாரம் பெற்ற ஓட்டல்கள், உணவகங்களுக்கு ஐந்து ஆண்டுகள் வரை விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும். கேளிக்கை வரியிலிருந்து 50 சதவிகிதம் தள்ளுபடி ரூ.10 இலட்சத்திற்கும் மேற்படாமல் செய்யப்படும். முதலீட்டிற்கு நிலத்தின் மதிப்பு நீங்கலாகப் பத்து சத ஊக்க உதவித் தொகை உள்பட பல சலுகைகள் தரப்படும்.

**சாந்தோம் கடற்கரை**

சாந்தோம் கடற்கரையைப் பாதுகாக்கத் தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மெரீனா கடற்கரையின் மேம்பாட்டிற்காகச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒரு திட்டத்தைத் தயாரித்து வருகிறது. மெரீனா கடற்கரையை மேம்படுத்திய பின்னர் சாந்தோம் கடற்கரையை அழகுபடுத்தும் திட்டம் மேற்கொள்ளப்படும்.

**-சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் சுற்றுலாத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் முடிவில் அளித்த பதிலுரை (25.3.1992).**

# பயணிகளின் சொர்க்கம்

# கன்னியாகுமரி

டாக்டர் எஸ். பத்மநாபன்.

கன்னியாகுமரி மாவட்டம் பரப்பிலே சிறியது. ஆனால், பழமையும் பெருமையும் வளமையும் மிக்கது. வரலாற்றுப் பழமை, பண்பாட்டு மேன்மை, இலக்கியச் சிறப்பு, கலை அழகு, இயற்கை வளம் இவை யாவற்றையும் கொண்டது அம்மாவட்டம். செழிப்பான மலைப் பகுதிகள் வற்றாத ஜீவநதிகள், அடர்ந்த காடுகள், 68 கி.மீ. நீளம் கொண்ட வளைந்த கடற்கரை, இவையாவும் இணைந்து நம் குமரி மாவட்டத்திற்கு நம் நாட்டிலே ஒப்பற்றதோர் இடத்தைக் கொடுத்துள்ளன. அந்த அழகிய மாவட்டத்தில் பயணம் செய்வது கண்ணிற்கு மட்டுமல்ல, உள்ளத்திற்கும் ஒரு விருந்தாக அமைகிறது. குமரி மாவட்டத்தைப் பயணிகளின் சொர்க்கம் என்றால் அது மிகையாகாது.

மும்மூர்த்திக்காக அமைந்த ஒரே கோயிலான சுசீந்திரம் தாணுமாலயன் ஆலயம், சித்திரை மாதம் பத்தாம்நாள் சூரிய ஒளி மூலவரின் காலிலே படும்படி கட்டப்பட்ட பறக்கை மதுசூதனர் ஆலயம், நான்கு இந்திய சமயங்களையும் ஒன்று கூட்டிநிற்கும் நாகர்கோவில் நாகராஜர் ஆலயம், நம்மாழ்வாரைப் பெற்றெடுத்த திருவண்பரிசாரத்தில் அமைந்துள்ள திருவாழ்மார்பர் கோயில், முருகவேளுக்கும் வள்ளியம்மையாருக்கும் காதல்வேள்வி நடந்த வேளிமலைக் குமாரகோயில், அக்குமரனின் திருவருளைப்பெற்ற ஔவையாரின் அரிய திருக்கோயில்கள், இராமாயணக் கதை முழுவதையும் மரப் பலகைகளில் செதுக்கிவைத்துள்ள பத்மநாபபுரம் இராமசாமி கோயில், கலைக் கூடமாகத் திகழும் திருவட்டாறு ஆதி கேசவப்பெருமாள் ஆலயம், ஆறுமாதம் கறுப்பாகவும் ஆறுமாதம் வெள்ளையாகவும் மாறிவரும் கேரளபுரத்து விநாயகரின் கோயில், சமண சமயத் துறவிகள் பல் கலைக்கழகம் அமைந்திருந்த சிதரால் குகைக்கோயில், பாறையைக் குடைந்து அமைக்கப்பட்ட திருநந்திக்கரைக் குடைவரைக்கோயில், இயற்கையெழில் பொங்கித் ததும்பும் திருப்பரப்பு அருவியும், அங்கு அமைந்துள்ள மகாதேவர் ஆலயமும், தாடகையைக் கொன்ற பாவத்திற்காக இராமபிரானால் எழுப்பப்பட்ட திருசரம்கோர்ப்பு இராகவேஸ்வரர் கோயில், சஞ்சீவி பர்வதத்தைக் கொண்டு வரும்போது அனுமானால் எழுப்பப்பட்ட மருந்து வாழ்மலை சிவன் கோயில், மான்மழுவுடன் சிவன், திருமால், சக்தி மூவரும் ஒரே கருவறையில் அமர்ந்து அருள்பாவிக்கும் கருங்கல் பகவதி கோயில், பதினான்கு அடி உயரத்தில் கண்ணன் திருவுருவைக்கொண்ட திப்பரமலைக் கிருஷ்ணன் கோயில், இந்தியத் தாயின் பாதச் சிலம்பென முக்கடலும் கூடி முழங்கும் குமரித்துறையில் தவம் செய்து நிற்கும் குமரியம்மனின் பேராலயம் இவையாவும் அழியா வரம்பெற்ற கலைச் செல்வங்களாக இம்மாவட்டத்திலே காட்சி தருகின்றன.

கடலின் நடுவே



'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறு நல்லுலகம்' எனத் தொல்காப்பியமும், 'குமரியம் பெருந்துறை' எனப் புறநானூறும், சிலப்பதிகாரமும் 'தென்றிசைக்குமரியாடி' வருவதை மணிமேகலையும் தெரிவிக்கின்றன. மேனாட்டு வரலாற்று ஆசிரியர்களான தாலமியும், பிளினியும் குமரித்துறையின் சிறப்பை எடுத்து எழுதியுள்ளனர். காசியையும் கன்னியாகுமரியையும் ஒரே நிலையில் வைத்துப் போற்றிப் புகழுவதைக் 'கங்கையாடிலென், குமரியாடிலென்' என்று அப்பர் தேவாரம் எடுத்துரைக்கின்றது.

இறைவன் விசுவநாதராகக் காசியிலும், அவரது சக்தியாம் தேவி கன்னியாகுமரியிலும் நின்று அருளுவதாக ஐதீகம். சிவனில்லையேல் சக்தியில்லை. சக்தியில்லையேல் சிவனில்லை. இதனை உருவகப் படுத்தவே இந்து சமயத்தினர் காசியையும் கன்னியாகுமரியையும் சிறந்த புண்ணியத் தலங்களாகக் கருதுகின்றனர். ஆன்மிகத் துறையில் வடக்கும் தெற்கும் காலகாலமாக இணைந்து நிற்கின்றன. கன்னியாகுமரிக் கடற்கரையோர மணலில் அணுகுண்டு செய்வதற்குரிய 'தோரியம்' என்னும் அரும்பொருள் காணப்படுவது கன்னியாகுமரி சக்தியின் இருப்பிடம் தான் என்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

இந்தியத் தாயின் புனித பாதத்தைக் கிழக்கே வங்காளக் கடலும், தெற்கே இந்துமகா சமுத்திரமும், மேற்கே அரபிக் கடலும் தழுவி நிற்கின்றன. இச்சங்கமத்தில் மூழ்கி எழுந்தால் இறந்த மூதாதையர்கள் முக்தியடைவர் என்பது இந்து சமயத்தினரின் நம்பிக்கை. குமரிமுனையிலிருந்து நோக்கினால் காலையில் சூரியன் உதிப்பதையும், மாலையில் அவன் மறைவதையும் நன்றாகக் காணலாம். பௌர்ணமியன்று சூரியன் மறைவதையும், சந்திரன் தோன்றுவதையும் ஒரே நேரத்தில் இங்குத் தவிர வேறெங்கும் காண முடியாது. சித்திரை மாதப் பௌர்ணமி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இதைக் காண பக்தர்கள் கூட்டம் கூட்டமாக இங்குவந்து குவிகின்றனர்.

கன்னியாகுமரியில் முக்கடல் சங்கமம்



உலக நலனுக்காகப் பரமனை நோக்கித் தவம் செய்து நிற்கும் அன்னை பகவதியை 'நீலத்திரைக் கடலோரத்திலே நின்று நித்தம் தவம் செய்யும் குமரி' எனக் கவியரசர் பாரதியார் கூறிச் சென்றார். தமிழ் மூவேந்தர்களும் வணங்கிய தெய்வம் 'கன்னியாகுமரி' என்று அக்கோவிலில் கிடைத்த கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. குமரியம்மனின் வடிவம் கலையம்சம் மிக்கது. அவ்வுருவை வடித்தெடுத்த கலைஞன் என்றுமே போற்றுதற்குரியவன். அத் திருவுருவின் முகப்பொலிவு காண்போர் உள்ளத்திற்கு அருளைத்தந்து தெய்வீக உணர்வை ஊட்டும். காணக் காணப் பரவசப் படுத்தும் தன்மை கொண்டது அத் திருவுருவம்.

பத்மநாபபுரம் அரண்மனை



கடற்கரையிலுள்ள காந்தி நினைவு மண்டபம், அதனை அடுத்துள்ள தவக்கோல விவேகானந்தர், ஆதி சங்கரர் ஆலயங்கள், கடலின் நடுவே கம்பீரமாகக் காட்சி தரும் விவேகானந்தர் நினைவுச் சின்னம் ஆகியவை குமரிப் பெருந்துறையை இந்து சமயத்தினரின் புண்ணியத் தலமாக மட்டுமல்ல! இந்தியத் தாயின் தவப்புதல்வர்களது நினைவுச் சின்னங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு திவ்விய தலமாகவும் திகழ வைக்கிறது. குமரியம்மன் கோயிலின் தெற்கே காணும் சங்கிலித்துறையும், அதனை அடுத்துள்ள பதினாறுகால் மண்டபமும், இராஜராஜ சோழனால் எழுப்பப்பட்ட குகநாதேஸ்வரர் கோயிலும், புனிதச் சவேரியார் வருகை தந்த மாதா கோயிலும், வரலாற்றுச் சிறப்புவாய்ந்த வட்டக்கோட்டையும் பயணிகள் குமரிமுனையில் காணவேண்டிய தலங்களாகும்.

உலகத்துப் பழம்பெரும் சமயங்கள் மும்மூர்த்தியின் தத்துவத்தை ஒப்புக்கொண்டாலும் மும்மூர்த்திக்காக எழுப்பப்பட்டுள்ள ஒரே கோயில் இம்மாவட்டத்திலுள்ள சுசீந்திரம் தாணுமாலயர் ஆலயம்தான். (தாணு-சிவன், மால்-விஷ்ணு, அயன்-பிரம்மன்). சேர சோழ பாண்டியர்களின் கை வண்ணங்களை மட்டுமல்ல; நாயக்கர்களின் கலை நுட்பங்களையும் இக் கோவிலிலே நாம் காணலாம். தட்டினால் சுரம் எழுப்பக் கூடிய இசைத் தூண்களும், பதினெட்டடி உயரங்கொண்ட ஆஞ்சநேயர் திருவுருவமும், சங்கினால் செய்யப்பட்ட நந்தியும், நாசித் துவாரத்தைக் காதுவரை கொண்ட நாயக்கரின் உருவமும், பெண் உருவிலே காட்சிதரும் விநாயகரும், மும்மூர்த்தியாக நின்று கீதோபதேசம் செய்யும் பார்த்தசாரதியும் இங்கே கண்டு இன்புறத்தக்கவை.

குமரி மாவட்டத்தின் தலைநகராகத் திகழும் நாகர்கோவில், அதன் நடுவே அமைந்துள்ள நாகராஜர் கோயிலின் பெயரால் வந்ததாகும். இது ஒரு காலத்தில் கோட்டாறு என்னும் பெயரில் வணிகத் துறையில் சிறந்து விளங்கிய ஒரு பெருநகராக இருந்தது. நாகராஜா கோவிலில் மூலவரான ஐந்து தலை நாகராஜரைத் தவிர்த்து, சிவன் வாயு வடிவிலும், திருமால் அனந்தனடியிலும் உள்ளனர். கோவில் தூண்களில் சமண சமயத் தீர்த்தங்கரர்களான பார்சுவநாதரும், மகாவீரரும் தவக் கோலத்திலே நின்றும் அமர்ந்தும் காட்சி தருகின்றனர். கோயிலின் தென் வாயில் சீனத்து புத்த விகாரத்தை நமக்கு நினைவூட்டுகின்றது.

இவ்வாறு இக்கோயில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம் இந் நான்கு மதக்கோட்பாடுகளின் கூட்டு உருவமாக நமக்குக் காட்சியளிக்கின்றது. இங்குள்ள கருவறையின் மேற்கூரை ஓலை வேயப்பட்டதாக இருப்பது இங்கு ஒரு தனிச் சிறப்பாகும். மேலும் நாகராஜர் அமர்ந்துள்ள இடம் எப்போதும் ஈரமாக வேயிருப்பது குறிப்பிடத்தக்கது. அங்கிருந்து எடுக்கப்படும் மண்ணே முக்கியப் பிரசாதமாகும். இது ஆறுமாதகாலம் கறுப்பு நிறமாகவும், எஞ்சிய நாட்களில் வெள்ளை நிறமாகவும் இருந்து வருகிறது. எவ்வளவோ காலமாக எடுத்தும் அந்த மண் குறையாமலிருப்பது அதிசயித்தக்க பேருண்மையாகும். கோயிலைச் சுற்றிலும் நாகப்பாம்புகள் நிறைந்திருந்தாலும் இவ்வட்டாரத்தில் பாம்பு கடித்து யாரும் இறந்ததாகச் சான்றுகள் எதுவும் இதுவரை கிடையாது என்று அமெரிக்க நாடு பதிப்பித்த சமயங்களின் கலைக்களஞ்சியம் உறுதிப்படுத்துகின்றது. நாக தோஷங்களை ஒழிக்க இது ஒரு புண்ணியத்தலமாக விளங்குகின்றது. வெண்ணை ஏந்தி நிற்கும் நவநீதனின் பெயரால் அமைந்துள்ள கிருஷ்ணன் கோயிலும், ஈஸ்வரன் பெயரால் அமைந்துள்ள வடிவீஸ்வரமும் நாகை நகரில் பயணிகள் காணவேண்டிய ஆலயங்களாகும்.

நாகர்கோவிலில் வேறொரு பகுதியான கோட்டாற்றில் புனித சவேரியார் பெயரால் அமைந்த கத்தோலிக்கர்களின் பெரிய கிறித்தவ ஆலயம் ஒன்று பெரும் புகழும் பெற்று விளங்குகின்றது. இவ்வாலயத்தில் அப்புனிதரால் வணங்கப் பட்ட மாதா பீடம் ஒன்று அமைந்துள்ளதைக் காணலாம். நமது நாட்டில் மிகப் பெரிய கிறித்தவ ஆலயங்களுள் ஒன்றாகக் கிரேக்கக் கட்டடக்கலையில் கட்டப் பட்ட கற்கோயில் ஒன்றும் இந்நகரில் உள்ளது. இது இலண்டன் நன்னெறிக் குழுவினரால் கி.பி. 1819-இல் எழுப்பப்பட்டது. இந்நகர் முகமதியர்களுக்கும் ஒரு முக்கியத் தலமாக விளங்குகின்றது. இங்குள்ள வேம்படிப்பள்ளியிலே கி.பி. 1585-ஆம் ஆண்டு முஸ்லீம் கவிஞரான ஆலிப்புலவர் மிகுராஜ்மாலை என்ற நூலை அரங்கேற்றினார் என்பர். நாகர்கோவில் நகரங்பூங்காவில் கலைவாணரால் எழுப்பப்பட்டு காந்தியண்ணலின் அறிவுரைகளையும், கவிமணியின் வாழ்த்துக் கவிதைகளையும் தாங்கி நிற்கும் காந்தி ஸ்தூபி இன்று அம்மூவரின் நினைவுச் சின்னமாகத் திகழ்கின்றது. இந்த ஸ்தூபி அமைந்துள்ள பூங்கா சர். சி.பி. இராமசாமி அய்யர் பெயரால் இருப்பதும், ஸ்தூபி திறப்பு விழாவிலே சிறப்புரையாற்றியவர் பேரறிஞர் அண்ணா என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கவை.

குமரி மாவட்டத்தில் நம்மாழ்வார் மங்களா சாசனம் செய்த திருப்பதிகள் இரண்டு. ஒன்று திருவண்பரிசாரம் என்ற திருப்பதிசாரம், மற்றொன்று வட்டாறு என்ற திருவட்டாறு. திருவண்பரிசாரத்தில் திருமால் இருந்த நிலையிலும் திருவட்டாற்றில் அவர் கிடந்த நிலையிலும் காட்சி தருகிறார். திருவண்பரிசாரத்தில் அமர்ந்துள்ள பெருமாளை நம்மாழ்வார் 'வண்பரிசாரத்து இருந்த என் திருவாழ்மார்பர்' என்று உரிமை கொண்டாடுகிறார். இதை அடிப்படையாகக் கொண்டு நம்மாழ்வார் பிறந்த தலம் திருவண்பரிசாரம் என்பர். அவரை ஈன்ற தாயார் உடையநங்கையின் வீட்டை நாம் இன்றும் காணலாம். நம்மாழ்வாரால் 'வளமிக்க வட்டாறு' என்று புகழப்பட்ட திருப்பதி தான் திருவட்டாறு. அங்கு அமர்ந்துள்ள ஆதிகேசவப்பெருமாள் ஆலயம் திருவனந்தபுரம் பத்மநாபசாமி கோயிலை ஒத்திருப்பதைக் காணலாம். இதனை ஆதி அனந்தபுரம் என்றும் அழைப்பர். கல்லிலும், மரத்திலும் செதுக்கிய பல கலைச்செல்வங்களை இந்த ஆலயத்திலே நாம் கண்டு களிக்கலாம்.

ஒரு காலத்தில் முருகவேளின் அறு படை வீடுகளில் ஒன்றாக விளங்கிய

திருப்பரப்பு அருவி



சுசீந்திரம் மும்மூர்த்தி ஆலயம்



வேளிமலைக் குமாரகோயில் இம்மாவட்டத்திலே தான் உள்ளது. முருகவேளுக்குக் காதல் வேள்வி நடந்ததும், திரிகூட ராசப்பக் கவிராயரால் 'நாஞ்சில் நாட்டு வேளி மலை' எனப் போற்றிப் புகழப் பட்டதுமான மலைதான் இன்று வேளி மலை என்ற பெயருடன் விளங்குகின்றது. வேங்கை மர சந்நிதியும், கல்யாண விநாயகரும், குறவர் படுகள விழாவும் முருகவேள் மலைநாட்டுக் குறத்தியான வள்ளியை இம்மலைப் பகுதியிலேதான் மணமுடித்தார் என்பதற்குச் சான்றுகளாக உள்ளன. இங்கு முருகவேள் 8 அடி 8 அங்குலம் உயரத்துடன் விஸ்வரூபத்தில் காட்சி தருகிறார். வள்ளியம்மையாரின் உயரம் 6 அடி 2 அங்குலம். திருப்பரங் குன்றத்தில் தெய்வானையுடன் காட்சி தரும் வேலவன் இங்கு வள்ளியுடன் தரிசனம் தருகிறார்.

வேணாட்டின் தலைநகராகத் திகழ்ந்த பத்மநாபபுரம் இன்று இரண்டரை மைல் நீள கற்கோட்டையால் சூழப்பட்டுப் பல தெருக்களையும், கோயில்களையும், பழமையான ஓர் அரண்மனையையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. கோட்டையினுள் திராவிடக் கட்டடக் கலையில் அமைந்துள்ள நீலகண்ட சுவாமி கோயிலும், கேரளக் கட்டடக் கலையில் எழுப்பப்பட்டுள்ள இராமசுவாமி கோயிலும் காணவேண்டிய கலைக்கூடங்களாகும். இராமசுவாமி கோயிலில் இராமாயணக்கதை முழுவதும் 45 பலகைகளில் நாடக ரூபமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. இக்கலைச் செல்வத்தை மர வேலைப்பாடில் இந்திய நாட்டின் சிறந்த கலைச் சின்னங்களில் ஒன்றாகக் கருதலாம்.

பத்மநாபபுரத்திலிருந்து ஒரு மைல் மேற்கே கேரளபுரம் சிவன் கோயில் உள்ளது. இங்கு ஓர் அரச மரத்தின் அடியில் வெயிலையும் மழையையும் தாங்கிக் கொண்டிருக்கும் ஒரு விநாயகர் நிலை ஆவணி மாதத்திலிருந்து ஆறு மாதம் வெள்ளை நிறமாகவும், மாசி மாதத்திலிருந்து கறுப்பு நிறமாகவும் தோற்றமளிப்பது விஞ்ஞான உலகிற்கு ஒரு புதிராகவே இருக்கின்றது.

குழித்துறையை அடுத்துள்ள திருச்சாரணத்து மலை (சிதறால்) ஒரு காலத்தில் சமணத்துறவிகள் வாழ்ந்த ஒரு புண்ணியத் தலமாகத் திகழ்ந்தது என்று அங்கே கிடைத்த ஆதாரங்களிலிருந்து அறியலாம். பல மாவட்டங்களிலிருந்தும் சமண சமயத் துறவிகள் இங்கு வந்து தாவளமிட்டிருந்தனர் என்றும், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவ்வட்டாரத்தை ஆண்டு வந்த ஆய்குல அரசன் விக்கிரமாதித்த வரகுணன் சமண சமயத்தைத் தழுவி, துறவிகளுடன் இங்கே தங்கினார் என்றும், பெண் துறவிகள் (குரத்தியர்) இங்குப் பலருக்கு அறிவூட்டி, அற்நெறிக் கருத்துக்களை மக்களிடையே பரவச் செய்ய அவர்களை நாலா திசைகளிலும் படை படையாக அனுப்பினர் என்றும் அங்கே கிடைத்த கல்வெட்டுக்களிலிருந்து அறிய முடிகிறது.

நாகர்கோவில் பேச்சிப்பாறைப் பாதையில் குலசேகரத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ளது திருநந்திக்கரை. பாறையைக் குடைந்து கட்டப்பட்ட இங்குள்ள கோயில் மிகவும் பழமையானது. இக்குடைவரைக் கோயிலில் கிடைத்த கல்வெட்டு ஒன்று இராஜராஜ சோழன் இக்கோவிலுக்கு விட்டுக் கொடுத்த மானியங்களையும், கோயிலில் சதய நாள் விழாவெடுத்த செய்தியையும் குறிப்பிடுகிறது.

திருப்பரப்பு அருவியும், அதன் அருகில் அமைந்துள்ள பழமையான மகாதேவர் ஆலயமும், அவைகளைச் சுற்றியுள்ள குன்றுகளின் இயற்கையழகும் காண்போர் மனதிற்கு இன்பமூட்டுகின்றன. பெயருக்கேற்றாற்போல் இத்திருவிடத்திலே திருமகள் தங்கியிருந்து நம்மைக் களிப்பூட்டுகிறாள். தக்கனை வதம் செய்துவிட்டு வீரபத்திரனும், பத்திரகாளியும் தங்கள் கோபம் தணிய இயற்கையெழில் கொழிக்கும் இத்திருவிடத்தைத் தேர்ந்தெடுத்து தியானம் இருந்தனர் என்பது ஐதீகம். தோவாளை வட்டத்தில் பொதிகைமலைச் சாரலில் உலக்கருவி எனும் அழகிய, என்றுமே வற்றாத நீர்வீழ்ச்சி ஒன்று உண்டு. அங்கு அகஸ்தியர் கோயில் ஒன்றும் உள்ளது. பேச்சிப்பாறை அணை, பெருஞ்சாணி அணை, கோதையாறு நீர்நிலை மின்சாரத் திட்டம் இவைகள் இம்மாவட்டத்திலே காணத்தக்கவை.



கோட்டாறு சவேரியார் ஆலயம்

தமிழகத்தின் பிற மாவட்டங்களைப் போலவே குமரி மாவட்டத்திலும் ஊரெல்லாம் இறைவன் கோயில் கொண்டுள்ளதைக் காணலாம். இறைவனின் சக்தியாம் தேவி கன்னியாகுமரியில் குமரியம்மனாகவும், கொல்லங்கோட்டில் காளியம்மனாகவும், ஆரல்வாய்மொழியில் மீனாட்சியம்மனாகவும், மண்டைக்காட்டில் பகவதியம்மனாகவும், வடிவீஸ்வரத்தில் அழகம்மனாகவும், ஒழுகினசேரியில் புவனேஸ்வரி அம்மனாகவும், வடசேரியில் காமாட்சி அம்மனாகவும், பூதப்பாண்டியில் சிவகாமி அம்மனாகவும் நின்று குமரி மாவட்டத்தைக் காவல் புரிகின்றனள் என்று கூறும்படி இங்கு ஆலயங்கள் அமைந்துள்ளன. சைவ வைணவ வேறுபாடுகள் இம்மாவட்டத்திலே சிறிதும் கிடையாது. சிவன் கோயிலில் பெருமாளும், பெருமாள் கோயிலில் சிவனும் வீற்றிருந்து அருள் புரிகின்றனர். கேரளபுரத்துச் சிவன் கோயில் நந்தி மண்டபத்தில் இராமர் இலட்சுமணர் சிலைகளைக் கண்டு களிக்கலாம். திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் ஆலயத்தின் கருவறையில் மகாதேவர் இருந்து அருளுகிறார். இம்மாவட்டக் கோயில்களில் ஆண்கள் மேலுடை அணிந்து செல்லக் கூடாது என்ற நியதியை இன்றும் கடைப்பிடித்து வருகின்றனர். குமரி மாவட்ட மக்கள் கோயிலில் வணங்கும் முறையும், அவர்கள் சமயக்குறிகளை நெற்றியில் அணிந்து செல்லும் பாங்கும் போற்றிப் புகழத்தக்கவை. இவ்வாறு அரிய பல ஆலயங்களையும், வரலாற்றுச் சிறப்புமிக்க சின்னங்களையும் தன்னகத்தே கொண்ட கன்னியாகுமரி மாவட்டம் பயணிகளின் சொர்க்கமாகத் திகழ்கிறது என்றால் அது மிகையாகாது.

### அட்டைப்பட விளக்கம்

முதல்பக்க அட்டையில்: மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் 9.3.92 அன்று அரசு தலைமைச் செயலகத்தில் பொது மக்களைச் சந்தித்துக் கோரிக்கை மனுக்களைப் பெற்றபோது எடுத்த படம்.

கடைசிப்பக்க அட்டையில் — செஞ்சிக் கோட்டை

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

பதிவு எண். M. 8576
Licence No. TN/MS(C)/PP



செஞ்சிக்கோட்டை

6 மே 1992
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்,
சென்னை - 600 008.

# தமிழரசு

16-4-1992 ரூ. 1



...கம் மற்றும்
...ச்சி
...92
...காப்பகம்,
... 008.

# Khadi Kraft HONEY!
## A pure product of nectar and pollen now comes your way!

For Babies Health
PURE HONEY



Nature's bounty comes your way. Now from Khadi Kraft. In the shape of honey a sweetener, so pure and divine. A food product for the family.

Khadi Kraft Honey brings a lost tradition to your home. It contains vitamins and necessary ingredients to ensure perfect health, nourishment and strength. It can be used with every meal or as a soft drink. A true miracle food.

Khadi Kraft Honey comes in enticing bottles.




Honey-Nature's own gift!
For you and the family.

Available at all
**Khadi Kraft**

Tamilnadu Khadi and Village Industries Board,
Kuralagam, Madras-600 108



...யர்.
...க் காப்பகம் மற்றும்
ஆராய்ச்சி
...மே 1992
...ஆவணக் காப்பகம்,
...-600 008.


## இந்த இதழில்...


தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டை முதன்மைநிலை அடையச் செய்வோம்! —சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் பதிலுரை ... 2

திருக்கோயில்களில் சிலை பாதுகாப்பு நடவடிக்கைகள் —சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் அறிக்கை ... 9

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ... 11

போக்குவரத்துக் கழகத் தொடக்க விழா... ... 12

டாக்டர் அம்பேத்கர் வாழ்விலே... ... 17

பெரியார் மாவட்டம்: குடிநீர்த் திட்டப் பணிகள் ... 21

கல்வி சிறந்த தமிழ்நாடு ... 24

கோயில்களும் பழந்தமிழர் பண்பாடும்

தன்னை உயர்த்திய இசைக் கருவியின் பெருமையை உயர்த்தியவர் — திரு. குன்னக்குடி வைத்தியநாதன் பாராட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை ... 45



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023
சித்திரைத் திங்கள் - 4
மலர்:22 இதழ்:20
16-4-1992

## இந்தியாவிலேயே

# தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டை முதன்மை நிலை அடையச் செய்வோம்

## தொழில்மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்குச் சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் பதிலுரை

நமது நாட்டை எதிர்கொண்டிருக்கிற பொருளாதாரச் சிக்கல்களும், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நிலைகளிலுள்ள ஏற்றத்தாழ்வுகளும், நாம் இது வரை பின்பற்றி வந்த தொழிற்கொள்கைகளுக்குத் தற்போது தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்கிற படிப்பினையை நமக்கு வழங்கியுள்ளது. ஆகவே, தேசிய அளவில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள தொழில் முன்னேற்றக் கொள்கையைச் சார்ந்தும், தமிழகத்தில் தொழில் முன்னேற்றத்தை முன்னுரிமையோடும், வேகத்தோடும் தூண்டுகிற வகையிலும், சில சிறப்பு நடவடிக்கைகளை எங்கள் அரசு எடுத்துள்ளதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

இந்த அரசு பொறுப்பேற்ற உடன், இந்திய மற்றும் தமிழ்நாட்டிலுள்ள முன்னணித் தொழிலதிபர்களை நான் அழைத்து, தமிழ்நாட்டைத் தொழில் வளர்ச்சியில், இந்தியாவிலேயே முதன்மை நிலை அடையச் செய்வதற்காக, அவர்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கேட்டறிந்தேன். அந்தக் கூட்டத்தில் தொழிலதிபர்கள் அளித்த சில ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு, சென்ற ஆண்டு இந்தப் பேரவையில் நடைபெற்ற தொழில் மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, சில அறிவிப்புகளையும் வெளியிட்டேன். அவற்றின் மீது தற்போது தகுந்த ஆணைகள் பிறப்பிக்கப் பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகளில் சிலவற்றை உங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக, மிகவும் பின்தங்கிய வட்டங்களில் நிறுவப்படும் தொழில்களுக்கு அளிக்கப்படும் மானியம், நிலையான சொத்துக்களின் மீது செய்யப்பட்ட முதலீட்டில் 15 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாகவும், உயர்ந்த பட்ச மானியம் ரூ.15 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தொழில்கள் தொடங்கப்பட்டு, அவை போதிய அளவு வளர்ச்சியடைய அடிப்படை வசதிகள் இன்றியமையாதது. இதனை நிறைவேற்றும் வகையில் ஏற்கெனவே அமைந்துள்ள தொழிற்பகுதிகள், தொழில் வளாகங்கள் மற்றும் தொழிற்பேட்டைகள் ஆகியவற்றிற்குத் தேவையான அடிப்படை வசதிகளை அமைத்துத் தருவதற்காகத் 'தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்' (Tamil Nadu Corporation for Industrial Infrastructure Development (TACID) என்ற நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டுச் செயலாற்றி வருகிறது.

### தொழில்வளம் பெருக...

தொழில்கள் ஏற்கெனவே வளர்ந்துள்ள பகுதிகளில், மேலும் விரைவான வளர்ச்சியை அடைவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல், தொழில் முனைவோருக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, தேவைப்படும் நிதியைக் கடனாக அளித்தல், தொழில் கழிவுகளைச் சுத்திகரிப்புச் செய்தல், கல்வி மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்துதல், தொழில் வளர்ச்சி மையங்களைத் தோற்றுவித்தல், போன்ற பணிகளை, இக்கழகம் இந்த ஆண்டு மேற்கொள்ள இருக்கிறது. இக்கழகத்திற்கு, அரசின் பங்கு மூலதனமாக ரூ.5 கோடி வழங்கப்படும்.

தொழில் வளம் பெருக, இம் மாநிலத்திற்குள்ளும் வெளியிலும் உள்ள தொழில் முனைவோர்களைக் கண்டறிந்து, இம்மாநிலத்தில் தொழில்களைத் துவக்க ஊக்கமும், ஆலோசனைகளும் வழங்கவும், அவர்கள் தொழில் தொடங்குவதற்குத் தேவையான பல்வேறு துறைகளின் அனுமதிகளைப் பெற்றுத் தரவும், உற்பத்தி செய்யும் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு உதவும் வகையில், 'தொழில் ஆலோசனை மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுமம்' (Industrial Guidance and Export Promotion Bureau) ஒன்று அமைக்கப்பட்டு, விரைவில் தன்னுடைய பணியைத் துவக்க இருக்கிறது.

பெருமளவில் ஏற்றுமதி செய்யும் தொழில்கள் அமைந்துள்ள திருப்பூர், இராணிப்பேட்டை, திண்டுக்கல், வாணியம்பாடி போன்ற நகரங்





களுக்கு, அடிப்படை வசதிகளை அமைத்துத் தருவதற்கு மத்திய அரசின் உதவி நாடப்பட்டுள்ளது. மத்திய அரசும் இச்செயற்குறிப்பைக் கவனிப்பதாகத் தெரிவித்தள்ளது.

தொழில் துறையில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்குகிற எங்கள் அரசின் நோக்கம் அனைவரும் அறிந்ததே. தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையில், 30 சதவிகிதத்துக்கு மேல் மகளிருக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் புதிய தொழில்களுக்குக் கூடுதல் சலுகையாக, முதலீட்டில் 5 சதவிகிதமும், உச்ச அளவாக ரூ. 5 இலட்சம் சிறப்பு மானியமும் வழங்கப்படுகிறது. மேலும் எல்லாப் புதிய தொழிற்பேட்டைகளிலும், தொழில் வளாகங்களிலும் உள்ள தொழிற்கூடங்களில், மகளிர் தொழில் முனைவோர்களுக்காக, 30 சதவிகிதத் தொழிற்கூடங்கள் அல்லது மனைகள் ஒதுக்கப்படுகின்றன. 1991-92-ஆம் ஆண்டு, 800 மகளிருக்குத் தொழில் முனைவோருக்கான சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது.

### புதிய தொழில் கொள்கையின் முக்கிய அம்சங்கள்

தொழில் அதிபர்கள் கூட்டத்தில் வழங்கப்பட்ட ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டைத் தொழில் வளர்ச்சியில் முன்னிலையில் நிறுத்தும் அடுத்த கட்ட நடவடிக்கையாக, இந்த அரசு முதன் முதலாகப் புதிய தொழிற்கொள்கை ஒன்றை, 20.1.1992 அன்று, முன்னணித் தொழிலதிபர்களின் முன்னிலையில் வெளியிட்டது. இக்கொள்கையில், மின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதன் முக்கியத்துவத்தைப் பற்றியும், தனியார் துறையின் மூலம் மின் உற்பத்தித் திட்டங்களை அமைப்பது குறித்தும், மாநிலத்தில் பெருந்தொழில்கள் நிறுவுவதற்கான ஒப்புதல்களை விரைவில் பெறுவது குறித்தும், தொழில் துறையின் முதலீட்டைப் பெருக்குவது குறித்தும், அயல் நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்வதை ஊக்குவிப்பது குறித்தும், வரிச் சலுகைகள் குறித்தும், தொழில் வளர்ச்சிக்கான ஊக்கத் திட்டங்கள் குறித்தும், தொழிலாளர்கள் - தொழில் முனைவோர் உறவு பற்றியும், பொதுத்துறை நிறுவனங்களைப் பற்றி அரசின் கொள்கை பற்றியும், சிறுதொழில் வளர்ச்சி மற்றும் விரைவான வளர்ச்சிக்கு வாய்ப்புகள் மிகுந்துள்ள தொழில்களைத் துவக்குதல் பற்றியும், தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தனியார் துறையில் புதிதாகத் தொழில்கள் துவங்க முன்வரும் நிறுவனங்களுக்கு, TIDCO மற்றும் ELCOT நிறுவனங்கள், ஆலோசனைகளையும் மற்ற உதவிகளையும் நல்கும் வகையில், இவ்விரு நிறுவனங்களிலும், 'வழிகாட்டும் சேவைத் துறை' (Escort Sector Projects) என்ற புதிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பங்குகொள்ளும் தனியார் நிறுவனங்களுக்கு ஒரு சதவிகிதம் பங்கு மூலதன உதவி அளிக்கப்

படும். இத்திட்டத்தின் மூலம், தனியார் நிறுவனங்களுக்குத் தொழில்கள் துவங்கத் தேவையான அனுமதிகள் பெற்றுத் தரப்படும். தனியார் நிறுவனங்களின் நிர்வாகத்தில் அரசின் தலையீடு கூடாது என்ற அரசின் கொள்கைக்கு ஏற்ப, இத்திட்டத்தினால் தனியார் நிர்வாகக் குழுவில், அரசின் பிரதிநிதிகள் இடம்பெறமாட்டார்கள்.

வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் வகையில், அவர்களை ஈர்ப்பதற்குப் புது டில்லியிலுள்ள தமிழக அரசின் ஆணையர், (Resident Commissioner) தலைமையில், 'வெளிநாட்டு முதலீட்டு வளர்ச்சிப் பிரிவு' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மிகப் பெரும் தொழிற்சாலைகள் இம்மாநிலத்தில் அமைய ஊக்கமளிக்கும் வகையில், ரூ.200 கோடிக்கு மேல் முதலீட்டுடன் தொடங்கப்படும் தொழில்களுக்கு, முன்பு இருந்த ரூ.50 இலட்சம் என்ற மானியத்தை, ஒரு கோடி ரூபாயாக உயர்த்தவும்,

முறையை எளிதாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். தற்போது அதில் உள்ள இடர்ப்பாடுகள் களையப்படும்.

3. மாவட்டத் தொழில் மையங்களைப் பலப்படுத்தி, ஒரு கூரையின் கீழ் பெறப்படும் விண்ணப்பங்களை விரைவில் தீர்வு செய்ய Single Window Clearance அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

4. அதிகாரம் அளிக்கப்பட்ட குழு, (Empowered Committee) ஒன்று, நலிவடைந்த சிறுதொழில்களின் புனரமைப்பிற்காகத் தொழில் துறைச் செயலாளரின் தலைமையில் அமைக்கப்படும்.

5. பொது நிறுவனங்கள், சிறு தொழிற்சாலைகளிலிருந்து வாங்கும் பொருட்களுக்கு, 30 நாட்களுக்குள் பணம் வழங்குவதற்கான ஏற்பாட்டினைச் செய்யத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதைக் கண்காணிக்க ஒரு தனிக் குழு (Monitoring Committee) அமைக்கப்படும்.

# சிறுதொழில் வளர்ச்சிக்கு அரசின் புதிய நடவடிக்கைகள்!

ரூ. 300 கோடிக்கு மேல் முதலீட்டுடன் தொடங்கப்படும் தொழில்களுக்கு, ஏற்கெனவே உள்ள 6 ஆண்டு விற்பனை வரி தள்ளுபடி என்பதை 7 ஆண்டுகளாகவும், 12 ஆண்டு விற்பனை வரி ஒத்திவைப்பு என்பதை 14 ஆண்டுகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

நலிவுற்ற தொழிற் பிரிவுகளைச் சீரமைத்து, நவீனப்படுத்தும்பொழுது, பாதிக்கப்படும் தொழிலாளர்களின் நலனுக்காகத் 'தொழிலாளர் மறுவாழ்வு நிதி' (Labour Rehabilitation Fund) என்ற ஒரு புதிய திட்டம், எங்கள் அரசின் புதிய தொழில் கொள்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய திட்டம் நம் மாநிலத்தில்தான் முதன் முதலாகக் கொண்டுவரப்பட்டுள்ளது. புதிய தொழில் கொள்கையில் கண்டுள்ள அம்சங்களைச் செயல்படுத்த, ஆணைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

சிறு தொழில் அதிபர்களின் கூட்டம் ஒன்றினையும், 4.3.1992 அன்று கூட்டி, சிறு தொழில் தொடர்பான அவர்களது குறைகளைக் கேட்டறிந்தேன். அவர்கள் கோரிக்கைகளின் அடிப்படையில், சில நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. அவை:

1. சிறு தொழில்களின் நடைமுறை மூலதனத் தேவையைப் பூர்த்தி செய்ய, ரிசர்வ் வங்கி மற்றும் முன்னோடி வங்கிகளுடன் கலந்துரையாடி, அவர்கள் விரைவில் மூலதனம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2. சிறு தொழில்களைப் பதிவு செய்யும்

6. சிறு தொழில் பிரிவுகளுக்கு வழங்கப்படும் மானியங்கள், நிதி வழங்கப்படாததால் தாமதமாகின்றது என்ற குறையைப் போக்குவதற்கு, இம் மானியத் தொகை ரூ.300 இலட்சத்திலிருந்து ரூ.853.75 இலட்சமாக, 1991-92-ஆம் ஆண்டிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. குறைந்த மின் அழுத்த மானியமாக வழங்கப்பட்ட ரூ.25 இலட்சத்தை, ரூ.77.87 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மின்சாரம் தயாரிக்கும் Generator Set வாங்குபவர்களுக்கு வழங்கவேண்டிய மானியத்திற்காக, ரூ.24.19 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5 ஆண்டுகளில், தமிழகத்தில் ஒரு இலட்சம் சிறு தொழில்கள் அமைவதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்த, எங்கள் அரசு ஏற்கெனவே அறிவிப்பு ஒன்றை வெளியிட்டதை நீங்கள் அறிவீர்கள். துணை மற்றும் சார்புத் தொழில்கள் துவங்குவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றிய கணக்கெடுப்பு, தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், நிதி நிறுவனங்களின் உதவியுடன், ஆண்டொன்றுக்கு 20,000 சிறு தொழில்களைத் தகுந்த தொழில் முனைவோர்களைக் கொண்டு அமைக்கும் பொறுப்பை மாவட்டத் தொழில் மையங்களிடம் ஒப்படைக்க உள்ளோம். இதற்கென ஒரு செயல் திட்டத்தைத் தொழில் துறை இயக்குநர் தயாரித்து வருகிறார். இந்தத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தி, தமிழகத்தின் சிறு தொழில் வளர்ச்சியை, அரசு கணிசமான வகையில் உயர்த்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.





★ மூட நம்பிக்கையும் குருட்டுப் பழக்க வழக்கங்களும் சமூகத்தின் முதல் பகைகள்.

**தொழில் வளர்ச்சி மையங்கள்**

நிலக்கோட்டை வட்டத்தில் வேளாண் தொழில் வளாகத்தை அமைத்திடத் தேவையான, 413.35 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் 4 புதிய தொழில் வளர்ச்சி மையங்கள், தர்மபுரி மாவட்டம் பர்கூர், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் கங்கைகொண்டான், பெரியார் மாவட்டம் பெருந்துறை, மற்றும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் பனங்குடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட உள்ளன. ஒவ்வொன்றும் சுமார் ரூ. 20 கோடி முதல் ரூ.30 கோடி செலவில் அமைக்கப்பட இருக்கின்றன. புதிய தொழில் வளர்ச்சி மையங்களுக்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம், அரக்கோணம் பகுதியில், தொழிற்சாலைகள் அமைக்கப் பெரும்பாலான அடிப்படை வசதிகள் இருந்தபோதிலும், போதுமான தண்ணீர் வசதி இல்லை. அதன் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய, சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம், கொடுங்கையூரிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரைக், குழாய் வழியாக அரக்கோணத்திற்கு வழங்க முன் வந்துள்ளது. எனவே விரைவில் அரக்கோணத்தில், ஒரு தொழில் மையம் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**'காஸ்டிக் சோடா' தொழிற்சாலை**

வேதாரண்யம், உப்புத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் உப்பைப் பயன்படுத்தி, காஸ்டிக் சோடா தயாரிக்க, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கூட்டுத் துறை நிறுவனமான, 'தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ்' நிறுவனத்திற்கு, மத்திய அரசு இவ்வாண்டு பிப்ரவரித் திங்களில் இசைவுக் கடிதம் வழங்கியுள்ளது. இத் தொழிற்சாலையை விரைவில் அமைக்க, 'பெட்ரோ ப்ராடக்ட்ஸ்' நிறுவனம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

**'ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ்' நிறுவனம் திறப்பு**

இந்த அரசு எடுத்துக் கொண்ட தீவிர முயற்சியின் காரணமாக, 2½ ஆண்டுகளாக மூடிக்கிடந்த ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் நிறுவனம், இந்த ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3-ஆம் நாள் திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந் நிறுவனத்தைத் திறப்பதற்காக அரசு ரூபாய் 3 கோடியைக் குறைந்த வட்டியான 9 சதவிகிதத்தில் கடனாகக் கொடுத்துள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கூட்டுத்துறை நிறுவனமான, தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ் நிறுவனம், இந் நிறுவனத்தில் பங்கு மூலதனமாக, ரூ.6.03 கோடி முதலீடு செய்யவும் அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும், விற்பனை வரி ஒத்திவைத்து செலுத்தும் சலுகையினையும், ஐந்து ஆண்டுகளுக்கு வழங்கியுள்ளது. இந் நிறுவனம் திறக்கப்பட்டதால், 2,000 தொழிலாளர்கள் மீண்டும் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளார்கள். ஏனைய 1,000 தொழிலாளர்கள் விருப்ப ஓய்வுக்கு இசைவு தந்துள்ளனர்.

**தமிழ்நாடு எஃகு நிறுவனத்தை நவீனப்படுத்துதல்**

தமிழ்நாடு எஃகு நிறுவனம், டிட்கோவின் துணை நிறுவனங்களில் ஒன்றாகும். இந்த நிறுவனம் 1991-92-இல் (31.12.1991 வரை). ரூ.214.84 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. இந்த ஆலையின் உற்பத்தி இந்த ஆண்டில், சுமார் 69,746 டன்களாகும்.

நாட்டிலுள்ள புதிய எஃகு உருட்டாலைகளுக்கு இணையாக, இதனை மேம்படுத்தும் வகையில், இந் நிறுவனத்தினைச் சுமார் ரூ.23 கோடி முதலீட்டுச் செலவில் நவீன மயமாக்கும் திட்டத்தை நிறைவேற்ற அரசு உத்தேசித்துள்ளது.

**அயல்நாட்டு முதலீடு**

அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள் தமிழகத்தில் தொழில் துவங்கவும், தமிழகத்திலுள்ள தொழில்களில் முதலீடு செய்யவும், அவர்களை ஊக்குவிக்கும் முயற்சிகளைத் துரிதப்படுத்துகின்ற வகையில், சிப்காட்டில் ஓர் உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இக்குழு மூன்று மாதத்திற்கு ஒருமுறை கூடி, தமிழகத்தில் தொழில் அமைக்க விரும்பும் அயல்நாடு வாழ் இந்தியர்களின் தேவைகளைக் கவனித்து, உதவி வருகிறது. இதுவரை மொத்தம் ரூ.108.60 கோடி முதலீட்டில், 60 தொழில் பிரிவுகளை அயல்நாடு வாழ் இந்தியர்கள் அமைத்துள்ளனர். மேலும் ரூ.51.06 கோடி முதலீட்டில், 19 தொழிற்பிரிவுகளை அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

குறிப்பாக, சிங்கப்பூரில் உள்ள தொழில் அதிபர்கள் சிலர், நமது நாட்டில் தொழில் தொடங்க விருப்பம் தெரிவித்துள்ளனர். இதற்காக மத்திய அரசு, இந்தியா- சிங்கப்பூர் தொழில் இணைப்பு மையம் (India-Singapore Industrial Corridor) ஒன்றினை அமைக்கக் கருதியுள்ளது. இதன் மூலம் சிங்கப்பூர் தொழிலதிபர்கள், இந்தியாவில் தொழில்களை அமைக்க முன்வருகிற வாய்ப்புகள் பெருகும். சென்னையில் பெரிய துறைமுகம், பன்னாட்டு விமான நிலையம், மற்றும் இவை சார்ந்த அடிப்படை வசதிகள் ஆகியவை, ஏற்கெனவே சிறந்த நிலையில் உள்ளதால், இந்த

இணைப்பு மையத்தினைச் சென்னையில் அமைக்கும்படி கோரி, மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. இதன் மீது தேவையான தொடர் நடவடிக்கை எடுக்கும் முயற்சியினை மேற்கொள்ள, உயர்மட்டக் குழு ஒன்றும் அமைக்கப்படும்.

**தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்**

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், சிறிய மிகச் சிறிய, மற்றும் நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சிக்காக நிதியுதவி செய்து வருகிறது. கோவை மாவட்டம் திருப்பூரில், இந்நிறுவனத்தின் கிளை ஒன்று இந்த ஆண்டு திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தற்போது தொழில் முனைவோர்களுக்கு நிலம், கட்டடம், இயந்திரத் தளவாடங்கள் வாங்குவதற்குக் கடன் வசதி அளிக்கிறது. அவர்களுக்கு மேலும் வசதி செய்து தரும் நோக்குடன், இந்நிறுவனமே தளவாடங்களை வாங்கி, குத்தகை அடிப்படையில் தொழில் முனைவோருக்குக் கொடுப்பதற்கான, குத்தகை நிதியுதவித் திட்டத்தை அதாவது (Lease Finance) திட்டத்தை நடப்பாண்டில் அறிமுகப்படுத்தும்.

1991-92-ஆம் ஆண்டு, கடன் வழங்குவதற்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, ரூ.225 கோடியாகும். குறிப்பாக, 29.2.1992 முடிய, இதுவரை 4,070 தொழில் பிரிவுகளுக்கு, ரூ.239 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றில், 3,903 சிறு தொழில் பிரிவுகளுக்கு ரூ.185 கோடி கடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டு கடன் வழங்குவதற்கான இலக்கு ரூ.250 கோடியாக உயர்த்தப்படும்.

தொடர்பு, தொலைக்காட்சி மற்றும் வானொலி போன்ற பல்வேறு துறைகளில் பயன்படும், மின்னணுச் சாதனங்களைத் தயாரிக்கத் தேவைப்படும் அடிப்படைப் பாகமாகும். ஒருங்கிணைந்த சுற்றுகளைத் தயாரிக்கும் ஒரு தொழில் திட்டத்தை, எல்காட் நிறுவனம் உருவாக்கி வருகிறது. இந்தத் தொழில் திட்டத்தை ரூ.300 கோடி செலவில், கூட்டுத்துறையில் அமைக்க, எல்காட் நிறுவனம் ஆராய்ந்து வருகிறது. இத்திட்டம் நாட்டின் மின்னணுத் தொழில் வளர்ச்சிக்குப் பேருதவிபுரியும் வகையில் அமையும்.

எல்காட்டின் தொலைத் தொடர்புப் பிரிவு, ரூ.10 கோடி திட்ட மதிப்பீட்டில், செய்தி மற்றும் தகவல் விவரங்களைப் பரிமாறிக்கொள்ள வகை செய்யும், நுண்ணலைத் தொலைத் தொடர்புக் கருவிகள், அதாவது Digital Microwave Communication Equipment தயாரிக்கும் திட்டத்தை மேற்கொள்ள உள்ளது.

வெளிநாட்டு முதலீடு, தொழில்நுட்பம், மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகள் உருவாக்கப்பட்டால்தான், தமிழ்நாட்டின் மின்னணுத் தொழிற்சாலைகள் உலக அளவில் பெருமை அடைய முடியும். இந்த நிலையை உருவாக்க, உலகிலேயே மின்னணுத் தொழில்நுட்பத்தின் முன்னோடியாக விளங்கும் அமெரிக்காவில் உள்ள சான்பிரான்சிஸ்கோ நகரத்தில், ஒரு தொடர்பு நிலையம் (Overseas Window) ஏற்படுத்த, எல்காட் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. மின்னணுப் பொருள் விற்பனை மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி நிறுவனம் (Electronics Trade and Technology Development Corporation) மின்னணு மற்றும் ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனம் (Electronics and Software Export Promotion Organisation) ஆகிய மத்திய அரசு

# ‘வெளிநாட்டு முதலீட்டு வளர்ச்சிப் பிரிவு’
# ‘வழிகாட்டும் சேவைத் துறை’
# ‘தொழிலாளர் மறுவாழ்வு நிதி’
# — திட்டங்கள் உருவாக்கம்!

இந்நிறுவனத்திடம் கடன் பெற்றோர், கடன் தவணைகளைக் குறித்த காலத்தில் செலுத்தினால்தான், மேலும் பல புதிய தொழில்களுக்கு நிதியுதவி தர வாய்ப்பு ஏற்படும். எனவே, தொழில் முனைவோர் இதற்கு முழு ஒத்துழைப்பினை நல்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

**மின்னணுத் தொழில்**

ஒருங்கிணைந்த சுற்றுகள் (Integrated Circuits) என்ற மின்னணுப்பாகம், பாதுகாப்பு, தொலைத்

நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், இந்தத் தொடர்பு நிலையம் செயல்படும். இத்தொடர்பு நிலையத்தின் திட்டமிடல் மற்றும் செயலாக்கப் பணிகளில், அமெரிக்காவில் வாழும் இந்தியர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். அவர்களின் ஆர்வத்தையும் வியாபாரத் திறமையையும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், இந்தத் தொடர்பு நிலையம் அமைக்கப்படும். இந்த நிலையம், தமிழ்நாட்டின் மின்னணுத் தொழில்கள், உலக அளவில் வளர்ச்சி பெற உதவும்.



**மணலி ஆரோமேடிக்ஸ் தொழில் வளாகம்**
(Aromatics Complex)

சென்னை மணலியில் (NAPCO) நிறுவனத்தால், பெட்ரோலிய இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்யும் ஆரோமேடிக் பொருட்கள் உற்பத்தி வளாகம் ஒன்றினை அமைப்பதற்குத் தேவையான, 1655.92 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த, சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைக்கு முதலீட்டு அனுமதி வழங்குமாறு, மைய அரசு கோரப்பட்டுள்ளது.

**ஏற்றுமதி தொழில் வளர்ச்சி**

தமிழகத்திலிருந்து ஏற்றுமதியைப் பெருக்க, இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 100 விழுக்காடு ஏற்றுமதிக்கான உற்பத்தி செய்யும் தொழில் பிரிவுகளுக்கு, மின்வெட்டிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதியைப் பெருக்கிட குறுகிய காலத் திட்டம், மற்றும் நீண்ட காலத் திட்டம் வகுத்தளிக்கவும், ஏற்றுமதிக்கான தொழில் பிரிவுகளின் சிக்கல்களைக் களையவும், அரசுக்கு ஆலோசனைகள் வழங்கிட, தொழில் அதிபர்கள் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட உயர்மட்ட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழக அரசு நிறுவி வருகிற, ‘தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுமம்’ (Industrial Guidance and Export Promotion Bureau) இம் மாநிலத்தில் ஏற்றுமதி செய்யக்கூடிய தொழிற் பிரிவுகள் அமைத்திடவும், அவைகள் உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்யவும், தேவையான உதவிகளை நல்கும்.

தரமணியில் அமைக்கப்படும் நிரந்தரத் தொழிற் பொருட்காட்சி வளாகமும், இம் மாநிலத்தின்



**தொலைபேசி வசதி**

நாட்டில் உள்ள எல்லா ஊராட்சிகளுக்கும் தொலைபேசி வசதி செய்து கொடுக்க அரசு முடிவு எடுத்துள்ளது. இவ்வாண்டு 59,044 ஊராட்சிகளுக்குத் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படும். இன்னும் 1,69,625 ஊராட்சிகளுக்குத் தொலைபேசி வசதி கிடைக்கவில்லை. எல்லா ஊராட்சிகளுக்கும், கிடைக்கக்கூடிய நிதியைக் கொண்டு 1995, மார்ச் 31-ஆம் தேதிக்குள் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்றுமதியைப் பெருக்குவதற்குப் பெரிதும் உதவும். ஏற்றுமதித் தொழில் நிறைந்த திருப்பூர், இராணிப்பேட்டை, வாணியம்பாடி, திண்டுக்கல் போன்ற நகரங்களுக்கு, அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க, மைய அரசின் உதவியை இந்த அரசு நாடியுள்ளது.

**கிராபைட் மேம்படுத்தும் திட்டம்**

தமிழ்நாடு கனிம நிறுவனம், கிராபைட் மேம்படுத்தும் தொழிற்சாலையைச் சிவகங்கையில் அமைப்பதற்கு, இந்த அரசு அனுமதி அளித்துள்ளது.

இத்தொழிற்சாலையை நிறுவும் பணிகள் அனைத்தும், ஒரே ஒப்பந்தக்காரர் மூலம் செய்கின்ற வகையல், Turn Key Basis-இல் ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு, ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்யத் தமிழ்நாடு கனிம நிறுவனம் செய்துள்ள பரிந்துரைகள், அரசின் ஆய்வில் உள்ளன. ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்ட 15 மாதங்களில், தொழிற்சாலை உற்பத்தியைத் துவக்கும்.

இத்தொழிற்சாலை ஆண்டு ஒன்றுக்கு, 66,000 மெட்ரிக் டன் கிராபைட் கனிமத்திலிருந்து, 9,240 மெட்ரிக் டன் அளவிலான மேம்படுத்தப்பட்ட கிராபைட்டை உற்பத்தி செய்யும்.

**சர்க்கரை ஆலைகள்**

தமிழகத்தில் தற்போது 31 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. மதுராந்தகம், கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி, மற்றும் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை விரிவுபடுத்தும் திட்டமும், சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை நவீனப்படுத்தும் திட்டமும், இந்த ஆண்டு செயலாக்கப்படும்.

அரூரில் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்படும் சர்க்கரை ஆலை, 1992-ஆம் ஆண்டின் இறுதியில் கரும்பு அரைவையைத் தொடங்க உள்ளது.

பொதுவாகச் சர்க்கரைத் தொழில் தமிழகத்தில் நன்கு செயல்பட்டு வருகிறது. மேலும், வரும் ஆண்டுகளில் 5 புதிய சர்க்கரை ஆலைகளை -

1. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்
2. தஞ்சாவூர் மாவட்டம்
3. நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்
4. தென்னார்க்காடு மாவட்டம்
5. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்.

ஆகிய மாவட்டங்களில் அமைக்க, பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த ஆலைகள் கூட்டுறவுத் துறையில் நிறுவப்படும். தேவையானால் தனியார் துறையில் நிறுவுவதைப் பற்றியும் அரசு பரிசீலிக்கும்.

**மின் உற்பத்திப் பெருக்கம்**

விரைந்த தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம் மிகவும் இன்றியமையாததாகும். எனவே, மின்



உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாய நிலையில் உள்ளோம். நம் மாநிலத்தில் உள்ள பொதுத் துறை மின் நிறுவனங்களாகிய, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், 'கல்பாக்கம் அணுமின் நிலையம் ஆகியவைகளில், கூடுதல் முதலீடு செய்து மின் உற்பத்தியை அதிகரிக்குமாறு, மைய அரசை வலியுறுத்தி வருகிறோம்.

மைய அரசின் புதிய தொழில் கொள்கையின்படி, மின் உற்பத்தியில் தனியார் துறை பங்கேற்க வழி காணப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் திருச்சி மாவட்டம், ஜெயங்கொண்ட சோழபுரம் பகுதியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி ரூ.7,000 கோடி செலவில் 1,500 மெகாவாட் மின் உற்பத்தி செய்யத் திட்டமிட்டு, கூட்டுத்துறை நிறுவனம் ஒன்றைத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் அமைத்துள்ளது. இந் நிறுவனத்திற்குத் தேவைப்படும் பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுக்க, மைய அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளது. மேலும், ஆஸ்திரேலியா நாட்டிலிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்து, அனல்மின் நிலையம் ஒன்றினைத் தனியார் அல்லது கூட்டுத் துறையில் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### மைய அரசின் திட்டங்கள்

இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்காக மைய அரசின் முதலீடு 1969-ஆம் ஆண்டில் 10 விழுக்காடாக இருந்தது, 1989-ஆம் ஆண்டில் 5.21 விழுக்காடாகக் குறைந்துவிட்டது. எனவே, மைய அரசு முதலீடு இம் மாநிலத்தில் மேலும் உயர்ந்திட இந்த அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

தென்னக எரிவாயு குழாய்த் திட்டம் (Southern Gas Grid) நெய்வேலி பழுப்பு நிலக்கரி விரிவாக்கத் திட்டம், எண்ணூர் துணைத் துறைமுகத் திட்டம் ஆகியவற்றை விரைவில் செயல்படுத்த, மைய அரசை நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### புதிய அறிவிப்புகள்

#### புதிய கிரானைட் கொள்கை (New Granite Policy)

அரசு புறம்போக்கு நிலங்களிலிருந்து, பல்வேறு வண்ண கிரானைட் பாறைகளை, வெட்டி எடுப்பதற்கான குத்தகை உரிமையை, தற்போது மெருகு ஊட்டும் தொழிற் கூடத்தை நிறுவியுள்ளவர்களுக்கும், மெருகு ஊட்டும் தொழிற் கூடத்தை, இரண்டாண்டுக் கால அளவிற்குள் துவக்கத் திட்டத்தை வகுத்து உள்ளவர்களுக்கும், வழங்கப்படுவதற்கான விதிமுறைகள் இருக்கின்றன. இவ்வுரிமைகள் மூடி முத்திரையிடப்பட்ட டெண்டர் மூலம் அளிக்கப்படுகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

பட்டா நிலங்களில் கிரானைட் பாறைகளை வெட்டி எடுப்பதற்காக அனுமதி, மெருகூட்டும் தொழிற்கூடம் உள்ளவர்களுக்கும், இரண்டாண்டுக் காலத்திற்குள் இத்தொழிலைத் துவக்கத் திட்டமிட்டுள்ளவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. இத்தொழிலைத் துவக்க திட்டமிட்டுள்ளவர்களுக்கு முதலில் உறுதிக் கடிதம் (Letter of Commitment) வழங்கப்படுகிறது. இவ்வாறு அனுமதி அளிக்கப்பட்டவர்களுக்கு, தொழிற் கூடத்தை நிறுவிய பின், முறையான குத்தகை உரிமம் வழங்கப்படுகிறது.

அரசு புறம்போக்கு நிலங்களில், கிரானைட் கற்கள் முறையாக வெட்டி எடுக்கப்படவில்லை என்பதும், இவ்வாறு வெட்டி எடுக்கும் கற்களைப் பணி நிறைவு பெற்ற கற்களாக உருவாக்குவதில், அதிக சேதாரம் ஏற்படுகிறது என்பதும், இதனல் நமக்குக் கிடைக்க வேண்டிய அந்நியச் செலாவணி வருவாய் குறைந்துவிடுகிறது என்பதும், அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. தமிழகத்தில் கிடைக்கும் பல்வேறு வண்ண கிரானைட்டைச் சிறப்பாக

(41—ஆம் பக்கம் பார்க்க)





# திருக்கோயில்களில் சிலை பாதுகாப்பு நடவடிக்கைகள்

## மாண்புமிகு முதல்வர் அறிக்கை

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், டாக்டர் குமாரதாஸ், திரு. ஆர். சிங்காரம், திரு. ஆர். நடேசன், திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, திரு. சி. ஞானசேகரன், திரு. பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள திருக்கோயில்களில் நடைபெற்றுள்ள சிலை உடைப்புகள் தொடர்பாகவும், திருட்டுகள் தொடர்பாகவும் விவாதிக்க வேண்டுமென்று 6 சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளனர். இவை அனைத்தும் ஒரே பொருள் தொடர்பானவை என்பதால், என்னுடைய பதிலினை ஒட்டுமொத்தமாக அளிக்க விரும்புகிறேன்.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கங்கைகொண்டான் அருள்மிகு கைலாசநாத சுவாமி திருக்கோயிலில், கடந்த 4.2.1992 அன்று இரவு, திருடர்கள் ஒரு குழுவாகச் சென்று, கோபுரத்தின் வடக்கே உள்ள மதில் சுவர் வழியாகக் கயிறு கட்டி உள்ளே நுழைந்து, சுவாமி சன்னதியின் அருகே இருந்த விநாயகர் சிலையைப் பீடத்தில் இருந்து அகற்றியுள்ளனர். கர்ப்பக் கிரகக் கதவின் பூட்டினை உடைத்து, 5 அடி உயரமுள்ள அருள்மிகு ஆனந்தவல்லியம்மன் கல் திருமேனியை உடைத்து, பீடத்திலிருந்து அப்புறப்படுத்தியுள்ளனர். அதே கோயிலில், 4 அடி உயரமுள்ள துவார பாலகர் கற்சிலையையும், ஒரு அடி உயரமுள்ள நந்தீஸ்வரர் கற்சிலையையும், 2 அடி உயரமுள்ள சிறிய விநாயகர் சிலையையும், 3 அடி உயரமுள்ள மற்றுமொரு சிலையையும் பீடங்களிலிருந்து அகற்றியுள்ளனர். மேலும் 2½ அடி உயரமுள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி சிலையை உடைத்துள்ளனர்.

அம்மன் சன்னதியில் இருந்த உண்டியலின் வெளிப் பூட்டை உடைத்துள்ளனர். ஆனால் உண்டியலின் உள் பூட்டுத் திடமாக இருந்தமையால், அதனைத் திறக்க முடியவில்லை. எனவே, உண்டியல் பணம் களவு போகவில்லை. இந்த நிகழ்ச்சி காவல் துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டவுடன், கங்கைகொண்டான் காவல் நிலையக் குற்ற எண்.46/92-இல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. காவல்துறையினர், கைரேகை நிபுணர், மற்றும் புகைப்பட வல்லுநரை அனுப்பி வைத்துப் புலன் ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் திருக்கோயில், ஊரைவிட்டுத் தள்ளி, தனியாக உள்ள நிலையில் இவ்வாறு திருட்டு முயற்சிகள் நடந்துள்ளன. அதுமட்டுமின்றி, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் மற்றும்



சிதம்பரனார் மாவட்டங்களில், அடிக்கடி சிலை உடைப்பு மற்றும் களவு நடைபெற்று வருவதால், ஒவ்வொரு திருக்கோயிலிலும் இரவுக் காவல் பணியைத் தீவிரப்படுத்தவும், இரவுக் காவலர்கள் இல்லாத திருக்கோயில்களின் இதரப் பணியாளர் களில் ஒருவரை, இரவுக் காவல் பணி செய்திட நியமிக்கவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. உடைக்கப்பட்ட அருள்மிகு ஆனந்தவல்லி அம்மன் சிலைக்குப் பதில், புதிய சிலை விக்கிரகத்தினை விரைவில் செய்து வைக்கத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்படிச் சம்ப வங்கள் தொடர்ந்து நடைபெறாவண்ணம் தடுத்து நிறுத்த, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறும், அதன் மூலம் பொது மக்கள் மனதில் நம்பிக்கை தோற்றுவிக்குமாறும், தக்க அறிவுரைகள், காவல் துறையினருக்கும், இந்து அறநிலையத் துறையினருக்கும் வழங்கப் பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

கடந்த 14.2.1992 அன்று, திருநெல்வேலியில் உள்ள அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலில் இருந்த, சுமார் 750 கிராம் எடையுள்ள வெள்ளி பிரம்ம வளையத்தை, 'யாரோ திருடித் சென்று விட்டனர். உள்ளூர்க் காவல்துறையினர் தீவிரப் புலன் விசாரணை செய்து, அக்கோயிலில் பணி புரியும் இரண்டு அர்ச்சகர்களைக் கைது செய்து, களவாடப்பட்ட பொருட்களை மீட்டுள்ளனர் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

குற்றாலத்தில் உள்ள செண்பகாதேவி அம்மன் ஆலயத்தினுள், சில அடையாளம் தெரியாத நபர்கள், 17.3,1992 அன்று இரவு, பூட்டை உடைத்து உள்ளே புகுந்து, ரூபாய் 800 மதிப் புள்ள, வெள்ளி மற்றும் பித்தளைப் பொருட் களைக் களவாடியுள்ளனர். இது குறித்தும் காவல் துறையினர் வழக்குப் பதிந்து, தீவிரப் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

திருட்டு சம்பந்தமாகத் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் - ஒரு ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர், 2 தலைமைக் காவலர்கள் மற்றும் 4 காவலர்கள் அடங்கிய தனிப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

புலனாய்வில் உள்ள சிலைத் திருட்டு வழக் குகள், மாநிலக் குற்றப்பிரிவின் சிலைத் திருட்டுத் தனிப் பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டு, ஒரு காவல்துறைக் கண்காணிப்பாளரின் தலைமையில், தீவிரப் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இத்தகைய குற்றங்கள் நடவாமல் தடுக்கவும், நடந்துவிட்ட குற்றங்களை விரைவில் கண்டுபிடிக்க வும், தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம சுப்பு அவர்கள் பேசுகிறபோது, தருமபுரி மாவட் டத்தில் ஒரு கோயிலில் பணிபுரிந்த காவலர் கொலை செய்யப்பட்டது பற்றி இங்கே குறிப் பிட்டுப் பேசினார்.



ஆசை

● ஆண்டுகள் செல்லச் செல்ல, ஒவ்வொருவரும் முதுமைப் பருவம் அடைகின்றனர். ஆனால், ஆசை மட்டும் எப்போதும் இளமையாய் இருக்கின்றது.

- அண்ணல் காந்தியடிகள்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்க்ள், கோவில் திருட்டு மற்றும் சிலை உடைப்பு பற்றிக் குறிப்பிட்டு, கோவில்களைப் பாதுகாக்கத் தெரி வித்த அனைத்துக் கருத்துக்களும் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நமது கலாச் சாரப் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும், கலைப் பொக்கிஷங்களாகத் திகழும் நமது திருக்கோவில் களையும், அவற்றின் உடைமைகளையும் பாது காப்பதே, எங்கள் அரசின் தார்மீகக் கடமை என்பதை, நான் ஏற்கெனவே இம்மாமன்றத்திற் கும் தமிழக மக்களுக்கும் தெரிவித்துள்ளேன்.

சமீப காலமாக நடைபெற்றுவரும் கோவில் திருட்டுகளையும், சிலை உடைப்புகளையும், நான் உன்னிப்பாகக் கவனித்தக் கொண்டுதான் வரு கிறேன். இதனை முற்றிலுமாகத் தடுத்து நிறுத்த, நிரந்தரமாக ஒரு சிறப்பு ஏற்பாட்டைச் செய்ய வேண்டியது, மிகவும் அவசியம் என்று கருது கிறேன். இந்தச் சிறப்பு ஏற்பாட்டினைக் குறித்து, விரைவில் ஆய்ந்து முடிவு செய்யப்படும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம சுப்பு அவர்களும், திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் பேசுகின்றபோது - அரசியல் காரணங் களுக்காக இந்தக் கோவில் திருட்டுச் சம்பவங்கள் திட்டமிட்ட செயல்களாக இருக்குமோ என்ற ஐயப் பாட்டினை இங்கே தெரிவித்தார்கள். இதுவும் அரசின் பரிசீலினையில் இருக்கிறது; நான் ஏற் கெனவே சொன்னதுபோல இத்தகைய கோவில் திருட்டுகள், சிலை உடைப்புகள், கோவில்களில் கொலை போன்ற குற்றங்களை முற்றிலுமாகத் தடுப்பதற்கு ஒரு நிரந்தர ஏற்பாட்டினை நான் இப்போது உருவாக்கிக் கொண்டு வருகிறேன். இதனைப்பற்றித் தீவிரமாக ஆராய்ந்து வருகிறேன். எனவே, அதைப்பற்றிய விவரங்களை என்னுடைய பதிலுரையில் தெரிவிக்கிறேன் என்பதை மட்டும் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

**- மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2.4.92 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையிலிருந்து.**






# புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் போக்குவரத்துக் கழகத் தொடக்க விழா

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக்கழகத்தொடக்கவிழா 31.3.'92 அன்று காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தில் வெகு சிறப் பாக நடைபெற்றது. புதிய போக்கு வரத்துக் கழகத்தை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழக அரசுத் தலைமைக் கொறடா திரு. கா.ப.பட்டாபிராமன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழா வில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் புதிய போக்குவரத்துக் கழகத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், ''பெரியார் மற்றும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகங்களிலிருந்து 639 பேருந்துகளைப் பிரித்து, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம் என்ற புதிய போக்குவரத்துக் கழகம், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர் களால் அமைக்கப்பட்டுள்ளது. இந்த 639 பேருந்துகள், 587 வழித்தடங் களில் இயக்கப்பட இருக்கின்றன. இந்தியாவிலேயே தமிழகத்தில் உள்ள போக்குவரத்துக் கழகங்கள் தான் சிறப்பாகச் செயல்படுகின்றன. காஞ்சிபுரத்திலிருந்து கன்னியா குமரிக்குப் பேருந்து ஒன்று விடப் படும். பெரிய கோயில்கள் உள்ள அனைத்து ஊர்களுக்கும் பேருந் துகள் விடப்படும்'' என்று கூறினார்.

எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகத்தின் முதல் பேருந்து காஞ்சி புரத்திலிருந்து திருத்தணிக்கு விடப் பட்டது. இப்பேருந்தை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இயக்கி வைத்தார். விழா வுக்கு, செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கே.ஞான தேசிகன், இ.ஆ.ப. அவர்கள் முன்னிலை வகித்தார். அரசு போக்குவரத்துத் துறைச் செயலர் திரு. ஆர்.சந்தானம், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். போக்கு வரத்துக் கழக மேலாண் இயக்குநர் திரு. ம.கா.சுப்ரமணியன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

விழாவில் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி னார்கள்.

விழா தொடங்குவதற்கு முன்பாக, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக இன்னிசைக் குழுவின் மெல்லிசை நடைபெற்றது.

—இரா.இராஜசேகரன்



# டாக்டர் அம்பேத்கர் வாழ்விலே

**- எஸ். பழனியப்பன்**

**ராம்**ஜி சக்பால் - பீமாபாய் தம்பதிகளுக்குப் பொருட்செல்வத்தில் பஞ்சம் இருந்ததோ இல்லையோ, மக்கட்செல்வத்தில் பஞ்சமில்லை. ஏற்கெனவே பதின்மூன்று பிள்ளைகளின் பெற்றோராக இருந்த அவர்கள், 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் பதினான்காம் தேதி, பதினான்காவதாக ஓர் ஆண்மகனைப் பெற்றெடுத்தார்கள். பஞ்சபாண்டவர்களில் இரண்டாவது சகோதரனான பீமன் பெயர் வைக்கப்பட்டது அக்குழந்தைக்கு.

அந்தக் குழந்தைதான் 'இந்திய அரசியல் சட்டத்தின் தந்தை' என்று பிற்காலத்தில் அவனி போற்ற வளர்ந்த டாக்டர் அம்பேத்கர் ஆவார்.

வேலையிலிருந்து ஓய்வு பெற்றதுமே தபோலி என்ற ஊருக்குக் குடும்பத்தோடு குடிபெயர்ந்தார் ராம்ஜி சக்பால். ஓய்வூதியத்தைக் கொண்டே அந்தப் பெரிய குடும்பத்தை நடத்துவது எளிதாக இல்லை. தன் வயதுக்கேற்றபடி ஏதேனும் ஒரு வேலை கிடைத்தால் செய்யலாம் என்று முடிவு செய்தார். தேடினார். கிடைத்தது.

சதாரா என்ற இடத்தில் இருந்த இராணுவக் குடியிருப்பில்தான் அவருக்கு ஒரு வேலை கிடைத்திருந்தது.

சிறுவனான அம்பேத்கருக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் மகாபாரதம், இராமாயணம் தொடர்பான கதைகளைச் சொல்லுவார் தந்தை; கபீர் தாசரின் பாடல்களைக் கனிவோடு கற்பிப்பார்.

தபோலியில் அவர்கள் குடும்பம் இருந்தது. ராம்ஜி சக்பாலோ சதாராவில் வேலை பார்த்து வந்தார். நாளடைவில் அவர் அங்கேயே தங்கும்படி ஆகிவிட்டது.

அம்பேத்கரும், அவர் சகோதரர் அனந்த்ராவும் எப்போதாவது தந்தையைப் பார்க்க சதாரா வந்து போவது வழக்கம். முன்கூட்டியே தாம் வருவது பற்றி அவர்கள் தந்தைக்குத் தகவல் தெரிவித்து விடுவார்கள். புகைவண்டி நிலைத்திற்கு வந்து காத்திருந்து பிள்ளைகளை அழைத்துப் போவார், அவர்.

அப்படியொரு நாள் கடிதம் எழுதிவிட்டு, அவர்கள் தபோலியை விட்டுக் கிளம்பினார்கள். அவர்களுடைய கடிதம் சக்பாலுக்குக் குறித்த நாளுக்கு முன்கூட்டியே கிடைத்திராததால், சதாரா புகைவண்டி நிலையத்தில் அவர் வந்து காத்திருக்கவில்லை.

ரயிலை விட்டு இறங்கிய அம்பேத்கரும் அவருடைய சகோதரரும், அங்கே தமது தந்தையைக் காணாததால், செய்வதறியாது கலங்கிப் போய் நின்றார்கள். விஷயமறிந்த ரயில்வே ஊழியர் ஒருவர், வாடகைக்கு ஒரு வண்டியை அமர்த்தி, அவர்களைக் கிராமத்திற்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தார்.

போகிற வழியில்தான் வண்டியோட்டிக்கு அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்தது. உடனே பதறிப் போய், வசைபாடியபடி வண்டியை விட்டுக் கீழே குதித்தான் வண்டியோட்டி, திடீரென்று அந்த வண்டியைக் குடைசாய்த்து அவர்களைக் கீழே உருட்டிவிட்டான்..

அவனுடைய சாதிவெறி, அந்தச் சிறுவர்களைக் கதிகலங்கச் செய்துவிட்டது. இருந்தாலும் பாதிவழிக்கு மேல் பயணம் போவதுதான் எப்படி? அவனுடைய கோபம் தீரும் வரை பொறுத்துக் கொண்டிருந்தார் ஆனந்தராவ். பிறகு மெலிதான குரலில், பேசியதைப்போல் இரண்டு பங்கு வண்டிக்கூலி தருவதாகச் சொல்லி, தம்மை அழைத்துப் போகும்படி கெஞ்சினார். பணம் அதிகமாகக் கிடைக்கிறது என்றதும், மனம் மாறி விட்டான் வண்டியோட்டி.

ஆனால், அவர்கள் இருவரையுமே தனது வண்டியை ஓட்டிப் போகும்படி சொல்லிவிட்டான். வண்டிக்குப் பின்னால் அவன் கடைசிவரை நடந்தே சென்றான்.

செல்லும் வழியில் தாகம் எடுத்தபோதெல்லாம் அவன் ஆங்காங்கே தண்ணீர் வாங்கிக் குடித்தான். நீண்டதூரப் பயணம் ஆகையால், ஆனந்தராவும், அம்பேத்கரும் தாகத்தால் தவித்தார்கள். அவர்கள் தாழ்த்தப்பட்ட சாதியினர் என்று கூறி, எவருமே தண்ணீர் கொடுக்க மறுத்துவிட்டார்கள். கடுமையான நாவறட்சியுடனேயே கடைசி வரை தாகத்தோடு ஊர்போய்ச் சேர்ந்தார்கள் அவர்கள்.



சதாராவில் இருந்த உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார் அம்பேத்கர். சதாரா பள்ளிக்கூடம்தான், அவருக்கு அறிவுச்சுடர் கொளுத்தும் ஆரம்பக் கூடமாக இருந்தது.

'சாதி மதங்களைப் பாரோம்' என்ற கொள்கையின் முதல் வித்து அங்கேதான் அவர் பண்பட்ட மனதில் அழுத்தமாக ஊன்றப்பட்டது. அனைவரும் சமம் என்ற உணர்வுக்கு அஸ்திவாரம் போடப்பட்ட இடமே அதுதான்.

அரும்புப் பருவத்தில், தொடக்கக் கல்வி பயின்ற காலத்திலேயே வகுப்பறையில் அவர் ஆசிரியராலும், மாணவர்களாலும் உதாசீனப் படுத்தப்பட்டதுண்டு. தீண்டத்தகாத வகுப்பைச் சேர்ந்தவர் என்று கூறி, வகுப்பறையில் அவரைத் தனியே ஒதுக்கி உட்கார வைத்திருந்தார்கள்; அதுவும் வெறுந்தரையில்!

வகுப்பறையில் இருந்த தண்ணீர் பானையில் அவர் தண்ணீர் குடிக்கக் கூடாது; யாராவது தூர நின்று ஊற்றுவார்கள்; இவர் கையேந்திக் குடிப்பார். மற்ற பிள்ளைகளோடு சேர்ந்தாற் போல் உட்கார்ந்து சாப்பிடக் கூடாது. சக மாணவர்களோடு சேர்ந்து விளையாடக் கூடாது என்றெல்லாம் கட்டுப்பாடு இருந்தது!

அதே நிலைமைதான் சதாரா உயர்நிலைப் பள்ளியிலும் தொடர்ந்தது. மனிதருக்கு மனிதர் இப்படி ஒரு பேதம் கொண்டிருப்பது தேவைதானா என்ற கேள்வி அம்பேத்கரின் பிஞ்சு நெஞ்சைப் பிசைந்தது. ஆசிரியர்கள் அவர் நோட்டுப் புத்தகத்தை வாங்கித் திருத்தக் கூட வெறுத்தார்கள் என்றால் அவர் மனநிலை எப்படியிருக்கும்?

கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்; உப்புக் கடலில் உயர்முத்தும் விளையும் என்பதுபோல, சாதி வெறி பிடித்தலைந்த உயர் வகுப்பாரிடையிலும் அத்தகைய மூர்க்க குணம் நீங்கிய சிலர் இருப்பதும் உண்டு. அப்படிப்பட்ட பிராமண ஆசிரியர் ஒருவர் அந்த உயர்நிலைப் பள்ளியில் இருந்தார். அவருடைய பெயர் அம்பேத்கர்.

நமது அம்பேத்கர், எவர் எப்படி நடத்திய போதிலும் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் படிப்பே குறியாக இருந்தார். அந்த வகுப்பிலேயே முதல் மாணவனாகவும் விளங்கினார்.



**அண்ணல் அம்பேத்கரின் 102-வது பிறந்த நாளையொட்டி, சென்னையிலுள்ள அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாலை அணிவித்தார் (14-4-1992).**

சதாரா பள்ளியில் அவர் சமஸ்கிருதம் படிக்க முடியாது என்ற தடை விதிக்கப்பட்டது. அது தெய்வ மொழி என்பதால் அப்படியாம்! இதனால் பாரசீக மொழி படிக்கலானார் அம்பேத்கர். ஆனால்; வெளியே தனியாசிரியர் மூலம் சமஸ்கிருதம் படிக்கவும் அவர் தவறவில்லை.

இதனால் எல்லாம் ஆசிரியர் அம்பேத்கர், அவர்மேல் மிகுந்த அன்பு காட்டலானார். பாறையில் ஈரம் கண்ட செடி போல அந்த அன்பு கண்டு இன்னும் ஊக்கத்தோடு படித்து வரலானார் நம் அம்பேத்கர்.

ஒருநாள் காலை நேரம். அடைமழை பெய்து கொண்டிருந்தது. எப்படியும் பள்ளிக்கூடம் போயே ஆக வேண்டும் என்ற உறுதியோடு புறப்பட்டார் அம்பேத்கர். அந்தத் தெருவிலிருந்த இரண்டொரு சிறுவர்கள் இந்த மழையில் எப்படிப் போவது என்று நின்று விட்டனர். அவர்களிடம் பந்தயம் கட்டிவிட்டு, அந்த அடைமழையிலும்கூட பள்ளிக்கூடம் வந்து சேர்ந்தார் அம்பேத்கர்.

தெப்பலாக நனைந்தபடி பள்ளிக்கூடம் வந்து சேர்ந்த அவரைப் பார்த்ததும் மனம் நொந்து போனார் ஆசிரியர் அம்பேத்கர். பரிவோடு சிறுவன் அம்பேத்கரை அழைத்துத் தனது துண்டால் துவட்டி விட்டார். மாற்றுத் துணி கொடுத்து உடுத்திக் கொள்ளச் செய்தார். இது மட்டுமல்ல; தனக்காக எடுத்துவைத்திருந்த சாப்பாட்டை அவருக்கும் தனக்குமாகப் பங்கிட்டுக் கொண்டு சாப்பிட்டார்.

அந்த ஒரு நாள் மட்டுமல்ல; பெரும்பாலான நாட்களில் சிறுவன் அம்பேத்கருக்கு அந்த ஆசிரியரே உணவைப் பரிந்தூட்டுவது தொடர்ந்தது.

ஆசிரியர் அம்பேத்கர் அத்துடன் நின்று விடவில்லை. பீமராவ் என்று இருந்த அவர் பெயரோடு தன் பெயரையும் இணைத்து 'பீமராவ் அம்பேத்கர்' என்றே மாற்றிவிட்டார். பள்ளிக்கூட வருகைப் பதிவேடு முதலிய ஆவணங்களிளெல்லாம் கூட அப்படியே பெயர் எழுதிப் பதிவு செய்தார்.

அன்றைய தினம் மாற்றம் செய்யப் பட்ட அம்பேத்கர் ஏன்ற அந்தப் பெயர் பிற்காலத்தில் இந்திய வர லாற்றில் இடம் பெறப்போகிறது என்பது அப்போதெல்லாம் அந்த ஆசிரியருக்குத் தெரிந்திருக்காது!

1907-இல் பம்பாயில் உள்ள எல்பின்ஸ்டன் மெட்ரிகுலேஷன் தேர்வில் மிக நல்ல மதிப்பெண்கள் பெற்று முதல் மாணவனாகத் தேர்ச் சியடைந்தார். அம்பேத்கர். அது வரை அந்தப் பகுதியில் அப்படி வேறெந்த வகுப்பு மாணவனுமே இப்படிப் படித்துத் தேறியதில்லை!

ஆகையால், அவருக்குப் பாராட்டு விழாவே கூட அங்கே நடத்தப் பட்டது.

பாராட்டு விழாவிற்கு எஸ்.கே.போலே தலைமை வகித் தார். கிருஷ்ணராவ், அர்ஜுன் கெலூஸ்கர் போன்ற சிறந்த கல்வி யாளர்களெல்லாம் அம்பேத்கரைப் பாராட்டிப் பேசினார்கள். விழா முடிவில் அம்பேத்கருக்குக் 'கௌதம புத்தரின் வாழ்க்கை வரலாறு' என்ற புத்தகத்தை அன்பளிப்பாக வழங்கி னார் கெலூஸ்கர்.

பிற்காலத்தில் அம்பேத்கர் புத்த மதத்தில் சேர, அந்த நூலே முதல் காரணம் என்றும் கூறுவதுண்டு.

பால்ய விவாகம் அப்போதெல் லாம் சர்வ சாதாரணமாக நாடெங் கும் நடந்து கொண்டிருந்தது. ஆகை யால், அம்பேத்கர் படித்துக் கொண் டிருக்கும்போதே அதாவது 14 வயதிலேயே அவருக்குத் திருமணம் செய்து வைக்க முடிவு செய்யப் பட்டது.

பிக்குவலாங்கர் என்பவரின் ஒன்பது வயது மகள், ராமி என்கிற ரமாபாய் என்ற சிறுமியையே அவர் மணந்தார்.

தீண்டத்தகாத குலத்தைச் சேர்ந்த வர்கள் என்பதால், பம்பாயில் எந்தத் திருமண மண்டபத்திலும் அவர்கள் திருமணம் அனுமதிக்கப் படவில்லை. அதனால், பைகுல் மார்க்கெட்டில் இருந்த ஒரு தகரக் கொட்டகையில் - அதுவும், இரவு நேரத்திலேயே அந்தத் திருமணம் நடந்தது.

திருமணம் ஆகிவிட்டதால் அம்பேத் கரின் படிப்புத் தடைப்பட்டதா என் றால், அதுதான் இல்லை. எப்போ தும்போல் ஊக்கத்துடன் படித்து வந்தார், அவர்.

சில காலத்திற்குப் பிறகு - அரசி யலில் ஈடுபட்டு தான் ஒரு மேல் சபை உறுப்பினர் ஆகிவிட்டபோதி லும் - மேல்சாதியினர் எனப்படு வோருக்கு மனிதத் தன்மை உண் டாக்குவதில் அவருக்கு ஏற்பட்டிருந்த போர்க்குணம் அப்படியே இருந்தது.

'மகாடு' குடிநீர்க் குளத்தில் அரிசனங்கள் தண்ணீர் எடுப்பது பற்றி அறிவிப்பொன்று வெளியிட் டார் அம்பேத்கர். மகாடில் மா பெரும் பொதுக்கூட்டம் ஒன்றும் அவருடைய ஆலோசனையின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்டது. 1927-ஆம் ஆண்டு மார்ச் 20-ஆம் தேதி நடை பெற்ற அக்கூட்டத்திற்கு மகாராஷ் டிரம், குஜராத் மாநிலங்களைச் சேர்ந்த அரிசன மக்களெல்லாம் மாபெரும் எதிர்பார்ப்புடன் ஒன்று திரண்டு வந்திருந்தார்கள்.

அப்படி வந்தவர்களுக்கும் அங்கே குடிக்கத் தண்ணீர் கிடைக்கவிலை; விலை கொடுத்தே தண்ணீர் வாங் கிச் சாப்பிடும் நிலைமையிருந்தது.

அம்பேத்கர் தலைமையில் நடை பெற்ற கூட்ட முடிவில், மகாடில் இருந்த சௌடார் குளத்தில் எல் லோருமாக இறங்கித் தண்ணீர் எடுப் பதாக முடிவாயிற்று.

மாபெரும் மக்கள் கூட்டத்தோடு அம்பேத்கர் அங்கு சென்றார். வாழ்த்து முழக்கம் பூமியை அதிரச் செய்ய, அவரே முதன் முதலாக அக்குளத்தில் இறங்கினார். முழங்

சுயமரியாதை இயக்கத் தலைவர் பட்டிவீரன்பட்டி டபிள்யூ பி.ஏ. சவுந்திர பாண்டியனார் திருவுருவச் சிலையினை, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னையில் திறந்து வைத்தார் (14-4-1992).




கால் அளவு ஆழத்தில் நின்று தண் ணீரை அள்ளிக் குடித்தார். அதன் பிறகு, மகிழ்வுடன் அரிசன மக்க ளெல்லாம் அக்குளத்தில் இறங்கித் தண்ணீர் எடுக்கலாயினர்.

ஒரு சமயம் அம்பேத்கரின் மனைவி உடல்நலம் குன்றியது. பந்தார்பூரில் உள்ள கோயிலுக்குப் போய் சாமி கும்பிட ஆசைப்பட் டார் அந்தப் பெண்மணி.

அம்பேத்கரோ அன்பு மனை யாளை அந்தக் கோவிலுக்கு அழைத் துச் சென்றார். தீண்டத்தகாத இனத் தார் என்பதால், அங்கே அவர்கள் உள்ளேபோய் தெய்வத்தைத் தரி சிக்க அனுமதி மறுக்கப்பட்டது. அம்பேத்கர் எவ்வளவோ வாதாடிப் பார்த்தார், பயனில்லை.

அந்த அம்மையார் வெளியே நின்றே கடவுள் வணக்கம் செலுத் தினார்; கலங்கிய கண்களோடு தன் கணவனைப் பார்த்தார்.

மனைவியின் கண்களைத் துடைத்து விட்ட அம்பேத்கர் - 'கவலைப் படாதே கூடிய சீக்கிரம் நானே இந்த பந்தார்பூர் கோயில் போல ஒரு கோயிலைக் கட்டுகிறேன். அங்கே நீ கடவுள் சன்னிதானத்திலேயே சுதந்திரமாகப் போய் மனமார சாமி கும்பிட்டுக் கொள்ளலாம், வா' என்று சமாதானப்படுத்தினார்.

ஆனால், அவரது அன்பு மனை யாள் திருமதி ரமாபாய் அதுவரை காத்திருக்கவில்லை. 1935-ஆம் ஆண்டு மே மாதம் 27-ஆம் நாளன்று இறந்து போய்விட்டார். இந்துமத முறைப்படியே அன்னாரின் இறுதிச் சடங்குகள் நடத்தப்பட்டன.

'அறிவு பெறப் படியுங்கள்; அமைப்புரீதியில் ஒன்று படுங்கள்; உரிமைக்குப் போராட ஒருபோதும் அஞ்சாதீர்கள். (Educate....... Organise ...... and Agitate......)'

'நான் எப்போதும் உங்களோடி ருக்கிறேன்; அதேபோலவே நீங்கள் எப்போதும் என்னோடிருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. (I shall always be with you; as I know, You will be with me)...'

- இப்படிப்பட்ட சொற்றொ டர்கள், அண்ணல் அம்பேத்கரின் சொற்பொழிவுகளில் அடிக்கடி இடம் பெறுபவைகளாக இருந்தன.



ஒவ்வொருவரும் தத்தம் வாழ்நாள் முழுவதும் மாணவன் போலவே கற்க வேண்டும். தனக் கென்று ஒரு நூல் நிலையம் வைத்திருக்க வேண் டும். தன்னைச் சுற்றிலும் உள்ள வறியவர்களுக்கு உதவ வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் பண்பாடுள்ள குடி மகனாக இருக்க வேண்டும். மனிதனைப் பகுத்தறிவு உள்ளவனாக மாற்றுவது எப்படி என்பதுதான் சமுதாயத்தின் முக்கிய சிந்தனையாக இருக்க வேண்டும்.

— அம்பேத்கர்

பம்பாய் தொகுதியில் நின்று பெரு வெற்றிபெற்று, பாராளுமன் றத்திற்குள் வந்து உட்கார்ந்தார் அம்பேத்கர்.

சட்ட நுணுக்கங்களால் பெரும் புகழ் பெற்றிருந்த டாக்டர் அம்பேத் கரைச் சட்ட அமைச்சராக்கலாமா என்ற கருத்து மகாத்மா காந்தி அடிகளோடு கலந்து பேசப்பட்டது. பெரிய மனதுடன் அவர் சம்மதம் தெரிவித்தார். அதன்பின் - சர்தார் வல்லபாய் படேல், எஸ்.கே. பட்டீல் இருவராலும் இந்த விஷயம் டாக்டர் அம்பேத்கருக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு காந்தி யார்மீதும் காங்கிரஸ் கட்சி மீதும் இருந்த வெறுப்புணர்ச்சி அவருடைய மனதை விட்டு விலகியது. அமைச்சர் பொறுப்பேற்க ஒப்புதல் அளித்தார்.

சட்டமேதை அம்பேத்கர், 1947-ஆம் ஆண்டு ஜூலையில் சட்ட அமைச்சராக்கப்பட்டார்.

அப்போது இந்துமகா சபைத் தலைவராக இருந்த டாக்டர் ஷியாம் பிரகாஷ் முகர்ஜியும் அமைச்சர் ஆனார்.

ஆகஸ்ட் மாதம் 15-ஆம் தேதி நள்ளிரவில், நம் இந்திய நாட்டின் அடிமை இருள் விலகியது; சுதந்திரச் சுடர் ஏற்றி வைக்கப்பட்டு ஒளி வீசியது. 29-ஆம் தேதி கூடிய அரசியல் நிர்ணய சபையில் அரசி யல் சட்ட முன்வரைவுக் குழுவொன்று அமைக்கப்பட்டது.

அந்தக் குழுவின் தலைவராக டாக்டர் அம்பேத்கர் நியமிக்கப்பட் டார்.

சர். அல்லாடி கிருஷ்ணசாமி, சர். பி.என். ராவ், சர். கோபாலசாமி ஐயங்கார், டாக்டர் கே.எம். முன்ஷி, பி.எல். மிட்டர், டி.பி. கெய்தான் ஆகியோர் அக்குழுவில் அங்கம் வகித்தார்கள்.

பிறகு - மிட்டர் மறைவுக்குப் பின் அவர் இடத்தில் மாதவராவும் கெய்தான் மறைவுக்குப் பின்பு அவர் இடத்தில் டி.டி. கிருஷ்ணமாச்சாரி யும் நியமிக்கப்பட்டார்கள்.

1949-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ஆம் நாளன்று பார்லி மெண்டில் விவாதிக்கப்பட்டு இந்திய அரசியல் சட்டம் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

'இந்திய அரசியல் சட்டம் இணை யற்ற வகையில் உருவாக்கப்பட டாக்டர் அம்பேத்கர் மேற்கொண்ட முழுமுயற்சியே காரணம். உலக நாடுகளிலெல்லாம் உள்ள அரசியல் சட்டங்கள் இதற்கு எந்த வகையிலும் ஒப்பாக முடியாது. நீக்குப் போக் கற்ற நிலையில் அது அமைந்திருக் கிறது...' என்றெல்லாம் பார்லி மெண்டிலேயே பாராட்டிப் பேசினார் டி.டி. கிருஷ்ணமாச்சாரியார்.

## எழுத்தாளர் அம்பேத்கர்

அம்பேத்கர் 1915-இல் 'பழங் கால இந்திய வர்த்தகம்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதி எம்.ஏ., பட்டம் பெற்றார்.

1916-ஆம் ஆண்டு மே மாதத்தில் மனித தத்துவம் பற்றி நடைபெற்ற ஒரு கருத்தரங்கில், 'இந்தியாவில் சாதிகள், அவற்றின் செயல்முறை, தொடக்கம் மற்றும் வளர்ச்சி' என்பவை பற்றி விளக்கமான ஒரு கட்டுரையை அளித்தார்.

1916-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெறுவதற்கு, 'இந்தியாவில் தேசிய லாபப் பங்கீடு' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையை வரைந்தார். அதனையே விரிவுபடுத்தி, 'இந்தியாவின் சாம்ராஜ்ய, மாகாண பொருளாதார பரிணாமம்' என்ற தலைப்பில் வெளியிட்டார்.

1921-இல் ஜூன் மாதத்தில், பிரிட்டிஷ் இந்தியாவில் மத்திய நிதியை மாகாணங்களுக்குப் பகிர்ந்தளித்தல்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்து எம்.எஸ்ஸி., பட்டம் பெற்றார்.

1922-ஆம் ஆண்டு அக்டோபரில் இலண்டன் பல்கலைக் கழகத்தில் 'ரூபாயின் பிரச்சினை' என்ற கட்டுரையை வழங்கினார். அதற்காக 'டாக்டர் ஆஃப் சயின்ஸ்' என்ற பட்டத்தைப் பெற்றார். அந்தக் கட்டுரை 1923-ஆம் ஆண்டு டிசம்பரில் இலண்டனில் உள்ள 'கிங் அண்டு சன்' பதிப்பகத்தாரால் நூலாக வெளியிடப் பெற்றது.

3.4.1927-இல் 'பகிஷ்கிரிட் பாரத்' என்ற மாதமிருமுறை இதழை மராத்தியில் வெளியிட்டார்.

'புத்தரும் அவருடைய தர்மமும்' என்ற நூலை எழுதினார். அதில் புத்தமதச் சாரத்தை விளக்கமாக வரைந்துள்ளார்.

'சாதிகள் ஒழிப்பு' என்ற தம் நூலில் அவர் சமூகம் பகுத்தறிவின் அடிப்படையில்தான் அமைய வேண்டுமே தவிர, சாதி அடிப்படையின் பரம்பரை வழக்கத்தை அனுசரித்து அமைதல் கூடாது என்பதை விளக்கி இருக்கிறார்.

1920-இல் 'மூக் நாயக்' என்ற கிழமை இதழ் தொடங்கினார். 'மூக் நாயக்' என்ற சொல்லுக்கு 'ஊமையர் தலைவன்' என்று பொருள். தாழ்த்தப்பட்டோரின் உரிமைக் குரலாக அவ்விதழ் வெளிவந்தது.

அம்பேத்கரின் நூல்கள் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளை நன்கு அலசின. அவருடைய நூல்களில் உண்மைகள் ஆதாரங்களோடு விளக்கப்பட்டன. அவரது நடையில் எளிமையும் தெளிவும் இணைந்திருந்தன. தம் கருத்தைக் கற்போர் நெஞ்சில் அழுத்தமாகப் பதியும் வண்ணம் எழுதும் ஆற்றல் அவருக்கிருந்தது. தம்முடைய எழுத்தாற்றலைக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டு எழுதாமல், சமுதாய சீர்திருத்தத்துக்காகவும், அரசியல் பொருளாதார விளக்கத்துக்காகவும், மக்களை எழுச்சி அடையச் செய்வதற்காகவுமே அவர் எழுதினார்.

ஒதுக்கப்பட்ட இந்தியா, மக்கள், சமத்துவம் என்ற பெயர் கொண்ட பத்திரிகைகளையும் அவர் நடத்தினார்.

**- திரு. பூவை அமுதன் எழுதிய 'அரும்பெருந் தலைவர் அம்பேத்கர்' என்னும் நூலிலிருந்து.**

இப்போதும்கூட, அந்த அரசியல் சட்டத்தை, காலத்தை வென்றதாக நாம் கருதலாம்.

1948 ஏப்ரல் மாதத்தில்தான் டாக்டர் சபீதா கபீர் - அம்பேத்கர் திருமணம் நடைபெற்றது. அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்புதான் டாக்டர் அம்பேத்கரின் 56-வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

1951-ஆம் ஆண்டு செப்டம்பர் 27-ஆம் நாளன்று, தமது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்து விட்டார் டாக்டர் அம்பேத்கர். தாழ்த்தப்பட்டோருக்கு அரசு உதவியாக இல்லை என்ற குறை அவருக்கு இருந்ததும் அந்த விலகலுக்கோர் காரணம். பிறகு வெறும் நாடாளுமன்ற உறுப்பினராக மட்டுமே அவர் நீடித்தார்.

1951-ஆம் ஆண்டே 'பாரதீய புத்த ஜனசங்கம்' என்றோர் அமைப்பை உருவாக்கியிருந்தார் அம்பேத்கர்.

1956-ஆம் ஆண்டு அக்டோபர் 14-ஆம் நாளன்று, நாகபுரியில் மிகப் பெரிய அளவில் பௌத்தர்கள் மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த நாளை நேபாள அரசு விடுமுறை நாளாகக் கடைப்பிடித்தது.

டாக்டர் அம்பேத்கர், தனது மனைவியோடு அங்கு வந்து சேர்ந்தார். வெள்ளைக் கோட்டுப் பட்டு வேட்டியுமாக வந்த அவர், புத்த பிக்குகளால் இன்முகத்தோடு வரவேற்கப்பட்டார். அவர்களோடு ஆண்களும், பெண்களும் குழந்தைகளுமாகப் பலபேர் வந்திருந்தார்கள்.

முதன்மை புத்தபிக்கான சந்திரமணியும், மற்றும் நால்வரும் அதற்கான சடங்குகளை நடத்தினார்கள். அவர்கள் முன்னால், அண்ணல் அம்பேத்கரும் அவரது துணைவியாரும் வணங்கி நின்றனர். சந்திரமணி கூறும் புத்தமத உறுதிமொழிகளைத் திரும்பச் சொல்லுமாறு அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

'கொலைத் தொழில் புரிவதில்லை; பொய் பேசுவதில்லை; திருடுவதில்லை; பாலுறவில் திளைப்பதில்லை; குடிப்பதில்லை...' என்று தொடங்கி 22, உறுதிமொழிகளை எடுத்துக் கொண்டு தலை வணங்கினார்கள் அவர்கள். 'இந்து மதத்திலிருந்து விலகி டாக்டர் அம்பேத்கர் புத்தமதத்தில் சேர்ந்து விட்டார்' என்று அந்த மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

ஒரு முக்கிய விஷயமாய் பம்பாய்க்குப் போகவேண்டியிருந்தது. 1956 டிசம்பர் 14-ஆம் தேதி டில்லியிலிருந்து புறப்படத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால், அதற்கு முன்பாகவே அவரது இறுதிப் பயணம் இருக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

டிசம்பர் ஆறாம் தேதியன்று அதிகாலை நேரம். பறவைகள் சோககீதம் இசைத்தன. டாக்டர் அம்பேத்கரின் துணைவியார், கண்ணைக் கசக்கியபடி எழுந்தார். 7 மணிக்குக் கணவனை எழுப்பினார். அவர் உடலில் எந்தவித அசைவும் இல்லாதிருப்பது கண்டு திடுக்கிட்டார்.

ஆம்; அந்தச் சட்ட மேதையின் 66 வயது உடல் மட்டுமே படுக்கையில் கிடந்தது. உயிர் உடலைவிட்டுப் பிரிந்திருந்தது; உறக்கத்திலேயே அவருக்கு மரணம் சம்பவித்திருந்தது!



## பெரியார் மாவட்டம்
# குடிநீர்த் திட்டப் பணிகள்



கொங்கு மண்டலத்தின் ஒரு பகுதியான பெரியார் மாவட்டம் செழிப்பின் பிறப்பிடமாகவும், வளத்தின் தோற்றமாகவும், இருந்த நிலை மாறி, இம்மாவட்டத்தில் நிலத்தடி நீர்வளம் தற்போது குறைய ஆரம்பித்து பெரும்பாலான கிராமங்களில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. இப்பிரச்சினைகளைத் தீர்க்க மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும் முனைப்புடன் செயல்படுகின்றன.

க்டந்த ஒரு மாதமாக, பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ரா.கண்ணன் அவர்கள் மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் சுற்றுப்பயணம் செய்து, குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்கவும், ஆழ்குழாய்க் கிணறு இல்லாத இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும், உத்தரவிட்டு தற்போது அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரே நாளில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களைச் சுற்றிப்பார்த்து, கிராம மக்களின் தாகம் தீர்க்க அரும் பணியை மேற்கொண்டார்.

நடப்பாண்டில் (1992-93) மட்டும் ரூ.27.53 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப் படவுள்ளன. காங்கேயம், அம்மாப்பேட்டை, சென்னிமலை, மொடக்குறிச்சி, நம்பியூர், சத்தி, கோபி, ஈரோடு, பவானி, பெருந்துறை ஆகிய பகுதிகள் இத்திட்டத்தினால் பயன் அடைவதோடு, இப்பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினை இத்திட்டத்தின் மூலம் தீர்வு காணப் படவுள்ளது.

விவசாயிகள் முன்பு கால்நடைகள் வளர்ப்பில் அதிக ஆர்வம் காட்டிய பகுதியான காங்கேயம், வெள்ளக் கோயில், தாராபுரம் பகுதிகளில் இன்று குடிநீர் கூட மக்களுக்குப் பிரச்சினையாக இருப்பதை அறிந்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 22.1.92 அன்று காங்கேயம் வருகையின்போது ரூ.20.43 கோடி செலவில் இப்பகுதிக்கான குடிநீர்த் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, இப்பகுதி மக்களின் இதயங்களைக் குளிர வைத்தார்.

இத்திட்டத்தை விரைவில் நிறைவேற்ற ஒரு கோட்டப் பொறியாளர் அலுவலகத்தைக் காங்கேயத்தில் அமைக்கவுள்ளதாக அண்மையில் பெரியார் மாவட்டத்திற்கு வருகை புரிந்து கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் பணிகளைப் பார்வையிட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நிர்வாக இயக்குநர் திரு. வி.கே.சுப்புராஜ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் மட்டும் இம்மாவட்டத்தில் உள்ள சில ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.2.80 கோடி செலவில் 276 கைப்பம்புகளும், 53 விசைப்பம்புகளும் போடப்பட்டுள்ளன. இதனால் பெரியார் மாவட்டத்தில் பல்வேறு கிராமங்கள் குடிதண்ணீர்ப் பிரச்சினையில் இருந்து விடுதலை பெற்றன.

குடிதண்ணீர் விரிவாக்கத் திட்டத்தின் கீழ், ஈரோடு நகரில் ஒரு நாளைக்கு ரூ.85 இலட்சம் லிட்டர் குடிதண்ணீர் நகர மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வந்தது. ஆனால், அந்நிலை மாறி தற்போது ஒரு நாளைக்கு 165-180 இலட்சம் லிட்டர் விநியோகம் செய்யப் படுகிறது.

அரசு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் இடங்களின் அருகாமையில் தனியார் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து மின்விசைப் பம்புகள் மூலம் தண்ணீர் எடுப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் எச்சரித்துள்ளார்.

இம்மாவட்டத்தில் கோடைக் கால வறட்சியைப் போக்கிடும் விதத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்பு மட்டும் இம்மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய ரூ.1 இலட்சமும், புதிதாக 75 இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்திட அரசு அனுமதி அளித்துள்ளன. இதற்கான தொடக்கப் பணிகள் செயல்படத் தொடங்கி விட்டதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். ●

# தமிழ்நாட்டின்

# போக்குவரத்துக் கழகங்களுக்கு

# ஏழு தேசிய விருதுகள்

சாலைப் போக்குவரத்தில் மிகச் சிறந்த உற்பத்தித் திறன், உற்பத்திச் செயல் திறன், கிராமப்புறப் போக்குவரத்துச் சேவை, எரிபொருள் சிக்கனம் ஆகியவற்றிற்காக அகில இந்திய அளவில் வழங்கப்படும் விருதுகளில் இதுவரை எந்த மாநிலமும் புரியாத மாபெரும் சாதனையைத் தமிழக போக்குவரத்துக் கழகங்களான அன்னை சத்யா, சோழன், பட்டுக்கோட்டை அழகிரி, இராணி மங்கம்மாள் ஆகிய போக்குவரத்துக் கழகங்கள் ஏழு விருதுகளைப் பெற்று முதன்மை இடம் பெற்றுள்ளன.

2.4.'92 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், போக்குவரத்துக் கழகங்கள் பெற்ற தேசிய விருதுகளைப் பார்வையிட்டு, இந்தச் சாதனைக்கான மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்களையும், போக்குவரத்துக் கழகங்களின் மேலாண்மை இயக்குநர்களையும் பாராட்டி, இனி வருங்காலங்களில் தொடர்ந்து மக்கட் பணிகளில் ஈடுபட்டு இதுபோன்று மென்மேலும் சிறப்புகளைப் பெற வேண்டுமென்று வாழ்த்தினார்.

### தேசிய உற்பத்தித் திறன் குழுவின் விருதுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | தேசிய உற்பத்தித் திறன் குழுவின் விருது | கிராமப்புறப் பயணிகள் சேவையில் சாலைப் போக்குவரத்துத் துறையில் இந்தியாவிலேயே மிகச் சிறந்த | பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் |

## சென்னை நேரு ஸ்டேடியம் ரூ.30 கோடி செலவில் புதுப்பிக்கப்படுகிறது

பத்தாவது ஜவகர்லால் நேரு தங்கக்கோப்பை சர்வதேசக் கால்பந்துப் போட்டியை, சென்னை நேரு ஸ்டேடியத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக நேரு விளையாட்டு அரங்கத்தைப் பன்னாட்டுத்தரம் உள்ளதாக மேம்படுத்தும் நோக்கத்தோடு புதுப்பிக்கவும், புதுமையாக்கவும் திட்டமிடப்பட்டு, இதற்காகும் உத்தேசச் செலவு சுமார் 30 கோடி ரூபாய் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கு 5 கோடி ரூபாய் வழங்குமாறு மத்திய அரசை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கேட்டுள்ளார்.

நேரு அரங்கத்தைப் புதுப்பிக்க மத்திய அரசு உடனடியாக ரூ.2 கோடி வழங்கியுள்ளது. மாநில அரசு ரூ. 5 கோடி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை வள்ளல்கள் மற்றும் விளையாட்டை விரும்பும் மேன்மக்கள் ஆகியோரிடமிருந்து நன்கொடையாகப் பெறப்படும்.

நேரு விளையாட்டு அரங்கைப் புதுப்பிக்கவும், புதுமையாக்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த பன்னாட்டுக் கால்பந்துப் போட்டி 1993-ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெறும்.

—இந்தத் தகவலை மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் சட்டப் பேரவையில் தெரிவித்தார் (1.4.'92).



| | | | |
|---|---|---|---|
| | | உற்பத்திச் செயல் திறனுக்காக முதல் இடம் | |
| | | " இரண்டாம் இடம் | இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் |

### மாநில சாலைப் போக்குவரத்து நிறுவனங்களின் பேரவையின் விருதுகள்

| | | | |
|---|---|---|---|
| 3. | மாநில சாலைப் போக்குவரத்து நிறுவனங்களின் பேரவையின் விருது | ஒரு லிட்டர் டீசலுக்கு மிக அதிக தூரம் செலுத்திய நகரப் பேருந்துகளுக்கான விருது முதல் இடம் | சோழன் போக்குவரத்துக் கழகம் |
| 4. | " " | பேருந்துகளின் செயல்திறனில் அதிகபட்ச முன்னேற்றம் - முதல் இடம் | பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் |
| 5. | " " | பேருந்துகளின் உற்பத்தித் திறனில் அதிகபட்ச செயல்திறன் - முதல் இடம் | பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் |

### எரிபொருள் சேமிப்பு ஆராய்ச்சிப் பேரவையின் விருதுகள்

| | | | |
|---|---|---|---|
| 6. | எரிபொருள் சேமிப்பு ஆராய்ச்சிப் பேரவையின் விருது | ஒரு லிட்டர் டீசலில் அதிக தூரம் செலுத்தியதில் அதிகபட்ச முன்னேற்றம் - முதல் இடம் | பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் |
| 7. | " " | " இரண்டாம் இடம் | அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம் |



★ எவ்வகையான துன்பங்களையும் கண்டு கொதித்தெழுவோரே மனிதாபிமானம் கொண்ட மக்களாவர். யார் துன்பப்படுகிறார்கள் என்பதைக் கவனியாமல், மனச்சாட்சி கொண்ட ஒவ்வொருவரும் அத்துன்பப்படுவோருக்குத் துணை நின்று அவரை விடுவிக்க வேண்டும்.

★ பொருள் ஆதாயத்தைவிட சுயமரியாதை மிக முக்கியமானதாகும். நம்முடைய போராட்டம் கௌரவத்திற்கும், சுயமரியாதைக்குமான போராட்டம்; பொருளாதார முன்னேற்றத்திற்கு மட்டுமான போராட்டம் அல்ல.

# நூல் நயம்

### மழலை இலக்கியத்தின் மறுமலர்ச்சிக் கவிஞர்

**ஆசிரியர்: பின்னலூர் மு. விவேகானந்தன்**

**வெளியீடு:**

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
பார்க்டவுன்,
சென்னை-3.

பக்கம்:120 விலை:ரூ.28/-

எளிமையும் இனிமையும் தமிழ் என நிகண்டு விளக்குகிறது. இந்த இரண்டு இயல்புகளும் இயல்பிலே அமையப் பெற்றவர் கவிஞர் பி.வி.கிரி. படைப் பாளன் இயல்புகள் படைப்புகளிலே ஊடுருவி நிற்பது வாழ்க்கை. அந்த வகையில், கவிஞர் கிரியின் குழந்தைப் பாடல்களில் எளிமையும் இனிமையும் நிறைந்து நிற்கின்றன என்பது வாசக அனுபவம். அத்தகைய கவிஞரின் அருமையான படைப்புகளை அவர் வாழுங்காலத்திலே ஆய்வு செய்வதும், அதை அரிய நூலாக வடிப்பதும் போற்றத்தக்கவை.

'மழலை இலக்கியத்தின் மறுமலர்ச்சிக் கவிஞர்' என்னும் அழகிய, தலைப்பில் பின்னலூர் மு.விவேகானந்தன் எழுதியுள்ள' இந்நூல், ஏழு தலைப்புகளில் கவிஞர் பி.வி.கிரியின் பல துறைப் பணிகளையும் பரக்கப் பேசுகிறது. கவிஞர், எழுத்தாளர், குழந்தை எழுத்தாளர், இதழியலாளர், நாடக ஆசிரியர் என்ற வகைகளில் பி.வி.கிரி பெற்றுள்ள இடத்தை இந்நூலில் உறுதிப்படுத்துகிறது. நீரோட்டமான நடையில் நிகழ்காலத்தை வரலாறாக்கும் தொடர்பணியில் ஈடுபட்டுள்ள நூலாசிரியர் விவேகானந்தனுக்கு இது இன்னொரு வெற்றிப்படி.

சி.எல்.எஸ்.நிறுவனத்தின் வெளியீடாக மலர்ந்துள்ள இந்நூலின் அச்சும், வடிவமும் மெச்சும்படி உள்ளன.

இலக்கிய வரலாற்றில் இதுபோன்ற முயற்சி ஒரு மைல்கல்.

—இளந்தேவன்.

### முதுமையிலும் இன்பம்

**ஆசிரியர்: வ.செ.நடராசன்**
**(மூப்பியல் மருத்துவ நிபுணர்)**

**வெளியீடு:**

சக்தி பதிப்பகம்
17, 17-வது தெரு, Q பிளாக்,
அண்ணாநகர், சென்னை-600 040.

பக்கம்:200 விலை:ரூ.18/-

முதுமை என்பது தவிர்க்க முடியாதது. இளமை என்பது கடந்து செல்வது. இளமையில் தெம்பிருக்கும்; முதுமையில் சோர்வு அடுக்கும். நோய்கள் பற்றும்; நலவாழ்வு குன்றும்; இது இயல்பு. முயன்றால் முதுமையை வெற்றி கொள்ள முடியும். முதுமையை வெல்வது எப்படி? முதுமையிலும் இளமை உணர்வுடன் திகழ்வது எவ்வாறு? இவற்றிற்குரிய விளக்கத்தை இந்நூல் வழங்குகிறது.

நூலாசிரியர், மூப்பியல் மருத்துவத் துறையில் பணியாற்றித் தான் பெற்றிருக்கும் அனுபவத்தை இந்நூலின் வாயிலாக, படிப்போருக்குப் பரிமாறியிருக்கிறார். முதுமையில் ஏற்படுகிற நோய்களையும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்குரிய வழிமுறைகளையும் எடுத்துக் கூறியிருக்கிறார். மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என்னும் முதுமொழியை நாமறிவோம். மூத்தோர்க்குச் சொல்லும் வார்த்தையும் அமிர்தம் என்னும் புதுமொழியை இந்நூல் உணர்த்துகிறது. இந்நூலில் சொல்லப்பட்டுள்ளபடி, முதியவர்கள் தமது அன்றாட நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டால் முதுமையை எளிதில் வெல்லலாம். இது சிறந்தொரு வழிகாட்டி நூலாகத் திகழ்கிறது. எளிய நடை-உயர்ந்த பதிப்பு-தரமான தாள் + விளக்கப் படங்கள் - ஆகியவை இந்நூலின் சிறப்பம்சங்கள்.

—தமிழ்ப்பித்தன்

### மரபில் பூத்த மலர்கள்

**ஆசிரியர்:**
முனைவர்-நெல்லை. ந. சொக்கலிங்கம்

**வெளியிட்டோர்:**

பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
சென்னை-600 004.

பக்கம்:112 விலை:ரூ.14/-

சங்க இலக்கியத்திலிருந்து இந்தக் காலப் புதுக்கவிதை வரை பழந்தமிழ் மரபு எங்கெல்லாம் எவ்வாறெல்லாம் ஆழமாகக் காலூன்றியிருக்கிறது என்கிற பாங்கு இனிய - எளிய தமிழில் ஆய்வு் செய்யப்பட்டுள்ள கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது; இதிலுள்ள எட்டுக் கட்டுரைகளும் வெட்டிவைத்த செங்கரும்புத் துண்டுகளாக இனிப்பவை; மெய்ப்பாடுகள் எட்டின் எடுத்துக்காட்டாய்த் திகழ்பவை.

திருக்குறள், புறநானூறு, இராமாயணம், நந்திக் கலம்பகம், அங்கதப் பாடல்கள் ஆகியவற்றிலிருந்து - புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் குறுங்காவியங்கள் உட்பட இந்நூலில் ஆய்வு செய்யப்பட்டிருப்பதே நூலாசிரியரின் தமிழ்ப் புலமை, இலக்கியத்திறன் ஆகியவற்றை நமக்குணர்த்துகிறது.

தமிழிலக்கிய ஆர்வலர்களால் இந்த நூல் பெரிதும் வரவேற்றுப் பாராட்டப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

- 'சோழராஜா'

### நெற்றியில் ஓர் எரிமலை.

**ஆசிரியர்: கவிஞர் பல்லவன்**

**வெளியீடு:**

குமணன் பதிப்பகம்,
29, திருவள்ளுவர் நகர்,
திருக்கழுக்குன்றம்-603109

பக்கம்:114 விலை:ரூ.15/-

எழுச்சியூட்டும் உணர்ச்சிக் கவிதைகளின் உருவாக்கமே இக்கவிதைத் தொகுப்பு. முதல் கவிதையே (உயர் தமிழே, உயிர் தமிழே!) நூலுக்கு முத்தாய்ப்பாக விளங்குகிறது. நூலில் தென்றலும் வீசுகிறது., புயலும் வீசுகிறது.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, 'சரித்திர நூலில் வாழ்வேன்!' என்னும் ஒரு பாடலே போதும் இத்தொகுப்புக்கு. தமிழ் மணம் கமழும் இந்நூலில் சமுதாயக் களைகளைக் களைந்திடவும் வழி வகுக்கிறார் கவிஞர்.

கவிதை என்பது என்ன?

'கவிதை என்பது எழுத்தல்ல-அது க்கரைந்து போகும் மெழுகல்ல. கவிதை குருதிப் புனலாகும்-இருட்காட்டை அழிக்கும் அனலாகும்!' என்கிறார் கவிஞர். அருமையான கவிதை மாலை. அனைவரும் சூட்டிக் கொள்ளலாம்.

—மறைமலை.

### இராமாயணரத்தினங்கள்

**ஆசிரியர்: தங்கவயல் லோகிதாசன்**

**வெளியீடு:**

ஓரி நிலையம்
3/37, சத்தியமூர்த்தி நகர்
நந்தனம், சென்னை-600 035

விலை: ரூ.30 பக்கம்: 278

புராண இதிகாசங்கள் நம் பண்டைய செல்வங்கள். காலத்தால் அழிக்க முடியாத கருப்பொருள்கள். இராமாயணம் அவற்றுள் ஒன்று. அதை எளிய இனிய நடையில் தனக்கே உரிய பாணியில் எழுதியுள்ளார் ஆசிரியர். 109 தலைப்புகளில், இரத்தினச் சுருக்கமாக வரையப்பட்டிருக்கிறது இந்த 'இராமாயண ரத்தினங்கள்.

- பி.வி. கிரி.





# கல்வி சிறந்த தமிழ்நாடு

பள்ளிக் கல்வித்துறையில் 'ஏ' பிரிவு ஆசிரியர்களுக்கும் மற்றும் முன்னாள் மாவட்டக் கழகப் பள்ளிகளைச் சார்ந்த 'பி' பிரிவு ஆசிரியர்களுக்கும் இடையில் சில பிரச்சினைகள் 1978-ஆம் முதற்கொண்டு தீர்க்கப்படாமல் நிலுவையாக உள்ளன. அதன் விளைவாக, பள்ளிக் கல்வித்துறையில் 712 மேற்பார்வையாளர்கள் போன்ற பதவிகள் நிரப்பப்படாமல் இருந்தன.

மேற்கண்ட 712 பதவிகளை நிரப்புவதற்கு ஏதுவாக உச்ச நீதி மன்றத்தில் அரசு இடைக்கால உத்தரவு பெற்று முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் தலைமை ஆசிரியர் முதலான பதவிகளை நிரப்பியது.

பெண்களுக்கான அரசுத் தொழில் நுட்பப் பயிலகங்களுக்கு முதல்வராகப் பெண்கள் தொழில்நுட்பப் பயிலகங்களில் பணிபுரியும் பெண் ஆசிரியர்களைக் கொண்ட தனி பணிமூப்புப் பட்டியலிலிருந்து நியமனம் செய்யப்படுவார்கள் எனக் கொள்கை முடிவெடுத்துள்ளது.

பள்ளிகளில் அறிவியல் கல்வியை வளர்ப்பதற்காக மைய அரசிடமிருந்து ரூ.5.00 கோடி மானியமாகப் பெறப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினால் பயன்பெற உள்ள பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை 1,306 ஆகும்.

எம்.ஈ., எம்.எஸ்., மற்றும் பி.எச்டி. போன்ற தொழில்நுட்பப் பட்டமேற்படிப்புக் கல்விக்காக நமது மாணவர்கள் வெளிநாடுகளுக்குக் குடிபெயர்வதைத் தவிர்க்க, அவர்களுக்கு இங்கேயே அந்த வசதிகள் ஏற்படுத்தப்படும்.

பதினொன்றாம் வகுப்பின் முடிவில் மாவட்ட அளவில் பொதுத் தேர்வு நடத்த அரசு தீர்மானித்துள்ளது. இது அடுத்த கல்வியாண்டு முதல் அமல்படுத்தப்படும்.

பல்வேறு ஆசிரியர் சங்கங்கள் தங்கள் பணிநிலையில் உள்ள சில குறைபாடுகள் குறித்து அவ்வப்போது அரசிற்கு விண்ணப்பித்துள்ளன . ஆசிரியர்களின் கோரிக்கைகள் நியாயமானதாக இருந்ததால் அரசு அந்தக் கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்து அதை ஏற்றுக் கொண்டுள்ளது.

ஆசிரியர்களிடம் மனநிறைவு ஏற்பட்டால்தான் கல்வியின் தரத்தை மேம்படுத்த உதவும் என்பதால் ஆசிரியர் நலத்திட்டங்கள் சில அறிவிக்கப்படுகின்றன.

உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதவி உயர்வுக்கு முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் மற்றும் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுடன் 2:5:2 என்ற விகிதத்தில் கருதப்படுவர்.

குறைந்தபட்சக் கல்வித் தகுதிக்கு மேல் உயர்கல்வித் தகுதியுடைய பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்படும்.

ஈரோட்டில் சேரன் போக்குவரத்துக் கழகம் நடத்தி வரும் சொந்த நிதி பொறியியற் கல்லூரியைப் போன்று ஆசிரியர் நலநிதியிலிருந்து சொந்த நிதி பொறியியற் கல்லூரி ஒன்று தொடங்கப்பெறும். இதில் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு 50 சதவிகிதம் இடம் ஒதுக்கப்பெறும்.

மத்திய அரசு நிறுவியுள்ள நவோதயப் பள்ளிகளில் தாய் மொழியில் எட்டாம் வகுப்பு வரையிலும், ஆங்கில மொழியில் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலும் பயில்வதற்குக் கிராமப்புறங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ மாணவியர் தங்கிப் பயிலவும் அவர்களுக்குத் தேவையான புத்தகங்கள், உபகரணங்கள் மற்றும் உதவிகளைச் செய்யவும் இவ்வரசு எண்ணியுள்ளது. இந்தப் பள்ளிகளில் இந்தி போதனா மொழியாக இருக்காது.

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும் ரூ.2.4 கோடி தொடராச் செலவினத்தில் ஜவகர் நவோதயப் பள்ளிகள் துவக்கப்படும்.

அரசு உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில் ஆங்கில வழி போதனா முறைக்குத் தொடர்ந்து கோரிக்கை இருந்து வருகிறது. இதனை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது. இவ்வகுப்புகளில் சேரும் மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக் கட்டணம் செலுத்த வேண்டும். அரசு மானியம் பெறும் பள்ளிகளிலும் ஆங்கிலவழிக் கல்வி முறை வகுப்புகளை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. மேலும் அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட வகுப்புகளில் சேரும் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் அதிகப்படியான கட்டணத்தைக் கொண்டு அப்பள்ளிகளில் கூடுதலாக நியமிக்கப்படும்

ஆசிரியர்களின் ஊதியத்தைச் சரி செய்யவேண்டும்.

பேச்சு வழக்கு ஆங்கிலம் உட்பட அம்மொழியில் மாணவர்களின் திறனை மேம்படுத்த தற்போது கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, சேலம், திருநெல்வேலி ஆகிய ஐந்து இடங்களில் உள்ள மண்டல ஆங்கில மொழிப் பயிற்சி மையங்களை வலுப்படுத்தி மேலும் ஆங்கில ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிக்கப்படும்.

வேலூர் அரசு பாலிடெக்னிக் வளாகத்தில் தற்காலிகமாக இயங்கி வரும் தந்தை பெரியார் அரசுப் பொறியியற் கல்லூரி தொழிற்கல்வி வசதி குறைந்த தர்மபுரி மாவட்டம் பர்கூருக்கும் கிருஷ்ணகிரிக்கும் இடையில் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி மாற்றப்படும்.

கல்வித்துறையானது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்தும், எனவே, கல்வித்துறையின் பெயர், கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை என்று மாற்றம் செய்யப்படும்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் பொருட்டு, சூரிய சக்தியைப் பயன்படுத்துவதற்கான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கான சிறப்பு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும். இந்நிலையத்தை அமைக்க அரசு தொடக்க மானியமாக ரூ.10 இலட்சம் வழங்கும்.

கிராமப்புற மக்களுக்குச் சாதாரணமான முறையில் குடிநீர் வழங்குவதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. எனவே, கடல்நீரைச் சூரிய சக்தி மூலம் குடிநீராக்குவது ஒன்றுதான் இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்று அரசு கருதுகிறது. தற்போதுள்ள தொழில்நுட்ப வசதிகளுக்கு இடையில் கடல்நீரைக் குடிநீரைக்குவதால் அரசுக்கு மிகுந்த செலவு ஏற்படும். எனவே, சூரிய சக்தி மூலம் கடல்நீரைக் குடிநீராக்கக் குறைந்த செலவில் திட்டமிட்டுத் திட்டம் நிர்மாணம் செய்யும் அறிவியல் வல்லுநர்களுக்கு ரூ.10 இலட்சம் சன்மானம் அளிக்க அரசு மகிழ்ச்சியுடன் முன்வருகிறது.



பள்ளிக் கல்வியின் தரத்தை உயர்த்தி அதன் இலக்கினை அடைய வேண்டுமாயின் தேர்வு செய்யப்படும் ஆசிரியர்களின் தரத்தை மற்றும் திறத்தை உயர்த்தவேண்டும் என்பதை அரசு அறிந்தே உள்ளது. எனவே, இடைநிலை ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதில் பின்பற்றப்படும் முறைகளுக்குத் திருத்தங்கள் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. எனவே, இனிமேல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள ஆசிரியர் பயிற்சி பெற்றுள்ள அனைத்து நபர்களுக்கும் மாவட்ட அளவில் வடிகட்டும் முறை (Screening Test) நடத்தப்படும். அதில் எவர் குறைந்தபட்சம் 50 சதவிகித மதிப்பெண் பெறுகிறார்களோ அவர்கள் ஒரு குழுவால் நேர்முகமாகத் தேர்வு செய்யப்பட்டு இடைநிலை ஆசிரியர் பதவிக்குப் பொருத்தமானவர்களை அக்குழு தேர்வு செய்யும்.

புதிய பாடத் திட்டத்தில் தங்கள் திறமையை மேம்படுத்திக் கொள்வதற்காக ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் புதிய பாடத் திட்டத்தில் போதிய பயிற்சி அளிக்கப்படும்.

தற்போது தொகுப்பூதியம் பெற்று வரும் ஒரு நேர மற்றும் இருநேரத் தொழிற்பயிற்சி ஆசிரியர்களின் நீண்டகாலக் கோரிக்கையான முறையான ஊதிய விகிதத்தில் ஊதியம் அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அரசால் ஆய்வு செய்யப்பட்டு, பின்வருமாறு முடிவு செய்யப்பட்டுள்ளது:-

(அ) முழுத் தகுதி வாய்ந்த 587 இரு நேரப் பகுதி தொழிற் பயிற்சி ஆசிரியர்கள் பள்ளி உதவியாளர்கள் பணியிடத்திற்குரிய முறையான ஊதிய விகிதத்திற்குக் கொண்டுவரப்படுவார்கள்.

(ஆ) மீதமுள்ள 450 முழுத் தகுதி பெறாத இரு பகுதி நேர தொழிற் பயிற்சி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் பணியில் ஈர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

(இ) முழுத் தகுதி வாய்ந்த ஒரு பகுதி நேரத் தொழிற் பயிற்சி ஆசிரியர்கள் தற்போதுள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்குக் கொண்டுவரப்படுவார்கள்.

(ஈ) மீதமுள்ள முழுத் தகுதி பெறாத ஒரு பகுதி நேரத் தொழிற் பயிற்சி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் இனிமேல் ஏற்படும் காலிப் பணியிடங்களில் ஈர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

தற்பொழுது, 324 விரிவுரையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் அரசுக் கல்லூரிகளில் பணி புரிகிறார்கள். இவர்களில் 242 பேர் எம்ஃபில் மற்றும் பி.எச்டி கல்வித் தகுதிகளைக் கொண்டிருப்பதால் இவர்கள் பல்கலைக் கழக மானியக் குழு விதிகளின்படி 'எழுத்துத் தேர்விலிருந்து' விலக்களிக்கப்படுகின்றனர். எனினும், இவர்கள் ஆசிரியர் தேர்வாணைக் குழு மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு காலியாகவுள்ள இடங்களில் பணியிலமர்த்தப்படுவர்.

மற்ற ஆசிரியர்கள் 'எழுத்தறிவுத் தேர்வு' எழுதி ஆசிரியர் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

தொடக்கப் பள்ளிகளில் 1-லிருந்து 3-ஆம் வகுப்பு வரை கட்டாயமாகப் பாஸ் போடும் திட்டத்தை மாற்றித் தேர்வுகள் நடத்தப்படும்.

அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர்களில், தகுதி வாய்ந்தவர்களின் பணி விதிகளின்படி படிப்படியாகக் காலியிடங்கள் ஏற்படும் போது, அவற்றில் முழு நேர ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர்.

நடப்பு ஆண்டில் உருவாக்கப்படும் புதிய ஆசிரியர் பணியிடங்கள் பல்வேறு தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குக் கீழ்க்கண்டவாறு பகிர்ந்தளிக்கப்படும்:-

(அ) ஆசிரியர் பணியிடம் தோற்றுவிக்கப்படாத, புதியதாகத் திறக்கப்பட்ட பள்ளிகளுக்கு மேலும் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

(ஆ) ஓர் ஆசிரியர் பள்ளிகளுக்கு மேலும் ஓர் ஆசிரியர் பணியிடம் தோற்றுவிக்கப்படும்.

(இ) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், மாநகராட்சி; நகராட்சி, நகரியம் மற்றும் பயிற்சி நிறுவனப் பள்ளிகள் என்ற வரிசைக் கிரமத்தில் பணியிடங்கள் பகிர்ந்தளிக்கப்படும்.



★ பிறந்தவன் சாவான் என்பது இயற்கை. அதைக் கண்டு நான் பயப்படவா போகின்றேன்? ஆனால், சீரிய இலட்சியமாகிய சுயமரியாதையை மேலும் வளர்ப்பதில் ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தானே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். அதுதான் மனித வாழ்விற்கே சிறப்பாகும். நாம் அடிமைகள் அன்று; நாம் போர்வீரர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். சுயமரியாதை இல்லாமல், நாட்டுப் பற்று இல்லாமல் பற்றின்றி வாழ்வதைவிடச் சாவதே ஒரு வீரனுக்கு உகந்த வழியாகும்.

(ஈ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளைப் பொறுத்தவரை மேற்குறிப்பிட்ட விதிமுறைகள் தளர்த்தப்படும்.

எட்டாம் வகுப்பைப் படிப்படியாக உயர்நிலைப் பள்ளிகளோடு இணைத்து எட்டாம் வகுப்புக்குக் கல்வியியல் பட்டம் (B.Ed.) படித்த ஆசிரியர்களைப் படிப்படியாக நியமித்தல். இதனால் கல்வியின் தரம் உயர வாய்ப்புள்ளது.

கிராமப்புறங்களில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குப் புதியதாகக் கட்டடம் கட்டப்படுவதோ அல்லது ஏற்கெனவே உள்ள கட்டடங்களைப் பராமரிப்பதோ ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும்.

கீழ்த்திசை நாடுகளில் உள்ளதைப்போல மாணவர்களிடையே நாட்டுப்பற்று (Patriotism) வளர்ப்பதற்கு உண்டான பாடல்கள் அறிமுகப்படுத்தப்படும். HUDCO நிறுவனத்திடமிருந்து சென்ற நிதியாண்டு 1991-92-இல் 64 பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்காக ரூபாய் 225 இலட்சம் கடன் பெற்று அரசு பங்குத் தொகையாக ரூ.75 இலட்சம் செலவழிக்கப்பட்டது. அதே போன்று நடப்பாண்டிலும் 64 பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

459 ஓராசிரியர் பள்ளிகளை 3 ஆசிரியர் பள்ளிகளாகவும், 6,545 ஈராசிரியர் பள்ளிகளை 3 ஆசிரியர் பள்ளிகளாகவும் மாற்ற கரும் பலகைத் திட்டத்தின் கீழ் மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் அதுவும் பெண்கள் தொடர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பை இழந்த நிலையில், 15 வயதிற்கு மேற்பட்டோர், பள்ளி இறுதித் தேர்வுச் சான்றுக்குச் சமமானதொரு படிப்பைத் தொடரும் வாய்ப்பளிக்கும் வகையில், பள்ளிசாராக் கல்வி முறையை அடிப்படையாகக் கொண்ட பள்ளி ஒன்று, மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் நடத்திச் சான்றுகள் வழங்கப்பட்டு வந்தது; இது 1989-90 முதல் நிறுத்தப்பட்டு விட்டது. இதனால் மேற்கொண்டு பலர் பயன் பெற்றுத் தகுதியை உயர்த்திக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, அத்தகையோர் வசதிக்காக இப்பள்ளி மறுபடியும் வரும் கல்வி யாண்டு 1992-93-லிருந்து துவக்கப்படும்.

தனியார் துறையில் புதிதாகத் தொடங்கும் கல்வி நிறுவனங்கட்கு- பள்ளிகள், கல்லூரிகளுக்கு இனிமேல் நிதி உதவி கிடையாது.

அங்கீகாரம் மட்டும் அரசு நிபந்தனைகளுக்கு உட்பட்டு, துவக்கப்படும் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் தேவையான இடங்களில், தேவைகளைப் பொறுத்து வழங்கப்படும்.

இந்த நிலை, சிறுபான்மை, பெரும்பான்மை ஆகிய இரு பாலருக்கும் பொருந்தும்.

- மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், சட்டமன்றத்தில் 1.4.92- 2.4.92 ஆகிய நாட்களில் அறிவித்தவற்றிலிருந்து.



# கோயில்களும் பழந்தமிழர் பண்பாடும்

**டாக்டர் சி. செல்வராஜ்,**
வரலாற்றுத் துறை விரிவுரையாளர்
நே.நி. கிறிஸ்தவக் கல்லூரி
மார்த்தாண்டம்
கன்னியாகுமரி மாவட்டம்-629 165

கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ் மக்கள் ஓலை, களிமண் போன்ற பொருட்களால் கோயில் கட்டி இறைவனை வழிபட்டனர் என்று சங்க இலக்கியங்கள் சான்று பகிர்கின்றன. ஆனால், கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே, என்றும் அழியாத கல் கொண்டு கோயில் கட்டும் பழக்கத்தைத் தமிழகத்தில் பல்லவர்கள் அறிமுகப்படுத்தி, அதைச் சோழர்கள், பாண்டியர்கள், நாயக்கர்கள் போன்ற அரச வம்சத்தினர் விரிவுபடுத்திக் கையாண்டனர்.

இத்தமிழ் மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் மட்டுமல்லாமல் அவர்கள் படையெடுத்துச் சென்று வெற்றி கண்ட அண்டை நாடுகளிலும் கட்டடக் கலையின் நுணுக்கங்களுடன் கோயில் கட்டி இறைவனை வழிபட்டனர். இக்கோயில்கள் அக்காலத்தில் இறைவனை வழிபட மட்டும் பயன்படாமல், அக்கால அரசியல், சமுதாய, பொருளாதார ம்ற்றும் பண்பாட்டின் உறைவிடங்களாய்த் திகழ்ந்தன. ஆகவே, பழந்தமிழரின் பண்பாட்டில் கோயில்களின் பங்கைப் பற்றி ஆராய்வோம்.

**அரசியல்**

பழந்தமிழ் நாட்டில் கோயில்கள் அக்கால அரசியலின் தலைமைச் செயலகம் போல் செயல்பட்டன. கோயில்களில் அரசன் தங்கியிருக்கவும், அவன் அமைச்சு நடத்த அவையும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அந்த அவையில் அரசன் அவ்வப்போது அமர்ந்து நாட்டு நிர்வாகங்களைக் கவனிப்பது வழக்கம். அக்கால அரசர்களுக்கு ஆலோசனை கூற ஐம்பெருங்குழு, எண்பேராயம் போன்ற குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு இருந்தன. இக்குழுக்கள் கோயில் வராந்தாவில் கூடி நாட்டில் உள்ள பிரச்சினைகளை விவாதம் பண்ணி, தகுந்த ஆலோசனைகளை அரசனுக்கு வழங்கி வந்தன. இது மட்டுமல்லாமல் அரசில் பல்வேறு நடவடிக்கைகள், பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், பல்வேறு சலுகைகள் போன்றவைகளைக் கோவிலிலிருந்தே அரசன் அறிவித்தான்.

மேலும் அவ்வரசர்கள் வெளியிட்டுள்ள அரசு ஆணைகள் கோயில் சுவர்களில் மக்களின் பார்வைக்கு வசதியாகச் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளைப் பழந்தமிழ் அரசர்கள் கட்டிய அனைத்துக் கோயில்களிலும் இன்றும் காணலாம்.

இராஜராஜ சோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் சுவர்களில் அவ்வரசன் வெளியிட்டுள்ள அரசு ஆணைகள் செதுக்கி வைத்திருக்கும் பாங்கு, பார்ப்போரைக் களிப்புறச் செய்கிறது. மேலும் இக்கல்வெட்டுகளில் அவர்கள் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற முக்கியமான நிகழ்ச்சிகள், வெளிநாட்டுப் படையெடுப்புகள், அவற்றின் வெற்றி தோல்விகள், போரின் முடிவில் கவரப்பட்ட செல்வங்கள். போரின் விளைவுகள் போன்றவற்றையும் பொறித்து வைத்துள்ளனர்.

அது மட்டுமல்லாமல், அரசனே அக்காலத்தில் தலைமை நீதிபதியாகவும், நீதி அரசனாகவும் செயல்பட்டான். கோவிலிலுள்ள அறையிலேயே நீதிமன்றம் அமைக்கப்பட்டு, ஆண்டவன் முன் குற்றவாளிகளை விசாரித்து, முறையான தண்டனைகள் வழங்கப்பட்டதாகப் பழந்தமிழ்க் கோயில் கல்வெட்டுகள் பறைசாற்றுகின்றன. இவைகளைப் பார்க்கும்போது, அக்காலக் கோயில்கள் இறைவனை வழிபட மட்டும் பயன்படாமல் ஆட்சி செய்யும் அரசனின் தலைமைச் செயலகமாகவும், நீதி வழங்கும் நீதிமன்றமாகவும் செயல்பட்டன என்று நன்கு புலனாகிறது.

**பொருளாதாரம்**

பழந்தமிழர்களின் ஆட்சிக் காலத்தில் ஆலயங்கள் ஆட்சி செய்யும் அரசனின் துணைக் கருவூலமாகச் செயல்பட்டன. அக்காலத்தில் மக்கள் கோயிலுக்குத் தானங்கள் செய்வதைப் பெரும் பேறாகவும், தாங்கள் செய்த பாவத்திலிருந்து விடுதலை கிடைக்க உதவும் என்றும் வீடு பேறு அடைய உதவும் என்றும் நம்பினார்கள்.

ஆகவே, அவ்வப்போது அரசர்கள், அதிகாரிகள் மற்றும் பொது மக்களும் கோயில்களுக்குத் தானமாக ஏராளமான நிலங்கள் மற்றும் பொன், வெள்ளி போன்ற விலை உயர்ந்த பொருட்களைத் தானமாக வழங்கினர். இவ்வாறு தானமளிக்கப்பட்ட நிலங்களைக் கோயில் நிர்வாகிகள் குத்தகைக்கு விடுவதால் கிடைக்கும் வருமானம் மற்றும் நன்கொடையால் கிடைக்கும் வருமான்ம் போன்றவைகளால், கோயில்கள் பெரும் செல்வத்துடன் காணப்பட்டன.

வெளி நாட்டுடன் போரிட்டு வெற்றியுடன் திரும்பும்போது, தான் போரிட்ட நாட்டிலிருந்து ஏராளமான விலையுயர்ந்த பொருட்களைக் கவர்ந்து வருவதைப் பழந்தமிழர்கள் தம் மரபாகக் கடைபிடித்தனர். அப்பொருட்களைத் தமிழ் அரசர்கள் தாம் கட்டிய கோயில்களில் சேமித்து வைத்துப் பாதுகாத்தனர். மேலும் அப்படி கோயிலில் வைக்கும்போது, அப்பொருட்கள் எல்லாம் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டன. அவற்றின் பெயர், எடை போன்றவைகளைப் பட்டியல் போட்டு அரசன் தன் கையில் வைத்துக் கொண்டான்.

உதாரணமாக முதலாம் இராஜராஜ சோழன் தான் சேர, பாண்டிய, சாளுக்கிய நாட்டின் மீது போரிட்டு வெற்றியுடன் திரும்பும்போது கொண்டு வந்த பொருட்களை எல்லாம், தான் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோயில் கருவூலத்தில் வைத்துப் பாதுகாத்ததாக அக்கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன. கல்வெட்டின் கூற்றுப்படி ஏராளமான அளவு தங்கம், தங்க ஆபரணங்கள், தங்க மலர்கள், முத்து, பவளம் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் உட்பட ஏராளமான பொருட்கள் கொடையளிக்கப்பட்டுள்ளன. இதைப்போல் முதலாம் இராஜேந்திர சோழன் சாளுக்கிய நாட்டின் மீது படையெடுத்து வெற்றியுடன் திரும்பியபோது ஒருக்கட்டு தங்க மலர்களைக் கொண்டு வந்து தஞ்சைப் பெரிய கோயில்லுக்குத் தானமாகக் கொடுத்துள்ளான். இதேபோல் இவ்வரசன் கடாரத்தின் மீது படையெடுத்து வெற்றியுடன் திரும்பியபோது, அங்கிருந்து கொள்ளையடித்துக் கொண்டு வந்த செல்வங்களைத்தான் கங்கை கொண்ட சோழபுரத்தில் கட்டிய சிவன் கோயிலுக்குத் தானமாகக் கொடுத்துள்ளான்.

அவ்வாறே, தமிழ் அரசர்கள் தாங்கள் போரில் வெற்றியடைந்து தாய் நாடு திரும்பியதும், வெற்றிக்கு உதவிய இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் முறையாகத் தாம் கொண்டு வந்த பொருட்களைத் துலாபாரம் (தனது எடைக்கு நிகராகப் பொன் நிறுத்துக் கொடுத்தல்) செய்து கோயிலுக்குத் தானமாகச் செய்து கொடுத்தனர். இவ்வாறு செய்தால் தங்கள் எதிரி நாட்டில் போரிடும் போது கொல்லப்பட்ட ஏராள வீரர்கள் மற்றும் யானை, குதிரை போன்ற விலங்குகளிலிருந்தும் தனக்குப் பாவ மன்னிப்புக் கிடைக்கும் என்றும், வீடு பேறு அடைய உதவும் என்றும் நம்பினர்.

உதாரணமாக முதலாம் இராஜேந்திரன் வட நாட்டின் மீது படையெடுத்துத் திரும்பி வந்ததும், தஞ்சைப் பெரிய கோயிலுக்குத் துலாபாரம் செய்து கொடுத்தான் என்று அக்கோயில் கல்வெட்டுக் கூறுகிறது. இதைப் போல் பாண்டிய நாட்டிலும் அரசன் ஜடாவர்மன்

## பொன்மொழிகள்

எப்போதும் தொண்டு செய்வதற்குத் தயாராக இரு. அதற்குரிய சந்தர்ப்பம் எதையும் தவற விட்டு விடாதே. சாதனை படைக்கச்சமயம் போதாது என்று குறை கூறாதே. எப்போதும் அடக்கமாகவும் எளிமையாகவும் இருக்கப் பழகிக் கொள்.

— *சுவாமி சிவானந்தர்.*

உண்மையே உள்ளத் தூய்மையை உண்டாக்கும். உள்ளத் தூய்மையே ஒழுக்கத்தின் உயிர்நாடி.

நல்ல நம்பிக்கையின்றி நல்ல அறிவு உண்டாகாது. நல்ல அறிவின்றி நல்ல ஒழுக்கம் உண்டாகாது.

— *மகாவீரர்.*



சுந்தர பாண்டியன் தான் ஹொய்சள நாட்டின் மீது படையெடுத்து வெற்றியுடன் திரும்பியதும் சிதம்பரம் மற்றும் ஸ்ரீரங்கம் சிவன் கோயிலுக்குத் துலாபாரம் செய்து கொடுத்ததாக அக்கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன. மேலும் சோழ அரசர்கள் சில சமயங்களில் தாங்கள் இவ்வாறு கொண்டுவந்த செல்வத்தினால் சிதம்பரம் நடராசர் கோயிலுக்குத் தங்கத்தால் கூரை வேய்ந்தனர் என்று அக்கோயில் கல்வெட்டுக் கூறுகிறது.

இவ்வாறு பழந்தமிழ் அரசர்கள் தாங்கள் வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட செல்வத்தில் பெரும்பகுதி கோயிலுக்குப் பல வழிகளில் போய்ச் சேர்ந்ததால், அக்காலக் கோயில்கள் மிகவும் செல்வத்துடன் காணப்பட்டன. இச்செல்வம் நாட்டில் செல்வமாகவும் அரசனின் ஒரு துணைக் கருவூலமாகவும் செயல்பட்டன. அச்செல்வத்தைக் கொண்டு அரசன் பல சமுதாய, மற்றும் பண்பாட்டுப் பணிகளைச் செய்தான்.



மேலும் கோயில்களுக்கு அரசன் முதல் சாதாரண ஏழை வரை தானமாக நிலங்களும், பொன்னும், பொருளும் வாரி வழங்குவதால் அக்காலக் கோயில்கள் பெரும் செல்வச் செழிப்புடன் காணப்பட்டன. இந்தக் கோயில் நிலங்களைப் பராமரிக்கவும், விவசாயம் செய்யவும், கோயிலைச் சுத்தம் செய்யவும், கோவிலுக்கு வேண்டிய பொருட்களைப் படைக்கவும், மற்றும் பணிவிடைகள் செய்யவும் ஏராளமானவர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர் இவர்கள் காலை முதல் மாலை வரை கோயில் நிலத்தால் உழைத்து, கோயில் வருமானத்தில் ஊதியமும் பெற்றனர். ஆகையால் கோயில்கள் அக்காலத்தில் பலரை ஆண்டு முழுவதும் வேலையில் அமர்த்தும் அமைப்பாகவே செயல்பட்டது.

### கல்வி

பழந்தமிழர்கள் கல்வியின் சிறப்பினை நன்கு உணர்ந்திருந்தனர். எனவே பல கல்விக் கூடங்களை ஏற்படுத்திப் படிக்க வசதிகள் பல செய்து கொடுத்தனர். அவைகள் கட்டிகா, மதா, சாலை என்று அழைக்கப்பட்டு கோயில்களுடனே செயல்பட்டன. இவைகளை நிர்வகிக்க ஆகும் செலவு மற்றும் பராமரிப்பு எல்லாவற்றையும் கோயில்களே ஏற்றிருந்தன. இக்கல்லூரிகளில் வட மொழியில் பயிற்றுவிக்கப்பட்டு, மதம், விஞ்ஞானம், வானவியல், சோதிடயியல் போன்றவைகள் போதிக்கப்பட்டன.

உதாரணமாக - கும்பகோணம் இராஜேஸ்வரசுவாமி கோயிலில் பரகேசரிவர்மன் என்கிற அரசன் கி.பி.959-இல் கல்வி பயிற்றுவிக்கக் கல்விச் சாலை ஒன்றைக் கட்டி, கல்வி கற்பிக்க ஏற்பாடு பண்ணியதாக அக்கோயில் கல்வெட்டுக் கூறுகிறது.

இதேபோல் எண்ணாயிரம் என்னும் ஊரில் உள்ள சிவன் கோயிலில் மிகப் பெரிய வேதக் கல்லூரியொன்றும் செயல்பட்டதாகச் சொல்லப்படுகிறது; இதைக் குறிக்கும் கல்வெட்டில் ஆசிரியர்களின் எண்ணிக்கை, மாணவர்களின் எண்ணிக்கை, அவர்களின் பராமரிப்புப் போன்ற விவரங்கள் யாவும் தெளிவாக உள்ளன.

அக்காலக் கோயில்களில் தொழில் கல்விக்கெனத் தனிப்பட்ட கல்லூரிகள் செயல்பட்டதாகக் காண்கிறோம். வீர இராஜேந்திர சோழனின் திருமுக்கூடல் கல்வெட்டு, அவ்வூர் சிவன் கோயிலில் மருத்துவக் கல்லூரி ஒன்று செயல்பட்டதாகக் கூறுகிறது. இக்கல்வெட்டின் கூற்றுப்படி அதில் சுமார் 340 மாணவர்கள் பயின்றதாகவும் அவர்களுக்கு நிதி உதவி, இலவச உணவு, உடை போன்றவைகள் அளிக்கப்பட்டதாகவும் தெரிகிறது. அதுமட்டுமல்லாமல், இம்மாணவர்களின் சோதனைப் பயிற்சிக்கு வேண்டி ஒரு பெரிய மருத்துவமனை அக்கோயிலோடு இணைந்து செயல்பட்டதாகவும் இதற்குத் தேவையான மருத்துவ வசதிகள் இருந்ததாகவும் செவிலியர் மற்றும் உதவியாளர் போன்றவர்கள் அங்கே வேலை செய்ததாகவும் அவர்களின் மாதச் சம்பளம், சலுகைகள் போன்ற விவரங்கள் அனைத்தும் அக்கோயில் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளன.



இவைகளைப் போன்று திருவொற்றியூர், திருத்தணி, திருவெறும்பூர் போன்ற ஊர்களில் அமைந்துள்ள கோயில்களிலும், கல்விச் சாலைகள் செயல்பட்டதாக அந்த ஊர் கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன.

### கலை வளர்ச்சி

பழந்தமிழரின் கோயில்கள் கலையின் உறைவிடங்களாய்த் திகழ்ந்தன. இவர்கள் கட்டிய கோயில்கள் திராவிடர் கோயில் கட்டடக் கலையின் சின்னங்களாகத் திகழ்கின்றன. இக்கோயில்கள் கம்பீரமான தோற்றம், உயரமான கோபுரம், அர்த்த மண்டபம், முக மண்டபம், மகா மண்டபம், போன்ற பல பிரிவுகளைக் கொண்டது. கோயிலைச் சுற்றிலும் மதில் சுவர்கள் கட்டப்பட்டிருக்கும்.

முதலாம் இராஜராஜ சோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் தென்னிந்தியக் கட்டடக் கலையின் சின்னமாய்த் திகழ்கிறது. மேலும் இக்கோயில்களின் சிற்பக் கலைகள் சிறந்து விளங்குகின்றன. வெண்கலம், செம்பு, வெள்ளி, கல், தங்கம் ஆகியவற்றில் சிற்பிகள் தங்களது திறனை வெளிப்படுத்தி மிகச் சிறந்த சிற்பங்களை அமைத்துள்ளனர். இச்சிற்பங்களில் இறைவனின் திருவுருவங்கள் பல்வேறு கோணங்களில் அழகுடனும் உயிரோட்டத்துடனும் சித்திரிக்கப்பட்டுள்ளன.

சோழர்கள் தம் கோயில்களின் கருவறைச் சுவர்களில், அழகான ஓவியங்கள் தீட்டி தங்கள் கலைத் திறனை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த ஓவியங்கள் இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றின் செய்தியைச் சித்திரிப்பவைகளாய் உள்ளன. தஞ்சை, திருமயம், மாமண்டூர், நார்த்தாமலை, சித்தன்னவாசல், மலையப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள சோழர் ஓவியங்கள் என்றும் காண்பதற்கு வியப்பாக உள்ளன. இவைகளின் மூலம் அக்காலத் தமிழ் மக்களின் பண்பாடு, நடை, உடை, பாவணைகள், அணிகலன்கள், தலை அலங்காரம், சமயம், வாழ்க்கை முறை முதலியவற்றை அறிய முடிகிறது.

### இசை

சோழ அரசர்கள் இசையைப் போற்றி வளர்த்தனர். கோயில்களில் முக்கியமான விழாக்கள் நடைபெறும் போது இசைக் கருவிகள் இசைக்கப்பட்டன. சோழர் காலத்தில் இசைக் கருவிகள், நரம்புக் கருவிகள், தோல் கருவிகள் போன்ற பல்வேறு கருவிகள் பயன்படுத்தப்பட்டன. மேலும் இவற்றுடன் 23 வகைப் பண்களும் பயன்படுத்தப்பட்டன. தமிழர் கோயில்கள் இசையின் உறைவிடங்களாகத் திகழ்ந்தன. கோயில்களில் இசை வல்லுநர்கள் பரம்பரை பரம்பரையாகப் பணியில் அமர்த்தப்பட்டனர். அவர்கள் யாகங்கள் செய்யும் போதும், விழாக்களின் போதும் பல்வேறு இசைக் கருவிகளை இசைத்து விழாவினைச் சிறப்புறச் செய்தனர்.

> ★ மனத்தில் மாசு, மதவெறி, சாதி, சுயநலம், ஆணவம் இவற்றை மக்கள் விட்டொழிக்க வேண்டும்; அப்போதுதான் நம்நாடு முன்னேறும்!
>
> — அறிஞர் அண்ணா

### கூத்து

தமிழகத்தில் சங்க காலம் முதலாகவே - அதாவது தொன்று தொட்டே இக்கலை சிறந்து விளங்குகிறது. சிலப்பதிகாரம் 11 வகைக் கூத்துக்களைக் கூறுகிறது. சோழர்கள் காலத்தில் தேவரடியார் என்னும் சிறப்புமிக்க பெண்கள் இறைவனுக்குத் தொண்டு செய்ய அர்ப்பணிக்கப்பட்டனர். இவர்கள் ஆடல், பாடல் மற்றும் ஏனைய கலைகளில் சிறந்து விளங்கினர். இவர்கள் கோயில்களில் தங்கியிருந்து அவ்வப்போது ஆடல், பாடல் போன்ற கலைகளைச் செய்து காட்டினர். சோழ அரசர்கள், குறிப்பாக முதலாம் இராஜராஜ சோழன் அரியணை ஏறியபோது இக்கலைக்குப் புத்துயிர் கொடுக்கப்பட்டது. அவன் தனது போர் வெற்றியின் சிறப்பினைப் பாராட்டும் வண்ணம், தஞ்சையில் பிரகதீஸ்வரர் கோயில் கட்டி சுமார் 400 தேவரடியார்களைக் கொண்டு வந்து சேர்த்து, அக்கலைக்குப் பெரிதும் மெருகூட்டினான்.

இதேபோல் திருவாரூர் தியாகராசர் கோயில், திருவானைக்கா கோயில் போன்றவைகளில் தேவரடியார்கள் ஆடல் பாடல்களில் சிறந்து விளங்கி அக்கலையைச் சிறப்பித்தமையை அக்கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன. பரவை நாச்சியார், நங்கை பரவை போன்ற தலைசிறந்த கலைஞர்கள் இக்கலையில் சிறந்து விளங்கியதாகச் சோழர் காலக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இவர்கள் காலையில் எழுந்து குளிர்ந்த நீரில் குளித்து, தரையைப் பெருக்கி, சாணியால் மெழுகி, பூக்களால் மாலை தொடுத்து, விளக்கேற்றி இறைவனை வணங்கினர். இக்கலை, சங்க காலத்தில் தமிழகத்தில் அறிமுகமாகி சோழர், பாண்டியர் காலத்தில் சிறப்புற்று, பின்னர் அண்டை நாடுகளிலும் பரவியது.

### ஒருமைப்பாட்டின் சின்னம்

பழந்தமிழர்கள் கோயில்கள் நாட்டின் ஒருமைப்பாட்டின் சின்னமாய் விளங்கின. இக்கோயில்களில் அவ்வப்போது விழாக்களும், கூத்துகளும், ஆராதனைகளும் நடைபெறுவதாய் உள்ளது. இவைகளில் மக்கள் சாதி, மத, எல்லைகளைக் கடந்து பங்கேற்று இறைவனை வழிபடல் மட்டுமல்லாமல் பல்வேறு கலை நிகழ்ச்சிகளையும் கண்டு ரசித்தனர். மக்கள் தாங்கள் வேறுபாடுகளை மறந்து, ஒரே இடத்தில் அவ்வப்போது கூடி ஆண்டவனை வழிபட்டதாலும் கலை நிகழ்ச்சிகளை ரசித்ததாலும் ஒருவகை சகோதர மனப்பான்மை வளரக் கோயில்கள் பெரிதும் உதவின.

மேற்கூறிய கருத்துக்களை ஆராயும் போது கோயில்கள் பழந்தமிழ் மக்களின் வாழ்வில் பெரும்பங்கு பெற்றிருந்தமை தெரிகிறது. இவைகள் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டின் உறைவிடமாகவும் பலதரப்பட்ட மக்களை அணைக்கும் ஒருவகைப் பாலமாகவும் செயல்பட்டன என்பது உண்மை.

தற்போது இக்கோயில்கள் பல தன் பழைய செல்வாக்கினை இழந்து, கலையிழந்து, ஆதரிப்பாரின்றிப் பொலிவிழந்து காணப்படுகின்றன. தமிழகத்தின் பாரம்பரியத்தையும், அதன் புனிதப் பண்பாட்டையும் பேணிக்காக்க எண்ணும் ஒவ்வொருவரும் இச்செல்வங்களை அழியாது பேணிக்காப்பது தலையாய கடமையாகும்.



# தமிழகத்தில் மீனவர் நல்வாழ்வுத் திட்டங்கள்

மீன் துறையின் குறிக்கோள்களில் ஒன்று மீனவர் சமுதாயத்தின் சமூகப் பொருளாதார முன்னேற்றமாகும். இதற்காகக் கீழ்க்கண்ட திட்டங்கள் மீன் துறையின் மூலம் செயல்படுத்தப் படுகின்றன.

- இலவச வீடுகள்
- மீனவர் குழுக் காப்புறுதி
- சேமிப்பு மற்றும் நிவாரணம்
- மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை வலிவாக்குதல்
- சாலை வசதி
- சமூகக் கூடங்கள்
- புயல் பாதுகாப்பு இல்லங்கள்

இவை தவிர, மீனவர் மேம்பாட்டிற்காகவும், மீன் உற்பத்தியைப் பெருக்கவும், கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

- கட்டுமரம், வள்ளம், படகுகள் மற்றும் வலைகள் வாங்க மானியம் அளித்தல்
- வெளிப் பொருத்தும் மற்றும் உட்பொருத்தும் இயந்திரம் வாங்க மானியம் அளித்தல்.
- விசைப் படகுகளுக்கான டீசல் மீதான ஆயத் தீர்வையைக் குறைத்தல்.
- தேசிய நல்வாழ்வு நிதித் திட்டம்.
- ஒருங்கிணைந்த கடல் மீனளத் திட்டம்
- மீனவர் பயிற்சி
- மீனவ மகளிர் முன்னேற்றத் திட்டம்.

## ⊙ இலவச வீடுகள்

சென்ற 15 ஆண்டுகளாகத் தமிழக அரசு இலவசமாக மீனவர்களுக்குச் சுமார் 180 கடலோர மீனவ கிராமங்களில் சுமார் 13,000 கான்கிரீட் வீடுகள் கட்டி வழங்கியுள்ளது. இன்னும் சுமார் 5,000 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. தற்போது தமிழக அரசு இத்திட்டத்தினை விரைவாக்கி அதிக வீடுகளைக் கட்டி பெரும்பாலான மீனவக் குடும்பங்கள் தங்களுக்குச் சொந்தமான வீடுகள் பெறுவதற்காக ஆண்டு ஒன்றுக்கு 3,000 வீடுகள் கட்ட ஒப்பளித்து வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் இலவச வீடு பெற விரும்பும் கடல் மீனவர்

- கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். தவிர,
- வீடு ஒன்றுக்கு சுமார் மூன்று சென்ட் பரப்பளவு மனையைத் துறையிடம் ஒப்படைக்கப் பட வேண்டும். இம்மனை கடற்கரையிலிருந்து 300/500 மீட்டர் தூரத்திற்கு அப்பால் இருக்க வேண்டும்.

## ⊙ குழுக் காப்புறுதி

இத்திட்டத்தின் கீழ், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராகவுள்ள சுமார் 1.67 இலட்சம் மீனவர்கள் இறப்பு மற்றும் விபத்துக்காகக் காப்பீடு செய்யப்படுகின்றனர். ஒவ்வொரு மீனவருக்கும் இதற்காக ஆண்டுத் தவணையாக ரூ.9 மத்திய, மாநில அரசுகளால் பகிர்ந்து செலுத்தப்படுகிறது. மீனவரிடமிருந்து எத்தொகையும் வசூலிக்கப்படுவதில்லை.

விபத்தினால் மீனவர் இறந்தால் அல்லது முழு ஊனமுற்றால் அவரது குடும்பத்திற்கு அல்லது அவருக்கு ரூ.21,000 காப்புறுதித் தொகை வழங்கப்படுகிறது. விபத்தினால் பகுதி ஊனமுறும் மீனவருக்கு ரூ.10,500 நிவாரணமாக வழங்கப் படுகிறது.

இதுவரை 902 மீனவக் குடும்பங்கள் அல்லது மீனவர்களுக்கு ரூ.127 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

### காப்புறுதி பெற நிபந்தனைகள்

1. மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும்.
2. வயது 18-லிருந்து 65 வரை இருக்க வேண்டும்.

### காப்புறுதி பெற அளிக்க வேண்டிய முக்கிய சான்றுகள்:

1. விபத்தில் இறந்த ஊனமுற்றவர் பெயர்.
2. கூட்டுறவுச் சங்கத்தினருக்கான சான்று.
3. வாரிசுதார்ரரின் பெயர் மற்றும் வாரிசுச் சான்று.
4. காவல்துறையின் முதல் தகவல் அறிக்கை.
5. பிரேதப் பரிசோதனைச் சான்று.

### சேமிப்பு மற்றும் நிவாரணம்

மீன் பிடிப்பு மந்தமாகவுள்ள காலங்களில் அல்லலபடும் கடல் மீனவர் துயர்துடைக்க அரசு மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தில் கூட்டுறவுச் சங்க உறுப்பினராகவுள்ள மீனவர் ஒவ்வொருவரும் மாதம் ரூ.10 வீதம் ஒன்பது மாதங்கள் செலுத்தி, இத்தொகைக்கு ரூ.180-ஐ அம்மீனவர் மாதம் ரூ.60 வீதம் மூன்று மாதங்களுக்கு அரசிடமிருந்து பெறலாம். இத்திட்டத்தினால் ஆண்டொன்றுக்குச் சுமார் 58,000 மீனவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

1991-92-ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தில் மாற்றம் செய்து மீனவரிடமிருந்து மாதம், ரூ.45 வீதம் எட்டு மாதங்கள் வசூலித்து இத்தொகையுடன் மத்திய, மாநில அரசுகளால் ரூ.720 அளிக்கப்படுவதுடன் சேர்ந்து மொத்தத் தொகையான ரூ.1,080 மாதம் ரூ.270 வீதம் மீன் பிடிப்புக் காலமல்லாத நான்கு மாதங்களில் மீனவருக்கு வழங்க உத்தேசித்துள்ளது.

### மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை வலிவாக்குதல்

தமிழ்நாட்டில் தற்போது 645 பதிவுபெற்ற மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 1,52,013 மீனவர்கள் உறுப்பினர்களாகவுள்ளனர். மீனவர்கள் தங்களின் மேம்பாட்டுக்கான வழிமுறைகளைக் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் பெற நல்ல வாய்ப்புள்ளது.

உறுப்பினர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் விநியோகம் செய்யவும், நியாயவிலைக் கடைகள் மூலம் பொது விநியோகம் மேற்கொள்ளவும், நீர்நிலைகளில் மீன்பிடி உரிமம் பெறவும், நிதிநிலைப் பற்றாக்குறையால் இடைத் தரகர்களின் பிடியில் சிக்கும் நிலையைப் போக்கவும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிகள் மற்றும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து அதிக நிதியுதவி பெறும் வகையில் கடன் வாங்கும் சக்தியை அதிகரிப்பதற்காக ஒரு வருடத்திற்கு ஒரு மீனவர் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து அதிக நிதியுதவி பெறும் வகையில் கடன் வாங்கும் சக்தியை அதிகரிப்பதற்காக ஒரு வருடத்திற்கு ஒரு மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ.25,000 அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு சிறந்த 10 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் ஒரு இலட்சம் பங்கு மூலதன உதவி வழங்கப் படவுள்ளது.

### சாலை வசதி

கடலோரப் பகுதியிலுள்ள மீனவர் கிராமங்களிலிருந்து மீன்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்வதற்கு வசதியாக இணைப்புச் சாலைகள் தேவைப் படுகின்றன. சுமார் ரூ.300 இலட்சம் செலவில் 113 இணைப்புச் சாலைகளுக்கு நிதி ஒப்பளித்து வழங்கப்பட்டதில், இதுவரை 110 சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

### புயல் பாதுகாப்பு இல்லங்கள்

புயல் அபாயமுள்ள மாவட்டங்களில், மீனவர்கள் பாதுகாப்பிற்காகக் கடற்கரையோரப் பகுதியில் 108 புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன.



## அரசின் மானிய உதவிகள்

| இனம் | மீனவர் பங்கு விகிதம் | வங்கிக் கடன் விகிதம் | மான்ய விகிதம் | அதிக பட்ச மான்யம் (ரூபாய்) |
|---|---|---|---|---|
| கட்டுமரமும் வலையும் | 20% | 60% | 20% | 3,000 |
| வலை | 20% | 60% | 20% | 500 |
| விசைப்படகு | 20% | 60% | 20% | 1,00,000 |
| 18' பிளைவுட் படகு | 20% | 60% | 20% | 20,000 |
| வள்ளம் | 20% | 60% | 20% | 12,000 |
| வெளிப்பொருத்தும் இயந்திரம் | — | 50% | 50% | 7,500 |

## ஆயத்தீர்வையைக் குறைத்தல்

விசைப் படகுகளுக்குப் பயன்படுத்தப்படும் டீசல் எரி எண்ணெய் மீதான ஆயத் தீர்வைக் குறைத்திடும் திட்டத்தின்கீழ், செலவினத்தை 80:20 விகிதத்தில் மத்திய, மாநில அரசுகள் ஏற்றுள்ளன. 20 மீட்டர் நீளத்திற்குக் குறைவான மீன்பிடி விசைப்படகுகளுக்கு வாங்கப்படும் டீசல் விசைப்படகுகளுக்கு லிட்டர் ஒன்றுக்கு 35 காசு வரிகுறைப்பு செய்யப்படுகிறது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மூலம் இத்திட்டம் செயல் படுத்தப்படுகிறது.

## தேசிய நல்வாழ்வு நிதித் திட்டம்

மத்திய அரசிடமிருந்து 50 சதவிகித மானியம் பெற்று கடலோர மீனவக் கிராமங்களைத் தேர்ந் தெடுத்து, அங்குள்ள மீனவர்களுக்கு வீடுகள், சமுதாயக் கூடம், குடிநீர் வசதி, கூட்டுறவு வளர்ச் சிக்காக ஆதார நிதி (சீட்டு மணி) போன்றவற்றை வழங்கக் கூடிய திட்டம் தொடர்ந்து இவ்வாண் டிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தமிழகத்தில் கீழ்க்கண்ட 10 மீனவக் கிரா மங்கள் மாதிரிக் கிராமங்களாக உருவாக்கப் படுகின்றன.

| ஒப்பளிக்கப்பட்ட ஆண்டு | கிராமத்தின் பெயர் |
|---|---|
| 1987-88 | வள்ளவிளை |
| | இரட்சன்யபுரம் |
| | கீழ்த் தோட்டம் |
| | டி.வி.எஸ். பேட்டை |
| | நயினார் குப்பம் |
| 1989-90 | சாவடிக் குப்பம் |
| | கூனிமேடு |
| | கோபாலப்பட்டினம் |
| | காரங்காடு |
| | இரளிபுத்தன்துறை |
| 1990-91 | 10 கிராமங்கள் |

தூய்மை, பொறுமை, விடா முயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு மிகவும் இன்றியமையாதவையாகும். ஆனால், இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

—விவேகானந்தர்



# வாழ்க்கைத்தரம் உயர....

## ஒருங்கிணைந்த கடல் மீனளத் திட்டம்

மீனவர் வாழ்க்கைத் தரம் உயரவும், அவர்களிடையே சிக்கனம், சேமிப்பு வழக்கத்தை ஏற்படுத்தவும், மீன் உற்பத்தி யைப் பெருக்கவும் விற்பனை முறையை ஒழுங்கு படுத்தி மீனவர்களின் பொருளாதார வசதிகளைப் பெருக்குவதற்கும் கடலோர மீனள ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மீன்பிடி சாதனங்கள் குளிர்ப்பதனப் பெட்டிகள், வெளிப்பொருத்தும் மற்றும் உள் பொருத்தும் இயந்திரங்கள், கண்ணாடி இழைப்படகுகள் ஆகியவை வழங்கப்படும். இத்திட்டம் ஆறு கடலோர மாவட்டங்களான செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்., காயிதே மில்லத், தஞ்சை, இராமநாதபுரம், சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள 34 கிராமங்களிலுள்ள 27 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சுமார் 4.6 இலட்சம் மீனவர் நலன் கருதி வரும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயலாக் கப்படும். இத்திட்ட மதிப்பீடு ரூ.10.72 கோடியாகும்.

## மீனவர் பயிற்சி

விசைப்படகினை இயக்குவதற்கும், இயந்திரங்களைப் பராமரிப்பதற்கும் மற்றும் நவீன மீன்பிடி கருவிகளை இயக்குவதற்கும் மீனவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காகத் தமிழ்நாட்டில் ஆறு இடங்களில் மீனவர் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இத்துடன் மூன்று மீனவர் பயிற்சி நிலையங்களில், சிறு தரக்கம்மியர் பயிற்சியும் அளிக்கப் படுகிறது. ஒவ்வொரு நிலையத்திலும் 50-60 மாணவர் களுக்கு 10 மாதக் காலத்திற்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100 உதவித் தொகை வழங்கப்படுகிறது.

## மீனவ மகளிர் முன்னேற்றத் திட்டம்

தற்போது தமிழ்நாட்டில் 62 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

இச்சங்கங்களின் மூலம் மீனவ மகளிருக்குக் கூடுதலான வருவாய் ஈட்டவும், கல்வி அறிவினை மேம்படுத்தவும் கீழ்க் கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- மீனவ மகளிர் மீன் விற்பனை செய்வதற்குக் கடனுதவி பெற ஏற்பாடு செய்தல்.
- கைவினைப் பொருட்கள் செய்வதற்குப் பயிற்சி அளித்தல், சுயவேலை வாய்ப்பு.
- மீனவ மகளிரே நியாயவிலைக் கடைகள் மூலம் தேவை யான பொருட்களை விற்பனை செய்தல்.
- மருத்துவ வசதி அளித்தல்.
- முதியோர் கல்வித் திட்டம்.
- குழந்தைகள் காப்பகம் பராமரித்தல்.
- மீனவ மகளிரிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பது.
- மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களை நிர்வகிக்க ஊக்கு வித்தல்.

## மாணவர் பக்கம்




## உலக அதிசயங்கள்:

### பிரமிட் கோபுரம்

பிரமிட் கோபுரம் பற்றி நீங்கள் பாடப் புத்தகங்களில் படித்திருப்பீர்கள்.

எகிப்து நாட்டில் இன்றும் காட்சி யளிக்கும் இந்தப் பிரமிட் உலக அதிசயங் களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இவை, அக்கால மன்னர் களின் உடல்களை அடக்கம் செய்யப்பட்ட கல்லறைகளாகும்.

பிரமிட் கோபுரத்தின் கீழ்த்தளம், சதுரமாக அல்லாமல், பலகோணங் களில் கட்டப்பட்டிருக்கும். மேல்பாகம், கோபுரம் போல் குறுகிக் காட்சியளிக்கும்.

இவற்றுள் கி.மு. 2700 ஆண்டு களுக்கு முன் கட்டப்பட்ட ஒரு பிரமிட், 481 அடி உயரம் கொண்டதாகும்.

## சரித்திரம் படைப்போம்

ஆன்றோர் வாக்கு அருள்வாக்கு;
அதன்படி நடந்தால் நலம்சேர்க்கும்!
சான்றோர் வகுத்த வழியினிலே
சரித்திரம் படைப்போம் உலகினிலே!

உண்மை அன்பு ஒழுக்கமென
உயரிய பண்புகள் அனைத்திலுமே
கண்ணாய் இருந்து காத்திடுவோம்;
காசினி போற்ற வாழ்ந்திடுவோம்!

பரிவு பாசம் பந்தமுடன்
பழக நாளும் பழகிடுவோம்;
விரிந்து பரந்த மனதுடனே
விருட்ச மாகத் திகழ்ந்திடுவோம்!

விலங்கும் நாமும் ஒன்றாமோ?
வேறு பாடு வேண்டாமோ?
நிலைத்து நிற்கும் வழியினிலே
நெஞ்சை நிமிர்த்தி நடை பயில்வோம்!

—கவிஞர் அ. சுப்பையன்



## விளையும் பயிர்:

சென்னை அண்ணாநகர் மேற்கு, எஸ்.பி.ஓ.ஏ. பள்ளி- இளநிலைக் கல்லூரியில், எல்.கே.ஜி. படிக்கும் மாணவன் ஏ. வினோத் கிஷோர்.

இம்மாணவன், நூற்றுப்பத்துத் திருக்குறளை எப்படிக் கேட்டாலும் சொல்கிறான். சின்னஞ்சிறு வய திலேயே ஆற்றல்மிக்க இந்த இளைஞ ருக்கு ஊக்கந் தந்தவர்கள் கல்லூரி முதல்வர் திரு. ஜே.டி. ஜான்சன், தமிழாசிரியர் திரு. சி. வெற்றி வேல், வகுப்பாசிரியை திருமதி ரோஸி கிரேசியஸ்.

# வளமான வாழ்வுக்கு மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் அளிக்கும் விஜய் உரங்கள்






மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்

மணலி, சென்னை 600 068

தேசிய பொருளாதாரத்தின் மூலாதாரம், பொதுத்துறை... அதன் வலிமையைப் பெருக்குவோம்.

HTA 7343






# திரைப்பட மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்

## சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் புகழாரம்!

இந்தியத் திரைப்பட மறுமலர்ச்சிக்கு வித்திட்டு தான் வாழும் காலத்திலேயே ஒரு சகாப்தத்தை உருவாக்கிய பெருமை திரைப்படத் தயாரிப்பாளர், இயக்குநர் திரு. சத்யஜித்ரே அவர்களையே சாரும். தன்னுடைய 40 ஆண்டுக் காலத் திரைப்பட அனுபவத்தின் மூலம் இந்தியத் திரைப்படச் சரித்திரத்தில் ஒரு இமாலயச் சாதனையைப் படைத்தவர் அவர்.

பழமையிலேயே ஊறிப்போயிருந்த இந்தியத் திரைப்படத் துறைக்குத் தனது புரட்சிகரமான திரைப்படங்களால் புத்துணர்வையும் புதிய எழுச்சியையும் கொடுத்து நம் நாட்டில் திரைப்படத் துறையின் வளர்ச்சிக்குப் புதிய பரிமாணங்களை வழங்கியவர். வாழ்க்கையில் நடைபெறும் சாதாரண நிகழ்ச்சிகளைக் கூட, கலை நுட்பத்துடன் சித்திரித்துத் திரை உலகில் தனக்கென ஓர் உயர்ந்த இடத்தைப் பிடித்தவர். திரைத்துறையைச் சார்ந்த பல்வேறு பிரிவுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, வெற்றியின் எல்லைகளைத் தொட்டு அவர் நிகழ்த்திய சாதனைகள் திரைப்பட உலகினர் என்றென்றும் கற்று உணர வேண்டிய கலைக் களஞ்சியம் ஆகும்.

தன்னுடைய முதல் படமான 'பதர் பாஞ்சாலி' (Pather Panchali) முதல், விரைவில் வெளியிடப் பட உள்ள 'அகன்டுக்' (Agantuk) படம் வரை பல்வேறு திரைக்காவியங்களை உருவாக்கி, தனது தனித்தன்மையை அனைத்திலும் பதித்துத் திரைத் துறைத் திறனாய்வாளர்களின் கற்பனைக்கும் எட்டாத அளவிற்கு வெற்றிவாகைகளைச் சூடிய விற்பன்னர் அவர். திரைப்படத் துறையில் அவர் புரிந்துள்ள மகத்தான சாதனைகளால் இன்று திரைப்படத் துறையின் வளர்ச்சியைத் திறனாய்வு செய்பவர்கள் 'சத்யஜித்ரேவிற்கு முன் - சத்யஜித்ரே விற்குப் பின்' என்று இரு கால கட்டங்களாகப் பிரித்து ஆய்வு செய்யுமளவிற்கு அவர் உயர்ந்து விளங்குகிறார்.

திரையுலகில் நம்பிக்கையோடு நுழையும் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு இவரது அனுபவம் ஓர் அகராதி. இந்திய நாட்டின் கலையுலகப் பெருமைகளை முதன் முதலாக உலக அளவில் அறிமுகப்படுத்திய பெருமையும், சிறப்பும் திரு. சத்யஜித்ரே அவர்களையே சாரும். தனது திரையுலக அனுபவத்தால் விரிந்து பரந்து ஆல மரமாய் வியாபித்துள்ள இவர் புதியவர்களுக்குப் புகலிடம் கொடுக்கும் நிழலாகவும், திரை உலகில் ஏற்கெனவே தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்களுக்கு வழிகாட்டியாகவும் வாழ்ந்து வருகிறார்.

திரு. சத்யஜித்ரே அவர்கள் திரைப்படத் துறைக்கு மட்டுமே சொந்தமானவர் அல்லர். தான் ஈடுபட்ட துறைகளில் எல்லாம் தலைசிறந்து விளங்கியதோடு மட்டுமல்லாமல், தனக்கே உரித்தான முத்திரையையும் அவற்றில் அவர் பதித்தார். அவர் குழந்தைகளுக்காக எழுதிய வங்க மொழி நூல்கள், மேற்கு வங்கத்தில் மிகவும் பிரசித்தி பெற்றவை. அவர் ஓவியத்திலும், இசையிலும், சிற்பக் கலையிலும் தனது புகழ் முத்திரையைப் பதித்தவர்.

இவ்வாறு பல்வேறு சிறப்புகளைப் பெற்று பல்துறை விற்பன்னராகத் திகழும் திரு. சத்யஜித்ரே அவர்களுக்கு அண்மையில் இந்திய அரசு நமது நாட்டின் மிகப்பெரிய விருதான 'பாரத ரத்னா' விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளது. தற்போது American Academy of Motion Pictures, Arts and Sciences என்ற அமைப்பு, திரை உலகின் மிக் உயர்ந்த அரிய விருதான OSCAR AWARD- ஐ திரைப்படத் துறையில் அவர் வாழ்நாள் முழுவதும் புரிந்த சாதனைகளுக்காக திரு. சத்யஜித்ரே அவர்களுக்கு வழங்கிச் சிறப்பித்துள்ளது. இந்த விருதினைப் பெறும் முதல் இந்தியரும் இவரே. இந்த விருது தொடங்கப்பட்ட நாள் முதல் கடந்த 80 ஆண்டுகால வரலாற்றில் உலகிலேயே இவரையும் சேர்த்து 6 சான்றோர்களுக்குத்தான் இந்த உயர்ந்த விருதினைப் பெறுகின்ற பெருமை கிடைத்து உள்ளது. அந்த வரிசையில் திரு. சத்யஜித்ரே அவர்கள் இடம் பெற்று நமது நாட்டின் பெயரையும் புகழையும் உலகளவில் உயர்த்தியுள்ளார். இந்த விருதினைப் பெற்றமைக்காக அவரைப் பாராட்டி, பெருமை அடைவது ஒவ்வொரு இந்தியரின் கடமை ஆகும்.

திரு. சத்யஜித்ரே அவர்களுக்குக் கிடைத்துள்ள இந்த அரிய பெருமையினைப் பாராட்ட நமது மாமன்றமும் மகிழ்ச்சியோடு முன் வந்துள்ளது. அந்த வகையில் இம்மாமன்றத்தின் அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களது வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் திரு. சத்யஜித்ரே அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதுடன், தற்போது உடல் நலம் குன்றி இருக்கும் அவர் விரைவில் பூரண குணமடைந்து - இன்னும் பல்லாண்டுக் காலம் வாழ்ந்து மென்மேலும் பல பெருமைகள் பெற்று இந்தியத் திரை உலகிற்கும், இந்தியத் திருநாட்டிற்கும் பல சிறப்புகளைச் சேர்க்க வேண்டுமென்று உளமார வாழ்த்துகிறது என்ற செய்தியினைப் பேரவையின் சார்பாக திரு. சத்யஜித்ரே அவர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.



# மதுவை மறப்பீர்!

மதுவினை அணைத்துக் கொண்டால்
மனைவியே விலகிப் போவாள்!
மதுமொழி மழலைச் செல்வம்
மறந்துமை விட்டுச் செல்லும்!
நதிவரும் நீராய் வந்த
நன்மைகள் வறண்டு போகும்!
சதிவலை உயிர்க்கும் பின்னும்
சிதைத்திடும் வாழ்வுச் சோலை!

முதலிலே அதைக்கு டிப்பீர்
முடிவிலே அதுகு டிக்கும்!
சுதவிலே மறைவீர் முன்பு
கிடப்பீர்நீர் தெருவில் பின்பு!
இதமுடன் இருக்கும்! ஆனால்
ஈரலைத் தின்னும் நஞ்சு!
மதுவது மரணத் தொட்டில்
மறந்தாலோ மகிழ்ச்சிக் கட்டில்!

மக்களை மனைவி தம்மை
மாண்புடன் காப்ப தற்கும்
தக்கநல் இனிய வாழ்வைத்
தரணியிற் பெறுவ தற்கும்
கொக்குபோல் உயிர்பி டிக்கக்
கருதிடும் மதுவை விட்டுப்
பக்குவ மடைவீர்; நல்ல
பண்புடன் நிமிர்ந்து வாழ்வீர்!

புலவர் வெற்றியழகன்

# வளரும் வேளாண்மை

டாக்டர் சோலையப்பன் ஜெயராஜ்
துணைவேந்தர்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்

நமது நாட்டில் பெரும்பாலான கிராம மக்கள் உழவுத் தொழிலை நம்பியே இருக்கின்றார்கள். வருகின்ற ஆண்டுகளிலும் இந்நிலையே நீடிக்கும் என்பதில் ஐயமில்லை.

அறிவியல் தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்ட, இலாபகரமான வணிக ரீதியிலான வேளாண்மையை நனவாக்கித் தந்த வேளாண்மை அறிவியலார்க்கும், விரிவாக்கப் பணியாளர்களுக்கும், தொழில் முனைவதில் பேரார்வம் கொண்ட உழவர் பெருமக்களுக்கும் நாம் நன்றிக் கடன்பட்டிருக்கின்றோம்.

உழவர்களின் வாழ்க்கைத்தரம் உயரவும், பண்ணை வருமானம் பெருகவும், நமது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பல்வேறு ஆராய்ச்சிகளைச் செவ்வனே செய்து, பயனுள்ள தொழில்நுட்பங்களை முனைப்புடன் வழங்கி வருகின்றது.

அண்மைக் காலத்தில், வணிக ரீதியில் வேளாண்மைச் சார்புத் தொழில்களை இலாபகரமாகவும், எளிதாகவும் நடத்துவதற்குப் பல்வேறு தொழில்நுட்பங்களை நமது பல்கலைக்கழகம் கண்டுபிடித்து, கிராம மக்களை - குறிப்பாக கிராம இளைஞர்களை ஊக்குவித்து வருகின்றது. இதன் மூலமாக, வேளாண்மைக்குத் தேவையான அனைத்து இடுபொருள்களையும், தேவையான அளவு, கிராமங்களிலேயே உற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இவ்வணிக ரீதியிலான முன்னோடி வேளாண்மையே நாளைய வேளாண்மை வளர்ச்சிக்கு வித்திட்டு, கிராமங்களின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

## விதை உற்பத்தி

நல்விதையே விளைச்சலின் மூல காரணி. உயர் விளைச்சல் பயிர் இரகங்களைப் பற்றி அறிந்தவுடன், உழவர்கள் தேடும் முதல் இடுபொருள் 'விதை'. விதை உற்பத்தி செய்வது, விதைகளை அறிவியல் முறைகளினால் நன்கு பக்குவப்படுத்துவது, விதை நேர்த்தி செய்வது - போன்றவை இலாபகரமான வேளாண் சார்புத் தொழில்களாகும். தரமான விதை உற்பத்தி செய்வது இலாபகரமான தொழில் மட்டுமல்ல - உழவர் பெருமக்களுக்கு நாம் ஆற்றுகின்ற மிகச் சிறந்த பணியுமாகும்.

விதைகளைப் பக்குவப்படுத்தத் தேவையான விதை தரம் பிரிக்கும் கருவி, விதை உலர்த்தி, விதை நேர்த்திக் கருவி, கடலை உடைக்கும் மற்றும் விதை தரம் பிரிக்கும் கருவி போன்றவைகளை, கிராமங்களில் உள்ள வேலையில்லாப் பட்டதாரிகள் வாங்கி, பயிற்சிபெற்று, சுயவேலை வாய்ப்புகளைப் பெருக்கலாம். மேலும், விதை உற்பத்தியின் போது கிடைக்கும் உபபொருள்கள் குறிப்பாக, தக்காளி விதை எடுக்கும்போது கிடைக்கும் சாற்றினைக் கொண்டு, ஜாம், பழச்சாறு, போன்ற உணவுப் பொருள்கள் தயாரித்து, நல்ல இலாபமடையலாம்.

## செடிகள் உற்பத்தி

பழச்செடிகள், காய்கறிச் செடிகள், மற்றும் நகர்ப்புறங்களில் வீடுகளில் அழகுக்காக வைக்கப்படும் பூச்செடிகள் முதலியவற்றை, ஒட்டுக்கட்டுதல் மூலம் குறுகிய காலத்தில் அதிகமான மாஞ்செடிகளை உற்பத்தி செய்து, உயர்ந்த தரமான ஒட்டுமாங்கன்றுகளை உழவர்களுக்களித்துப் பயன்பெறலாம். திசு வளர்ச்சி முறை மூலம், வாழையில் ஒரு இளம் தண்டிலிருந்து இருபதுக்கும் மேற்பட்ட புதிய தரமான வாழைக்கன்றுகளை உற்பத்தி செய்யலாம். ஏலக்காய்ச் செடிகளையும் இம்முறையில் தயாரிக்கலாம்.

திசு வளர்ச்சி முறை மூலம் ஆர்க்கிட் எனப்படும் மிக அழகிய பூச்செடிகளை, இலைநுனி, வேர்நுனிகளிலிருந்து, குறைந்த காலத்தில் அதிக அளவில் வளர்க்க இயலும். இம்மாதிரியான பூச்செடி நாற்றுக்களை, கிராமங்களில் உற்பத்தி செய்து, நகரங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்பி, அதிக இலாபமடையலாம்.

## பப்பெயின் தயாரித்தல்

பப்பாளி, பொதுவாக பழமாகவே விற்கப்படுகின்றது. நமது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள கோ.2 மற்றும் கோ.5 ரகங்கள் அதிகப் பப்பெயின் கொடுக்கக் கூடியவை. கோ.5 பப்பாளி ஒரு எக்டேருக்கு 1,500 கிலோ பப்பெயின் தரவல்லது. ஒரு கிலோ பப்பெயின் சுமார் நூறு ரூபாய்க்கு விற்கலாம். இதனால், ஒரு எக்டருக்கு, மூன்று ஆண்டுகளில் 1.50 இலட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கும் வழி உள்ளது.

## நுண்ணுயிர் உர உற்பத்தி

பயிர் வளர்ச்சிக்கு, முக்கியமாகத் தேவைப்படும் தழைச்சத்து , மணிச்சத்து போன்றவற்றை நாம் இரசாயன உரங்களாகவே இட்டு வருகின்றோம். இதனால் ஏற்படும் பணச் செலவைக் குறைக்கவும், மண்ணின் தரத்தைப் பாதுகாக்கவும் பல இயற்கை உரங்களை நமது வேளாண்மைப் பல்கலைக்கழகம் கண்டுபிடித்து உள்ளது. இவற்றுள் அசோலா எனப்படும் ஒரு நீர்த்தாவரம், தண்ணீரிலேயே வளர்ந்து, தழைச்சத்து சேகரித்து, நெற்பயிருக்கு அளிக்கின்றது. நன்கு வளர்ந்த அசோலா 30 முதல் 40 கிலோ வரை தழைச்சத்தினைச் சேகரித்து அளிக்கும் திறனுடையது. இதுபோலவே, அசோஸ்பைரில்லம் மற்றும் ரைசோபியம் எனப்படும் நுண்ணுயிர்களும் காற்றிலுள்ள தழைச்சத்தினைச் சேகரித்து, பலவிதமான பயிர்களுக்குக் கொடுக்கும் திறன் பெற்றவை. இந்த இயற்கை உரங்களையும் தயாரித்து, வினியோகித்துப் பயன்பெறலாம்.

## உணவுக் காளான் உற்பத்தி

நகரங்களில், காளான் ஒரு சிறந்த புரதச்சத்துள்ள உணவுப் பொருளாக இப்போது விற்கப்படுகின்றது. காளான் உற்பத்தி செய்தல் மற்றும் காளான் விதை உற்பத்தி செய்தல் மிகவும் எளியது. இதனைத் தயாரிக்க, வேளாண் கழிவுப் பொருள்களான வைக்கோல், கழிவுப் பஞ்சு, மக்காச்சோளக் கதிர், சக்கைத்தூள்

## சட்டமன்றத்தில்...

*உள்ளாட்சி அமைப்புகளில் சிறப்பாகப் பணியாற்றுபவர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்படும்.*

*மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் பணிகளை அதன் பொறுப்பிலே உள்ளவர்கள் ஆர்வத்தோடும், சிறப்பாகவும் செய்தல், மக்களிடையே ஏற்படும் இன வேறுபாடுகளைக் களைவது, ஊராட்சி ஒன்றியங்களுக்கு தேவையான நிலம், கட்டடங்கள் ஆகியவற்றை நன்கொடையாகப் பெறுவது போன்றவற்றில் ஆர்வம் காட்டுதல் ஆகியவற்றில் சிறப்பாகச் செயல்படும் அலுவலர்கள், ஊழியர்கள் ஒவ்வொரு மட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஒரு தங்கப்பதக்கம் வழங்கப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).*

போன்றவையே போதுமானது. காளான் வளர்க்க அதிக இடவசதியும் தேவையில்லை. காளான் வளர்த்தல், காளான் விதை தயாரிக்கும் முறை பற்றியும், நமது வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், ஒவ்வொரு மாதமும் 5-ஆம் தேதி பயிற்சி அளித்து வருகின்றோம். இப்பயிற்சிக்குக் கட்டணம் ஏதுமில்லை.

**கம்போஸ்ட் உரம் தயாரித்தல்**

தென்னை மரங்கள் அதிகமாக உள்ள கோவை, தஞ்சை, மதுரை போன்ற மாவட்டங்களில் தென்னை நார்த் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளன. இவற்றில் இருந்து கழிவுப் பொருளாக வெளிவரும் தென்னை நார் மஞ்சு எளிதில் மக்குவதில்லை. இதனை நாம் இத்தொழிற்சாலைக்கு அருகில் சாலை ஓரங்களில் மலைபோல் குவித்து வைத்திருப்பதைப் பார்க்கலாம்.

இந்தத் தென்னை நார் மஞ்சினை மக்க வைத்து உரமாக நெல், கடலை, போன்ற பயிர்களுக்கு இடும் முறை ஒன்றினை, நமது வேளாண்மைப் பல்கலைக்கழகம் கண்டுபிடித்துள்ளது. இதனை, தொழில் அளவில் பெருக்கி, உரமாக உழவர்களுக்கு அளித்துப் பயன் பெறலாம். இதனைத் தயாரிக்க, ஒரு டன் நார்க்கழிவிற்கு 5 கிலோ யூரியாவும், 5 புட்டிகள் புளுரோட்டஸ் உணவுக் காளான் வித்து மட்டுமே தேவை. இதனை இடுவதால் களர் நிலங்களைச் சீர்திருத்த முடியும். இதேபோல, கரும்புச் சோகைகளையும் கம்போஸ்ட் செய்ய முடியும்.

**காய்கறி, பழங்களைப் பதனப்படுத்துதல்**

வேளாண் விளைபொருள்கள் ஒரே சமயத்தில் அதிக அளவில் கிடைப்பதால் சரியான விலை கிடைப்பதில்லை. இதனைத் தவிர்க்க, எளிதில் அழுகிக் கெடக்கூடிய பொருட்களான பழங்கள், காய்கறிகளைப் பக்குவப்படுத்தி, நீண்ட நாட்கள் கெடாமல் வைத்திருந்து, நல்ல விலைக்கு விற்று இலாபமடையலாம். பல்கலைக்கழக உணவு மற்றும் சத்துத்துறையில், மகளிருக்கென்றே பழச்சாறு தயாரித்தல், உலர்ந்த பழங்கள் தயாரித்தல், ஊறுகாய், கெச்செப், ஜாம், ஜெல்லி போன்றவற்றைத் தயாரிப்பதில் பயிற்சிகள் அளித்து வருகின்றோம். இவைகளைத் தயாரிக்க அதிக விலையுள்ள கருவிகள் தேவை இல்லை. இது ஒன்றுக்கு மூன்று மடங்கு அதிக இலாபம் தரக்கூடிய சிறந்த வேளாண் சார்ந்த தொழிலாகும். வீட்டிலிருந்தபடியே தயாரித்து, விற்று, இலாபம் அடையலாம்.

பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பதனப்படுத்துவதற்கென்றே பல்கலைக்கழகத்தில் பல கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. காய்கறி உலர்த்தி, விதையைப் பிரிக்கும் கருவி, பழங்களுக்கு மெழுகு தடவும் கருவி, பாட்டில்கள் அடைக்கும் கருவி போன்றவற்றைத் தயாரித்து விற்பனை செய்யலாம்.

**வாசனைத் திரவியங்கள் தயாரிப்பது**

தமிழ்நாடு பல வாசனைத் திரவியங்கள் உற்பத்தி செய்வதற்குத் தேவையான இயற்கைச் செடிகள் மற்றும் பூக்கள் உற்பத்தியில் சிறந்த இடம் வகிக்கின்றது. இதனால் நமது நாட்டிற்கு அதிக அந்நியச் செலாவணியும் கிடைக்கும். மல்லிகை மற்றும் முல்லைப் பூவிலிருந்து வாசனைச் சாந்து தயாரிக்கும் கருவி ஒன்று பல்கலைக்கழகத்தில் தயாரித்து வினியோகித்துள்ளோம். இக்கருவியினை, பூக்கள் அதிகமாக உற்பத்தியாகும் இடங்களில் நிறுவி, வாசனைச்சாந்து தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்பி அதிக இலாபமடையலாம்.

**பண்ணை இயந்திரங்கள் உற்பத்தி**

பல புதிய வேளாண் கருவிகள், குறிப்பாக உழவுக் கருவிகள், விதைக்கும் கருவிகள், அறுவடை இயந்திரம், மானாவாரியில் களை எடுக்கும் கருவி, கதிரடிக்கும் கருவிகள், உலர்த்திகள், பூச்சி மருந்து தெளிப்பான்கள் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும், தகுந்த பணிமனைகள் இல்லாமையும், அதிக அளவில் இவை உற்பத்தி செய்யாததாலும், இவை அதிகமாக உழவர்களிடையே பரவவில்லை. உழவர்களுக்கு இக்கருவிகளின் பயன்களை எடுத்துக்காட்டி, உற்பத்தி செய்து, வினியோகிப்பதன் மூலமும் அதிக வேலைவாய்ப்புள்ளது.

**பட்டுப்புழு வளர்ப்பு**

பட்டு உற்பத்திக்கு இவ்வாண்டு நமது அரசு அதிக முக்கியத்துவம் அளித்து உள்ளது. பட்டு உற்பத்தி செய்யும் முறைகள், முசுக்கொட்டைச் செடி பயிர் செய்யும் முறைகளில் பல்கலைக்கழகத்தின் தொடர்ச்சியாகப் பல பயிற்சிகள் இளைஞர்களுக்கு அளித்து வருகின்றோம். மிகவும் குறைந்த நிலமும், குறைந்த தண்ணீர் வசதியும் உள்ள உழவர்களுக்குப் பட்டுப்புழு வளர்த்தல், மிகவும் சிறந்த, தொடர்ந்து வருமானம் தரக்கூடிய தொழிலாகும்.

**தேனி வளர்ப்பு**

கிராம மகளிர்களுக்கு வீட்டுத் தோட்டங்களில், எளிதில் பராமரித்து குடும்பத்திற்கு வருமானம் கொடுக்கக்கூடிய ஒரு உபதொழில் தேனீ வளர்ப்பாகும். தேன் கூடு தயாரித்தல், வளர்த்தல், தேன் சேகரித்தல், தேனீயைத் தாக்கும் பூச்சிகளிலிருந்து பாதுகாத்தல் போன்றவற்றில் பல பயிற்சிகள் அளித்து வருகின்றோம். இப்பயிற்சியில் கிராம இளைஞர்களும் பங்கு பெற்றுப் பயன்பெறலாம்.

**தாவரமுறையில் பயிர்ப் பாதுகாப்பு**

நாம் சாகுபடி செய்யும் பயிர்களைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த, பூச்சி மற்றும் நோய்க் கொல்லி மருந்துகளையே இதுநாள்வரை உபயோகித்து வந்தோம். இப்பொழுது, தாவரப் பொருட்களைக் கொண்டே இவற்றினைக் கட்டுப்படுத்தும் முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வேப்பெண்ணை



## சட்ட மன்றத்தில்...

### அழகு சென்னை - ரூ. 1,250 கோடித் திட்டம்

சென்னை மாநகரை அழகுபடுத்துவதற்காக ரூ.1,250 கோடி செலவில் ஐந்து ஆண்டுகளில் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். அதன் முதல் கட்டமாக, சாலைகள், பாலங்கள், அடுக்கு மாடி வாகனம் நிறுத்தும் இடம், போக்குவரத்து மேம்பாடு, மழைநீர் வடிகால்கள், தெரு விளக்குகள், கால்நடைகளை அகற்றுதல் போன்ற பணிகள் இந்த ஆண்டில் தொடங்கப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).

சென்னை மாநகராட்சியின் அனைத்துப் பகுதிகளிலும் 24 மணி நேரத்துக்குள் குப்பைகளை அகற்றும் ஏற்பாடு நடப்பு ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும். இதற்காகக் கூடுதல் ஊர்திகள் வாங்க நடப்பு ஆண்டில் தமிழ்நாடுநகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நிதிஉதவி பெற்று ரூ.8 கோடி செலவிடப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).

### தமிழ்நாட்டில் 'பாசுமதி' நெல்

பஞ்சாபில் உற்பத்தியாகும் பாசுமதி நெல் போன்ற வாசனை நெல் தமிழ்நாட்டிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டம் ஆடுதுறையிலுள்ள அரிசி ஆராய்ச்சி நிறுவனம் புதிதாகக் கண்டுபிடித்துள்ள இந்த வாசனை ரக நெல்லுக்கு மாண்புமிகு முதல்வரின் அனுமதியைப் பெற்று 'ஜெ.ஜெ' எனப் பெயர் சூட்டப்படும் என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (7.4.1992).

### கைத்தறிக் கிராமம்

நெசவாளர்கள் அதிகம் வசிக்கும் கிராமங்களை அரசு தத்தெடுத்து, மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றவிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் வளர்கம் என்ற கிராமம் கைத்தறிக் கிராமமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கு ரூ.25 இலட்சம் செலவில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (7.4.1992).

### கைத்தறி நெசவாளர்களுக்கு வங்கி

கைத்தறி நெசவாளர்கள் நலனுக்காக தனியே கூட்டுறவு வங்கி ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. கூட்டுறவு அமைப்புகளிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நிதி வசதிகள் உடனுக்குடன் கிடைத்திட தனியாக மாநில மற்றும் வட்டார வங்கிகளை அமைக்க முடிவு செய்து, இதற்கான அனுமதியைப் பெற ரிசர்வ் வங்கிக்கு, கைத்தறித் துறையின் சார்பில் கடிதம் எழுதும்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார் என மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (7.4.1992).

மற்றும் வேப்பங்கொட்டையில் பூச்சி எதிர்க்கும் திறன், பூச்சி உண்ணுவதைத் தவிர்க்கும் திறன், பூச்சி வளர்வதைக் கட்டுப்படுத்தும் திறன், முட்டையிடும் திறன் குறைத்தல் போன்ற பல சிறப்பு அம்சங்கள் இருக்கின்றன. எனவே, வேப்ப மரத்தின் இலைத்தூள், எண்ணெய், பருப்புத்தூள் போன்றவை பூச்சி மற்றும் நோய்க்கட்டுப்பாட்டில் சிறப்பிடம் வகிக்கின்றன. எனவே, வேம்பிலிருந்து புதிய மருந்துகளை வேப்ப விதைச்சாறு, வேப்பெண்ணைய் எமலிசல் போன்றவற்றை வணிக ரீதியில் தயாரித்து, புதிய தொழில்களைத் தொடங்கப் பல வழிமுறைகள் உள்ளன.

**உயிரியல் முறைப் பயிர்ப் பாதுகாப்பு**

பயிர்ப் பாதுகாப்பு பூச்சிக்கொல்லி மருந்துகளை உபயோகிப்பதால், பூச்சிகளில் இம்மருந்திற்கு எதிர்ப்புத்திறன் உண்டாவதுடன், சுற்றுப்புறச் சூழலும் பாதிக்கப்படுகின்றது. இதனைத் தவிர்க்க, எளியமுறையில் புரடீனியா வெட்டுப்புழு மற்றும் ஹீலியோதிஸ் பச்சைப் புழுவினைக் கட்டுப்படுத்த நமது பல்கலைக்கழகம் புதிய வழிமுறையினைக் கண்டுபிடித்துள்ளது. இம்முறை மூலம் வைரஸ் நச்சுயிரிகளைத் தயாரித்து, இப்புழுக்களை அழிக்கலாம். இந்நச்சுயிரிகளை வணிக அளவில் தயாரித்து விற்பனை செய்ய நல்ல வாய்ப்புகள் உள்ளன. கரும்புத் தண்டுப் புழுக்கள், பருத்திக் காய்ப் புழுக்கள், தென்னைக் கருத்தலைப் புழுக்கள் போன்றவற்றை அழிக்க ஒட்டுண்ணிகளையும், வெள்ளை ஈ, அசுவினி மற்றும் அந்துப் பூச்சிகளின் முட்டைகளை அழிக்க பொறிவண்டு ஊன் உண்ணிகளையும் உற்பத்தி செய்து விற்பனை செய்யலாம். அதேபோல, பல பயிர்களைத் தாக்கும் வேர் அழுகல் நோயைத் தடுக்கும் நன்மை செய்யும் பூசணத்தை உற்பத்தி செய்து விதை நேர்த்தி செய்யப் பயன்படுத்தலாம்.

**வேளாண்மைக் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தும் தொழில்கள்**

வேளாண்மையில் நமக்குக் கிடைக்கும் கழிவுப் பொருள்களான வாழை மட்டை, பருத்திமார், கரும்புச்சக்கை, பப்பாளித் தண்டு போன்றவற்றை உபயோகித்து காகித அட்டைகள் எழுதும் பலகைகள், அலுவலக ஏடுகள், அஞ்சல் உறைகள் போன்றவற்றைத் தயாரிக்கலாம். இது போன்ற வேளாண் கழிவுப் பொருள்களிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ளது. இத்தொழிற்கூடத்தில், மாணவ மாணவியர்களுக்கு காகித அட்டைகள் தயாரிக்கும் முறைகள் பற்றிய பயிற்சியளித்துத் தாங்களாகத் தொழில் துவங்கத் தேவையான தொழில்நுட்ப உதவிகள் வழங்கி வருகின்றோம்.

இவை போன்றே, நெல் உமியிலிருந்து சிமெண்ட் செய்யும் தொழில்நுட்பமும், தேங்காய் ஓடுகளிலிருந்து ஊட்டமேற்றிய கரி, நெல் வைக்கோலை உபயோகித்து சிமெண்ட் கூரைகள் தயாரிக்கும் முறைகளையும் பல்கலைக்கழகம் கண்டுபிடித்து உள்ளது.

இவைபோன்ற வேளாண்மை சார்பு உடைய தொழில் முறைகளைக் கிராமங்களிலேயே நடத்தலாம்: பண்ணை வருமானத்தைப் பெருக்கலாம். வீட்டிலுள்ள அனைவருக்கும் வேலைவாய்ப்பளிக்கலாம். இம்முறையில் அமையப் பெற்ற வணிக வேளாண்மையே வருங்கால வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. ●

# 18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி நிறைவு விழா




18-வது அகில இந்தியச் சுற்றுலாத் தொழில் பொருட்காட்சி நிறைவு விழா, சென்னைத் தீவுத் திடலில் 9.4.1992 அன்று நடைபெற்றது. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் தலைமையில் நடந்த இவ்விழாவில், மேதகு ஆளுநர், திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றிப் பரிசுகள் வழங்கினார்.

செய்தி சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்திப் பேசுகையில், இவ்வாண்டு இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சிக்குச் சுமார் 15 இலட்சம் மக்கள் வருகை புரிந்திருப்பதாகவும், இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 4 இலட்சம் கூடுதலாகும் என்றும் குறிப்பிட்டார்.

விழாவிற்குத் தலைமையேற்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் பேசுகையில், 'இவ்வாண்டு ஜனவரி மாதம் 6-ஆம் நாள், மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இந்தப் பொருட்காட்சி மூலம் ரூபாய் ஒரு கோடி வருமானம் கிடைத்துள்ளது. இது கடந்த ஆண்டு வருமானத்தை விட ரூ.10 இலட்சம் கூடுதலாகும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கியது எல்லாமே சிறப்படையும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். 1988 ஒரு ஆண்டைத் தவிர, 1974 முதல் தொடர்ந்து இந்தப் பொங்கல் சுற்றுலாப் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. (வறட்சியின் காரணமாக 1988-இல் பொருட்காட்சி நடத்தப்படவில்லை) இந்தப் பொருட்காட்சியில் பங்கு கொண்ட அனைத்துத் துறைகளும் தங்கள் முத்திரைகளைப் பதித்திருக்கின்றன' என்று கூறினார்.

மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் நிறைவு விழாப் பேருரையாற்றுகையில், 'இந்த 18-வது அகில இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி தமிழகத்தின் தொன்மையையும், பண்பாட்டையும், பொருளாதார வளர்ச்சியையும் விளக்கும் வகையில் அமைக்கப்பட்டு இருந்தது.

இங்கு அமைக்கப்பட்ட பொருட்காட்சி தேசிய ஒருமைப்பாட்டை விளக்கும் வகையில் கேரளா, பாண்டிச்சேரி, மத்தியப் பிரதேசம், குஜராத், பீகார், இமாசலப் பிரதேசம், ஜம்மு காஷ்மீர் மாநிலங்கள் உட்பட 35 மாநில அரசுத்துறை நிறுவனங்களும், 16 பிற மாநிலச் சுற்றுலாத் துறைகளும், மத்திய அரசுத் துறைகளும் பங்கேற்றுள்ளன.

'விசிட் இந்தியா' ஆண்டான 1991-இல் சென்னைக்கு வருகை புரிந்த அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1990-ஆம் ஆண்டைக் காட்டிலும் 13.19 சதவிகிதம் கூடுதல். இதைப்போல் 1990-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 1991-இல் தமிழ்நாட்டுக்கு வருகை புரிந்த உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 15.05 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. அகில இந்திய அளவில் 1991-இல் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும், தமிழ்நாட்டில் உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது' என்று கூறினார்.

பின்னர், இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சியில் கலந்து கொண்ட சிறந்த அரங்குகளுக்கு மேதகு ஆளுநர் அவர்கள் பரிசுகள் வழங்கினார். சிறந்த மாநில அரசுத் துறைகளுக்கான முதல் பரிசு குடும்ப நல்வாழ்வுத் துறைக்கும், இரண்டாம் பரிசு கதர் வாரியத்துக்கும், மூன்றாம் பரிசு தொழில் துறைக்கும் வழங்கப்பட்டது. சிறந்த அரசுத் துறை நிறுவனங்களுக்கான முதல் பரிசு போக்குவரத்து நிறுவனங்களுக்கும், இரண்டாம் பரிசு சென்னை பெருநகர் வளர்ச்சிக் கழகத்திற்கும், மூன்றாம் பரிசு சென்னை மாநகராட்சிக்கும் வழங்கப்பட்டது.

முன்னதாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி ப.சிவகாமி, இ.ஆ.ப. அவர்கள் அறிக்கை வாசித்தார். விழா முடிவில் சுற்றுலாத்துறை இயக்குநர் திரு.எஸ்.மச்சேந்திரநாதன், இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்.

**நிகழ்ச்சித் தொகுப்பு: ஜே. சந்திரன்.**





# கண் பாதுகாப்புக்குச் சில யோசனைகள்

கண்களில் ஏற்படும் காயம் பார்வையை மிகவும் பாதித்துவிடும். ஒரு சாதாரணமான காயம் கூட சரியாகக் கவனிக்கப்படாவிட்டால் அது கண்களைப் பாதித்து பார்வையை இழக்கச் செய்யும்.

உடம்பில் காயம் ஏற்பட்டால் அது அந்தப் பாகத்தை மட்டும்தான் பாதிக்கும். மற்ற பகுதிகளைப் பாதிக்காது. ஆனால், கண்ணில் கருவிழியிலோ, உட்பகுதியிலோ ஏற்படும் தழும்பு, பார்வையை வெகுவாகப் பாதிக்கும். இந்தக் காயங்களை முழுமையாகக் குணப்படுத்த முடியாவிட்டாலும் இவை வெகுவாகத் தவிர்க்கக் கூடியவையே.

**காரணங்கள்:**

கண் பார்வையின்மை வெவ்வேறு காரணங்களினால் ஏற்படுகிறது. இதில் 5 முதல் 10 சதம் காயத்தால் வருகிறது. இது பெரும்பாலும் 10 வயதுக்கு உட்பட்டவர்களைத்தான் தாக்குகிறது. மருத்துவத் துறையின் வளர்ச்சியினால் இன்று குழந்தை பிறப்பின்போது வெவ்வேறு காரணங்களினால் ஏற்படும் கண் பார்வையின்மையை வெகுவாகத் தடுத்துவிடலாம். மிகவும் சாதாரணமாக ஏற்படும் காயங்களை இயற்கையே குணப்படுத்தி விடுகிறது. மிகவும் கூர்மையான பொருள்கள் காயங்களை ஏற்படுத்தி பார்வையைப் பாதிக்கின்றன.

இராமாயண, மகாபாரதத் தொலைக்காட்சித் தொடர்கள் பிரபலமானதால் குழந்தைகள் வில், அம்பு போன்ற பொருள்களால் விளையாடிக் கண் காயம் அடைவது அதிகரித்தது. அசுத்தமான துடைப்பத்தின் நுனியைக் கூராக்கி அம்பாக உபயோகிக்கிறவர்களைவிட அதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தைகள்தான் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இந்தப் பொருட்கள் மிகவும் நுண்ணிய கண்ணுக்குத் தெரியாத கிருமிகளை எடுத்துச் சென்று கண்ணில் சீழ் உண்டாக்குகின்றன. இதிலிருந்து மீள்வது கடினம்.

கூர்மையான பென்சில் நுனி (Graphite) கண்ணுக்குள் புகுந்தால் அது அங்கிருக்கும் திசுக்களைக் கொல்கிறது. சில சமயம் இது கருவிழிக்குள் ஊடுருவி லென்சைப் பாதித்து கண் புரை (Cataract) நோய்க்கு ஆளாக்குகிறது.

**பட்டாசு எப்படி பாதிக்கும்?**

பட்டாசு வெடிப்பதனால் வரும் காயங்கள் இரண்டு வகைப்படும். பட்டாசின் வெப்பத்தினால் ஏற்படுவது ஒன்று. இன்னொன்று, பட்டாசு வெடித்து அதில் வெளிப்படும் சிறு துகள்க்ள் கண்களைத் தாக்குவதால் ஏற்படுவது. சுண்ணாம்புத் தண்ணீர் கூடக் கண்களை மிகவும் பாதிக்கும். கடைகளில் சுண்ணாம்பு பாலித்தீன் பைகளில் விற்கப்படுகிறது. இதைக் கையில் வைத்து அழுத்தி விளையாடும்போது, அதில் உள்ள சுண்ணாம்பு கண்ணில் பட்டு எரிச்சலை ஏற்படுத்தும். இது முதலில் கண்ணின் ஓரத்தில் தங்கி பின்பு சிறிது சிறிதாகக் கண்ணின் உள்பாகத்திற்குச் சென்று பாதிப்பை ஏற்படுத்துகிறது. சீயக்காய்கூட இதே போல் கண்களில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இம்மாதிரி கண்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய பொருள்களைக் கவனமாக உபயோகிக்க வேண்டும். குழந்தைகளுக்குத் தகுந்த அறிவுரை கூறினால் அவர்களுக்குக் கண்களைப் பாதுகாத்து கொள்ளும் பக்குவம் வரும். அவர்களைக் கூர்மையான குச்சி, கம்பி போன்றவைகளுடன் விளையாட அனுமதிக்கக் கூடாது. பென்சில், காம்பஸ், பட்டாசு ஆகியவற்றைக் கவனமாகக் கையாள வேண்டும். சீயக்காயோ, சுண்ணாம்போ கண்ணில் விழுந்தால் உடனே கண்ணை சுத்தமான தண்ணீரினால் கழுவி விட வேண்டும். கண்ணில் காயம் பட்டவுடன் உடனே கண் மருத்துவ நிபுணரைப் பார்ப்பது மிகவும் அவசியம். குழந்தைகளை வெறும் வயிற்றோடு கண் சிகிச்சை நிபுணரிடம் கூட்டி வந்தால் உடனே மயக்க மருந்து கொடுத்து முழுமையாகப் பரிசோதிக்கலாம். கண்களைக் கழுவி நுண்ணுயிர்களை நீக்கும் சிகிச்சையே சிறந்தது.

**கண்ணாடி இல்லாமல் 'வெல்டிங்' வேண்டாம்**

தொழிற்சாலை விபத்துகளினால் சில சமயம் கண் பார்வை பாதிக்கப்படுகிறது. பெரும்பாலும் கண்களைப் பாதுகாக்கும் முறைகளைத் தகுந்தபடி அனுசரிக்காததே இதற்குக் காரணம். இரும்புப் பொருட்களை வெட்டும் வேலை செய்பவர்கள் அவசியம் பாதுகாப்புக் கண்ணாடி அணிய வேண்டும். இல்லையென்றால் இரும்புத் துகள்கள் கண்ணில் விழுந்து மிகுந்த துன்பத்தை விளைவிக்கும். வெல்டிங் வேலை செய்பவர்கள் கண்ணாடி அணியாமல் வேலை செய்தால் பணி செய்து முடித்து சுமார் நான்கு மணி நேரம் கழித்து கடும் கண் வலியுடனும் எரிச்சலுடனும் அவதிப்படுவார்கள்.

பறந்து வந்து காயத்தை விளைவிக்கும் கூர்மையான பொருள்கள் கண்களைப் பெரிதும் பாதிக்கும். உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்தால்தான் பார்வையைக் காப்பாற்ற இயலும். அமிலங்கள், விஷ வாயுக்கள் கண்களைத் தாக்கி காயம் உண்டாக்கலாம். அப்போது முதலுதவியாக உடனடியாகக் கண்களைச் சுத்தமான தண்ணீரினால் குறைந்தது 30 நிமிஷங்கள் கழுவவேண்டும். சாலை விபத்துகளில் கண்ணாடித் துண்டுகள் சில சமயம் கண்களுக்குள் ஊடுருவிவிடும்.

# சட்டமன்றத்தில்...

## திருச்சி, சேலம், நெல்லை-மாநகராட்சிகள் ஆகின்றன

திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய நகராட்சிகள் மாநகராட்சிகளாக உயர்த்தப்படுகின்றன.

திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் நகராட்சிப் பகுதிகளாக இணைந்து திருநெல்வேலி மாநகராட்சி இந்த ஆண்டில் அமைக்கப்படும். சேலம், திருச்சி நகராட்சிகளை மாநகராட்சிகளாக உயர்த்துவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது. இந்த நகராட்சிகள் விரைவில் மாநகராட்சிகளாக உயர்த்தப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).

## முதல்வர் பெயரில் அனைத்து மாவட்டங்களிலும் மாதிரி நகர்கள்

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 'புரட்சித் தலைவி ஜெயலலிதா நகர்' என்ற பெயரில் மாதிரி நகர்கள் இந்த ஆண்டில் உருவாக்கப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார்.

சாதி, சமயமற்ற சமுதாயத்தினை அமைத்து, அனைத்து சமுதாயத்தினரும் சுமுக உறவோடு வாழ வழிவகுக்கும் 'புரட்சித் தலைவி நகர்' என்ற புதுமை நிறைந்த மாதிரி நகர் ஒன்று தருமபுரி மாவட்டம் பர்கூரில் உருவாக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சுகாதார நல மையம், நூலகம், கரிம வாயுக்கலன், பள்ளிக் கூடங்கள், வணிக வளாக மையம், பூங்கா வசதி, இஸ்லாமியர், கிருத்துவர் ஆகியோருக்கான கோயில்கள் உள்ளிட்ட வசதிகள் ரூ.3 கோடி செலவில் அங்கு அமைக்கப்படுகின்றன.

உயர் நோக்கம் கொண்டு உருவாக்கப்படும் இந்த நகரைப் போன்றே தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 'புரட்சித் தலைவி ஜெயலலிதா நகர்' என்ற பெயரில் மாதிரி நகர்களை இந்த ஆண்டு அரசு உருவாக்கும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).

## தமிழக நகரங்களில் திருமண மண்டபங்கள்

தமிழ்நாட்டில் முக்கிய நகரங்களில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெயரில் திருமண மண்டபங்கள் கட்டப்படும்.

விளையாட்டு அரங்கங்கள் இல்லாத நகரங்களில் விளையாட்டு அரங்கங்கள் கட்டப்பட்டு அவற்றிற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெயர் வைக்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்த நாளான, பிப்ரவரி 24-ஆம் நாளன்று கிராமங்களிலும், நகரங்களிலும் உள்ளாட்சித்துறை சார்பில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்குத் தங்கப்பதக்கங்களும் முதலமைச்சர் பெயரில் விருதுகளும் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).

## முதல்வர் பெயரில் மருத்துவ, பொறியியல் கல்லூரிகள்

உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் ஊழியர்களுக்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெயரில் ஒரு மருத்துவக் கல்லூரியும், ஒரு பொறியியல் கல்லூரியும் துவங்கப்படும். இக்கல்லூரிகளில் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்களின் குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகித அளவு இடங்கள் ஒதுக்கப்படும். இதில் துப்புரவுப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகித இடங்கள் ஒதுக்கப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).

---

கிராமப்புறங்களில் வயல்களில் வேலை செய்யும்பொழுது கண்ணில் ஏற்படும் காயங்களில் பெரும்பாலும் காளான் ஊடுருவி பெரும் கேடு விளைவிக்கிறது. இதற்கு உடனே சிகிச்சை அளிக்காவிட்டால் கண் பார்வையை முற்றிலும் இழந்துவிட நேரிடும். களிமண், சேறு ஆகியவை படுவதாலும் கண் ரணமாகி விடுகிறது. கிராம மக்கள் பெரும்பாலும் தங்கள் அறியாமையால் பச்சிலை மருந்து, கோழி ரத்தம் ஆகியவற்றைக் கண்களில் விட்டு, கண் மிகவும் பழுதடைந்த பிறகே கண் மருத்துவத்திற்கு வருகிறார்கள்.

காயமடைந்த கண்களுக்குச் சிகிச்சையளிப்பதை மூன்று கட்டமாகப் பிரிக்கலாம். முதலில் அவசர முதல் உதவி அளிப்பது. இரண்டாவது அருகில் உள்ள சிறு மருத்துவமனையை அணுகி வைத்தியம் பெறுவது. மூன்றாம் கட்டம், பெரிய கண் மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் சிகிச்சை பெறுவது. இவை எல்லாவற்றையும் விட, கண்களைக் காயம் படாமல் பாதுகாப்பதே மிகச் சிறந்ததாகும்.

டாக்டர் கே. ஆனந்தக்கண்ணன்

—நன்றி 'தினமணி'



# தொழில் துறையில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்குவதே எங்களுடைய அரசின் நோக்கம்!

பயன்படுத்துவதற்கு ஏற்ற முறையில், இப்போதுள்ள கிரானைட் கொள்கையை மாற்றுவது குறித்து, தீவிரமாக அரசு பரிசீலனை செய்தது. இதன் அடிப்படையில் கீழ்க்கண்ட கொள்கை முடிவுகளை அறிவிக்கின்றேன்.

1. இனிமேல், அரசு புறம்போக்கு நிலங்களில், உறுதிக் கடிதம் வழங்கப்பட்டவர்கள் தவிர, மற்ற நபர்களுக்குக் கிரானைட் குத்தகை வழங்கப்படமாட்டாது; புது குத்தகைகள் இனிமேல், அரசுக்குச் சொந்தமான டாமின் நிறுவனம், மற்றும் அதன் கூட்டுத்துறை நிறுவனங்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

2. இனிமேல், பட்டா நிலங்களில் கிடைக்கும் விலை மதிப்புள்ள (Paradiso, Kashmir White) போன்ற சில குறிப்பிட்ட கிரானைட் கற்களை வெட்டியெடுப்பதற்கு வழங்கும் குத்தகையில் அரசு நிறுவனங்கள் அல்லது கூட்டுத்துறை நிறுவனங்களுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கப்படும்.

3. பட்டா நிலங்களில் கிரானைட் வெட்டியெடுக்க அனுமதி பெறும் குத்தகைதாரர், தொழில் திட்டம் வைத்திருக்க வேண்டுமென்ற நிபந்தனை நீக்கப்படுகிறது.

4. பட்டா நிலமோ, அரசு புறம்போக்கு நிலமோ, எத்தகைய நிலத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட கிரானைட் ஆனாலும், இனிமேல் கிரானைட் தொடர்பான அனைத்து வர்த்தகமும், அரசுக்குச் சொந்தமான 'TAMIN' நிறுவனம் மூலமாகத்தான் நடத்தப்படும். கிரானைட் வணிகமானது, பாதிக்கப்படாமலும், அதே நேரத்தில், இவ்வணிகம் பெருகுவதற்கு வகை செய்யும் நோக்கத்துடனும், வேண்டிய வழிமுறைகள் உருவாக்கப்பட்டு, விரைவில் அறிவிக்கப்படும்.

அரசு புறம்போக்கு நிலங்களிலிருந்து கிரானைட் கற்களை வெட்டியெடுக்கவும், வெட்டியெடுக்கப்பட்ட கற்களை செய்முறைப்படுத்தவும், பல புது நிறுவனங்கள் கூட்டுத்துறையில் அமைக்கப்படுவதை அரசு வரவேற்கும்.

**பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய வட்டங்கள்**

தமிழகத்தில் ஏற்கெனவே 31 வட்டங்கள் மிகவும் பின்தங்கிய வட்டங்களாகவும், 76 வட்டங்கள் பின்தங்கிய வட்டங்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன. இப்பட்டியலில், கோவை மாவட்டத்தில் அவினாசி, காமராசர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர், சேலம் மாவட்டம் ராசிபுரம், புதுக்கோட்டை வட்டம், சிதம்பரனார் மாவட்டம் சாத்தான்குளம், மற்றும் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள பாளையங்கோட்டை ஆகிய வட்டங்கள், பின்தங்கிய வட்டங்களின் பட்டியலில், இந்த ஆண்டு முதல் சேர்க்கப்படுகின்றன என்று அறிவிப்பதில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்த வட்டங்களும் அரசின் சலுகைகளை இனிப்பெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் புதிய தொழிற்கூடங்கள்**

கோவை மாவட்டம் திருப்பூரில் தொழிற்பேட்டை அமைப்பதற்காகத் தனியார் தொழில் முனைவர்களால் வாங்கப்பட்ட நிலத்தில், தொழிற்பேட்டை அமைப்பதற்கான அடிப்படை வசதிகளைத் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் செய்துள்ளது. அத்தொழிற்பேட்டையில் தனியார் துறையில், பின்னல் ஆடை ஏற்றுமதி மின் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு, அவைகள் செயல்பட்டு வருகின்றன.

இதேபோன்று இந்த ஆண்டு, இன்னும் 3 இடங்களில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் உதவி கொண்டு, தனியார் தொழிற்பேட்டைகள் நிறுவப்படும். மதுரை மாவட்டம் வேடத்தகுளம், மற்றும் வல்லகுண்டு கிராமங்களில், பின்னலாடை தொழிற்பேட்டையும், பெரியார் மாவட்டத்தில் வடமுகம், காங்கேயம் பாளையம் கிராமத்தில் பல்தொழிற்பேட்டையும், சேலம் மாவட்டத்தில் நாமக்கல்லில் ஆட்டோ உதிரிப்பாகங்கள் தயாரிப்புத் தொழிற்பேட்டை ஒன்றும், தனியார் துறையில் நிறுவப்படும் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மின் உற்பத்திப் பெருக்கம்**

கூட்டுத் துறையில் ஜெயங்கொண்டபுரத்தில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுத்து, அதன் மூலம் மின் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை, நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன்.

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில், பிள்ளைப்பெருமாநல்லூரில், காவேரிப் படுகையில் கிடைக்கும் நிலவாயுவைப் பயன்படுத்தி, மின் உற்பத்தி செய்யும் திட்டம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. மத்திய அரசு முதலில் மின் உற்பத்திக்காக, நாளொன்றுக்கு 2 மில்லியன் கன மீட்டர் அளவு நில வாயுவை, மின் உற்பத்திக்காக நம் மாநிலத்திற்கு அளிப்பதாகக் கொள்கை அளவில் ஒப்புதல் அளித்து இருந்தது. ஆனால், தற்போது, 0.25 மில்லியன் கன மீட்டர் நில வாயுவை மட்டுமே கொடுக்க முடியும் என்று கூறியுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெற்று, கூட்டுத் துறையில் பிள்ளைப் பெருமாநல்லூரில், PY-1 என்ற கடற்பகுதியில் சோதனைகள் மேற்கொண்டு, நிலவாயுவை எடுப்பதற்கும், அதனைக் கொண்டு மின் உற்பத்தி செய்வதற்கும், ஒருங்கிணைந்த முறையில் ஒரு திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க, இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**அயல்நாட்டு இந்தியர் மற்றும் வெளிநாட்டு முதலீடு**

அயல்நாடு வாழ் இந்தியர்கள், மற்றும் ஏனைய அயல் நாட்டினர்களின் முதலீடு, தமிழகத்தில் பெருகுவதற்குத் தீவிர் முதலீடு ஊக்குவிப்பு இயக்கம் (Investment Campaign) மேற்கொள்ளப்படும். அரசுத்துறை அலுவலர்களும், தொழில் அதிபர்களும் அடங்கிய சிறப்புக் குழுவினை, அயல் நாடுகளுக்கு அனுப்பி, நமது மாநிலத்தில் தொழில் தொடங்குவதற்கான சாத்தியக் கூறுகளைக் கருத்தரங்கு, வீடியோ படக்காட்சி ஆகியவைகள் மூலம் விளக்கிக் கூறி, அயல்நாடுகளில் வாழும் இந்தியர்கள், நம் மாநிலத்தில் முதலீடு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மூடிய தொழிற்சாலைகளைத் திறக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

மூடிக் கிடக்கும் தொழிற்சாலைகளை, தொழிலாளர்களின் நலன் கருதி மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கைகளை, இந்த அரசு எடுத்து வருகின்றது என்பதை, இந்த மாமன்றம் அறியும்.

சென்னையில் ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனம் தற்போது திறக்கப்பட்டு, இரண்டாயிரம் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள். அதேபோன்று, பின்னி மில்லைத் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று, அதாவது 13.4.1992 அன்று திறப்பதற்கான நடவடிக்கைகளை, அரசு எடுத்துள்ளது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். நான் நேரடியாக 4.2.1992 அன்று பின்னி மில் தொழிற் சங்கத்துடனும், அரசியல் கட்சித் தலைவர்களுடனும், பின்னி மில் நிர்வாகத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தி, தொழிலாளர் நல ஆணையாளர், நிர்வாகம் மற்றும் தொழிலாளர் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு முத்தரப்புக் குழுவினை அமைத்து, ஆலையைத் திறப்பதற்குச்



• ஒரு மனிதனை, அவன் செய்யும் தொழிலைக் கொண்டு மதிப்பிடுதல் கூடாது. ஆனால், அவன் தனது கடமையை எம்முறையில் செய்கிறான் என்பதை அறிந்து மதிப்பிடுவதே முறையானது.

- சுவாமி விவேகானந்தர்

சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்தி அறிவுரைகள் வழங்கினேன். இவ்வாலையின் பதப்படுத்தும் நிலையத்தைப் புவனகிரிக்கு மாற்றுவதைத் தவிர்க்க முடியாது என்று எடுக்கப்பட்ட முடிவைத் தொழிற்சங்கமும் ஏற்றுக்கொண்டது. இதனால் புவனகிரிக்குச் சென்று பணி செய்ய விரும்பாதவர்களை, வேலையிலிருந்து நீக்கக்கூடாது என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது. தொழிற்சாலைகள் மேம்பாட்டு வங்கியின் மூலம், நிதி உதவி பெறவும், ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாலையில் பணியாற்றிய எல்லாத் தொழிலாளர்களுக்கும், நிர்வாகம், இவ்வாலையைத் திறக்கும் நாளன்று, ஒரு மாத ஊதியத்தைக் கருணைக் கொடையாக வழங்கவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எனவே, தொழிற்சங்கம், நிர்வாகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், இவ்வாலை 13.4.1992 அன்று திறக்கப்படும்.

**மால்கோ (Malco)**

மேட்டூர் மால்கோ நிறுவனம் தற்போது மூடப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. தொழிற்சங்கங்கள் இந்த ஆலையைத் திறந்து, அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வேலை கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகின்றன. அதன் தொர்டர்பாக அலுவலர்களுடனும், நிர்வாகத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன்.

நிர்வாகம், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு, ஏறத்தாழ ரூ.25 கோடி மின்சாரக் கட்டணத்தை, பாக்கித் தொகையாக வைத்துள்ளது. அதில் ஒரு குறிப்பிட்ட தொகையை 'அலுமினியம் ரெகுலேசன் நிதி'-யிலிருந்து கட்டவும், மீதமுள்ள தொகையைத் தவணை முறையில் செலுத்துவதற்கும், நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. இந்த நிறுவனத்திற்கு ஒரு யூனிட் மின்சாரத்திற்கு ஒரு ரூபாய் வீதம் நான்கு ஆண்டுகளுக்கு சலுகைக் கட்டணத்தில் மின்சாரம் கொடுக்கவும், நான்கு ஆண்டுச் சலுகைக் காலம் முடிந்ததும், அப்போதைய கட்டண விகிதத்தின்படி மின் கட்டணம் செலுத்த வேண்டுமென்றும் அரசு அனுமதி வழங்கி உள்ளது.

தற்போது MALCO நிறுவனம் உயர்ந்தபட்ச 'மின் சுமை'யின் (Maximum Demand) அடிப்படையில், ஒரு குறிப்பிட்ட, குறைந்தபட்ச மின் கட்டணம் செலுத்தி வருகிறது. அதை மாற்றி, 1.4.1991 முதல், எவ்வளவு மின்சாரம் பயன்படுத்தப்படுகிறதோ அந்த அளவிற்கு மட்டும் மின் கட்டணம் செலுத்த, இந்த அரசு சலுகை அளித்துள்ளது. மேலும், 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரி ஒத்தி வைக்கும் சலுகையையும் அளிக்க, அரசு முன் வந்துள்ளது. இந்தச் சலுகைகள் அனைத்தும், தொழிலாளர்களின் நலன் கருதியே, அரசு இந்த நிறுவனத்திற்கு அளிக்க முன் வந்துள்ளது. இவற்றைப் பயன்படுத்தி, மால்கோ நிறுவனம் அலுமினியத் தொழிற்சாலையை மூன்று மாத காலத்திற்குள் மீண்டும் திறந்து, அனைத்துத் தொழிலாளர்களுக்கும், முழுமையாகப் பணியினை அளிக்கும் நிலைமை உருவாகும், என்று நம்புகிறேன்.

**தொழில் - நிதி புனரமைப்புக் குழுமம்**

தொழில் மற்றும் நிதி புனரமைப்புக் குழுமத்தினால் (Board of Industrial Finance and Reconstruction) புனரமைப்புச் செய்யப்படும் நலிவுற்ற நிறுவனங்களுக்குத் தற்பொழுது 3 ஆண்டுகளுக்கு விற்பனை வரி ஒத்தி வைத்துச்செலுத்தும் சலுகை, வழங்கப்பட்டு வருகிறது. இனிமேல் தகுதி வாய்ந்த நலிவுற்ற நிறவனங்களுக்கு, விற்பனை வரி ஒத்தி வைத்து செலுத்தும் சலுகை ஐந்து ஆண்டுகள் வரை வழங்கப்படும்.

**அரசு முதலீட்டைத் திரும்பப் பெறுதல் (Policy of Disinvestment)**

நேரடி உற்பத்தியிலிருந்து சிறிது சிறிதாக விடுபட்டு, தனியார் துறைக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதிலும், ஊக்கச் சலுகைகளை அறிவிப்பதிலும், அரசு கவனத்தைச் செலுத்தும் என ஏற்கெனவே இந்த அரசு அறிவித்துள்ளது.

இந்த அடிப்படையில் 9 கூட்டுத்துறை நிறுவனங்களில், தொழில் வளர்ச்சிக் கழகம் செய்துள்ள முதலீட்டைத் திரும்பப் பெற, (Disinvestment) முடிவெடுத்துள்ளோம். மேலும் நான்கு கூட்டுத் துறை நிறுவனங்களில், செய்துள்ள முதலீட்டைத் திரும்பப் பெறும் நடவடிக்கை, முடிவடையும் தறுவாயில் உள்ளது. பொதுத் துறை நிறுவனங்களில் செய்துள்ள முதலீட்டைத் திரும்பப் பெற, படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும். முதல் கட்டமாக, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், தமிழ்நாடு தொழில் வெடி மருந்துக் கழகம் ஆகிய நிறுவனங்களைக், கூட்டுத் துறைக்கு மாற்றவும், பின் இந் நிறுவனங்களின் பங்கு மூலதனத்தில், அரசின் முதலீட்டைச் சிறிது சிறிதாகத் திரும்பப் பெறுவது எனவும் உத்தேசித்துள்ளோம். சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட், தமிழ்நாடு உப்பு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மெக்னீசியம் மற்றும் மரைன் கெமிக்கல்ஸ் லிமிடெட் ஆகிய நிறுவனங்களைத், தனியார் துறைக்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

# அயல்நாடு வாழ் இந்தியர்கள்

# தமிழ்நாட்டில் தொழில் தொடங்க -

# தொழில் முதலீடு செய்ய வசதி!

**தீப்பெட்டித் தொழில்**

முழுவதும் இயந்திர மயமாக்கப்பட்ட தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிகளைத் தவிர, நம் நாட்டில் உற்பத்தியாகும் தீப்பெட்டிகள் முழுமையும், தமிழகத்தில் உள்ள சிறு தொழில், மற்றும் மிகச் சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. மேற்கண்ட மூன்று வகைத் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு, தனித்தனியாக விதிக்கப்பட்டுள்ள இன்றைய ஆயத்தீர்வை முறை, சிறு மற்றும் மிகச் சிறு தீப்பெட்டி தொழிற்சாலைகளைப் பாதிக்கிறது.

தீப்பெட்டி, ஒவ்வொருவர் வீட்டிலும் உபயோகப்படுத்தப்படும் பொருளாக உள்ளது. இத்தொழிலை நம்பி ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள். எனவே, சிறு மற்றும் மிகச் சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு, ஆயத்தீர்வையிலிருந்து முழு விலக்களிக்க, மத்திய அரசை நாட இருக்கிறேன். இச்சலுகையால் சிறு தொழிற்சாலைகள், பெரிய தொழிற்சாலைகளுடன் போட்டியிட்டுத் தங்களுடைய பொருட்களை விற்பனைச் செய்யும் வாய்ப்பினைப் பெறும்.

**புது நிறுவனங்கள்**

இந்தியத் தொழில் கடன் மற்றும் தொழில் முதலீட்டுக் கழகத்தின் (Industrial Credit and Investment Corporation of India) ஆதரவுடன், சென்னையில் ஒரு நிர்வாகப் பயிற்சி நிலையம் (Institute of Management) அமைக்கவும், வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்களை ஈர்க்கும் வகையில் அனைத்து அடிப்படை வசதிகளுடன், ஏற்றுமதி ஊக்குவிப்பு நகர் ஒன்றை (Export City) கிழக்குக் கடற்கரையில் (East Coast) உருவாக்கவும், அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மோட்டார் வாகனத் தொழிற்சாலை**

இந்தியாவில் முன்னணியில் உள்ள அசோக் லேலண்டு நிறுவனம், சுமார் ரூ.550 கோடி முதலீட்டில், ஓசூரில் மோட்டார் வாகனங்கள்

# தமிழ்நாடு வணிகர் நல வாரியம் மாற்றியமைக்கப்பட்டது.

அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான தமிழ்நாடு வணிகர் நல வாரியம், மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர்

துணைத்தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்

**அதிகாரிகள் அல்லாத உறுப்பினர்கள்**

1. திரு. கே. மாயாண்டி,
   திருச்சி மாவட்ட வர்த்தகச் சபைத் தலைவர்.
2. திரு. ஆர். ஜெகதீசன்,
   கோவை மாவட்டச் சிறுதொழில்கள் சங்கப் பொதுச் செயலாளர்.
3. திரு. ஆர். ரத்தினசாமி,
   மோட்டார் உதிரிப் பாகங்கள் விற்பனையாளர்கள் சங்க முன்னாள் தலைவர்.
4. திரு. ஓபுல் ரெட்டி,
   இந்துஸ்தான் வர்த்தகச் சபை.
5. திரு. வி.ஆர். முத்து,
   விருதுநகர் வர்த்தகர் கழக முன்னாள் செயலாளர்.
6. திரு. ஏ.ஆர். தாமோதரன்,
   முன்னாள் எம்.எல்.சி - அகில இந்தியப் பெட்ரோலிய வர்த்தகக் குழுவின் கூட்டமைப்பு உறுப்பினர்.

**தேசிய அறிவொளி இயக்கத்தில் பசும்பொன் மாவட்டம்**

தேசிய அறிவொளி இயக்கத் திட்டத்தின்கீழ் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், 85 சதவிகிதம் எழுத்தறிவு பெற்று தேசிய அறிவொளி இயக்கத்திட்டத்தின்கீழ் மாநிலத்திலேயே முதன் மாவட்டமாகத் திகழ்கிறது.

**சிறுசேமிப்பு: தமிழ்நாடு சாதனை**

1991-'92-ஆம் நிதியாண்டில் சிறுசேமிப்பு வாயிலாகத் தமிழகம் ரூ.500 கோடி திரட்டியுள்ளது. இது முந்தைய ஆண்டைவிட ரூ.100 கோடி அதிகமாகும்.

1991-'92-ஆம் ஆண்டுக்குச் சிறுசேமிப்பு வாயிலாக ரூ.500 கோடியைத் திரட்ட அரசு இலக்கு நிர்ணயித்திருந்தது.

முதன்முறையாக முதலீட்டாளர்களுக்கு 2.25 சதம் ஊக்கத்தொகை அறிவிக்கப்பட்டது. முகவர்களுக்கும் பல சலுகைகள் அளிக்கப்பட்டன.

7. திரு. டி. சாந்தகுமார், கீர்த்திலால் காளிதாஸ், வைர வியாபாரி, கோவை.

**உறுப்பினராக உள்ள அதிகாரிகள்**

1. செயலர், இந்து அறநிலையத்துறை.
2. செயலர், நிதித்துறை.
3. செயலர், தொழில் துறை.
4. செயலர், விவசாயத்துறை.
5. ஆணையர், வர்த்தக வரி.
6. இணை ஆணையர், வர்த்தக வரித்துறை, இவ்வாரியத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாகவும், செயலாளராகவும் செயல்படுவார்.

வணிகர் நல வாரியம் வர்த்தக வரி ஆணையரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இருக்கும்.

---

தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசை அணுகியுள்ளது. இத்தொழிற்சாலை நிறுவிட அடிப்படை வசதிகள், மற்றும் வேறுபல உதவிகளையும், சலுகைகளையும் அளித்திட Ashok Leyland அரசை வேண்டியுள்ளது. இது அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.

இத்தொழிற்சாலை மிக விரைவில் அமைக்கப்படும் என்று நம்புகிறேன். இதனால் ஓசூரைச் சுற்றிலும் தொழில் வளர்ச்சி மேலும் பெருகும்.

மற்ற தொழில் அதிபர்களையும், இதுபோன்ற மிகப் பெருந் தொழில்களை, தமிழகத்தில் அமைக்க வரும்படி, இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன். இதற்காக இந்த அரசு எல்லா உதவிகளையும் அளிக்கும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'டிட்கோ' நிறுவனம் ரூ.75 கோடி செலவில் அலுமினியம் உருட்டுப் பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினைத் தஞ்சாவூர் மாவட்டத்திலும், புதிதாகக் கூட்டுத் துறையில் நிறுவ உள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் பர்கூரில் கூட்டுத் துறையில் பழங்கள் பதனிடும் ஆலை ஒன்றை நிறுவுவதற்காகச் சந்தை நிலவர ஆய்வு (Market Survey) தொழில்நுட்ப ஆய்வு போன்ற முதன்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் உற்பத்தித் திறன், ஆண்டொன்றிற்கு 10,000 டன்கள் ஆகும். இத்திட்டத்தின் முதலீடு ரூ.15 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டங்களை விரைவில் செயல்படுத்துவதற்கான தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**- மாண்புமிகு முதல்வர் அவர்கள் 6.4.92 அன்று, தொழில் மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்கு அளித்த பதிலுரை.**





# தன்னை உயர்த்திய இசைக் கருவியின் பெருமையை உயர்த்தியவர்

## திரு. குன்னக்குடி வைத்தியநாதன் பாராட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள், தனது 25 ஆண்டுக் காலக் கலைச் சேவையைப் பூர்த்தி செய்தமையைப் பாராட்டும் முகத்தான், நடைபெறுகின்ற இந்த இனிய விழாவில் பங்கேற்பதில், நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

கலைத் துறையிலே ஈடுபட்டவர்களுக்கு, ஏதாவது ஒரு துறையில் சாதனை புரியவேண்டும் என்ற ஆர்வமும், அதனைத் தன்னுடைய கடுமையான உழைப்பினால், எப்படியும் அடைய முடியும் என்ற நம்பிக்கையும் பொதுவாக இருக்கும். தனது துறையில் புதிய உத்திகளைக் கையாண்டு, அதன் மூலம் மக்கள் மனதில் என்றென்றும் நிரந்தர இடம் பெற வேண்டும் என்ற தணியாத தாகம்தான், உண்மையான கலைஞர் ஒவ்வொருவருக்கும் இருக்கும்.

இந்த உண்மையைக் கலைத்துறையில் ஈடுபட்ட பல பெரியவர்கள் உலகிற்கு உணர்த்தி உள்ளனர்; சாதனை படைத்துள்ளனர். அந்தச் சாதனையாளர்களின் பட்டியலில், 25 ஆண்டுகள் சிறப்பான முறையில் கலைச் சேவை புரிந்து, நமது பாராட்டையெல்லாம் பெற்று, இடம் பெறுகிறார் திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள்.

இன்று இந்தியாவிலேயே, ''வயலின்'' என்று கூறினால், உடனடியாக அனைவருக்கும் நினைவு வரும் பெயர், ''குன்னக்குடி'' தன் கலைச் சேவையால், தான் பிறந்த மண்ணிற்கு நாள்தோறும் சிறப்புச் சேர்த்துக் கொண்டிருப்பவர், திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள் என்றால், அது மிகையாகாது. ஏன், தன்னை உயர்த்திய இசைக் கருவியான வயலின், இன்று அவர் பெயரால் பெருமை அடைந்துள்ளது என்று கூறினால் கூட, எவராலும் மறுக்க முடியாது!

அவ்வகையில் தனக்கும், தனது திறமையால்தான் இயக்கும் இசைக் கருவிக்கும் புகழ் கிடைக்கும் அளவு, உயர்ந்துள்ள திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களுக்கு, இன்றைய விழாவில் 25 பொற்காசுகள் பதித்த வயலின் ஒன்றை நினைவுப் பரிசாக வழங்கியுள்ளது, சாலப் பொருந்தும். அதனை அவருக்கு வழங்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

1935-ஆம் ஆண்டு, குன்னக்குடி என்ற சிறிய ஊரில் பிறந்த இவர், சிறு வயது முதலே கர்நாடக இசையிலும், கதாகாலட்சேபத்திலும் மிகுந்த ஆர்வத்தைக் காட்டினார். தனது 12 வயதிலேயே, கர்நாடக இசையில் தலை சிறந்த பாடகர்களான, திரு. அரியக்குடியார், திரு. செம்மங்குடியார், ஏன் - இன்றைய விழாத் தலைவர் திரு. மகாராஜபுரம் சந்தானம் போன்ற சான்றோர்களுடன் சென்று, பல கச்சேரிகளில் பங்கு கொண்டுள்ளார்.

தனது சிறு வயது முதலே இசை மீது மோகம் கொண்டு, இசை என்பது தனிப்பட்ட குழுவினருக்கு மட்டும் உரியது அல்ல; எல்லாப் பொது மக்களும் எளிதில் புரிந்து கொண்டு, இன்புற வேண்டியதே இசைக்கலை என்றும், எனவே சாதாரண மக்களும் ரசிக்கக்கூடிய வகையில், அதனை அமைக்கவேண்டுமென்று, தனக்கென ஒரு தனி பாணியை உருவாக்கிக் கொண்டவரும், அதில் தலைசிறந்து உயர்ந்தவரும்தான் திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள்.

வயலின் ஒரு கூட்டு இசைக் கருவி என்றாலும், முதன் முதலாக வயலினில் தனிக்கச்சேரி செய்து, சாதனை படைத்ததோடு, இதுவரை 780 பக்திப் பாடல்களுக்கு இசை அமைத்துள்ளவர் என்ற பெருமையும் இவரைச் சாரும்.

கலைத் துறையிலே எல்லா இடங்களையும் பார்த்துவிட வேண்டும் என்ற தணியாத எண்ணம் கொண்ட இவர், சில திரைப்படங்களுக்கு இசை அமைத்ததோடு, தானே இசையை மையமாகக்

கொண்ட ஒரு திரைப்படத்தையும் தனியே தயாரித்து வெளியிட்டார்.

பெரியவர் - சிறியவர்; ஆண் - பெண் என்ற பாகுபாடின்றி, அனைவரும் இவரது இசை நிகழ்ச்சிகளை இன்றும் ஆர்வத்துடன் கேட்கிறார்கள்.

கர்நாடக இசையையும் இவரால் திறமையாக வாசிக்க முடியும்; ஜனரஞ்சகமான இசையையும் இவரால் தர முடியும்; திரை இசையும் இவருக்குத் தாராளமாக வரும். எத்தகைய கூட்டத்தினரின் எதிர்பார்ப்புகளையும் முழுமையாகச் சிந்திக்கக்கூடிய ஒரு சிறந்த கலைஞர் உண்டென்றால் - அவர் குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள்தான்!

இவரது வயலினில் இருந்து இசை மட்டுமல்ல; வார்த்தைகளே வரும். இசை விழாவில் மட்டுமன்றிப் பொது வாழ்விலும் ஈடுபட வேண்டும் என்ற தணியாத ஆர்வம் கொண்ட இவர், மழை பெய்யாது சென்னை நகர் குடிநீர்ப் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டபொழுது, தனக்கே உரித்தான பாணியில், புழல் ஏரிக்குச் சென்று மேக ரஞ்சனி, ஜலார்ணவம் மற்றும் அம்ரிதவர்ஷிணி ஆகிய இராகங்களில் இரண்டு மணி நேரம் தொடர்ந்து வயலின் வாசித்து, வருண பகவானை வேண்டிய நிகழ்ச்சி, மக்களின் நலனில் இவர் கொண்டுள்ள அக்கறைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

வயலின் சக்ரவர்த்தி என்றும், எழில் இசை ஏந்தல் என்றும், திரை இசை மன்னன் என்றும், கலை மாமணி என்றும் பல பட்டங்களைப் பெற்ற இவருக்கு, இன்று தங்க வயலின் வழங்கும் வாய்ப்பை எனக்கு அளித்த சபாக்களின் கூட்டமைப்பிற்கு, எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனது 25 ஆண்டுக்காலக் கலை வாழ்வில், அவர் எத்தனையோ சவால்களைச் சந்தித்து, சாதனைகள் புரிந்து, இன்று நம் முன்னே வெள்ளி விழா நாயகனாகக் காட்சி அளிக்கின்றார்.

அவரது கலைப்பணி இன்னும் மென்மேலும் தொடர வேண்டும், வளர வேண்டும், குறைந்தது இன்னும் ஒரு 25 ஆண்டு காலத்திற்காவது, இவர் தன்னைக் கலைத் துறைக்கு அர்ப்பணித்துச் சேவை செய்யவேண்டும், என்ற என் விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் சென்ற இடங்களில் எல்லாம் சீரும் சிறப்பும் பெறவேண்டும்; வயலின் இசைக்கு மேலும் புகழ் சேர்க்க வேண்டும், இனிவரும் வயலின் இசைக் கலைஞர்களுக்கு, இவர் ஓர் நிரந்தர வழிகாட்டியாகத் திகழ வேண்டும்.

**—மாண்புமிகு முதல்வர் அவர்கள் 31.3.92 அன்று, வயலின் சக்ரவர்த்தி திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களின் 25 ஆண்டுக் காலக் கலைச் சேவையைப் பாராட்டி 'தங்க வயலின்' பரிசளித்து ஆற்றிய உரை.**



## இந்தியக் கலைச் செல்வங்கள்

**இந்தியக் கலைச் செல்வங்களாகக் கருதப்படும் அஜந்தா, எல்லோரா குகைகளைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும், ஜப்பானில் உள்ள வெளிநாட்டுப் பொருளாதாரக் கூட்டுறவு நிதியமைப்புடன் 4,406 மில்லியன் யென் கடன் ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் 3,745 மில்லியன் ஜப்பானிய யென், அஜந்தா, எல்லோரா குகைகளைப் பாதுகாக்கவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் பயன்படுத்தப்படும். அது தவிர இக்குகைகளுக்கு அருகிலுள்ள அவுரங்காபாத் விமான நிலையம் நவீனமாக்கப்படும்.**

**அஜந்தா மற்றும் எல்லோரா குகைகளைப் பற்றி சுற்றுலாத்துறை கவர்ச்சிகரமான கையேடுகளை வெளியிட்டு, சுற்றுலாப் பயணியரைக் கவர்ந்திழுக்கப் பார்க்கிறது. அதேபோன்று பீகாரில் உள்ள புத்தகயாவில் சுற்றுலாவை வளர்ப்பதற்காக ஒட்டல்கள், குடிநீர், மின்சாரம் உட்பட அடிப்படை வசதிகள், தொலைத் தொடர்பு வசதி, சாலை வசதி முதலியவற்றை ஜப்பான் உதவியுடன் அரசு செய்து வருகிறது.**

## சட்டமன்றத்தில்...

### மேட்டூர் அணை ஜூன் 12-ஆம் தேதி திறப்பு

**மேட்டூர் அணையிலிருந்து இவ்வாண்டு ஜூன் மாதம் 12-ஆம் தேதி பாசனத்துக்காகத் தண்ணீர் திறந்து விடப்படும். வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 12-ஆம் தேதிதான் மேட்டூர் அணை திறக்கப்படும். ஆனால், பருவமழை தவறியதன் காரணமாகக் கடந்த 8 ஆண்டுகளாகக் குறித்த தேதியில் இவ்வணை திறக்கப்படவில்லை. இவ்வாண்டுதான் குறித்த தேதியில் மேட்டூர் அணை திறக்கப்படுகிறது என்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்தார் (31.3.'92).**

### காவிரி பாசனப் பகுதிகளை அதிகரிக்க 2 திட்டங்கள்

**காவிரிப் பாசனப் பகுதிகளை அதிகப்படுத்த இரண்டு திட்டங்களை மத்திய அரசுக்குத் தமிழக அரசு அனுப்பியுள்ளது. காவிரி டெல்டாப் பகுதியை நவீனப்படுத்தும் இத்திட்டத்தைத் தேசிய நீர் நிர்வாகத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தலாம். 250 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டமும், 500 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டமும் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதில் ஏதாவது ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டால் காவிரி நீரை மேலும் அதிக இடங்களுக்குப் பாசனம் செய்யலாம் என்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ்.கண்ணப்பன் சட்டப்பேரவையில் தெரிவித்தார் (31.3.'92).**





# "நீதி வென்றது; நியாயம் வென்றது!"

## காவிரிப் பிரச்சினைத் தீர்ப்பு குறித்து முதல்வர் மகிழ்ச்சி

சட்டப்பேரவையில் 7.4.'92 அன்று கேள்வி நேரம் முடிந்ததும், வ.கம்யூனிஸ்டு உறுப்பினர் திரு. ஜி.பழனிச்சாமி அவர்கள் எழுந்து, ஒரு பிரச்சினையை எழுப்பினார். அவர் கூறியதாவது:

"காவிரி டெல்டா பகுதியில் ஜூன் 12-ந் தேதி தண்ணீர் திறந்து விடுவதாக அறிவித்தது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது. 10 ஆண்டுகளுக்குப் பிறகு குறுவை சாகுபடி செய்யப் போகிறோம் என்ற நிலையில் மராமத்து வேலைகளை விவசாயிகள் தொடங்கிவிட்டார்கள்

ஏற்கெனவே வழங்கப்பட்ட நடுவர்மன்றத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற கர்நாடக அரசின் கோரிக்கையை மறுத்ததோடு மட்டுமல்லாமல், 205 டி.எம்.சி. தண்ணீரைத் திரும்பவும் வழங்க வேண்டும் என்ற நல்ல தீர்ப்பையும் வழங்கியுள்ளனர்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்தத் தீர்ப்பையொட்டி மத்திய அரசாங்கத்தை அணுகி இந்தத் தீர்ப்பை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளும் நல்ல செய்தியைச் சொல்ல வேண்டும்.

மேற்கண்டவாறு ஜி.பழனிச்சாமி கூறினார்.

இதற்குப் பதில் அளித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசியதாவது:-

இப்போது உறுப்பினர் குறிப்பிட்ட செய்தி உண்மையிலேயே தமிழக மக்கள் ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியும், உவகையும் அளிக்கக்கூடிய செய்திதான். நீதி வென்றது, தர்மம் வென்றது, நியாயம் வென்றது என்று தான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கர்நாடகம் செய்திருந்த மனுவினைப் பரிசீலித்த பிறகு, அதை நடுவர் மன்றம் நிராகரித்து இருக்கிறது. ஏற்கெனவே கொடுத்த தீர்ப்பில் எந்தவிதமான மாற்றமும் செய்வதற்கில்லை, செய்ய வேண்டிய அவசியமும் இல்லை என்பதை நடுவர் மன்றம் திட்டவட்டமாக நியாயப்படுத்திவிட்டது.

இது தமிழகத்துக்கும், தர்மத்திற்கும், நியாயத்திற்கும் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்.

கர்நாடக அரசு இனியும் தாமதம் செய்யாமல், வீண் சர்ச்சைகளிலோ, வீண் விவாதங்களிலோ இறங்காமல் ஏற்கெனவே நடுவர்மன்றம் அளித்த இடைக்காலத் தீர்ப்பின்படி சரியான நேரத்தில் குறித்த அளவு தண்ணீரைத் திறந்துவிட வேண்டும்.

இதற்கு மத்திய அரசும் கர்நாடக அரசை அறிவுறுத்த வேண்டும். இதைத்தான் தமிழகத்திலுள்ள ஒவ்வொருவரும் எதிர்பார்க்கிறார்கள் என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இதை மத்திய அரசும், கர்நாடக அரசும் செய்யும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கிறது."

—மேற்கண்டவாறு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா கூறினார்.

## தீப்பிடிக்காத வீடுகள் கட்டித் தரப்படும்

**2.4.1992** அன்று அதிகாலை இராயபுரம் தொகுதி 6-வது வட்டத்தில் பல்லவன் நகர் மற்றும் திடீர் நகர்ப் பகுதியில் 150 குடிசைகள் தீக்கிரையானது.

இந்தச் செய்தி கிடைத்தவுடன் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின் பேரில், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக காலை சுமார் 7.00 மணியளவில் நேரில் சென்று பார்த்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்.

தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதம் குறித்து ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்க வேண்டுமென்றும் அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுரை வழங்கினார்.

மேலும் தீ விபத்துக்கான உண்மையான சாரணத்தைக் கண்டறிய வேண்டுமெனவும் உத்தரவிட்டார். பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு சென்று உணவு வழங்க வேண்டுமென்றும் கூறினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து நிவாரண உதவிகளும் உடனடியாக வழங்கத் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தமிழ்நாடு குடிசைமாற்று வாரிய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, தீப்பிடிக்காத வீடுகளைப் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

## கம்ப்யூட்டர் அருங்காட்சியகம்

கம்ப்யூட்டர்களுக்கென்றே தனி அருங்காட்சியகம் ஒன்று உள்ளது. ஆண்டுதோறும் 1,50,000 பேர் இதனைக் கண்டுகளிக்கிறார்கள்; பல புதிய செய்திகளைத் தெரிந்து கொள்ளவும் செய்கிறார்கள். அமெரிக்காவில் உள்ள பாஸ்டன் நகரில் இந்த அருங்காட்சியகம் உள்ளது.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முற்பட்ட, ஒரு பெரிய கட்டடம் அளவிலான கம்ப்யூட்டர் முதற்கொண்டு, மேசை மீது கச்சிதமாக வைத்துக் கொள்ளக்கூடிய 'டெஸ்க்டாப்' கம்ப்யூட்டர் வரையில், விதவிதமான கம்ப்யூட்டர்கள் இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இங்கேயுள்ள நூற்றுக்கு மேற்பட்ட கம்ப்யூட்டர்களைப் பார்வையாளர்கள் தாங்களாகவே இயக்கி மகிழலாம். பல விளையாட்டுக்களையும் ஆடிக் களிக்கலாம்.

இங்கு கம்ப்யூட்டர்கள் பொருத்தப்பட்ட மாதிரி விமானத்தை, இடத்தை விட்டு நகராமலே ஓட்டி மகிழலாம். இங்குள்ள கம்ப்யூட்டர்களைக் கொண்டு வீட்டு வரைபடத்தை வரையலாம்; ஓர் ஓவியத்தை உருவாக்கலாம்; என்ன நோய் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்; புதிய இசைக்கோலம் ஒன்றை உருவாக்கலாம்; தாங்கள் பேசும் ஆங்கிலம் இலக்கணச் சுத்தமாக உள்ளதா என்று சரி பார்க்கலாம்; இங்குள்ள வீடியோவில் தோன்றும் தங்கள் உருவத்தைத் தங்களது விருப்பத்திற்கு ஏற்றபடி திருத்தி அமைத்துக் கொள்ளலாம்.

### அறிவுள்ள ரோபோட்கள்

'செயற்கை அறிவூட்டல்' துறைக்காக ஒரு தனிப்பிரிவே இந்த அருங்காட்சியகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இங்குள்ள 'ரோபோட்கள்' மிகவும் துடிதுடிப்பானவை.

உங்கள் உயரம் என்ன என்பதை இவை உங்களைத் தொடாமலேயே அளந்து சொல்லிவிடும். 10 டாலர் நோட்டுக்கும் 5 டாலர் நோட்டுக்கும் எளிதாக அடையாளம் கூறும். உங்கள் பெயரைச் சொன்னால் எழுத்துக்கூட்டிச் சொல்லிவிடும்.

இந்த அருங்காட்சியகத்தில் மிகப் பெரிய கம்ப்யூட்டர் ஒன்றையும் காட்சிக்கு வைத்துள்ளனர். பார்வையாளர்கள் இதற்கு உள்ளே புகுந்து நடக்கலாம். இது எப்படி இயங்குகிறது என்பதை நேருக்கு நேர் பார்வையிடலாம்.

ஒரு கம்ப்யூட்டர் எவ்வாறு இயங்குகிறது என்பதைப் பொதுமக்களுக்கு விளக்கிக்காட்ட வேண்டும் என்பதற்காகவே 12 இலட்சம் டாலர்கள் செலவில் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டதாகும் இந்த இராட்சதக் கம்ப்யூட்டர்.

- அமெரிக்கத் தகவல் நிலையம்.

### அட்டைப்பட விளக்கம்:

முதல் அட்டை:

அண்ணல் அம்பேத்கரின் 102-வது பிறந்த நாளையொட்டி, அன்னாரின் திருவுருவப்படம் முகப்பை அலங்கரிக்கிறது (14.4.1992).

நான்காவது அட்டை:

தமிழ்நாட்டின் போக்குவரத்துக் கழகங்கள் பெற்ற ஏழு தேசிய விருதுகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டுப் பாராட்டினார். (2.4.1992).

159893

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
★ லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.







# தமிழரசு

1-5-1992 ரூ.1

ஆணையர்,
தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
19 மே 1992
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்,
சென்னை-600 008.



335/3

# FOR FORMAL WEAR



- ★ Pure Khadi Silk Sarees
- ★ Khadi Cotton and Polyester Varieties
- ★ Readymades

PLEASE VISIT

Khadi Kraft

Tamilnadu Khadi & Village Industries Board, Kuralagam, Madras-600 108.


## இந்த இதழில்...


அருங்காட்சியகக் கலைவிழா ... 2
சர் பிட்டி தியாகராயர் ... 6
மே நாளில் சிந்திப்பீர் —புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ... 9
பக்கிங்காம் கர்னாடிக் பஞ்சாலை மீண்டும் திறப்பு ... 11
தமிழ்நாட்டின் திருக்கோயில்கள் - பழமைக்கும் புதுமைக்கும் இடைப்பட்ட இணைப்புப் பாலங்கள்! ... 15
—மாண்புமிகு முதல்வர் உரை ... 17
கபாலீசுவரர் கோயில் திருக்குளச் சீரமைப்பு ... 19
மகளிர் காவல் நிலையம் ... 23
பாட்டாளி உழைப்பினிலே! (கவிதை) ... 24
அனைத்துக் காவலர்க்கும் குடியிருப்பு வசதி ... 27
மரம் வளர்ப்போம்! ... 30
வளரும் வேளாண்மை ... 48
சத்யஜித்ரே மறைவு


## மேலான மே நாள்



—பேரறிஞர் அண்ணா

அகில உலகமெங்கும் அக மகிழ்ந்து கொண்டாடப்படும் இம் மேதின விழாவைக் கட்சி - கருத்து வேற்றுமை இன்றி அனைவரும் கொண்டாடுவதைப் பற்றிப் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

பாட்டாளிகள் போராட்ட முயற்சியின் இடையிலே ஓர் நாள் ஓய்வு பெற்று நின்று, சென்ற கால-வருங் காலக் கணக்கைப் பார்க்கும் திருநாளே இம் மேநாள். சென்ற காலங்களில் மகத்தான வெற்றிகளைக் காண முடியாவிட்டாலும், கண்ட சிறு சிறு வெற்றிகளை நினைந்து மகிழ்ந்து, உள்ளத்தை ஊக்குவித்துக் கொள்ளவும் வருங்காலத்தில் ஆற்ற வேண்டிய செயல்களை எண்ணிச் செயலாற்றும் நெறியிலே உறுதி கொள்ளவும் இம் மேநாள் பயன் படுகின்றது.

## திருநாள் - பெரு நாள்!

—டாக்டர் எம்.ஜி.ஆர்.



தொழிலாளர் வட்டாரங்களில் மட்டுமே கொண்டாடப்பட்டு வந்த இந்த மே நாள் தமிழகம் முழுவதும், தமிழ் நெஞ்சங்கள் முழுவதும் கொண்டாடும்படி தனது பேனா வாலும், நாவாலும் கிளர்ச்சி ஊட்டிய பெருமை மட்டுமன்று, அரசுக் கட்டிலில் ஏறிய பிறகு, மே நாளைக் கட்டாய விடுமுறை நாளாக்கிய பெருமையும் பேரறிஞர் பெருந்தகை அமரர் அண்ணா அவர்களுக்கே உரியதாகும்.

தொழிலாள வர்க்கம் தனது கூலி உயர்வுக்காகவும், வாழ்க்கை வசதிகளுக்காகவும் மட்டுமே போரா டும் தன்மை படைத்தது என்ற நிலையை மாற்றி, மொத்த சமுதாயத்தின் உயர்வுக்காகவும், சமத்துவ சமுதாயம் அமைப்பதற்காகவும் போராடும் முன்னோடிகளாகத் தொழிலாளர்கள் விளங்க வேண்டும்.


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

சித்திரைத் திங்கள் - 19

மலர்: 22 இதழ்: 21

1-5-1992






# அருங்காட்சியகக் கலைவிழா

அருங்காட்சியகக் கலைவிழா, 14.4.92 அன்று, சென்னை அருங்காட்சியகக் கலையரங்கில் மிகச் சிறப்பாக நடந்தது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தென்னகக் கலைப் படிமக் கண்காட்சியைச் சுற்றிப் பார்த்தார்.

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை அரசுச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

தலைமை அஞ்சல்துறைத் தலைவர் திரு. எம்.எஸ்.இராகவன், இ.அ.ப., செய்தி-சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே.கரியாலி, இ.ஆ.ப., இண்டாக் நிறுவனத் தலைவர் திருமதி தெபோரா தியாகராசன் ஆகியோர் பேசினர்.

சிறப்பு அஞ்சலுறையினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.



கலைப் பண்பாட்டுத் துறை இயக்குநர் திருமதி கிரிஜா வைத்தியநாதன் பொன்னாடை அணிவித்தார். அரசு அருங்காட்சியகங்களின் இயக்குநர் திரு. இராமன் இ.ஆ.ப., மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார்.

## மாண்புமிகு முதல்வர் உரை

தென்னகக் கலைப் படிமக் கண்காட்சி, பல்லவபுரம் தென்னகக் கலை நகரமைவுத் திட்டம், நினைவு அஞ்சலுறை வெளியீடு, கலை பண்பாட்டு இயக்ககம்- முத்தமிழ்க் கலைவிழா ஆகியவற்றைத் தொடங்கி வைத்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழாப் பேருரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

தமிழ்ப் புத்தாண்டு மலர்ந்துள்ள சித்திரைத் திங்கள் இரண்டாம் நாளாகிய இன்று, தமிழக அரசின் அருங்காட்சியகத் துறை, நம் அனைவரின் நினைவுகளிலும், தொடர்ந்து நிலைத்து நிற்கக்கூடிய சாதனை ஒன்றினை, சாதித்துக் காட்டியுள்ளது. கடந்த 140 ஆண்டுகளாக, நீடித்த புகழோடு திகழ்ந்துவரும், இந்த அரசு அருங்காட்சியகத்தின் அரங்கம், இன்று முதல் குளிர்சாதன வசதியினைப் பெறுவதோடு, தமிழகத்தில் வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு, தங்களது கலைத் திறமைகளை வெளிக் காட்டுகிற நல்வாய்ப்பினை வழங்கும் பணியினையும், தொடங்குகிறது.

இனி இந்தக் கலையரங்கத்தில், வாரம் இரண்டு கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்த, அரசு ஆணையிட்டுள்ளது.

இந்த விழாக்களுக்கு மகுடம் சூட்டுவதுபோல, இன்று தென்னகக் கலைப் படிமக் கண்காட்சியைத் திறந்து வைப்பதில், நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அரசு அருங்காட்சியகம், சாதாரண மக்கள் பார்த்துப் பலனடையும் பார்வைக் கூடமாகவும், கற்றோருக்கு மேலும் சிந்தனையைத் தூண்டும் அறிவுக் கூடமாகவும், ஆராய்ச்சி அன்பர்களுக்கு ஆய்வுப் புதையலாகவும் அமைந்துள்ளது என்றால், அது மிகையாகாது.

ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கி, பதினெட்டாம் நூற்றாண்டுவரை, பல்வேறு தென்னிந்தியச் சிற்பக்கலை விற்பன்னர்கள் உருவாக்கிய படிமங்கள், இந்தக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

கற்காலம், உலோகக் காலம், தற்காலம் என்ற எல்லாக் கால எல்லைகளுக்கும் உரித்தான பொருட்களும், பல்வேறு சமய சிற்பங்களையும் கொண்ட, அரிய கலைப் பொருட்களின் தொகுப்பு, இந்த அருங்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளன.

### கல்லும் சொல்லாதோ கவி!

நான் சிறுமியாக இருந்தபோது, என் அன்னையாரோடு இங்கே வந்து, சிற்பங்களையும் கலைப் படிமங்களையும் கண்ணுற்ற நிகழ்ச்சி, இப்போதும் என் நினைவில் நிழலாடுகிறது.

அனைத்து வளங்களும் மலிந்த நமது தமிழகத்தில், நமது முன்னோர்கள், தங்களுடைய சந்ததியினருக்கு விட்டுச் சென்ற அழியாச் சொத்துக்களில், கண்கவர் கோயில்களும், கவின்மிகு எழிற்சிற்பங்களும், இன்றும் நம்மைப் பிரமிப்பில் ஆழ்த்தும் பேறு பெற்றவை.

'கல்லும் சொல்லாதோ கவி' என்றும், 'செம்பும் பேசாதோ செழுந்தமிழை' என்றும், புலவர் பெருமக்களால், புகழ்ந்து பாடப்படுகின்ற அரிய கலைப் படிமங்கள், உலகின் ஈடற்ற கலைச் செல்வங்களாக, நமக்குப் பெருமை அளிக்கின்றன.

பேரறிஞர் Arnold Toynbee, உலக நாகரீகங்களிலேயே பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் விளங்குவன, தமிழ் நாகரீகமும், சீன நாகரீகமும் என்று கூறியுள்ளார். அதேபோல, தென்னகக் கலைப் படிமங்களின் வடிவமைப்பையும், கைத்திறனையும், கண்டு வியந்த அறிஞர்கள், இவற்றை சுமேரிய நாகரீக காலத்தில் கிடைக்கப்பெற்ற, எஃகுப் படிமங்களோடும், நைல் நதி நாகரீகக் காலத்தில் கிடைக்கப்பெற்ற, தங்கப் படிமங்களோடும் ஒப்பிட்டு, வியப்படைந்துள்ளார்கள்.

### உயிரோட்டம் வாய்ந்த சிற்பங்கள்!

உயிரோட்டம் வாய்ந்த சிற்பங்களையும், சிலைகளையும் வடிப்பதில், நமது தமிழக மக்கள், தலை சிறந்து விளங்கினார்கள். மண், மரம், சுதை, செங்கல், கல், பளிங்கு, தந்தம், பித்தளை, வெண்கலம், செம்பு, இரும்பு, பொன், ஐம்பொன் போன்ற பல பொருட்களால், சிலைகள் வார்க்கப்பட்டன; சிற்பங்கள் செதுக்கப்பட்டன; படிமங்கள் சமைக்கப்பட்டன. நவீன உலோகவியல், அதாவது Metallurgy -யின் நுணுக்கங்களையெல்லாம் அன்றைக்கே நம் தமிழர், இந்தச் சிலைகளை வடிப்பதில் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்று அறியும் போது, நாம் பெருமையும், பெருமிதமும் கொள்கிறோம்.

நம்நாட்டுச் சிலைகள், சிற்பங்கள், கலையழகு வாய்ந்தவை, நேர்த்தியானவை என்பது, நிலை பெற்றுவிட்ட உண்மை. ஆனால், அவைகளுக்கு மேலும் தனிச்சிறப்புகள் உண்டு. நாம் அவற்றைக் கண்ணுறும்போது, அவை வெறும் உருவங்கள் மட்டும்தான், என்று நம் மனதில் தோன்றாது. அவை நம்மை ஆன்மீக உணர்வுக்கு, அழைத்துச் செல்லும் வழிகாட்டி என்கிற நிம்மதியையும் வழங்குகின்றன. சரியாகச் சொன்னால், நமது சிற்பங்கள், அயல்நாட்டுச் சிற்பங்களைப் போன்று, வெறும் காட்சிப் பொருளாக இல்லாமல், கடவுளின் பெருமைகளைப் போதிக்கும் காட்சிப் பொருள்களாகவும் அமைந்திருக்கின்றன. கடவுள் நம்பிக்கை, நம்மவர்களின் வாழ்க்கை முறையில் இயற்கையாகவே ஏற்பட்ட பற்று, பாசமாகும்.






### தொழில் நுட்பத்தின் சிகரம்

அதனால்தான், நம் முன்னோர்களின் கற்பனையில் உதித்த வடிவங்களில் எல்லாம், கடவுளர் சிலைகளை உருவாக்கிப் பார்த்தனர். ஒவ்வொரு தெய்வத்திற்கும், புராணங்களில் வர்ணிக்கப்படும் பல்வேறு உருவங்களை, கல்லால் வடித்து மகிழ்ந்தனர். இந்த வகையில் பார்த்தால், சிவபெருமானுக்கு மட்டும் 25 வடிவங்கள் இருக்கின்றன. திருமாலுக்கு நாராயணன், மாதவன், கோவிந்தன், அனந்தசயனன் முதலிய

பல வடிவங்கள் உள்ளன.

இப்படி வடிக்கப்பட்ட தெய்வ உருவங்களிலேயே, அமைதியின் வடிவமாகத் திகழும், நடனமாடும் நடராஜர் சிலை, உலகப் பிரசித்தி பெற்றது என்பதை, நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

ஆடல் சிறப்பும், அமைதியான அழகும் கொண்ட, நடனமாடும் நடராஜர் சிலையைக் கண்டு, உலகில் வியக்காதவர்களே இல்லை. தஞ்சை, திருவாலங்காட்டிலே உள்ள நடராஜர் திருமேனி, அனைத்து உருவங்களிலும், முழுமையும் அழகும் வாய்ந்தது என்று, அறிஞர்கள் பாராட்டுகின்றனர். Cosmic Dance என்று போற்றப்படும் இவ்வடிவம், சிற்பமாக மட்டும் இல்லாமல், தத்துவமாகவும், கணிதமாகவும், கலைத் தேர்ச்சியின் முடிவாகவும், தொழில் நுட்பத்தின் சிகரமாகவும் அமைந்திருப்பதை, அறிஞர் ஆனந்த குமாரசுவாமி' போன்றவர்கள் சுட்டிக்காட்டியிருப்பதை, இங்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இன்னும் 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தஞ்சை திருவெண்காடு அர்த்தநாரீஸ்வரர், ராம லட்சுமணர், நடனமாடும் கணேசர், ரிஷப வாகனர் சிலைகளும், இந்தக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. நாகப்பட்டினத்தில் கிடைக்கப்பெற்ற, சரித்திரப் புகழ் வாய்ந்த புத்த விக்கிரகங்கள், அரிய கலைப் பொக்கிஷங்கள் ஆகும். அவைகளும் இந்தக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. மேலும், இக் கண்காட்சிக்குப் பொலிவூட்டுவதாக அமைந்துள்ளது. பல நூற்றாண்டுகளைச் சேர்ந்த, ஏறத்தாழ 1,600 வெண்கலச் சிலைகள், கற்சிற்பங்கள், விக்கிரகங்கள், கவின்மிகு கண்ணாடிப் பேழைகளில் இங்கே இடம் பெற்றுள்ளன.

### திருக்கோயில் பாதுகாப்புப் படை

இத்தகைய கலைக் கருவூலங்களைப் பார்த்து மகிழ்வதோடு, அவற்றைப் பாதுகாப்போடு, வரும் தலைமுறைகளுக்கு விட்டுச் செல்வது, நம்முடைய தலையாயக் கடமையாகும்.

அந்த நோக்கத்தை நிறைவு செய்கிற வகையில்தான், வெண்கலப் படிமங்களைப் பாதுகாக்க, 'உலோகத் திருமேனி பாதுகாப்பு மையம்', திருவாரூரில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இதுபோன்ற 3 மையங்களை, மதுரை, திருநெல்வேலி மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் அமைக்க, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. நம்முடைய வரலாற்றுப் பெருமையின் சிறப்பு அறியாத சிலர், நம் நாட்டு கலைப் பொக்கிஷங்களை, வெறும் உலோக மதிப்பிற்கான விலைக்கு மட்டுமே விற்க முற்படுவதால், அந்தப் பலவீனத்தைப் பயன்படுத்தி, ஒரு சாரார் மேலை நாடுகளுக்குக் கடத்திச் சென்று, அவற்றை விற்றுவிடுகின்றனர்.

இப்படிக் களவாடப்பட்ட கற்சிலைகளும், செப்புத் திருமேனிகளும், மேலை நாடுகளில் தனிப்பட்டவர்களின் வீடுகளிலும், விடுதிகளிலும், காட்சியகங்களிலும், அலங்காரப் பொருட்களாக வைக்கப்பட்டிருப்பது, நமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, அவை மீட்கப்பட்டுள்ளன.

பல ஆண்டுகளுக்கு முன்பு, தமிழகத்திலிருந்து அமெரிக்காவிற்கு எடுத்துச் செல்லப்பட்ட, பத்தூர் நடராஜர் செப்புத் திருமேனி, இப்படித்தான் மீண்டும் கொண்டுவரப்பட்டு, திருக்கோயிலுக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகக் கூடாது என்பதற்காகவே, பழமை வாய்ந்த பொருட்களைப் பாதுகாப்பதற்கென, தனியாக, திருக்கோயில் பாதுகாப்புப்படை அமைக்கப்படவுள்ளது என்பதையும், இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளால் மட்டுமே, நமது கலாச்சாரம் அயலாருக்கு விலைபோவதை, தடுத்துவிட முடியாது. உண்மையில் கலாச்சாரப் பாரம்பரியத்தைக் கட்டிக் காக்க வேண்டுமானால், நம் மூதாதையர்களின் ஒப்புயர்வற்ற வாழ்வும், பெருமையும், வரலாற்றில் இடம் பெறுவதோடு, அந்த வரலாற்றின் ஆதாரங்களாக உள்ள சிலைகளும், படிமங்களும், கட்டிக் காக்கப்பட வேண்டும்; அந்த வரலாற்றின் உண்மைகள் தொடர்ந்து, இன்றைய சந்ததியினருக்கும் கற்றுத் தரப்பட வேண்டும். இந்தக் குறிக்கோள்களை நிறைவு செய்யவும், அதற்கான தூளுரை ஏற்கவுமே, இன்று நான் தொடங்கி வைத்திருக்கின்ற தென்னகக் கலைப் படிமக் கண்காட்சி, என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள சிற்பங்களின் வண்ணப் படங்கள் அச்சிடப்பட்ட போஸ்ட் கார்டுகளும், வெளியிடப்பட்டுள்ளன.

### பல்லவபுரம்

இவ்விழாவிற்கு மேலும் சிறப்பு சேர்க்கிற வகையில், இவ்விழா, ஐம்பெரும் விழாவாக இங்கே கொண்டாடப்படுகிறது என்பதை, நான் மகிழ்ச்சியோடு உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வரிசையில் அடுத்து, 9-ஆம் நூற்றாண்டில், ஓங்கி வளர்ந்து, சிறப்புற்றிருந்த பல்லவப் பேரரசின் பண்பாட்டைச் சித்திரிக்கும் வண்ணம், சென்னை மாமல்லபுரம் சாலையில் அமைந்துள்ள முட்டுக்காட்டிற்கு அருகில், 'பல்லவபுரம்' அமைக்கும் திட்டத்தையும் துவக்கி வைப்பதில், மகிழ்ச்சி அடைகிறேன். தென்னிந்தியக் கலாச்சாரங்களை வெளிப்படுத்தும், மத்திய அரசுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்தப் 'பல்லவபுரம்' திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

இத்திட்டத்திற்காகத் தமிழக அரசு, 5 ஏக்கர் நிலத்தையும், ரூ.15 இலட்சத்தையும் வழங்கியுள்ளது. இந்தப் 'பல்லவபுரம்' அன்றைக்குப் பல்லவப் பேரரசில் இயங்கிக் கொண்டிருந்த, ஒரு கிராம வாழ்க்கைச் சூழலை, அதன் சிற்ப வேலைத் திறத்தோடு சித்திரிக்கும் வண்ணம் அமையும், என்று நான் நம்புகிறேன். மேலும் இந்த அரங்கத்தில், வாரம் இருமுறை நடக்க இருக்கும் கலை நிகழ்ச்சிகளையும், இன்று துவக்கி வைப்பதில் பெருமிதம் அடைகிறேன்!

### ஒரே குடையின் கீழ்...

கலை, கலாச்சாரத்தின் பல்வேறு அம்சங்களில் நடைபெற்று வரும் அரசுப் பணிகளை, ஒருங்கிணைத்து, ஒன்றுக்கொன்று தொடர்பு ஏற்படுத்தி, அதன்மூலம் நிறைந்த பயனை மக்களுக்கு விளைவிக்க வேண்டும் என்ற கருத்தில், கலை மற்றும் கலாச்சாரம் சார்ந்த அத்துணை அமைப்புகளையும், ஒரு குடையின்கீழ் கொண்டு வர எங்கள் அரசு தீர்மானித்தது. அதற்கெனத் தனியாக ஒரு இயக்குநரகத்தையும் அண்மையில் ஏற்படுத்தியது. அதையும் இன்று நான் தொடங்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்!

நமது முயற்சிகளுக்கு முகமன் கூறுவது' போல, இந்திய அஞ்சல் துறையினர், இந்த நிகழ்ச்சிகளுக்குச் சிறப்பளிக்கும் வண்ணம், சிறப்புத் தபால் உறை ஒன்றை வெளியிட்டுள்ளது, வரவேற்கத்தக்கதாகும். இதற்காக நான் அத்துறையினருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே தொடங்கி வைக்கப்பட்ட ஐம்பெரும் விழாவில் கலந்து கொண்டு, நம் கலாச்சாரத்தின் தொன்மையையும், சிறப்பையும் பார்த்துப் பெருமிதம் அடைவதோடு, அவைகளைப் பாதுகாக்கிற பணியினையும் நாம் மேற்கொள்ள, உறுதியேற்க வேண்டுமென அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் சிறப்புரைக்குப் பிறகு, செல்வி இலட்சுமி விசுவநாதன் அவர்களின் நாட்டியக் கலை நிகழ்ச்சி நடந்தது. அரசு அருங்காட்சியகங்களின் இயக்குநர் திரு. ம.இராமன் இ.ஆ.ப., நன்றி நவின்றார்.

—நிகழ்ச்சித் தொகுப்பு

**— பி.வி. கிரி**

## மேதினி விழித்தது! மேதினம் பூத்தது!

—பேரறிஞர் அண்ணா



**இருட்டறையில் இன்னலுற்ற மக்கள் இன்பங்காண விழைந்த ஒவ்வொரு சமயமும் ஒடுக்கப்பட்டவர். ஆண்டை - அடிமை, உயர்ந்தவன் - தாழ்ந்தவன், மதகுரு - பக்தன், மிராசு - உழவன், பிரபு - பணியாள், முதலாளி - தொழிலாளி இவர்களிடையே ஏற்பட்ட வர்க்கப் போராட்டங்களே உலக வரலாறாகும்.**

**இந்தப் போராட்டங்களில் வரலாற்றை நன்றாக அலசிப் பார்த்தவர் மார்க்ஸ். பிரபுக்கள் - முதலாளிகள் கொடுங்கோன்மை வெகு நாளைக்கு நிலைக்காதென்பதையும், உழைப்பாளிகளின் முயற்சியால்தான் உழைப்பாளர் உலகு மலரும் என்பதையும் அவர் எடுத்துக் காட்டினார். அவருடைய தெளிந்த முடிவு, ஒடுக்கப்பட்ட உழைப்பாளர்களை ஒன்று சேர்த்தது. நலிவுற்ற உள்ளத்தைப் புலியுள்ளமாக்கியது. கசங்கிய கண்கள் கனலைக் கக்கின; மேதினி விழித்தது; மேதினம் பூத்தது.**

**ஏழை என்றும் பணக்காரன் என்றும் இரு வர்க்கம் இருப்பது பொதுவாகவே சமூகத்துக்குக் கேடு, ஆபத்து என்று எடுத்துக் கூறி, பாட்டாளியின் துயரைத் துடைக்கப் பாடுபட்டார்கள் சமதர்ம நோக்குடைய தலைவர்கள். அந்த அரும் பணியின் ஆரம்ப வேலை, தொழிலாளரின் உழைப்பு, காலம், அளவு, கட்டுதிட்டம் முதலாளிகளால் சூறையாடப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்று தொடங்கப்பட்ட முதல் முயற்சி மே தினம்!**



## உழைப்பின் வெற்றியைக் கொண்டாடும் திருநாள்

### மாண்புமிகு முதல்வர் அவர்களின் மே தின வாழ்த்துச் செய்தி

**உழைப்பவர்களின் பெருமையை, உலகெங்கும் பறைசாற்றி, உழைப்பின் வெற்றியைக் கொண்டாடும் திருநாளாக மே தினம் மிளிர்கிறது. உழைப்பவர்கள் தங்களது உரிமைகளை நிலைநாட்டிட, துணிவோடு கிளர்ந்தெழுந்த தோழர்களின் முழக்கம், உலகம் தழுவிய உரிமை கீதமாகப் பரவிய நாள் தான் மே தினம்.**

**உலக அரங்கில் பல்வேறு நாடுகளின் விடுதலைக்கு வித்திட்ட சக்தியாகவும், ஆதிக்க மேலாண்மையை வீழ்த்துகின்ற ஆயுதமாகவும், தொழிலாளர்களின் உழைப்பும் பணியும் பெருமையோடு இடம்பெற்று உள்ளன.**

**அத்தகைய உழைப்பாளிகளின் நினைவைப் போற்றுகின்ற வகையிலும், அவர்களது தியாகத்தை மதிக்கின்ற வகையிலும், மலர்கின்ற மே தின நன்னாளில், உழைக்கும் வர்த்தகத்தினருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

# சர்.பிட்டி தியாகராயர்



## சா.பழநியப்பன்

திராவிட சமுதாயச் சிற்பிகளில் குறிப்பிட்டுப் பாராட்டத்தக்க பெருமை பெற்றவர் வெள்ளுடைவேந்தர் சர். பிட்டி. தியாகராயர் ஆவார்.

தேவாங்கர் வகுப்பில் 1852-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ஆம் நாள் தியாகராயர் பிறந்தார். முதல் விடுதலைப் போர் எனப்படும் சிப்பாய்க் கலகத்துக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இவர் பிறந்தார். இதற்கு அடுத்த ஐந்தாண்டுகளுக்குப் பின்னர்தான் சென்னைப் பல்கலைக்கழகம் ஏற்பட்டது.

இவருடைய முன்னோர்கள் தோல் வர்த்தகத்தில் ஈடுபட்டுத் தோல் பதனிடும் சாலைகளை நடத்தி வந்தனர். இவரது பரம்பரைத் தொழில் கைத்தறி நெசவு. அரசாங்க உயர்மட்ட வேலைகளில் நாட்டம் செலுத்திடாமல் வர்த்தகத்திலும் சிறுதொழில் வளர்ச்சியிலும் ஆர்வம் கொண்டார், இவர். கைத்தறி நெசவுத் தொழிலில் நாட்டம் செலுத்திப் பெரியதொரு நெசவுத் தொழிற்சாலையை உருவாக்கிப் பலருக்கு வேலை வாய்ப்புத் தந்தார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் படித்து 1876-ஆம் ஆண்டில் பட்டம் பெற்றார், செல்வமும் செல்வாக்கும்பெற்ற குடும்பத்தவரான சர்.பிட்டி. தியாகராயர்,

1905-ஆம் ஆண்டில் வங்காளப் பிரிவினைக்கான கிளர்ச்சியில் முகிழ்த்த புதிய தேசிய எழுச்சியின் காரணமாகச் சுதேசி இயக்கம் நாட்டில் பரவலாகப் பரவத் தொடங்கியது. இச் சூழ்நிலையைப் பயன்படுத்திப் பண்டைய நெசவுத் தொழிலுக்குப் புத்துயிர் ஊட்டும் பணியில் வெற்றி கண்டார், இவர். தேசிய நிதித் தொழில் சங்கத்தின் சார்பில் 1908-ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற அனைத்து இந்திய நெசவுத் தொழில் போட்டியில் அவரது தொழிற்சாலை நற்சான்றிதழையும் பதக்கங்களையும் பெற்றது.

தென்னிந்திய வர்த்தக சபையை ஆரம்பித்தவர்களில் இருவரும் ஒருவர். அச்சபையின் தொடக்க காலமான 1910-லிருந்து 1921-ஆம் ஆண்டுவரை அதன் தலைவராக இருந்து தென்னிந்தியாவின் வர்த்தக வளர்ச்சிக்கும், தொழில்கள் வளர்ச்சிக்கும் அரும்பெரும் தொண்டுகளை ஆற்றியுள்ளார். நாட்டில் தொழிற்கல்வியைப் பரப்பும் பெரும் முயற்சிகளை எடுத்துக் கொண்டார்.

செங்கல்வராய நாயக்கர் தொழிற்பயிற்சிப் பள்ளியின் நிர்வாகக் குழுவில் அவர் ஓர் உறுப்பினராக இருந்து அப்பள்ளியை வளர்ச்சியடையச் செய்தார். அவரே சொந்தமாக வண்ணாரப்பேட்டையில் ஒரு பள்ளியையும் நடத்தி வந்தார். உயர்தரக் கல்வியிலும் அவர் அதிகக் கவனம் செலுத்தினார். பச்சையப்பன் கல்லூரி பச்சையப்பன் அற நிறுவனங்கள் ஆகியவற்றின் தர்மகர்த்தாக்கள் சபையின் தலைவராக அவர் பல்லாண்டுக்காலம் இருந்து, அந்த நிறுவனங்களைப் பெரும் வளர்ச்சியடையச் செய்தார்.

காங்கிரஸ் கட்சியில் அவர் ஆரம்பத்தில் பங்கேற்றார்; சென்னையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். நாளடைவில் அதிலிருந்து விலகிக் கொண்டார்.

பிராமணரல்லாதாரின் தாழ்ந்த நிலையைக் கண்டு, அவர் உள்ளம் வேதனையடைந்தது. அவர்கள் கல்வியில் மிகவும் பிற்போக்கில் இருந்தனர். அரசாங்க வேலைகளில் அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். தம்மின மக்கள் சமுதாயத்தின் அடித்தளத்தில் கிடந்து அவதிப்படுவதைக் கண்டு, தியாகராயர் மனம் வெதும்பினார். வீழ்ச்சியுற்ற சமுதாயத்துக்கு எழுச்சியூட்ட, அவரும் டாக்டர் டி.எம். நாயரும் சேர்ந்து தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் என்ற நீதிக் கட்சியைத் தோற்றுவித்தார்கள்.

நீதிக் கட்சியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கையை-பிராமணரல்லாத பெருங்குடி மக்களின் உரிமைச் சாசனத்தை-1916 நவம்பர் 20-ஆம் நாள் சர் தியாகராயர் தமது கையெழுத்திட்டே வெளியிட்டார்.

அந்த அறிக்கை நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. புதிய பாதை அமைக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு, அல்லும் பகலும் அயராது உழைத்தார் செயல் வீரர் தியாகராயர்.

ஒரு வகுப்புமீது மற்றொரு வகுப்பு ஆதிக்கம் செலுத்தாமல் இருக்க, வகுப்புகளுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் அரசாங்கத்தைத் தட்டிக் கேட்கத் தொடங்கியது. கடைசியில் அந்தக் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றது.

1920-ஆம் ஆண்டில் அப்போதைய சென்னை மாகாணத்தின் 98 தொகுதிகளில் நீதிக் கட்சியினர் வெற்றிவாகை சூடினர்.

சட்டமன்றப் பெரும்பான்மைக் கட்சித் தலைவர் என்ற முறையில் ஆளுநர் லார்டு வெல்லிங்டன், முதலமைச்சர் பதவியேற்று அமைச்சரவை அமைக்குமாறு தேர்தலில் நின்று வெற்றி பெற்றவரும் நீதிக் கட்சித் தலைவருமான தியாகராயரைக் கேட்டுக்கொண்டார்; ஆனால், தியாகராயர் பதவி ஏற்க மறுத்துவிட்டுத் தனது கட்சிப் பிரமுகர்கள் மூவரின் பெயரைப் பரிந்துரை செய்து அமைச்சரவை அமைக்கச் செய்தார். அவர் ஆளுநருக்கு எழுதிய கடிதத்திலும், நேரில் சந்தித்துக் கூறியதிலும் குறிப்பிட்டதாவது:

'இந்திய வரலாற்றிலேயே முன் எப்போதும் இல்லை எனும்படி, அரசியல் ஞானமற்ற பாமர மக்களைத் தட்டி எழுப்பிய பாவத்துக்காக என்னையும், அகாலமரணமடைந்த என் அருமை துணைத் தலைவர் டாக்டர் டி.எம். நாயரையும் வெள்ளையரின் வால் பிடிப்பவர்கள் என்று காங்கிரஸ் தலைவர்களும் அவர்களுடைய பத்திரிகைகளும் தூற்றுகின்றனர். நான் இப்பதவியை ஏற்பேனேயானால் எனது புனிதமான கட்சிக்குக் களங்கம் விளைவித்தவன் ஆவேன். அதனால் நான் பதவி ஏற்கமாட்டேன்; மன்னிக்க வேண்டும்.' சர்.பிட்டி. தியாகரர்யரின் இந்த அறிவிப்பு எதிரிகளையும் வியக்கச் செய்தது.

இந்திய வரலாற்றில், முதல் பொதுத் தேர்தலில் தனது நீதிக் கட்சி வெற்றி வாகை சூடியது கண்டு பூரித்துப் போனார் தியாகராயர்.

> • எங்கு மிக உயர்ந்த உண்மைகள் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகின்றனவோ அதுவே மிக உயர்ந்த சமுதாயமாகும்.
>
> - சுவாமி விவேகானந்தர்

தியாகராயர் சென்னை மாநகராட்சியில் தொடர்ந்து 40 ஆண்டுகள் தொண்டு புரிந்திருக்கிறார். 1919-ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட சென்னை நகர முனிசிபல் சட்டப்படி, மாநகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தலைவராவார் அவர். அந்த ஆண்டிலிருந்து 1923-ஆம் ஆண்டுவரை அவர் தொடர்ந்து மாநகராட்சியின் தலைவராகவே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அன்னாரின் தூய தொண்டினைப் பாராட்டி அரசாங்கம் அவருக்கு 1909-இல் ராவ்பகதூர் பட்டத்தையும், 1919-இல் திவான் பகதூர் பட்டத்தையும், 1921-இல் சர் பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்தது.

**வெள்ளுடை வேந்தர் சர் பிட்டி தியாகராயரின் 141-வது பிறந்த நாளையொட்டி இந்தக் கட்டுரை வெளியிடப்படுகிறது.**

# மதுரை-மணியாச்சி அகல ரயில்பாதை

## மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

கரூர் - திண்டுக்கல் - மதுரை - தூத்துக்குடி அகல ரயில்பாதைத் திட்டத்தை அமல்படுத்தும்பொழுது, ஏற்கெனவே மதுரை- மணியாச்சி இடையே உள்ள Metre Gauge Line-ஐ அப்புறப்படுத்தி அகலப்படுத்த வேண்டும் என்ற மத்திய அரசின் முடிவு, நமது மாநிலத்தின் தென் மாவட்டங்களைப் பெரிதும் பாதிக்கும் நிலையை ஏற்படுத்தி உள்ளது.

ஏற்கெனவே மதுரைக்கும் தூத்துக்குடிக்கும் இடையே மணியாச்சி வழியாக உள்ள Metre Gauge ரயில் பாதையை அப்புறப்படுத்தி அகலப்படுத்தினால், தூத்துக்குடி, திருநெல்வேலி பகுதிகளில் இருந்து தற்போது நேரடியாகச் சென்னை வந்து சேரும் 9 ரயில்கள் ரத்து செய்யப்படுவதுடன், சென்னை வரும் பயணிகள், கூடுதலாக 104 கிலோமீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இதனால் பிரயாண நேரம் மட்டுமன்றி ரயில் கட்டணமும் கூடுதலாகும்.

Broad Gauge Line அமைத்துக் கொடுப்பது வரவேற்கத்தக்கதுதான். ஆனால், ஏற்கெனவே இருக்கின்ற வசதிகளை இழக்க வேண்டும் என்ற முடிவுதான் ஏற்புடையதாக இல்லை.

இது குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த 11.2.1992 அன்று மத்திய ரயில்வே அமைச்சர் திரு. சி.கே. ஜாஃபர் ஷெரீப் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், மதுரைக்கும் மணியாச்சிக்கும் இடையே உள்ள Metre Gauge Line-ஐ அப்புறப்படுத்தாமல் அப்படியே வைத்துக் கொண்டு திட்டமிட்டவாறு Broad Gauge Line-ஐயும் தனியாக அமைக்க வேண்டுமென்று கேட்டு இருந்தார்.

மத்திய ரயில்வே அமைச்சர் அவர்களின் 20.4.1992 தேதியிட்ட பதில் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ள குறிப்பில், Metre Gauge Line - Broad Gauge Line ஆக அகலப்படுத்தப்படும் என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. Metre Gauge Line-ஐ தொடர்ந்து வைத்துக் கொள்ளக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை என்பது அதன் மூலம் சூசகமாகத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இப்பிரச்சினை, தென் மாவட்ட மக்களைப் பெரிதும் பாதிப்பதாகவும், அவர்களுக்குக் கூடுதல் பயண நேரத்தையும், கூடுதல் பிரயாணச் செலவையும் ஏற்படுத்துவதாக அமைவதோடு, தற்போது இருக்கின்ற வசதிகளைக் குறைப்பதாக இருப்பதால், இது குறித்து மத்திய அரசினை அணுகி தற்போதுள்ள Metre Gauge Line-ஐ அகலப்படுத்தாமல் தனியே ஒரு Broad Gauge Line அமைக்க வேண்டும் என்று எங்கள் அரசு வலியுறுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(சட்டப் பேரவையில் 28.4.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பு)**

அந்நாளில் சர். பிட்டி. தியாகராயர் செய்த அறச்செயல்களுக்கு அளவே இல்லை. துன்புற்ற பல குடும்பங்களை இன்புற்று வாழச் செய்தார். ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து வேதனை நீக்கினார்.

இத்தகைய பெருவாழ்வு வாழ்ந்து, நாட்டுக்கு உழைத்த வெள்ளுடை வேந்தர் 1925-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28-ஆம் நாள் அன்று, தமது 73-வது வயதில் இயற்கை எய்தினார்.

இன்று தமிழகத்தில் ஏற்பட்டுள்ள உள்ளத்தெளிவுக்கும் உணர்ச்சி வேகத்துக்கும் உரிமை வேட்கைக்கும், ஏன், பூத்துள்ள மறுமலர்ச்சிக்கும் வித்திட்டவர், விதை முளைக்கவும் தம் அறிவெனும் உரமிட்டு, உழைப்பெனும் நீர் ஊற்றியவர் அண்ணல் தியாகராயர் ஆவார்.

இன்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கு முன்னாலே, தாழ்வுற்று வறுமைமிஞ்சிக் கிடந்த பிராமணர் அல்லாதாரின் தன்மான எழுச்சிக்காகச் சமுதாயத்தில் உரிய இடத்தைப் பெற்றுத் தகுதிபெறும் உரிமைக்காகப் போராடி, நீதிக்கட்சியின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்ட சமூகநலத் தொண்டர் சர். பிட்டி. தியாகராயர். சீரிய அரசியல்வாதியாகவும் புகழ்மிக்க சட்டப்பேரவை உறுப்பினராகவும் தேர்ந்த ஆட்சியாளராகவும் வர்த்தகத்தில் பெருமை பெற்ற தீரராகவும் வாழ்ந்துகாட்டிய வள்ளல் பெருந்தகை அவர்.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி நவீன முறையில் தழைத்திடவும் முக்கியப் பகுதிகளில் புதிய இரயில் பாதைகள் அமைத்திடவும் சென்னைத் துறைமுகம் மேலும் விரிவடையவும் இன்றுள்ள பக்கிங்காம் கால்வாய் போக்குவரத்திற்கு உகந்ததாகப் பயன்படவும் பெரிதும் உழைத்த உத்தமர் அவர். 1914-1915-இல் முதல் உலகப்போர் மூண்டிருந்த வேளையில், இறக்குமதித் தட்டுப்பாட்டைச் சமாளிக்க எவ்வாறு உற்பத்தியைப் பெருக்கலாமென்னும் உயரிய ஆலோசனைகளை வழங்கிய பொருளாதார நிபுணராகவும் திகழ்ந்தவர்.

இந்தியக் கப்பல்துறை, கப்பல் கட்டும் பணியின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பல்வேறு வழிவகைகளைத் தெரிவித்து ஆக்கம் தேடியவர் தியாகராயர். தொழில்களின் வளர்ச்சிக்கு மின்சார உற்பத்திப் பெருக்கத்தின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். தொழில் வளர்ச்சியிலும் தொழில்நுட்ப மேம்பாட்டிலும் அளவிலா ஆர்வம் கொண்டிருந்தார். வெறும் இலக்கிய அறிவை மட்டும் தரும் கல்வியை அவர் சாடினார். தொழில்நுட்ப அறிவை வளர்க்கும் கல்வியைப் புகட்ட வாதிட்டார்.

கலைகளையும் தொழில்களையும் வளப்படுத்தி நமது நாட்டில் செல்வ வளம் பெருக்கத் தக்க கல்வியைப் புகுத்திட விழைந்தவர் தியாகராயர். நமது கல்வி முறையிலே மாற்றம் ஏற்பட்டுத் தொழில்நுட்பக் கல்வி, தொடக்கப் பள்ளிகளிலும் இடைநிலைப் பள்ளிகளிலும் புகுத்தப்பட வேண்டுமென்று விரும்பியவர் அவர். பல ஆண்டுக்காலம் சென்னை மகாஜன சபையின் தீவிர உறுப்பினராக இருந்து தேசிய நலப்பணிகளுக்கு ஊக்கமூட்டிய சீலர் தியாகராயர்.

பேரறிஞர் அண்ணா அவர்களே கூட தியாகராயரின் சமூகப் பணிகளால் பெரிதும் கவரப்பட்டதுடன் அவரது சீரிய முயற்சியால்தான் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ முடிகிறது என்ற கருத்தை வலியுறுத்தி வந்தார். 30.6.1950 அன்று திருவல்லிக்கேணியில் சர். பிட்டி. தியாகராயரின் நினைவு நாள் கூட்டத்தில் உரையாற்றிய பேரறிஞர் அண்ணா அவர்கள், அவரது உயரிய தன்மை பற்றி-

"சர். தியாகராயர் தோன்றி திராவிடப் பெருங்குடி மக்களுக்குத் தலைமை பூண்டு அவர்களின் தன்னுணர்விற்கு வழிகோலி, அவர்களின் வாழ்வில் இருந்து வந்த அடிமைத் தனத்தை அகற்றப் பாடுபட்டுச் சமுதாயத்துறை, பொருளாதாரத்துறை, அரசியல்துறை ஆகியவற்றில் நல்லிடம் பெற்றிட உழைத்தார். நம்முடைய அடிப்படைக் கட்டடம் பலமாக இருக்க வேண்டும் என்றும் அவர் அல்லும் பகலும் பாடுபட்டார். இன்று நாம் வளர்ச்சி பெற்றிருப்பதற்கு மூல காரணம் யார்? நம் தியாகராயர். திராவிட இயக்கத்துக்குப் புத்துயிர் அளித்த பூமான் அவர்!"

- எனத் தொடங்கிப் பலபடக் கூறிப் போற்றிப் புகழ்ந்தார்.

வெள்ளுடை வேந்தர் சர்.பிட்டி. தியாகராயரின் 141-வது பிறந்த நாளையொட்டி, சென்னையிலுள்ள சர்.பிட்டி. தியாகராயரின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் மாலை அணிவித்தனர் (27.4.1992).





பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில்

# சமூக நலப்பணிகள்

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டச் சமூகநலத்துறை பெண்களின் மேம்பாட்டிற்கும், உடல் ஊனமுற்றோர்கள் மறுவாழ்வு பெறவும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது.

1991-92-ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களுக்கான அரசின் குறியீட்டை அடைந்து இத்துறை சாதனை புரிந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் 1991-92-ஆம் ஆண்டிற்குத் தலா ரூ.5,000 வீதம் அரசின் ஒதுக்கீட்டின்படி 295 பெண்களுக்கு ரூ.14.75 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், ரூபாய் 200 வீதம் 6,255 பெண்களுக்கு ரூபாய் 12.51 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.விதவையின்மகள் திருமண நிதி உதவித் திட்டத்தின் மூலம் '45 பெண்களுக்கு ரூபாய் 90 ஆயிரமும், டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தின் மூலம் 6 பெண்களுக்கு ரூ.30 ஆயிரமும், தமிழ்நாடு அரசு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ்,9 தம்பதியருக்கு ரூ.44,300ம் வழங்கப்பட்டுள்ளன.

ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், 2 பெண்களுக்கு ரூபாய் 2,000 நிதி உதவி வழங்கப்பட்டுள்ளன. விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசப் பாடப் புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரை 170 குழந்தைகளுக்கு ரூ.13,900 வழங்கப்பட்டுள்ளது. 13 பேருக்கு உடல் ஊனமுற்றோர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தலா ரூ.1,000 வீதம் ரூ.13 ஆயிரமும், கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 413 பேருக்கு ரூபாய் 19 ஆயிரமும், கடும் உடல் ஊனமுற்றவர்களுக்குப் பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 20 பேருக்கு ரூபாய் 32,500 மார்ச்சு 1992 முடிய வழங்கப்பட்டுள்ளது.

**ஆபரேசன்-போலியோ சிறப்புத் திட்டம்**

இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டு உடல் ஊனமுற்ற நபர்களுக்கு முழுமையான அளவில் மருத்துவப் பொருளாதாரக் கல்வி மற்றும் சமூக மறுவாழ்வு உதவிகள் அளிப்பதே இத்திட்டம். ஆண்டிற்கு இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு உடல் ஊனமுற்றவர்கள் பற்றிய கணக்கெடுப்புச் செய்து அதன் அடிப்படையில் மருத்துவக் குழுவின் மூலம் இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள் தேர்வு முகாம்களில் தேர்வு செய்யப்படுவார்கள். அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு உதவித் தொகை ரூ.400 உடன் இலவச அறுவைச் சிகிச்சை முடநீக்கியல் சாதனம், ஊன்று கோல்கள், மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், கல்வி உபகாரச் சம்பளம், கடன் உதவி, உடல் ஊனமுற்றோர் உதவித் தொகைபோன்ற மறுவாழ்வு உதவிகள் மாவட்டச் சமூக நல அலுவலகத்தின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன.

1989-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டம், கடந்த மூன்று ஆண்டுகளில் மானாமதுரை, திருப்பத்தூர், காளையார்கோவில், இளையாங்குடி, சிங்கம்புணரி, சாக்கோட்டை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. கீழ்க்கண்டுள்ள விவரப்படி இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்ட உடல் ஊனமுற்ற நபர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

| ஆண்டு | | திட்டம் செயல்படுத்தப் பட்ட ஊராட்சி ஒன்றியம் | பயன்பெற்ற பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. முதற் கட்டம் 1989-90 | 1. | மானாமதுரை | 226 |
| | 2. | திருப்பத்தூர் | 242 |
| | | மொத்தம் | 468 |
| 2. இரண்டாம் கட்டம் 1990-92 | 1. | இளையான்குடி | 273 |
| | 2. | காளையார்கோவில் | 183 |
| | 3. | சிங்கம்புணரி | 223 |
| | | மொத்தம் | 679 |
| 3. மூன்றாம் கட்டம் 1991-92 | 1. | சாக்கோட்டை | 162 |
| | | மொத்தம் | 162 |

**இலவசச் சீருடை வழங்கும் திட்டம்**

சமூக நலத்துறையின் கீழ் செயல்படும் சிறப்புத் திட்டத்தில் மகளிர் மேம்பாட்டிற்கெனக் கீழ்க்காணும் உதவிகள் 1991-92-ஆம் ஆண்டில் வழங்கப்பட்டு உள்ளன. தையல் கூட்டுறவு மகளிர் மேம்பாட்டுச் சங்கங்கள் மூலம் தமிழக அரசின் இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ், சீருடை தையல்பணி வழங்கியதன் மூலம் 525 மகளிர்க்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டு உறுப்பினர் ஒருவர் சராசரி கூலியாக ரூ.1,800 வரை பெற்றுள்ளனர்.

காலணி உற்பத்தி மகளிர் மேம்பாட்டுச் சங்கங்கள் மூலம் 100 ஆதிதிராவிடர் மகளிர்க்கு 30,768 இணை காலணிகள் உற்பத்தி செய்யப்பட்டது. உறுப்பினர் ஒவ்வொருவரும் சராசரியாக ரூ.1,230 கூலி பெற்று உள்ளனர். சாக்குக் கட்டி உற்பத்தி மகளிர் மேம்பாட்டுச் சங்கத்தின் மூலம் 10 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகின்றது. தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி முறையே 50 மற்றும் 25 மகளிர்க்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. கம்பளிப் பயிற்சி மையத்தின் மூலம் 20 நபர்களுக்குக் கம்பளித் தயாரிப்புத் தொழில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

**குழந்தைகள் பராமரிப்பு இல்லம்**

மானாமதுரையில் இயங்கும் அரசு குழந்தைகள் இல்லத்தில் 250 குழந்தைகளுக்கு 230 குழந்தைகள் சேர்க்கப்பட்டுக் கல்வி பயின்று வருகிறார்கள்.

அரசு ஒதுக்கீடு செய்த தொகை ரூ.6,74,300-இல் 230 குழந்தைகள் 1991-92-ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டு ரூபாய் 6,59,710 செலவு செய்யப்பட்டுள்ளது.

- ந. பாலையா
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
சிவகங்கை.






# பக்கிங்காம் கர்நாட்டிக் பஞ்சாலை மீண்டும் திறப்பு

கடந்த ஓராண்டுக் காலமாக மூடிக்கிடந்த பக்கிங்காம் கர்நாட்டிக்ஆலை (பின்னி ஆலை) சென்னையில் தமிழ்ப் புத்தாண்டு தினமான 13.4.1992 அன்று மீண்டும் திறக்கப்பட்டது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னை பெரம்பூரிலுள்ள இந்த ஆலையின் வளாகத்தில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு பின்னி ஆலையை மீண்டும் திறந்து வைத்தார்.

விழாவின் தொடக்கத்தில் வரவேற்புரை நிகழ்த்திய பின்னி ஆலையின் செயல்தலைவர் திரு எத்திராஜன் அவர்கள், ஆலை நிர்வாகத்தினரையும் தொழிலாளர்களையும் இரு கண்களாகப் பாவித்து, இருதரப்பினரையும் அழைத்துப் பேசி, பிரச்சினையைத் தீர்த்து வைத்து, தமிழ்ப் புத்தாண்டு நன்னாளில் ஆலையைத் திறக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

பின்னர், பின்னி ஆலையின் சார்பாகவும், தொழிற் சங்கங்களின் சார்பாகவும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது.

வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு தா. பாண்டியன் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு பேசுகையில், 'கடந்த ஓராண்டுக்கு மேல் மூடப்பட்டுக் கிடந்த இந்த ஆலையின் சுமார் 8 ஆயிரம் தொழிலாளர் குடும்பங்கள், தமிழ்ப் புத்தாண்டில் புது வாழ்க்கையைத் தொடங்கியிருக்கிறார்கள்' என்று கூறினார்.

பின்னி ஆலைத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் திரு உ.ரா. வரதராசன் அவர்கள் பேசுகையில், 'தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு முதல்வர் அவர்கள் அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறார்கள். இதற்கு மைய அரசின் ஒத்துழைப்பும் வேண்டும். முதல்வர் அவர்கள் எடுக்கும் முயற்சிகளுக்குத் தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் ஒத்துழைப்புத் தருவார்கள்' என்று கூறினார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு சி. அரங்கநாயகம் அவர்கள் பேசுகையில், "ஆலை மூடப்பட்டு சுமார் 12 மாதங்களுக்குப் பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி மற்றும் ஆர்வத்தின் காரணமாக இன்று 8 ஆயிரம் தொழிலாளர் குடும்பங்களில் வாழ்வு மலர்ந்திருக்கிறது. தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் நமது முதல்வர் யாருக்கும் சளைத்தவரல்ல. எந்தத் தொழிலாளிக்கும் பாதிப்பு இல்லாமல், ஆலையைத் திறக்க முதல்வர் அவர்கள் பாடுபட்டார். கூடிய விரைவில் பின்னி ஆலை நவீன ஆலை என்ற பெயரெடுக்கப் பாடுபட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

விழாவில் கலந்து கொண்டு மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள் பேசுகையில், 'தொழிலாளர்களின் உணர்வுகளை மதிக்கக் கூடியவர் நமது முதல்வர் அவர்கள். எந்தத் தொழிலாளியும், பாதிக்கப்படாமல் தொழிலாளர்களின் வேலைக்கு உத்தரவாதம் தந்தவர் முதல்வர்' என்று கூறினார்.

பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலையின் இயந்திரத்தை இயக்கிவைத்து, ஆலையைத் திறந்து வைத்து உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

"பழம்பெரும் பக்கிங்காம் கர்நாடிக் பஞ்சாலை, இன்று மீண்டும் திறக்கப்படும் இந் நன்நாளில், நானும் உங்களுடன் இருக்கின்றேன் என்பதை எண்ணிப்பெருமகிழ்ச்சி அடைகின்றேன். என்னுடைய இந்த மகிழ்ச்சிக்கு என்ன காரணம்?

கடந்த 115 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டு, வளர்ந்து, 88,208 கதிர்களையும், 2,074 தறிகளையும் தன்னகத்தே கொண்டு, இயங்கி வந்த இந்த மாபெரும் ஆலையில் ஏற்பட்ட பிரச்சினைகளை, நான் தலையிட்டுத் தீர்த்து வைத்தது தான் என் மகிழ்ச்சிக்குக் காரணம் என்றும், அதனால் மீண்டும் இன்று அது திறக்கப்படுவதை எண்ணித் தான் பெருமிதம் கொள்கிறேன் என்றும், யாரேனும் ஊகித்தால், அது சரியல்ல. ஏனெனில், கடந்த ஓராண்டுக் காலத்திற்கு மேல் மூடிக் கிடந்த ஆலையின் தொழிலாளர்கள், ஏறத்தாழ 8,000 தொழிலாள உடன்பிறப்புகளின் இல்லங்களில், இன்று முதல் விளக்கெரியப் பேகின்றதை நினைத்துத் தான், உவகை கொண்டேன். இன்று மீண்டும் ஏற்றப்படும் அந்தத் திருவிளக்குகள், என்றும் அணையாது, தனது இருகரம் கொண்டு இந்த அரசு காக்கும் என்பதை, இத்தருணத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒரு தொழிற்சாலை மூடப்படுவதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். என்னைப் பொறுத்தமட்டில், இந்த ஆலை மூடப்பட்டிருப்பது தெரியவந்த உடன், என் கண் முன் தோன்றியது, அதன் விளைவாகப் பாதிக்கப்பட்ட 8,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் குடும்பங்கள் தான். மாதந்தோறும் ஊதியம் பெற்று, அதனையே நம்பி வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த, ஆயிரக்கணக்கான தொழிலாள உடன் பிறப்புக்களின் குடும்பங்கள், நிலை குலைந்து தடுமாறி, தாங்கொணாத் துயரம் அடைகின்றனரே என்ற எண்ணம் தான்.

நிர்வாகத்திற்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையே, பல்வேறு பிரச்சினைகள் இருக்கலாம். அவை ஒரு சாராரின் நியாயமான கோரிக்கைகளாகக் கூட இருக்கலாம். ஆனால், அந்தக் கோரிக்கைகளை நிதானமாகப் பேசித் தீர்த்துக் கொள்ளாமல், வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதோ, அல்லது கதவடைப்பில் முடிவாவதோ, என்னால் என்றுமே ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தாகும்.

ஆலை நிர்வாகத்திற்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகளினால், உண்மையாகப் பாதிக்கப்படுபவர்கள், பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களின் குடும்பத்தினரே.

கடந்த ஓராண்டுக் காலத்திற்கு மேற்பட்ட இந்த ஆலையின் கருப்பு நாட்களில், எத்தனைத் துயரங்களையும், வேதனைகளையும், அன்புத் தாய்மார்களும், அவர்தம் குழந்தைகளும் அனுபவித்தனர் என்பதை எண்ணிப் பார்த்தால், என் கண்கள் கலங்குகின்றன.

தனியார் துறை ஆலையின் பிரச்சினைதானே இது, அரசு ஏன் இதில் தலையிட வேண்டும், என்ற ஐயப்பாடு கூட, ஒரு சிலருக்கு ஏற்படலாம். நான் ஒன்றை இங்கே தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது தனியார் பிரச்சினை அல்ல. பல்லாயிரக்கணக்கான இந்த ஆலைத் தொழிலாளர்களின் இல்லப் பிரச்சினை. தவறு ஏதும் செய்யாத அவர்களின் குடும்பத்தினர், தண்டிக்கப்படும் வாழ்க்கைப் பிரச்சினை.

எனவேதான், நான் முதலமைச்சராக் ஆட்சிப் பொறுப்பு ஏற்றது முதல், இந்த ஆலையின் பிரச்சினைக்கு, சுமூகமான ஒரு தீர்வு காணவேண்டும் என்று முடிவு செய்தேன். அதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டேன்.

ஒரு காலக்கட்டத்தில், ஆலையின் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம், உணவுப் பொருட்களை விநியோகம் செய்யக்கூட, போதிய நிதி வசதி இல்லை என்ற காரணத்தால், உணவுப் பொருட்களை வழங்குவதை நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட பொழுது, ஏறத்தாழ 9 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கான உணவுப் பொருட்களையும், இதர பண்டங்களையும், Tamil Nadu Civil Supplies Corporation-இல் இருந்து, கடனாக வழங்க ஆணையிட்டேன்.

ஏனென்றால் மூடிக்கிடந்த இந்த ஆலையின் தொழிலாளர்களின் குடும்பங்கள், பசியினால் வாடக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில் தான்.

மேலும் சென்ற ஆண்டு, தீபாவளித் திருநாளை எல்லோரும் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்களே, ஆனால், தமிழகத்தில் மூடிக்கிடக்கும் ஆலைத் தொழிலாளர்களின் குடும்பத்தினர், அதனைத் துக்க நாளாகக் கொண்டாடும் நிலை ஏற்பட்டுவிட்டதே, என்ற ஆதங்கத்தில் தான்,

### திருப்பூரில் ஏற்றுமதி மையம்

பின்னலாடை தொழிலுக்கு சிறப்புப் பெற்ற திருப்பூரில் ஏற்றுமதி மையம் ஒன்று அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத் தின்கீழ், திருப்பூர் நகருக்குத் தேவையான குடிநீர் வசதி, சாலை வசதி, மின் விளக்கு, கழிவுநீர் குழாய்கள் அமைத்தல் போன்ற பணிகள் நிறைவேற்றப்படும். இந்தப் பணி தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கான அடிப்படை வசதி நிறுவனத்திடம் ஒப்படைக்கப் படும் என்று மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (7.4.1992).



முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏதாவது ஒரு சிறு உதவியாவது செய்ய வேண்டும் என்று முடிவு எடுத்து, 400 ரூபாய் வீதம், இந்த ஆலையின் 8,136 தொழிலாளர்களுக்கும், உரிய நேரத்தில் உதவித் தொகை வழங்க ஆணையிட்டேன்.

இந்த ஆலையின் பிரச்சினை ஒரு சுமூகமான முடிவுற்கு வராமல், வளர்ந்துகொண்டே சென்றதால், ஆலையின் நிர்வாகத்தையும், அனைத்துத் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளையும், கடந்த 4.2.1992 அன்று நேரில் அழைத்து, கலந்துரையாடி, இன்று இந்த ஆலையை மீண்டும் திறக்க வேண்டும் என்று நான் குறிப்பிட்டேன். அன்றைய தினம் நான் விடுத்த அன்புக் கட்டளையை ஏற்று, ஆலை நிர்வாகத்தினரும், தொழிற் சங்க நிர்வாகிகளும், தொழிலாளர்களும், நான் குறிப்பிட்ட நாளிலேயே ஆலையை மீண்டும் திறப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு, நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

வரவேற்புரை ஆற்றிய திரு எத்திராஜ் அவர்கள், இனிமையாக இத் தொடக்கத்தை அமைக்கும் முகத்தான், ஒவ்வொரு தொழிலாளருக்கும் இனிப்பு வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து மேலும் சில இனிப்புச் செய்திகளை, இங்கு நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கொடுத்துள்ள கடன் தொகையான 9 இலட்சம் ரூபாயை, தொழிலாளர்களிடமிருந்து 9 தவணைகளில் பிடித்தம் செய்துகொள்ள வேண்டும், என்ற உங்களின் கோரிக்கை, எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. ஓராண்டிற்கு மேல் அல்லல்பட்ட நீங்கள், ஊதியம் பெறாத காலத்தில், வாழ்க்கைக்கு வழி இல்லை என்ற நிலையில், கடனாக வழங்கப்பட்ட இந்த 9 இலட்சம் ரூபாயையும், மனிதாபிமான அடிப்படையில், பிடித்தம் செய்ய வேண்டாம் என்று முடிவு செய்துள்ளேன். எனவே நீங்கள் அந்தக் குறிப்பிட்ட கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிர்வாகத்தினரும் அதனைப் பிடித்தம் செய்ய மாட்டார்கள். உங்களது இந்தக் கடனை, அரசே ஏற்கும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, உங்களது B & C Mills Employees Co-operative Society-யின், சென்ற ஆண்டுக் கடனின் வட்டித் தொகையைத், தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையும் உள்ளதாக, என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இது குறித்த மட்டில், வங்கிக் கடனைத் திரும்பச் செலுத்தினால் தான் மீண்டும் கடன் பெற முடியும். எனவே, சென்ற ஆண்டின் வட்டித் தொகையைத் தள்ளுபடி செய்வதற்குச் சாத்தியக் கூறுகள் இல்லை. இருப்பினும், உங்கள் கூட்டுறவுச் சங்கம்

• நல்ல குடும்பம் என்பது, வரவுக்கு மிஞ்சி செலவு செய்யாமல் இருப்பதாகும். நமது வாழ்க்கைச் செலவை வரவுக்கு உட்பட்டே அமைத்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட குடும்பந்தான் கண்ணியமான குடும்பம்.

— தந்தை பெரியார்

தொடர்ந்து இயங்குவதற்கு உதவும் வகையில், இந்த ஆண்டு செலுத்த வேண்டிய வட்டித் தொகையை ஒத்தி வைத்து, தவணைகளில் அதை செலுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது, என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆலையின் நிர்வாகத்தினர், சில புதிய திட்டங்களையும் இங்கே அறிவிக்குமாறு, என்னைக் கேட்டுக் கொண்டுள்ளார்கள். அதன்படி, இனி ஒவ்வொரு ஆண்டும், 25 ஆண்டுச்காலப் பணியினை முடித்த ஒவ்வொரு தொழிலாளருக்கும், ஒரு கைக்கடிகாரம் பரிசாக வழங்கப்படும்.

இந்த ஆண்டு முதல், பணியில் உள்ள தொழிலாளர் எவரேனும் அகால மரணமடைந்தால், மனிதாபிமான அடிப்படையில், அவரது வாரிசுதாரர் ஒருவருக்கு முன்னுரிமை கொடுத்து, இந்த ஆலையிலேயே வேலை கொடுக்கப்படும்.

இந்த ஆண்டு முதல், தொழிலாளர்களின் குழந்தைகளுக்குப் பள்ளிக் கட்டணத்தை, ஆலையின் நிர்வாகமே செலுத்தும். அவர்களுக்குத் தேவையான பள்ளிச் சீருடைகளையும் நிர்வாகமே இலவசமாக வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம், இந்த விழாவிலேயே, நான் ஏற்கெனவே கேட்டுக்கொண்டதற்கு இணங்க, வழங்கப்படும் ஒரு மாத ஊதியத்துடன், சென்ற ஆண்டிற்கான போனஸ் தொகையும் சேர்த்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, ஒவ்வொரு தொழிலாளருக்கும் இன்று இரண்டு மாத ஊதியம் வழங்கப்படும், என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன்.

இத்தனை மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் மீண்டும் தங்கள் வாழ்க்கையைத் தொடங்கும் தொழிலாளர் குடும்பங்கள், அனைத்து வசதிகளையும், வாய்ப்புகளையும் பெற்று, வாழ்க்கையில் உயர வேண்டும், என்ற எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆலையினை மீண்டும் திறந்தது குறித்து, ஒரு சிலர், அரசு இறங்கி வந்தது, போராட்டம் வெற்றி கண்டது, என்பது போன்ற வக்கிரமான சுயநலக் கருத்துக்களைத் தெரிவித்தாலும், இந்த

அரசின் உண்மையான முயற்சிகள், உலகம் அறிந்தது. அதைவிட நீங்கள் ஒவ்வொருவரும் மிகவும் நன்றாகவே உணர்ந்திருக்கின்றீர்கள். எனவே, அதுபற்றி நான் ஏதும் குறிப்பிட விரும்ப வில்லை. உரிமைக்காகப் போராடுங்கள். ஆனால், உங்களது குடும்பத்தினரின் வாழ்க்கையை இருட் டாக்காதீர்கள். அவர்களுக்கு நீங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளைச், சிறிது சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் உங்களது கடமைகளை உணர்ந்து செயல்பட்டால், கடந்த ஓராண்டுக் காலத்தில் ஏற்பட்ட அவல நிலை போன்று, இனி என்றென்றும் நிகழாது.

இந்தத் தருணத்தில், தமிழகத்திலுள்ள அனைத்து நிர்வாகத்தினரையும், தொழிற் சங்க உடன்பிறப் புக்களையும் நான் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எக்காரணத்தைக் கொண்டும் வேலை நிறுத்தம், கதவடைப்பு போன்ற அழிவுச் செயல்களில் ஈடுபடாதீர்கள்.

எத்தகைய பிரச்சினையாக இருப்பினும், அதனை அமைதியாகப் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும். அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தைகளினால் 'தான்,' ஓராண்டிற்குமேல் மூடிக்கிடந்த இந்த ஆலை இன்று மீண்டும் திறக்கப் பட்டுள்ளது. உரிமைகளையும் கடமைகளையும் சரி யாகச் சீர் தூக்கிப் பார்த்தால், உங்களின் வீடுகள் நலம் பெறும், அதனால் நாடும் நலம் பெறும் என் பதைத் தெரிவித்து, இந்த இனிய விழாவில் பங்கேற்று, உங்களை எல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்குப் பேருவகை கொண்டு, உங்கள் வாழ்க்கை ஒளிமயமாக அமைய வேண் டும், உயரவேண்டும் என வாழ்த்துகிறேன்."

மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை நிகழ்த் திய பின், பின்னி ஆலைத் தொழிலாளர்களுக்கு இனிப்புடன் கூடிய டிபன் கேரியர்களையும், 25 ஆண்டுகள் பணி முடித்த தொழிலாளர்களுக்குக் கைகடிகாரங்களையும் அன்பளிப்பாக வழங்கினார்.

பின்னி ஆலையை மீண்டும் திறந்து வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, வெள்ளி யாலான ஆலையின் சின்னத்தை ஆலையின் நிர் வாகிகள் நினைவுப் பரிசாக வழங்கினார்கள்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக் களும், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் களும் கலந்து கொண்டனர்.

விழா முடிவில் இயக்குநர் திரு. எஸ். நடராஜன் அவர்கள் நன்றி கூற விழா இனிதே முடிந்தது.

- நிகழ்ச்சித் தொகுப்பு: ஜேசி.

## தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ), ரூபாய் 10 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் 21.3.1983-இல் ஒரு அரசு நிறுவனமாக நிறுவப்பட்டது. 31.3.1991-ஆம் நாளன்று உள்ளபடி இந்நிறுவனத்தின் அரசின் மூலதனப் பங்கு ரூ.2.50 கோடியாகும். இந் நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாவன:-

- தமிழ்நாட்டில் தோல் தொழிலை வளர்ச்சி யடையச் செய்தல்.
- தோல் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர் களுக்கு உதவியளித்தல்;
- சிறிய தோல் பதனீட்டாளர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தல்;
- தமிழ்நாட்டிலுள்ள தோல் பதனிடும் தொழிற் சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரைச் சுத்திகரிக்கும் முக்கியப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்.

இந்நிறுவனத்தின் 1990-91-ஆம் ஆய்வு ஆண்டின் மொத்த விற்பனை அளவு ரூ.742.30 இலட்சமாகும். கடந்த ஆண்டு 1989-90-இல் இதன் அளவு ரூ.931.13 இலட்சமாகும்.

இவ்வாண்டில், இந்நிறுவனம் காலணி மற்றும் தோல் பொருட்கள் குறித்த 7 பொருட்காட்சி களில் கலந்து கொண்டுள்ளது. இத்தகைய பொருட் காட்சிகளின் மூலமும் விற்பனை நிலையங்களின் மூலமும் நடைபெற்ற விற்பனையில் ஈட்டிய ஆதாயம் முறையே ரூ.54.74 இலட்சம், ரூ.6.77 இலட்சம் ஆகும். பொருட்கள் வங்கிகள் மூலம் செய்யப்பட்ட மூலப்பொருட்களின் விற்பனைத் தொகையும் அதன் மூலம் கிடைத்த ஆதாயத் தொகையும் முறையே ரூ.45.80 இலட்சமும், ரூ.5.92 இலட்சமும் ஆகும்.

இலவசக் காலணி வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.437.25 இலட்சம் செலவில் ரூ.6.50 இலட்சம் இணை காலணிகளை வழங்கும் பணி இந்நிறு வனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிறுவனம் 31.3.1991 வரையான காலத்தில் ரூ.116.49 இலட்சம் மதிப்புள்ள 7.06 இலட்சம் இணை காலணிகளை உற்பத்தி செய்து வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்தியதன் மூலம் இந் நிறுவனம், 2,500 கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வசதி அளித்துள்ளது.



# தமிழ்நாட்டின் திருக்கோயில்கள் பழமைக்கும் புதுமைக்கும் இடைப்பட்ட இணைப்புப் பாலங்களேயாகும்!

## இந்து சமய அறநிலையத்துறை விவாதங்களுக்குச் சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் பதிலுரை

உலக அளவில் இன்றைக்கு இந்திய நாட்டிற்குப் பெருமை சேர்ப்பனவற்றுள் முதன்மையானது இந்தியாவின் ஆம்மீகச் சிறப்பு. சமய நெறி முறைகள் பலவும் தழைத்தோங்கி, அவற்றைச் சார்ந்த அறம் கூறும் நல்லோர் பலர், இறையுணர் வுக் கருத்துக்களை மக்களிடையே பரப்பி வழி பாட்டுத் தலங்களைப் படைத்து, நமது பண்பாட்டி னைச் செம்மையாக்கிய பாங்கினை, நமது நாட்டின் பிற பகுதிகளைக் காட்டிலும் தமிழகத்தில் நாம் நன்கு காணலாம்.

தமிழ்நாட்டின் திருக்கோயில்கள் ஒவ்வொன் றும், பழமைக்கும் புதுமைக்கும் உள்ள இணைப்புப் பாலங்கள் என்று கூறினால் அது மிகையாகாது. ஏனெனில் நமது திருக்கோயில்களின் வரலாற்றுப் பின்னணி, அவ்ற்றின் ஆன்மீகச் செறிவு, அவை வெளிப்படுத்தும் கலையழகு ஆகியவை நமக்குப் பழமையின் சாதனையை எடுத்துரைக்கும் கலாச் சாரக் கருவூலங்கள். அதே நேரத்தில், அந்தத் திருக்கோயில்களில் புதைந்துள்ள அரிய கலைச் செல்வங்கள், இன்றைக்கும் நாம் கற்றுணர வேண்டிய பல்வேறு உண்மைகளையும் மாபெரும் தத்துவங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள கலைப் பொக்கிஷங்கள். சிற்பம், ஓவியம், இசை, மற்றும் தத்துவம் என்று பல்வேறு துறைகளிலும், காலத்தின் மாற்றத்தினால் எழுந்துள்ள புதிய சிந்தனைகளுக்கும்கூட விளக்கம் தருபவைகளாக அவை அமைந்துள்ளன. எனவே, நமது திருக் கோயில்களைப் 'புதுமையின் உறைவிடம்' என்று கூறுவது சாலப்பொருந்தும்.

எங்கள் அரசு கோவில் நிர்வாக வாரியம் (Temple Administration Board) என்ற அமைப் பினை ஏற்படுத்தி அதன் மூலம் எத்தகைய சீரிய முறையில் தமிழகத் திருக்கோயில்களைப் பரா மரிக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது என்பது இத்துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும், அரசின் தலையீடு திருக்கோயில்களின் நிர்வாகத்தில் மிகக் குறைந்த அளவே இருக்க வேண்டும் என்ற ஒரு வாதம் இன்றைக்கும் கூறப் பட்டு வருவதையும் நான் அறிவேன்.

அரசு என்பது நிர்வாகத்தை நடத்துகின்ற ஒரு வெற்று இயந்திரம் அல்ல. எங்களைப் பொறுத்த வரையில் ஆறு கோடித் தமிழக மக்களின் உள் ளார்ந்த உணர்வுகளையும், எதிர்பார்ப்புகளையும்,



இலட்சியங்களையும் கண்டறிந்து, அவற்றிற்குச் செயல் வடிவம் கொடுக்கின்ற ஒரு மக்களாட்சி அமைப்புதான் அரசாங்கம். எனவேதான், ஒரு குறிப்பிட்ட சாராரின் எதிர்ப்புகளைப் பொருட் படுத்தாமல், சவால்களைச் சந்தித்து, மக்களாட் சிக்கு மாட்சிமை சேர்க்கவேண்டும் என்ற எங் களின் நல் உணர்வுகளின் வெளிப்பாடுதான் எங்கள் அரசின் செயல்பாடு. திருக்கோயில்களை யும் அவற்றைச் சார்ந்த அறக்கட்டளை நிறுவனங் களையும் பராமரிப்பதில் சிலர் நினைப்பது போன்று, தேவையற்ற நிர்வாகத் தலையீடுகள் இருக்காது. ஆனால், அதேநேரத்தில் இந்த அரசு ஆக்கபூர்வமான விஷயங்களில் தலையிட்டு, தனது சீரிய பங்கினைச் செயலாற்ற என்றைக்கும் தயங்காது.

தமிழகத்தின் தனிச் சிறப்பான ஆலயங்களின் புனிதம் காக்கப்படும்; மரபுகள் கெடாத வகையில்

இந்தியக் குடியரசுத் தலைவருடைய ஒப்புதலையும் பெற்று, 1991-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ஆம் நாள் முதல் செயல்படுகின்ற வகையில், தமிழ்நாடு ஆலய நிர்வாக வாரியம் அமைக்கப் பட்டது. இந்த வாரியத்தில் சைவ, வைணவத் திரு மடங்களின் மடாதிபதிகள், சமயச் சான்றோர்கள், ஆன்மீகப் பெரியோர்கள் மற்றும் சட்ட வல்லு நர்கள், கோவில் நிர்வாகத்தில் ஆர்வமும் அக் கறையும் கொண்ட சான்றோர்கள் உறுப்பினர் களாக உள்ளனர். இவ்வாறு உயர்ந்த பெருமக்கள் பங்கு கொண்டிருப்பதன் மூலம், தமிழகம் முழு வதுமுள்ள ஆலயங்கள், மற்றும் அறநிறுவனங்கள் ஆகியவற்றின் நிர்வாகத்தைச் சீரமைக்கும் பணி, சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆலய நிர்வாகத்தில், மாநில அளவில், தமிழ்நாடு மாநில ஆலய நிர்வாக வாரியமும், மாவட்ட அளவில், மாவட்டக் குழுக்களும் உள்ள

# ஏறத்தாழ 400 கோயில்களுக்கு
# மூலதன வைப்புநிதி
# ஏற்படுத்த முடிவு!

கோயில் நிர்வாகங்கள் சீரமைக்கப்படும். பக்தர்கள் மனதைப் புண்படுத்தும் வகையிலான எக்காரிய மும் தமிழகத்தில் அனுமதிக்கப்பட மாட்டாது என்று, எங்கள் கட்சியின் தேர்தல் அறிக்கையிலே கூறியிருந்தோம். மேலும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆளுகைக்கு உட்பட்ட கோயில் களைத் தவிர, தமிழகக் கிராமங்களில் உள்ள பல்லாயிரக்கணக்கான சிறுசிறு புராதனக் கோயில்கள், பராமரிப்பு - இன்றிப் பாழ்பட்டுக் கிடக்கின்ற நிலையில், அவைகளை நன்கு பரா மரித்து, அவற்றின் அன்றாடப் பிரச்சினை களுக்குத் தீர்வு காண்போம் என்று அறிவித்திருந் தோம். அந்த அறிவிப்புக்குச் செயல்வடிவம் கொடுக்கின்ற வகையில், 'தமிழ்நாடு ஆலய நிர்வாக வாரியம்' என்ற அமைப்பு ஒன்றை உருவாக்கி, அதனிடம் ஆலயங்களின் நிர்வாகத்தை ஒப்படைக்கத் தேவையான சட்டத் திருத்தங்கள் கொண்டுவருவோம் என்று, சென்ற மானியக் கோரிக்கையின்போது நான் தெரிவித்திருந்தேன்.

அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு, அவை

இரட்டை அடுக்கு அமைப்பு உருவாக்கப்பட்டுள் ளது. ஆலயத்தின் ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சமும், அதற்கு மேலும் உள்ள ஆலயங்களின் அறங்காவலர் குழுவை, மாநில அளவில் அமைக் கப்பட்டிருக்கின்ற ஆலய நிர்வாக வாரியம் அமைக்கும்.

அதேபோன்று, மாவட்ட அளவிலே, ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சத்திற்குக் கீழே உள்ள ஆலயங்களுக்கு, அறங்காவலர்களை நியமிக்கும் பொறுப்பு, மாவட்டக் குழுவிடம் ஒப்படைக்கப் பட்டு உள்ளது. அண்மையில் மாநில அளவிலான ஆலய நிர்வாக வாரியத்தின் முதல் கூட்டம் கூட்டப்பட்டு, ஆலயத் திருப்பணிகள், உற்சவத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்கள் ஆகியவற்றின் பாதுகாப்பு, திருமண மண்டபங்கள் மற்றும் அங்காடி வளாகங்கள் கட்டுதல் போன்ற பொருட்கள், அந்தக் கூட்டத்தில் விவாதிக்கப் பட்டு, திருப்பணிகளுக்கு ரூ.3.19 கோடி அளவிற் கான மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள் ளது. மேலும், மாநிலம் முழுவதும் 17 மாவட்டக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

(33—ஆம் பக்கம் பார்க்க)



# கபாலீசுவரர் கோயில் திருக்குளச் சீரமைப்பு



சென்னை-மயிலாப்பூரில் நடைபெற்ற அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் திருக்குளச் சீரமைப்புத் துவக்கவிழா 13.4.1992 அன்று சிறப்புடன் நடைபெற்றது.

இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை-தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரியத்தின் சார்பில் நடத்தப் பெற்ற இவ்விழாவில், அவ்வாரியத்தின் தலைவரும், மாண்புமிகு தமிழக முதல்வருமான புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பங்கேற்றுத் திருக்குளச் சீரமைப்புப் பணியைத் துவக்கிவைத்தார்.

விழாவுக்கு வருகைதந்த அவரை மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும், டில்லியில் உள்ள மாண்புமிகு தமிழக அரசு சிறப்புப் பிரதிநிதி திரு. தம்பித்துரை, மாண்புமிகு துணைச் சபாநாயகர் திரு. பொன்னுசாமி, மாண்புமிகு அரசு கொறடா, திரு. கா.ப. பட்டாபிராமன், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் மயிலைத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. டி.எம். ரங்கராஜன், டாக்டர் ஸ்ரீதரன் எம்.பி. ஆகியோரும் வர வேற்றுத் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களைப் பூச்செண்டுகள் வழங்கியும் பொன்னாடை அளித் தும் தெரிவித்துக் கொண்டனர்.

நிகழ்ச்சிக்கு வருகை தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களை, வேத மந்திரங்களும், நாதசுரமும் முழங்கப் பூரணகும்ப மரியாதையுடன் விழாக் குழுவினர் வரவேற்றார்கள். அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை அணிவிக்கப் பட்டது.



அறநிலையத்துறைச் செயலாளர் திரு. சி. தங்கராசு அவர்கள் தம்முடைய வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:

"இக்கோயில் திருக்குளத்தில் 1987-ஆம் ஆண்டு தெப்பத் திருவிழா நடைபெற்றது; அதற்குப் பிறகு தண்ணீர் இல்லாததால் தெப்பத் திருவிழா நடைபெறவில்லை.

"2.3.1992-இல் நடைபெற்ற திருக்கோயில்களின் நிர்வாக வாரியக் கூட்டத்தில் மயிலாப்பூர் கோயில் திருக்குளத்தின் சீரமைப்புப்பற்றி ஆராயப் பட்டது. ஒரு கோடி ரூபாய் செலவில் குளச் சீரமைப்புப் பணி செய்ய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அக்கூட்டத்தில் முடிவு செய்து 35 இலட்சம் ரூபாயை முதல்கட்டமாக ஒதுக்கினார்; குளத்தில் இரண்டடி உயரத்திற்குக் களிமண் போடப்படும்; அதன் பிறகு அதற்கு மேல் அரை அடி உயரத்திற்குக் குறுமணல் போடப்பட்டுத் தண்ணீர் தேக்கிவைக்கப்படும். இந்தத் தண்ணீர் எப்போதும் சுத்தமாக வைத்திருக்கப்படும். எப் போதும் போல அடுத்த தை மாதம் பௌர்ணமி நாளன்று இங்கே மிகச் சிறப்பாகத் தெப்போற் சவம் நடைபெறும்" -இவ்வாறு செயலாளர் பேசினார்.

இதையடுத்து மங்கள இசை முழங்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் குத்து விளக்கு ஏற்றி வைத்துத் திருப்பணி துவக்கம் குறித்த கல்வெட்டைத் திறந்துவைத்தார்.

பெயர்ப் பலகைக்கு முன்னால் வெள்ளிமயில் மின்ன-வெள்ளியால் ஆன சிவலிங்கமாகக் கபாலீசுவரர் விக்கிரகம் அலங்கரிக்கப்பட்டிருந்தது; மாண்புமிகு முதல்வர் அவர்கள் கரங்கூப்பி வணங்கிவிட்டு அங்கிருந்து மகிழ்வுடன் விடை பெற்றார்.

விழாக் கோலம் பூண்டிருந்த மயிலாப்பூரில் - இந் நிகழ்ச்சியை ஏராளமாகத் திரண்டிருந்த மக்கள் கண்டுகளித்து மாண்புமிகு முதல்வர் அவர்களை வாழ்த்தி வாழ்த்தொலி முழக்கினார்.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
இல. இராசேந்திரன்.

## திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் திட்டப் பணிகள்

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் 1990-91-ஆம் ஆண்டில், வீடு இல்லாதவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ், ரூ.11 இலட்சம் செலவில் நிலம் கையகப்படுத்தப் பட்டு 2 ஆயிரம் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

ரூ.14 ஆயிரம் மதிப்பில் 20 நபர்களுக்குச் சலவைத் தொழில் செய்ய உதவி செய்தலின் பொருட்டு, சலவைப் பெட்டி வழங்கப்பட்டுள்ளது. 11 நபர்களுக்கு உழவு மாடுகள் வாங்குவதற்குத் தலா ரூ.1,500 வீதம் ரூ.16,500 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தூய்மையாகப் பராமரிக்கப்படும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு வானொலிப் பெட்டி வழங்கும் திட்டத்தின்கீழ், 6 ஆதிதிராவிடர் கிராமங்களுக்குத் தலா ரூபாய் ஒரு ஆயிரம் வீதம் ரூ.6 ஆயிரம் செலவில் வானொலிப் பெட்டி வழங்கப்பட்டுள்ளது.

இலவசக் காலணிப் பணிக்கூடம் வழங்கும் திட்டத்தின்கீழ், 1991- 92-ஆம் ஆண்டில் 9 நபர்களுக்கு 99 ஆயிரம் மதிப்பில் இலவசக் காலணிப் பணிக்கூடம் அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளது.

சிறு, குறு விவசாயிகளுக்குப் பாசனக் கிணறுகள் இலவசமாக வெட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ், 21 கிணறுகள் வெட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

7 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு ரூ.90 ஆயிரம் மதிப்பில் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குச் சாலை வசதி, மயானச் சாலைக்குப் பாதை வசதி, தெரு விளக்கு போன்ற வசதிக்கு ரூ.1.5 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

கே.பி. நல்லதம்பி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்



## நம்மோடு நமக்காக

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போர் முகாம் அமைத்து விட்டார்; போர் வீரர்களைக் கூட்டி விட்டார். படைக்கலன்களும் தாயார். முரசும் கொட்டிவிட்டுக் கூப்பிடுகிறார்.

"கொலை வாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே"

என்று. அந்தக் குரல், காற்றில் மிதந்து வரும் கீதமாக மட்டும் இன்றி கிண்கிணிச் சத்தத்தோடு இழைந்து வரும் கீதமொழியாக மட்டுமின்றி, கேட் போரின் வளைந்த முதுகை நிமிர்த்திவிடும் வீரக் குரலாகிவிட்டது. எனவேதான், நமக்கொரு வால்டேர் கிடைத்துவிட்டார். நமக்கோர் ஷெல்லி கிடைத்துவிட்டார். நமக்கு ஒரு கவிஞர் கிடைத்து விட்டார். அவர் நம்மோடு இருக்கிறார். நமக்காக இருக்கிறார். நம் வேலையைச் செய்கிறார். நாம் வாழ வழி அமைக்கிறார். `அவர் வாழ்க. அவர் திறன் ஓங்குக! அவர் வெல்க! அவர் வெற்றியினால் நமக்கு வெற்றி ஓங்குக' என்று மனமார நாம் கூறுகிறோம். நாம் மட்டுமா, நாடே கூறுகிறது.

—பேரறிஞர் அண்ணா.





### இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழ்நாட்டில்

# மகளிர் காவல் நிலையம்

சென்னை மாநகரில் - முழுக்க முழுக்கப் பெண்களே பணிபுரியும் காவல் நிலையத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 13.4.1992 அன்று கிரீம்சு சாலையில் தொடங்கிவைத்தார்.

காவல் துறை உயர் அதிகாரி திரு. எஸ். ஸ்ரீபால் அவர்கள் மலர்ச் செண்டு கொடுத்தும் - அக் காவல் நிலையம் அமைந்துள்ள ஆயிரம் விளக்குத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரும், மாண்புமிகு சட்ட அமைச்சருமான திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பொன்னாடை வழங்கியும் மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்றார்கள்.

குதிரைப் படை அணிவகுத்து நிற்க, விழா மேடைக்கு வருமுன் பெண் காவலர்கள் மாண்புமிகு முதல்வருக்கு அணிவகுப்பு மரியாதை அளித்தார்கள்.

பெண் காவலர்கள் புதிய நிலையத்தைத் திறந்து வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி வைத்து - பார்வையாளர் சிறப்பேட்டில் குறிப்பெழுதி முதல் கையெழுத்திட்டார்; கட்டடத்தைச் சுற்றிப் பார்த்தார்.

இவ்விழாவிற்கு - மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் முதலான, சட்டப் பேரவை உறுப்பினர்கள் பலரும் வருகை தந்திருந்தார்கள். அரசு தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகளும், காவல்துறை உயர் அதிகாரிகளும் வந்திருந்தனர்.

**வரவேற்புரை:**

காவல்துறை உயர் அதிகாரி திரு. எஸ். ஸ்ரீபால் தமது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:

"நமது முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டில் ஒளிமயமான எதிர்காலம் அமையப் பாடுபட்டு வருகிறார். இந்த இனிய தமிழ்ப் புத்தாண்டு நாளில், இங்கே மகளிர் காவல் நிலையம் அவர்களது திருக்கரங்களால் திறந்து வைக்கப்படுவது நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சி தருவதாகும்.

'வேண்டப்பட்டது அறிவோ இனி, வேண்டப்பட்டது திருவோ இனி' என்ற மணிவாசகப் பெருமானின் திருவாசகப்படி - காவல் துறையினராகிய நாம் கேட்காமலே இந்தப் பத்துமாத காலத்தில் பல்வேறு உதவிகளையும் சலுகைகளையும் நமக்களித்துள்ள அவர்களுக்கு, மனநிறைவைத் தரும் வகையில் நாம் பணியாற்றுவோம் என்று இந்நாளில் உறுதிகூறிச் செயல்படுவோம்"

- இதன்பின், 'டாக்டர் புரட்சித் தலைவி வாழ்க' என்ற பொதுமக்களின் வாழ்த்து முழக்கங்கள் தொடர, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

# பெண் காவல் நிலையப் பணிகள்

சென்னை நகரக் காவல்துறையில், 1973-ஆம் ஆண்டு முதன்முதலாகப் பெண் காவல் பிரிவு தொடங்கப்பட்டது; இந்தப் பிரிவு தமிழ்நாட்டிலேயே முதன்முதலாகத் தொடங்கப்பட்டதாகும். இந்தப் பிரிவில் ஒரு பெண் உதவி ஆய்வாளர், ஒரு பெண் தலைமைக் காவலர் மற்றும் 20 பெண் காவலர்கள் பணியமர்த்தப்பட்டனர்.

இந்தப் பிரிவு படிப்படையாகப் பலப்படுத்தப் பட்டது. இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன், ஒரு ஆய்வாளர், 3 உதவி ஆய்வாளர், 6 தலைமைக் காவலர் மற்றும் 24 பெண் காவலர்களைக் கொண்ட 'அனைத்துப் பெண் காவல் நிலையம்' தொடங்க முடிவு எடுக்கப்பட்டது. சென்னை நகரில் பெண் காவலர்களின் எண்ணிக்கை தற்போது ஒரு ஆய்வாளர், 12 உதவி ஆய்வாளர், 26 பெண் தலைமைக் காவலர் மற்றும் 140 பெண் காவலர்கள் (மொத்தம் 179) கொண்டதாக உள்ளது.

இந்தத் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று தொடங்கப்படுகின்ற 'அனைத்துப் பெண் காவல் நிலையம்' சென்னை நகர் முழுவதும் அதிகார வரம்பைக் கொண்டது. பெண்கள்,வரதட்சிணைக் கொடுமை, அநீதி இழைப்பு இன்னபிற புகார் கொடுக்க வேண்டுமென்றால், அவர்கள் தங்கள் பகுதி எல்லைக்கு உட்பட்ட காவல் நிலயத்தில் புகார் கொடுக்கலாம்; அப்படி அவர்களுக்கு அங்கே புகார் கொடுக்கத் தயக்கமாக இருந்தால், சென்னை நகரம் முழுவதும் அதிகார வரம்பு உள்ள இந்த 'அனைத்துப் பெண் காவல் நிலையத்திற்கு வந்து புகார் கொடுக்கலாம். இந்த 'அனைத்துப் பெண் காவல் நிலையம்' பெண் புகார்தாரர்களின் குறைகளைப் போக்க ஏதுவாக இருக்கும் என்று பொதுவாகக் கருதப்படுகிறது.

அனைத்துப் பெண் காவல் நிலையத்தின் பணிகள் விவரம் வருமாறு:-

1. பெண்களுக்கு எதிரான அச்சுறுத்தல், வன்முறை, காயப்படுத்துதல் போன்ற குற்ற வழக்குகளில் தக்க நடவடிக்கை எடுத்தல்.

2. பெண்களுக்கு எதிராக நடைபெறும் வரதட்சிணைக் கொடுமை வழக்குகளை விசாரித்தல்.

3. பாதிக்கப்பட்ட இளங்குற்றவாளிகள் சம்பந்தப்பட்ட புகார்களை விசாரணை செய்தல்.

4. இளங்குற்றவாளிகள் மற்றும் பெண் குற்றவாளிகளைப் பரிசோதித்து விசாரணை செய்தல்.

5. இளங்குற்றவாளிகள் மற்றும் பெண் கைதிகளுக்குப் பாதுகாப்புக் கொடுத்து அழைத்துச் செல்லுதல்.

6. பெண்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் பாதுகாப்புப் பணி செய்தல்.

7. பெண்களைச் சோதனை செய்தல் மற்றும் கோவில், பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் பெண்களுக்கு உதவியாக இருத்தல்.

8. விபச்சார ஒழிப்புப் பிரிவுச் சட்டத்தை அமல் செய்வதில் விபச்சார ஒழிப்புப் பிரிவினருக்கு உதவியாக இருத்தல்.

9. பெண் சாட்சிகளை விசாரிப்பதில், விசாரணை செய்யும் அதிகாரிகளுக்கு உதவியாக இருத்தல்.

அவர்கள் பேச்சு முழுவிவரம் வருமாறு:

"காவல் துறையின் சரித்திரத்திலேயே இன்று ஒரு புரட்சிகரமான நாள். உலகில் எங்குமே பொதுவாக மகளிருக்குத்தான் காவல் தேவை என்று இருந்த நிலை மாறி, மகளிரே காவலர்களாகி, இன்று தனியே இயங்கும் மகளிர் காவல் நிலையம் தொடங்கப்படுகின்றது என்ற பரிணாம வளர்ச்சியைக் காணும் பொழுது, எனக்குப் பெருமையாக இருக்கின்றது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அனைவரும் - பெண்களைப் பேணிக்காக்க வேண்டும், அவர்கள் சமுதாயத்தில் ஆண்களுக்கு நிகர் சம உரிமை பெற வேண்டுமென்று போராடிய சத்திய சீலர்கள்.

அவர்கள் வழி நடக்கும் எங்கள் அரசின் காலத்தில்தான், அகில இந்தியாவிலேயே முதன்முறையாக, முற்றிலும் மகளிரே பணிபுரியும் காவல் நிலையம், ஓர் முன்னோடித் திட்டமாகத் தொடங்கப்படுவதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

**மாவட்டம் முழுமைக்கும்...**

இந்த மகளிர் காவல் நிலையம் ஆயிரம் விளக்குப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்தாலும், இதன் ஆளுகை எல்லை, மற்ற காவல் நிலையங்களைப் போல் குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும் அல்லாமல், சென்னை மாவட்டம் முழுமைக்கும் செயல்படத்தக்க வகையில், தனித்தன்மையுடன் அமைக்கப்பட்டுள்ளது. பெண்களின் நலன் காப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தக் காவல் நிலையத்தில், சென்னை மாவட்டத்தின் எந்தப் பகுதியைச் சார்ந்த பெண்களாக இருந்தாலும், அவர்கள் தங்கள் புகார் மனுக்களை இந்தக் காவல் நிலையத்தில் கொண்டுவந்து கொடுக்கலாம். இக்காவல் நிலையம் அவற்றைப் பெற்றுக்கொண்டு, முறையாகப் பதிவு செய்து, அவற்றின் மீது உரிய நடவடிக்கைகள் தொடர முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நமது தாய்மார்களும், சகோதரிகளும் தங்களது வாழ்க்கையில் பல்வேறு சோதனைகளையும், துயரங்களையும் அனுபவித்து வருகிறார்கள். சொல்ல முடியாத சில பிரச்சினைகளில் சிக்குண்டு, தாங்கொணாத் துயரம் காரணமாகத் தற்கொலை செய்துகொள்ளும் சூழ்நிலைக்குக் கூட தள்ளப்படுகிறார்கள். தங்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்து உதவ, யாரும் இல்லாத நிலையில் இருக்கும் இந்த அபலைச் சகோதரிகள், தங்களுக்கு இழைக்கப்பட்ட தீங்கினையும், அநீதியினையும் வெளியில் சொல்லக் கூட வெட்கப்பட்டுத் தன்னுள்ளே மனம் புழுங்கி, செய்வதறியாது வாழும் நிலை சில இடங்களில் இன்றும் நிலவுகிறது.

சட்டத்தில் அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்பட்டு இருந்தபோதிலும், தனிப்பட்ட தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, அவர்கள் காவல் நிலயத்தை அணுகுவது



அரிது. ஏனெனில், ஆண்களே பெரும்பாலும் பணிபுரியும் காவல் நிலையங்களில், தங்களது சோகக் கதையை வெளிப்படையாக, ஒளிவு மறைவின்றி எடுத்துச் சொல்லத் தயங்குகிறார்கள். எனவே அங்கு செல்வதையே தவிர்க்கிறார்கள். எனவே அங்கு தன் தலைவிதி இதுதான் என்று நொந்து, தங்கள் வாழ்க்கையைத் தொடர்கிறார்கள். இந்த அவல நிலையைப் போக்க வேண்டுமென்று, எங்கள் அரசு கொண்டுள்ள எண்ணத்தின் வெளிப்பாடுதான், இன்று இங்கே தொடங்கப்பட்டுள்ள, தமிழகத்தின் முதல் மகளிர் காவல் நிலையம். இக் காவல் நிலையத்திற்குத் தங்களது குறைகளை எடுத்துச் சொல்ல, பெண்கள், எவ்விதத் தயக்கமும் இன்றி வந்து பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். வாழ்க்கையில் எவ்வித உதவியும் இன்றி நிராதரவாய் நிற்கும் பெண்களுக்கு, இப்புதிய திட்டம் நல்லதொரு பாதுகாப்பு அரணாக அமையும் என்று, நான் திடமாக நம்புகிறேன்.

**தாயன்பின் மேன்மை**

தாயின் அன்பை உணராதோர் உலகில் இல்லை. அந்த அன்பு எதனுடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத உயர்ந்த ஒன்றாகும். தவறு செய்யும் குழந்தைகளைத், தாயன்பால் நிச்சயமாகத் திருத்த முடியும் என்பதை நாம் அறிவோம்.

அவ்வாறே மகளிர் காவலர்களின் கடந்த காலப் பணியினை உற்று நோக்கினால், குற்றவாளிகளின் மன மாற்றத்திற்கு, அவர்களின் அணுகுமுறை பேருதவியாக இருந்துவருவது தெரியவரும்.

பெரும்பாலும் இளங் குற்றவாளிகளும், முதல் முறையாகக் குற்றம் புரிவோர்கள் பலரும், அவர்கள் செய்துவிட்ட குற்றத்தினை எண்ணி வருந்தும் நிலையிலேயே இருப்பார்கள். அந்த மனநிலையில் உள்ளோரை, மீண்டும் தவறு செய்யாமல் நிரந்தரமாகத் தடுத்தாட் கொள்ளும் திறமை, மகளிர் காவலர்களிடையே உள்ளது. இதுபோன்ற குற்றவாளிகளைத் தாயன்போடு அணுகி, கண்டிக்க வேண்டியவற்றைக் கண்டித்தும், அன்பு காட்டித் திருத்த வேண்டிய குறைபாடுகளைத் திருத்தும் கைவண்ணம், பொதுவாக மகளிர் காவலர்களிடம் இருக்கின்றது.



## பாரதியும், பாரதிதாசனும் உலகிற்கே சொந்தம்!

"இங்கு பாவேந்தர் பாரதிதாசன், பாரதியார் இருவரின் உருவப்படங்களும் திறக்கப்பட்டன. யாருக்குப் பாராட்டுக் கூறுகிறோம் என்று சொல்வதைவிட யாருக்கு நாம் வணக்கம் செலுத்துகிறோம் என்று நினைத்தால் எதிர் காலத்திற்கு நன்மை கிடைக்கும்".

"பாரதியும் பாரதிதாசனும் யாருக்குச் சொந்தம்? தமிழ் நாட்டுக்கு மட்டுமா? இந்தியாவுக்கு மட்டுமா? உலகத்திற்கே சொந்தம்! 'வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித்திருநாடு' என்று சொல்லிச் சென்றார் பாரதி. அவர் வாழ்ந்த திருநாடு இது என்கிறோம்".

"இளைஞர்கள் அனைவரும் ஜாதி வேற்றுமைகளைக் களையும்படி சொன்னார் பாரதி. அதைத் தொடர்ந்து சொன்னார் பாரதிதாசன்".

"பாவேந்தர் பல்கலைக் கழகம் தமிழக மக்களின் ஆசியுடன் இன்று தொடங்கப்படுகிறது. ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க, தாய் என்னென்ன சிரமப்படுவாளோ அதே போலத் தமிழக அரசு, தமிழக மக்களின் ஆதரவில் தொல்லைகளை எல்லாம் மறந்து இது போன்ற நல்ல நிகழ்ச்சிகளை நிறைவேற்றி வருகிறது. இதுபோன்ற நிகழ்ச்சிகளைக் கண்டு மக்கள் என்ன நினைப்பார்கள் என்று என்னால் நிச்சயமாக எண்ணிப் பார்க்க முடிகிறது. நாட்டுக்கு என்னென்ன பயனுள்ள பணிகளைச் செய்ய வேண்டுமோ இவற்றைச் செய்கிறோம் என்பதைத் தமிழக மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்".

**–டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், 1982-இல், திருச்சியில் 'பாவேந்தர்' பல்கலைக் கழகத்தைத் துவக்கி வைத்துப் பேசியதிலிருந்து.**

எனவேதான் முற்றிலும் மகளிரையே கொண்ட காவல் நிலையத்தை அமைக்கலாம்; அதில் குறிப்பாக இளங் குற்றவாளிகளையும், முதல் குற்றவாளிகளையும் கையாளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. சட்டங்களின்படி ஒருவர் புரிந்த குற்றங்களுக்குத் தண்டனை வழங்கப்பட்ட போதிலும், அவர் மீண்டும் குற்றங்கள் செய்யாமல் தடுக்கத் தேவையான முயற்சிகள், இதுவரை காவல் துறையினரால் மேற்கொள்ளப்படவில்லை.

### திருத்தும் முயற்சி

ஆக்கபூர்வமான இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டால், நாள்தோறும் உயர்ந்து கொண்டே இருக்கும் குற்றவாளிகளின் பட்டியலை, நிச்சயமாகக் கட்டுப்படுத்த முடியும். இது மேலும் சிறப்பாகச் சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க வழிவகுக்கும்.

முதல் முயற்சியாக மேற்கொண்டுள்ள இந்தப் புதிய மகளிர் காவல் நிலையம், அந்தப் பணியைச் சிறப்பாகச் செய்யும் என்று நம்புகிறேன். இந்த மகளிர் காவல் நிலையத்தில், ஒரு காவல்துறைப் பெண் ஆய்வாளரும், 3 பெண் உதவி ஆய்வாளர்களும், 6 பெண் தலைமைக் காவலர்களும், 24 பெண் காவலர்களும் பணியில் இருப்பார்கள்.

இப்புதிய திட்டத்தின் செயல்பாட்டினை, மூன்று மாத காலத்திற்குக் கண்காணித்து, தேவை இருப்பின் தக்க மாற்றங்கள் செய்து, அனைத்து மாவட்டத் தலைநகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். அதன் பின்னர், இதர முக்கிய நகரங்களுக்கும்விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### புதுவகைச் சீருடை

பெண் காவலர்களுக்கான சீருடை, விரைவில் மாற்றி அமைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் தெரிவித்தேன். அதனைத் தொடர்ந்து தமிழகத்தில் பணிபுரியும் பெண் காவலர்கள், புதிய மாதிரியான சீருடையை அணிவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவில் கலந்துகொண்டதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இன்று தொடங்கப்பட்டுள்ள மகளிர் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவல் துறையினர், சிறப்பாகப் பணியாற்றி, இத்திட்டத்தை வெற்றி அடையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அவர்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.'

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

### மூவருக்கு வேலைவாய்ப்பு

விழா முடிவில் - காவல் துறையில் பணியாற்றி இறந்த மூன்று காவலர்களின் துணைவியார்களான திருமதி கே.எம். சரோஜா, திருமதி கே. பச்சையம்மாள், திருமதி அஞ்சலிதேவி ஆகிய மூவர்க்கும் கருணை அடிப்படையில், அவரவர் தகுதிகளுக்கேற்ப வேலைவாய்ப்புக்கான உத்தரவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

**- நிகழ்ச்சித் தொகுப்பு: பி.எல்.ஆர்.**





# பாட்டாளி உழைப்பினிலே...

**—புலவர் சி. துரைசுவாமி**

பாட்டாளி உழைப்பினிலே உலகம் ஓங்கும்
பரிதி ஒளி கண்டவுடன் இருளும் நீங்கும்
தீட்டுகின்ற கல்வியிலே அறிவும் தேங்கும்
தித்திக்கும் இனிய சொல்லே நட்பில் சேரும்
கூட்டாளி நல்லமைப்பில் சக்தி வாழும்
குணமிகுந்த உயர் இடமே குடிகள் சூழும்
சூட்டுகின்ற மகுடமதில் நீதி தேறும்
தூய்மையுறும் ஞானமதே உலகை ஆளும்!

மின்னுகின்ற வானமதில் இடியும் தோன்றும்
மேன்மைமிகும் உழைப்பாலே வளங்கள் தோயும்
பொன்னை புது அனலில்இடப்புதுமை காணும்
பொய்யில்லா மெய்மைதனை புகழே வாழ்த்தும்
தன்னலத்தை விடுத்துழைப்பை உலகம் போற்றும்
தாவுகின்ற ஈகைவளம் ஏழ்மை போக்கும்
சின்னஞ்சிறு ஆலின்வித்தே நிழலாய்க் காக்கும்
தேயத்தோர் உழைப்பனைத்தும் இன்பம் தேக்கும்!

வளமான இருகரையின் நதியும் போன்று
வாழ்வினிலே உழைக்கின்ற உழைப்பும் ஆமே
களங்காணும் வீரத்தின் வெற்றி ஒப்ப
காசினியில் போற்றமைதல் படைப்பின் ஆற்றல்
பளபளக்கும் காஞ்சிநகர் பட்டாம் ஞாலம்
பாடுபடும் உழைப்பிலுறும் இசையும் அஃதாம்
உளம்வருத்தும் உறுபசியே மாந்தர்க்(கு) அற்று
உலகமெலாம் போற்றுதல் பாட்டாளி நாடாம்!

பொம்மையினை சர்க்கரையால் செய்து வைத்துப்
புதுமையுற சுவைத்திட நா இனிக்கும் எங்கும்
இம்மையிலே ஈன்றோர்கள் படைத்த தேகம்
எல்லோர்க்கும் பயன்விளைத்தல் உழைப்பே யாகும்
செம்மையிலே குடிக்கமைந்த செங்கோல் நீளும்
செழுமைமிக பாடமைந்த வளங்கள் நன்றாம்
எம்முடையர் என்றும்பிறர் இனத்தா ரென்றும்
இனம்பிரியா உடல்உழைப்பால் காத்தல் இறையாம்!

# தமிழ்நாடு காவல்துறை வீட்டுவசதிக் கழகம் தமிழக அரசால் மீண்டும் அமைக்கப்பட்டது!

# அனைத்துக் காவலர்க்கும் குடியிருப்பு வசதி!

## மாண்புமிகு தமிழக முதல்வர் உறுதி!

சென்னையில் உள்ள புளியந்தோப்புப் பகுதியில், காவல் துறையினருக்கான குடியிருப்புக் கால்கோள் விழா, 13.4.1992 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயல்லிதா அவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு புதிதாக அமையவிருக்கும் காவலர் குடியிருப்புக்கு அடிக்கல் நாட்டிச் சிறப்பித்தார்.

**வரவேற்புரை:**

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் தலைவர் திரு. கே.கே. இராஜசேகரன் நாயர் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

'காவலர்களுக்காக இந்த ஆண்டில் ஆயிரம் வீடுகள் அரசு மூலம் கட்டித் தரப்படும். அதற்கான முதல்கட்டப் பணியே இது. தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் சார்பில், மூன்று கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் சென்னை, விழுப்புரம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, மணிமுத்தாறு, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் செயல்படுத்தப்படும்' என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

**முதல்வர் உரை:**

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் சார்பில், புளியந்தோப்பில், ஒரு கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் 112 வீடுகள் கட்டப்படவிருக்கின்றன.

இதற்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:




"தமிழ்ப் புத்தாண்டான இன்று மகிழ்ச்சிகரமான நாள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியின்போது ஏற்படுத்தப்பட்ட காவலர் குடியிருப்புக்கான வாரியம், யாருக்கும் நன்மை செய்யக்கூடாது என்ற எண்ணமுடைய கடந்த கால ஆட்சியில் கலைக்கப்பட்டுவிட்டது; நான் யாரைக் குறிப்பிடுகிறேன் என்பது உங்களுக்கெல்லாம் புரிந்திருக்கும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழி நின்று இன்று வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கும் நாங்கள் இன்று அதே வீட்டு வசதிக் கழகத்தை மீண்டும் அமைத்திருக்கிறோம்; அதற்குப் புத்துயிரூட்டியிருக்கிறோம்.

காவலர்களின் பணி எளிதானதல்ல; மக்களின் உயிருக்கும் உடைமைக்கும், தாய்மார்களின் மானத்தைக் காப்பதற்கும் இருப்பது காவல்துறை. எங்காவது ஒரு தவறு நடந்துவிட்டால் காவல்துறையே அதற்குப் பொறுப்பு என்று பழி சுமத்துகிறார்கள்; எங்கோ ஒரு கோயில் சிலை உடைந்துவிட்டாலும் கூட காவல்துறை தூங்கியதா என்கிறார்கள்; வீட்டிலே திருட்டு நடந்துவிட்டாலும் காவல்துறை கவனக்குறைவாக நடந்ததாகக் கேள்விகேட்டுப் பழிசுமத்துகிறார்கள்.

தமிழ்நாட்டின் மக்கள்தொகை சுமார் ஆறு கோடியாகும்; உயிருக்கும் உடைமைக்கும் தாய்மார்களின் மானத்தைக் காப்பதற்கும் இருக்கும் காவலர்களின் எண்ணிக்கையோ 69 ஆயிரம்; அதாவது, ஆயிரம் பேருக்கு ஒரு காவலர் என்ற விகிதத்தில் தான் இருக்கிறார்கள்.

இப்படி இருந்தும், சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டிப் பாதுகாப்புத்தருவதில் நாம் மிகப் பெரிய சாதனை படைத்திருக்கிறோம்.

இப்படிப் பொதுமக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாவலர்களாக இருக்கும் காவல் துறையினருக்குப் போதுமான குடியிருப்புகள் இல்லை; காவலர்களின் மனைவிகளும் குழந்தைகளும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இத்தகைய நிலையிலிருந்து அவர்களை மீட்க - அவர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கத்தோடு மீண்டும் வீட்டுவசதிக் கழகத்தை உயிர்ப்பித்துப் புதிய பல திட்டங்களைச் செயல்படுத்தவிருக்கிறோம்; முதல் கட்டமாக இந்தக் குடியிருப்பு உருவாகவிருக்கிறது.

எல்லா மட்டத்திலும் உள்ள அனைத்துக் காவலர்களுக்கும் குடியிருப்பு வசதி செய்துதருவது என்பது இந்த அரசின் இலட்சியமாகும்; காவல் துறை மற்றும் பொது மக்களின் பரிபூரண ஒத்துழைப்புடன் இந்த இலக்கை எட்டிப் பிடிப்போம்..."

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்.

விழா முடிவில் - காவல்துறை உயர் அதிகாரி திரு. எஸ். ஸ்ரீபால், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் தலைவர் திரு. கே.கே. ராஜசேகரன் நாயர் இருவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் புத்தாண்டு நினைவுப் பரிசு வழங்கினார்கள்.

இவ்விழாவிற்கு - மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் முதலான மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும், நடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு-காவல்துறை உயர் அதிகாரிகளும் வருகை தந்திருந்தார்கள்.

**- நிகழ்ச்சித் தொகுப்பு: 'ராஜூ'**

# பகுத்தறிவுக் கவிஞர்

பாரதிதாசன் அவர்கள் புரட்சிகரமான கருத்துக்களை வெளிப்படுத்திய முதல் கவியும் கடைசிக் கவிஞரும் ஆவார். அவருக்கு அடுத்து அவருக்கு ஈடாக வேறு எந்தக் கவிஞரும் தோன்றவே இல்லை. தோன்றியவர்களும் பழமைக் கருத்துக்களைக் கொண்டவர்கள் தான்.

இன்றைக்கு நம் நாட்டில் இவரோடு குறிப்பிடத்தக்க வேறு புலவர்கள் இருந்தார்கள் என்றோ, இருக்கின்றார்கள் என்றோ சொல்வதற்கு இல்லை.

அவர் புதுமைக் கருத்துக்களையும், புரட்சிக் கருத்துக்களையும் மக்கள் சமுதாயத்திற்குத் தேவையான சமதர்மக் கருத்துக்களையும் துணிந்து வெளியிட்டுள்ளார்.

சுருங்கச் சொன்னால், அவர் போல் தீவிரமான கருத்துக்களை அவருக்கு முன்பும், பின்பும் எடுத்துச் சொன்னவர்கள் இன்னார் என்று எடுத்துக்காட்ட ஆளே இல்லையே!

**—தந்தை பெரியார்.**



பெரியார் மாவட்டத்தில்...

# சமுதாய நலப்பணிகள்

பெரியார் மாவட்டத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் 147 பள்ளி சத்துணவு மையங்களின் சமையற் கூடங்களையும், 439 குழந்தைகள் நல மையங்களையும் பழுது நீக்கம் செய்து தர, தொழிலதிபர்கள், தொண்டு நிறுவனங்கள், தாராள மனம் படைத்த தனியார் தத்து எடுத்துக் கொண்டனர். அதில் இதுவரை 94 பள்ளி சத்துணவு மையங்களின் சமையற் கூடங்கள் ரூ.63,765 செலவிலும், 320 குழந்தைகள் நல மையங்கள் ரூ.2,73,806 செலவிலும் பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

மொடக்குறிச்சி, கொடுமுடி, பெருந்துறை, தாராபுரம், குண்டடம், மூலனூர், காங்கேயம், வெள்ளக்கோயில், கோபி, நம்பியூர், தாளவாடி ஆகிய ஒன்றியங்களில் எடுத்துக் கொள்ளப்பட்ட அனைத்து மராமத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு விட்டன.

பிற்பட்ட வகுப்பினருக்கு 'பிரிமெட்ரிக்' கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ், ரூ.1,52,000 ஒதுக்கீட்டுத் தொகையில், ரூ.79,385 செலவு செய்யப்பட்டு இதனால் 3,346 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள். போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் ரூ.15,08,000 ஒதுக்கீட்டில் ரூ.17,83,068 செலவு செய்யப்பட்டு, 6,263 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர். இலவசக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் ரூ.8,62,000 ஒதுக்கீட்டில் ரூ.8,83,618 செலவு செய்யப்பட்டு 1,260 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

பெரியார் மாவட்டத்தில் நீர் வளத்தை மேம்படுத்தும் பொருட்டும், இறவைப் பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டும், சிறு, குறு மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்தும் பொருட்டும் தொடங்கப்பட்ட திட்டத்தின் கீழ் 170 விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.9.5 இலட்சம் மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கிணறு வெட்ட, கிணறு ஆழப்படுத்த, பம்ப் செட் வைக்க போன்ற பணிகளுக்காகக் கடன் பெறும் விவசாயிகளுக்கு 25 முதல் 50 சதம் வரை உதவி வழங்கப்பட்டுள்ளது. பெருந்துறை, சத்தியமங்கலம், தாராபுரம், கோபி, பவானி வட்டார விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டத்தின் கீழ் ரூ.4.5 இலட்சம் மானிய மதிப்பில் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 75 சத மானிய உதவியுடன், சிறு குறு விவசாயிகளுக்கு 50 சத மானிய உதவியுடனும், இதர விவசாயிகளுக்கு 25 சத மானியத்துடனும் தூவல் பாசனக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. நபர் ஒன்றுக்கு ரூ.10 ஆயிரம் வரை மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் (1990-91) 3.50 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டது. நடப்பாண்டில் 4 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 3,58,478.650 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.358.478 இலட்சம் ஆகும்.

நியாய விலையில் பொது மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை விநியோகிப்பதற்கான ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திற்கும் ஒரு அங்காடி என்ற முறையில் பொது விநியோகத் திட்டம் தமிழக அரசால் 1978-79-இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி, 745 கிராம அங்காடிகளையும், 102 நகர்ப்புற அங்காடிகளையும் நடத்தி குடும்பக் கார்டுதாரர்களுக்குத் தேவைப்படும் கட்டுப்பாட்டுப் பொருட்கள் வழங்கி இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றன. மாதந்தோறும் திடீர் ஆய்வுகள் நடத்தி, பொது விநியோகத் திட்டத்தில் எந்தவித முறைகேடுகளும் நடைபெறாவண்ணம் கண்காணிக்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு 1991-92-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடாக 7,870 நபர்களுக்கு ரூ.245.945 இலட்சம் பெறப்பட்டுள்ளது. 31.3.92 முடிய 8,409 பயனாளிகளுக்கு ரூ.212.92 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதில் பொருளியல் 107 சதவிகிதம் சாதனை எய்தியுள்ளது.

1991-92-ஆம் ஆண்டு சமூகக் காடுகள் திட்டத்தில் 10 இலட்சம் செடிகள் உருவாக்கப்பட்டு 450 எக்டேரில் நடவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூபாய் 28.10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சமூகக் காடுகள் திட்டத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தது 3 ஊராட்சிகளில் நடவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 4 இலட்சம் பனை விதைகள் 211 எக்டேரில் நடும் பணி முடிவுற்றுள்ளது.

பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு.ரா.கண்ணன், இ.ஆ.ப.,
அவர்கள் தலைமையில் 3.4.92
அன்று நடைபெற்ற
செய்தியாளர்கள் கூட்டத்தில்
தெரிவிக்கப்பட்ட தகவல்கள்.

ஒவ்வொரு நிமிடமும் இன்பமாக இருக்க, அறிவுடன் கூடிய விடா முயற்சியும், பிறரை நேசிக்கும் அருங்குணமும் இருந்தால் போதும். நமது சேமிப்பில் இருந்து எவ்வளவு எடுத்துக் கொடுத்தாலும் இந்த இரண்டின் அளவும் குறையவே குறையாது. வடடியுடன் முதலும் நிச்சயமாக மீண்டும் வந்து சேர்ந்துவிடும். முதலில் செய்யுங்கள். பிறகு வெற்றியைச் சந்திக்கலாம்.

-ஜேம்ஸ் ஆலன்





# மரம் வளர்ப்போம்

சமுதாய வளத்துக்கும் நலத்துக்கும் மரங்கள் இன்றியமையாததாகிறது. சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கும், மழை வளத்துக்கும் அது துணைபுரிகிறது.

'வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்!' என்பது செயல் வடிவில் வர அனைவரும் ஆர்வம் கொள்ள வேண்டும்.

அந்த வகையில் சில மரங்களைப் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்வோம்:

**மூங்கில்**

மூங்கில் சிறு மூங்கில் (கல் மூங்கில்) பெரு மூங்கில் என இரு வகைப்படும்.

கடல் மட்டத்திலிருந்த 1000 மீட்டர் உயரமுள்ள பகுதிகளில் இது வளரும். ஆற்று ஓரம், ஓடை ஓரம் ஈரமான இலையுதிர்க் காட்டுப் பகுதிகளிலும் நிழலுள்ள அடர்ந்த காடுகளிலும் இம்மரம் செழித்து வளருகின்றது.

சதுப்பு நிலப்பகுதிகளிலும், ஆறு, ஓடை, வயல், நதி ஆகியவைகளின் ஓரப் பகுதிகளிலும் ஈரமுள்ள தரிசு நிலப் பகுதிகளிலும் இம்மரங்களை வளர்க்கலாம்.

மூங்கில், காகிதம் மற்றும் ரயான் தயாரிக்க பெரும்பாலும் உபயோகிக்கப்படுகிறது. சாரம் கட்டவும் குடிசைகள் கட்டவும், ஓட்டு வீடுகள் கட்டவும் பயன்படுகின்றன. விவசாய இரும்புக் கருவிகளுக்குக் கைப்பிடிகள் செய்யவும், கூடை, தட்டிகள், பெட்டிகள், கட்டில், விசிறி, குடை, பொம்மை, குழாய், வாத்தியக் கருவி, ஏணி, கூடாரக் கழிகள் போன்ற அநேக விதமான உபயோகமுள்ள பொருட்கள் செய்யப் பயன்படுகிறது. வேலி அமைத்தல், மரச் சாமான்கள், ஈட்டி, பாய், கட்டு மரம் ஆகியவைகளுக்கும் பயன்படும். இதன் இளம் துளிர் ஊறுகாய்க்கும் பயன்படுகிறது.

**சவுண்டல் மரம்**

சவுண்டல் மரத்தில் பல உயர் இரகங்கள் உள்ளன. அவைகளில் கே-8, கே-28, கே-29, கே-67, கே-72, மற்றும் கே-32 சிறந்தவையாகும். நமது மாநிலத்தில் கே-28 இரகம் நன்றாக வளர்வதால் இதைப் பெருமளவில் நடுவது நன்று. சவுண்டல் மிக உயரமாக வளரக் கூடிய மர வகையைச் சார்ந்தது. சவுண்டல், தழை மற்றும் முதிராத காய்கள் கால்நடைகளுக்கு நல்ல தீவனமாகக் கருதப்படுகிறது.

கடல் மட்டத்திலிருந்து 1000 கி.மீட்டர் உயரம் வரை உள்ள பகுதிகளில் நன்கு வளரும். மழை, வெய்யில், நெருப்பு, காற்று, சூறாவளி, வறட்சி ஆகியவைகளால் ஏற்படும் பாதிப்புகளை ஓரளவு தாங்கக் கூடியது. இதை மானாவாரியாகவும் பயிரிடலாம். இருப்பினும் நீர் பாய்ச்சுவதன் மூலம் வளர்ச்சியைக் கணிசமான அளவில் அதிகரிக்கலாம். சதுப்பு நிலங்களிலும், நீர் நீண்ட நாட்கள் தேங்கி நிற்கும் இடங்களிலும் சவுண்டல் வளராது. கற்களும், சரளையும் நிறைந்த மண்ணிலும், அமிலத் தன்மையுள்ள மண்ணிலும் சவுண்டல் நன்கு வளராது. வடிகால் வசதியுள்ள மண்ணிலும், சத்துள்ள மண்ணிலும் போதுமான அளவில் மழை அல்லது நீர்ப்பாசனம் இருப்பின் சவுண்டல் நன்றாக வளரும்.

கால்நடைகள் சவுண்டல் இலை, முதிராத காய்களை விரும்பிச் சாப்பிடுவதால் வேலியிட்டுப் பாதுகாப்பது அவசியம்.

புல் விதைத்த 6 மாதங்களுக்குப் பிறகு புற்களை அறுத்துக் கால்நடைகளுக்குப் போடலாம். இத்தகைய அமைப்பில் சவுண்டல் தழைகளும் புற்களும் கலந்து உள்ளன. அதனால் புரதச்சத்து நிறைந்த தீவனம் கால்நடைகளுக்குக் கிடைக்கிறது.

**கால்நடைத் தீவனமாக உபயோகிக்கும் முறை**

சவுண்டல் தழையில் மையோசின் என்ற இரசாயனப் பொருள் உள்ளது. எனவே, அசை போடுகின்ற கால்நடைகளின் உணவில் சவுண்டல் தழைகளைச் சுமார் 30

சதவிகிதம் வரை சேர்த்துக் கொள்ளலாம். அதற்கு மேல் சேர்க்கக் கூடாது. அசை போடாத கால்நடைகளின் உணவில் 10 சதவிகிதம் சேர்த்தால் போதுமானது. கோழி, பன்றி, முயல், வான்கோழி போன்றவைகளுக்கும் உணவில் சேர்த்துக் கொடுக்கலாம்.

**புளிய மரம்**

புளிய மரம் கடல் மட்டத்திலிருந்து 1000 மீட்டர் வரை உயரமுள்ள பகுதிகளிலும் நன்கு வளரும். எல்லா வகையான நிலப்பகுதிகளிலும் இம்மரம் வளரும். வெப்பப் பிரதேசத்திலும் சரி, அல்லது மித வெப்பப்பிரதேசத்திலும் சரி, இது நன்றாக வளரும். இந்தியத் துணைக் கண்டத்தில் நெடுநாள் வாழக்கூடிய மர இனங்களில் இதுவும் ஒன்று. 750 மி.மீ. முதல் 1250 மி.மீ. வரை சாதாரணமாக மழை பெய்யும் இடத்தில் வளரும்.

சாலை ஓரங்கள், தரிசு நிலப் பகுதிகள், உபயோகமற்ற வளம் குறைந்த நிலப் பகுதிகள், ஆகிய எப்படிப்பட்ட இடத்திலும் உற்பத்தி செய்யலாம். செடிகள் வறட்சியைத் தாங்கும் தன்மையுடையன. வண்டல் மண் பிரதேசங்களில் நன்றாக வளரும்-

இதன் தழை கால்நடைகளின் தீவனத்துக்கும், பூ, காய், பழம் ஆகியவை சமையலுக்கும் பயன்படுகிறது. இதன் கொட்டைகள் எருவாகவும் மாட்டுக்குத் தீவனமாகவும் பயன்படுகிறது. மரம் நல்ல விறகாகப் பயன்படுகிறது. இதன் பழத்தோலும் நல்ல எரிபொருள். மேலும், இம்மரத்தைச் சுட்டு எரித்து நல்ல கரியும் தயாரிக்கலாம். இம்மரம் கெட்டியானதாகவும் உறுதியானதாகவும் இருப்பதால் இதனை உலக்கை மற்றும் கருவிகளின் கைப்பிடிகள் போன்றவை செய்ய உபயோகப்படுத்தப்படுகின்றது. புளியன் கொட்டையில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் வர்ணம், வார்னிஷ் முதலியனவும் செய்யப்படுகிறது.

**சவுக்கு மரம்**

சவுக்கு மரங்கள் ஆஸ்திரேலியா நாட்டில் இயற்கையாக வளர்கிறது. மற்றும் சிட்டகாங், அந்தமான், நிக்கோபார், மலேசியா மற்றும் கிரீன்ஸ்லேண்ட் ஆகிய நாடுகளிலும் வளர்கிறது. கர்நாடக மாநிலத்தில் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சவுக்கு மரங்கள் வளர்ந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. இம்மரம் சுமார் 30 மீட்டர் உயரம் வரை வளரக் கூடியது. இம்மரம் 50 ஆண்டுகள் வரை உயிருடன் இருக்கும் ஆனால் 5 முதல் 7 ஆண்டுகளுக்குப் பிறகு வளர்ச்சியின் அளவு குறைவதால் மரங்களை அந்த வயதில் அறுவடை செய்வது நல்லது.

சவுக்கு மரங்களில் சுமார் 35 வகைகள் உள்ளன. அவற்றில் Casuarina Equisetifolia என்ற வகை நம் நாட்டில் தட்பவெட்ப நிலைக்கு ஏற்ற வகையாகும். விதைகள் கடுகைவிடச் சிறியதாக இருக்கும். ஒரு கிலோ கிராம் எடையில் சுமார் 7,50,000 விதைகள் கிடைக்கும்.

கடல் மட்டத்திலிருந்து சுமார் 1000 மீட்டர் உயரம் வரை உள்ள பகுதிகளில் மணற்பாங்கான மண் வகைகளில் நன்கு வளரும்.

இது அதிக மழை பெய்யும் இடங்களிலும் தண்ணீர் அதிகமாகத் தேங்கி நிற்காத இடங்களிலும் நன்கு செழித்து வளரும் அதிக வறட்சியை இம்மரம் தாங்காது.

இம்மரத்தை விறகிற்காக அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். சவுக்கு விறகு ஒரு சிறந்த எரிபொருளாகக் கருதப்படுகிறது. இம்மரத்தின் (கலோரிபிக் மதிப்பு) வெப்ப நிலை அதிகமாக உள்ளதால், அடுப்பு எரிக்க அதிக அளவில் உபயோகிக்கப்படுகிறது.

சவுக்கு மரக்கொம்புகள் கட்டட வேலைகளுக்குச் சாரம் கட்டவும், கூரை, பந்தல் போடுவதற்கும், மின் சாரக் கம்பங்களாகவும், விவசாயக் கருவிகளுக்குக் கைப் பிடிகளாகவும் பல வகைகளில் உபயோகப்படுகின்றது..

கடற்கரை ஓரங்களில் பலத்த காற்றினால் மண் அரிப்பு ஏற்படுவதைத் தடை செய்வதற்கும், காற்றில் பறந்து செல்லும் மணலைத் தடை செய்து மணல் மேடுகள் நகர்வதைத் தவிர்க்கவும் இது உதவுகிறது.

## கொசுத் தொல்லையைக் குறைக்க...

**சென்னை** மாநகராட்சி கொசுத் தொல்லையைக் குறைக்கப் போர்க்கால அடிப்படையில் தீவிர திட்டத்தைத் துவக்கியுள்ளது. 155 கோட்டங்களிலும் கொசு உற்பத்தி நிலைகள் கண்டறியப்பட்டு அங்கெல்லாம் வாரம் ஒருமுறை மருந்தடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 50 புகைபோடும் எந்திரங்கள் (கைகளால் இயக்கப்படுபவை) பயன்படுத்தப்பட்டு கொசுத் கொல்லிப் புகைபோடப்படுகின்றன. இதைத் தவிர 250 முதல் 300 மருந்தடிப்பவர்கள் மூலம் நாள்தோறும் கொசு மருந்து தெளிக்கப்படுகின்றது.

சென்னை மாநகரில் 4 பெரிய நீர் வழிகள் (அடையாறு, கூவம்-பக்கிங்காம் கால்வாய், ஒட்டேரி நல்லா) மற்றும் 9 பெரிய வடிகால்வாய்கள் உள்ளன. இவற்றிலேயே சென்னையில் உள்ள கொசுக்களில் 50 சதவிகிதம் உற்பத்தியாகின்றன. இவற்றில் கொசுப் புழுக்களை அழிக்கும் மருந்துகள் தெளிக்கப்படுகின்றன.

சென்னை மாநகராட்சியின் தனி அலுவலர் திரு. இரா.பூர்ணலிங்கம், 18.3.92 அன்று அடையாறு கூவம் இவை கடலோடு கலக்கும் கழிமுகத்தை பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளருடனும், மாநகராட்சி அதிகாரிகளுடனும் சென்று பார்வையிட்டார்.

கூவம் அடையாறு கழிமுகப்பகுதிகள் மணல் தடை அகற்றப்பட்டுத் திறக்கப் பட்டுள்ளன. இதனால் மேலேற்றத்தின் போது கடல்நீர் ஆறுகளின் உள் அதிகமாகப் புகுவதற்கு வழி ஏற்பட்டுள்ளது. இது கொசுக்களைக் கட்டுப்படுத்த உதவும். எனினும், இப்போது உள்ள திறப்பு மேலும் அதிகக் கடல்நீர் உட்புகுவதற்கும் போதுமானதாக இல்லை. ஆகையால், கழிமுகப்புகளை முழுமையாகத் திறந்து தாராளமாகக் கடல்நீர் உட்புக வழி வகுக்குமாறு பொதுப்பணித் துறையைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. பொதுப் பணித்துத் தலைமைப் பொறியாளர் உடனடியாக இப்பணியை மேற்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளார். இதனால் இன்னும் அதிகமாகக் கடல்நீர் உட்புகுந்து, கொசு உற்பத்தியைக் குறைக்க வழிபிறக்கும்.



# திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் வேளாண் வளர்ச்சித் திட்டப் பணிகள்



திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில், கடந்த 1991-ஆம் ஆண்டில் போதுமான மழை கிடைக்கப் பெறவில்லை. இயல்பான மழையளவான 836 மி.மீட்டருக்கு 746.1 மி.மீ. மழை மட்டுமே கிடைத்தது. மேலும் 1992-ஆம் ஆண்டில் மார்ச்சு முடியப் பெய்ய வேண்டிய இயல்பான மழை 60.4 மி.மீட்டருக்கு இதுவரை மழை ஏதுமின்றி வறட்சியாகவே உள்ளது.

தென்மேற்கு, வடகிழக்குப் பருவ காலங்களில் பெய்த மழையைக் கொண்டு நீர்த்தேக்கங்கள், கண்மாய்கள், கிணறுகளில் நீர்நிலை ஓரளவு உயரப் பெற்றது. இதனைக் கொண்டு இறவைப் பயிர்கள் சாகுபடி நடைபெற்றது. மானாவாரி நிலங்களில் சிறுதானியங்கள், பயறு வகைகள், பருத்தி, நிலக்கடலை போன்ற பயிர்கள் சாகுபடி முழு அளவில் நடைபெற்றுத் தற்சமயம் அப்பயிர்கள் அறுவடையும் முடியும் நிலையில் உள்ளது.

**சாகுபடி மற்றும் எதிர்பார்க்கும் உற்பத்தி:**

நெல் சாகுபடி பரப்பு 25,000 எக்டேர் இலக்கில் 18,827 எக்டேர் நிலப்பரப்பு பயிர் செய்யப்பட்டுள்ளது. சிறு தானியங்கள் 1,15,000 எக்டேர் இலக்கில் 97,799 எக்டேர் மட்டுமே பயிர் செய்யப்பட்டுள்ளது. பயறு வகைகள் 41,000 எக்டேருக்கு 43,648 எக்டேர் பயிர் செய்யப் பட்டுள்ளது. பருத்தி 9,100 எக்டேருக்கு 3,873 எக்டேரும், கரும்பு 5,000 எக்டேருக்கு 5,326 எக்டேரும், நிலக்கடலை 38,000 எக்டேருக்கு 33,395 எக்டேரும் பயிர் செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் 90,000 மெ.டன் நெல் உற்பத்திக்குப் பதிலாக 75,308 மெ.டன் நெல் உற்பத்தியும், சிறு தானியங்கள், 1,70,000 மெ.டன்னுக்குப் பதிலாக 1,56,282 மெ.டன்னும், பயறு வகைகள் 20,000 மெ.டன்னுக்கு 22,871 மெ.டன்னும், பருத்தி 30,000 பேல்களுக்கு 12,780 பேல்களும், நிலக்கடலை 50,750 மெ.டன்னுக்கு 48,160 மெ.டன்னும் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது.

**கோடைச் சாகுபடித் திட்டம்**

1992-ஆம் ஆண்டு கோடைப் பருவத்தில் சாகுபடி செய்யப்படும் நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், பருத்தி, கரும்பு, நிலக்கடலை ஆகிய பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கத் தற்சமயம் கோடைச் சாகுபடித் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டத்தின் அடிப்படையில் இம்மாவட்டத்திற்கு 2 இலட்சத்து 80 டன்கள் உணவு உற்பத்தி செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை சாகுபடி செய்யப்பட்டுள்ள 1 இலட்சத்து 60 ஆயிரம் எக்டேர் உணவுப் பயிர்களிலிருந்து 2 இலட்சத்து 55 ஆயிரம் டன்கள் உணவு உற்பத்தி கிடைக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. தற்சமயம் கோடைச் சாகுபடியில் தீவிரக் கவனம் செலுத்தி உணவு உற்பத்தியை மேலும் அதிகரிக்கச் செய்ய செயல்முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**சிறு, குறு விவசாயிகளுக்குச் சலுகை விலையில் உர விநியோகம்:**

இம்மாவட்டத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ.192 இலட்சம் மதிப்பிற்கான உரங்கள் சலுகை விலையில் வழங்கப்பட உள்ளது. சிறு, குறு விவசாயிகளுக்குச் சலுகை விலையில் உரம் பெறுவதற்கான அடையாள அட்டைகள் வேளாண் துறையினராலும், கிராமத் தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் மூலம் உரங்கள் கூட்டுறவுத் துறையினராலும் வழங்கப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் மொத்தம் 1,56,644 சிறு, குறு விவசாயிகள் உள்ளனர். இவர்களில் 1,06,073 சிறு, குறு விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் ரூ.143.47 இலட்சம் மானியத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**தெளிப்பு நீர்ப்பாசன மானியம்:**

தேசியப் பயறுபெருக்கத் திட்டம் மற்றும் எண்ணெய்வித்துப் பெருக்கத் திட்டத்தின்கீழ் 80 தெளிப்பு நீர்ப் பாசனம் அமைத்திட ரூ.8 இலட்சம் மானியமாக வழங்கிட நிதி இலக்கு கொடுக்கப்பட்டுள்ளது. சிறு, குறு விவசாயிகளுக்கு 50 சத மானியமும், ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 75 சத மானியமும், இதர விவசாயிகளுக்கு 25 சத மானியமும் வழங்கப்படுகிறது.

**சிறுபாசனத் திட்டம்:**

மைய அரசு உதவியுடன் ஆத்தூர், நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, நத்தம், பழனி வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப் பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ் ரூ.17.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. சிறு விவசாயிகளுக்கு 25 சத மானியமும், குறு விவசாயிகளுக்கு 33.33 சதவீதமும், ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு 50 சத மானியமும் வழங்கப் பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல், கிணறு அமைத்தல், டீசல் பம்புகள், மின் கம்பிகள், பாசனக் குழாய்கள் அமைத்தல் போன்ற பணிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

—எம்.பிச்சையா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்

வளரும் வேளாண்மை:

## டி.கே.எம். 10 - புழுதிக்காலுக்கேற்ற உயர் விளைச்சல் புதிய நெல் ரகம்

டாக்டர் எம். சுப்பிரமணியன்,
அ. தியாகராஜன், எ. கோவிந்தன்,
கே. நீலகண்டபிள்ளை,
டாக்டர் டி.பி. இரங்கநாதன்,
டாக்டர் கே.எஸ். பரமசிவன்

நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர்.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் சுமார் 44,000 எக்டர் நிலத்தில் புழுதிக்கால் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. புழுதிக்கால் சாகுபடிக்கேற்ற குறிப்பிடும் படியான உயர் விளைச்சல் நெல் இரகம் இல்லை. எனவே டி.கே.எம். 1 (பிசினி) உள்ளூர் நெல் இரகம் இளம் பருவத்தில் ஏற்படும் வறட்சியைத் தாங்கி, பின்பு பருவ மழை கிடைத்தவுடன் துளிர் விட்டு வளரும் தன்மை கொண்டதன் காரணமாக, பெரும்பான்மையான இடங்களில் புழுதிக்கால் சாகுபடி செய்யப்படுகிறது.

இது தவிர பி.ஏ.எம். 3 (பய்ய குண்டா), வாடன்சம்பா, கப்ப சம்பா போன்ற நாட்டு இரகங்களும் ஐ.ஆர்.20 மற்றும் வெள்ளை பொன்னி போன்ற உயர் விளைச்சல் இரகங்களும் பயிர் செய்யப்படுகிறது. மேற்கூறிய நாட்டு இரகங்கள் குறைந்த மகசூல் தருவதாலும் உயர் விளைச்சல் இரகங்கள் இளம் பருவத்தில் வறட்சியைத் தாங்கும் தன்மை இல்லாமையின் காரணமாக மகசூல் ஒரே சீராக இல்லாமல் மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவே புழுதிக்காலுக்கேற்ற வறட்சியைத் தாங்கி வளரும் உயர் விளைச்சல் இரகம் ஒரு நீண்டகாலத் தேவை. அதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொண்டதன் பயனாக டி.கே.எம். 10 நெல் இரகம் 1992-ஆம் ஆண்டு பொங்கல் திருநாளில் வெளியிடப்பட்டது.

டி.கே.எம். 10 நெல் இரகமானது செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திற்குப் புழுதிக்கால் சாகுபடிக்கேற்றது. இந்த இரகமானது நடுத்தர வயது கொண்டது. (135 நாட்கள்) வறட்சியைத் தாங்கவல்லது. கோ 31 (ஒட்டு மானாவாரி சம்பா) இரகத்தையும் சி.22, பிலிப்பைன்ஸ் நாட்டு வறட்சியைத் தாங்கும் உயர் விளைச்சல் இரகத்தையும் ஒட்டுச் சேர்த்து உருவாக்கப்பட்டது. டி.கே.எம். 10 புதிய இரனமானது 1985 ஆண்டிலிருந்து நான்கு சம்பா பருவத்திலும் திரூர், நெல் ஆராய்ச்சி நிலைய சோதனைத் தளைகளில் சராசரி மகசூலாக எக்டருக்கு 2000 கிலோ கொடுத்துள்ளது.



இந்த இரகம் ஐ.ஆர். 20-ஐக் காட்டிலும், 85 சதவிகிதம் டி.கே.எம். 1-ஐக் காட்டிலும், 82 சதவிகிதம், மற்றும் கோ 31-ஐக் காட்டிலும் 30 சதவிகிதம் கூடுதல் மகசூல் தந்து உள்ளது.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் 47 இடங்களில் அணுசரனை ஆராய்ச்சிச் சோதனைகள் மூலம் இரண்டு ஆண்டுகளாகப் பரிசோதனை செய்யப்பட்டதில் டி.கே.எம்.10 நெல் இரகம் சராசரியாக எக்டருக்கு 2,900 கிலோ மகசூல் தந்துள்ளது. இந்த இரகம் டி.கே.எம். 1-ஐக் காட்டிலும் 28 சதவிகிதமும், ஐ.ஆர்.20-ஐக் காட்டிலும் 9.5 சதவிகிதமும் அதிக மகசூல் கொடுத்துள்ளது.

புழுதிக்கால் சாகுபடியில் டி.கே.எம். 10 நெல் இரகம் அதிகப்பட்சமாக எக்டருக்கு 5,200 கிலோ மகசூல் கிடைத்துள்ளது. நடுத்தர உயரம் கொண்ட இப்புதிய ரகம் எக்டருக்கு 5,500 கிலோ வைக்கோல் கொடுக்க வல்லது. இந்த இரகம் 15 முதல் 25 நாட்கள் இளம் பருவ வறட்சியைத் தாங்கவல்லது. பருவ மழை அல்லது நீர் கிடைக்கும்பொழுது உடன் துளிர் விட்டு வேகமாக வளரும் தன்மை கொண்டது.

இப்புதிய இரகத்தின் நடுத்தரச் சன்னமான வெள்ளை அரிசி பச்சை அரிசி மற்றும் புழுங்கல் அரிசி சமையலுக்கு மிகவும் ஏற்றது. டி.கே.எம். 10 நெல் ரகம் ஆனைக் கொம்பன், பச்சைத்தத்துப்பூச்சி, இலைச்சுருட்டுப் புழு ஆகியவற்றிற்கு மிதமான தாக்குதலும் கொண்டது. மேலும் குலைநோய், பழுப்பு நிறப் புள்ளி இலையுறை அழுகல் நோய் ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புப் திறனும் உள்ளது.

டி.கே.எம். 10 நெல் இரகம் ஜூலை - ஆகஸ்ட் மாதம் விதைப்புக்கு நாட்டு இரகங்களான டி.கே.எம். 1 (பிசினி), வாடன் சம்பா, உயர் விளைச்சல் இரகங்களான ஐ.ஆர்.20 மற்றும் வெள்ளைப் பொன்னி போன்ற இரகங்களுக்கு மாற்றுப் பயிராகப் புழுதிக்கால் பயிர்ச் சாகுபடி பரிந்துரை செய்யப்படுகிறது.

மாணவர் பக்கம்:

## அறிவுச்சுடர்

### விருது

1. பாரத ரத்னா விருது பெற்ற முதல் பெண்மணி திருமதி இந்திரா காந்தி

2. அமெரிக்காவின் மிகப்பெரிய விருதான 'மெடல் ஆப் பிரீடம்' என்ற சிவிலியன் விருது (Medal of Freedom) இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் மார்கரெட் தாட்சருக்கு வழங்கப்பட்டது.

3. தென் ஆப்பிரிக்கத் தேசியத் தலைவர் நெல்சன் மண்டேலாவுக்கு லெனின் சமாதானப் பரிசு 1990-ஆம் ஆண்டு மே மாதம் 30-ஆம் நாள் வழங்கப்பட்டது.

### சில முக்கியமான நாடுகளும் அதன் தலைநகரங்களும்

| | | |
|---|---|---|
| ஆப்கானிஸ்தான் | - | காபூல் |
| ஆஸ்திரேலியா | - | கான்பெர்ரா |
| பாங்களாதேஷ் | - | தாகா |
| மியான்மார் (பர்மா) | - | யாங்கோன் (ரங்கூன்) |
| கனடா | - | ஒட்டாவா |
| ஸ்ரீலங்கா | - | கொழும்பு |
| சீனா | - | பெய்ஜிங் |
| கொலம்பியா | - | பொகோடா |
| டென்மார்க் | - | கோபன்ஹேகன் |
| எத்தியோப்பியா | - | அடிஸ் அபாபா |
| பிரான்ஸ் | - | பாரீஸ் |
| ஹங்கேரி | - | புடா-பெஸ்ட் |
| இந்தியா | - | புதுடெல்லி |
| ஈரான் | - | டெக்ரான் |
| ஈராக் | - | பாக்தாத் |
| இஸ்ரேல் | - | டெல்அவிவ் |
| இத்தாலி | - | ரோம் |
| ஜப்பான் | - | டோக்கியோ |
| ஜோர்டான் | - | அம்மான் |
| மலேசியா | - | கோலாலம்பூர் |
| நேபாளம் | - | கத்மாண்டு |
| நெதர்லாந்து | - | ஆம்ஸ்டர்டாம் |
| நியூசிலாந்து | - | வெலிங்டன் |
| நைஜீரியா | - | லாகோஸ் |
| பாகிஸ்தான் | - | இஸ்லாமாபாத் |

தொகுப்பு: ஸ்வீட்லின் பிரபாகரன்



### யானை

நமது நாட்டில் யானைகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா! 17,075 முதல் 22,080 யானைகளே உள்ளதென்று கணக்கிடப்பட்டுள்ளது.

மேற்கு வங்காளம், திரிபுரா, மேகாலயா, நாகாலாந்து, அசாம் ஆகிய வடகிழக்கு மாநிலங்களில் 8,525 முதல் 11,930 யானைகளும், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 6,000 முதல் 7,150 யானைகளும், ஒரிசா, பீகார் ஆகிய மாநிலங்களில் 2,000 முதல் 2,300 யானைகளும், உத்திரப் பிரதேச மாநிலத்தில் 550 முதல் 700 யானைகளும் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.






### ஒரு சொல் கேளீர்!

—குழ. கதிரேசன்

வாழைப் பழத் தோலை வழியில்
போடக் கூடாது — அதில்
வழுக்கி விழுந்து உடலும் ஊனம்
ஆகக் கூடாது!

உடைந்து போன கண்ணாடியை
ஓரம் போடணும் — ஆணி
காலைக் குத்திக் கிழித்துவிடும்
தூரப் போடணும்!

ஈ மொய்க்கும் பண்டங்களை
வாங்கக் கூடாது — நாம்
அழுகிப் போன பழங்களினை
உண்ணக் கூடாது!

விலை கொடுத்து நோய்களினை
வாங்கக் கூடாது — தலை
விதி செய்த கொடுமை என்று
கூறக் கூடாது!

# நூல் நயம்

## 'காட்டுக் குயில்கள்'

**ஆசிரியர்: கொ.மா. கோதண்டம்**

**வெளியீடு:**

நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட், சென்னை-600 098.

பக்கம்:92 விலை:ரூ.9/-

**ம**லைவாழ் மக்களின் அவல வாழ்க்கையை மண்வாசனையுடன் சொல்லும் கதைகள்.

கொத்தடிமைகளாக்கப்பட்ட அவர்களின் துன்பங்களும், துயரங்களும் மென்மையாகக் கூறப்பட்டிருக்கின்றன.

மக்களையும், அவர்களின் சுற்றுப்புறச் சூழல்களையும் சித்திரித்திருக்கும் விதம். நாம் அந்தச் சம்பவம் நிகழும் இடங்களிலேயே நின்றிருக்கும் பிரமையை உண்டாக்குகின்றன. மாறுபட்ட கதைத் தொகுப்பு. படித்து முடித்தபோது நெஞ்சம் கனக்கிறது.

—என்.குமார்.

## விண்வெளிப் படிகளில் இந்தியா

**ஆசிரியர்: நெல்லை சு. முத்து**

**வெளியீடு:**

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட், சென்னை-98.

பக்கம்:191 விலை:ரூ.26/-

**ந**ம்நாடு பல்வேறு துறைகளில் முன்னேறிக் கொண்டு வருகிறது. அவற்றுள் விண்வெளி ஆராய்ச்சியும் ஒன்று. விண்வெளிப் படிகளில் இந்தியா படைத்து வரும் சாதனைகளை விளக்குகிறது இந் நூல்.

முதல் கட்டுரையே நூலுக்கு முத்தாய்ப்பாக விளங்குகிறது. இலக்கியத்தில் வானவியல் என்பது குறித்து - தமிழ் இலக்கிய மேற்கோள்களோடு அரிய கட்டுரையைப் படைத்திருக்கிறார் ஆசிரியர்.

விந்தைக்குரிய விண்வெளிப் பயணத்தில் பங்கேற்றுச் சாதனை புரிந்த முன்னோடிகளை நம் கண்முன்னே கொண்டு வருகிறார் ஆசிரியர்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி குறித்தும், வானிலை இயல் குறித்தும் கூறப்பட்டுள்ள செய்திகள் அற்புதம். இவற்றோடு தொலைத் தகவல் தொடர்பு, தொலையுணர்வுச் செயற்கைக்கோள் பற்றிய தகவல்கள் மிகவும் பயனுள்ளவை. நல்ல தமிழில் எல்லாத்திறத்தாரும் படித்துத் தெரிந்து கொள்ளும் வகையில் எளிய இனிய தமிழில் படைத்திருக்கும் இந்த அறிவியல் படைப்பு பாராட்டுக்குரியது.

## இறைவா! இறைவா!

**ஆசிரியர்: தங்கவயல் லோகிதாசன்**

**வெளியீடு:**

பாண்டியன் பதிப்பகம்
20, சீனிவாசப் பெருமாள்
முதல் தெரு
சென்னை-600 014

விலை: ரூ.10 பக்கம்: 96

**ம**னிதன் இறைவனைப் பார்த்துக் கேட்கிறான். இறைவன் மனிதனுக்கு அறிவுரை கூறுகிறான். ஆசிரியரின் சிந்தனைச் சிதறல்களைப் பரக்கக் காண்கிறோம். சுவையான நூல்.

## பந்தயக் குதிரை

**ஆசிரியர்: விமலாரமணி**

**வெளியீடு:**

மயிலவன் பதிப்பகம்
92, கங்கையம்மன் கோவில் தெரு
வடபழனி, சென்னை-600 026.

பக்கம்:196 விலை:ரூ.22/-

**வ**சதியான தந்தை தன் மகளின் காதலை எதிர்க்க, காதலுக்காகப் பெற்றோரைத் துறந்து காதலோடு வர, காதலுக்குப் புற்று நோய்... வேலையின்மை... இப்படிப் போகிறது முதல் கதை பந்தயக் குதிரை.

அலுவலகத்தில் பரிவின் காரணமாக, காதல்வயப்பட்டு மணந்து பின்னர் அவன் தன்னைப் பணங்காய்ச்சி மரமாக மட்டுமே கருதுவது கண்டு வெதும்பும் கௌரி, கணவன் எதிர்ப்பை மீறி குழந்தைகள் பெற்று சுமங்கலியாகப் போய் விட கணவன் நிர்க்கதியாகிறான் இரண்டு கதைகளுமேசாதாரண,வழக்கமான கருவைக் கொண்ட கதைகள்தான். ஆசிரியரின் எழுத்தாற்றலால் இக்கதைகள் சுவை பெறுகின்றன.

## விஞ்ஞானிகள் வாழ்விலே...

**ஆசிரியர்: பி.வி.கிரி**

**வெளியீடு:**

சாந்தா பப்ளிஷர்ஸ்,
5. ஸ்ரீபுரம் 2-வது தெரு,
இராயப்பேட்டை, சென்னை-14.

பக்கம்:96 விலை:ரூ.12/-

**வா**ழ்க்கை வரலாறுகள் நம் வாழ்வை வளமாக்க மட்டுமல்ல, வழிகாட்டவும் உதவுகின்றன. அந்த வகையில், இந்திய-மேலைநாட்டு அறிவியல் அறிஞர் பெருமக்களின் வாழ்க்கைக் குறிப்புகள் இந் நூலில் விளக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளத் தக்க வகையிலே எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது இதன் சிறப்பு. இந்நூலில் 16 கட்டுரைகள் உள்ளன. ஒவ்வொரு கட்டுரைக்கும் படங்கள் இருப்பது வரவேற்கத் தக்கது.

—தே.மணி

## கா. நமச்சிவாயரின் நாடகங்கள்-ஓர் ஆய்வு

**ஆசிரியர்: சோ. கருப்பசாமி**

**கிடைக்குமிடம்:**

பயோனியர் புக் சர்வீஸ்
47, நல்லதம்பி தெரு,
சென்னை-600 005.

பக்கம்:176 விலை:ரூ.30/-

**பே**ராசிரியர் கா. நமச்சிவாயர் இயற்றிய நூல்கள் பல. நாடகம், உரை நடை, புராண, இதிகாசப் பழங்கதைகள், வரலாற்றுக் கதைகள், இலக்கண உரை இவற்றோடு, அவர் பதிப்பித்த நூல்களும் ஏராளம். அன்னைத் தமிழில் அரிய பல படைப்புகளைப் படைத்த வள்ளல் கா. நமச்சிவாயரின் நாடகங்களைக் குறித்து ஆய்கிறது இந்நூல்.

நாடகக் கதையும் கருவும், நாடக மாந்தரின் பண்பு நலன்கள், நாடக மொழிநடை, நாடக நலன்கள் ஆகிய நான்கு இயல்களாகப் பகுத்துத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. நூல் முழுவதும் நமச்சிவாயரின் பாத்திரப்படைப்புகளும், பண்பு நலன்களும் பேசப்படுகின்றன. அழகுத் தமிழில் ஆசிரியரின் ஆழ்ந்த புலமைத் திறம் நன்கு வெளிப்படுகிறது. தமிழ் ஆர்வலர், ஆராய்ச்சி மாணவர் ஆகியோர் படிக்க வேண்டிய பயனுள்ள படைப்பு.

- பொ. மறைமலை.





(16—ஆம் பக்கத் தொடர்ச்சி)

### நிர்வாக அமைப்பு

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் செயல்பாட்டிற்காக, நமது மாநிலம் 8 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒரு துணை ஆணையரின் கீழ் இயங்கி வந்தது. நிர்வாகச் சுமை மற்றும் பணிப்பளு ஆகியவற்றைக் கணிசமாகக் குறைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன், கூடுதலாகப் புதிய 2 மண்டலங்கள், ஒன்று வேலூரையும், மற்றொன்று சிவகங்கையையும் தலைமையிடமாகக் கொண்டு அமைக்கப்படும் என்று, சென்ற நிதிநிலை அறிக்கையில் நான் அறிவித்திருந்தேன். அறிவிப்பிற்குச் செயல்வடிவம் தருகிற வகையில், வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், மற்றும் சைதாப்பேட்டை, பொன்னேரி, திருவள்ளூர் வட்டங்களைத் தவிர்த்த செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம் அடங்கிய பகுதிகளைப் புதிய மண்டலமாகப் பிரித்து, துணை ஆணையர் அலுவலகம் ஒன்று வேலூரில் தொடங்கப்பட்டு விட்டது.

அடுத்து, பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் காமராசர் மாவட்டம் ஆகியவை புதிய மண்டலமாகப் பிரிக்கப்பட்டு, துணை ஆணையர் அலுவலகம் ஒன்றும், சிவகங்கையில் தொடங்கப்பட்டு விட்டது. தற்போது இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ், 10 மண்டலங்கள், ஒவ்வொன்றும் ஒரு துணை ஆணையரின் தலைமையில், இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது மாநிலம் 17 கோட்டங்களாகப் (Divisions) பிரிக்கப்பட்டு, அவை ஒவ்வொன்றும் ஒரு உதவி ஆணையரின் கீழ் இயங்கி வருகிறது. அறநிலையத் துறையின் நிர்வாகம் மேலும் சீராக அமையவேண்டும் என்ற நோக்கத்துடன், 1992-92-ஆம் ஆண்டு, பகுதி-2 திட்டத்தின் கீழ், 2 புதிய அறநிலையத்துறைக் கோட்டங்களையும் உருவாக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தை ஒரு புதிய கோட்டமாகவும், தூத்துக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு, சிதம்பரனார் மாவட்டத்தை ஒரு புதிய கோட்டமாகவும் அமைக்க, விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும். எனவே தற்போது 17 ஆக இருக்கும் அறநிலையத்துறைக் கோட்டங்கள், விரைவில் 19 ஆகச் செயல்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். நிர்வாக அமைப்பில் ஏற்பட்டுள்ள இத்தகைய கூடுதல் மண்டல மற்றும் கோட்ட அமைப்புகளினால், ஆலய நிர்வாகம் மேம்படும் என்று நம்புகிறேன்.

கோயில்கள் என்றாலே, வருமானம் சார்ந்த கணக்கு- வழக்குகளைப் பற்றிய பிரச்சினைகள் எப்போதும் எழுந்து வருவது, தற்போது வாடிக்கையாகிவிட்டது. ஆகவே, கோயில்களின் கணக்குகளைச் சரியான முறையில் தணிக்கை செய்ய, தணிக்கைப் பிரிவை மேம்படுத்துதல் மிகுந்த அவசியமாகிறது. எனவே, தற்போதுள்ள தலைமைத் தணிக்கை அதிகாரியினுடைய பதவித் தரத்தை, இணை ஆணையர் தகுதிக்கு உயர்த்தவும்; திருத்தணி, ஸ்ரீரங்கம், இராமநாதபுரம் மற்றும் திருச்செந்தூர் ஆகிய பெரிய கோயில்களில் உள்ள, உதவித் தணிக்கை அலுவலர் பணியிடத்தை, தணிக்கை கண்காணிப்பாளர் நிலைக்கு உயர்த்தவும்; தலைமையிடத்தில் ஒரு 'கணக்காளர்' பதவி ஏற்படுத்தவும், அரசு முடிவு செய்துள்ளது. இத்

துறையால் நடத்தப்பட்டு வரும் 'திருக்கோயில்' மாத இதழுக்கு, ஒரு இளநிலை ஓவியர் பதவியை ஏற்படுத்தவும் அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த, அரசுக்கு ஆண்டொன்றுக்கு, ரூ.20.15 இலட்சம் கூடுதல் செலவு ஆகும்.

**திருப்பணி மற்றும் பராமரிப்புப் பணிகள்**

இந்த அரசு பொறுப்பேற்ற பின், தற்போது ஆலயங்களின் முக்கியத்துவம் பற்றி ஓர் புதிய விழிப்புணர்ச்சி, மக்களிடையே ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக, மாநிலத்தில் உள்ள பல கோவில்களில், திருப்பணிகள் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள், அரசுக்கு வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன. பொருளாதார அடிப்படையிலும் சரி, நிர்வாக அடிப்படையிலும் சரி, இவ்வனைத்துக் கோயில்களுக்கும், ஒரே சமயத்திலோ அல்லது உடனடியாகவோ, திருப்பணி செய்வது என்பது இயலாத காரியம். பொது மக்களோ அல்லது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களோ, தாங்கள் பரிந்துரை செய்யும் கோவில்களுக்குத் திருப்பணி உடனடியாகச் செய்யவில்லையே என்றும் நினைக்க வேண்டாம். இப்பணியினைச் செய்யவேண்டியதன் அவசியத்தை இந்த அரசு உணர்ந்துள்ளது. எனவே தான், ஆலயங்கள் புனரமைப்புக்கு என்று 'முதலமைச்சர் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதி' என்ற தலைப்பில் ஒரு தனி நிதி திரட்டப்பட்டு வருகிறது. இந்த நிதியின் மூலம், தினந்தோறும் ஒரு கால பூஜையாவது செய்ய வேண்டும் என்பதற்கு, முயற்சிகள் மேற்கொண்டு உள்ளோம்.

தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் பெரும்பான்மையானவை, பழமையானவை. அவைகளுள் திருப்பணி செய்யப்படவேண்டிய ஆலயங்களைப் பொதுவாக மூன்று வகையாகப் பிரிக்கலாம். (1) பாடல் பெற்ற ஆலயங்கள். அதாவது, ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் பாடப்பட்டு, போற்றப்பட்ட ஆலயங்கள். (2) வரலாற்றுச் சிறப்பு மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்கள். (3) ஆகம விதிகளின்படி, 12 ஆண்டுகட்கு ஒரு முறை திருப்பணி செய்து, கும்பாபிஷேகம் நடத்த வேண்டிய ஆலயங்கள்.

**அரசு மானியம்**

மேற்குறிப்பிட்ட திருப்பணி மற்றும் பராமரிப்புப் பணிகள் செய்வற்காக, ஓர் முன்னுரிமை (Priority) திட்டத்தைத் தயாரித்து, அதன்படி திருப்பணிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆலயங்களின் திருப்பணி மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக, அரசு ஒவ்வொரு ஆண்டும் ரூ.45 இலட்சம் மானியமாக, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்கு வழங்குகிறது. கடந்த ஆண்டும் இந்த மானியத்தோடு, அண்மையிலே கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகம் திருவிழாவையொட்டி, 8 ஆலயங்களுக்குத் திருப்பணி செய்வதற்காக, ரூ.12.50 இலட்சம் அரசு மானியமாகவும்,





**★ அரசியல் கொடுமையைவிட சமூகக் கொடுமையே மிகப் பயங்கரமானது. எனவே, அரசியல் கொடுமையைவிட சமூகக் கொடுமையை எதிர்த்துப் போராடும் சமூகச் சீர்திருத்தவாதியே அதிதைரியசாலி.**

காமராசர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு நாச்சியார் திருக்கோயில் இராஜகோபுரத் திருப்பணிக்காக, ரூ.15 இலட்சம் தனியாகவும், மொத்தத்தில் கடந்த ஆண்டில் அரசு மானியமாக மட்டும், ரூ.72.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 5 அல்லது 6 ஆண்டுகளில், அரசு மானியமாகத் திருப்பணிக்கென ஒதுக்கப்பட்ட தொகைகளிலே, சென்ற ஆண்டு வழங்கப்பட்ட இந்த 72.50 இலட்சம் ரூபாய் தான் மிக அதிகம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பொது நலநிதி**

இந்து சமய அறநிலையச் சட்டத்தின்படி, யாரேனும் தாமாக முன்வந்து வழங்குகின்ற நன்கொடைகள், மற்றும் நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் வருவாயிலிருந்து, ஒரு சதவீதம் (1%) ஆலயப் பொதுநல நிதி என்ற தலைப்பின் கீழ் தனியே வைக்கப்படுகிறது. இந்நிதி தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றில், முதலீடு செய்யப்பட்டு வருகிறது. இந்த நிதியிலிருந்து சமூக நலப் பணிகளுக்காகவும், நலிந்த திருக்கோயில்களின் திருப்பணிகளுக்காகவும், நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. 1991-ஆம் ஆண்டில் மட்டும் 54 திருக்கோயில்களின் திருப்பணிக்காக, ரூ.17.15 இலட்சம் இந்த நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நலிந்த மற்றும் நிதி உதவி<br>தேவையுள்ள ஆலயங்களுக்காகத்<br>திருபபணி நிதி உதவித் திட்டம்<br>ரூபாய் ஒரு கோடி<br>வைப்பு நிதி**

கிராமங்களில் நிதி வசதியற்ற கோயில்கள் பல உள்ளன. இக்கோயில்களின் திருப்பணிக்காக, அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் உபரி நிதியிலிருந்து, ரூபாய் ஒரு கோடி பெறப்பட்டு, அதை வைப்பு நிதியாகக் கொண்டு, அதிலிருந்து பெறப்படுகின்ற வட்டித் தொகை மட்டும், மேற்படி நிதி வசதியற்ற சிறு கோயில்களின் திருப்பணிக்காகச் செலவிடப்படுகிறது. இந்த வைப்பு நிதி 1984-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. 1990-ஆம் ஆண்டு வரை திருப்பணிக்காக ஆலயம் ஒன்றுக்கு, ரூ.10,000 வீதம் உதவித்தொகை அளிக்கப்பட்டு வந்தது. 1991-ஆம் ஆண்டிலிருந்து இத்தொகை ரூ.25,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1985-86-லிருந்து இதுவரை, மொத்தம் 619 ஆலயங்களுக்கு, ரூ.70.93 இலட்சம் இந்நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

**வணிக வளாகம் மற்றும் திருமண<br>மண்டபங்கள்**

வணிக வளாகங்களும், திருமண மண்டபங்களும் கோயில்களின் வருமானத்திலிருந்தும், வங்கிக் கடன் பெற்றும் கட்டப்பட்டு வருகின்றன. இவைகள் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு அன்றி, கோயில்களுக்கு நிரந்தரமாக நல்ல வருவாயையும் ஈட்டித் தரும். அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலின் உபரி நிதியிலிருந்து, மதுரையில் 'ஏழு கடல் அங்காடி' என்ற ஒரு வணிக வளாகக் கட்டடம், ரூ.93.92 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயிலின் உபரி நிதியிலிருந்து, ஒரு வணிக வளாகக் கட்டடம், திருத்தணி நகரத்தில், பேருந்து நிலையத்திற்கு அருகில், ரூ.35 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

சென்னை இராயப்பேட்டையில் அமைந்துள்ள அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் கோயிலுக்குச் சொந்தமான, டாக்டர் இ/ராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள இடத்தில் ஒரு வணிக வளாகத்தை, ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்காகத் திட்டமிடப்பட்டது. அதன் முதல் கட்டம், ரூ.34 இலட்சம் செலவில், கட்டி முடிக்கப்படும் தறுவாயில் உள்ளது. இரண்டாம் கட்டக் கட்டுமானப் பணிகள், இன்னும் ஒரு சில மாதங்களில் தொடங்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் சார்பாக, இரண்டு திருமண மண்டபங்கள் ரூ.48.50 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. வடபழனியில் இரண்டு திருமண மண்டபங்களும், திண்டுக்கல்லில் ஒன்றும், காரைக்குடியில் ஒன்றும், ஆக மொத்தம் நான்கு திருமண மண்டபங்கள், ரூ.52.85 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. இன்னும் ஆறு திருமண மண்டபங்கள், ரூ.56 இலட்சம் செலவில் கட்டப்படவுள்ளன.

**திருப்பணி மற்றும் இதரக்<br>கட்டுமானப் பணிகள்**

மொத்தம் 611 ஆலயத் திருப்பணி வேலைகள், ரூ.10.35 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இன்னும் 266 பணிகளுக்கு, ரூ.10.41 கோடிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. மேலும் 218 இதரக் கட்டுமானப் பணிகள், ரூ.7.69 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இன்னும் ரூ.3.82 கோடி மதிப்பீட்டில், 103 கட்டுமானப் பணிகளுக்கு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. விரைவில் இப்பணிகளும் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மகாமகம்**

கும்பகோணத்தில் நடைபெற்று முடிந்துள்ள மகாமகத் திருவிழாவினையொட்டி, அங்குள்ள 19 கோயில்களில், 11 கோயில்களுக்குத் திருப்பணி செய்யப்பட்டு, குடமுழுக்கு விழாவும் நடைபெற்றுள்ளது. இதரக் கோயில்களில் திருப்பணி வேலைகள் நடைபெற்றுள்ளன. இதற்காக அரசு மானியமாக ரூ.12.50 இலட்சமும், ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 இலட்சமும், கோயில்



உபரி நிதியிலிருந்து ரூ.12 இலட்சமும், முதலமைச்சர் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.5.77 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.40.27 இலட்சம் வழங்கப்பட்டு உள்ளது.

**ஒரு காலப் பூஜை: அரசு நிதியுதவி**

தமிழகத்திலுள்ள தொன்மை வாய்ந்த திருக்கோயில்கள் அனைத்தும், ஆரம்ப காலத்தில் மாமன்னர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரின் நேரடிப் பராமரிப்பிலிருந்து வந்து, பின்னர் அவர்களால் வழங்கப்பட்ட மானியங்கள், சொத்துக்கள், ஆகியவற்றின் மூலமாகக் கிடைக்கும் வருமானத்தில், பராமரிக்கப்பட்டு வந்தன. காலப்போக்கில் ஏற்பட்ட சமூக மாற்றும் பொருளாதார மாறுதல்களினாலும், நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டங்கள் ஆகியவற்றாலும், கோயிலுக்குக் கிடைத்து வந்த வருமானம் வெகுவாகக் குறைந்தது. இதனால் கோயில்களை உரிய முறையில் பராமரிக்க முடியாத நிலையேற்பட்டு, தினசரி விளக்கேற்றுதல், அன்றாடப் பூஜைகள் செய்தல், அர்ச்சகர் போன்ற சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுத்தல் போன்றவைகளுக்குக்கூட, போதிய நிதி வசதியில்லாத சூழ்நிலை ஏற்பட்டது. இச்சூழ்நிலையில், கோயில்களில் தினசரி ஒரு காலப் பூஜையாவது நடத்த வேண்டும் என்கின்ற நோக்கத்துடன், உபரி வருமானம் உள்ள கோயில்களின் வருமானத்திலிருந்து ரூ.5 கோடியை எடுத்து, வைப்பு நிதியாக வைத்து, ஒரு புதிய திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து, ஒவ்வொரு கோயிலுக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.2,500 வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 4,462 கோயில்களுக்கு, ரூ.145.71 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

நடைமுறையிலுள்ள இத்திட்டத்தினால், நலிவுற்ற கோயில்களுக்குத் தற்காலிக நிவாரணம் மட்டுமே கிடைத்து வருகிறது. இதற்கு நிரந்தரமாக ஒரு ஏற்பாடு செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, நலிவுற்ற கோயில்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு நிரந்தர வைப்பு நிதி ஏற்படுத்தி, அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு, எதிர் வரும் ஆண்டுகளில், தவறாது ஒரு காலப் பூஜையாவது நடத்த வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது.

இதற்காகக் கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வைப்பு நிதியாக ஏற்படுத்தினால், அதில் கிடைக்கும் வருவாயிலிருந்து ஒரு காலப் பூஜையாவது செய்ய முடியும். ஒவ்வொரு கோயிலுக்கும் இந்த வைப்பு நிதியை, இந்து சமய அறநிலையத் துறையே வழங்க இயலாது. அந்தந்தப் பகுதிகளில் உள்ள பொது மக்களே இதற்கு உதவவேண்டும். அந்தந்தப் பகுதிகளில் உள்ள கோயில்களைப் பராமரிக்க முன்வர வேண்டும்.

பொது மக்களாக முன்வந்து, வைப்பு நிதி மூலதனமாக ரூ.25,000 செலுத்த இயலாத சூழ்நிலையில், அவர்கள் ரூ.12,500 செலுத்தினால், அரசின் சார்பில் மீதமுள்ள ரூ.12.500 உதவியாக வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக, சுமார் 400 கோயில்களுக்கு மூலதன வைப்பு நிதி ஏற்படுத்தலாமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக மொத்தம் 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும். ஒவ்வொரு கோயிலுக்கும் ரூ.12,500 நிதி உதவி என்ற அடிப்படையில், 400 கோயில்களுக்கு ரூ.50 இலட்சம் ரூபாயை அரசு வழங்கும். இந்தத் தொகை, முதலமைச்சர் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு அரசின் உதவியால் பயன்பெறும் கோயில்கள் 400 ஆக இருந்தாலும், மக்களின் ஆர்வத்தாலும், ஆதரவாலும், இந்தத் திட்டத்தில் பல ஆயிரக்கணக்கான கோயில்கள் பயன்பெறும் என்று நம்புகிறேன்.

பொதுமக்கள் இத்திட்டத்தை வரவேற்று, அவரவர் பகுதியிலுள்ள கோயில்களின் மறுமலர்ச்சிக்காக, முழுமனதுடன் இத்திட்டத்தில் பங்கேற்று, அவர்கள் சார்பாக ரூ.25,000 நிதியினைத் திரட்டி, வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொது மக்களால் ரூ.25,000 நிதி திரட்ட முடியாத இடங்களில் உள்ள கோயில்களுக்கு மட்டுமே, அரசின் பங்காக ரூ.12,500 கொடுக்கப்படும் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

**என் விருப்பம்**

வரலாறு, கணிதம், சமஸ்கிருதம் முதலியவற்றைப் பயின்றாலும், பயிலாவிட்டாலும் எனக்குக் கவலை இல்லை. முக்கியமாக ஒழுக்கம் பயில வேண்டும், இதுதான் என் விருப்பம். நான் ஒருக்கால் மனிதனுக்கு அடிமையானேன்; ஆனால் மனத்திற்கு ஒருபோதும் அடிமைப்பட மாட்டேன். அப்பாவத்தைவிடக் கொடுமையானது வேறொன்றுமில்லை. நீங்கள் நன்கு பயின்று மனத்தைக் கட்டுப்படுத்துங்கள்.

-அண்ணல் காந்தியடிகள்



**வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி**

சென்ற ஆண்டு இத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு நான் பதில் அளித்தபோது வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி ஒன்று அமைக்கப்படும் என்று குறிப்பிட்டேன். இதற்கான கருத்துரு ஒன்று இந்து சமய அறநிலையத் துறையினரால் தயாரிக்கப்பட்டு, தற்போது அது அரசின் பரிசீலனையில் உள்ளது. வேதங்களைப் பற்றிய முழுமையான அறிவைப் புகட்டக்கூடிய கல்வி நிலையமாக இது அமைய வேண்டும் என்பது என்னுடைய விருப்பம். இந்தக் கல்லூரி யில் வேதங்கள் ஆகம சாஸ்திரங்கள், உபநிடதங்கள், பன்னிரு திருமுறைகள், மற்றும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்கள் ஆகியவற்றைக் கற்பிப்பதற்கான பாடத் திட்டங்களையும், பிரிவுகளையும் பற்றி 2.3.1992 அன்று நடைபெற்ற கோவில் நிர்வாக வாரியக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. இதுகுறித்துக் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு வாரிய உறுப்பினர்களும், சமயச் சான்றோர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இந்தக் கல்லூரியை அமைப்பதற்காகத் தேவையான நிலம் மற்றும் நிதி உதவி அளிக்கச் சில பெரியவர்களும் முன் வந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கல்லூரியை அமைதி சூழ்ந்த இடத்தில் ஆன்மீக உணர்வுக்குத் தகுந்த இயற்கைச் சூழலில் அமைக்கப்பட வேண்டும் என்றும், அப்படித் தேர்ந்தெடுக்கப்படும் இடம் ஆழ்ந்த தியானத்திற்கும், வழிபாட்டிற்கும் உகந்ததாக இருக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் இதற்குத் தேவைப்படும் 40 ஏக்கர் நிலத்தைத் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

தமிழகத்தின் கல்வி நிறுவனங்களில் தற்போது பின்பற்றப்படும் இட ஒதுக்கீட்டு முறை இந்தக் கல்லூரியிலும் பின்பற்றப்படும். அதாவது ஆதி திராவிடருக்கு 18 விழுக்காடு இடங்களும், பழங்குடியினருக்கு ஒரு விழுக்காடு இடமும் பிற்படுத்தப்பட்டோருக்கு 30 விழுக்காடு இடங்களும், மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 விழுக்காடு இடங்களும் ஒதுக்கப்படும் என்பதை மீண்டும் தெளிவுப்படுத்த விரும்புகிறேன்.

இந்த வேத ஆகம சாஸ்திரக் கல்லூரியை எதிர்வரும் கல்வி ஆண்டில் தொடங்குவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்ப்தை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தக் கல்லூரியில் பல ஆராய்ச்சிப் பிரிவுகளைத் தொடங்கி, இதனை ஒரு பல்கலைக் கழகமாக உயர்த்தும் எண்ணமும் எங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள, தேவஸ்வம் என்று அழைக்கப்படும் கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம், 490 கோயில்களைப் பராமரித்து வருகிறது. இதற்காக அரசு ஒவ்வொரு ஆண்டும் மானியமாக ரூ.17.70 இலட்சம் வழங்கி வருகிறது.

ஆலயங்களின் பராமரிப்புச் செலவு மிக அதிகமாக உயர்ந்துள்ளதாலும், இவ்வாரியத்திற்குக் கடந்த 34 ஆண்டுகளாக வழங்கப்பட்டு வரும் இந்த மானியத் தொகை உயர்த்தப்படாததாலும், அவ்வாரியத்தின் கோயில்கள் பெரிதும் சீரழிந்து, சாதாரண பராமரிப்புப் பணிகள் கூட செய்ய முடியாத நிலையில் இருந்தன.

இதனைப் போக்குவதற்காக 1992-93-ஆம் ஆண்டு முதல், இதற்குக் கூடுதலாக ரூ.10 இலட்சம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. முதலமைச்சர் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து, ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதியாகத் தமிழ்நாடு போக்குவரத்து மேம்பாட்டு நிதி நிறுவனத்தில் செலுத்தி, அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து, இந்தக் கூடுதல் ஒதுக்கீடான ரூ.10 இலட்சம் கொடுக்கப்படும், என்பதை

**தேசிய கடற்போக்குவரத்துத் தினம்**

ஏப்ரல் மாதம் ஐந்தாம் தேதி 'தேசிய கடற்போக்குவரத்துத் தின'மாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. (National Maritime Day) இவ்வாண்டு கொண்டாடப்படுவது 29-வது தினம். கடல்வழிப் போக்குவரத்தில் பண்டைய சோழர்கள் முதல் வ.உ. சிதம்பரனார் வரை இந்தியாவுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

சென்னை, தூத்துக்குடி, பம்பாய், கல்கத்தா, கொச்சி, கண்ட்லா, மர்ம கோவா, நியூ மங்களூர், விசாகப்பட்டிணம், பாரதீப், ஜவகர்லால் நேரு ஆகிய தன்னாட்சி பெற்ற துறைமுகப் பொறுப்புக் கழகங்கள் தற்போதைய கடல்வழிப் போக்குவரத்தில் முக்கியப் பங்கினை வகிக்கின்றன.

பம்பாயில் ரூ.24.36 கோடி செலவில் மெர்ச்செண்ட் நேவி அகாடமி ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. ஆண்டொன்றுக்கு 500 பேருக்கு இங்கு கடற்போக்குவரத்துப் பயிற்சி அளிக்கப்படும்.

ஷிப்பிங் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியா ரூ.100 கோடி மூலதனத்துடன் 1961, அக்டோபர் இரண்டில் துவக்கப்பட்டது.

பாரசீக வளைகுடாப் போரின்போது, ஈராக் மற்றும் குவைத்திலிருந்த இந்தியர்களை மீட்கும் பணியில் ஷிப்பிங் கார்ப்பொரேஷன் கப்பல்களான எம்.வி. திப்பு சுல்தானும், எம்.வி. அக்பரும் ஈடுபடுத்தப்பட்டன. எம்.வி. திப்பு சுல்தான் மூலம் 2,635 பேரும், எம்.வி. அக்பர் மூலம் 5,101 பேரும் தாயகம் வந்தனர்.

கடற்பயணத்துக்குக் கலங்கரை விளக்கங்கள் மிக அவசியமானவை. நாடு சுதந்திரம் அடைந்தபோது 17 கலங்கரை விளக்கங்களே இருந்தன. இன்றோ 155 கலங்கரை விளக்கங்களும், 14 ரேடியோ பேகான்களும் உள்ளன.



மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், முதலமைச்சர் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து, முதற்கட்டமாக 19 பாடல் பெற்ற கோயில்கள், மற்றும் 16 மங்களா சாசனம் செய்யப்பட்ட கோயில்களின் திருப்பணிக்காக, ரூ.50 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருவாரூர் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்**

திருவாரூரில் உள்ள, உலோகத் திருமேனி பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டுள்ள உலோகத் திருமேனிகளை முறையாகப் பராமரிக்க, அந்த மையத்தில் குளிர் சாதன வசதி ஏற்படுத்த, ரூ.9 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள 8,443 கோயில்களில், 66,534 உலோகத் திருமேனிகள் உள்ளன. இந்த உலோகத் திருமேனிகள் திருடப்பட்டால், அவற்றை எளிதில் கண்டுபிடிக்க உதவியாகச் சிலைகள் புகைப்படம் பிடிக்கப்பட்டு, தொகுத்து வைக்கப் பட்டுள்ளன. அவ்வாறு புகைப்படம் எடுக்கப்பட்ட சிலைகள், தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு பழம் பொருள் கலைச் செல்வங்கள் சட்டத்தின் கீழ், பதிவும் செய்யப்படுகின்றன. இதுவரை 2,563 கோயில்களில், 23,910 சிலைகள் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ளவற்றில், 3,883 கோயில்களைச் சேர்ந்த, 21,505 சிலைகளுக்குப் புகைப்படத் தொகுப்புகள் தயாரிக்கப் பட்டுள்ளன. இந்தப் புகைப்படத் தொகுப்புகளை விரைவில் பதிவு செய்யவும், எஞ்சியுள்ள 1,997 கோயில்களைச் சேர்ந்த 21,129 உலோகத் திருமேனிகளைப் புகைப்படம் எடுத்து, அவற்றைப் பதிவு செய்யவும், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



தற்போது இந்த உலோகத் திருமேனி பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டிருக்கும் சுவாமி சிலைகளுக்கு, வெள்ளிக்கிழமைகளில் மட்டும் பூஜை செய்யப்படுகின்றது. இனிமேல் அங்குள்ள சுவாமி சிலைகளுக்கு, வாரத்தில் மூன்று நாட்கள், அதாவது, திங்கள், செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களில், பூஜை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருக்கோயில்களின் நகைகள் மற்றும் விலை மதிப்புள்ள பொருள்கள் பாதுகாப்பு**

கோயில்களில் உள்ள நகைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் குறித்து, சரியான மதிப்பீடு செய்யவும், பாதுகாப்பாக அவற்றை வைத்திருப்பது குறித்தும், ஆய்ந்து வழிமுறைகளை எடுத்துரைப்பதற்காக, ஓய்வு பெற்ற நீதிபதி திரு என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட வல்லுநர் குழு ஒன்று அமைக்கப் பட்டது. அந்தக் குழு ஆய்வு செய்து சில யோசனைகளைத் தெரிவித்தது. அதன் அடிப்படையில், பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றிய அறிவுரைகள், அனைத்துக் கோயில் செயல் அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டன. இது தவிர, கோயில்களுக்கு இரும்புக் கதவுகள் பொருத்தவும், திருடர்கள் எச்சரிக்கை மணி (Burglar Alarm) பொருத்தவும், ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**கோயில் பாதுகாப்புப் படை**

நமது பண்பாட்டைப் பாரம்பரியத்தினைப் பிரதிபலிக்கின்ற திருக்கோயில்கள், நமது கலைப் பொக்கிஷங்களாகும். அவற்றையும், அவைகளுக்குச் சொந்தமான உடைமைகளையும் பாதுகாப்பது என்பதை தனது தார்மீகக் கடமையாக இவ்வரசு கருதுகிறது. கடந்த சில மாதங்களாகக் கோயில்களில் திருட்டு மற்றும் சிலைகள் உடைக்கப் படுவதாகச் செய்திகள் வந்த வண்ணமுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் கூட, இது குறித்து இந்த மாமன்றத்தில் எடுத்துரைத்து இருக்கிறார்கள். இவைகளை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்த, ஒரு சிறப்பு ஏற்பாட்டை, இந்து சமய அறநிலைய மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குரிய, எனது பதிலுரையில் அறிவிக்கிறேன், என்று தெரிவித்திருந்தேன்.

கோயில்களில் உள்ள விலையுயர்ந்த உலோகத் திருமேனிகளையும், சிலைகளையும், ஆபரணங்களையும் மற்றும் ஆராதனைக்குரிய பொருள்களையும், முழுமையாகப் பாதுகாப்பதற்காகக் காவல் துறையில், ''கோயில் பாதுகாப்புப் படை'' ஒன்று, தனியே ஏற்படுத்தப்படும் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சிறப்புப் பிரிவு விரைவில் அமைக்கப்படும். ஏற்கெனவே Idol Theft wing என்ற ஒரு பிரிவு காவல் துறையில் உள்ளது. சிலைகள் திருட்டுப் போனால், அவற்றைக் கண்டுபிடிக்க இப் பிரிவு செயல்படுகிறது. அதில், சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு காவல் துறைக் கண்காணிப்பாளர் தலைமையில், ஒரு துணைக் காவல்துறைக் கண்காணிப்பாளர், 5 ஆய்வாளர்கள், 3 துணை ஆய்வாளர்கள், 4 தலைமைக் காவலர்கள், 3 முதல்நிலைக் காவலர்கள், 13 இரண்டாம் நிலைக் காவலர்கள் ஆக மொத்தம் 30 பேர் மட்டுமே உள்ளனர். அது வேறு - இது வேறு. இந்தப் பிரிவு, திருட்டுக் குற்றங்கள் நடவாமல் தடுப்பதற்கு ஏற்படுத்தப்படும் பிரிவு.

கோயில் பாதுகாப்புப் படைப் பிரிவில் ஆயிரம் இரண்டாம் நிலைக் காவலர்கள் நியமிக்கப்படுவார்கள். இவர்கள் தவிர, மாதம் ரூ.750 தொகுப்பு ஊதியத்தில், 3000 முன்னாள் இராணுவத்தினரும் இந்தப் பிரிவில் நியமிக்கப் படுவார்கள். பணியில் அமர்த்தப்படும் 1000 இரண்டாம் நிலைக் காவலர்களுக்கும், 3000 முன்னாள் இராணுவத்தினருக்கும், அவர்கள் பாதுகாப்புப் பணியில் உள்ள நேரங்களில், துப்பாக்கி கொடுக்கப்படும். அவர்கள் காவல் பணிபுரியும் கோயில், எந்தக் காவல் நிலையத்தின் எல்லைக்குள் இருக்கின்றதோ, அந்தக் காவல் நிலையத்தில் காவலர்களாகப் பணியில் அமர்த்தப்படுவார்கள். அவர்கள் அங்கிருந்து சென்று, அந்தந்தக் கோயில்களில் காவல் பணிபுரிவார்கள்.

இந்த அமைப்பை ஏற்படுத்த, அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.5.28 கோடி செலவாகும்.

இந்தப் பெரும் செலவினை, நிதி வசதி இல்லாத காரணங்களினால், கோயில்கள் முழுமையாக ஏற்க முடியாது என்பதால், மொத்தச்செலவினத்தில் 10 சதவிகிதத் தொகையை மட்டும் கோயில்கள் ஏற்கும். மீதமுள்ள 90 சதவிகிதத் தொகையை, அரசே ஏற்கும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர், மற்றும் அறநிலையத் துறை துணை ஆணையர், அல்லது உதவி ஆணையர் ஆகியோர், இந்தக் கோயில் பாதுகாப்புப் படைக் காவலர்கள் செய்யும் பணிகளை, மாதம் ஒரு முறை ஆய்வு செய்வார்கள். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை அரசுச் செயலாளர், மாநிலக் காவல் துறைத் தலைவர், மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர், ஆகியோரைக் கொண்ட உயர்மட்டக்குழு, இப்பாதுகாப்புப் படைப் பிரிவின் பணிகளை ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருக்கோயில் பணியாளர்கள் நலன்**

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில், மொத்தம் 49,713 பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களில் 4,166 பணியாளர்கள், உதவி ஆணையர் அல்லது செயல் அலுவலர்கள், மற்றும் அதற்கு மேல் நிலையில் உள்ள அதிகாரிகளின் கீழ் உள்ள, பெரிய கோயில்களில் பணியாற்றி வருகிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை, கிட்டத்தட்ட அரசு ஊழியர்களுக்கு நிகராக இவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதர சிறிய கோயில்களின் பணியாளர்களைப் பொறுத்த மட்டில், அவர்கள் பணியாற்றும் கோயிலின் வருமானத்தைப் பொறுத்து, ஊதியம் வழங்கப்படுகிறது. மொத்தத்தில், 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டத்தில் குறிப்பிட்டவாறு, ஆலயத்தின் ஆண்டு வருவாயில் 40 சதவீதத்திற்கு மிகாத அளவு, அவ்வாலயத்தினுடைய பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது.

நலிந்த திருக்கோயில்களில் பணியாற்றிவரும் பணியாளர்களுக்கு, நிதியின்மை காரணமாக, ஊதியத் தொகை கொடுப்பதில் ஏற்பட்ட சிரமங்களினால், அவை வழங்கப்படாமல் வைக்கப் பட்டிருந்தது. அப்படிப்பட்ட நிலுவைத் தொகையை வழங்குவதற்காகப் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயில் உபரி நிதியிலிருந்து,

• தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் அறிஞர்களின் கருவூலங்களே புத்தகங்கள்.

—ஜோசப் அடிசன்

• என் மனதுக்குப் பிடித்த புத்தகங்களை மட்டும் என்னிடம் கொடுத்து என்னை வாழ்நாள் முழுவதும் சிறைப்படுத்தினாலும் நான் வருத்தப்பட மாட்டேன்.

—மாஜினி

ரூபாய் ஒரு கோடி வைப்பு நிதியாகக் கொண்டு, ஆலய ஊழியர் நலத் திட்டம் உருவாக்கப்பட்டது. அந்த நிதியின் மூலம் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து, ஆண்டு வருமானம் ரூபாய் 25,000-க்குக் குறைவாக உள்ள ஆல்யங்களில் பணிபுரிந்து வரும், மாத ஊதியம் ரூபாய் 300-க்கும் குறைவாகப் பெறுவோருக்கு, ஆண்டுதோறும் ஊதியத் தொகை நிலுவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் பல கோயில் பணியாளர்கள் பயனடையும் வகையில், இந்தத் திட்டத்தில் ஆலய வருவாய் வரம்பினை உயர்த்தி, அதாவது ஆண்டு வருவாய் ரூபாய் 40,000 வரை உள்ள கோயில்களில் பணியாற்றும், ரூபாய் 400-க்கும் கீழ் மாதச் சம்பளம் பெறும் நிரந்தர மற்றும் முழுநேரப் பணியாளர்களின் சம்பளப் பாக்கியும், இந்த ஆண்டு முதல், ஆலய ஊழியர் நல நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனால் சுமார் 500 ஆலய ஊழியர்கள் பயன்பெறுவார்கள். இது தொடர்பாக 1.7.90 முதல், 30.6.91 வரை உள்ள காலத்திற்கான சம்பளப் பாக்கிகள், உடனடியாக வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக ரூபாய் 20 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, 20 ஆண்டுகள் பணி செய்து, 60 வயதைக் கடந்து ஓய்வு பெற்ற, வேதபாராயணம், நாலாயிர திவ்யப். பிரபந்தம், மற்றும் அரையர் சேவை செய்த 100 பேர்களுக்கு, ஓய்வு ஓதியமாக மாதம் ரூ.300 வழங்கப்படும் என்று நான் அறிவித்தேன். அத் திட்டம் இப்பொழுது செயல்படுத்தப்படுகிறது என்பதையும், அதேபோன்று, அர்ச்சகர்களாக 20 ஆண்டுக் காலம் பணி செய்து 60 வயதைக் கடந்து, ஓய்வு பெற்ற 500 அர்ச்சகர்களுக்கு மாதம் ரூ.300 ஓய்வூதியமாக வழங்கும் புதிய திட்டமும் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 18 இலட்சம் செலவாகும்.

கோயில்களில் தற்போது பணிபுரியும் பூசாரிகளுக்கும், அர்ச்சகர்களுக்கும், முறையாக அன்றாடப் பூஜைகளையும், வழிபாடுகளையும் செய்வதற்கு உதவும் வகையில், அவர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சித் திட்டம் (Refresher Course) ஒன்று அறிமுகப்படுத்தப்படும். இதற்காக ரூபாய் 8 இலட்சம் செலவிடப்படும். இத்திட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும், 500 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருக்கோயில்களின் அசையாச் சொத்துக்கள் மற்றும் பலதரப்பட்ட உரிமைகளைக் குத்தகைக்கு விடுதல் குறித்து**

திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்கள், மற்றும் பல தரப்பட்ட உரிமைகளைக் குத்தகைக்கு விடும்போது, சட்ட விதி



ஒழுக்கம்

• உங்கள் திறமையைப் புலப்படுத்த நீங்கள் செய்யும் நூறு சொற்பொழிவுகளைவிட, உங்கள் நடத்தை ஒன்றே போதுமானது.

களின்படி பொது ஏலம் மூலம்தான் விடப்பட வேண்டும். மேலும் தனிப்பட்ட முறையில் (Lease otherwise than by public auction) குத்தகைக்கு விடுவதற்குத் தற்போதுள்ள விதிகளில் இடம் உள்ளது. இந்த விதியைக் கொண்டு, பெரும்பாலான குத்தகைகள் பொது ஏலத்தில் அல்லாமல், தனிப்பட்ட முறையில் குத்தகைக்கு விடுவதற்கு முன்மொழிவுகள் பரிந்துரைக்கப்படுகின்றன. இதனால் கோயில்களுக்குக் கிடைக்க வேண்டிய வருவாய் பெரும் அளவு குறைகிறது. எனவே, இதனைத் தடுக்கும் பொருட்டு, விதிகளில் திருத்தம் செய்து, அனைத்து அசையாச் சொத்துக்கள் மற்றும் பல தரப்பட்ட உரிமைக் குத்தகைகளில், தவிர்க்க முடியாத இனங்களைத் தவிர, மற்ற வழக்கமான இனங்களைப் பொது ஏலத்தில்தான் விடவேண்டும் என்ற சட்டத் திருத்தம் விரைவில் கொண்டு வரப்படும்.

**சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயத்தின் திருக்குளச் சீரமைப்பு**

சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயம் புராதன ஆலயங்களில் ஒன்றாகும். அந்தக் கோயிலின் பிரசித்தி பெற்ற திருவிழாக்களில் ஒன்று, 'தெப்பத் திருவிழா' ஆகும்.

அது கடந்த 1988-ஆம் ஆண்டிலிருந்து, குளத்தில் போதிய நீரின்மை காரணமாக, ஒவ்வொரு ஆண்டும் நடத்த இயலாமல் போய்விடுகிறது; இதனால் பக்தர்களின் உள்ளத்தில் ஒரு பெரும் குறை இருந்து வருகிறது. இக்குளத்தில் மீண்டும் தொடர்ந்து, அத்தகைய தெப்பத் திருவிழாவை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்காகக் குளத்தில் போதுமான தண்ணீர் தேங்கி நிற்கும் வகையில் திட்டமிடப்பட்டு, அதற்கான முதல் கட்டமாக ரூ.35 இலட்சத்திற்கான மதிப்பீடும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிக்கு ஒரு கோடி ரூபாய் செலவாகும். நான் 13-ஆம் தேதியன்று தொடங்கி வைக்க உள்ளேன்; இப்பணி விரைவாக முடிக்கப்பட்டு, அடுத்த ஆண்டு ஜனவரித் திங்களில், தெப்பத் திருவிழா சிறப்பாக நடைபெறும். இதைப் போலவே, தமிழ்நாட்டிலுள்ள முக்கியத் திருக்கோயில்களின் குளங்களுக்கும் படிப்படியாகத் திருப்பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



# ஆலய நிர்வாக வாரியம்:

## மாண்புமிகு முதல்வர் விளக்கம்!

ஆலய நிர்வாக வாரியத்தில், பெண்களையும் உடல் ஊனமுற்றோர்களையும் சேர்க்க வேண்டும் என்றும், காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆலய நிர்வாக வாரியத்திலோ அல்லது மாவட்டக் குழுவிலோ இடம்பெறச் செய்ய வேண்டும் என்றும், ஆலய நிர்வாக வாரிய உறுப்பினர்களுக்கும் மாவட்டக் குழு உறுப்பினர்களுக்கும், வாகன வசதி மற்றும் பயணப்படி வழங்குவது குறித்தும், குறிப்பிட்டுள்ளார்கள். மாநில ஆலய நிர்வாக வாரியத்திலும் மாவட்டக் குழுக்களிலும், தகுதியுடைய பெண்களையோ, உடல் ஊனமுற்றவர்களையோ, உறுப்பினர்களாக நியமிக்கத் தடையேதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆலய மேம்பாட்டில் அக்கறை கொண்ட, தர்ம சிந்தனை உள்ள பெருமக்கள், அனுபவம் பெற்ற அதிகாரிகள், மற்றும் ஆன்மீக மதத் தலைவர்கள், தகுதியின் அடிப்படையில் இக்குழுக்களில் இடம் பெற்றுள்ளனர். எனவே, இதில் இட ஒதுக்கீடு முறை இருக்க வேண்டிய அவசியம் இல்லை எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயில் நிர்வாக வாரியம் அமைக்கப்பட்டபோது, தவத்திரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் இந்த வாரியத்தில் பங்கேற்க வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டது. அவர் அதனை விரும்பாத சூழ்நிலையில், அவருடைய சார்பாக ஒருவரை முன்மொழியுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது. சுவாமிகளிடமிருந்து எந்தப் பதிலும் வராத காரணத்தினால், வாரியம் அமைப்பதிலும் தாமதம் ஏற்பட்டது. பின்னர் நான் அனுப்பிய கடிதத்திற்கு, விருப்பமில்லை என்ற பதில் வந்தது. எனவே, குறை அரசிடம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இருப்பினும், அரசுக்கு ஒத்துழைக்க இணங்கிய சமயப் பெரியோர்களின் ஆசியுடன், வாரியம் அமைக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரை அரசிடமும், இந்து சமய அறநிலையத் துறை ஆணையரிடமும் குவிந்து இருந்த பல அதிகாரங்கள் தற்போது இந்த நிர்வாக வாரியத்திடம் தரப்பட்டு இருக்கிறது என்பதையும், மிகுந்த அனுபவமும் அறிவாற்றலும் பெற்ற சமயச் சான்றோர்கள் மற்றும் பெரியோர்களுடைய வழிகாட்டுதலும் இந்த வாரியத்திற்குக் கிடைத்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

**கருத்துகளுக்கு மதிப்பளிக்கப்பட்டது**

கடந்த 2.3.1992 அன்று நடைபெற்ற இந்த வாரியத்தின் முதல் கூட்டத்தில், 132 பொருட்கள் தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டு, சீரிய கருத்துப் பரிமாற்றத்திற்குப் பின் முடிவுகள் எடுக்கப்பட்டன. இந்த முதல் கூட்டத்திலேயே 3.19 கோடி ரூபாய் அளவிலான திருப்பணித் திட்டங்களைச் செயல்படுத்த அனுமதியும், வழங்கப்பட்டுள்ளது. வாரியக் கூட்ட நடவடிக்கைகளில் பங்கு பெற்றவர்களுக்குத் தெரியும், அவர்களுடைய கருத்துக்களுக்கு எங்ஙனம் மதிப்புக் கொடுக்கப்பட்டது என்பதும், அவை எவ்வாறு சீர்தூக்கிப் பார்க்கப்பட்டது என்பதும்.

ஒரு சிலர் குறை கூறுவது போல, இந்தக் கோயில் நிர்வாக வாரியம் ஒரு ஆலோசனை வழங்கும் குழு அல்ல. இது அதிகாரம் பெற்ற, சட்டப்பூர்வமாக நிறுவப்பட்ட, ஒரு முழுமைபெற்ற வாரியம் ஆகும்.

தனிப்பட்ட முறையில் முதல் அமைச்சர் அவர்களின் கோவில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதிக்குச் சமுதாயத்தின் பல்வேறு நிலைகளில் வாழும் மக்கள் – ஏன், பிற மதத்தினரும் கூட மனமுவந்து நன்கொடையாக அளித்த தொகை இந்தக் குறுகிய காலத்தில் ரூ.3.96 கோடியைத் தாண்டிவிட்டது என்றால், அது பொதுமக்கள் இந்த அரசு எடுக்கும் முயற்சிகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் அங்கீகாரம் கொடுத்துள்ளனர் என்பதைத்தான் தெளிவுபடுத்துகிறது.

**விந்தையிலும் விந்தை**

இத்தனை முயற்சிகளையும் பாராட்ட மனம் இல்லாமல் ஒரு சிலர் இந்த நிர்வாக வாரியத்தைக் குறை கூறியும் தமிழகத்தில் உள்ள கோயில்களுக்கும் அவற்றில் உள்ள விலை உயர்ந்த பொருட்களுக்கும் ஏதோ பாதுகாப்பு இல்லை என்பது போன்ற தவறான கருத்தைப் பரப்பி அதற்கெனத் தனியாக மக்கள் பாதுகாப்புப் படை ஒன்று நிறுவ வேண்டும் என்ற முயற்சியில் இறங்கியும் உள்ளனர். முந்தைய அரசுகள் எல்லாம் கோயில் நிர்வாகம் குறித்து எவ்வித ஆர்வமும், காட்டாதிருந்த காலத்தில் எல்லாம் வாளாவிருந்தவர்கள் இப்பொழுது குறை கூறத் தொடங்கி உள்ளார்கள் என்பதுதான் விந்தையிலும் விந்தையாக இருக்கிறது.

தமிழகத்திலுள்ள கோயில்களின் மிக முக்கியச் சொத்தான விவசாய நிலங்களில் இருந்து வர வேண்டிய குத்தகைப் பாக்கித் தொகையை வசூலிக்க இந்த அரசு எதுவுமே செய்யவில்லை என்ற தவறான குற்றச்சாட்டையும் கூறி வருகிறார்கள். தமிழ்நாடு குத்தகை விவசாயிகள்

**அட்டைப்பட விளக்கம்:**

முதல் அட்டை:

பாவேந்தர் பாரதிதாசன் 102-வது பிறந்த நாளையொட்டி அவரின் திருவுருவப்படம் முகப்பை அலங்கரிக்கிறது (29.4.92)

நான்காம் அட்டை:

சென்னை அருங்காட்சியகத்தில், தென்னகக் கலைப் படிமக் கண்காட்சியைத் தொடங்கி வைத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டார் (14.4.92)

பாதுகாப்புச் சட்டம் மற்றும் பொது அறநிலையக் கட்டளைகள் சட்டம் ஆகியவற்றின்பால் இருந்த தடை ஆணைகள் இப்போதுதான் நீக்கப்பட்டுக் குத்தகைப் பாக்கியை வசூலிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், ஏற்கெனவே இருந்த 5 வருவாய் நீதிமன்றங்களோடு இந்த அரசு புதிதாக 6 வருவாய் நீதிமன்றங்களை அமைத்து இப்பணியை விரைவுபடுத்தியுள்ளது.

நகர்ப்புறங்களில் உள்ள விலை உயர்ந்த நிலங்களைக்குறைந்தகாலக் குத்தகைக்கு விடுவது என்ற அரசின் முடிவைப் பற்றியும் சிலர் குறை கூறி உள்ளார்கள். நீண்டகாலக் குத்தகைக்குக் கோயில் நிலங்களை விடாமல், அதுவும் குறிப்பாகக் குத்தகைக்கு விடப்படுவதைத் தவிர்த்து, கோயில்களுக்குக் கிடைக்கக்கூடிய வருவாய் வரவேண்டுமென்று எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக்கூட குறை கூறுகின்றனர். 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை குத்தகைத் தொகையை உயர்த்தலாம் என்பதைக்கூட உணராமல் பேசுகிறார்கள். இந்த நடவடிக்கைகள் நகர்ப்புறங்களில் உள்ள கோயில்களுடைய வருமானத்தைப் பெருக்குமே ஒழிய குந்தகம் விளைவிக்காது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கோயில்களின் வருமானமும் செலவும்

கோயில்களுடைய வருமானத்தை ஒருபோதும் அரசு எடுத்துக் கொள்வது இல்லை. மாறாக எப்போதும் அரசுதான் நிதி உதவி வழங்கி வருகிறது. இந்தத் துறையினுடைய மொத்த வருமானமும் கோயில்களுடைய திருப்பணிகளுக்காகவும், நிர்வாகத்திற்காகவும், அன்றாடம் நடத்தப்பட வேண்டிய பூசைகளுக்காகவும் தான் செலவிடப்படுகிறது. சில நேரங்களில் கோயில் சிப்பந்திகளுக்குக்கூட மாதச் சம்பளம் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படும்பொழுது அரசு அவர்களுக்கு வேண்டிய உதவித்தொகைகளை வழங்கி வருகிறது.

கன்னியாகுமரி தேவஸ்வம் என்ற அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில் பணி புரியும் சிப்பந்திகளுக்குச் சம்பளம்கூடக் கொடுப்பதற்குப் பணம் இல்லாமல் 10 இலட்சம் ரூபாய் மானியத் தொகையாக அரசு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையின் மீது ஆணைக்காகச் சமீபத்தில் என்னிடம் ஒரு கோப்பு வந்தது. அதில் அரசுச் செயலர் 3 இலட்சம் ரூபாய் மட்டும் வழங்கலாம் என்று பரிந்துரை செய்திருந்தார். கன்னியாகுமரி தேவஸ்வத்தின் தேவைகளை உணர்ந்த எங்கள் அரசு, அவர்களுக்கு ஒரு நிரந்தர ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதற்காக முதலமைச்சரின் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாயைப் போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் முதலீடு செய்து அதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 10 இலட்சம் ரூபாய் கிடைக்க வழிவகை செய்து இருப்பதை ஏற்கெனவே தெரிவித்தேன்.

இதுபோன்று கடந்த 34 ஆண்டுகளாக அவர்களுக்குக் கிடைக்காத உதவியைச் செய்தது தவறாகுமா? அல்லது அதில் ஏதேனும் உள்நோக்கம் இருக்கிறதா?

இப்படித் தமிழகத்தில் உள்ள ஏறத்தாழ 40 ஆயிரம் திருக்கோயில்களையும் நன்கு பராமரிக்க வேண்டும்; அவற்றை இயற்கைச் சீற்றங்களிலிருந்தும் பிற அழிவுகளிலிருந்தும் காக்க வேண்டும்; சீரமைக்கப்பட வேண்டும்; அவற்றின் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எங்களது அரசின் உயர்ந்த கொள்கைகளைச் சாடும் வகையில் கருத்துக்களை ஒரு சிலர் கூறுவது நியாயமா? இவர்கள் எதற்காக இவ்வாறு பேசி வருகின்றார்கள் என்பது தமிழக மக்களுக்கு நன்கு புரியும்; எனவே, இவர்களது வாதங்களைப் பற்றி நான் எப்பொழுதும் கவலைப்பட்டது கிடையாது.

### சமயத்தின் அடிப்படையில் வன்முறையாளர்கள்

கோயில்களில் திருட்டு மற்றும் சிலை உடைப்புப் போன்ற சம்பவங்கள் அவ்வப்போது நடை பெற்று வருவதை நிரந்தரமாகத் தடுக்கவும் இந்த அரசு தனியாக ஒரு கோயில் பாதுகாப்புப் படையை ஏற்படுத்தி உள்ளதை ஏற்கெனவே தெரிவித்தேன். இந்தச் சூழ்நிலையில் திருக்கோயில்களைப் பாதுகாக்கவும், காப்பாற்றவும் தனிப்பட்ட நபர்களால் ஆங்காங்கே மக்கள் பாதுகாப்புப் படை உருவாக்கப்பட வேண்டும் என்று சிலர் கூறுவது அறிவார்ந்த செயலாகத் தெரியவில்லை.

சமய அமைதி பூத்துக் குலுங்கும் தமிழகத்தில் சமயத்தின் அடிப்படையில் வன்முறையாளர்கள் தோன்றுவதற்குத்தான் இந்த மக்கள் பாதுகாப்புப் படை வழி வகுக்கும் என்பதால் இதனை முறியடித்து, முளையிலேயே கிள்ளி எறியத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசு சிறிதும் தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கோயில் நிர்வாக வாரிய உறுப்பினர்களுக்கு வாகன வசதி செய்து கொடுப்பது என்பது இயலாத காரியம். ஏனெனில், கோயில் நிர்வாக வாரியத்திற்கு மொத்தம் 18 உறுப்பினர்களும், ஒவ்வொரு மாவட்டக் குழுவிற்கும் 12 உறுப்பினர்கள் வீதம் 17 மாவட்டக் குழுக்களும் உள்ளன. அத்தனைப் பேருக்கும் தனித்தனியே வாகன வசதி அளிப்பது என்பது, பொருளாதார ரீதியில் சாத்தியமாகாது. இருப்பினும் அலுவல்சாரா உறுப்பினர்களுக்குப் பயணப்படி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

—சட்டப்பேரவையில் 9.4.92 அன்று ஆற்றிய பதில் உரையிலிருந்து.



# பாரதிதாசன் கண்ட சமூக நீதி

புலவர் நடேச நாராயணன்

பாரதிதாசனார், பாரதிக்குப் பின் வந்த பைந்தமிழ்ப் பாவலர்; இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்; புதுவை தந்த புதுமைப் புலவர்; புரட்சிக் கவிஞர்.

ஆம் அவர் கண்ட உலகு, புதிய உலகுதான். அவரே பாடுகின்றார்;

`புதியதோர் உலகு செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்.'

அவ்வுலகில் சமூக நீதிகள் சிறந்து விளங்கக் காணலாம். அங்கே சாதிச் சண்டைக்கு இடமில்லை; சமயப் பூசலுக்கு வாய்ப்பில்லை; மூட நம்பிக்கைக்கு வாழ்வில்லை; முதலாளி தொழிலாளி என்ற பேதமில்லை.

அங்கே கல்வியற்ற மக்களைக் காண முடியாது; இளம் விதவையர்களின் இதயக் குமுறலைக் கேட்க முடியாது; கடவுளையும் மதத்தையும் தங்கள் நலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளும் சுயநலமிகளைப் பார்க்க இயலாது.

எந்தச் சமூகத்தில் நீதி நிலைபெறவில்லையோ அந்தச் சமூகம் பிற எவ்வகையில் உயர்ந்திருப்பினும் நிலைத்து வாழ முடியாமல் நிலை குலைந்து வாழ நேரும். அதனால்தான் நமது புரட்சிக் கவிஞர், அரசியலைவிட பொருளாதாரத்தைவிட சமூக நீதியையே தமது இலட்சிய கீதமாக - இதயப் பாட்டாக - உயிர் மூச்சாகக் கொண்டு அறிவுறுத்தி வந்தார்.

அரசியல் பொருளாதாரம் அனைத்தும் சமூகத்திற்கேயன்றோ? எனவே அரசியல் பேசும் இடமாயினும் சரி, பொருளாதாரம் பற்றிப் பேசும் இடத்திலும் சரி, குடும்பம் பற்றிப் பேசும் இடத்திலும் சரி; அவர் சமூக நீதிகளை வற்புறுத்தத் தவறவே இல்லை.

சமூக நீதிகளைச் சுருதியாக வைத்துக் கொண்டுதான் அவர் அரசியல் பொருளாதாரம், குடும்பம் எனும் பாடல்களைப் பாடினார். இந்த வகையில் அவர் பாடல்கள் அபஸ்வரமில்லாமல் சுருதியோடு இயைந்தே இருந்தன.

சமூக நீதிகளை வற்புறுத்தி மறுமலர்ச்சிக்கு ஆக்கம் தேடிய காரணத்தினால்தான் பாரதிதாசனார் 'புரட்சிக் கவிஞர்' எனப் புகழாரம் சூட்டப் பெற்றார்.

சாதியிலும் சமயத்திலும் வெறி கொண்டவர்கள் மிகுதியாக இருக்கும் சமூகத்தில் நீதி என்பது இடம் பெற இயலாது, நிம்மதி என்பது நிலைபெற முடியாது. எனவேதான் நமது புரட்சிக் கவிஞர், மக்களில் உயர்வு தாழ்வு கற்பிப்பது சமூக அநீதிகளில் மிகப் பெரிய அநீதியாகும் என்று கருதினார்.

கடல் மேற்குமிழிகள் என்ற நூலிலே செம்மறி வாயிலாகச் செப்புகின்றார் நம் கவிஞர்...

திறல் நாட்டு மக்கள் தம்பால்
மெய்ம்மையே புகல்வேன்; மக்கள்
மேல் என்றும் மட்டம் என்றும்
பொய்மையால் புகலும் ஏட்டை
புகலுவார் தம் ஏற்பாட்டை
இம்மா நிலத்தில் மாற்ற
ஆவன இயற்றித் தீர்வேன்
இதுவே நான் மக்கட்கு இந்நாள்
இயற்றிட எண்ணுந் தொண்டு'

என்று புகல்கிறார். இதிலிருந்து சாதி வேறுபாட்டை ஒழிப்பதில் - சமூக நீதியை நிலைநாட்டுவதில் - எவ்வளவு அக்கறை காட்டியுள்ளார் என்பதை அறியலாம்.

இருட்டறையில் உள்ளதடா
உலகம் - சாதி
இருக்கின்ற தென்பானும்
இருக்கின்றானே '

என்று கொதிப்புடன் வியக்கிறார்.

பாவேந்தர் பாரதிதாசன் 102-வது பிறந்த நாளையொட்டி இந்தக் கட்டுரை வெளியிடப் படுகிறது.





பாவேந்தர் பாரதிதாசனின் 102-வது பிறந்த நாளையொட்டி, சென்னையிலுள்ள பாவேந்தர் பாரதிதாசனின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் மாலை அணிவித்தனர் (29.4.1992).

எல்லோரும் தாயின் கர்ப்பத்திலிருந்து தோன்றியவர்கள்தாம் ; அந்தத்தாய் தீண்டத்தகாதவர்களையும் ஈன்று தருவதுண்டோ? எனவே தீண்டத் தகாதவர் எனச் சிலரை ஒதுக்குவது சமூகத்திற்கு இழைக்கும் அநீதியல்லவா?

அற்பத் தீண்டாதார் என்னும்
அவரும் பிறரும் ஓர்தாய்
கர்ப்பத்தில் வந்தோரன்றோ - சகியே
கர்ப்பத்தில்வந்தோரன்றோ?
தீண்டும் மக்களின் அன்னை
தீண்டாரையும் பெற்றாளோ
ஈண்டிதை யார் நம்புவார் - சகியே
ஈண்டிதை யார் நம்புவார்?'

சிலரை, பிறப்பால் தாழ்ந்தவர் எனக்கூறி அவரைத் தீண்டத்தகாதவர் என ஒதுக்கியதோடன்றி எல்லா உயிர்களையும் வேறுபாடின்றிக் காக்கும் ஆண்டவனின் பொதுமன்றத்திலும் அவர் நுழைவதற்கு அருகதையற்றவர்கள் என்றும் விதி வகுத்திருந்தார்கள்.. இது நம் சமூகத்தின் ஊடுருவிட்ட அநீதியாக இருந்தது. இதையும் கண்டிக்கத் தவறவில்லை நம் புரட்சிக் கவிஞர்.

இறைச்சியுண்ணும் நாயும் காகமும் கோயிலில் நுழைவதால் வராத தீட்டு, மக்களில் சிலர் மட்டும் போவதால் வந்திடுமோ? நாய்க்கும் காகத்திற்கும் தரும் மதிப்புக் கூடவா மனிதனுக்கு இல்லை என்று கேட்கிறார்.

'குக்கலும் காகமும் கோயிலிற் போவதில்
கொஞ்சமும் தீட்டில்லையோ-நாட்டு
மக்களிலே சிலர் மாத்திரம் அந்த
வகையிலும் கூட்டில்லையோ?'

தேகம் சுமை என்று கருதும் ஞானியர் நிரம்பிய நாடு நம்நாடு, இந்த நாட்டில்தான் அதேதேகத்தைக் காரணமாக வைத்து பேதத்தை வளர்க்கிறார்கள். எத்தனை கேவலமான புத்தி என்று இகழ்கிறார் புரட்சிக் கவிஞர்.

தேகம்சுமை நமைச் சேர்ந்ததில்லை என்று
செப்பிடும் தேசத்திலே - பெரும்
போகம் சுமந்து உடற்பேதம் கொண்டோம் மதி
போயிற்று நீசத்திலே.'



இமய முதல் குமரி மட்டும் உள்ளோர் அனைவரும் ஒரு சாதியே. நாம் அனைவரும் பாரத நாட்டின் படை மக்களே - இந்த உணர்ச்சி தோன்றினால்தான் ஒருமைப்பாடு நிலைக்கும்; வெற்றி பல விளைக்கும்.

கோரும் இமாசலமுதல் தெற்கில்
கொட்டும் புனல் நற்குமரி மட்டும்
இருப்போர் - இவர்
யாருமொரு சாதி எனவும் - இதில்
எள்ளளவும் பேதமெனல் இல்லை
எனவும் - நம்
பாரத நற்றேவி தனக்கே - நாம்
படைமக்கள் எனவும் நம்மிடை
இலக்கணம் - அந்த
ஒருணர்ச்சி தோன்றியவுடன் - அந்த
ஒற்றுமையன்றோ நமக்கு வெற்றியளிக்கும்'

இவ்வாறாகச் சாதிபேதத்தை நீக்குவது. மக்கள் சரிநிகர் சமானம் என வகுப்பது சமூகநீதிகளில்முக்கியமான நீதி என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

சமூக அநீதிகள் எந்த உருவத்தில் வந்தாலும் அதை இனங்கண்டு சாடத் தவறவில்லை நம் மறுமலர்ச்சிக் கவிஞர். கடவுளின் பெயரால் ஆகட்டும், சமயத்தின் பெயரால் ஆகட்டும்,சமூக நீதிகள் பாதிக்கப்படுமானால் - தகர்க்கப்படுமானால் அவர், அந்த அநீதிகளைப் புறக்கணிக்கத் தவறவில்லை. ஏனெனில் அவருக்குத் தெரியும் சமூக நீதிகளைத் தகர்ப்பதன் வாயிலாகத் தன்னலத்தைக் காத்துக் கொள்ளக் கருதும் சுயநலமிகள் தாம் சமயத்தையும் கடவுளையும் குறுக்கே இழுத்து வருகிறார்கள் எனக் கருதினார். எனவே தயங்காமல் அவற்றைப் புறக்கணித்தார். சிலரது மனம் புண்படுமே என்பதற்காக அவர் தயங்கவில்லை; சமூகம் பண்பட்டால் போதும் என்று கருதினார்.

உயர்ந்த சாதியாருக்கு ஒரு கடவுள், தாழ்ந்த சாதியாருக்கு ஒரு கடவுள், பணக்காரருக்கு ஒரு கடவுள், ஏழைக்கு ஒரு கடவுள் என்று கடவுளையும் பிரிக்கும் கொடுமையைக் கண்டார் கவிஞர். சினம் பிறக்கிறது! சிரிப்பும் வருகிறது அவருக்கு. நகைச்சுவையோடு தன் கருத்தைத் தெரிவிக்கிறார்.

என்னை அளித்தவர் ஓர் கடவுள் மற்றும்
ஏழைக்கோர் கடவுள் எனில்
முன்னம் இரண்டையும் சேர்த்துருக்குங்கள்
முளைக்கும் பொதுக் கடவுள்'

இளம் விதவையர்களின் ஏக்கப் பெருமூச்சை - இதயக் குமுறலை - இரத்தக் கண்ணீரை -- கேட்டும் பார்த்தும் உணர்ந்தும் நெஞ்சம் நொந்தவர் நம் புரட்சிக் கவிஞர். கைம்பெண்கள் கலங்குவது சமூக அநீதியாகும். அந்த அநீதியை ஒழித்து அவர்களை மறுமணம் செய்து கொள்ள அனுமதித்துச் சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும் எனச் சங்கென முழங்கினார்; முரசென அறைந்தார்.

இதோ இளம் விதவை ஒருத்தி தன் குமுறலை - ஏக்கப் பெருமூச்சை - வெளியிடுவதைக் கேளுங்கள்.

'எனை மணந்தார் இறந்தார் என் குற்ற மல்ல
இறந்தவுடன் மங்கல நாண் நல்லாடைகள்
புனைமலர் குங்குமம் அணிகள் போனதுண்டு
பொன்னுடலும் இன்னுயிரும் போனதுண்டோ?'

என்று கேட்கின்றாள்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் காதலில் மாற்றம் இருக்க முடியுமா? வயது முதிர்ந்த கிழவன், தன் மனைவி இறந்து விட்டால் வேறொரு இளம் பெண்ணைத் தேடி மணக்கிறர்ன். இதைச் சமூகம் அனுமதிக்கிறது. ஆனால் இளமையிலேயே தன் கணவனை இழந்துவிட்ட கைம்பெண், வேறொரு ஆடவனை மணக்கக் கூடாதாம். இதுதான் சமூக நீதியா? கிழவனுக்கு மட்டுந்தான் காதலுணர்வு இருக்கும்; இந்த இளம் விதவைக்குக் காதலுணர்வு இருக்காது என்பது எண்ணமா?

பாடாத தேனீக்களை, உலவாத தென்றலை, பசியாத நல்வயிறை யாரேனும் பார்த்திருக்க முடியுமா என்று கேட்கிறார்.

## வாசனைப் பொருட்கள்

**• வாசனைப் பொருட்கள் என்றாலே நினைவுக்கு வருவது சுக்கு, ஏலம், கிராம்பு முதலியன. பண்டைக் காலத்திலிருந்தே வாசனைப் பொருட்களை அதிக அளவில் ஏற்றுமதி செய்தும் பயன்படுத்தியும் வருகிறது நம்நாடு.**

**உலக நாடுகளுக்கு 40,000 கோடி டன் வாசனைப் பொருட்கள் தேவை. இதில் இந்தியாவில் மட்டுமே 25 சதவீதம் நுகரப்படுகிறது. வாசனைப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, மத்திய அரசின் ஒருங்கிணைந்த வாசனைப் பொருட்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கு ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.**

**1990-91-இல் வாசனைப் பொருட்களை ஏற்றுமதி செய்ததன் மூலம் ரூ.338.67 கோடியும் 1989-90-இல் ரூ.275-76 கோடியும் 1988-89-இல் ரூ.274.81 கோடியும் அன்னியச் செலாவணி கிடைத்தது.**

'ஆடவரின் காதலுக்கும் பெண்கள் கூட்டம்
அடைகின்ற காதலுக்கும் மாற்ற முண்டோ?
பேடகன்ற அன்றிலைப்போல் மனைவி செத்தால்
பெருங்கிழவன் காதல் செயப் பெண் கேட்கின்றான்
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?'

என்று கேட்கிறார்.

இளங் கைம்பெண் ஒருத்தி மறுமணம் செய்து கொள்ளச் சாத்திரம் தடையாக இருக்குமானால் அச்சாத்திரத்தை ஒதுக்குங்கள், சமூகத்தில் நீதியை நிலைநாட்ட முயலுங்கள் என்கிறார்.

இனி, ஆடவர்தான் கல்விகற்க உரியவர் என்றும் அடுக்களை வேலைகளை மட்டுமே செய்யும் பெண்களுக்குக் கல்வி தேவையில்லை என்றும் வேறுபாடு காட்டினர். இதுவும் அநீதியே என்றுணர்ந்தார் கவிஞர். பெண்ணடிமை நீங்க வேண்டும் என எண்ணினார்; ஆணும் பெண்ணும் சம உரிமையுடன் வாழ வேண்டும் எனக் கருதினார். அதனால் பெண் கல்வியை வற்புறுத்திப் பாடினார்.

வளர்ப்பவர்கட்குக் கல்வி அறிவு இருந்தால்தான் வளர்க்கப்படுபவர்கள் நல்லவர்களாக விளங்க முடியும் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

'கல்வியில் லாத பெண்கள்
களர்நிலம்; அந்நிலத்தில்
புல்விளைந் திடலாம்; நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை.
கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி, அங்கே
நல்லறிவுடைய மக்கள்
விளைவது நவில வோநான்?''

என்று கேட்பதன் மூலம் பெண் கல்வியின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துகின்றார்.

பெண்கள் அடிமை வாழ்வு வாழ்வதை விரும்பாதவர் நம் புரட்சிக் கவிஞர்.

'பெண்ணடிமை தீரு மட்டும்
பேசுந்திரு நாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல்
முயற் கொம்பே'

என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார் நம் கவிஞர்.

நாடு அடிமைத் தளையிலிருந்து விடுபட வேண்டுமா? முதலில் நாம் பெண்களை அடிமைத் தளையிலிருந்து விடுவிக்க வேண்டும். அப்போதுதான் நாட்டு விடுதலையும் நாம் பெற முடியும். பெண்கட்குச் சுதந்திரம் தராதவரை நம் மண்ணுக்கும் சுதந்திரம் கிடைக்காது என்கிறார்.

குடியரசு நாட்டில் சமூக நீதிகளைச் சம்பிரதாயமாக மட்டும் வற்புறுத்தினால் போதாது; சட்டங்களாக ஆக்க வேண்டும் என்று கூறுகிறார்.

பாரதிதாசன் கண்ட உலகு பரந்து விரிந்த உலகு. அது அன்பையும் அறத்தையும் அடிப்படையாகக் கொண்டு திகழ்வதாகும்.

# கூட்டுறவு வங்கி விவசாயக் கடன்: வட்டி தள்ளுபடி

## சட்டமன்றத்தில் 28.4.1992 அன்று மாண்புமிகு முதல்வரின் அறிவிப்பு.

தமிழ்நாடு அரசின் புதிய ஊக்கத் திட்டம் பற்றிய ஒரு அறிவிப்பினை இப்பொழுது செய்ய விரும்புகிறேன்.

தமிழக விவசாயிகளைப் பாதுகாக்கவும், கூட்டுறவு வங்கிகளைக் காப்பதோடு, அவற்றின் பயன்பாட்டை விரிவாக்கவும், பலவேறு கருத்துக்களை இம்மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலம், விவசாயக் கடன் பெற்ற விவசாயிகள், வட்டி மற்றும் அபராத வட்டிகளை, உரிய நேரத்தில் செலுத்த முடியாத நிலையில் இருப்பதோடு, அவர்கள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகள் தொடர்ந்து அதிகரித்து, அவர்களால் அவற்றைத் திருப்பிக் கட்ட இயலாத நிலை உள்ளது. மேலும், உரிய காலத்தில் கடன்களைத் திரும்ப வசூல் செய்யாததால், கடன் வழங்கும் வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கியிடமிருந்து மீண்டும் கடன் பெற்று, விவசாயிகளுக்குக் கடன் அளிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கூட்டுறவு இயக்கத்தின் கொள்கைகளையே, இந்த நிலை பலவீனப்படுத்தி விடுகிற பின்னணி எழுந்துள்ளதால், அரசு இதில் தலையிட்டு, விவசாயிகள் செலுத்த வேண்டிய விவசாயக் கடன், வட்டி மற்றும் அபராத வட்டிகளை முழுமையாகத் தள்ளுபடி செய்து, அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டும் என, உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தபோது இதனைப் பரிவுடன் அரசு பரிசீலனை செய்யும் என்று நான் தெரிவித்தேன்.

அந்த உறுதிமொழியின் தொடர் நடவடிக்கையாக, இந்தக் கருத்துக்களை அரசு பரிசீலனை செய்தது. மாநிலத்தில், கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படும் விவசாயக் கடன்கள் அனைத்திற்கும், நாம் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, NABARD, அதாவது National Bank for Agriculture and Rural Development நிறுவனத்தைத் தான், எதிர்நோக்கி இருக்கின்றோம். எனவே, கூட்டுறவு வங்கிகள், NABARD நிறுவனம் விதிக்கும் நிபந்தனைகளுக்கும், வகுக்கும் சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டே, செயல்பட வேண்டிய கட்டாய நிலை உள்ளது.



NABARD நிறுவனம், விவசாயிகள் செலுத்த வேண்டிய கடன் தொகைகளைத் தள்ளுபடி செய்யும்பொழுது, வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்த வேண்டும் என்ற நல்ல பழக்கம், விரைவில் மறைந்துவிட வழி வகுக்கின்றது என்றும், இதனால் கடன் வசூல் பெருமளவு பாதிக்கப்படுவதுடன், கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்கு மீண்டும் கடன் வழங்கவே முடியாத ஒரு நிலை ஏற்படுகின்றது என்றும், அது மட்டுமின்றி, உண்மையிலேயே வசதி உள்ளவர்கள் கூட இதுபோன்ற தள்ளுபடிச் சலுகைகள் கிடைக்கும் என்று எதிர்பார்த்து, தாங்கள் வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்தாமல் இருக்க, இது அவர்களை ஊக்குவிக்கும் என்றும் தனது கருத்துக்களைத் தெரிவித்துள்ளது.

கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடு, இத்தகைய தள்ளுபடியினால் எந்த வகையிலும் பாதிக்கப்படக் கூடாது என்பதில், NABARD நிறுவனம் மிகவும் கண்டிப்பாக உள்ளது. அவ்வாறு கூட்டுறவு வங்கிகளைப் பாதிக்கும் வகையில், தள்ளுபடி ஏதும் செய்யப்பட்டால், NABARD நிறுவனம், மாநிலத்திற்கு வழங்கி வரும் கடன் உதவியை, முற்றிலுமாக நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளது.

இருந்தபோதிலும், கடன் சுமையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழக விவசாயிகள் பயன்பெறும் வகையில், தேவையான உதவிகளைச் செய்யவும், அதே நேரத்தில் கூட்டுறவு வங்கியின் செயல்பாடு, எந்த விதத்திலும் பாதிக்கப்படாத வகையில் NABARD நிறுவனத்தின் சட்டத் திட்டங்களும், நிபந்தனைகளும் மீறப்படாத வகையில், ஒரு திட்டத்தை உருவாக்கவும் அரசு முடிவு செய்து உள்ளது.

**தமிழக விவசாயிகளுக்கு ஒரு சந்தர்ப்பத்தினை வழங்கி, முழுமையாக உதவி செய்து, அவர்கள் தங்களது கடன்கள் முழுவதையும் திருப்பிச் செலுத்தும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், அவர்களைக் கடன் சுமையிலிருந்து முழுமையாக விடுவிப்பதுடன், கூட்டுறவு வங்கிகளும் முழுமையாகத் தங்களின் வசூல் குறியீட்டை எய்தித் தொடர்ந்து கடன் வழங்கும் தகுதியைப் பெறக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்தில், அரசு பின்வரும் முடிவினை எடுத்துள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

தமிழக விவசாயிகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய கடன், வட்டி, மற்றும் அபராத வட்டி முழுவதையும், வருகின்ற 30.6.92-க்குள் திருப்பிச் செலுத்த உதவும் வகையில், அரசு பின்வரும் ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தை நிறைவேற்ற ஆணையிடும்.

இந்தத் திட்டத்தின் கீழ், 1.7.91-அன்று இருந்த நிலவரப்படி குறுகிய கால, மற்றும் மத்தியக் காலக் கடன்களில், தவணை கடந்த அசல் தொகைகையும், அதன்பிறகு 1.7.91-முதல் 30.6.92 வரை உள்ள காலத்தில் வசூலுக்குத் தகுதியாகும் தொகைகள் அனைத்தையும், விவசாயிகள் 30.6.92-க்குள் தவறாது செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தும் விவசாயிகளுக்கு, 1.7.92-அன்றுள்ள நிலவரப்படி, தவணை கடந்த வட்டி, மற்றும் அபராத வட்டிக்குச் சமமான தொகையை, அரசே அவர்களுக்கு ஊக்கத் தொகையாக வழங்கும்.

இந்த ஊக்கத் தொகைத் திட்டம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட, குறுகிய கால மற்றும் மத்தியக் காலக கடன்களுக்கு மட்டுமே பொருந்தும்.

இந்த ஊக்கத் தொகை ஒவ்வொரு விவசாயிக்கும் காசோலை (Cheque) மூலமாக நேரடியாக வழங்கப்படும். அரசு வழங்கும் இந்த ஊக்கத் தொகையை, விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய பாக்கிகளுக்காக, பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

விவசாயிகள், 1.7.91-அன்று இருந்த நிலவரப்படி, தவணை கடந்த அசல், அதன் பின் 30.6.92-வரை வசூலுக்குத் தகுதியான அனைத்துத் தொகைகளையும் செலுத்தும் பட்சத்தில், அரசு 1.7.91-அன்று நிலவரப்படி, தவணை கடந்த வட்டி மற்றும் அபராத வட்டிக்குச் சமமான தொகையை அரசு விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக வழங்கி, விவசாயிகள் மூலமாக வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

மேலும், 1.7.91-அன்று நிலுவையில் இருந்த தவணை கடந்த வட்டி, மற்றும் அபராத வட்டியை, 1.7.91-க்குப் பிறகு செலுத்திய விவசாயிகளுக்கும், அதற்கு ஈடாக ஊக்கத் தொகை இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

குறுகிய கால மற்றும் மத்தியக் காலக் கடன்கள் மீது, 1.7.91 அன்று நிலவரப்படி நிலுவையில் இருக்கும் தவணை கடந்த வட்டி, மற்றும் அபராத வட்டித் தொகைகளுக்குச் சமமான தொகையை, நேரடியாக விவசாயிகளுக்கு இந்த ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் கொடுக்க, 69.07 கோடி ரூபாய் அரசுக்குச் செலவாகும். இந்தத் திட்டத்தின் மூலமாக, தமிழகத்திலுள்ள 13 இலட்சம் விவசாயிகள் பயன் பெறுவார்கள் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புதிய திட்டத்தை, அரசின் நிதி நிலைமை கடுமையாக இருக்கும் தற்போதைய சூழ்நிலையிலும், தமிழக விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்ற நல்லெண்ணத்தில், எங்கள் அரசு அறிமுகப்படுத்த உள்ளது. நீண்ட நாட்களாகக் கடன் சுமையால் தத்தளித்து வரும் தமிழக விவசாயப் பெருங்குடி மக்களின் கடன் சுமையில் ஒரு பகுதியையேனும் எங்கள் அரசு ஏற்றுக் கொள்வதில் பெருமகிழ்ச்சி கொள்வதுடன் அவர்கள் வளமுடன் வாழ வழி வகுத்துள்ள இந்தத் திட்டத்தை, இம்மாமன்றத்தில் அறிவித்ததில் பேருவகை அடைந்துள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***(சட்டமன்றத்தில் 28.4.1992 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பு)***



## உழைப்போம்! உயர்வோம்!

### —டாக்டர் எம்.ஜி.ஆர்.

உழைக்கும் வர்க்கத்திற்கே இவ்வுலகம் உரிமையானதென்பதை உணர்த்திய நாள்தான் மே முதல் நாள். அமெரிக்க நாட்டில் உள்ள சிக்காகோ நகரில் 1886-ஆம் ஆண்டு பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஒன்று கூடி உரிமை முழக்கம் எழுப்பினர். தொழிலாளர்களின் உரிமை வாழ்விற்குத் தங்களுடைய செயற்கரிய தியாகத்தால் அடித்தளம் அமைத்தனர். இரத்தத்தை ஆறாக ஓடவிட்டு, உயிர்களைப் பலிகொடுத்து, "உழைக்கும் மக்களே உலகின் உண்மையான உரிமையாளர்கள்" எனும் தத்துவத்தை நிலைநாட்டினர்.

சமத்துவச் சமுதாயம் காண்பதே உழைக்கும் வர்க்கத்தின் உண்மையான இலட்சியம் எனும் மூலக் கருத்திற்கு முதலிடம் தாருங்கள்! நம்மைக் காட்டிலும் நலிந்துள்ள நமது உடன் பிறப்புகளை முன்னேற்றக்கூடிய பொருளாதார மாற்றத்திற்கு அடிப்படை அமைத்திடுங்கள்; புதுயுகத்தின் ஈட்டி முனைகளாக முன்னோடிகளாக விளங்கிடுவீர்.

உழைப்போம்! உயர்வோம்! உழைப்பால் உலகை உயர்த்துவோம்! உழைக்கும் மக்கள் அனைவரும் ஒருதாய் மக்கள் என்பதை உலகிற்கு உணர்த்துவோம்! ஒற்றுமையைக் குலைக்கும் தீய சக்திகளை ஒதுக்குவோம்! சமுதாயச் சமதர்மச் சிற்பிகளாக உழைக்கும் வர்க்க உடன் பிறப்புகளே கடமையாற்ற முன்வருவீர்! உழைப்பின் மேன்மையை, உழைப்பாளரின் உயர்வை உலகம் உணரச் செய்வோம்!

# சத்யஜித்ரே மறைவு



'பாரத ரத்னா' பட்டம் பெற்றவரும், உலக அரங்கில் இந்தியத் திரைப்படங்களுக்குப் பெருமை தேடித் தந்தவருமான பிரபல வங்காளத் திரைப்பட இயக்குநர் திரு. சத்யஜித்ரே 23.4.'92 அன்று கல்கத்தாவில் மருத்துவமனை ஒன்றில் மரணம் அடைந்தார். அவருக்கு வயது 71.

1955-ஆம் ஆண்டு திரைப்படத் தொழிலில் நுழைந்த சத்யஜித்ரே, முதன்முதலாகத் தயாரித்த 'பதர் பாஞ்சாலி' என்ற வங்காள மொழிப்படம் உலகப்பட விழாக்களில் பல பரிசுகளைப் பெற்றது. அதைத் தொடர்ந்து அவர் தயாரித்த எல்லாப் படங்களும் சர்வதேச அளவில் புகழ் பெற்றன.

சத்யஜித்ரே உடல் நலக் குறைவின் காரணமாக கடந்த ஜனவரி மாதம் இறுதியில் கல்கத்தாவிலுள்ள மருத்துவ மனை ஒன்றில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்தார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும்போதே, உலகில் திரைப்படங்களுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த விருதான 'ஆஸ்கார் விருது' அவருக்கு வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அண்மையில் இந்திய அரசு நமது நாட்டின் மிகப் பெரிய விருதான 'பாரத ரத்னா' விருதினை சத்யஜித்ரேக்கு வழங்கிச் சிறப்பித்தது.

சத்யஜித்ரே 1921-ஆம் ஆண்டு மே மாதம் 2-ஆம் நாள் கல்கத்தாவில் பிறந்தார். கல்கத்தாவிலுள்ள மாநிலக் கல்லூரியில் படித்து 1940-இல் பட்டம் பெற்றார். பிறகு சாந்தி நிகேதன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து ஓவியக் கலை பயின்றார். இளம் வயதிலேயே திரைப்படத் துறையிலும் இசைத்துறையிலும் நாட்டம் கொண்டவர் ரே.

'ஆஸ்கார்' விருது பெற்ற சத்யஜித்ரேக்கு, தமிழ்நாடு சட்டப்பேரவை 8.4.'92 அன்று பாராட்டு தெரிவித்தது.

## மாண்புமிகு முதல்வர் அவர்களின் இரங்கல் செய்தி:

மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருமதி. பிஜோயா ரே அவர்களுக்கு அனுப்பிய இரங்கல் செய்தியில் குறிப் பிட்டிருப்பதாவது:

"இந்தியத் திரைப்படத் துறையில் புரட்சிகரமான கருத்துக்களைத் துணிச்சலுடன் படம் பிடித்துக் காட்டிய டாக்டர் சத்யஜித்ரே அவர்களின் மரணச் செய்தியைக் கேட்டு நான் மிகவும் துயரமடைந்தேன்.

"அவருடைய மறைவு, இந்தியத் திரைப்படத் துறை யில் மிகப் பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. அவரது மறைவால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்ப யாராலும் முடியாது.

"புரட்சிகரமான தமது திரைப்படங்களின் மூலம் இந்தியத் திரைப்படத் துறையை மாற்றியமைத்து அதன் மூலம் சர்வதேசப் பார்வையாளர்கள் மத்தியில் இந்தியா மீது ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார் டாக்டர் ரே. தன்னுடைய உணர்வு பூர்வமான கலைப்படைப்புகள் மூலம் இந்தியத் திரைப்பட வரலாற்றில் தனக்கென்று ஒரு தனி இடத்தை உருவாக்கி கொண்டார். சத்யஜித்ரேயை இழந்து தவிக்கும் திருமதி பிஜோயா ரே மற்றும் அவரு டைய குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்."


**தமிழரசு**

சந்தா விவரம்

தமிழ் ........ ஓராண்டு = ரூ.24

அரையாண்டு = ரூ.12

ஆங்கிலம் ... ஓராண்டு = ரூ. 12

(அரையாண்டுச் சந்தா கிடையாது)

விவரங்களுக்கு :

உதவி இயக்குநர் : தமிழரசு,

(விற்பனை மற்றும் விநியோகம்)

அரசினர் தோட்டம், சென்னை-600 002.



ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927



எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.





335/4

# தமிழரசு

16-5-1992 ரூ.1

# விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்



கதர் பருத்தி ரகங்கள்

ஆயத்த ஆடைகள்

கதர் பாலியஸ்டர்

பாப்டா

மற்றும் உல்லன்

காதிகிராஃப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

குறளகம், சென்னை - 600 108.





# தமிழரசு

வைகாசித் திங்கள் - 3

மலர்:22 இதழ்:22

திருவள்ளுவர் ஆண்டு 2023 16-5-1992


## இந்த இதழில்...


அரசு வழங்கும் உதவிகளின் பலனைப் பெற நீங்கள் அனைவரும் கூட்டுறவுக் குடையின்கீழ் வர வேண்டும்! —*மாண்புமிகு முதல்வர் உரை* ... 2

'நீங்க நல்லா இருக்கணும்' தமிழக அரசின் மதுவிலக்குப் பிரச்சாரத் திரைப்படத் தொடக்கவிழா —*மாண்புமிகு முதல்வர் உரை* ... 6

செய்யும் தொழில் அனைத்திலும் நெய்யும் தொழில் நிகரற்றது. —*மாண்புமிகு முதல்வர் உரை* ... 11

இராமேசுவரத்தில் புத்தர் சிலை கண்டுபிடிப்பு ... 15

தூத்துக்குடி விமான நிலையத் தொடக்க விழா —*மாண்புமிகு முதல்வர் உரை* ... 17

வீடு கட்டுவதற்கு முன் கவனிக்க வேண்டியவை ... 24

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் குடிநீர்த் திட்டப் பணிகள் ... 27

வாழ்வு தரும் வசம்பு ... 29

ஒவ்வொரு வீட்டிலும் விளக்கேற்றி வைப்பதே என் வாழ்நாள் நோக்கம்! —*மாண்புமிகு முதல்வர் உரை* ... 33

செயற்கைக்கோள் மூலம் ஒலி ஒளி தொலைத் தொடர்பு ... 38

சேலம் மாவட்டம்: பாலமலைப் பழங்குடி மக்கள் ... 43


*மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தலைமைச் செயலகத்தில் வடஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டப் பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக்கொண்டார் (11.5.1992).*





# அரசு வழங்கும் உதவிகளின் பலனைப் பெற நீங்கள் அனைவரும் கூட்டுறவுக் குடையின் கீழ் வர வேண்டும்!

## அனைத்திந்தியக் கைத்தறி நெசவாளர் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை

மிகுந்த எழுச்சியோடும், ஏற்றத்தோடும் இன்று நடைபெறும், அகில இந்தியக் கைத்தறி நெசவாளர்களின் மாநாட்டைத் தொடங்கி வைப்பதிலும், நெசவாளர் உடன்பிறப்புக்களை நேரில் சந்திக்கிற வாய்ப்பு பெற்றதிலும், நான் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகின்றேன்.

வேளாண்மைத் தொழிலுக்கு அடுத்து, நமது மாநிலத்தின் கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு, அதிக அளவிலான வேலைவாய்ப்புகளை வழங்குகிற பெருமை, நெசவுத் தொழிலுக்குத்தான் உண்டு. அதனால்தானோ என்னவோ, ஏறத்தாழ ஒரு வாரக் காலத்திற்குள், கைத்தறி நெசவாளர்கள் சார்ந்த இரண்டு விழாக்களில், நான் கலந்து கொள்கிற சந்தர்ப்பத்தைப் பெற்றுள்ளேன். இது கைத்தறி நெசவாளர்களுக்கும், எனக்கும் இயற்கையாகவே ஏற்பட்ட இணைப்பு.

தொன்மை வாய்ந்த இத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெரும்பான்மையான சகோதரர்களும், சகோதரிகளும், இன்று ஏழ்மையிலேயே தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டு இருக்கின்றனர் என்ற உண்மையை, நான் நன்கு அறிவேன். அதனால்தான், தமிழகத்திலுள்ள நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, முழு முயற்சியுடன் எங்கள் அரசு பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி, அவர்களது வாழ்க்கையில் ஒளியேற்றி வருகிறது. உதாரணமாக, ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், சென்ற ஆண்டு நூலின் விலை, மிக அதிக அளவு உயர்ந்த நிலையில், பல நெசவாளர்கள் வேலை வாய்ப்பை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபொழுது, குறைந்த விலையில் அவர்களுக்கு, 2,000 பேல் நூலினை வழங்க ஆணையிட்டேன் என்பதை, நீங்கள் அறிவீர்கள்.

அவ்வாறு உங்களைத் துயர் வந்து அணுகும்பொழுது, தயங்காது முன்வந்து, உதவிக் கரம் நீட்டும் அரசாகத்தான், எங்கள் அரசு செயல்பட்டு வருகிறது; தொடர்ந்து செயல்படவும் தயாராய் இருக்கிறது, என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உடுத்தித் தெரிந்துகொள்ள வேண்டிய இந்தத் துறையின் பெருமைகளோடு, படித்துத் தெரிந்துகொள்ள வேண்டியவைகளும் பல உண்டு. மாறிவரும் காலத்திற்கு ஏற்றவாறும், பொருந்துவதாகவும், தங்கள் தயாரிப்புகளை மாற்றிக்கொண்டால் தான், எதிர்காணும் தொழில் போட்டிகளில், கைத்தறி நெசவாளர்கள் வெற்றி காண முடியும் என்பதை, நெசவாளப் பெருங்குடி மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனவேதான், நெசவாளர்கள் உற்பத்தித் திறனைப் பெருக்கவும் புதிய ரகங்களைத் தயார் செய்யவும் உதவும் வகையில், நவீன யுக்திகளைக் கையாள, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளோம். அவர்களுடைய தறியில் சிறு மாறுதல்கள் செய்து, உற்பத்தித் திறனையும், தரத்தையும் உயர்த்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விஞ்ஞானம் அனைத்துத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி வருகிற இந்தக் காலத்தில், கைத்தறி நெசவாளர்களைக் காப்பாற்றுவதற்காக, விசைத்தறிகளின் வளர்ச்சியைத் தடுத்து, நிறுத்தி விடவும் முடியாது. ஏனெனில், விசைத்தறிகளின் வளர்ச்சி, நவீன காலத்தின் கட்டாயமாகும்.

ஆனால், அதற்குப் பதிலாக, நமது கைத்தறி நெசவாளர்களின் உயர்விற்கு, என்ன என்ன சிறப்புத் திட்டங்கள் வகுத்து, எப்படி எப்படி அவர்களுக்கு ஊக்கம் தந்து, உதவிகள் புரியலாம் என்கிற சிந்தனையின் அடிப்படையில்தான், நாங்கள் செயல்பட்டு வருகிறோம். அந்த முயற்சியின் விளைவே, கைத்தறி நெசவாளர்களில், விசைத்தறி வாங்க விரும்பி முன் வருவோருக்கு உதவும் திட்டமாகும், தற்போது கைத்தறி நெசவாளர்களைவிட,
மற்றவர்கள்தான் வியாபார ரீதியாக விசைத்தறிகளை அமைத்து, முன்னேற்றம் அடைந்து வருகின்றார்கள்.

எனவே, எங்கள் அரசு வகுத்துள்ள திட்டத்தின் கீழ், விசைத்தறி அமைக்க முன் வருபவர், கைத்தறி நெசவாளராக இருக்க வேண்டும் என்றும், அவர்கள் மேலும் அதிக அளவில் பயன்பெற வேண்டும் என்பதற்காக, கைத்தறி வைத்துள்ள நெசவாளர்களுக்கு, இதில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும், எங்கள் அரசு முடிவு செய்து உள்ளது. இந்த எண்ணத்தின் செயலாக்கமாகத்தான், எதிர் வரும் 10 ஆண்டுகளுக்குள், தமிழகத்தில் உள்ள 37,500 கைத்தறி நெசவாளர்களுக்கு, 75,000 விசைத்தறிகள் வழங்கும் திட்டத்தை, சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

நாள்தோறும் உழைத்தும், நெசவாளர்கள் ஈட்டக்கூடிய ஊதியம், மிகக் குறைவாக இருப்பதாலும், உற்பத்தி செய்யப்படும் கைத்தறித் துணிகள் உரிய தரம் இல்லாததாலும், போதிய வருவாய் கிடைக்காது அல்லல்படும் நெசவாளர்களுக்கு, இத்திட்டத்தின் மூலம் விசைத்தறிகள் வாங்க உதவிகள் செய்து, அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பது தான், எங்கள் அரசின் நோக்கமாகும். எங்கள் அரசைப் பொறுத்தமட்டில், நெசவாளர்களை எங்கள் அங்கமாக நாங்கள் காண்கின்றோம். அவர்களது வாழ்க்கையை எப்படியும் உயர்த்த வேண்டும், என்று உறுதி பூண்டுள்ளோம்.

எனவே தான், கைத்தறியையே நம்பி, அவர்கள் தயாரிக்கும் பழமையான துணி ரகங்கள், விலை போகாத நிலையில், விரும்பி வாங்கப்படாத நிலையில், வறுமையில் வாடும் அந்த நெசவாள உடன்பிறப்புக்களுக்கு, கைத்தறிக்குப் பதிலாக, விசைத்தறிகள் வழங்கிக் கை கொடுத்தால் தான், அவர்களை ஓரளவு உயர்த்த முடியும் என்ற உண்மையை உணர்ந்து, அந்த அடிப்படையில் இந்தத் திட்டத்தை நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம். அதே நேரத்தில், மக்களைக் கவரும், அவர்களால் விரும்பி வாங்கப்படக்கூடிய துணி ரகங்களை நெய்யும் கைத்தறிகளை மாற்றும் எண்ணம், எங்கள் அரசுக்குச் சிறிதும் இல்லை. அத்தகையோரின் உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்களையும், அரசு கவனத்தோடு செயல்படுத்துகிறது என்பதை, இங்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

கைத்தறிகளின் செயல்பாடுகள், நெசவாளர்களின் அணுகுமுறை பற்றிய சில கருத்துகளும், என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள 4.27 இலட்சம் கைத்தறிகளில், 3.27 இலட்சம் கைத்தறிகள், கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் இயங்குகின்றன. அவ்வாறு ஒரு அமைப்பின் கீழ் அவர்கள் இருப்பதால், அவர்களின் நலனைப் பேணிக் காப்பதில், அரசு நேரடிக் கவனம் செலுத்த எளிதாக இருக்கிறது. ஆனால், கூட்டுறவுக் குடையின் கீழ் வராத கைத்தறிகளுக்கு, அரசு நேரடியாக உதவுவதில், சில நடைமுறைப் பிரச்சினைகள் உள்ளன. சில காலகட்டங்களில், அவர்களுக்குக் கொடுக்கும் உதவிகள், அவர்களைப் போய்ச் சேராத நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது.

எனவே, கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் அனைவரும், கூட்டுறவு அமைப்பின் கீழ் முழுமையாக வர வேண்டும் என்ற என் எண்ணத்தை, இத்தருணத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். அதற்குக் கைத்தறி நெசவாளர்கள், தங்களது ஒருமித்த ஆதரவினைத் தருவார்கள் என்றும் நம்புகின்றேன்.

அரசு வழங்குகிற ஆதரவினை, உதவிகளின் பலனை, நீங்கள் முழுமை

அனைத்திந்தியக் கைத்தறி நெசவாளர் மாநாடு 9.5.1992 அன்று சென்னைத் தேனாம்பேட்டைக் காமராசர் திடலில் நடந்தது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாநாட்டிற்குத் தலைமை வகித்து, நவீன மயமாக்கப்பட்ட கைத்தறியை நாட்டுக்கு அர்ப்பணித்தார். மறைந்த சரவண பவானந்தர் அறக்கட்டளை சார்பில், நலிந்த எட்டு நெசவாளர் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கினார். முன்னதாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் குத்துவிளக்கை ஏற்றி வைத்தார்.

மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை இணை அமைச்சர் திரு அசோக் கேலோத் அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், 'நெசவாளர்களுக்குத் தேவையான நூல் குறைந்த விலையில் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. நூல் வியாபாரத்தை அதிகரிக்க இவ்வாண்டு ரூ.90 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது' என்றார்.

கைத்தறித்துறை வளர்ச்சிக்காகப் பாடுபட்ட ராஜீவ்காந்தி உள்ளிட்டவர்களின் திருவுருவப்படங்களைத் திறந்து வைத்து, மாண்புமிகு மத்திய சட்டத்துறை இணை அமைச்சர் திரு ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் பேசுகையில், 'கைத்தறித் துறைக்கும் ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் துறைக்கும் இடையே உறவு தேவை. இதற்கு உதவும் வகையில் தமிழகத்தில் கைத்தறி நெசவாளர்கள் அதிகம் வாழும் பகுதி ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அங்கு ஆயத்த ஆடைகள் ஏற்றுமதிக் குழுவின் கிளையை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

மாநாட்டுச் சிறப்பு மலரை வெளியிட்ட தமிழ்நாடு இ.காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு வாழப்பாடி கே. ராமமூர்த்தி அவர்கள் பேசுகையில், 'கைத்தறிக்கென 22 ரகங்களை ஒதுக்குவது குறித்து உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்கை விரைந்து முடிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

மாண்புமிகு தமிழகக் கைத்தறித் துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள் பேசுகையில், 'தமிழகத்தில் இதுவரை 500 கைத்தறிகள் நவீனமயப் படுத்தப்பட்டுள்ளன' என்றார்.

விழாவில், கேரள முன்னாள் ஆளுநர் திரு. பா. இராமச்சந்திரன், திரு நல்லி குப்புசாமி, கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சிக் குழுவின் தலைவர் திரு. எம்.பி. ராதாகிருஷ்ணன், அகில இந்தியக் கைத்தறி சம்மேளனத் தலைவர் திரு சுப்பிரமணியம் ஆகியோர் பேசினர். மாண்புமிகு அசாம் கைத்தறித்துறை அமைச்சர் திரு பருவா அவர்கள் விழாவில் கலந்து கொண்டார். முன்னதாக, மாநாட்டு வரவேற்புக் குழுவின் செயலாளர் திரு ஆர். தாமோதரன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

விழாக்குழு சார்பில், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

—செய்தித் தொகுப்பு: - பி.வி. கிரி.

யாக அடைய வேண்டும் என்றால், நீங்கள் அனைவரும் கூட்டுறவுக் குடையின் கீழ் வர வேண்டும் என்பது, தற்போதைய அவசியமான அவசரத் தேவை என்பதை, மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இன்றைய தினம், இங்கே உரையாற்றிய பெரியோர்கள், நெசவாளர்களின் நிலையைப் பற்றியும், பிரச்சினைகளைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்து, பல்வேறு கோரிக்கைகளை எடுத்து வைத்துள்ளார்கள். அவை அனைத்தையும் பரிவுடன் பரிசீலனை செய்து, தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு, முடிந்த உதவிகளை விரைவில் எங்கள் அரசு செய்யும், என்று உறுதி கூறுகின்றேன்.

குறிப்பாக, தமிழகத்தில் தற்போது சிட்ட நூலுக்கு (Hank Yarn) விதிக்கப்படும், 2 சதவிகித விற்பனை வரியை, நீக்க வேண்டும் என்றும், மற்ற தென் மாநிலங்களில் இந்த வரிவிதிப்பு இல்லை என்றும் குறிப்பிட்டார்கள். இதனைப் பொறுத்த மட்டில், அரசு இக்கோரிக்கையினை ஏற்கெனவே விரிவாகப் பரிசீலனை செய்துள்ளது.

அரசின் தற்போதைய நிதி நிலையில், விற்பனை வரியை நீக்கி ஆணையிட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்க முடியாத நிலையில் உள்ளது. இருப்பினும், இது குறித்து தக்க சமயத்தில் அரசு பரிசீலனை செய்யும்.

அடுத்து, தனியாரிடம் உள்ள கைத்தறிகளுக்கும், குறைந்த விலையில், கூட்டுறவு நூற்பு ஆலைகளில் இருந்து நூல் வழங்க வேண்டும் என்றும், இங்கே கேட்டுக்கொள்ளப் பட்டது. இது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. வியாபார நோக்கத்தோடு, இதனை ஒரு தொழிலாக நடத்தி வருபவர்கள், மற்றவர்களுடன் நேரடியாகப் போட்டியிடுவது தான் நியாயமாகும். அவ்வாறு அவர்களுக்குக் குறைந்த விலையில் நூல் வழங்குவதால், கைத்தறி நெசவாளர்கள் நேரடியாகப் பயன் பெறப் போவதில்லை.



எனவே, எவ்வித நேரடிப் பயனும் நெசவாளர்களுக்கு இல்லாத இத்திட்டத்திற்கு, அரசு உதவ முன் வர வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், கைத்தறி வைத்திருக்கும் நெசவாளர்களுக்கும், நேரடியாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டு உள்ள தொழிலாளர்களுக்கும், அவர்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ் இல்லாவிடிலும், அவர்களுக்கு முடிந்த அளவு, எவ்வளவு உதவ முடியுமோ, அவ்வளவு உதவிகளையும் செய்ய, எங்கள் அரசு முன் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில், தமிழக நெசவாளர்களின் சார்பாக, மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை இணை அமைச்சர் அவர்களுக்கு, நான் ஒரு கருத்தினை முன் வைக்க விரும்புகின்றேன். இந்தியாவில் உள்ள நெசவாளர்களின் நலன், காக்கப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் மத்தியஅரசு அதன் ஜவுளித்துறை ஆணையர் (Textile Commissioner) மூலமாக, ஒவ்வொரு நூற்பு ஆலையும், அதன் உற்பத்தில் 50 சதவிகிதம் சிட்ட நூல் (Hank Yarn) தயாரிக்க வேண்டும், என்ற நிபந்தனையை விதித்துள்ளது.



தனியார் துறையில் இயங்கும் நூற்பு ஆலைகள், இந்த ஆணையினை எதிர்த்து வழக்குத் தொடர்ந்து, நீதிமன்றத்தின் தடை ஆணைகள் பெற்ற நிலையில், குறிப்பிட்ட அளவு சிட்ட நூல் உற்பத்தி செய்யாமல் இந்த நூற்பு ஆலைகள் இருந்து வருகின்றன. தமிழக அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும், அனைத்துக் கூட்டுறவு நூற்பாலைகளும், இந்த ஆணையை மதித்து, ஏற்றுக்கொண்டதோடு மட்டுமன்றி, தேவையின் அடிப்படையில், 50 சதவிகிதத்திற்கும் மேல் சிட்ட நூல் உற்பத்தி செய்து, குறைந்த விலையில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி, உதவி வருகிறது. ஆனால், மத்திய அரசின் பொது நிறுவனமான, National Textile Corporation - இன் ஆளுகைக்கு உட்பட்ட நூற்பு ஆலைகள், குறிப்பிட்ட இந்த 50 சதவிகிதம் சிட்ட நூல் உற்பத்தி செய்வதில்லை, என்று தெரிய வருகிறது.

**"எதிர் வரும் 10 ஆண்டுகளுக்குள், தமிழகத்தில் உள்ள 37,500 கைத்தறி நெசவாளர்களுக்கு, 75,000 விசைத்தறிகள் வழங்கும் திட்டத்தை, சமீபத்தில் அறிமுகப் படுத்தியுள்ளோம்."**

எனவே, National Textile Corporation- இன் நூற்பு ஆலைகளும், 50 சதவிகிதம் சிட்ட நூல் உற்பத்தி செய்து கொடுத்தால், நமது கைத்தறி நெசவாளர்களின் நூல் தேவையை, இன்னும் சற்று திருப்திகரமாகப் பூர்த்தி செய்ய வாய்ப்பு ஏற்படும், என்பதை இத்தருணத்தில் தெரிவித்து, இது தொடர்பாக மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள், National Textile Corporation ஆலைகளுக்கு, தக்க அறிவுரைகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**"ஏழை எளியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்; அவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என்ற உறுதியான எண்ணத்துடன்தான், அரசு செயலாற்றி வருகிறது."**

கைத்தறி நெசவாளர்கள் மட்டுமல்ல, தமிழகத்தில் வாழும் அனைத்து ஏழை, எளியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்; அவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும், என்ற உறுதியான எண்ணத்துடன்தான், எங்கள் அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற நான் முதல், செயலாற்றி வருகிறது. அந்த முயற்சிக்கு, நெசவாளர்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்கி, உங்கள் அரசாகிய இந்த மக்கள் அரசிற்கு, உறுதுணையாக நீங்கள் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று தொடங்கும் இந்த மாநாடு, வெற்றி அடைய வேண்டும், உண்மையான கைத்தறி நெசவாளர்களைப் பாதுகாத்து, உயர்த்தும் பல நல்ல புதிய முடிவுகளை எடுக்க வேண்டும் என்று வாழ்த்தி, உங்கள் அனைவரையும் சந்திக்கின்ற இந்த நல்வாய்ப்பினை அளித்த, விழாக் குழுவினருக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். ●






# 'நீங்க நல்லா இருக்கணும்'

## - தமிழக அரசின் மதுவிலக்குப் பிரச்சாரத் திரைப்படத் தொடக்க விழா.

### மாண்புமிகு முதல்வர் உரை

தமிழக அரசின் 'நீங்க நல்லா இருக்கணும்' என்ற இந்த முழு நீள மதுவிலக்குப் பிரச்சாரத் திரைப்படத்தின் தொடக்க - விழாவில் கலந்து கொண்டு, திரை உலகத்தைச் சார்ந்த என் இனிய சகோதரர்களையும், சகோதரிகளையும் இங்குச் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

என்னுடைய இந்த உயர்ந்த நிலைக்கு அடித் தளம் அமைத்துத் தந்த எனது ஆசான், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்கிவிட்டுத் தான், நான் இந்தக் குத்து விளக்கை ஏற்றி வைத்தேன். "இன்றும் தமிழக மக்களின் நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பெற்று, மக்கள் ஆட்சிக்கு மகுடம் சூட்டிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்கிவிட்டுத்தொடங்கப்படும்எந்த ஒரு முயற்சியும், வெற்றி அடையும் என்பதை நான் நன்கு அறிவேன்.

இன்றைய தினம் இந்த இனிய விழாவில் கலந்துகொள்ள நான் இங்கு வரும்பொழுது, எனது எண்ண அலைகள் கட்டவிழ்ந்து ஓடின, நான் இங்குத் திரைப்பட நடிகையாகப் பல ஆண்டுகளுக்கு முன்னர் வந்த நேரத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், சம்பவங்கள் அனைத்தும், பசுமையாகவும் இனிமையாகவும் என் கண் முன் தோன்றின. நான் இந்த இடத்திற்கு இப்பொழுது தமிழ்க முதலமைச்சராக வந்திருப்பதை எண்ணிப் பார்க்கிறேன். என்னை இந்த நிலைக்கு உயர்த்திய தமிழக மக்களை நன்றியோடு நினைவுகூர்கிறேன்.

மக்கள் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள உங்கள் சகோதரி, மக்களுக்கு உதவும் ஒரு புதிய திட்டத்துடன் உங்களை நாடி வந்துள்ளேன். அந்தப் பொது நலத் திட்டம், புத்துணர்ச்சியுடன் செயல்படுத்தப்பட்டு, மக்களிடையே விழிப்புணர்ச்சியை நிச்சயம் ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன்.

மதுவின் மாயையில் மயங்கிக் கிடக்கும் மக்களைத் தட்டி எழுப்பி, தடுத்தாட்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன், திரைப்படம் ஒன்றைத் தயாரித்து வெளியிட, தமிழக அரசு முடிவு செய்துள்ளது. மக்கள் தங்களின் எண்ணங்களையும், கருத்துக்களையும் வகுத்துக்கொள்வதில், தற்போதுள்ள மக்கள் தொடர்புச் சாதனங்கள் பெரும் பங்கு ஆற்றுகின்றன. குறிப்பாக, திரைப் படங்கள் மக்களின் மனதில் நல்ல கொள்கைகளையும், கோட்பாடுகளையும் உருவாக்கவும், தவறுகள் இவை என்று சுட்டிக்காட்டி, அவற்றைத் தவிர்க்க வேண்டும் என்ற போதனைகளையும், சிறப்பாகவே செய்து வருகின்றன.

அந்த வகையில் திரைப்படங்கள் ஒரு வலிமை மிக்க சாதனம் என்பதில் மாறுபட்ட கருத்திற்கு இடமில்லை. எனவேதான் எங்கள் அரசின் கொள்கையான பூரண மதுவிலக்கைப் படிப்படியாகத் தமிழகத்தில் அறிமுகம் செய்ய, மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, அவர்கள் விரும்பிப் பார்க்கக்கூடிய திரைப்படத் துறையினையும், எங்கள் முயற்சிக்குப் பயன்படுத்துவது என்று முடிவு செய்தோம். நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன், மலிவு விலை சாராயத்தை முழுமையாக ஒழித்ததை இந்த நாடே நன்கு அறியும். எதிர்வரும் காலத்தில், தமிழகத்தில் பூரண மது விலக்கு என்ற நிலையை அடைய வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டங்களின் மூலம், அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி, மதுவிலக்குக் கொள்கைகளை எவ்வளவு தீவிரமாகச் செயல்படுத்த முடியுமோ, அவ்வளவு தீவிரமான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. இருப்பினும் குடிப்பழக்கம் என்பது ஒரு தனிப்பட்ட நபரின் மனநிலையைப் பொறுத்துத்தான் அமைவது. அதனைச் சட்டங்களினால் மட்டுமே தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை, நாங்கள் நன்கு அறிவோம். உண்மையில் ஒருவர் குடிப்பழக்கத்தை நிறுத்த வேண்டும் என்றால், அதற்கு மனமாற்றம் அவசியம். அந்த மனமாற்றம் ஏற்படுவதைத் தூண்டும் வகையில் அவர்களுக்கு உதவினால், நிச்சயமாக, தாங்கள் கொண்டுள்ள தீய பழக்கத்தின் கொடுமைகளை உணர்ந்து, அவர்கள் அதனை நிரந்தரமாகக் கைவிட வாய்ப்புகள் ஏற்படும்.

இதுபோன்ற பொது நலக் கருத்து ஒன்றினை மக்களுக்கு எடுத்துரைக்கும்பொழுது, எவ்விதக் கட்டாயமும் இன்றி, அவர்கள் தாங்களாகவே விரும்பி வந்து, தங்களை அந்த முயற்சியில் ஈடுபடுத்திக் கொண்டால் தான், எடுத்துக் கூறும் கருத்துக்கள் அவர்களின் நெஞ்சங்களில் நீங்காது ஆழமாகப் பதியும். மேலும் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் வெற்றி அடையும். எனவேதான், அதிக அளவில் மதுவிற்கு அடிமையாக உள்ளவர்கள், அத்தகைய மனமாற்றம் பெறவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில், தமிழக அரசு இந்தத் திரைப்படத்தைத் தயாரிக்க முன் வந்துள்ளது.

இந்தத் திரைப்படம் தமிழக அரசின் மது விலக்குத் துறைக்காக, செய்தி-சுற்றுலாத் துறை

---

தமிழக அரசின் 'மதுவிலக்குப் பிரச்சார'த் திரைப்படத்தின் தொடக்க விழா 29.4.92 அன்று, சென்னை பிரசாத் ஸ்டூடியோவில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. விழாவில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் குத்துவிளக்கேற்றித் திரைப்படத்தினைத் தொடங்கிவைத்தார்.

இந்தப் படத்தைத் தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள திரு. ஜி. வெங்கடேஸ்வரன் (ஜி.வி.) வரவேற்புரையாற்றினார். அவர் பேசுகையில், 'நீங்க நல்லா இருக்கணும்' திரைப்படம் வியாபார ரீதியில் எடுக்கப்படும். இந்தப்படம் தயாரிக்கப்பட்டு அக்டோபர் 2-ஆம் தேதி வெளியிடப்படும். முன்னணி நடிக நடிகையர்கள் நடிப்பார்கள். இப்படம் பல விருதுகளைப் பெறும் வகையில் எடுக்கப்படும். முதல்வர் அவர்களுக்குத் திரை உலகம் பாராட்டுவிழா நடத்தக் கருதி வருகிறது. கிருஷ்ண ஜெயந்தி, காந்தி ஜெயந்தி கொண்டாடுவதுபோல், நாங்கள் ஜெய ஜெயந்தி நடத்துவதற்கு முதல்வர் அவர்கள் தேதியைத் தரவேண்டும். நாங்கள் தயாரிக்கப்போகும் 'நீங்க நல்லா இருக்கணும்' திரைப்படத்தில் சூப்பர் ஸ்டார் முதலமைச்சர் அவர்கள், முதல்வராக நான்கு காட்சிகளில் நடிக்கின்றார்கள்' என்று கூறினார்.

வரவேற்புரைக்குப்பின், முதல்வர் அவர்களுக்கு திரு. ஜி.வி. பொன்னாடை போர்த்தினார்.

முதல்வர் அவர்கள் குத்துவிளக்கேற்றித் திரைப்படத்தினைத் தொடங்கி வைத்தார்.

இப்படத்தின் இயக்குநர் திரு விசு தன்னுடைய விளக்கவுரையில், 'இப்படத்திற்கான கதை வசனத்தை மிகச் சிரமப்பட்டு எழுதியிருக்கிறேன். நான் முதல்வர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், 'இது படமாக இருக்காது, பாடமாக இருக்கும்,' என்றார்.

தலைமச் செயலாளர் திரு. டி.வி. வெங்கடராமன், இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

வாழ்த்துரைக்குப்பின் திரு. ஜி.வி. வழங்கிய நினைவுப்பரிசான வெள்ளித் தட்டைப் பெற்றுக்கொண்டு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உரையாற்றினார். அவர்கள் பேசுகையில், இந்தத் திரைப்படம் படமாகவும் இருக்க வேண்டும், பாடமாகவும் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டு, எனக்குப் பாராட்டு அளிக்கத் திரு ஜி.வி. தேதியொன்று தரவேண்டும் என்றார். வரும் ஜூன் 24-ஆம் தேதியோடு நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு ஆகிறது. ஜூன் 25-ஆம் தேதி உங்கள் பாராட்டை ஏற்கிறேன்' என்று குறிப்பிட்டார்.

உள்துறைச் செயலாளர் திரு கே. மலைச்சாமி, இ.ஆ.ப., நன்றி நவின்றார்.

— நிகழ்ச்சித் தொகுப்பு: ஆர். இராஜசேகரன்.

யின் மூலமாகத் தயாரிக்கப்படும் படம் ஆகும். அரசுக்காகத் திரைப்படத்தைத் தயாரிக்கும் பொறுப்பு, தமிழ்நாடு மாநில மதுவிலக்கு உயர்மட்டக் குழுவின் உறுப்பினரும், பிரபல திரைப்படத் தயாரிப்பாளருமான திரு ஜி. வெங்கடேஸ்வரன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத் திரைப்படத்தை இயக்கும் பொறுப்பு திரு விசு அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது. இத் திரைப்படத்திற்கு இசை அமைக்கும் பொறுப்பு பிரபல இசையமைப்பாளர் திரு இளையராஜா அவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இத் திரைப் படத்தின் மூலக் கரு, மதுவிலக்குப் பிரச்சாரமாக அமையுமே அன்றி, இது அரசின் வழக்கமான Documentary பட்மாக இருக்காது.

இன்று தொடங்கப்படும் அரசின் 'நீங்க நல்லா இருக்கணும்' திரைப்படம், மக்களால் பெரிதும் வரவேற்கப்படும் என்று எதிர்பார்க்கின்றேன். ஏனென்றால், இந்தத் திரைப்படத்தை Documentary படமாகத் தயாரிக்காமல், இதனை இதர வியாபார ரீதியான தமிழ்த் திரைப்படங்களைப் போலவே உருவாக்க முடிவு செய்து உள்ளோம். இது தமிழக அரசின் ஒரு வழக்கமான செய்திப் படம் அல்ல என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தனியார் தயாரிப்பாளர்கள் எவ்வாறு திரைப்படங்களைத் தயாரித்து வெளியிடுகின்றார்களோ, அதே அடிப்படையில் இந்தப் படத்தையும் அரசு தயாரித்து வெளியிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோலவே நாடகம் ஒன்றையும் அரசு தயாரித்துள்ளது. இயல், இசை, நாடக மன்றத்தின் செயலாளர் 'நாடகக் காவலர்' திரு ஆர்.எஸ். மனோகர் அவர்களின் நாடகங்களைப் பற்றி, உங்களுக்கு நன்றாகவே தெரியும்; அவை மக்களால் பெரிதும் வரவேற்கப்படுபவை; விரும்பிப் பார்க்கப்படுபவை. தமிழகத்தில் இன்று அவருடைய நாடகங்கள்தான் பிரமாண்டமானவை மட்டுமல்ல, பிரசித்தி பெற்றவையும் கூட. எனவே, திரு ஆர்.எஸ். மனோகர் அவர்களிடம் நாடகம் தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

தமிழக அரசிற்காக 2 இலட்சம் ரூபாய் செலவில் அவர் தயாரித்துள்ள 'வெளிச்சம்' என்ற மதுவிலக்குப் பிரச்சார நாடகம், வருகின்ற 1.5.1992 அன்று மாலை, மியூசிக் அகாடமி அரங்கத்தில் அரங்கேறுகிறது. இந்த நாடகம் மாநிலத்திலுள்ள முக்கிய நகரங்களில் மட்டுமல்லாமல், பல சிற்றூர்களிலும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

வரவேற்புரை ஆற்றிய திரு ஜி. வெங்கடேஸ்வரன் அவர்கள், என்னைச் சந்தித்தபொழுது நிகழ்ந்த உரையாடலை, இங்கே குறிப்பிட்டுப் பேசினார். அதை மேலும் நான் இங்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அரசின் திரைப்படம் என்பதற்காக நடிக-நடிகையருக்கும், தொழில் நுட்பக் கலைஞர்களுக்கும் கொடுக்க வேண்டிய தொகையை ஒருபோதும்



**• மனிதன் கீழ்மை நிலையிலிருந்து மேம்பாடடைய வேண்டுமானால் தன்னம்பிக்கை உடையவனாகவும் தனது சக்தி என்ன என்பதை உணர்ந்தவனாகவும் இருக்க வேண்டும்.**

குறைக்கக்கூடாது என்று, திரு ஜி.வி. அவர்களிடம் நான் கண்டிப்பாகத் தெரிவித்தேன். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று, வழக்கமாக வியாபார ரீதியில் எடுக்கப்படும் படம் போலவே இந்த அரசின் படத்தையும் எடுத்து, இதர தனியார் தயாரிப்பாளர்களுடன் போட்டியிட்டு, இதனை வெளியிட்டு, வெற்றி கண்டால் தான், இது ஒரு நல்ல திரைப்படம் என்று மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, விரும்பி வந்து இதனைப் பார்ப்பார்கள்;

நாம் இந்தத் திரைப்படத்தில் கூறவுள்ள கருத்துக்களைக் கவனித்துக் கேட்டு உணர்வார்கள், பயன்பெறுவார்கள். ஒரு திரைப்படத்தின் வெற்றியே, அதனைப் பெருந்திரளாக மக்கள் வந்து காண்பதில் தான் உள்ளது. எனவே, இந்த அரசின் திரைப்படத்தையும், மக்கள் திரளாக வந்து காண வேண்டும், பயன்பெற வேண்டும் என்றால், அவர்கள் எதிர்பார்க்கும் வகையில், அதனை ஜனரஞ்சகமான முறையில் தயாரிக்க வேண்டும் என்பதனால் தான், தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக, அரசே வியாபார ரீதியில் ஒரு முழு நீளத் திரைப்படத்தை 85 இலட்சம் ரூபாய் செலவில் தயாரிக்க முன் வந்துள்ளது. வியாபார ரீதியில் தயாரிக்கப்படும் இந்தப் படத்திற்கு, எந்தவிதச் சிறப்புச் சலுகைகளையும் எவரிடமிருந்தும் எதிர்பார்ப்பது முறையல்ல.

இரண்டாவது, தமிழகத் திரை உலகில் உள்ள கலைஞர்கள் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்கள், தங்களின் உழைப்பிற்குப் பெறும் ஊதியத்தை அரசிற்காகக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமல்ல. ஏதோ இலவசமாக அல்லது குறைந்த ஊதியத்திற்குத் தானே இந்தத் திரைப்படத்தில் நடிக்கின்றோம், அல்லது பணி ஆற்றுகின்றோம் என்ற எண்ணம், எவர் மனதிலும் ஏற்படக் கூடாது. அவ்வாறு ஏற்பட்டால், அது திரைப்படத்தின் தரத்தைக் குறைத்துவிடும் என்பதை, நான் நன்கு அறிந்திருப்பதால் தான், இதில் பங்கு பெறும் கலைஞர்கள் அனைவரும் மன நிறைவோடு பணியாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் தான் ஒவ்வொருவருக்கும் தற்போது திரை உலகில் கிடைக்கும் ஊதியத்தை, இந்தத் திரைப்படத்திற்கும் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்தேன்

இன்றைய தமிழ்த் திரைப்பட உலகில் முன்னணித் தயாரிப்பாளராகத் திகழும் திரு ஜி.வி. அவர்களும், முன்னணி இயக்குநர் திரு விசு அவர்களும், முன்னணி இசையமைப்பாளரான திரு இளையராஜா அவர்களும் இணைந்து, ஒரு தலைசிறந்த வெற்றிப் படத்தைத் தயாரித்து, நிச்சயமாக அரசிற்குத் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இந்தத் திரைப்படத் தயாரிப்பைப் பற்றிச் சில குடும்பத் தலைவிகளிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் 'படத்தை யார் direct செய்யப் போகிறார்கள்' என்று கேட்டார்கள். 'திரு விசு தான்' என்று சொன்னேன். உடனே அவர்கள் 'விசுவா! அப்படியானால் படம் நிச்சயமாக நன்றாக இருக்கும்' என்றார்கள்.

எனவே, இந்தப் படம் சிறப்பாக அமையும் என்பதில் எனக்கு எவ்வித ஐயமும் இல்லை.

இந்தத் திரைப்படத்தை விரைவில் எடுத்து முடித்து, வருகின்ற அக்டோபர் திங்கள் இரண்டாம் நாள் வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. அரசின் முதல் முயற்சியான இந்தத் திரைப்படம் தயாரிக்கும் திட்டத்தை, நமது நாட்டில், மதுவிலக்குக் கொள்கைக்கு முதல் வித்திட்ட அண்ணல் காந்தி அவர்களுக்கு அர்ப்பணிக்கும் வகையில், அவரது பிறந்த நாள் அன்றே, 2.10.1992 அன்றே, வெளியிடப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திரைப்படம் ஒரு முழு வெற்றிப் படமாக அமைய வேண்டும். தமிழக மக்கள் பெரிதும் விரும்பிப் பார்த்துப் பயனடையும் வண்ணம் அது அமைய வேண்டும் என்ற என் எண்ணத்தைத் தெரிவித்து, இந்த என் நல்லெண்ணம் ஈடேற, இதில் பங்குகொள்ளும் அனைத்துத் திரை உலகச் சகோதரர்களும், சகோதரிகளும், ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ●

# குங்குமப்பூ

**ப**ழங்காலம் தொட்டே பயன்படுத்தப் பட்டு வந்துள்ள வாசனைப் பொருட்களுள் குங்குமப்பூவும் ஒன்றாகும்.

கிறித்துவ பாரம்பரியத்தில் வரும் சாலமன், தனது பாடல் ஒன்றில் இனிய மணமிக்க தாவரங்களுள் ஒன்றாக குங்குமப் பூவையும் குறிப்பிடுகிறார். கிரேக்கத்திலும், ரோமானியப் பேரரசிலும் குங்குமப்பூ வாசனைப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ரோமில், வரவேற்பு அறைகள், நீதிமன்றங்கள், கேளிக்கை அரங்கங்கள், குளியல் அறைகளில்கூட குங்குமப்பூ வாசனையூட்டும் பொருளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ரோம் மன்னன் நீரோ, நகருக்குள் நுழையும்போது அவன் நடந்துவந்த பாதையெங்கும் குங்குமப்பூ தூவி வரவேற்பளிக்கப்பட்டதாம்!

கிரேக்கர்கள் காலத்தில் குங்குமப்பூ நிறமானது அரசு பரம்பரையினரைக் குறிக்கும் வண்ணமாகக் கருதப்பட்டதாம். ரோமப் பேரரசிலும் கூட குங்குமப்பூ நிற மூட்டும் பொருளாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. பின்னர் குங்குமப்பூ, சமையலறையிலும் ஆட்சி செலுத்தத் தொடங்கி விட்டது. இதன் இனிய மணத்திற்காக உணவுப் பொருட்கள் பலவற்றில் பயன்படுத்தும் வழக்கம் அப்போதே தொடங்கி விட்டதாம்!

உலகம் முழுவதையும் தன் ஆளுகைக்குள் கொண்டுவரத் துடித்துப் போரிட்டு வந்த அலெக்ஸாண்டர், காஷ்மீர் பள்ளத்தாக்கைப் பார்த்ததும், தனது தாயகம் திரும்பும் எண்ணத்தையே மறந்து விட்டாராம். காரணம்? அங்கு பூத்துக் குலுங்கும் குங்குமப்பூக்கள் தான்! அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்ட குங்குமப் பூக்களைப் பிரியமனமின்றி அவர் பிரிந்து சென்ற நிகழ்ச்சி இன்றளவும் சரித்திரம் கூறிவரும் உண்மை!

பழங்கால இந்தியர்கள், குங்குமப் பூவின் சூலகத் தண்டிலிருந்து மஞ்சள் நிறச் சாயம் எடுத்து அவற்றை ஆடைகளில் கறையேற்றி உடுத்தி வந்தார்களாம். கிரேக்கத்திலும், அயர்லாந்திலும் உள்ள உயர் குடும்பத்தினர் இதே போன்ற செயல்பாட்டினைச் செய்து வந்திருக்கிறார்கள்.

புத்தபிரானின் காலத்திற்குப் பின்னர் அவருடைய கொள்கைகளை விளக்க குங்குமப்பூ வண்ணம் பயன்படுத்தப் பட்டது. இதன் அடிப்படையிலேயே புத்தத் துறவிகள் தற்போதும் குங்குமப்பூ வண்ண ஆடை அணிந்து வருகிறார்கள்.

குங்குமப்பூ பல்வேறு மொழிகளில் குரோகஸ், கார்காஸ், கேசார், கார்குமா, சாபர், சாபரான் என்றெல்லாம் அழைக்கப்பட்டு வருகிறது. சிசிலியா நாடே, குங்குமப்பூவின் தாயகமாகக் கருதப்படுகிறது. லெவான், கோரிகஸ் ஆகிய சிசிலியா நாட்டின் பகுதிகளில் மிக ஆரம்ப காலத்தில் குங்குமப்பூ வளர்ந்ததற்கான குறிப்புகள் காணப்படுகின்றன. ஒரு காலத்தில் பெர்சியா, ஆசியாமைனர் போன்ற இடங்களிலும், குங்குமப்பூ மிகுதியான அளவில் விளைந்திருக்கின்றன.

பத்தாம் நூற்றாண்டில் தர்பரா, இஸ்பேஹான் பகுதிகளில் குங்குமப்பூ மகசூல் நடைபெற்றிருக்கிறது. அதன் பின்னர் கி.பி. 961-ஆம் ஆண்டு, அரேபியா, ஸ்பெயின் போன்ற நாடுகளில் குங்குமப்பூ விளைச்சல் தொடங்கப்பட்டது. அதன் பின்னர் கிழக்கிலிருந்து மேற்காக குங்குமப்பூ பயிரிடும் வழக்கம் பரவியிருக்கிறது. இங்கிலாந்தில் தற்போது வழங்கப்படும் 'சாபரான் வால்டன்' எனும் இடம், இங்கு குங்குமப்பூ அதிக அளவில் விளைந்ததாலேயே இப்பெயர் பெற்றுள்ளது.

இன்று, ஸ்பெயின், பிரான்ஸ், சிசிலி, இத்தாலி, ஈரான் ஆகிய நாடுகள் குங்குமப்பூவை அதிக அளவில் விளைவிக்கின்றன. இந்தியாவில் காஷ்மீரில் மட்டுமே-அங்கேயும் பாம்பூர், கிஷ்ட்வார் பகுதிகளில் மட்டுமே குங்குமப்பூ விளைவிக்கப்படுகிறது. பாலஸ்தீன், பெர்சியா ஆகிய நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் மூலம், குங்குமப்பூ காஷ்மீர் பகுதிகளில் பயிரிடப்பட்டிருக்கிறது.

ஒரு கிலோ குங்குமப் பூவைத் தயாரிக்க 1,66,000 மலர்ந்த பூக்கள் (அதாவது சூல்முடிகள்) பயன்படுத்தப்படுவதாகக் கணக்கெடுத்துள்ளனர். மேலும் 5,000 கிலே உலராத சூல் முடியிலிருந்து 1,000 கிலோ மட்டுமே உலர்ந்த சூல்முடி கிடைப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

உணவுப் பொருட்களுக்கு நிற மூட்டவும் இப்பூ பயன்படுகிறது. இப்பூவின் ஒரு பங்கினையும் ஒரு இலட்சம் பங்கு நீரையும் கலந்தால் தனித்துவமான மஞ்சள் நிறம் கிடைக்கும். அரிசி மற்றும் மீன்வகை உணவுப் பொருட்களை நிறமூட்ட குங்குமப்பூ பயன்படுத்தப்படுகிறது. ஆடைகளுக்கு மஞ்சள் நிறமூட்டவும், குங்குமப் பூவைப் பயன்படுத்தலாம். ஆனால் ஏனைய சாயங்கள் மலிவான விலைக்குக் கிடைப்பதால் குங்குமப்பூ இதற்காகப் பயன்படுத்தப்படுவதில்லை.

**—நன்றி: திட்டம்**

# 8-வது ஐந்தாண்டுத் திட்டம்

## தமிழகத்துக்கு ரூ.10,200 கோடி ஒதுக்கீடு

தமிழ்நாட்டின் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் குறித்து மத்தியத் திட்டக்குழுத் துணைத் தலைவர் திரு பிரணாப் முகர்ஜியுடன், மாண்புமிகு முதல்வர் அவர்கள் 18.4.92 அன்று சென்னையில் தலைமைச் செயலகத்தில் விரிவான விவாதம் நடத்தினார். முதலமைச்சருக்குத் துணையாக மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன், தலைமைச் செயலாளர் திரு. டி.வி.வெங்கட்ராமன், இ.ஆ.ப. திட்டம் மற்றும் வளர்ச்சித்துறைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்-செயலாளர் ஆகியோர் இருந்தனர்.

சுமார் ஒரு மணி நேரம் நடந்த இந்தக் கூட்டத்தில் தமிழ்நாட்டின் 8-வது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய அனைத்து விஷயங்களும் விவாதிக்கப்பட்டன. தமிழ்நாடு எதிர்நோக்கியுள்ள விசேஷப் பிரச்சினைகளை எடுத்துக்கூறி, மாநிலத்தின் திட்டமிட்ட வளர்ச்சியை வேகப்படுத்தத் தேவையான அதிக அளவு நிதி ஒதுக்கீட்டை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வற்புறுத்தினார். விவசாயம் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்கான வளர்ச்சிக்கு உயர்ந்த முன்னுரிமை வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துரைத்தார். அதிக உற்பத்தித் திறன் மூலமாக உயர்ந்த வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில் தொழில் நுட்ப வளர்ச்சி மற்றும் சிறந்த நீர் நிர்வாகத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

விரைவான தொழில் வளர்ச்சிக்கு மாநிலத்தின் 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிக இடம் வழங்கப்படும். இதை அடைய அடிப்படை வசதிகளில் குறிப்பாக மின்சாரத்துக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். இப்போது நடைபெறும் மின் திட்டங்கள் தவிர, 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் 1,500 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் ஒருங்கிணைந்த லிக்னைட் சுரங்கம் மற்றும் மின்சார உற்பத்தி திட்டத்தைத் தொடங்க தமிழக அரசு கொண்டுள்ள ஆர்வத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்தினார்.

புதிய மின் திட்டங்களுக்கு தேவையான மத்திய முதலீட்டை, குறிப்பாக நெய்வேலி முதல் சுரங்க விரிவாக்கம், 3-வது சுரங்கம் வெட்டுதல் மற்றும் கூடாங்குளம் அணுமின்சார நிலையத்தின் தேவையைப் பற்றியும் முதல்வர் அவர்கள் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தினார்.

மனிதவள மேம்பாட்டுக்குக் குறிப்பாக கல்வி, மக்கள் நல்வாழ்வு, ஏழைகளுக்கான முழுப்பாதுகாப்பு ஆகியவற்றுக்கு 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். கிருஷ்ணா குடிநீர்த்திட்டத்தைக் குறிப்பிட்டு சென்னைக்குக் குடிநீர் விநியோகம் செய்யும் அது தொடர்பான திட்டங்களுக்கு மத்திய உதவி வேண்டும் என்றும் முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாட்டின் 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயம், தொழில், மனிதவள மேம்பாட்டுக்கு அளிக்கப்பட்டுள்ள விசேஷ ஊக்கத்தை மத்தியத் திட்டக் குழுவின் துணைத்தலைவர் பாராட்டினார். தமிழ்நாட்டின் நிதிநிலையைப் புதுப்பிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை வரவேற்ற அவர், நிதி நிலையைப் புதுப்பிக்க அடைந்த வெற்றிக்காகவும், 1991-'92-ஆம் ஆண்டுத் திட்டத்தை வெற்றிகரமாக முடித்ததற்காகவும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான தமிழ்நாட்டை, பாராட்டினார்.

தமிழகம் மிகப்பெரிய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில், போதுமான மத்திய உதவி மற்றும் கடன் பெறுவதில் பங்கு ஆகியவற்றின் மூலமாகத்தான் திருப்திகரமான 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று முதல்வர் அவர்கள் வலியுறுத்தினார். தமிழ்நாட்டின் விசேஷப் பிரச்சினைகளை கருத்தில் கொண்டு, கூடுதலாக மத்திய உதவித்தேவையை முதல்வர் அவர்கள் வற்புறுத்தினார்.

**ரூ.10,200 கோடி ஒதுக்கீடு:**

அலுவலர்கள் மட்டத்தில் பேசியதையும், முதல்வர் அவர்கள் விடுத்த சிறப்பு கோரிக்கையையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டின் 8-வது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடாக ரூ.10,200 கோடி என்று நிர்ணயம் செய்ய முடிவு செய்யப்பட்டது. இது 7-வது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டுத் தொகையான ரூ.5,750 கோடியைவிட 77 சதவிகிதம் அதிகமாகும்.






# செய்யும் தொழில் அனைத்திலும் நெய்யும் தொழில் நிகரற்றது!

### மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உரை

மிகுந்த எழுச்சியோடும், சிறப்போடும் கொண்டாடப்படும், 38-வது கைத்தறி விழாவைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பினைப் பெற்றமைக்காக, நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இதற்கு முன்பு ஒரு முறை, சரியாகப் பத்து ஆண்டுகளுக்கு முன், 1982- இல், நான் இதே விழாவில் உரையாற்றியதைப் பெருமிதத்தோடு நினைவுகூர்கிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் 28-வது கைத்தறிக் கண்காட்சியைத் தொடங்கி வைத்தபோது நானும் அந்த விழாவில் கலந்து கொண்டேன். அப்போது நான் அரசியலுக்கு வரவில்லை. அ.இ.அ.தி.மு.க. உறுப்பினராகவும் இல்லை. பொது வாழ்விலும் ஈடுபடவில்லை. அப்படி இருந்த என்னைத் திடீரெனப் புரட்சித் தலைவர் கைத்தறி விழாவில் பேசுமாறு உத்தரவிட்டார். நானும் பேசினேன். எதற்காக அவர் என்னைப் பேசச் சொன்னார் என்று பின்னர்தான் தெரிய வந்தது. என்னை அரசியலுக்குக் கொண்டு வரத் திட்டமிட்டிருக்கிறார் என்று.

திரைப்பட விழாக்கள் சிலவற்றில் கலந்து கொண்டு ஆங்கிலத்தில் பேசியிருக்கிறேன். பொதுகூட்ட மேடையில் பேசியது கிடையாது. முதன் முதலில் கைத்தறி விழா மேடையில்தான் பெரிய உரை ஆற்றினேன். இதைப் புரட்சித் தலைவர் எனக்குத் தெரியாமல் 'டேப் ரிக்கார்டரில் பதிவு செய்து தனியாகப் போட்டுக் கேட்டிருக்கிறார். அதன்பிறகுதான் என்னைக் கட்சியில் சேர்த்தார் என்று எனக்குப் பின்பு தெரியவந்தது. அன்று ஆலோசனை வழங்குகிற நிலையில் இருந்த என்னை, இன்று தமிழகத்தின் அரசாங்கத்தைத் தலைமையேற்று நடத்துகிற அளவிற்கு, உயர்த்திய தமிழகப் பெருங்குடி மக்களுக்கு, என் நன்றியறிதலையும் இந்த நேரத்தில் தெரிவிக்க கடமைப் பட்டுள்ளேன்.

இந்தியாவில் வேறெங்கும் இல்லாத அளவிற்கு, நெசவுத் தொழில் சிறப்புற்று, செழித்தோங்கி வளர்வது நம் தமிழ்நாட்டில்தான், என்கிற உண்மை வெளிப்படும்போது, மக்கள் மானம் காப்பதில், தமிழகம் முன்னணியில் நிற்கிறது என்பதை நினைத்துப் பார்க்கும்போது, எனக்குத் தனித்த பெருமிதம் ஏற்படுகிறது. நம்முடைய பெருமிதமும், பெருமையும் நிலையானதாகும், நியாயமானதும் ஆகும். செய்யுந் தொழில்கள் அனைத்திலும், நெய்யுத் தொழில் நிகரற்றது என்பதால், அப்பணியில் ஈடுபட்டுள்ள நெசவாளர் உடன் பிறப்புகளை நாம் அதிகமாகப் பெற்றிருப்பது, நமக்கு இரட்டிப்புப் பெருமையாகும். இப்பெருமை, மேலும் காக்கப்பட வேண்டுமானால், நவீன காலத்திற்கேற்ப சில அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். கைத்தறித் தொழில் பழமை மிக்கதாக இருக்கலாம். ஆனால், புது யுகத்தின் தேவைகளையும், வளர்ந்து வரும் மக்களின் விருப்பத்தையும், இந்தத் தொழில் நிறைவு செய்கின்ற வகையில், தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும், உயர்த்திக்கொள்ள வேண்டும். கைத்தறித் தொழிலுக்கு அந்தச் சக்தி அதிகமாகவே உண்டு என்பதை நாம் அறிவோம்.

காலங்காலமாக எத்தனையோ தொழில்கள் தோன்றி மறைந்திருக்கின்றன. ஆனால் கைத்தறித் தொழில் மட்டுமே, கால வேகத்திற்கும், மாற்றத்திற்கும் ஈடு கொடுத்து, இன்றும் மக்கள் மத்தியில், தனக்கென ஒரு நிலையான இடத்தைப்பெற்றுத்திகழ்கின்றது என்றால், அதற்கு இத்தொழில் எந்திர கதியில் இயங்காமல், மனித உயிர்த் துடிப்போடு இயங்குவது தான் காரணம். எனவே, இத்தொழில் என்றென்றும் நிலைத்திருக்கும் என்பதை உறுதிபடக் கூறுகிறேன்.

தமிழ்நாட்டில், கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கு

வதில், வேளாண்மைக்கு அடுத்தபடியாக, கைத்தறித் தொழில் தான் மிகச் சிறப்பான பங்கு வகிக்கிறது.

தமிழகத்திலுள்ள சுமார் 4.27 இலட்சம் கைத்தறிகளில், இன்றைய புள்ளி விவரப்படி, சுமார் 3.27 இலட்சம் கைத்தறிகள், கூட்டுறவின் கீழ் கொண்டு வரப்பட்டு, கூடித் தொழில் செய்வதன் மேன்மையை, உலகிற்குப் பறைசாற்றிக் கொண்டு இருக்கின்றன. இந்தத் தறிகள் அனைத்தும், தமிழகத்திலுள்ள சுமார் 1,473 கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக, சிறப்பாகச் செயல்படுகின்றன. இதனை எண்ணும்பொழுது, கூடித் தொழில் செய்யும் கூட்டுறவுத் தத்துவத்தின் மகத்தான மேன்மையை, நாம் உணர முடிகிறது.



தனித் தனியாகச் சிதறிக் கிடந்த நெசவாளர்களை, கூட்டுறவின் கீழ் கொண்டு வந்து செயல்பட வைக்கின்ற பணியினை, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், கோ-ஆப்டெக்ஸ் ஏற்று, நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது என்பது, பாராட்டுதலுக்குரியது ஆகும். நெசவாளர்களுக்குத் தேவையான மூலப் பொருளைத் தங்கு தடையின்றி வழங்கி, அவர்களது உற்பத்திப் பொருள்களை உடனுக்குடன் கொள்முதல் செய்து, நாடெங்கும் அமைந்துள்ள தனது 457 விற்பனைக் கூடங்களின் மூலம், கோ-ஆப்டெக்ஸ் விற்பனை செய்து உதவி வருகிறது.

நெசவாளர்களின் நலனைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வரும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், கடந்த 37 ஆண்டுகளாக இந்தக் கைத்தறி விழாவினை, சிறப்புடன் கொண்டாடி வருகிறது. இக்கைத்தறி விழாவிற்குப் பொதுமக்கள் எத்தகைய ஆதரவை அளித்து வந்துள்ளார்கள் என்பதை, ஆண்டுக்காண்டு உயர்ந்து வரும் விற்பனையின் மூலமே, நாம் அறிந்து கொள்ளலாம்.

'நூல் என்றாலே சிக்கல் இருக்கும்' என்றார், காலமெல்லாம் கைத்தறியாளரையும், கைத்தறியையும் போற்றிக் காத்த பேரறிஞர் அண்ணா அவர்கள்.. நெசவாளர் வாழ்விலே என்றும் சிக்கல் இல்லாமல், சிரமம் இல்லாமல், சங்கடம் இல்லாமல் இருக்க வேண்டுமென்ற சீரிய அடிப்படையில் தான், அவர் வழிவந்த நாங்கள், இன்று அரிய பல திட்டங்களை அவர்களுக்காகத் தீட்டி, செயல்படுத்தி வருகின்றோம்.

தமிழகத்திலுள்ள 37,500 கைத்தறிகளை, 75,000 விசைத்தறிகளாக மாற்றும் ஒரு நவீன திட்டத்தினைத் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன், எதிர் வரும் 10 ஆண்டுகளில் செயல்படுத்த உள்ளோம். மேலும், வரும் ஐந்தாண்டுகளில், 42.31கோடி ரூபாய் செலவில், 50,000 கைத்தறிகளை, தற்காலத் தேவைக்கேற்றவாறு, துணி வகைகளை உற்பத்தி செய்யும் வண்ணம், நவீனப்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

வாழ்நாள் முழுவதும் வறுமையில் வாடும் நெசவாளர் இறப்பின், அவரது குடும்பம் ஆதரவின்றி அல்லல்படும் நிலையைப் போக்க, தாயுள்ளம் கொண்ட எங்கள் அரசு, இந்தியாவிலேயே முதன் முறையாக நெசவாளர் ஒருவர் இறந்துவிட்டால், அவரது குடும்பத்திற்கு, 10 ஆண்டுகளுக்கு, மாதந்தோறும் 250 ரூபாய் நிதி உதவி, ஓய்வூதியமாக வழங்கும் ஒரு புரட்சிகரமான பாதுகாப்புத் திட்டத்தினை, அறிமுகப் படுத்தியுள்ளோம். மேலும் இறந்துவிட்ட நெசவாளரின் குடும்பத்திற்கு, இதுவரை வழங்கப்பட்டு வந்த கருணைத் தொகையான, 12,000 ரூபாயை உயர்த்தி, 17,000 ரூபாயாக வழங்க ஆணையிட்டுள்ளோம்.



வாழ்வதற்கும், தொழில் செய்வதற்கும், போதிய இடவசதியற்ற வீடுகளில் வாழும் நெசவாளர்கள் பயன் பெறுகின்ற வகையில், அவர்களுக்கு இவ்வாண்டு தறிக் கூடத்துடன் கூடிய 2,000 வீடுகள், ஒவ்வொன்றும் 25,000 ரூபாய் மதிப்பீட்டில் கட்டித்தர ஆணையிட்டுள்ளோம். இவைகளுக்கெல்லாம் மேலாக, பெண்களின் முன்னேற்றத்தில் பெரிதும் கவனம் செலுத்தும் எங்கள் அரசு, பலநூறு பெண்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு கிடைக்கின்ற வகையில், முற்றிலும் பெண்களுக்கெனவே, தனியாக ஒரு கூட்டுறவு நூற்பாலையினை, இவ்வாண்டில், பருகூரில் நிறுவ முடிவு செய்து உள்ளது. இதற்கான ஆரம்பகட்ட வேலைகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன.

நெசவாளர்கள் அதிகமாக வாழ்கின்ற செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள, 'விளாகம்' என்னும் கிராமத்தை அரசு தேர்ந்தெடுத்து, அக்கிராமத்திற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கும் ஒரு முன்னோடித் திட்டத்தை, இந்த ஆண்டு அறிமுகப் படுத்தி உள்ளோம். இந்தியாவிலேயே நம் மாநிலத்தில் தான் முதன் முறையாக, 25 இலட்சம் ரூபாய் செலவிலான இத்திட்டம், செயல்படுத்தப் படவுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவைகளுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல், தமிழகம் முழுவதுமுள்ள ஏழை நெசவாளர்கள், ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலை வாய்ப்பு பெறும் வகையிலான திட்டத்தையும், அதே நேரத்தில் ஏழ்மையில் உழலும் மக்களுக்கு, புத்தாடை வழங்குகிற புனிதத் திட்டத்தையும், ஒருங்கிணைந்து நிறைவேற்றும் முகத்தான், 42 கோடி ரூபாய் செலவில், ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள், மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை எளிய மக்களுக்கு, இலவச சேலை - வேட்டி வழங்கும் திட்டத்தை, சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தி செயல்படுத்தினோம். இத்திட்டத்தை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்துவோம் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டம் இந்த ஆண்டு, முழுமையாக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலமாகச் செயல்படுத்தப்படும்.

இப்படி ஏழை எளிய மக்கள் எந்தப் பிரிவினராக இருந்தாலும், அவர்களது வாழ்வுக்கு ஊன்றுகோலாக, அவர்களது பளுவைச் சுமக்கிற சுமைதாங்கியாகத்தான், எங்கள் அரசு செயல்பட்டு வருகிறது. தொடர்ந்து அவ்வாறே செயல்படுவோம். நம் மாநிலத்தில் வாழும் கைத்தறி நெசவாளர்களின் நலனைப் பேணிக் காப்பதில், அவர்களுக்கு உதவுவதில், நாங்கள் எப்போதும் பின்வாங்கமாட்டோம் என்பதை, இந்த நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

'பட்டினில் ஆடையும்
பஞ்சில் உடையும் பண்ணி
மலைகளென வீதி குவிப்போம்'

— என்றார் மகாகவி பாரதியார்.

'ஆடையிற் சிறந்தது கைத்தறி ஆடை
- மக்கள்
அனைவர்க்கும் நல்லது அந்தத்
தேனோடை
ஓடையில் தேனை அள்ளி உண்ண
வாரீர் - அள்ளி
உண்டு கைத்தறிக்கு உதவி பண்ண
வாரீர்.

என்று புகழ்ந்து பாடினார் பாவேந்தர் பாரதிதாசன்.

புதுமைக் கவியும், புரட்சிக் கவியும், பாடி மகிழ்ந்து போற்றிய இந்நெய்யுந் தொழிலை நம்பி, தங்கள் வாழ்க்கையைத் தொடரும் நெசவாளர்களின் வாழ்வில், ஒளி விளக்கை ஏற்றி வைக்க, ஒரு போதும் எங்கள் அரசு தயங்காது. தமிழக நெசவாளர்களின் வாழ்வு வளம் பெற, அனைத்து உதவிகளையும் எங்கள் அரசு தொடர்ந்து செய்யும் என்று கூறுகிறேன். ●

## தமிழகத்தில் தேயிலைச் சாகுபடி

தமிழ்நாடு தேயிலை வளர்ச்சிக் கழகத்தின் தேயிலைச் சாகுபடி திட்டமொன்றுக்குத் தேயிலை வாரியம் அனுமதி அளித்துள்ளது. இதன்படி 1996-97-ஆம் ஆண்டு வரை கூடுதலாக 3000 எக்டேர் பரப்பளவில் தேயிலைச் சாகுபடி செய்யப்படும். இதில் ஆனைமலையில் 2370 எக்டேரிலும், மீதமுள்ளவை நீலகிரிப் பகுதியிலும் தேயிலைச் சாகுபடி செய்யப்படும். 1500 எக்டேரில் தேயிலைச் சாகுபடிச் செய்வதற்கு நிதி உதவி அளிக்கத் தேயிலை வாரியம் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது.

இத்திட்டத்திற்கெனத் தேயிலை வாரியம் ஆறு கோடி ரூபாய் கடனாகவும், ரூ.3.75 கோடியை மானியமாகவும் 1997-98-ஆம் ஆண்டு வரை வழங்கும். இதில் முதல் தவணையாக ரூ.40 இலட்சம் இந்த ஆண்டில் வழங்கப்படுகிறது.



## ‘நீலகிரி மாவட்டத்தில் ஆட்சிமொழிக் கருத்தரங்கம்’

நீலகிரி மாவட்ட ஆட்சி மொழிக் கருத்தரங்கம், உதகமண்டலம் அரசு கலைக்கல்லூரி வளாகத்தில், அக் கல்லூரி முதல்வர் டாக்டர் செல்வி வே.அ. வசந்தா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் டாக்டர் த. பெரியாண்டவன் அவர்கள் திட்ட விளக்கவுரையாற்றினார். அப்போது அவர், இம்மாவட்டத்தில் தமிழ் ஆய்வு அலுவலகம் கடந்த 8 மாதங்களாகச் செயல்பட்டு வருகின்றது என்றும், இம்மாவட்டத்தில் 303 அரசு அலுவலகங்கள் உள்ளன. இதுவரை 280 அலுவலகங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் சில தகவல்களைக் குறிப்பிட்டார்:

ஆட்சியாளர்களுக்கும், பாமர மக்களுக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்த ஆட்சி மொழிச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது.’

‘தமிழ் வளர்ச்சிக்காக, தமிழ்ச் சொற்களைத் திரட்டி ஆட்சிச்சொல் அகராதி இதுவரையில் 4 பதிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. சிறப்புச் சொல் அகராதியும் வெளியிடப்பட்டுள்ளது. அரசு அலுவலகங்களில் கோப்புக்களைத் தமிழில் எழுதுபவர்களுக்குப் பரிசும் வழங்கப்படுகிறது. வறுமையில் வாழும் தமிழ் அறிஞர்கள் மற்றும் அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்படுகிறது. அரசு அலுவலர்கள் தமிழில் கையெழுத்திட ஆணை ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. வாணிப அங்காடிகளில் தமிழில் பெயர்ப் பலகை வைக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், தலைமை அலுவலகங்களில் 75 விழுக்காடு தமிழில் தட்டச்சு செய்ய வேண்டும். 25 விழுக்காடு தான் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்ய வேண்டும். சார்பு அலுவலகங்களில் அனைத்தும் தமிழில்தான் தட்டச்சு செய்ய வேண்டும் என்ற ஆணை இருக்கிறது. இவ்வாண்டு மாநிலத்திலுள்ள கல்லூரிகளில் உள்ள தமிழ் மன்றங்களுக்கு விழாக் காலங்களில் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்குப் பரிசுகள் வழங்க ரூ.75 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.’

இக்கருத்தரங்கில் உதகை அரசு கலைக்கல்லூரி முதல்வர் டாக்டர் செல்வி வே.அ. வசந்தா, தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் முப்பால் மணி, கணிதத்துறைப் பேராசிரியர் திரு ஆரோக்கியசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கல்லூரிப் பேராசிரியர்கள், அரசு அலுவலர்கள், மாணவ-மாணவியர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

நீலகிரி மாவட்டத் தமிழ் ஆய்வு அலுவலர் டாக்டர் மு. இராஜேந்திரன் அனைவரையும் வரவேற்றார். நீலகிரி மாவட்ட அருங்காட்சியகக் காப்பாளர் திரு இட்சுமண நாராயணன் நன்றி கூறினார்.

மூ.நா. கிருஷ்ணசாமி
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
நீலகிரி மாவட்டம்

### நிலக்கரி

கடந்த நிதியாண்டில் (1991-92) 229.29 மில்லியன் டன் நிலக்கரி நாட்டில் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 228 மில்லியன் டன்களை விட சற்றே அதிகமாகும்.

நடப்பு நிதியாண்டில் 237.09 மில்லியன் டன் நிலக்கரி உற்பத்தி செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது என மத்திய நிலக்கரித் துறையின் 1991-92-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை தெரிவிக்கிறது. மின் நிலையங்களுக்கு அனுப்பப்படும் நிலக்கரியின் அளவு 118.77 மில்லியன் டன்னிலிருந்து (1990-91) 136.88 மில்லியன் டன்னாக (1991-92) உயர்ந்துள்ளது. இது 15.2 சதவிகித வளர்ச்சியாகும்.

இந்தியாவிலிருந்து பெருமளவிற்கு நிலக்கரி ஏற்றுமதி ஆவதில்லை; எனினும், அண்டை நாடுகளான நேபாளம், பூடான், வங்காளதேசம் ஆகியவற்றிற்கு சுமார் ஒரு மில்லியன் டன் அளவில் நிலக்கரி ஏற்றுமதி ஆகியுள்ளது.

### ஒலிம்பிக்

வரும் ஜூலை 25 முதல் ஆகஸ்ட் 9 வரை பார்சிலோனாவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் 12 பிரிவுகளில் கலந்துகொள்ள இந்தியாவிலிருந்து 50 விளையாட்டு வீரர்கள் அடங்கிய குழு செல்ல இருக்கிறது. எனினும் இவர்கள் பங்கேற்பது, சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தரக் கட்டுப்பாட்டில் தேறுவதைப் பொறுத்ததாகும். ஹாக்கி, ஜூடோ, மல்யுத்தம், குத்துச் சண்டை, எடை தூக்குதல், வில் வித்தை, டேபிள் டென்னிஸ், பாட்மின்டன், டென்னிஸ், துப்பாக்கி சுடுதல், தடகளப் போட்டிகள், படகுப் பந்தயம் ஆகிய பிரிவுகளில் இந்திய வீரர்கள் கலந்துகொள்ள உள்ளனர்.

### பயணங்கள் முடிவதில்லை!

1853 ஏப்ரல் 16-ஆம் தேதி தான் முதன் முதலாக போர்பந்தருக்கும் தானேவிற்கும் இடையே இரயில் விடப்பட்டது. இதைக் குறிக்கும் விதமாக, ஆண்டுதோறும் ஏப்ரல் 10 முதல் 16 வரை இந்திய இரயில்வே வாரம் அனுசரிக்கப்படுகிறது.

## இராமேசுவரத்தில் புத்தர் சிலை கண்டுபிடிப்பு



இராமேசுவரம் தீவில் அரியாங்குண்டு என்ற கிராமத்திற்கருகிலுள்ள ‘புங்கடித் திடல்’ என்ற இடத்தில் புத்தர் சிலையொன்று தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்புங்கடித்திடல் இராமேசுவரம் நகரிலிருந்து வடமேற்குத் திசையில் சுமார் 10 கி.மீ. தொலைவிலுள்ளது. இப்புங்கடித்திடல் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் புள்ளியடிச்சாலை அல்லது புள்ளியடித்திடல் என்று அழைக்கப்பட்டுள்ளது.

இராமேசுவரத்தில் இராமபிரான் சிவனை இலிங்க வடிவில் வழிபட்டதாகப் புராணம் கூறுவதன் அடிப்படையில் இவ்வூரின் பெயர் அமைந்துள்ளது.

இராமேசுவரத்தை உள்ளடக்கிய இப்பகுதி மறவர் நாடு, அல்லது சேதுநாடு அல்லது சேதுபதி சீமை என்று பிற்காலத்தில் வழங்கப்பட்டது.

கடற்கரைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இவ்வழகிய புத்தர் சிலையைக் கொண்டு தமிழ்நாட்டின் இப்பகுதியில் புத்த மதம் பரவியிருந்ததை உறுதிப்படுத்த முடிகிறது. பராமக்கிரமபாகு என்ற இலங்கை வேந்தன் இவ்விடத்தில் புத்த விகாரையைப் புதுப்பிக்கத் திரிகோணமலையிலிருந்து தேவையான பொருட்களைக் கொண்டு வந்ததாக அறிய முடிகிறது. இம்மன்னன் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்துள்ளான். எனவே, கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்த புத்த விகாரை இவ்விடத்திலிருந்தமை ஐயத்திற்கிடமின்றிப் புலனாகிறது.

கிழக்காசிய நாடுகளிலிருந்து வந்த வணிகர்கள் கொண்டு வந்த சீனப் பீங்கான் ஓடுகள் பல இங்கு கிடைத்துள்ளமை இதனை உறுதிப்படுத்துகின்றது. இவ்வோடுகள் கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படுகின்றன. இங்கு கிடைக்கக்கூடிய ஓடுகளைக் கொண்டு இங்கிருந்த புத்த விகாரையும் சேதியமும் கீழ்த்திசை நாட்டுப் பக்தர்களைப் பெருமளவில் கவர்ந்துள்ளதாகக் கருதலாம்.

இப்புத்தர் சிலை உடைந்து காணப்பட்டாலும் அதன் கலையழகு அதனை வடித்த சிற்பியின் அரிய திறமையை வெளிப்படுத்துவதாக உள்ளது. மடிப்புகளுடன் கூடிய மேலாடையும், தியான முத்திரையும் இது புத்தர் சிலையே என உறுதிப்படுத்துகின்றன. இதன் காலம் சுமார் கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்.

இவ்விடத்தில் முதுமக்கள் தாழி ஒன்றும் கூம்பு வடிவ ஜாடிகளின் உடைந்த பகுதிகளும் கிடைத்துள்ளன. இப்புத்தர் சிலை, இத்துறையைச் சேர்ந்த இராமேசுவரம் அகழ்வைப்பகக் காப்பாட்சியர் நா.க. கணேசன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நடன. காசிநாதன்
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை

### 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட அரிய கல்வெட்டு கண்டுபிடிப்பு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், ஆரணி வட்டத்தைச் சார்ந்த மரக்கோணம் என்னும் ஊரில் ஆதித்ய சோழன்

காலத்திய கல்வெட்டொன்றைக் கண்டுபிடித்துள்ளது.

இக்கல்வெட்டு மூன்று வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. முதலாவதாக, தொண்டை மண்டலத்தில் இம்மன்னன் காலத்தியக் கல்வெட்டுகள் கிடைத்திருப்பதில் இது மூன்றாம் கல்வெட்டாகும். தொண்டை மண்டலத்தில் இதுவரை இம்மன்னன் காலத்திய கல்வெட்டு திருக்கழுக்குன்றம், தக்கோலம் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. இரண்டாவதாக இக்கல்வெட்டு 'கோவிசைய இராசகேசரி' என்று தொடங்குவது. மூன்றாவதாக

இக்கல்வெட்டின் தொடக்கமான 'கோவிசைய இராசகேசரி' என்ற சொல்லின் மூலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் பல்லவர்களின் ஆட்சி மாறி சோழர்களின் ஆட்சி உருவாகிவிட்டது என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது. 'கோவிசைய' என்ற தொடக்கச் சொல் பெரும்பாலும் பல்லவர்களின் கல்வெட்டுக்களிலேயே பயிலப்படுகிறது. ஆனால் இக்கல்வெட்டில் சோழ மன்னனது பெயரான இராசகேசரிக்கு முன்பாகக் காணப்பெறுவது முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

பல்லவ குலத்து இறுதி மன்னனான அபராஜிதவர்மனைத் தவறில்லை. ஆதித்ய சோழனின் 'தொண்டை நாடு பாவின சோழன்' என்றும், 'கோதண்டராமன்' என்றும் பட்டப் பெயர்கள் பூண்டிருந்தான். இம்மன்னன் தொண்டை மண்டலம் வரை தன் ஆட்சி எல்லையை விரிவாக்கினான். சேர மன்னன் தாணுரவியோடும், கங்க மன்னன் இரண்டாம் பிரித்விபதியோடும் நல்லுறவு கொண்டிருந்தான். காவிரிக் கரையின் இரு மருங்கிலும் எண்தோள் ஈசனுக்கு எண்ணற்ற கோயில்களை எடுப்பித்தவன் என்று புகழப்படுபவன். கி.பி. 871 முதல் 907 முடிய ஆட்சி புரிந்தவன்.



இக்கல்வெட்டு 'உவாஏர்' என்னும் புதுவகையான கொடையைக் குறிப்பதாகும். இக்கொடை பல்குன்றக் கோட்டத்தைச் சேர்ந்த குழைப்பலூர் நாட்டு மரக்குன்றத்தூர் நம்பி அருமுறைக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

இக்கல்வெட்டு மரக்கோணத்தில் திரு கண்ணப்ப முதலியாரின் வயலில் காணப்பெறும் பாறையில் வெட்டப்பட்டுக் காணப்படுகிறது. ஆதித்ய சோழனின் 26-ஆம் ஆட்சியாண்டில் அதாவது கி.பி. 897-இல் எழுதப்பட்டிருக்கிறது. மரக்கோணம் என்னும் இவ்வூரின் பெயர் கல்வெட்டில் மரக்குன்றத்தூர் என்று அழைக்கப்படுகிறது. அப்பெயரின் மருவிய வழக்கே மரக்கோணமாக இருக்கலாம்.

தோற்கடித்துப் பல்லவ சாம்ராஜ்யத்தைக் கைப்பற்றியவன் சோழ மன்னன் ஆதித்யனாவான். சுந்தரசோழனின் அன்பில் செப்பேட்டில் ஆதித்ய சோழன் இராசகேசரியென்றும், விஜயாலயச் சோழனின் மகன் என்றும் கூறப்படுகிறான். திருக்கழுக்குன்றம், தக்கோலம் கல்வெட்டுகளிலும் ஆதித்யன், இராசகேசிரியென்று மட்டுமே அழைக்கப்பட்டுள்ளான். அக்கல்வெட்டுக்கள் 'இராசகேசரி' என்ற சொல்லைக் கொண்டும், எழுத்தமைதியைக் கொண்டும் முதலாம் ஆதித்ய சோழனைச் சார்ந்தவை என்று கருதப்படுகின்றன. ஆதலால் இம்மரக்கோணம் கல்வெட்டும் முதலாம் ஆதித்யச் சோழனைச் சார்ந்தது என்று கருதுவதில்

சோழ மன்னன் ஒருவனது பெயருக்கு முன்பாக 'கோவிசைய' என்ற முன்னொட்டு காணப்படும் கல்வெட்டு இம்மரக்கோணம் கல்வெட்டொன்றேயாகும். இக்கல்வெட்டில் காணப்பெறும் 'உவாஏர்' என்ற தானத்தின் பொருள் அறிய இயலவில்லை. நிலத்தை உழுவதற்கு வழங்கப்பட்ட உரிமையைக் குறிப்பாக இருக்கலாம்.

காவேரிப்பாக்கத்தைச் சேர்ந்த பள்ளி ஆசிரியர் திரு வெங்கடேசன் என்பவர் தந்த தகவலின் அடிப்படையில், இத்துறையின் இயக்குநர் திரு நடன காசிநாதன் ஆணையின் பேரில் மரக்கோணம் சென்று இக்கல்வெட்டைத் திரு இராமமூர்த்தி என்னும் கல்வெட்டாய்வாளர் படியெடுத்து வந்துள்ளார்.●







# தூத்துக்குடி விமான நிலையத் தொடக்க விழா

## மாண்புமிகு முதல்வர் பேருரை

"பாண்டி நாடு முத்துடைத்து" - என்ற பெருமைக்குரிய தென் பாண்டி மண்டலத்தின் - தனிச் சிறப்புமிக்க இத் தூத்துக்குடி நகரில் - மீண்டும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை - நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் நல்லாட்சியை அமைத்த பின்னர், உங்களை எல்லாம் முதன் முறையாகச் சந்திப்பதில், மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். தூத்துக்குடியைத் தலை நகராகப் பெற்ற வ.உ.சி. மாவட்டம், சரித்திரப் புகழ் வாய்ந்தது. வீர பாண்டிய கட்டபொம்மன், சிறையில் செக்கிழுத்த சிதம்பரனார், தன்னுயிரைத் துச்சமென மதித்த விடுதலை வீரன் வாஞ்சிநாதன், நாட்டு விடுதலை தன் பிறப்புரிமை என முழங்கிய மகாகவி பாரதி, என எண்ணற்ற தியாக சீலர்கள் - தியாகிகள் - தீரர்கள் - வல்ல வர்கள் - நல்லவர்கள் தோன்றிய பூமி, இதுவாகும். இந் நகர் இன்று வரலாறு காணாத மாபெரும் விழாக் கோலம் பூண்டிருக்கிறது. கடல் அலை என மக்கள் கூடி உள்ளனர். நாம் கூடியுள்ள திடல், விமான நிலையத் திடலா, அன்று கப்பல்கள் நிற்கும் வங்கக் கடலா என ஐயுறும் வகையில், திரும்பிய திக்கெல்லாம் மக்கள் வெள்ளமாகக் காட்சி தருகிறது.

அதுவும் நல்லிணக்கத்தோடு ஆட்சி புரிந்து வரும் மத்திய அரசும் - மாநில அரசும் இணைந்து நடத்திடும் ஓர் நல்ல நிகழ்ச்சியில் - 'தூத்துக்குடியில் முத்துக் குவியல்' என்ற கூற்றினை மெய்ப்பித்துக் கொண்டிருப்பதுபோல், கொத்துக் கொத்தாய் மனிதக் கூட்டம், இலட்சக் கணக்கில் கூடியுள்ள பாங்கினைக் காணுவதில், உண்மையிலேயே பேருவகை கொள்கிறேன்.

என்னை விடப் பேருவகையினையும், பெருமகிழ்ச்சியினையும் இங்கே கூடியுள்ள நீங்கள் அனைவரும் கொண்டிருக்கிறீர்கள் என்பதை, என்னால் உணர முடிகிறது. காரணம்;

மத்தியில் காங்கிரஸ் ஆட்சி; மாநிலத்தில் எங்கள் சகோதரி ஆட்சி என்ற வைராக்கியத்தோடு, எங்களை அமோகமாக வெற்றி பெறச் செய்திட்ட உங்களுக்கு, இன்று இந்த அரிய காட்சிகளை எல்லாம் காணுகிறபோது, குதூகலமும் - கொண்டாட்டமும் பொங்கி வழிகிற தன்மையை, என்னால் உணர முடிகிறது.

இந்த நன்னாளில் தூத்துக்குடி நகருக்குப் புதிய விமான நிலையம்

இன்று முதல் தொடங்கப்படுகிறது - இது மத்திய அரசின் நிகழ்ச்சி. தூத்துக்குடி நகரம் மட்டுமல்லாது, இம்மாவட்டம் முழுவதற்கும் பயன் அளிக்கும் ஏறக்குறைய 700 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் தொடங்கப்படுகின்றன.

குறிப்பாக இம்மாவட்ட மக்கள் மகிழ்ச்சியுறும் வகையில், மிகப் பிரமாண்டமான அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைய உள்ளது; இவை எல்லாம் மாநில அரசின் நிகழ்ச்சிகள். இந்த இரு பெரும் நிகழ்ச்சிகள் இணைந்து இங்கே நடைபெறுகிறது- நாம் விரும்பி அமைத்திட்ட இரு ஆட்சிகளும், நமக்காக இணைந்து காரியமாற்றும் பாங்கறிந்து, குதூகலம் கொப்பளிக்க, மகிழ்ச்சி பொங்க, ஆடிப்பாடி மகிழ்ந்த வண்ணம் கூடி உள்ளீர்கள்.

ஆனால், எங்கள் இரு அரசுகளும் இவ்வாறு இணைந்து நிற்பதே சிலருக்கு எரிச்சலாக உள்ளது; உங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி பொங்குகிறதென்றால், அவர்களுக்கு ஆத்திரம் தான் பொங்கி வழிகிறது; 'ஐயோ, ஆட்சி போயிற்றே' என்ற ஆதங்கம் தான் பொங்கி வழிகிறது.

கடந்த 10 மாதக் காலத்தில், உங்கள் சகோதரியின் ஆட்சி இங்கே நடைபெறுகிறது. இந்த அளவு குறுகிய ஓர் காலக் கட்டத்தில், எண்ணற்ற நன்மைகளை நாட்டு மக்களுக்கென ஆற்றிய 'நல்லரசு', என நல்லோர் அனைவரும் பாராட்டும் - போற்றும் வாய்ப்பை இன்று பெற்று இருக்கிறோம்.

இவ்வளவுக்கும், நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நாளில், கடந்த ஆட்சியாளர்களால் - வஞ்சகமும், சூதும் மட்டுமே ஓர் அரசியல் தலைவருக்கான அத்தியாவசிய இலக்கணம், என்ற புது வரலாறு படைத்துள்ள முன்னாள் முதல்வரால், விட்டுச் செல்லப்பட்ட பற்றாக்குறை மட்டும், 900 கோடி ரூபாய் ஆகும். அப்படி ஆட்சியை விட்டு வெளியேற்றப்பட்ட நேரத்தில், கஜானாவைக் காலி செய்ததோடு, ஒன்றிரண்டு கோடி பற்றாக்குறை அல்ல; 900 கோடி ரூபாய் பற்றாக்குறையை விட்டுச் சென்றவரைத் தான், சிலர் 'நிர்வாகத்தில் புலி' என்றெல்லாம் பீற்றிக்கொள்கிறார்கள் - போற்றிக் கொண்டிருக்கிறார்கள். 'என்னைப் போல் பட்ஜெட் போட முடியுமா' என, அவரும் தற்பெருமையும், தம் பட்டமும் அடித்துக்கொள்கிறார்.

அவ்வாறு 900 கோடி ரூபாய் பற்றாக்குறையோடு, தமிழக அரசின் கஜானா காலியாக்கப்பட்டிருந்த நேரத்தில் தான் - நாங்கள் ஆட்சி அமைத்துக் கோட்டைக்குள்ளே நுழைந்தவுடன், முதல் வேலையாக முதலமைச்சர் நாற்காலியில் உட்கார்ந்தபோதே, நான் போட்ட முதல் உத்தரவு, 322 கோடி ரூபாய் இழப்பை - சுமையைத் தாங்கவேண்டிய உத்தரவான, இந் நாட்டு மக்களை ஆட்டிப் படைத்து வந்த, மலிவு விலை மதுக்கடைகளை மூடிய உத்தரவு என்பதை, நன்கு அறிவீர்கள்.

தொடர்ந்து தமிழகம் முழுவதும் உள்ள கிராமப் பகுதிகள் அனைத்தும், அடிப்படை வசதிகளைப் பெறுவதற்கான ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய், என்னும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. தமிழகத்தின் எந்த மூலையில், எந்தக் குக்கிராமத்திற்கு இன்று நீங்கள் சென்றாலும், அங்கே இன்று, அரசின் ஏதாவது ஒரு திட்டவேலை நடந்து கொண்டிருப்பதைப் பார்க்க முடியும்.

பழைய கால ஆட்சியாளர்கள் போல், 'அதைச் செய்தோம்; இதைச் செய்தோம்' என நாங்கள், 'அகன்ற வான வெளியில் ஆழக் கிணறு வெட்டிய' வாய்ப்பந்தல் சவடால் அடித்துக் கொண்டிருக்கவில்லை. கண்ணுக்கு நேரே நீங்கள் காணக் கூடிய திட்டங்கள் பலவற்றைச் செய்துகொண்டு இருக்கிறோம்.

நான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த, இத்தகைய கடும் நிதிப் பற்றாக்குறை இருந்த காலக் கட்டத்தில், இயற்கையான பல கோளாறுகள் காரணமாக, சாதாரண மக்களைப் பாதிக்கும் அளவில், 'கிடுகிடு' வென விலைவாசிகள் உயர ஆரம்பித்தன. குறிப்பாக அரிசி விலையே கூட மிகக் கடுமையாக, கூட ஆரம்பித்தது. உடனே இந்த விமரிசனக் கர்த்தாக்கள் - 'இந்த அம்மாவுக்கு ஓட்டுப் போட்டீர்களே, அரிசி விலை என்னவாயிற்று பார்த்தீர்களா? அனுபவியுங்கள்' என ஊர் ஊருக்குக் கூப்பாடு போட்டனர்.

## • தூத்துக்குடி விமான நிலையம்

## • தூத்துக்குடி அனல் மின்நிலைய நான்காவது-ஐந்தாவது பிரிவு

## • இரால் வளர்ப்புப் பண்ணைத் திட்டம்

## • 700 கோடி ரூபாய்க்கான அரசுத் திட்டப் பணிகள் தொடக்கம்

அந்தச் சூழ்நிலையில்தான், உங்களாலே - உங்கள் அன்பினாலே - ஆதரவாலே - பற்றாலே - பாசத்தாலே ஆட்சிக்கு வந்த நான், உடனடியாக அதிரடி நடவடிக்கைகள் சிலவற்றை மேற்கொண்டேன். அரிசி, நெல் கையிருப்பை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அரிசி நடமாட்டம் தாராளமாக்கப்பட்டது. கொள்முதல் முறையாகப் பெறப்பட்டது. கடத்தல்காரர்கள் - பதுக்கல்காரர்கள் தயவுதாட்சண்யமற்ற முறையில் ஒடுக்கப்பட்டார்கள்; ஒரு சிலர் இன்றும் கூட 'தடா' சட்டத்தில் உள்ளே உள்ளனர். பொது விநியோக முறை சீராக்கப்பட்டது. மத்திய அரசு ரேசன் அரிசி விலையை உயர்த்தியபோதிலும், தமிழக மக்களுக்குக் குறைந்த விலையில் சன்னரகம், மிகச் சன்னரகம் ரூபாய் 3-க்கும், சாதாரண ரகம் ரூபாய் 2-க்கும் வழங்கிட உத்தரவிட்டேன். இதனாலே மட்டும் அரசுக்கு 400 கோடி ரூபாய் இழப்பு நேர்கிறது. இத்தகைய நடவடிக்கைகளால் இன்று அரிசி விலையும் - ஏனைய விலைவாசிகளும் குறைய ஆரம்பித்துள்ளதே - அன்றைக்கு விலைவாசி ஏறியவுடன் என்னைத் தூற்றியவர்கள், இன்றைக்கு என்ன சொல்கிறார்கள்? ஏதாவது வாய் திறக்கிறார்களா? எனவே, இதற்கெல்லாம் நீங்கள் தான் பதில் கூறவேண்டும். அவர்களுக்குத் தக்க பாடமும் புகட்ட வேண்டும்.





மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிதம்பரனார் மாவட்டம் தூத்துக்குடியில் அனல் மின்நிலைய நான்காவது-ஐந்தாவது பிரிவினைத் தொடங்கிவைத்தார்.

ஏளனம் பேசுவோர் பேசிக் கொண்டே இருக்கட்டும். குறை கூறுவோர் கூறிக்கொண்டே இருக்கட்டும். நாங்கள் ஒரு பொழுதும் அவர்களுக்கு செவிமடுக்கப் போவதில்லை. 'போற்றுவோர் போற்றலும் - புழுதி வாரித் தூற்றுவோர் தூற்றலும் தொடர்ந்திடினும், ஏற்றதொரு செயலை நாம் தொடர்வோம்' என்பதற்கேற்ப, எங்கள் பணி அமைந்து வருகிறது என்பதற்கான எடுத்துக்காட்டே இவ்விழாவாகும். ஆக்கபூர்வமான அறிவுரைகள் என்றால் அதனை ஆராயலாம். ஆனால் அவர்களோ, ஆதங்கத்தாலும் - ஆத்திரத்தாலும், அப்பட்டமான பொய்களையே தொடர்ந்து கூறி வருவதை, நாங்கள் மட்டுமல்ல, வேறு எவரும் பொருட்படுத்தமாட்டார்கள்.

'தமிழகத்தின் திட்ட ஒதுக்கீட்டில் வெட்டு; நாங்கள் ஆட்சியில் இருந்த பொழுது இவ்வளவு வாங்கினோம்; இவர்கள் ஆட்சியில் குறைந்து விட்டது' என மார்தட்டியவர்கள், மத்திய அரசு நமது மாநிலத்தின் 1992-93-க்கான ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டை, 1,751 கோடி ரூபாய் என நாம் கோரியவாறே கொடுத்த பொழுது, வாயடைத்துப் போயினர். கடந்த ஆண்டு கிடைத்த 1,605 கோடி ரூபாய் ஒதுக்கீட்டைச் செலவு செய்ய முடியுமா, என்று மத்தியத் திட்டக் குழுவே சந்தேகித்தபொழுது, திட்ட ஒதுக்கீட்டையும் மிஞ்சி, 1,640 கோடி ரூபாய் என 1991-92-ஆம் ஆண்டிற்குச் செலவு செய்து, சாதனை படைத்து நிற்கும் எங்கள் அரசைப் பற்றியும், என்னைப் பற்றியும், நிதி நிர்வாகத்தில் தன்னைப் புலி என்று கூறிக்கொள்ளும் பெரியவர், முன்னர் குற்றம் கூறியவர் இன்று ஏன் வாய் திறக்கவில்லை? தான் பொய்யாகக் கூறிய குறை, பொய் என்பதை நிரூபித்து விட்டார்களே! நாட்டு மக்கள் முன், தன் அறிவாற்றலைத் தோலுரித்துக் காட்டி விட்டார்களே என்று கவலை தான்!

நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற கடந்த 10 மாத காலத்தில், எத்தனைத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தியுள்ளோம்: அவற்றை எல்லாம் சாடினால், மக்கள் எள்ளி நகையாடுவார்கள் என்பதால், இன்று என்னைப் பற்றித்தனிப்பட்ட முறையில் புழுதி வாரித் தூற்றும் முயற்சியில் இறங்கி உள்ளனர்.

என்னைப் பற்றி என்ன வேண்டுமானாலும் கூறட்டும். நான் அதற்கு எப்பொழுதும் கவலைப்பட்டதே கிடையாது. எத்தனை எதிர்நீச்சல் போட்டு, ஏளனங்களைச் சந்தித்து, நான் இன்று இந்த நிலையை அடைந்துள்ளேன் என்பதை, நாட்டு மக்கள் நன்கு அறிவீர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போன்று, 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்று ஏற்றுக்கொண்டு அரசியலில் இறங்கிய நான், சுயநலவாதிகளின் கொடுஞ்செயல்களுக்கு என்றும் அஞ்சியதில்லை; இனி அஞ்சவும் போவதில்லை என்பதை, மெத்தவும் திடமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொன்மனச் செம்மல் நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட நான், அவர் வழி தொடர்ந்து நடக்கும் நான், எந்தத் தீய சக்திகளுக்கும், மக்கள் விரோதச் சக்திகளுக்கும் அஞ்சமாட்டேன். அவர்களை எதிர்த்துப் போராடி வெற்றி கொள்வேன் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமீப காலமாகப் பத்திரிகைகளில், என்னைப் பற்றி எண்ணற்ற விமரிசனங்களை, திட்டமிட்டு சிலர் பரப்பி வருவதை நீங்கள் அறிவீர்கள்; தவறான, சிறிது கூட உண்மையே இல்லாத கற்பனைச் செய்திகளை வெளியிட்டு வருகிறார்கள். இது ஒரு திட்டமிட்ட சதிச் செயலோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது. சட்டமன்றப் பேரவையின் உரிமை மீறல் பிரச்சினையில், பாதிக்கப்பட்ட சில உறுப்பினர்கள் கொடுத்த புகார்களின் மீது, பேரவைத் தலைவர் நடவடிக்கை மேற்கொண்டார். சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் உரிமை பாதித்ததாகவும் - பேரவையின் கவுரவத்திற்குக் களங்கம் ஏற்படுத்திய

செயலில் ஈடுபட்டதாகவும், சம்பந்தப்பட்ட சில பத்திரிகை ஆசிரியர்களையும், நிருபர்களையும் விதிமுறைகளின்படி விசாரணைக்கு அழைத்தார். ஒருவர் அழைப்பு பெற்றுக் கொண்டும் வர மறுத்திருக்கின்றார். மற்றவர் நேரில் வந்து அவையில் நடவாத ஒரு நிகழ்வினை, நடந்ததாகக் கூறி வாதம் செய்திருக்கிறார். 'செய்த தவறுக்கு வருத்தமாவது தெரிவிக்கிறீர்களா?' என, விசாரணை செய்த உரிமைக் குழுவில் இருந்த பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள் கேட்டனர். வருத்தம் தெரிவிக்க மாட்டோம் எனப் பிடிவாதமாக அவர்கள் கூறினார்கள். பேரவையின் உரிமைக்குழு, இவர்களின்



செயல்கள் அவையின் உரிமை மீறல்தான் என்று முடிவு செய்து, தண்டனை வழங்க அவைக்குப் பரிந்துரை செய்தது. பேரவை அதனைப் பரிசீலனை செய்து, பரிந்துரைகள் ஏற்றுக்கொண்டு, தக்க தண்டனை வழங்கப் பேரவையின் தலைவருக்கு அனுமதி அளித்தது.

அதன் அடிப்படையில், தாங்கள் புரிந்துள்ள அவையின் உரிமை மீறல் செயலுக்காக, வருத்தம் கூடத் தெரிவிக்க மறுத்த நிருபர் மீதும், வர மறுத்தவர் மீதும், வந்திருந்து உண்மைக்குப் புறம்பாக, தான் எழுதியது தான் சரி என்று வாதிட்டவர்கள் மீதும், நடவடிக்கை எடுத்து, பேரவைத் தலைவர் தண்டனை வழங்கினார். இதுதான் நம் தமிழகச் சட்டப் பேரவையில் நடந்தது. இதில் நான் எவ்வகையில் பொறுப்பாளியாக முடியும்? உண்மை இவ்வாறிருக்க, பத்திரிகைச் சுதந்திரம் தமிழ்நாட்டில் பறிக்கப்படுகின்றது; நசுக்கப்படுகின்றது; என என் பெயரை இழுத்து, திட்டமிட்ட விஷமப் பிரச்சாரத்தைச் செய்து வருகிறார்கள் என்றால்... இவர்களுக்கான தண்டனையை நீங்கள் தான் கொடுக்க வேண்டும்.

பேரவையின் மீது பழி சுமத்தப்பட்டது; அவை உறுப்பினரின் உரிமைகள் மீறப்பட்டன; அவையின் முடிவுகள் மதிக்கப்படவில்லை என்றால், அது மாபெரும் குற்றமாகும். அதனைச் சட்ட ரீதியாகத் தட்டிக் கேட்கக்கூடாது என்று வாதிட்டால், அதை என்ன என்று சொல்வது? அந்த வாதத்திற்குப் பல பத்திரிகைகளும் உறுதுணையாகச் சென்று உதவும் நிலை, தற்பொழுது நமது நாட்டில் நிலவுகின்றது என்றால், இதனை எப்படி நியாயப்படுத்துவது?

**இந்தக் கட்டத்தில் தமிழகப் பெருமக்களுக்கு நான் ஒன்றைத் தெளிவாக்க விரும்புகின்றேன். தமிழகச் சட்டமன்றப் பேரவையின் முடிவு, மக்களாகிய உங்களின் முடிவு. உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஜனநாயக அரசியல் அமைப்பில், உங்கள் பிரதிநிதியாக, உங்கள் நலன் காக்க, சட்டமன்றத்தில் உங்களுக்காக வாதாட உள்ள உங்கள் பிரதிநிதிகள், அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களரக இருப்பினும், அவர்கள் அப்பகுதி மக்களின் பிரதிநிதிகள். அவர்களின் உரிமைகள் மீறப்பட்டன என்றால், அச்செயல் மக்களாகிய உங்கள் உரிமைகள் மீறப்பட்டதாகத்தான் பொருள்படும்.**

**சட்டப் பேரவையில் முடிவை மதிக்காமல் எதிர்ப்பவர்கள், உங்களை எதிர்ப்பவர்கள் என்பதை அவர்களுக்கு உணர்த்திட வேண்டும். பத்திரிகைச் சுதந்திரத்தைக் காக்க வேண்டியது அரசின் கடமை.**

அதே நேரத்தில் தரம் தாழ்ந்த பத்திரிகைகளில் வெளியிடப்படும் பொய்களையும், அவதூறுகளையும், தட்டிக் கேட்க வேண்டிய கடமையும் அரசிற்கு உண்டு. அவ்வாறு கேட்கும்பொழுது, அதனை எப்படிப் பத்திரிகைச் சுதந்திரம் பாதிக்கப்பட்டது என்று கூற முடியும்?

எனவே, இன்று என்னையும் - தமிழக அரசையும், எப்படியேனும் தரம் தாழ்ந்து விமரிசிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான், இப்பிரச்சினையைச் சிலர் பெரிது படுத்தி வருகிறார்கள் என்பதைத் தவிர, வேறொன்றுமில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

என்னைப் பொறுத்தமட்டில், மக்கள் சேவைக்கெனவே என்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டுள்ளதால் - எந்த அச்சுறுத்தலுக்கும் அஞ்சாது, உங்களுக்கான நற்பணிகளை ஆற்றிட, உங்களை நோக்கி ஓடோடி வந்துள்ளேன்.

எங்களைக் குறை கூறி வருவோருக்கும் - எங்களுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்பதை, எங்களது செயல்பாடுகள் மூலம் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இதே தூத்துக்குடிப் பகுதியில், மத்திய அரசு 225 கோடி ரூபாய் முதலீட்டில், Titanium மற்றும் Zirconium தொழிற்சாலை ஒன்றை நிறுவத் திட்டமிட்டு இருந்தது.



அத்தொழிற்சாலை, தூத்துக்குடியை மட்டுமல்ல, நமது மாநிலத்தைவிட்டே சென்றுவிடக்கூடிய ஓர் அபாயகரமான சூழ்நிலை தான், நாங்கள் ஆட்சிக்கு வந்தபொழுது, பழைய ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இங்கே அத்தொழிற்சாலை அமைப்பதற்காக எடுக்கப்பட்ட நிலத்தின் சொந்தக்காரர்கள் சிலர், உயர் நீதிமன்றத்தில் நில எடுப்புக்கு எதிராக தடையாணை பெற்று, அதனால் அத்தொழிற்சாலையினைத் தொடங்க முடியாத ஓர் சூழ்நிலையை ஏற்படுத்தினார்கள். அப்பேர்ப்பட்டோருக்கு உடந்தையாக, பழைய



ஆட்சியாளர்கள் இருந்தனர் என்றால், எவ்வளவு பெரிய வெட்கக்கேடு என்பதை நீங்கள்தான் கூற வேண்டும்.

ஆனால், நாங்கள் எடுத்த தனி முயற்சியின் காரணமாக, ஒரு மாதக் கால்த்திலேயே அந்தத் தடை ஆணைகளை நீக்கி, அவ்வழக்கில் அரசுக்குச் சாதகமான முடிவு கிடைக்கச் செய்தோம். இன்று, அந்த நிலம், மத்திய அரசிடம் ஒப்படைக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், அதன் தொடக்கப் பணிகள் வெகு விரைவாக நடைபெற்று வருகின்றன என்றால், அது உங்களின் அன்பான ஆதரவோடு, உங்கள் அரசு எடுத்த துரிதமான நடவடிக்கைகளினால் தான் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அதேபோல, இன்னொரு மகிழ்ச்சியான செய்தியை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நேற்று இரவு, மாண்புமிகு பாரதப் பிரதமர், திரு. பி.வி. நரசிம்ம ராவ் அவர்கள் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தமிழகத்தில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்து இருந்த சுமார் 2,000 கோடி ரூபாய் செலவிலான Aromatic Complex நிறுவுவதற்கான மத்திய அரசின் அனுமதியை அமைச்சரவை அளித்து உள்ளது என்ற இனிய செய்தியைத் தெரிவித்தார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு என் சார்பிலும், தமிழக மக்கள் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்தேன்.

மத்திய, மாநில அரசுகளுக்கிடையே இணக்கமான, சுமுகமான உறவு என்றென்றும் பாதுகாக்கப்படும் என்ற நிலையை இந்த நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது.

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம், ஸ்பிக் நிறுவனத்துடன் கூட்டாக இந்த National Aromatics and Petrochemicals Corporation Limited நிறுவனத்தை நிறுவுவதற்கு 1988 முதல் முயற்சி எடுத்து வந்தது.

தமிழகத்தில் தொய்வடைந்திருந்த தொழில் வளர்ச்சிக்குப் புத்துயிர் கொடுத்தோம் என்று தற்பெருமை அடித்துக் கொண்ட முந்தைய அரசு இந்த மகத்தான தொழில் நிறுவனத்தைத் தமிழகத்திற்குக் கொண்டு வருவதற்கு எந்தவித ஆக்கபூர்வமான முயற்சியையும் எடுக்கவில்லை. மக்களின் ஏகோபித்த நம்பிக்கையை யும், ஆதரவையும் பெற்ற எங்கள் அரசு ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் பொருட்டு மத்திய அரசிடம் தேங்கிக் கிடந்த அனுமதிக் கடிதங்கள் மற்றும் உரிமங்களை விரைவில் வழங்கக்கோரி பாரதப் பிரதமருடன் கலந்து உரையாடினேன்.

குறிப்பாக NAPCO நிறுவனத்திற்கு அனுமதியை விரைவில் அளிக்க வேண்டும் என்று கடிதங்கள் மூலமும், நேரிலும் பாரதப் பிரதமர் அவர்களை வற்புறுத்தினேன். எங்கள் கோரிக்கையின் நியாயத்தையும், அவசியத்தையும் உணர்ந்த மத்திய அரசு இன்று NAPCO நிறுவனத்தைத் தொடங்க அனுமதி அளித்துள்ளது. கடந்த 25 ஆண்டுகளில் தமிழகத்திற்கு முதல்முறையாகக் கிடைத்த மிகப் பெரிய தொழிற்சாலை இதுதான் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்நிறுவனம் தமிழகத்தின் வளர்ந்து வரும் தொழில் வளர்ச்சிக்கு மேலும் ஊக்கத்தைக் கொடுத்து ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க வழிவகுக்கும்.

இத்தொழிற்சாலை அமைக்கப்படுவதனால் தமிழகத்தில் ஏறத்தாழ 70,000 பேருக்கு நேரிடையாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும். மேலும் இதன் தொடர்புடைய மற்ற சிறுதொழில்கள் வளர்வதன் மூலம், பல சிறு தொழிற்சாலைகள் தொடங்கவும் இது வழிவகுக்கும். Purified Terephthalic Acid Ortho Xylene மற்றும்Benzene போன்ற ரசாயனப் பொருட்களைப் பெட்ரோலியத்திலிருந்து தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலையை அமைக்க 1987-ஆம்



ஆண்டு நிலவரப்படி 1,386 கோடி ரூபாய் முதலீடு தேவை எனக் கணக்கிடப்பட்டது. ஆனால் தற்போது ஏறத்தாழ 2000 கோடி ரூபாய் அளவு உயர்ந்துள்ளது. இதுபோன்று மேலும் பல அனுமதிக் கடிதங்களையும், உரிமங்களையும் வழங்குவதோடு மட்டுமன்றி மத்திய அரசு தானே முன் வந்து மத்திய அரசின் முதலீட்டை அதிகரித்து பல பெரிய தொழிற்சாலைகளைத் தமிழ் நாட்டில் தொடங்க வேண்டுமென்று நான் தொடர்ந்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை வற்புறுத்துவேன் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்திற்கு இத்திட்டத்தை வழங்கிய மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரசிம்ம ராவ் அவர்களுக்கு, மீண்டும் நெஞ்சார்ந்த நன்றியினை என் சார்பாகவும், உங்கள் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிதம்பரனார் மாவட்டம் 20.10.1986 அன்று, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கப்பட்டது. ஏறத்தாழ 6 ஆண்டுகள் ஆகியும், இதுவரை இந்த மாவட்டத்திற்கென, ஒரு மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் கூட கட்டப்படவில்லை. விந்தை என்னவென்றால், இதற்கென முந்தைய அரசு, 1989-ஆம் ஆண்டில் ஒரு பெரும் விழாவையே நடத்தி, அடிக்கல் நாட்டினார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்திற்கு, மக்கள் சென்றுவரப் போக்குவரத்து வசதி கூட இல்லாத ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால், பணியைத் தொடங்காமல் விட்டுச் சென்றார்கள். இன்று உங்கள் அரசு, அது மக்களின் நலம் காக்கும் அரசு என்பதால், அந்த நிலையை முற்றிலுமாக மாற்றி, சிப்காட் வளாகத்திலேயே, துறைமுகச்சாலைக்கு மிக அருகிலேயே, இப்பகுதி மக்கள் அனைவரும் வசதியாகச் சென்றுவரும் வகையில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், இதர மாவட்ட நிர்வாக அலுவலகங்கள், மற்றும் அவர்களுக்கான வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள், அனைத்தையும் 420 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்க முடிவு செய்துள்ளது என்ற நல்ல செய்தியினை, உங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடியில் போதிய பேருந்து வசதி, இரயில் போக்குவரத்து, மற்றும் கப்பல் போக்குவரத்துக்கள் இருந்தாலும், இங்குள்ள மக்களின், அதிலும் குறிப்பாக பல தொழில் அதிபர்கள், மற்றும் வணிகப் பெருமக்களின் நெடுநாளைய கனவு, இன்று இந்த விமான நிலையத்தைத் தொடங்கி வைப்பதன் மூலம் நனவாகிறது. விமான நிலையத்தைத் திறந்து, விமானப் போக்குவரத்தைத் தொடங்கி வைக்கும் நல்வாய்ப்பினை எனக்கு நல்கிய மத்திய அரசிற்கு, என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தூத்துக்குடித் துறைமுகத்தின் விரைவான வளர்ச்சிக்கு, அன்று வித்திட்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தான். 2,500 ஏக்கர் நிலத்தினை இலவசமாக மத்திய அரசிடம் கொடுத்து, இத் துறைமுகத்தைத் தமிழகத்திற்கு வாதாடிப் பெற்றவர், பேரறிஞர் அண்ணா அவர்கள்

இத்துறைமுகத்தின் வளர்ச்சிக்கு மிக்க தொடர்புடையது சேதுசமுத்திரம் திட்டம். 1860-ஆம் ஆண்டு, (Taylor) எனும் ஆங்கிலேயக் கப்பற்படைத் தளபதியால் வகுக்கப்பட்ட திட்டமே. சேதுசமுத்திரத் திட்டம். அன்றே அதனைச் செயல்படுத்தி முடித்திருந்தால், ஐம்பது இலட்சம் ரூபாய் தான் செலவாகியிருக்கும். ஆனால், இன்று அத்திட்டத்தை நிறைவேற்ற 400 கோடி ரூபாய்க்கும் மேல் செலவு ஏற்படும் நிலையில் உள்ளது. மாறிவரும் பொருளாதாரச் சூழ்நிலையில், இன்று 400 கோடி என்பது, ஒரு மிகப் பெரிய தொகை அல்ல. சேதுசமுத்திரத் திட்டத்தால், நாட்டின் கடலோரப் பாதுகாப்பு பன்மடங்கு உயரும்.

பல பெரிய கொள்ளளவு கொண்ட வெளிநாட்டுக் கப்பல்கள், தூத்துக்குடித் துறைமுகத்தைத் தொட்டுச் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டு, அந்நியச் செலாவணி அதிகரிக்கும். இதனால் கப்பல் போக்குவரத்தும் கணிசமாக அதிகரிக்கும். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இத்திட்டத்தை நிறைவேற்றுவதில், மத்திய அரசு தயக்கம் காட்டுவதுதான், ஏன் என்று விளங்கவில்லை! எனவே, நாட்டின் பாதுகாப்பையும், தமிழகத்தின் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு, சேதுசமுத்திரத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற, மத்திய அரசு முன்வர வேண்டும், ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என, எங்கள் அரசு வலியுறுத்தும் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இன்று 630 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் நான்காவது, மற்றும் ஐந்தாவது பிரிவுகளையும், தொடங்கி வைக்கும் நல்வாய்ப்பும் எனக்குக் கிட்டியுள்ளது. இவை ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கெண்ட இரு பிரிவுகளாகும். ஏற்கெனவே உள்ள 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்று பிரிவுகளுடன் சேர்த்து, மொத்தம் 1,050 மெகாவாட் மின்சாரம் இங்கே உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகத்திற்குக் கிடைக்கவிருக்கிறது. தேசிய அளவில், உற்பத்தித் திறனில் பல்வேறு விருதுகளைப் பெற்ற, நமது தூத்துக்குடி அனல்மின் நிலையம், மேலும் பல சாதனைகளைப் புரிய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

இன்று இந்த விழாவில், இரால் வளர்ப்புப் பண்ணைத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. அந்நியச் செலாவணியை அதிகமாக ஈட்டித் தரும், 'இரால்' ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கத்துடன் இந்தத் திட்டம், ஏழு கோடியே இருபது இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்பட்டுள்ளது. சிதம்பரனார் மாவட்டத்தில் உள்ள, 160 கிலோமீட்டர் கடலோரப் பகுதிகளில், இந்த இரால் வளர்ப்புப் பண்ணைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

இம்மாபெரும் விழா நிகழ்ச்சி மூலம் மட்டும், ஏறத்தாழ 700 கோடி ரூபாய்க்கான திட்டங்கள், இன்றுதொடங்கி வைக்கப்படுகிறது என்பதை, மெத்த மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

ஏழை, எளிய மக்கள் பயன் பெறும் வகையில், 24 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நேரடி உதவிகள், இன்று வழங்கப்படுகின்றன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களின் நம்பிக்கையைப் பெற்ற, மக்களின் நம்பிக்கைக்குரிய, மக்களின் தேவைகளை நிறைவேற்றும், மக்களுக்குரிய அரசாக, எங்கள் அரசு திகழ்கிற காரணத்தால் தான், தென் மாவட்ட மக்களைப் பெரிதும் சிரமத்திற்கு உள்ளாக்கத்தக்க, 'மதுரை-மணியாச்சி-தூத்துக்குடி' மீட்டர் கேஜ் ரயில்பாதையை அகற்றும் திட்டத்தைக் கைவிடுங்கள் என, மத்திய அரசை இம்மாநில அரசே பெரிதும் வற்புறுத்தி, சட்டமன்றப் பேரவையில் நான் அறிவித்தேன்.

அகல ரயில் பாதையை மட்டும் வைத்துக்கொண்டு, மீட்டர் கேஜ் ரயில் பாதையை அகற்றும் திட்டம், அப்படியே நடைமுறைப் படுத்தப்பட்டால், 9 ரயில்கள் ரத்து செய்யப்பட வேண்டியதோடு, சென்னைக்குச் செல்லும் மற்றும் திரும்பி வரும் பயணிகள், 104 கிலோ மீட்டர் தூரம் சுற்றிப் பயணம் செய்ய வேண்டியதோடு, ரயில் கட்டணச் செலவும் அதிகமாகிற சூழ்நிலை உருவாகும்.Meter Gauge Line -ஐ, அப்புறப்படுத்தாமல், அப்படியே வைத்துக் கொண்டு, Broad Gauge Line -ஐ தனியாக அமைக்க வலியுறுத்தப்பட்டுள்ளது. சட்டப்பேரவையிலும், இதே கருத்தை நான் வலியுறுத்திப் பேசியுள்ளேன். மீட்டர் கேஜ் ரயில்பாதை அகற்றப்படாமல் இருக்க, மாண்புமிகு பாரதப் பிரதமரையும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்வேன், என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெறும் பேச்சோடு மட்டும் நின்றுவிடுகிற அரசல்ல, மக்கள் அரசாகிய உங்கள் அரசு. நிதிச்சுமை, மாநில அரசை அழுத்துகிற நேரத்திலும், கடன் சுமை, விவசாயிகளை அழுத்திடக் கூடாது என்பதற்காக, மனிதாபிமானத்திற்கு மதிப்பளித்து, அண்மையில் தமிழக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, இதுவரை இந்தியாவில் எந்த மாநிலமும் செய்யாத வகையில், சில சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் கூட்டுறவு வங்கிகள் மூலம் வாங்கியிருந்த குறுகிய கால, மற்றும் மத்தியக் காலக் கடன்களுக்கு உரிய வட்டி, மற்றும் அபராத வட்டியினை, அரசே விவசாயிகளுக்கு வழங்குகிற ஏற்பாடுகள் செய்யப்பட்டு, கடன் தொகை யில் அசலை மட்டும் அவர்கள் கட்டினால் போதும், என்கிற நிலைமை உருவாக்கப்பட்டு, கடன் சுமையால், விவசாயிகளின் முதுகெலும்பை முறித்துவிடக் கூடாது, என்பதற்கான முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் மூலம், கடன் சுமையால் தவிக்கும் விவசாயிகளுக்கு, நேரடியாக 69.07 கோடி ரூபாய் வழங்கிட உள்ளோம். இதன் மூலம், 13 இலட்சம் விவசாயிகள் பயனடைகிறார்கள், என்கிற நிம்மதியை நாங்கள் பெற்றுள்ளோம். இந்த நிம்மதியை உங்களுக்கு நான் வழங்குவேன் என்று நீங்கள் நம்பினீர்கள். உங்கள் நம்பிக்கை வீண்போகாத வகையில், நாங்களும் செயல்பட்டு வருகிறோம். இதுதான் எனக்கும், மக்களுக்கும், இந்த அரசுக்கும் உள்ள உறவு. இது தெரியாமல், என்மேல், வேண்டுமென்றே, உண்மைக்குப் புறம்பாகவும், அரசுக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையிலும், சிலர் பேசி வருகிறார்கள், எழுதியும் வருகிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தையே சண்டைக்கு இழுக்கிறார்கள்.

நீதிக்குத் தலை வணங்கத்தான், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். எனக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறாரே ஒழிய, அநீதிக்குத் தலை வணங்க, அவர் என்றுமே எனக்கு அறிவுரை கூறியதில்லை. அப்பேர்ப்பட்ட இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் அடியொற்றி, அவரின் வாரிசாக, ஆட்சி நடத்தி வரும் நான், இந்த விழாவின் மூலம் உங்கள் அனைவரையும் சந்திக்கிற வாய்ப்பு பெற்றதற்காக, மகிழ்ச்சியடைகிறேன், பெருமிதம் கொள்கிறேன்; பெருமை அடைகிறேன்!

இந்த மாபெரும் விழாவினை மிக மிகக் குறுகிய காலத்தில், சீரும் சிறப்புமாக ஏற்பாடு செய்த அனைவருக்கும், எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடி அனல்மின்நிலையப் பணியாளர்களுக்குப் புதிதாக யூனிட் 4 மற்றும் 5 ஆகிய இரண்டையும் இயக்கி வைக்க வழங்கப்படும் ஊக்கத் தொகையாக (Commissioning Incentive) ரூ.75 இலட்சம், 2,500 பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்ப்பினை நல்கிய மத்தி அரசுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும், இங்கு கடலெனத் திரண்டு வந்து, விழாவினைச் சிறப்பித்த பெரியோர்களுக்கும், தாய்மார்களுக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். ●



**● உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்கள்தான்.**

**—கதே**

ஏதேனும் ஒரு குடியிருப்பு மனையில் வீடு கட்டுவதானால்

# வீடு கட்டுவதற்கு முன் கவனிக்க வேண்டியவை



**மனை:**

மனையானது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினால் அங்கீகரிக்கப் பட்டு, மனை அமையும் உள்ளூராட்சியின் ஒப்புறுதி பெறப்பட்டதாயும் இருக்க வேண்டும்.

**அணுகு பாதை:**

மனைக்கான அணுகுபாதையாக உள்ளூராட்சியின் பராமரிப்புக்கு ஏற்கப்பட்ட தாக அமைய வேண்டும்.

**கட்டடத்தைச் சுற்றிலும் விடப்பட வேண்டிய திறவிடங்கள் மற்றும் ஏனைய விதிகள்:**
குறைந்தபட்சப் பரப்பு:

தொடர் கட்டடப் பகுதியாக அறிவிக்கப்பட்ட இடங்களில் 80 ச.மீட்டர் அளவிலும், பொருளாதாரத்தின் பின்தங்கிய பகுதியாயின் சென்னை நகருக்குள் 20 ச.மீட்டர் அளவிலும், ஏனைய பெருநகர் வளர்ச்சி எல்லைக்கு 40 ச.மீட்டர் அளவிலும், மேற்சொன்னவாறு அறிவிக்கப்படாத பகுதியில் 150 ச.மீட்டர் அளவிலும் இருக்க வேண்டும்.

**மனையின் அகலம்:**

தொடர் கட்டடப் பகுதியில் 4.5 மீட்டர் ஆகவும், பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதியாயின் 4 மீட்டர் அளவிலும், ஏனைய பகுதிகளில் 6 மீட்டர் அளவிலும் அமைதல் அவசியம்.

| | ஜார்ஜ் டவுன் மற்றும் தொடர் கட்டடப் பகுதி | சென்னை நகரத்தின் ஏனைய பகுதிகள் நகராட்சி மற்றும் நகரியப் பகுதிகள்: | சென்னைப் பெருநகர் குழும எல்லைக்குட்பட்ட முதல் இரண்டு பகுதிகள் தவிர ஏனைய பகுதிகள். |
|---|---|---|---|
| மனையில் கட்டக் கூடிய கட்டடத்தின் மொத்தப்பரப்பு: | 1.75 | 1.50 | 1.25 |
| மனையில் கட்டக்கூடிய தரைத் தளப்பகுதி: | 65% | 60% | 55% |

பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதியாயின் 75%

**அதிகப்பட்ச உயரம்:**

சாதாரணமாக அணுகுபாதையின் அகலத்தைப் போல் ஒன்றரைப் பகுதி.

**முன் பக்கத்திறப்பிடம்:**

| | சாலையின் அகலம் | விடவேண்டிய அளவு |
|---|---|---|
| | 30 மீட்டருக்கு மேல் | 6 மீட்டர் |
| 1.5 மீட்டர் அனைத்துச் சாலைகளுக்கும் | 15 மீட்டருக்கு மேல் 30 மீட்டருக்குள் | 4.5 மீட்டர் |
| | 10 மீட்டருக்கு மேல் 15 மீட்டருக்குள் | 3 மீட்டர் |
| | 10 மீட்டருக்குக் கீழ் | 1.5 மீட்டர் |

பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதியாகச் சாலை அகலம் எவ்வளவாக இருப்பினும் 1 மீட்டர் விட வேண்டும். சாலைக்குக் கட்டட வரிசை அளவு நிர்ண யிக்கப்பட்டிருப்பின் அந்த அளவுக்கு முன் பக்கத்திறவிடம் விட வேண்டும்.

**பின்பக்கத் திறப்பிடம்:**

| | மனையின் நீளம் | விடவேண்டிய அளவு |
|---|---|---|
| 15 மீட்டர் வரை | 1.5 மீட்டர் | |
| ஏதும் தேவையில்லை | 15 மீட்டருக்கு மேல் 30 மீட்டருக்குள் | 3 மீட்டர் |
| | 30 மீட்டருக்கு மேல் | 4.5 மீட்டர் |

பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதியில் பின் பக்கத்திறவிடம் ஏதும் விட வேண்டியதில்லை.

**பக்கத்திறப்பிடம்:**

| | |
|---|---|
| ஏதும் தேவையில்லை | 1.5 மீட்டர் ஒவ்வொரு பக்கத்திலும் ஏதேனும் ஒரு பக்கத்தில் 3 மீட்டர் திறவிடம் விட்டு ஒரு பக்கம் எல்லையை ஒட்டிக் கட்டடம் அமைக்க விரும்பினால், ஒட்டிக் கட்டப்படவிருக்கும் பக்கத்தில் பக்கத்து மனை சொந்தக்காரரிடமிருந்து மறுப்பின்மைச் சான்றிதழ் பெற வேண்டும். பொருளாதாரப் பின்தங்கிய பகுதியில் ஏதேனும் ஒரு பக்கம் 1 மீட்டர் திறவிடம் விட்டால் போதுமானது. |

மேற்கண்ட விதிகள், உதாரணத்திற்காகக் காட்டப்படுகிற விதிகளின்படி தேவை யான வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளைப் புத்தகத்தில் பார்த்துக் கொள்ள வேண்டும். மேற்கொண்டு தகவலுக்கு, தகவல் மற்றும் ஆலோசனை மையத்தை அணுகவும். திட்ட அனுமதியுடன் உள்ளூராட்சியின் கட்டட உரிமமும் பெற வேண்டும். அனு மதியின்றிக்கட்டப்படும் கட்டடங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அனுமதியின்றி கட்டடம் கட்டுவதைத்தவிர்த்துச் சிக்கல்களை தவிர்ப்பது சாலச் சிறந்தது.

159893

# நூல் நயம்

### புலவர் இளஞ்செழியன் கவிதைகள்

**ஆசிரியர்:** புலவர் இளஞ்செழியன்

**வெளியீடு:**

மலர்மாமணி பதிப்பகம்,
9, சிவராமன் தெரு,
சென்னை-600 005.

பக்கம்:168 விலை:ரூ.25/-

முதல் கவிதையே நூலுக்கு முத்தாய்ப்பாக விளங்குகிறது. தமிழ்மொழிகுறித்துக் கவிஞர் கொஞ்சு தமிழில் கவிதை படைத்திருப்பது அருமை. காதல், கல்வி, சமுதாயம் ஆகிய தலைப்புகளில் கவிதைக் கனிகள் இனிக்கின்றன. ஆழ்ந்த தமிழ்ப் புலமை ஒவ்வொரு கவிதையிலும் இழைந்திருக்கிறது. அருமையான கவிதைத் தொகுப்பு.

### தமிழில் பூத்த தாழம்பூ

**ஆசிரியர்:** அருணா பொன்னுசாமி

**வெளியீடு:**

திரு.வி.க. மன்றம்
அண்ணா நகர்,
கரூர்-639 002.

பக்கம்:104 விலை:ரூ.15.50

தமிழ்மணம் கமழும் 'தாழம்பூ'க் கவிதை, நூலின் தலைப்பாய் விளங்குகிறது. இதேபோல, சமுதாயம் குறித்தும் கவிஞர் பல கருத்து மணிகளைக் கோர்த்து, படிப்போர் இதயத்தில் இடம் பிடிக்கிறார்.

### அன்றாட வாழ்வில் அறிவியல்

**ஆசிரியர்:** டாக்டர் சோ. சேசாசலம்

**வெளியீடு:**

ரவி பதிப்பகம்,
16, சுங்குராமத் தெரு,
சென்னை-600 001.

பக்கம்:312 விலை:ரூ.36/-

சுவர் இருந்தால்தானே சித்திரம் எழுத முடியும்? உடல் வ..மாக இருந்தால் தான், உருப்படியான செயல்களைச் செய்ய முடியும் என்பதைச் சொல்லாமல் சொல்கிறது இந்நூல். அன்றாட வாழ்வில் நாம் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய பல அறிவியல் குறிப்புகள் பொதிந்துள்ளன.

### கவிதைக் கனிகள்

**ஆசிரியர்:** அகரம் பெருமான் மைந்தன்,

**வெளியீடு:**

பிரபாவதி பப்ளிகேஷன்ஸ்,
88, எல்.ஜி.பி.லைன்,
புதுப்பேட்டை, சென்னை-2.

பக்கம்:112 விலை:ரூ.14/-

சிந்தனையின் சிதறல்கள் கவிதைகளாக உருவெடுத்திருக்கின்றன. தமிழ் மொழி, நாடு, பெண்ணுரிமை ஆகியவற்றோடு இயற்கைக் காட்சிகள் குறித்தும் இதயம் திறந்து பாடுகிறார் ஆசிரியர்.

### மாறிவரும் சமுதாயத்தில் மகளிர்

**ஆசிரியர்:** கோக்கோதை

**விற்பனை உரிமை:**

ஐந்திணைப் பதிப்பகம்,
279, பாரதி சாலை,
சென்னை-600 005.

பக்கம்: 81 விலை:ரூ. 15/-

இளஞ்சமுதாயம் முன்னேறவும், பெண் சமுதாயம் மறுமலர்ச்சி பெறவும் நல்ல பல கருத்துக்களைக் கூறும் ஆசிரியர், பெண்கல்வி, பெண் உரிமை, தாய் மொழிக் கல்வி முதலான கருத்துக்களையும் அலசி ஆராய்கிறார்.

### சூரிய நாற்றுகள்

**ஆசிரியர்:** ரவீந்திர பாரதி

**வெளியீடு:**

* தி நியூ செஞ்சரி புக் ஹவுஸ்
பிரவேட் லிமிடெட், சென்னை-98.

பக்கம்:60 விலை:ரூ.6/-

புதுக்கவிதைகளின் அழகிய தொகுப்பு. பாரதியைப் பற்றிக் கூறுகையில்,
'இந்தப் பூமியில்
முளைத்து
வானத்தை பிடிக்கும்
கவிதை மலை'
என்கிறார் கவிஞர்.

### திருவள்ளுவரின் நல்வழிக் கதைகள்

**ஆசிரியர்:** முருகானந்தன்

**வெளியீடு:**

தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு)
சென்னை-94.

பக்கம்:96 விலை:ரூ.12/-

வாழ்வாங்கு வாழ வழிவகை சொன்னவர் வள்ளுவர். அவரது கருத்துக்கள் அழகாகப் படம் பிடித்துக் காட்டப்படுகிறது கதை வடிவில். குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களும் படிக்கலாம்.

### புற்றுநோயைத் தடுக்க சித்த வைத்தியம்

**ஆசிரியர்:** சீதாராம் சுப்பிரமணியம்

**வெளியீடு:**

தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு),
சென்னை-600 094.

பக்கம்:96 விலை:ரூ.12/-

மனிதனை வருத்தும் நோய்களுள் புற்று நோயும் ஒன்று. இது எப்படி ஏற்படுகிறது? ஆரம்ப அறிகுறிகள் என்ன? என்பது குறித்த தகவல்களுடன், இந்நோயைச் சித்த மருத்துவ முறைபடிக் குணமாக்கும் வழிவகை குறித்தும் கூறுகிறது இந்நூல்.

### கவிஞர் போற்றும் அம்பேத்கர்

**தொகுப்பாசிரியர்:** புலமைதாசன்

**வெளியீடு:**

புலமைப் பதிப்பகம்,
10, பார்த்தசாரதி சந்து,
சென்னை-600 005.

பக்கம்:128 விலை:ரூ.25/-

சமுதாயத்தின் விடிவெள்ளியாகத் திகழ்ந்த டாக்டர் அம்பேத்கரின் அருமை பெருமைகளை விளக்கிடும் கவிதைத் தொகுப்பு. பக்கத்துக்குப் பக்கம் கவிதைகள் அண்ணலின் அரிய பணிகளைப் பறை சாற்றுகின்றன.

—பொ. மறைமலை.

### அறிஞர் அண்ணா ஒரு சகாப்தம்

**ஆசிரியர்:** பூவை அமுதன்

**வெளியீடு:**

கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்,
92, கங்கை அம்மன் கோயில் தெரு,
சென்னை-600 026.

பக்கம்:112 விலை:ரூ.14/-

பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளோடு, அவர் ஆற்றிய அரும்பணிகளும் தொகுத்துக் கூறப்பட்டிருக்கின்றன எளிய, இனிய நடை.

### வர்மக் கலையும் வைத்தியமும்

**ஆசிரியர்:**

டாக்டர் சீதாராம் சுப்பிரமணியம்

**வெளியீடு:**

கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்,
92, கங்கையம்மன் கோயில் தெரு,
சென்னை-600 026.

பக்கம்:128 விலை:ரூ.16/-

போர்க் கலைகளில் ஒன்று வர்மக் கலை. சித்தர்களால் உருவாக்கப்பட்ட இதை, எப்படியெல்லாம் மருத்துவ ரீதியாகப் பயன்படுத்தலாம் என்பது படங்களுடன் விளக்கப்பட்டிருக்கிறது.



## திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில்

# குடிநீர்த்திட்டப் பணிகள்

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் உள்ள 14 ஊராட்சி ஒன்றியங்களில் 4,553. கைப் பம்புகள். இரண்டு இந்திய மார்க் ஆழ்துளைக் கிணறுகள் உள்ளன. இவற்றுள், நீர் ஆதாரமின்மையால் 229 பம்புகள் நிரந்தரமாகப் பயனற்றவையாக உள்ளன. 258 பம்புகள் வறட்சி காரணமாகப் பயனற்று உள்ளன. பிற பம்புகளில் ஏற்படும் சிறு பழுதுகள் 48 மணி நேரத்திற்குள் சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



**விசைப் பம்புகள்**

இம்மாவட்டத்தில் 1,059 விசைப் பம்புகள் உள்ளன. இவற்றுள் 138 பம்புகள் நிரந்தரமாகப் பயனற்று உள்ளன. பிற பம்புகளில் ஏற்படும் பழுதுகளான மோட்டார் ரீவைண்டிங், ஸ்டார்ட்டர் ரிப்பேர் போன்றவை ஐந்து நாள்களுக்குள் பழுது நீக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் கோடை காலத்தில் ஏற்படும் குடி தண்ணீர்த் தட்டுப்பாட்டை முன்கூட்டியே எதிர்நோக்கி, குடிநீர்ப் பிரச்சினைகளைச் சமாளிக்க தற்போது மாவட்டத்தில் நிலவும் குடிநீர்த் தேவைகளைக் கருத்தில் கொண்டு குடிநீர் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.301.063 இலட்சம் நிதியுதவி கோரி அரசுக்குச் செயற் குறிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

இத்தொகையைக் கொண்டு 440 புதிய ஆழ்துளைக் கிணறுகள், 91 பைப் லைன் விரிவாக்கப் பணிகள், 213 ஆழ்துளைக் கிணறுகளைச் சுத்தப்படுத்தும் பணிகள், 177 மாற்று ஆழ்துளைக் கிணறுகள், 1 திறந்தவெளிக்கிணறு, 43 திறந்தவெளிக் கிணறுகளை ஆழப்படுத்துதல், பழைய நீர்த்தேக்கங்களைத் தூர் வாருதல், 2 தனி பீடர் லைன் அமைத்தல், 53 பம்பு செட்டுகள் நிறுவுதல், லாரிகள் மூலம் குடிநீர் வழங்கல் ஆகிய பணிகள் மேற்கொள்ளத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

குடிநீர்த் தேவையை நிறைவேற்ற முதல் தவணையாக அரசு, இம்மாவட்டத்திற்கு ரூ.41 இலட்சம் அனுமதி அளித்துள்ளது. இத்தொகையைக் கொண்டு ரூ.25 இலட்சம் செலவில் 100 ஆழ்துளைக் கிணறுகள், ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஆழ்துளைக் கிணறுகளைத் தூர் வாருதல், ரூ.2 இலட்சம் செலவில் புதிய திறந்தவெளிக் கிணறு அமைத்தல், ரூபாய் ஒரு இலட்சம் செலவில் திறந்தவெளிக் கிணறுகளை ஆழப்படுத்துதல், ரூ.5 இலட்சம் செலவில் லாரிகள் மூலம் குடிதண்ணீர் வழங்குதல்,

• ஒழுக்கம் என்பது சொல்லுகிறபடி நடப்பதும், நடந்தபடி சொல்லுவதுமே ஒழிய தனிப்பட்ட குணங்கள் அல்ல.

—தந்தை பெரியார்

மரம் தனக்காகப் பழுப்பதில்லை
ஆறு தனக்காக ஓடுவதில்லை
சான்றோர் தமக்காக வாழ்வதில்லை.

—குருநானக்

• முயற்சியை எவனொருவன் எப்பொழுது கைவிடுகிறானோ, அப்பொழுது அவன் சக்தி அற்றவனாக விடுகின்றான்.

• ஒரு நாட்டின் நாகரிகத்தை அளக்கும் கோல் அதன் மக்கள் தொகையோ, நகரங்களின் பரப்பளவோ, செல்வத்தின் மிகுதியோ அல்ல. அதில் பிறக்கும் மனிதரின் சிறந்த குணமே ஆகும்.

—எமர்சன்

ரூ.4 இலட்சம் செலவில் பைப் லைன்கள் விரிவாக்கம், ரூ.3 இலட்சம் செலவில் புதிதாக மாற்றுக் குழாய்கள் புதுப்பித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இம்மாவட்டத்தில் வறட்சிக் காலத்தில் வேலை இல்லாத விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு வறட்சி நிவாரணப் பணித் திட்டத்தின்கீழ், நீர்ப்பாசனக் குளங்கள், பழுதுபார்த்தல், தூர் வாருதல், கசிவுநீர்க் குட்டைகள் தூர் எடுத்தல், குறுக்கு அணைகள் கட்டுதல், சாலைகள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு ரூ.202.82 இலட்சம் அரசிடம் ஒதுக்கீடு செய்யக் கோரி செயல் குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளது.

**செயல் திட்டம்**

மாவட்ட அளவிலும், கோட்ட அளவிலும், நகராட்சி அளவிலும், பேரூராட்சி அளவிலும், ஊராட்சி ஒன்றியங்கள் அளவிலும் குடிநீர் விநியோகத்தை உன்னிப்பாகக் கண்காணிக்கச் செயல் திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் 8 முதல் 10 மண்டலங்களாகப் பிரிக்கப்படும். மண்டலங்கள் ஒவ்வொன்றும் ஒரு விரிவாக்க அலுவலரின் தலைமையில் ஊர்நல அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், ஊராட்சி மன்ற உதவியாளர்கள் உதவியுடன் செயல்படும். இவர்கள், கிராமங்களில் உள்ள நீர்நிலை ஆதாரங்களைத் தினமும் சோதனையிட வேண்டும். குடிநீர் விநியோகத்தில் ஏதேனும் தட்டுப்பாடு ஏற்பட்டால் உடனே வட்டார வளர்ச்சி அலுவலரின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும். அல்லது அவசரக் காலப் புகார் புத்தகத்தில் பதிந்து வைக்க வேண்டும். புகார்ப் புத்தகத்தில் பொதுமக்களும் குறைகளை எழுதி வைக்கலாம். கைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகள் 48 மணி நேரத்திலும், விசைப் பம்புகளில் ஏற்படும் பழுதுகள் ஐந்து நாள்களிலும் சரிபடுத்தப்படும்.

கோட்ட அளவில், வெள்ளிக்கிழமைதோறும், கோட்ட வளர்ச்சி அலுவலர் ஊராட்சி ஒன்றிய விரிவாக்க அலுவர்கள், பம்ப் மெக்கானிக்குகள், உதவிப் பொறியாளர் (விசைப் பம்பு பராமரிப்பு) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகத்தைச் சார்ந்த நடமாடும் குழுமம் (Mobile Squad) ஆகியோர் குடிநீர் விநியோகம் பற்றி ஆய்வு செய்வர். தவிரவும், கோட்ட வளர்ச்சி அலுவலரும் ஒரு புகார்ப் புத்தகம் பராமரித்து குடிநீர் விநியோகத்தை உன்னிப்பாகக் கண்காணிப்பார்.

பேரூராட்சிகளைப் பொறுத்த வரையில், செயல் அலுவலர்கள், புகார் புத்தகம் பராமரித்தும், மாலை நேரங்களில் தெருக் குழாய்களைப் புலத் தணிக்கை செய்தும் நிர்ணயிக்கப்பட்ட கால அவகாசத்திற்குள் பழுது பார்க்கும் பணிகளை மேற்கொள்ளும் குடிநீர் விநியோகப் பணிகளைக் கவனித்து வருவார். மாவட்டப் பேரூராட்சிகளின் அலுவலர் குடிநீர் விநியோகப் பணிகளைக் கண்காணித்து வருவார்.

நகராட்சிகளைப் பொறுத்தவரை, ஒவ்வொரு நகராட்சியும், நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, நகராட்சி ஆணையர், சுகாதார அலுவலர், நகராட்சிப் பொறியாளர், நகர்ப்புறத் திட்ட அலுவலர் ஆகியோரின் தலைமையின்கீழ் குடிநீர் விநியோகப் பணிகள் கண்காணிக்கப்படும். அவர்களும் புகார்ப் புத்தகங்களைப் பராமரித்து வருவார்கள்.

மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒவ்வொரு திங்கட்கிழமையும் குடிநீர் விநியோகப் பணிகள் பற்றிய அறிக்கை அளிக்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவற்றை ஆய்வு செய்வார்.

குடிநீர் விநியோகப் பணிகளில் கண்காணிப்பு முறையை மேலும் நெறிப்படுத்த மாவட்ட அளவிலான அலுவலர்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் பேரூராட்சிகளுக்கும் மண்டல அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மண்டல அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளில் விரிவான சுற்றுப்பயணம் செய்து, குடிநீர் விநியோகப் பணிகளைக் கண்காணிப்பார்கள்.

எம். பிச்சையா
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்



# வாழ்வு தரும் வசம்பு

- டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்

**ப**ல ஆண்டுகளாகவே நமது முன்னோர்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் வீட்டில் உள்ளவர்களுக்கு வேண்டிய மருத்துவத்தைத் தாங்களே செய்து வந்துள்ளனர். 'பாட்டி வைத்தியம்' என்பது இப்படிப்பட்ட குடும்ப வைத்திய முறையேயாகும். இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய நம் முன்னோர், இயற்கையில் கிடைக்கும் மூலிகைத் தாவர வர்க்கங்களின் பயனை அறிந்து, அவற்றை உடல் பிணிகளுக்கான மருந்துகளாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். இப்படிப்பட்ட மூலிகைகளில் வசம்பும் ஒன்று.

வசம்பு இந்தியா, பர்மா, வட அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகளில் விளையக்கூடிய ஒரு விதப் பூண்டு இனம். இதன் இலை பசுமையான நீண்ட ஓலைகளாகக் காணப்படுகிறது. இதன் தண்டின் மேல் சற்று சாம்பல் படிந்த நிறம் இருக்கும். இதன் வேரைத்தான் 'வசம்பு' என்கிறார்கள். வசம்பிற்கென்று ஒருவிதத் தனி மணமுண்டு. இது வாணிப ரீதியிலும் பயிர் செய்யப்படுகிறது.

**தீரும் நோய்கள்**

இரத்த பித்தம், இரணப்புண்கள், வாய்நாற்றம், சூலை, கால் ஆணி, முப்பிணி, இருமல், ஈரல் நோய்கள், யானைக் கால், வயிற்றில் காணப்படும் புழு எல்லாவிதமான நஞ்சுகள், வாயு, சொறி-சிறங்கு, செரியாமை, பேதி, வயிற்றுப் பொருமல் போன்ற நோய்களைப் போக்கும் ஆற்றல் வசம்பிற்கு உண்டு.

குழந்தைகளுக்கு வரும் இருமல், சளி, காய்ச்சல், வயிற்று நோய் அகல, வசம்புடன் அதிமதுரத்தைச் சேர்த்துக் காய்ச்ச வேண்டும். காய்ச்சியவுடன் இறக்கி வடிகட்டி, அந்த நீரைக் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும்.

தொண்டைக் கம்மல், இருமல் நீங்க வசம்புத் துண்டைச் சிறிதளவு வாயில் போட்டுச் சுவைத்தால் வாயில் நீர் பெருகும். அப்போது ஒருவித அனல் எழும்பும். இதனால் தொண்டைக் கம்மல், இருமல் ஆகியவை நீங்கும்.

பசியின்மை, செரியாமை, வயிற்றுப் பொருமல் ஆகியவற்றிற்கு இரண்டு தம்ளர் நீரை நன்றாகக் காய்ச்சி, அது கொதிக்கின்றபோது சிறிது வசம்பு போட்டு ஊற வைத்து, பிறகு வடிகட்டி, அந்த நீரைப் பருகவேண்டும். அத்துடன் குழந்தைகளுக்கு உண்டாகும் பேதி, காய்ச்சல் ஆகியவற்றையும் இது தடுக்கும்.

நாள்பட்ட கீல்வாத நோய்களுக்கு-காசுக்கட்டியுடன் சிறிது வசம்பும் சேர்த்து நீர்விட்டு அரைத்துப் பற்றுப்போட நாளடைவில் கீழ்வாத நோய் நீங்கும்.

குழந்தைகளுக்கு அடிக்கடி வரும் மாந்தம், இழுப்பு, வயிற்று நோய் ஆகியவற்றிற்கு, வசம்புத்துண்டு ஒன்றை நெருப்பில் சுட்டு எடுத்தால் கரியாகும். இந்தக் கரித்தூளுடன் தேன் கலந்து குழந்தையின் நாக்கில் தடவ வேண்டும்.

வயிற்றுப் பொருமல் நீங்க-சிறிதளவு வசம்பை எடுத்துச் சுட்டுக் கரியாக்கி, அதனுடன் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், விளக்கெண்ணெய் (ஆமணக்கு எண்ணெய்) ஆக மூன்று எண்ணெய்களையும் சிறிய அளவில் கலந்து குழைத்து அடிவயிற்றில் பூச, வயிற்றுப் பொருமல் நீங்கும்.

விஷக் காற்று ஏற்பட்டால், விஷக் காற்றால் நோய்கள் பரவும்; அக்காலத்தில் கொஞ்சம் வசம்பை எடுத்து வாயில் போட்டு மெல்லுவது உடலுக்கு நல்லது.

செரியாமை, உடல் வலிகள், மந்தம், மந்தக் காய்ச்சல், வயிற்றுப் பொருமல் ஆகியவற்றிற்கு வசம்பு, பெருங்காயம், அதிவிடயம், திப்பிலி, மிளகு, சுக்கு, கடுக்காய்த்தூள், இந்துப்பு ஆகியவற்றை நம் உபயோகத்திற்குத் தகுந்தாற்போல் வாங்கி, எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து, அம்மியில் தட்டித் தூள் செய்து எடுத்துக் கொள்ளவும். நமக்கு வேண்டிய போது அத்தூளில் சிறிது எடுத்து வாயில் போட்டுத் தண்ணீர் அருந்த நாளடைவில் நோய்கள் நீங்கி நலம்பெறும்.

குழந்தைகளின் வயிற்று நோய்க்கு வசம்பைச் சுட்டுக் கரியாக்கி, தாய்ப் பாலில் இழைத்து நாவில் தடவினால் குழந்தைகளின் வயிற்றுவலி தீரும்.

நாள்பட்ட வெள்ளை நீங்க, வெள்ளைக் குங்கிலியம் 18 கிராம், காசுக்கட்டி 5 கிராம், மேல்தோல் நீக்கிய பூண்டு 5 கிராம், வசம்பு 5 கிராம் ஆகியவற்றை ஒன்றுசேர்த்து அம்மியில் வைத்து இடித்து, அரைப் படி நல்லெண்ணெயில் போட்டுச் சூரியபுடம் வைத்து வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் 15 நாள் சாப்பிட நாள்பட்ட வெள்ளை நீங்கும். குறிப்பு: பத்தியம் - ஆவின்பால், நெய், தயிர் சேர்க்கவும்.

திக்குவாய் குணமாக, சிறிது வசம்பை எடுத்துச் சுத்தம் பார்த்து, அம்மியில் வைத்துத் தட்டித் தூள் செய்து, சிறிது தூளைத் தேனில் குழைத்து, அதிகாலையில் தினமும் உட்கொண்டு வந்தால், திக்குவாய் குணமடையும். குறிப்பு: தொடர்ந்து ஒரு மண்டலம் (40 நாட்கள்) சாப்பிட்டு வந்தால் குணமடைவது நிச்சயம்.

கால் ஆணி மறைய, மஞ்சள் 5 கிராம், வசம்பு 5 கிராம், இரண்டையும் அம்மியில் வைத்து, கைப்பிடியளவு மருதாணி (மருதோன்றி) இலையையும் சேர்த்து நீர்விட்டு, மை போல அரைத்து, கால் ஆணி உள்ள இத்தில் அடைபோலக் கனமாக வைத்து, மேலே ஒரு வெற்றிலையை வைத்துத் துணியினால் இறுகக் கட்டிவிட வேண்டும். படுக்கும்முன் இதைச் செய்ய வேண்டும். இதே மாதிரி தொடர்ந்து அரை மண்டலம் (20 நாட்கள்) வரை கட்டி வந்தால் கால் ஆணி இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும். ஆனால், இதைத் தினமும் புதியதாகவே அரைத்துக் கட்டவேண்டும்.

காலரா பேதி நிற்க, வசம்பு 10 கிராம் எடுத்து சுத்தம் பார்த்து ஒரு



பாத்திரத்தில் போட்டு அதில் போதுமான அளவு தண்ணீர் ஊற்றி நன்கு காய்ச்சி ஊறவைத்து எடுத்து வடிகட்டி அருந்த காலரா என்ற தொத்து நோய் வராமல் தடுக்கலாம். மேலும், காலரா நோய் கண்டவர்கள் 15 நிமிடத்திற்கு ஒரு முறை இவ்வாறு அருந்திவரும் பட்சத்தில் பேதி நின்று நலம் காணும்.

மேலும், இதே செய்முறையை முறைக் காய்ச்சல், துர்மலம், வயிற்றுப் பொருமல், அஜீரணம், வாதநோய்கள், சொறி-சிரங்கு ஆகியவற்றிற்கும் தரலாம். சிறுவர்களுக்கு இதில் பாதி அளவு தரவேண்டும். இவ்வாறு செய்தால் இந்த நோய்கள் நீங்கி நலம் பெறலாம்.

நரம்புத் தளர்ச்சி மற்றும் வாய்நாற்றம் நீங்க, வசம்புத் துண்டை எடுத்துத் தூளாக்கிப் பொடி செய்து வைத்துக் கொண்டு 3 கிராம் அளவு எடுத்து வாயில் போட்டுச் சுவைத்து வெந்நீர் அருந்த நாளடைவில் நரம்புத் தளர்ச்சி மற்றும் வாய் நாற்றம் ஆகியவை நீங்கி நலம் பெறும்.

முளை மூலத்திற்கு வசம்பு 10 கிராம், பிரதமண்டிக் கிழங்கு 10 கிராம், மிளகு 5 கிராம், இவற்றை அம்மியில் வைத்துத் தூள் செய்து ஒரு புட்டியில் சேமித்து வைத்துக் கொள்ளவும். காலை- மாலை, திரிகடிப்பிரமாணம் - அதாவது (மூன்று விரல்களால் சேர்த்து எடுக்கும் அளவு) எடுத்து வாயில் போட்டு நீர் அருந்த, நாளடைவில் முளை மூலம் கரைந்து நலமாகும். குறிப்பு: புளி, கடுகு, நல்லெண்ணெய் ஆகாது. உப்பு வறுத்துச் சேர்க்கவும். புளி சுட்டுச் சேர்க்கவும்.

நாய் ஈ காதில் புகுந்தால் அது சாவதற்கு மருந்து வசம்பு, தொட்டாற்சுருங்கி, வெங்காயம், மூன்றை நசுக்கி காதில் பிழிந்தால் காதில் புகுந்த ஈ சாகும்.

நமைச்சல், சொறி நீங்க, இந்துப்பு 35 கிராம், எடுத்துத் தூள் செய்து வசம்பு 9 கிராம் தூள் செய்து, இரண்டையும் கலந்து வெண்ணெய் போட்டுக் குழைத்துக் காலையில் உடம்பு முழுவதும் பூசி, பகலில் சியக்காய் தேய்த்துக் குளித்து வந்தால் நாளடைவில் நமைச்சல், தடிப்பு, சொறி ஆகியவை நீங்கும்.

வசம்புக்கென ஒருவித நறுமணம் உண்டு. உடலிலுள்ள தொற்றுக் கிருமிகளை அழித்து, உடலில் தங்கிய நஞ்சுகளையும் முறிக்கும் ஆற்றல் வசம்பிற்கு உண்டு. வசம்பை ஆங்கிலத்தில் Glucoside Aeorinஎன்பார்கள். வசம்பு ஒரு குழந்தை ஸ்பெஷலிஸ்ட் மூலிகை. தமிழகத்தின் பல வீடுகளில் வசம்பு வளர்க்கப்படுவதைக் காணலாம். வசம்பு உண்மையில் ஒரு வாழ்வு தரும் மூலிகையே ஆகும்!



## வெப்பம் தணிக்கும் வேப்ப மரம்!

வெப்பம் தணிக்கும் வேப்ப மரம். ஆம். இது அம்மை நோய் தீர்க்கும் மரம்.

வேப்ப மரம் எக்காலத்திலும் பசுமையாகக் காட்சியளிக்க கூடிய ஒரு சிறந்த மரம். இது பொதுவாக 14 முதல் 16 மீட்டர் உயரமும் 3 முதல் 4 மீட்டர் சுற்றளவும் வளரக்கூடிய மரமாகும். இதன் இலைகள் மார்ச்சு, ஏப்ரலில் உதிரத் தொடங்கும். இம்மரத்தின் மூலம் ஊடுருவி சுத்தப்படுத்தப்பட்டு வரும் காற்று பல நோய்களை தீர்க்கக் கூடியதாகும். இது ஓர் நல்ல நிழல் கொடுக்கும் மரம் ஆகும்.

வளரும் இடம்:

தென்னகத்தில் சாதாரணமாக எல்லா இடங்களிலும் வளர்கின்றது. குளிர்ப் பிரதேசங்களில் இது வளராது. கடல் மட்டத்திலிருந்து 1000 மீட்டர் வரை உயரமுள்ள இடங்களில் எத்தகைய வெட்ப நிலையிலும் எல்லாவித மண்ணிலும் வளரக் கூடியது. எனினும் சிறப்பாக களி மண்ணிலும் கரிசல் நிலங்களிலும் நன்கு வளரும். வறண்ட ஆழம் குறைந்த கற்கள் நிறைந்த மண்ணிலும், சுக்கான் மண்ணிலும், மற்ற எந்த மரங்களையும் விட பசுமையாக வளரக் கூடியது. நீர் தேங்கி இருக்கும் இடங்கள் இதற்கு உகந்ததல்ல. ஆண்டுக்கு 450 மி. மீட்டரிலிருந்து 1,100 மி.மீட்டர் வரை மழை கிடைக்கும் இடங்களில் இம்மரம் வளரக்கூடியது.

வளர்க்கும் இடம்:

வரப்பு ஓரங்களிலும், கிணற்று மேடுகளிலும், வீட்டு வளாகத்திலும், தரிசு நிலங்களிலும், சாலை ஓரங்களிலும் மேய்ச்சல் தரைகளிலும் இதை சுலபமாக வளர்க்கலாம். இதை விவசாயப் பயிர்களுடன் நட்டுப் பயன் பெறலாம்.

விதை சேகரம், மரம் வளர்ப்பு முறை:

ஜூன் முதல் ஆகஸ்டு வரை பழங்கள் கிடைக்கும். பின்னர் தரமான மரங்களிலிருந்து விதைகளைச் சேகரித்து 15 தினங்களுக்குள் நேரடியாக விதைகளை ஊன்றியோ அல்லது நாற்றங்காலில் நாற்று விட்டு, கன்றுகளாகவோ நடலாம். பாலிதீன் பைகளில் விதைகள் ஊன்றியும் கன்றுகள் வளர்க்கலாம். 3 மீட்டர் இடைவெளிகளில் 30 செ.மீ. கன சதுரக் குழிகள் எடுத்து 15 நாட்கள் ஆறப்போட்டு ஓரிரண்டு மழை கிடைத்தவுடன் "ஆடிப்பட்டம் தேடி விதை" என்னும் பழமொழிக்கு இணங்க கன்றுகளை நடுவது சிறப்பானது.

பயன்கள்:

இம்மரத்தின் இலைகள், பூக்கள், பட்டைகள் நோய் தீர்க்கும் இயற்கை மருந்தாகும். இம்மரத்தை நோய் தீர்க்கும் மரம் என கூறலாம். இம்மரம் கட்டட வேலைகளுக்கும் மரச்சாமான்கள் செய்யவும், வேளாண்மைக் கருவிகள் செய்யவும் பயன்படுகின்றது. இம்மரத்தின் விதைகளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய், சோப்பு மற்றும் பற்பசை செய்யவும் பயன்படுகின்றது. சமீப காலங்களில் வேப்பெண்ணெய் கலந்து பூச்சிக்கொல்லி மருந்துகள் விவசாயப் பயிர்ப் பாதுகாப்புக்குப் பயன்படுத்தப்படுகிறது.

## மாணவர் பக்கம்

# அறிவுச்சுடர்

தொலைக்காட்சி

நாம் நாள்தோறும் தொலைக்காட்சியை ரசித்துப் பார்க்கிறோம். அது எப்படி நம் வீட்டிலுள்ள தொலைக்காட்சிப் பெட்டியில் தெரிகிறது?

தொலைக்காட்சி நிலையத்தினுள் ஒலி, ஒளிபரப்பப்படும் அலைகள் காற்றிலுள்ள ஈதர் மூலம் வந்து நம் வீடுகளில் தொலைக்காட்சிப் பெட்டியுடன் இணைக்கப்பட்டிருக்கும் ஏரியலில் மோதுகிறது. அவை ஈர்க்கப்பட்டு, தொலைக்காட்சிப்பெட்டியில் ஒளியைக் காண்கிறோம். ஒலியைக் கேட்கிறோம்.

பூமி அதிர்ச்சி

இப்பொழுதெல்லாம் உலகின் பல பாகங்களில் பூமி அதிர்ச்சி ஏற்படுவதைக் காண்கிறோம். ஏன், சில நாட்களுக்கு முன்னர் சென்னையில் கூட சிறு பூமி அதிர்ச்சி ஏற்பட்டதாக அறிகிறோம். அது எதனால் ஏற்படுகிறது?

பூமிக்கு அடியில் ஏற்படும் சில நில மாறுதல்கள் காரணமாகப் பக்கவாட்டிலும், செங்குத்தாகவும் நெகிழ்வுகள் ஏற்படுகின்றன. இதனால் பூமி இலேசாக உள்ள இடத்தை உடைத்துக் கொண்டு மண் சூடான திரவமாக வெளிவருகின்றது. சில சமயங்களில் திரவம் வெளிவராமல் நில நடுக்கம் ஏற்படும். இதையே பூமி அதிர்ச்சி என்கிறோம். இது சில நொடிகள் இருந்தாலும் ஏற்படும் விளைவு மிகப் பயங்கரமானது. பூமி அதிர்ச்சி, ஜப்பான், இந்தோனேசியா, துருக்கி, இத்தாலி போன்ற நாடுகளில் அதிகம் ஏற்படுகிறது.

இந்தியாவில் முக்கிய தாதுப்பொருட்களும் அவைகள் கிடைக்கும் இடங்களும்

| | | |
|---|---|---|
| அலுமினியம், | | |
| தோரியம் | - | கேரளா |
| ஆஸ்பெஸ்டாஸ் | - | மைசூர் |
| பாக்ஸைட் | - | பீகார், மகாராஷ்டிரம் |
| துத்தநாகம் | - | இராஜஸ்தான் |
| யுரேனியம் | - | பீகார் |
| நைட்ரேட் | - | பீகார், உத்திரப் பிரதேசம் |
| மைகா | - | பீகார், தமிழ்நாடு |
| வெள்ளி | - | மைசூர், பீகார், தமிழ்நாடு |
| சலவைக்கல் | - | ஜெய்ப்பூர் |
| மாங்கனீசு | - | மத்தியப் பிரதேசம் |
| லிக்னைட் | - | நெய்வேலி (தமிழ்நாடு) |
| தாமிரம் | - | பீகார், இராஜஸ்தான் |
| சீனக்களிமண் | - | இராஜஸ்தான், பீகார் |
| சிமெண்ட் | - | மத்தியபிரதேசம், இராஜஸ்தான் |

— தொகுப்பு: ஸ்வீட்லின் பிரபாகரன்




சாலைகள் ஓரம் மரம் வைப்போம்!
சாலவும் போற்றி அதைக்காப்போம்!
ஆலைகள் சுற்றி மரம் நடுவோம்
ஆர்வமாய்க் காத்து வளர்த்திடுவோம்!
மேலைய நாடும் வியப்புறவே
மேவியே மரங்களைக் காத்திடுவோம்!
சோலைகள் சூழும் நாடாக
சோதரரேநாம் மரம் வளர்ப்போம்

காற்றிலும் மாசுகள் சேராது
காட்டிலும் விலங்கினம் அழியாது
தூற்றிடும் காற்றால் மண்வளமும்
தூரப்பறந்தும் போகாது!
ஆற்றிலும் நீர்வளம் குறையாது
அணைகளில் வறட்சி நிலவாது!
மாற்றமும் மண்மேல் நிகழாது
மணல்வெளி, அரிப்பும் தோன்றாது!

ஆலைப் புகையும் தெளிவடையும்
ஆகாயத்தும் குளிர் நிலவும்
நூலை நூற்கும் ஆலையிலும்
நூதன நச்சும் பரவாது!
வேலைப் பஞ்சம் ஒழிந்து விடும்!
வேண்டிய மழையும் பொழிந்துவிடும்!
காலை மாலை எப்போதும்
கார்முகில் வானில் தவழ்ந்தோடும்!

### ரயில் பயணம்

• இந்திய மக்கள் தொகையில் 1.2 சதவீத மக்கள் நாள்தோறும் ரயில் பயணம் செய்கின்றனர். சரக்கு, பயணியர் போக்குவரத்து ஆண்டுதோறும் ஐந்து சதவிகிதம் அதிகரித்து வருகிறது. 63,000 கிலோ மீட்டர் நீளத்திற்கு மீட்டர் கேஜ் மற்றும் குறுகிய ரயில்பாதையில் 45 சதவிகிதத்தினை அகல ரயில்பாதையாக மாற்றத் திட்டமிடப் பட்டுள்ளது.

இதில் 6,000 கிலோ மீட்டர் நீளம் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அகல ரயில்பாதையாக மாற்றப்படும். ஆண்டுதோறும் 700 கிலோ மீட்டர் இருப்புப்பாதை மின்மயமாக்கப்பட்டு வருகிறது. 3,000 கிலோ மீட்டர் நீளத்துக்கு ரயில் பாதை ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.








# ஒவ்வொரு வீட்டிலும் விளக்கேற்றி வைப்பதே என் வாழ்நாள் நோக்கம்!

''வெளிச்சம்'' மது விலக்குப் பிரச்சார நாடக அரங்கேற்ற விழாவில்

## மாண்புமிகு முதல்வரின் உரை

தமிழக அரசு ரூ.2 இலட்சம் செலவில் தயாரித்த 'வெளிச்சம்' என்ற மதுவிலக்குப் பிரச்சார நாடகத்தின் அரங்கேற்ற விழா, சென்னை மியூசிக் அகாடெமி கலையரங்கத்தில் 1.5.1992 அன்று நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழாவில் கலந்து கொண்டு, இந்த மதுவிலக்குப் பிரச்சார நாடகத்தைத் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், தமிழ் நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் திரு குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள் கலந்து கொண்டு அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், மதுவிலக்குப் பிரச்சாரத்துக்குத் திரைப்படமும், நாடகமும் சக்திவாய்ந்த சாதனங்கள், வீடியோக்கள் மூலமும், இசைப்பாடல்கள், கேசட்டுகள் மூலமும் மதுவிலக்குப் பிரச்சாரத்தைப் பட்டிதொட்டிகளிலெல்லாம் பரப்ப ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

வரவேற்புக்குப் பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு உள்துறைச் செயலர் திரு கே. மலைச்சாமி, இ.ஆ.ப., அவர்கள் பொன்னாடை அணிவித்தார். தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பாகவும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் உறுப்பினர்- செயலர் நடிகர் திரு ஆர்.எஸ். மனோகர் அவர்கள் திட்ட விளக்கவுரையாற்றிப் பேசுகையில், இந்த 'வெளிச்சம்' மதுவிலக்குப்

## விமர்சனம்:

# வெளிச்சம்

நேஷனல் தியேட்டர்சின் 'வெளிச்சம்' என்னும் மதுவிலக்குப் பிரச்சார நாடகம், சென்னை மியூசியம் அகாடமியில் அரங்கேறியது.

குடியின் கொடுமையை மையமாக வைத்துக் கதை சித்திரிக்கப்பட்டிருக்கிறது. 'வேதம் புதிது' கண்ணன் இதன் கதை வசனம் பாடல்களை எழுதியுள்ளார். முதல் முறையாக நாடகத்துக்கு இசையமைத்துள்ளார் குன்னக்குடி வைத்தியநாதன். நடன அமைப்பு இந்திரா ராஜன். நாடகத்தை இயக்கி, தயாரித்திருப்பவர், நாடகக் காவலர் ஆர்.எஸ். மனோகர்.

வாத்தியார் ஒருவரின் மகன் பெருங்குடிகாரன். அவன் மனைவி அவனைத் திருத்த முற்படுகிறாள். அந்த ஊரில் உள்ள அயோக்கியன் ஒருவன் கள்ளச்சாராயம் காய்ச்சி ஊர் மக்களையே கெடுக்கிறான். இந்த இரு திறத்தாருக்கும் நடக்கும் மனப் போராட்டங்களை உருவகப்படுத்தும் கதையே இந்நாடகம்.

முதல் காட்சியில் இடம் பெறும் 'கும்மியடி பெண்ணே கும்மியடி' எனும் குழு நடனம் நாடகத்துக்கு முத்தாய்ப்பாக விளங்குகிறது.

கள்ளச் சாராயம் காய்ச்சும் காட்சி, தத்ரூபமாகக் காட்டப்பட்டிருக்கிறது. சாராயத்தைக் குடித்துவிட்டு வீதியிலே வீழ்ந்து கிடக்கும் காட்சியும், அதையொட்டிய பாடலும் பொருத்தமாக உள்ளன.

இடையே இந்திய அன்னை பேசுகின்ற இனிய குரலும், அதையொட்டிய காட்சியமைப்புகளும் அருமை.



இந்நாடகத்தில் வரும் வாத்தியார், ஒரு நேர்மையான பாத்திரம். நடிப்பில் அதோடு ஒன்றி விடுகிறார். 'அப்பன் காந்தியவாதி... மகன் பிராந்தியவாதி...' என்று தந்தை (வாத்தியார்) மகனிடம் பேசும்போது அவரது ஏக்கம் தொனிக்கிறது. நல்ல நடிப்பு. அவரது மகனாக வரும் பெருங்குடியன், தோற்றத்திலும் சரி, வசன அமைப்பிலும் சரி அனைவரையும் கவர்ந்து விடுகிறார். அவரது மனைவியாக வருபவரும் - முதலில் வங்கி அலுவலராகவும், பிறகு காவல்துறை அதிகாரியாகவும் வந்து அசத்தி விடுகிறார்.

பரம்பரை நகையை மருமகளிடம் கொடுக்க, அதைச் சமயம் பார்த்து குடிகாரக் கணவன் திருடிச் செல்ல 'மோசம் பண்ணிட்டானே! என்று தந்தை (வாத்தியார்) புலம்ப... இந்த ஒரு காட்சி போதும் குடிகாரர்களின் மனத்தை மாற்ற!

'மகன் குடியின் பழககத்திலிருந்து விடுபட வேண்டும். அவன் மற்றவர்களைப் போல நல்லவனாக வாழ வேண்டும். அவன் மனம் திருந்த வேண்டும்' என்பதில் தந்தைக்கு இருக்கும் அதே உறுதி, அவன் மனைவிக்கும் இருப்பதைக் கதையோட்டத்திலே காண முடிகிறது. அந்தத் தளராத உறுதியே அவர்களது தன்னம்பிக்கைக்கு உரமூட்டுகிறது.

இடையிலே வரும் நாட்டாண்மைக்காரர், வங்கி மேலதிகாரி போன்றவர்கள் நடிப்பில் சோடை போகவில்லை.

'குடிகாரனுக்கு மனைவியாக இருப்பதே ஒரு கொடுமைதான்' என்பதைச் சொல்லாமல் சொல்ல வைக்கிறது அந்தப் (குடிகாரனின் மனைவி) பாத்திரம்.

அதற்கு மெருகேற்றும் வகையில் அவர் திறம்பட நடித்திருக்கிறார்.

குடிகாரனின் மனைவி வங்கி



அலுவலராகப் பணியில் சேர்ந்து பிறகு படித்து, காவல்துறை அலுவலராகப் பதிவியேற்றபின், 'அம்மா! நீ மதுவை ஒழிக்க உறுதி எடுத்துக்கணும்!' என்று மாமனார் ஆணையிட' மருமகள் அதை ஒரு சவாலாக ஏற்று வீறு நடைபோடும் போதும்-

அடிபட்ட மகனுக்கு ரத்தம் செலுத்த நீ 48 மணி நேரம் குடிக்காமல் இருக்க வேண்டும் என்று தந்தை மன்றாடும் போதும்-

கட்டிய மனைவி காலைப் பிடித்துக் கொண்டு, குடிக்க வேண்டாம் என்று கதறிக் கதறி அழுகிற போதும்-



வாத்தியார், அடிபட்டு மயங்கிக் கிடக்கும் சிறுவனைக் கையிலேந்தி, தன் மகன் காலிலே கிடத்தி, மகன் காலையே பிடித்துக் கண்ணீர் சிந்துகின்ற காட்சியின் போதும் - நம் இதயம் கனக்கின்றது; இமைகள் நனைகின்றன.

இறுதியில் - தந்தையின் மனஉறுதி தாரத்தின் தன்னம்பிக்கை வெற்றி பெறுகிறது. ஆம், அவன் கணவனின் கண்கள் திறக்கின்றன. அவன் தன் தவறை உணர்கிறான்.

தன் தாயின் படத்தின் முன்னே நின்று, 'இனிமே நான் குடிக்கமாட்டேன்!' என்று உறுதி ஏற்கிறான். அந்த உறுதிமொழியிலே, அந்தக் குடும்பத்தினரின் விழிகளிலே மட்டுமல்ல, நம் விழிகளிலேயும் ஆனந்தக் கண்ணீர் துளிர்க்கிறது!

கருத்துக்கினிய காட்சி அமைப்புகள், கண்ணுக்கு இனிய ஒளி அமைப்புகள், காதுக்கினிய இசையமைப்பு எல்லாவற்றுக்கும் மேலாக நாடக இயக்கத்தோடு இழைந்த நாடக அமைப்பு - இவையனைத்தும் பாமர மக்களின் நெஞ்சிலே பதியத்தக்க வகையிலே இருப்பது இந்நாடகத்தின் தனிச்சிறப்பு!

மதுவின் மயக்கத்திலே, மனைவி மக்களை உதறித் தள்ளி இருளிலே மூழ்கிக் கிடக்கும் எண்ணற்ற ஏழை எளியவர்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறது, தமிழக அரசின் மதுவிலக்குப் பிரச்சார மேடை நாடகமான 'வெளிச்சம்'. — பி.வி. கிரி

---

பிரச்சார நாடகத்தை 160 காட்சிகளுக்குக் குறையாமல் தமிழ்நாட்டில் நடத்த வாய்ப்பிருப்பதாகத் தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையுரையாற்றுகையில், 'முதன்முதலில், மதுவிலக்குக் கோப்பில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கையொப்பமிட்டு ஆட்சியைத் தொடங்கினார்' என்று கூறினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் குத்துவிளக்கேற்றி 'வெளிச்சம்' மதுவிலக்குப் பிரச்சார நாடகத்தைத் தொடங்கி வைத்து விழாப் பேருரையாற்றினார். உரைக்குப் பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த மதுவிலக்குப் பிரச் சார நாடகக் கலைஞர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார்.

விழா முடிவில் தமிழக அரசின் உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைச் செயலாளர் திரு கே. மலைச்சாமி, இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவின்றார்.

'வெளிச்சம்' மதுவிலக்குப் பிரச்சார நாடகத்தினை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இறுதி வரை பார்த்தார்.

விழாவில் மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு க. பொன்னுசாமி உட்பட, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



## மாண்புமிகு முதல்வர் உரை

தமிழக அரசின், மதுவிலக்குப் பிரச்சார மேடை நாடகமான, 'வெளிச்சம்' நாடகத்தின் அரங்கேற்ற விழாவில் கலந்துகொண்டு, அதைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தின் தலைசிறந்த நாடகக் கலைஞராகத் திகழும், 'நாடகக் காவலர்' திரு ஆர்.எஸ். மனோகர் அவர்கள், இந்த நாடகத்தினை உருவாக்கும் பொறுப்பினை ஏற்றுள்ளார்கள். அவரது நாடகங்களின் சிறப்பையும், பெருமையையும், தமிழக மக்கள் பல ஆண்டுக் காலமாகவே நன்கு அறிவார்கள். மக்களை விரைந்து கவர்ந்திழுக்கும் கவர்ச்சி பெற்ற திரைப்படங்களுக்கு நிகராக, நாடகங்களை நோக்கி, மக்களை ஈர்த்து வரவழைத்த ஆற்றல் பெற்றவர் அவர்.

### மாபெரும் சாதனை

விஞ்ஞான முன்னேற்றம் அடையாத காலங்களில், மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் மாபெரும் சாதனங்களில், நாடகம் தலையாயதாகக் கருதப்பட்டதோடு, கூத்து, கும்மி, ஒயிலாட்டம் போன்ற நாடோடிக் கலைகளின் பரிணாம வளர்ச்சியாகவும், நிறைவு பெற்ற கலை, நாடகமாகும். நாடகக் கலை மட்டும் அழிந்து போயிருந்தால், இன்றைய தினம், கிராமியக் கலைகளைத் தேடிப்பிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் என்பது, அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய உண்மையாகும்.

அப்படிப்பட்ட நாடகக் கலையே, இப்போது அழிந்து கொண்டு வருகிற பின்னணிக்குத்

## ஒலி-ஒளி மூலமும் மதுவிலக்குப் பிரச்சாரம்!

நாடகம், திரைப்படம் ஆகிய வற்றின் மூலம் தற்போது மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்படும் மது விலக்குப் பிரச்சாரத்தை ஒலி-ஒளிப் பேழைகளின் (ஆடியோ-வீடியோ கேசட்டுகள்) மூலமும் தொடரு வோம்.

முதல் கட்டமாக, தற்போது பிரச் சார நாடகம் அரங்கேறுகிறது. காந்தி அடிகள் பிறந்த தினத்தன்று பிரச் சாரத் திரைப்படம் வெளியாகும். அதன்பிறகு இசைப் பாடல்கள், நிகழ்ச்சிகள் அடங்கிய ஒலி-ஒளிப் பேழைகளின் மூலமும் பிரச்சாரம் தொடரும்.

- 'வெளிச்சம்' நாடக அரங்கேற்ற விழாவில் மாண்புமிகு முதல்வர்.

தள்ளப்பட்டு வருகிறது. இதற்குக் காரணம், High Technique பயன்படுத்தப்படும் நவீன சினிமா, டி.வி. போன்ற சாதனங்களின் வருகைதான் என்றால், அது மிகையாகாது. விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி அக்கலைகள் வெற்றிபெற்று வந்தா லும், தத்ரூபமாகப் பார்க்கும்போதும், நேருக்கு நேராக நாடகக் கலையை ரசிக்கும்போதும் தான், நாடகக் கலைக்கு இவைகளையெல்லாம் மீறி, இயற்கையாகவே உள்ள உயிரோட்டம், நமக்குத் தெரிய வரும்.

**பாடம் உண்டு படிப்பினை உண்டு!**

ஒரு காட்சியை, நிகழ்ச்சியை, திரைப்படம் எடுக்கும்போது, சரியாக அமையாவிடில், மீண்டும் எடுத்து நிறைவு செய்யலாம். ஆனால், நாடகத் தைப் பொறுத்தவரையில், மக்களுக்கு முன்னே தோன்றும்போது, ஒத்திகைக்கோ, திரும்பத்திரும்ப ஓடிவந்து நடிப்பதற்கோ சந்தர்ப்பம் இருக்காது. ஆகவே, நாடகம், ஒரு நடிகருக்கு மக்களுக்கு முன்னே தரப்பட்ட ஒரே சந்தர்ப்பத்தில், தனது திறமையைப் பதிவு செய்து, பாராட்டுப் பெறும் பழங்கலையாகும் என்பதே, சரியான விளக்க மாகும். அப்படிப்பட்ட திறமை மிக்க நடிகர்களை உருவாக்கி, மக்களுக்குச் சொல்லவேண்டிய கருத் துக்களை, எடுப்பான முறையில் எடுத்துச் சொல் லும் திறமை, திரு ஆர்.எஸ். மனோகருக்கு இருந்ததால் தான், இந்த நாடகத்தை உருவாக்கும் பெரிய பொறுப்பு, அவருக்கு வழங்கப்பட்டது. அவர் புராண இதிகாச நாடகங்களை நடத்தும் போது, நம்மை எல்லாம் அக்காலத்திற்கே அழைத் துச் சென்றுவிடுவார். கற்கால நிகழ்ச்சியைத் தற்காலத்திற்குக் கொண்டுவர அவரால் முடியும்.



சுருக்கமாகச் சொன்னால், அவரது நாடகத்தில் பாடம் உண்டு, படிப்பினை உண்டு, வேடிக்கை உண்டு, விஷயம் உண்டு, இனிமை உண்டு, இன்பம் உண்டு - எல்லாமே உண்டு.

எனவேதான் 'அரசுக்கு, அதுவும் மக்களுக்குப் பாடஞ்சொல்லுகிற மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கு என, ஒரு நாடகத்தை ஆக்கித் தாருங்கள்; அனைத்து மக்களையும் கவரும் அந்த சமுதாயப் பணியில், உங்களை உடனே ஈடுபடுத்திக் கொள் ளுங்கள்', எனக் கேட்டுக் கொண்டேன். அந்தக் கோரிக்கையின் நிறைவேற்றம் தான், இன்றைய 'வெளிச்சம்' நாடகத்தின் அரங்கேற்றம். எனது வேண்டுகோளை ஏற்று, இந்த நாடகத்தை உரு வாக்குவதில் அவர் காட்டிய ஈடுபாடு, எடுத்துக் கொண்ட முயற்சி, அவரது உழைப்பு, உத்வேகம், என்னை வெகுவாகக் கவர்ந்தது. திரு ஆர்.எஸ். மனோகர் அவர்களால் தயாரிக்கப்பட்டுள்ள 'வெளிச்சம்', ஓர் வெற்றிகரமான நாடகமாக அமையும் என்பதில், எனக்கு எவ்வித ஐயப்பாடும் கிடையாது.

**மது அரக்கனை ஒழிக்க...**

எங்கள் அரசு, தமிழக மக்களின் பேராதரவு டன் ஆட்சிப்பொறுப்பு ஏற்றவுடன் ஏழை எளிய தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்கும் முகத் தான், மலிவுவிலை சாராயத்தை அறவே ஒழித்தது. அதிரடி நடவடிக்கைகள் பல மேற்கொண்டு, கள்ளச்சாராயம் காய்ச்சுவதையும், விற்பனை செய்வதையும், வெகுவாகத் தடுத்தோம். இச் செயல்களில் ஈடுபட்டோரின் மீது, கடுமையான நடவடிக்கைகள் எடுத்தோம். இப்பணியை இன் றும் தீவிரமாகத் தொடர்கிறோம். ஒரு அரக்கனைக் கொல்லுவதற்கு, பல்வேறு வியூகங்கள் வகுப்பது போல, இந்த மது அரக்கனை ஒழிக்க, மேலும் பல்வேறு முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது.

இருப்பினும், இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்றால், குடிப்பழக்கத் திற்கு அடிமையாகியுள்ளவர்கள், தாங்களாகவே முன் வந்து, இந்தத் தீய பழக்கத்தைக் கைவிட வேண்டும். குடியால் ஆட்கொள்ளப்பட்டவர் களின் மன நிலையே, மாறுபட்டதாக உள்ளது. குடிப்பழக்கத்தால் ஏற்படும் அவமானம், அவர் களிடம் எந்தவிதத் தாக்கத்தையும் ஏற்படுத்துவ தில்லை. அரசு சட்ட திட்டங்களினால் இதனைக் கட்டுப்படுத்தினாலும், உற்றார் உறவினர்கள் எடுத்துக் கூறினாலும், இந்தத் தீய பழக்கத்தைக் கைவிட, அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

எனவே, உண்மையிலேயே ஒருவர் குடிப் பழக்கத்தைக் கைவிட வேண்டுமென்றால், அதற்கு மனமாற்றம் தேவை. மற்றவர்களின் அறிவுரை களாகவோ, போதனைகளாகவோ இல்லாமல், அவர்களே தங்களின் நிலையை அறிந்து, உணர்ந்து, ஒரு முடிவிற்கு வந்தால்தான், இத்தீய குடிப் பழக்கத்தை மறக்க முடியும். கைவிட முடியும் என்பது, கண்டறியப்பட்ட உண்மை. அந்த நிலையை மக்களிடையே உருவாக்க, அதற்குரிய சூழ்நிலையை உண்டுபண்ண, மக்களின் மனதைத் தொடும், அவர்களது மனநிலையை மாற்றியமைக் கும் சக்தி படைத்த மக்கள் தொடர்புச் சாதனங் களை, சரியாகப் பயன்படுத்தவேண்டும் என்ற முயற்சியின் விளைவுதான், இப்போது தயாரிக்கப் பட்டுள்ள நாடகம்.

**நீங்க நல்லா இருக்கணும்!**

தற்போது திரைப்படங்களும், நாடகங்களும், இசை நிகழ்ச்சிகளும், பொதுமக்களின் மனதைத் தொடும் மகத்தான சாதனைகளை நிகழ்த்தி வரு கின்றன. இப்படி, சக்தி படைத்த விளம்பரச் சாதனங்களை, மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற் படுத்தும் முயற்சிகளில், தேவையான அளவு ஈடு படுத்த வேண்டும் என்ற கருத்தில் தான், அரசு மதுவிலக்குப் பிரச்சார நாடகம் ஒன்றையும், திரைப்படம் ஒன்றையும் தயாரித்து வெளியிட முடிவு செய்து, அந்த முயற்சியில் தீவிரமாக இறங்கியது.

நேற்றைய முன்தினம் சென்னையில் நடந்த, 'நீங்க நல்லா இருக்கணும்' என்ற அரசின் மது விலக்குப் பிரச்சாரத் திரைப்படத்தின் தொடக்க விழாவில் கலந்து கொண்டேன். இன்று 'வெளிச்சம்' நாடக அரங்கேற்ற விழாவில் கலந்து கொள் கிறேன். மக்கள் நல்லா இருந்தால்தான், அவர் களது வீட்டுக்குள் வெளிச்சம் வரும். வீட்டில் வெளிச்சம் இருந்தால்தான், நாட்டில் சுபிட்சம் விளையும் என்பது, எனக்கு நன்றாகவே தெரியும். ஆகவே தான், இருட்டைக் குறை சொல்லுவதை விட, ஒவ்வொரு வீட்டிலும் விளக்கேற்றி வைப் பதை, எனது வாழ்நாள் நோக்கமாக எண்ணி, நான் செயல்பட்டு வருகிறேன்.

**தமிழகம் முழுவதும்...**

இரண்டு இலட்ச ரூபாய் செலவில் தமிழ்நாடு அரசு தயாரித்து, இன்று இங்கே அரங்கேறும் இந்த 'வெளிச்ச்ம்' நாடகத்தை, தமிழகம் முழுவதிலும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நாடகத்தின் மூலம், குடிப்பழக்கத்திற்கு ஆளானவர்கள் மனம் திருந்தி, ஒரு வளமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்பதால், அனைத்து இடங்களிலும் இந்த நாடகத்தை இல்வசமாக நடத்த, அரசு முடிவு செய்தள்ளது. இதற்காக அரசிற்குக் கூடுதல் செலவு ஏற்பட்டாலும், இந்தச் செலவையும் ஏற்று, இந்த நாடகம் தடையின்றி எங்கும் நடைபெற முடிவு செய்துள்ளோம். ஏனெனில், தமிழகத்தில் பூரண மதுவிலக்கு வேண்டும் என்ற எங்களின் கொள்கையை எளிதில் செயல்படுத்த, இந்த முயற்சியும் தனது பங்கினைச் செலுத்தும் என்று திடமாக நம்புகின்றேன்.

கருத்தூட்டமிக்க இந்த இனிய நாடகத்திற்கு, வயலின் சக்கரவர்த்தி திரு குன்னக்குடி வைத்திய நாதன் அவர்கள் இசை அமைத்துள்ளார். கலை மாமணி திருமதி இந்திரா ராஜன் அவர்கள் இந்த நாடகத்திற்கு நடனம் அமைத்துக் கொடுத்திருக் கிறார். வேதம் புதிது கண்ணன் அவர்கள் கதை, வசனம், பாடல்கள் எழுதியுள்ளார். பல்வேறு திறமையாளர்களின் கூட்டுத் தயாரிப்பாக உரு வெடுத்துள்ள இந்த நாடகம், தகுதியில் எந்த அளவுக்குத் தனித்தன்மை பெற்றதாக இருக்கும் என்பதை, நீங்களே முடிவு செய்து கொள்ளலாம்.

**வாழ்க்கையில் வெளிச்சம் வீச**

மேலும், தலைசிறந்த நாடகக் கலைஞர்கள் பங்கு பெறும் இந்த 'வெளிச்சம்' நாடகத்தை, மக்கள் பார்த்துப் பயன் பெறுவதோடு, நர்டகத்தின் மூலம் சொல்லப்பட்டிருக்கும் கருத்துக்கு வலிவு சேர்க்கிற பணியில், தாங்கள் அயராது ஈடுபடு வார்கள் என நம்புகிறேன். அரசின் இந்த முதல் முயற்சி மாபெரும் வெற்றியாக அமையும், குடிப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் மத்தியில் மாபெரும் மனமாற்றத்தை ஏற்படுத்தும், அவர்கள் வாழ்க்கையில் 'வெளிச்சத்தை' வீச உதவும், என்ற என் கருத்துக்களை மீண்டும் தெரிவித்து, இந்த முயற்சிக்கு உறுதுணையாக இருந்த அனைவரையும் மனதாரப் பாராட்டுகிறேன்.

- நிகழ்ச்சித் தொகுப்பு
ஜே. சந்திரன்




**• துள்ளும் மீனைப் பிடிக்கும் தொழிலில் இந்தியா ஏழாவது இடத்தை வகிக்கிறது. நமது நாட்டில் 56 சதவீத மக்கள் மீன் சாப்பிடுகின் றனர். மீன் சாப்பிடும் மக்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் 0.6 சதவீதம் அதிகரித்து வரு கிறது. தனி நபர் ஒருவருக்குத் தேவைப்படும் சராசரி மீன் உணவின் எடை ஆண்டொன்றுக்கு 10 கிலோவாகும். ஆனால், கிடைக்கும் மீனின் அளவோ 700 கிராம்.**

**கடலுணவுப் பொருட்களின் மூலம் 1990-91-இல் ரூ.893 கோடியும் 1989-90-இல் ரூ.635 கோடியும் அன்னியச்செலாவணியாகக் கிடைத்தது. ஜப்பான் நாட்டிற்குத்தான் மிக அதிக பட்சமாக 47.68 சதவீத கடலுணவுப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.**



# செயற்கைக் கோள் மூலம் ஒலி, ஒளி தொலைத்தொடர்பு

நில உலகை ஒட்டிய நிலையான வட்டத்தில் (Geostationary orbit) சுற்றி வரும் செயற்கைக் கோள் (Satellite) நுண் அலைச் செய்திகளைத் திருப்பி அனுப்பும் தானியங்கிக் கருவியாக (Repeater Station) இயங்கி, இவ்வுலக முழுவதிற்கும், ஒலி, ஒளி வடிவம் கொண்ட செய்திகளை அனுப்புகிறது.

இந்த நிலையான வட்டம் பூமத்திய ரேகைக்கு இணையாக பூமியின் மட்டத்திலிருந்து **36,000** கி.மீ. தொலைவில் உள்ளது. செயற்கைக் கோளும், பூமியில் அமைக்கப்படும் உணர்கொம்பும் (Antenna) ஒரு நேர்க்கோட்டில் இருக்குமானால், செயற்கைக் கோள் அனுப்பும் ஒலி, ஒளிச் செய்திகளை உணர்கொம்பு பெற முடியும். இத்தகைய செயற்கைக் கோள் உணர்கொம்பின் ஒரு நேர்க்கோட்டில் சேர்க்கை, செயற்கைக் கோள் நிலையான வட்டத்தில் சுற்றிவரும்போது, இயற்கையாகவே சாத்தியமாகிறது. செயற்கைக் கோள் அனுப்பும் நுண் அலைகள் நிலத்தின் ஒரு குறிப்பிட்ட பரப்பளவிற்கு மட்டும் பரவுகின்றன. இந்த பரப்பிற்குச் செயற்கைக்கோளின் அடிச்சுவடு (Satellite foot print) என்று பெயர். இப்பகுதி அல்லாத மற்ற இடங்களில், நுண் அலைகளின் வீரியம் மிகவும் குறைந்து காணப்பட்டு, பயனற்றதாக இருக்கும்.

செயற்கைக் கோள் மூலம் பெறும் கருவியின் (Satellite Receiver) அமைப்பு மூன்று முக்கிய பாகங்களைக் கொண்டுள்ளது. அவை *(1)* சாய்மாலை வட்ட உணர்கொம்பு (Parabolic Reflector-Dish Antenna) (2) மின் ஆற்றலை அதிகம் செய்யும் கருவி (LNA/LNB) (3) மின் அலை பெறும் கருவி (Satellite receiver).

**டாக்டர் ந. குணசேகரன்,**
**உதவிப்பேராசிரியர்,**
**மின்னணுவியல் மற்றும் தொலைத் தொடர்புத் துறை**
**பொறியியல் கல்லூரி,**
**அண்ணா பல்கலைக் கழகம்.**

விண்வெளி செயற்கைக் கோள் அனுப்பும், நுண் அலைகள் பூமியை அடையும்போது வீரியம் மிகமிகக் குறைந்து செயலிழந்து காணப்படுகின்றது. இதன் காரணங்கள்:

*1.* சூரிய ஒளி மூலம் சக்தி பெறும் மின்கலங்களே (Solar cell) செயற்கைக் கோளிலுள்ள மின்னணுக் கருவிகளை இயக்குகின்றன. இம் மின்கலங்கள் குறைந்த சக்தி கொண்டதால், செயற்கைக் கோள் அனுப்பும் நுண் அலைகளுக்கு அதிக வீரியம் கொடுக்க இயலாது. எனவே, செயற்கைக் கோளிலிருந்து வரும் நுண் அலைகள் மிதமான வீரியம் கொண்டதாக இருக்கிறது. இது 10 W அளவாக இருக்கும் இதை 10dBW என்று குறிப்பிடலாம்.

*2.* நுண் அலைகள் பூமியை நோக்கிச் செலுத்த 'உணர்கொம்பு' (Antenna) பயன்படுத்தப்படுகின்றது.



நுண் அலைகளின் வீரியம் உணர்கொம்பின் வடிவத்தையும் அளவையும் பொறுத்திருக்கிறது. ஆனால் விண்வெளியில் சுற்றி வரும் செயற்கைக் கோள் பெரிய 'உணர்கொம்புகளை' எடுத்துச் செல்லுதல் இயலாத காரியம். எனவே, சிறிய உணர்கொம்புகளே செயற்கைக் கோளில் இருக்கும். இந்த உணர்கொம்புகள் தரும் வீரியத்தின் அளவு **100** ஆக இருக்கும். இதை 20 dB என்று சொல்லலாம்.

*3.* செயற்கைக் கோளிலிருந்து வரும் நுண் அலைச் செய்தி **36,000** கி.மீ. தூரத்தைக் கடந்து, பரவி வருவதால், அதன் வீரியம் பெருமளவில் குறைகிறது. இதைத் 'தூரத்து இழப்பு' (Path loss) என அழைக்கிறோம். இதன் அளவு -200 dB என்று குறிக்கப்படுகின்றது.

*4.* நுண் அலைச் செய்திகள் விண்வெளிமூலம் பூமியை நோக்கி வரும்போது, விண்வெளியின் பல்வேறு அமைப்பினூடே வருவதாலும், பயனற்றமின் அலைகள் (noise) பலவற்றோடு கலப்பதாலும், அதனுடைய வீரியம் மேலும் குறைகிறது.

இப்படியாக விண்வெளிக் கோளிலுள்ள உணர்கொம்பு 10 W (10 dB) சக்தி கொண்ட நுண் அலைச் செய்திகளை, ஓரளவிற்கு **100** மடங்கு (20 dB) வீரியத்தைக் கூட்டி (Antenna gain 20 dB), 3.7-4.2 GHZ அலை அதிர்வு எண் கொண்ட நுண் அலைகளாகப் பூமியை நோக்கி அனுப்புகிறது. இந்நுண் அலைச் செய்தியின் மொத்த வீரியம் 30 dB (20+10) அளவு கொண்டதாகும். இந்த அளவை 'சமமடிப்பு செலுத்தும் சக்தி' என்று குறிப்பிடுகிறோம் (EIRP: Equivalent istropic radiated power) 'சமமதிப்பு செலுத்தும் சக்தியோடு' பூமியை நோக்கி வரும் நுண் அலைச் செய்திகள் 'தூரத்து இழப்பு' மூலம் -200 என்பி அளவு வீரியம் குறைக்கப்பட்டு உயிரற்ற நுண் அலைகளாய் பூமியை அடைகின்றது. இவைகளுக்கு மிகமிக அதிக வீரியம் உடனே கொடுத்தால்தான் தேவையான செய்திகளை அவை கொடுக்க முடியும். இதைத்தான் பூமியில் மிக பெரிய அளவில் உள்ள உணர்கொம்பு செய்கிறது.

> ## தந்தி
>
> **நாட்டில் மொத்தம் 40,077 தந்தி அலுவலகங்கள் செயல்படுகின்றன. இவற்றுள், 20,269 அலுவலகங்களில் தேவநாகரி மொழியிலும் தந்தி அனுப்பும் வசதி உள்ளது.**
>
> **1990-91-ஆம் ஆண்டில் 641 இலட்சம் உள்நாட்டுத் தந்திகள் அனுப்பப்பட்டன. இவற்றுள் 10.55 சதவிகிதம் அரசுப் பணிகளுக்காகவும், 0.81 சதவிகிதம் செய்திப் பத்திரிகைகளின் பணிகளுக்காகவும் அனுப்பப்பட்டன. வாழ்த்துத் தந்திகள் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா, 52.8 இலட்சம்.**
>
> **பன்னாட்டுத் தந்திகளின் எண்ணிக்கை 9.9 இலட்சம். தொலைபேசி மூலமாகவே, வீட்டில் இருந்தபடியே தந்தி அனுப்ப இயலும் என்பது தெரிந்திருக்கலாம். இம்முறையில் 65 இலட்சம் தந்திகள் 'புக்' செய்யப்பட்டன. இவற்றுள் 7 இலட்சம் தொலைபேசி மூலமாகவே தகவல் செய்யப்பட்டன.**

பூமியிலுள்ள உணர்கொம்பு (Antenna) மூன்று முக்கிய பாகங்களைக் கொண்டுள்ளது:

*1.* சாய்மாலை வட்ட உணர்கொம்பு (Parabolic reflector dish Antenna) இதன் அளவு *3-5* மீட்டர் விட்டமுள்ளதாக இருக்கும் இதன் வேலை மிக அதிக அளவில் நுண் அலைகளைப் பெற்று, அதை ஒரு முகப்படுத்தி அதன் வீரியத்தைப பல மடங்கு (சுமார் $10^5$) உயர்த்தி. (50dB) உணர்கொம்பின் குவிமையத்தில் (Focal point) கொண்டு சேர்ப்பதாகும். இதைத் துணை உணர்கொம்பு என்று அழைக்கலாம். (Secondary Antenna)

*2.* சிறிய முகப்பு கொண்ட 'செய்தி உட்கொள்ளும் உணர்கொம்பு' (Feed horn Antenna). இந்த உணர்கொம்புதான் 3.7-4.2 GHZ அலை அதிர்வு எண் கொண்ட நுண் அலைகளைப் பெறும் சக்தி கொண்டது. எனவே, இதனை முதல்நிலை உணர்கொம்பு (Primary Antenna) என்கிறோம். இது துணை உணர்கொம்பின் குவிமையத்தில் வைக்கப்பட்டிருப்பதால் அதிக வீரியம் கொண்ட நுண் அலைகளைப் பெறுகின்றது. சிறிய முகப்பு கொண்டதால் தனிப்பட்ட முறையில் இது செயல்படமுடியாது, துணை உணர்கொம்போடு சேர்ந்து இது திறமையாகச் செயல்படுகின்றது.

*3.* மின் ஆற்றலை உயர்த்தும் கருவி (LNA - Low noise Amplifier). இது ஒரு மின்னணுவியல் கருவி. மிக விலை உயர்ந்தது. (Rs.4000) மிக திறமை வாய்ந்தது. இக்கருவியில்லாமல் 'செயற்கைக்கோள் செய்தி பெறும் கருவி' இயங்க முடியாது. இக் கருவி வீரியம் குறைந்து வரும் நுண் அலைகளுக்கு அதிக அளவு ($10^6$ = 60 dB) வீரியத்தைச் சேர்க்கிறது. இக்கருவிக்குப் பதிலாக மற்றொன்றையும் (LNB - Low noise block down coverter) பயன்படுத்தலாம். இம்மின்னணுக் கருவி நுண்ணலைக்கு வீரியத்தையும் தருகிறது ($10^6$), நுண்ணலையின், 3.7-4.2 GHZ அலை அதிர்வு எண்ணை, 940-14500 MHZ அலை அதிர்வு எண்ணாகக் குறைக்கிறது.

இப்படியாக விண்வெளியிலிருந்து வரும் நுண் அலைச் செய்திகளை பெரிய உருவம் கொண்ட சாய்மலை வட்ட உணர்கொம்பு (Dish Antenna) அதிக அளவில் பெற்று, அதனை ஒருமுகப்படுத்தி, குவிமையத்தில் சேர்க்க, குவிமையத்தில் பொறுத்தப்பட்ட சிறிய முகப்பைக் கொண்ட உணர்கொம்பு (Feed horn), நுண் அலைகளைத் நம் கண்டுகொள்ள, மின் ஆற்றல் உயர்த்தும் கருவி, நுண் அலைச் செய்தியின் வீரியத்தைப் பலமடங்கு உயர்த்துகிறது. இந்த மூன்றின் ஒருங்கிணைந்த அமைப்பால், உயிரற்று பூமியை அடையும் நுண் அலைகளுக்குப் பெருமளவு சக்தி கொடுக்கப்பட்டு, அந்நுண் அலைகள், மின்னணுக் கருவிகளை இயக்கும் தகுதியைப் பெறுகிறது. -170B.W (30-200) அளவு சக்தியோடு வரும் நுண் அலை தற்போது -60 B.W (-170+50+60) அளவு சக்திக்கு உயர்த்தப்படுகிறது. நுண் அலையின் அலை அதிர்வு எண்ணும் 3.7 GHZ - 42 GHZ மதிப்பிலிருந்து 940 MHZ - 1500 MHZ மதிப்பிற்குக் குறைக்கப்படுகிறது.

மின் அலை அதிர்வு குறைக்கப்பட்டு, வீரியம் பெற்ற நுண் அலை சுமார் *20-30* மீட்டர் நீளம்

# பட்ஜெட் பிறந்த கதை!

பிரஞ்சு மொழியில் பொகெட் (BOUGETTE) என்றால் சிறிய பை என்று அழைப்பர், அது வரவு-செலவு பற்றிய செய்திகளின் சேர்க்கை என்பதாகவும் கூறப்படும்.

பொகெட் என்ற சொல்லே கால வெள்ளத்தில் பட்ஜெட் ஆகி வழக்கில் வந்து விட்டது. கி.பி. 1733-இல் இங்கிலாந்தில் தான் முதன் முதலாக அரசு வரவு-செலவு கணக்கு வழங்குவது துவங்கியது. இன்றைய பட்ஜெட் மாதிரி கிடையாது. சாதாரண வரவு-செலவு பட்டியல் தான்.

இங்கிலாந்தின் மூன்றாம் ஜார்ஜ் அரசர் (1738-1820) காலத்தில் பிரதமராக இருந்தவர் வில்லியம் பிட். இளையவர். இவர்தான் பட்ஜெட்டின் தந்தை என்ற கருதப்படுகிறவர். அப்போது பிரஞ்சுப் படைகளுடன் போர் ஏற்பட்டது. நெப்போலியனுடன் மோதி இங்கிலாந்திற்காக வெற்றியைத் தேடித் தந்தவர் நெல்சன். போரில் வெற்றி பெற்றாலும் இங்கிலாந்துக்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. வரவு-செலவு சரிகட்ட பணம் மிகுதியாகத் தேவைப்பட்டது. அது சமயம் வில்லியம் பிட் தீவிர சிந்தனைகளுடன் செயல்பட்டதின் விளைவே பட்ஜெட் உருவாயிற்று. அதன் தொடர்பாய் 1799-இல் முதன் முதலாக வருமான வரி உதயமாயிற்று. நாட்டின் வரவு-செலவுக் கணக்குகளை பாராளுமன்றம் பரிசீலிக்கும் முயற்சி துவங்கியது. பொதுக் கணக்கு (பப்ளிக் அக்கெவுண்ட்) அது முதல் பட்ஜெட்டிற்கு அடிப்படையாயிற்று.

அதன் பின்னரே விரிவான வகையில் வரவும், செலவும் கணக்கிடப்பட்டு உபரி வருமானங்களுக்கான திசைகளை ஆராயும் தொடக்கம் ஏற்பட்டது. இந்தவிதமாக பட்ஜெட் சமர்ப்பித்தல் உருவாகி பல நாடுகளிலும் இந்த வழக்கம் பின்பற்றப்படலாயிற்று.

இந்தியாவில் இந்த ஆண்டு பட்ஜெட்டையும் சேர்த்து (இடைக்கால பட்ஜெட் உட்பட) இதுவரை 58 பட்ஜெட்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

---

கொண்ட இணைவுக்கம்பி மூலமாய் (Coaxial Cable) 'செயற்கைக்கோளின் செய்தி பெறும் கருவிக்கு' எடுத்துச் செல்லப்படுகின்றது. இந்த இணைவுக் கம்பியும் நுண் அலைகளின் வீரியத்தைக் குறைக்கும் தகுதி பெற்றது. நுண் அலையில் அலை அதிர்வு எண் அதிகமாக அதிகமாகச் சக்தி இழப்பும் அதிகமாகிறது. எனவே, முடிந்தமட்டும் அலை அதிர்வு எண் மதிப்பைக் குறைத்தல் நலம். 'பெரும் கருவியை' அடையும் நுண் அலையின் சக்தியின் அளவு -60dB அல்லது -30 dBm மதிப்பைக் கொண்டதாக இருக்கும். 'பெரும் கருவி' நுண் அலையின் அலை அதிர்வு எண்ணை மேலும் குறைத்து, வீரியத்தை உயர்த்தி, பின்னர் ஒளி, ஒலி செய்திகளைத் தனியாகப் பிரித்து நமக்குத் தருகின்றது. இதை நாம் தொலைக்காட்சி மூலம் கண்டு ரசிக்கலாம்.

செயற்கைக்கோளின் செய்தி பெறும் கருவிகளின் முழு அமைப்பையும் செய்வது கடினமல்ல. இதற்கு மிக உயர்ந்த பொறியியல் வல்லுநர் தேவையில்லை. ஆனால், இதன்விலை இன்று ரூபாய் 60,000 தாண்டிவிட்டது. இதைச் செய்ய இவ்வளவு அதிக விலை தேவையா? அண்ணா பல்கலைக் கழகத்திலுள்ள பொறியியல் கல்லூரியில் மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு பொருளியல் துறையில் BE, பகுதி நேர மாணவர்கள் இந்தக் கேள்விக்கு விணை காணும் எண்ணத்தோடு 'ஆசியா சேட்' என்ற செயற்கைக்கோளிலிருந்து வரும் செய்திகளைப் பெறும் வகையில் இந்த கருவியைச் செய்து முடிக்கும் பணியில் இறங்கியுள்ளார்கள். துணைப் பேராசிரியர் டாக்டர் ந. குணசேகரன் மேற்பார்வையில் சீனிவாசன், மணிவண்ணன், சுப்பிரமணியம், முருகேசன், முத்துகிருஷ்ணன், பரஞ்சோதி, அன்சாரி, உதய பாஸ்கர், கணேசன், சந்திரசேகர், காதர் சுலைமான் சந்திரபிரகாசம், கார்த்திகேயன் முதலிய மாணவர்கள் இக்கருவியை ரூ.20,000 விலை மதிப்பில் செய்து முடிப்பதற்கு உறுதிகொண்டு இதில் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்தச் செயற்கைக்கோள் செய்திகளை, கண்ணாடி இழைக்கம்பி மூலம்(Optical glass fiber) அண்ணா பல்கலைக் கழகத்தின் பலதுறைகளுக்கும் அனுப்பும் திட்டத்தையும் வெகுவிரைவில் செயல்படுத்துவார்கள்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் BE பகுதி மாணவர்கள் டாக்டர். ந.குணசேகரன் மேற்பார்வையில் சுழல் உணர்கொம்பின் (Helical Antenna) செய்து, EKRON எனப்படும் ரஷ்ய செயற்கைக்கோளிலிருந்து செய்திகளைப் பெறும் முயற்சியில் வெற்றி கண்டனர்.

இந்தக் செயற்கைக்கோள் செய்யும் கருவிகளை மிக அதிக அளவில் செய்ய முற்பட்டால் அதன் விலை மேலும் குறைவது திண்ணம். இதனால் நகரப் பகுதி மக்கள் மட்டுமல்லாது, கிராமப்புற மக்களும் இவ்வசதியைப் பெற வழி உண்டாகிறது. கிராமப்புற மக்களின் முகத்தில் வியப்பையும் மகிழ்ச்சியையும் இந்தச் செயற்கைக்கோள் உண்டாக்குவது உறுதி.

உலக நிகழ்ச்சிகளைக் காணும் வாய்ப்பு பெறும் அவர்களின் எண்ணமும் மனப் போக்கும், செயல் முறைகளும் தரம் உயர்ந்து காணப் போவதில் ஐயமில்லை!





# இராமநாதபுரம் மாவட்டத்தில் செயற்கை முத்து உற்பத்தி

இராமநாதபுரம் மாவட்டத்தில் பெருமளவில் வளர்ப்பு முத்துக்களை உற்பத்தி செய்ய தமிழ்நாடு அரசு நிறுவனமும், ஸ்பிக் உர உற்பத்தித் தொழில் நிறுவனம் இணைந்து 1982-ஆம் ஆண்டு மண்டபம் மன்னார் வளைகுடாவில் உள்ள குருசடித்தீவில் முத்து பண்ணையை அமைத்தது, பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்பிற்கு முத்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

செயற்கை முத்து உற்பத்திக்காக தமிழ்நாடு முத்து நிறுவனம் நடத்திய ஆராய்ச்சியில் வெற்றியடைந்து வர்த்தக ரீதியில் உற்பத்தியைத்துவக்கியுள்ளது. இந்த நிறுவனம் கடந்த ஓராண்டுக் காலமாக நடத்திய ஆராய்ச்சியின்போது 12,000 காரட் முத்துக்களை உற்பத்தி செய்துள்ளது.

வளர்ப்பு முத்து உற்பத்தியைக் குடிசைத் தொழிலாக மாற்ற வேண்டுமென்ற அரசின் கொள்கையைச் செயலாக்கத் திட்டத்தை மத்தியக் கடல் மீன்வள ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள். இவ்வகையில் இராமநாதபுரம் மாவட்டம் "வாலி நோக்கம்" என்ற கிராமத்தில் முத்து வளர்ப்பின் செயலாக்கத் திட்டம் நிறைவேற்றப்பட்டு இக்கிர்ாம மக்களின் முழு ஒத்துழைப்பில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இந்தியக் கடலில் ஆறு வகையான முத்துச் சிப்பிகள் கிடைக்கின்றன. அவைகளுள் இந்திய முத்துச் சிப்பி (பிங்க்டேடா ஃபுகேட்டா) பெருமளவில் கிடைக்கிறது. இச் சிப்பியின் மென்மையான உடற் பகுதி இரண்டு ஓடுகளால் மூடப்பட்டிருக்கும். ஓட்டின் ஒரு பகுதியில் காணப்படும் துவாரத்தின் வழியாகப் பச்சை நிறம் கொண்ட மயிரிழைகள் போன்ற நார்கள் வெளிவருகின்றன. இதற்குப் பைசஸ் நார்கள் என்று பெயர். அதனைக் கொண்டு கடலின் அடியில் உள்ள பாறை, நுரைகல் ஆகிய கடினமான பொருள்களில் ஒட்டி வாழும். அசம்பாவிதமாக மயிரிழை நார்கள் அறுந்துவிடில் சிறிது தூரம் ஊர்ந்து செல்ல கால் ஒன்று உண்டு. பெரும்பாலும் இடம் விட்டு இடம் நகராமல் வாழும் தன்மையுடையது. இந்த மெல்லிய தசை கொண்ட முத்துச்சிப்பி கடல் நீரில் உள்ள நுண்ணுயிரிகளை உணவாக உட்கொள்ளும். இதைத் தவிர மற்ற ஐந்து வகை முத்துச்சிப்பிகள் நமது கடலில் அதிக அளவில் காணப்படுவதில்லை.

**முத்துச்சிப்பி கிடைக்கும் இடங்கள்**

தமிழ்நாடு, குஜராத் ஆகிய மாநிலங்களில் முத்துச்சிப்பிகள் கிடைக்கின்றன. குறிப்பாக தமிழ் நாட்டின் மன்னார் வளைகுடாவில் தூத்துக்குடியைச் சார்ந்த கடல் பகுதியில் இலட்சக்கணக்கான சிப்பிகள் 10-25 மீட்டர் செழித்து வளர்வதற்கான சூழ்நிலை உள்ளது. கடல் அடியில் மணல், சேறு உள்ள பகுதிகளில் முத்துச்சிப்பிகள் காணப்படுவதில்லை. பாறைகள் மிகுந்த பகுதிகளில்தான் கிடைக்கின்றன. மன்னார் வளைகுடாவில் பெரும்பாலான பகுதி பாறைகளினால் ஆனது. முத்துச்சிப்பிகள் செழித்து வளர இது ஒரு முக்கிய காரணமாகும்.

**இயற்கை முத்து உருவாக்கும் முறை**

முத்துச்சிப்பிகள் கடலினடியில் பாறைகளில் ஒட்டி வாழும் போது தவறுதலாகச் சிறிய மண் துகள், நுண்ணிய பூச்சிகள், வேறு ஏதாவது ஒரு பொருள் மேனடில் என்று சொல்லக்கூடிய மிருதுவான தோலுக்கும் ஓட்டிற்கும் இடையில் செல்ல நேரிடலாம். அவ்வாறு உள்ளே சென்ற பொருள் அத்தோலுக்கு ஒரு நமைச்சலை ஏற்படுத்தும். நமைச்சலைப்போக்க அத்தோல் முத்து திரவத்தைச் சுரந்து அப்பொருளின் மேல் ஆடையாகப் படியச் செய்யும். இப்பணி சிப்பி உயிர் உள்ளவரை தொடர்ந்து நடைபெறுவதால் முத்துதிரவம் மீண்டும் மீண்டும் படிந்து நாளடைவில் இதுவே இயற்கை முத்தாகிறது. இயற்கை முத்தின் வடிவம் உள்ளே சென்ற பொருளின் வடிவத்தைப்

## முத்து

செயற்கை முத்து (கல்சர்டு முத்து) தயாரிப்புத் தொழில் நுட்பம் நம் நாட்டில் 1973-இல் கண்டறியப்பட்டது. முத்துக்குப் பெயர் பெற்ற தூத்துக்குடியில் அமைந்துள்ள மத்தியக் கடல் மீன் ஆராய்ச்சிக் கழகம் இதனைக் கண்டறிந்தது. 1981-இல் முத்துச் சிப்பிகளை உருவாக்கும் முறையை இக்கழகம் மேம்பாடு செய்து ஒரு திருப்பத்தை உண்டு பண்ணியது.

வர்த்தக நிறுவனங்கள் இதில் ஈடுபட்டால், செயற்கை முத்து உற்பத்தி நன்கு வளர்ச்சி அடையும் வாய்ப்பு உள்ளது. கடந்த இருநூறு ஆண்டுகளாகவே முத்து வியாபாரத் தலமாக ஐதராபாத் புகழ் பெற்று உள்ளது. முத்துக்களின் வாழ் நாளையும், வண்ண பளபளப்பையும் அதிகரிக்கும் விதமாக அங்கு நிலவிடும் சாதகமான காலநிலையே இதற்கு முக்கியக் காரணமாகும். ஜப்பான் தேசத்துக் கோகிச் மிகிமோடோ (Kokich Mikimoto) என்பவரே முதன் முதலாகச் செயற்கை முத்தினை உருவாக்கியவர் ஆவார்.

பொறுத்து அமையும். எனவே, நல்ல உருண்டையான இயற்கை முத்துக்கள் கிடைப்பது அரிது. மேலும் கடலில் கிடைக்கும் எல்லா சிப்பிகளிலும் இயற்கை முத்துக்கள் கிடைப்பதில்லை.

**வளர்ப்பு முத்து உற்பத்தி சாதனை**

கடலில் முத்துச்சிப்பிகள் குறைந்து வருவதால் இயற்கை முத்துக்கள் அதிகம் பெறும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. எல்லா முத்துக்களும் உருண்டையாக நாம் விரும்பும் பருமனில் இருப்பதில்லை. இதனை மனதிற்கொண்டு மத்தியக் கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையம் 'வேப்பலோடை' என்ற சிற்றூர் கடல் பகுதியில் 1972-ஆம் ஆண்டு சிறிய முத்து உற்பத்தி சோதனைச் சாலையை நிறுவியது. 1973-ஆம் ஆண்டு நல்ல உருண்டையான வளர்ப்பு முத்துக்கள் உருவாக்கும் முறையில் வெற்றி கண்டது. நமது நாட்டில் வளர்ப்பு முத்து உற்பத்தி மேலோங்கி வளர இவ்வெற்றி உதவியது.

**நம் நாட்டில் முத்து உற்பத்தி நிலை:**

கடலிலிருந்து எடுக்கப்பட்ட முத்துச்சிப்பிகளைப் பயன்படுத்தி 1973-ஆம் ஆண்டு மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையம் வளர்ப்பு முத்து உருவாக்கும் முறையில் சாதனை படைத்தது. ஆனால், அத்தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலப்பொருளான முத்துச் சிப்பிகள் கடலில் சிறிதளவே காணப்படுகின்றன என்பதனை அறிந்து அதே நிறுவனம் 1981-ஆம் ஆண்டு முத்துச்சிப்பிக் குஞ்சுகள் வளர்க்கும் முறையில் வெற்றிக்கண்டது. இவ்வெற்றி நமது நாட்டில் முத்து உற்பத்தித் தொழில் வளர வழிவகுத்தது. வியாபார ரீதியில் பெருமளவில் வளர்ப்பு முத்துக்களை உற்பத்தி செய்ய தமிழ்நாடு அரசு நிறுவனமும் ஸ்பிக் உர உற்பத்தி தொழில் நிறுவனம் இணைந்து 1982-ஆம் ஆண்டு மன்னார் வளைகுடாவில் உள்ள குருசடித்தீவில் முத்துப்பண்ணையை அமைத்தது. பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்பிற்கு முத்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

—உல. இரவீந்திரன்
உதவி ம... ர் தொடர்பு அலுவலர்
இராமநாதபுரம்.



## அதிக மகசூல் தரும் ஜெ.ஜெ.-92 நெல்

திருச்சி மாவட்டம் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி மையத்தில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஜெ.ஜெ.-92 புதிய சன்னரக நெல் 77 சென்ட் நிலத்தில் பயிரிடப்பட்டு இன்னும் சில நாட்களில் அறுவடைக்குத் தயாராகவுள்ளது என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கு.ப. கிருஷ்ணன் அவர்கள் திருச்சியில் தெரிவித்தார்.

இந்த நெல்லை 105 நாட்களிலிருந்து 110 நாட்களுக்குள் அறுவடை செய்யலாம். குறுவை, தாளடி பயிரிடப்படும் நிலங்களில் இந்த ரக நெல்லைப் பயிரிடலாம்.

அறுவடை செய்யப்படும் இந்த ரக நெல் மேலும் பல்கிப் பெருக மாநில விதைப் பண்ணைக்கும், முற்போக்கு விவசாயிகளுக்கும் தரப்படும். இதன் விளைச்சலை அதிகரித்து வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்.

## சத்துணவுத் திட்டத்தால் குழந்தைகள் இறப்பு விகிதம் குறைகிறது உலக வங்கி பாராட்டு!

சத்துணவுத் திட்டத்தால் தமிழ்நாட்டில் குழந்தைகள் இறப்பு விகிதம் குறைந்து வருவதாக உலக வங்கி அறிவித்துள்ளது.

மறைந்த முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். 12 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் சத்துணவுத் திட்டத்தைத் தொடங்கினார். ஒருங்கிணைந்த இந்தச் சத்துணவுத் திட்டத்தினால் தமிழ்நாட்டில் குழந்தைகள் உணவில் ஊட்டச்சத்துக் குறைவாக இருந்தது நீக்கப்பட்டுள்ளது. இதனால் குழந்தைகள் இறப்பு விகிதம் குறைந்துள்ளது என்று உலக வங்கி 10,5,1992 அன்று வாஷிங்டனில் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருக்கிறது.

தமிழ்நாட்டில் உணவுக்காகச் செலவிடப்படும் தொகையில் 5 சதவிகிதம் மட்டுமே சத்துணவுக்குச் செலவிடப்படுகிறது. ஆனால் இதில் நல்ல பயன் ஏற்பட்டுள்ளது என்றும் உலக வங்கி தனது அறிக்கையில் பாராட்டி உள்ளது.

இந்தத் திட்டம் 1980-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டபோது உலக வங்கி இந்தத் திட்டத்துக்கு உதவி செய்தது. ஆனால், இப்போது இந்த வங்கியின் உதவி இல்லை என்ற போதிலும், இந்தத் திட்டத்துக்குத் தமிழ்நாடு அரசு தனது சொந்த நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து தொடர்ந்து நடத்தி வருகிறது என்றும் உலக வங்கி பாராட்டி இருக்கிறது.

சேலம் மாவட்டம்:

# பாலமலைப் பழங்குடி மக்கள்



மலைகளுக்குப் பெயர் பெற்றது சேலம் மாவட்டம், இம்மாவட்டத்தில் சிறு குன்றுகளாகவும், பெரிய மலைகளாகவும் பல்வேறு திசைகளில் பரந்து கிடக்கும் மலைகளில் ஒன்று பாலமலை. சேலத்திலிருந்து 52 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மேட்டூரின் அருகில் இம்மலை உள்ளது. வடக்கு மேற்காக அமைந்திருக்கும் இம்மலை சுமார் 5,000 அடி உயரத்தையும் 25 கிலோ மீட்டர் நீளத்தையும் கொண்டுள்ளது. இம்மலைக்கு மேட்டூரிலிருந்து கொளத்தூர் வழியே சென்று, மலையின் மேற்குப் புறமாக மலையை ஒட்டிச் செல்லும் சாலையில் அமைந்துள்ள ஊர்களான செட்டியூர், கண்ணாமூச்சி, குருவரெட்டியூரிலிருந்து செல்லும் ஒற்றையடிப் பாதையில் நடந்து மலைக் கிராமங்களை அடையலாம். மலையின் கிழக்குப் புறமாக அமைந்துள்ள நெருஞ்சிப்பேட்டையை அடைந்து, அங்கிருந்து நடந்தும் இம்மலைக் கிராமங்களை அடையலாம். இம்மலைக்குச் செல்வதற்கு இவை தவிர வேறு போக்குவரத்து வசதிகள் இல்லை.

மலையின் வடக்குப்புற மூலையான கொளத்தூர் அருகே மேலெழும்பும் இம்மலை ஒரே சமமாகச் சென்ற கண்ணாமூச்சியின் அருகில் அதிக உயரமான மலையுச்சிகளைக் கொண்டு, பின்பு மறுபடியும் இறங்க ஆரம்பித்து குருவ ரெட்டியூர் அருகில் முடிந்துவிடுகிறது. இம்மலையின் முக்கியமான மலையுச்சிகளாக சின்னமலை, கதிரப்பன் கரடு, கொசக்கரடு, கொம்பாரப்பட்டிக்கரடு, பாதக்கரடு, செம்மலை, செங்கல் மலை ஆகியவற்றைக் கூறலாம். இம்மலையின் அடிப்பகுதி முட்காடுகளாகவும் (Shrub Jungle) மேல்பகுதி இலையுதிர்க் காடுகளாகவும் (Deciduous Forests) காணப்படுகிறது. ஒரு காலத்தில் சந்தன மரங்கள் அதிக எண்ணிக்கையில் காணப்பட்ட இம்மலையில் தற்பொழுது குறைந்த அளவிலேயே சந்தன மரங்கள் உள்ளன. மலையின் உச்சியில் மிகவும் பிரசித்திப் பெற்ற சித்தேஸ்வரர் கோவில் உள்ளது. இக் கோவிலைச் சுற்றி அடர்ந்த காட்டுப் பகுதி காணப்படுகிறது.

மலை உச்சியில் காணப்படும் சித்தேஸ்வரர் கோவிலின் தென்புறமாக மலைவாழ் பழங்குடிகளின் குக்கிராமங்களான பெரிய குளம், திம்பொதி, நாகம்பொதி, நத்தக்காடு, துவரங்காடு, குங்கிலியக்காடு, ஈச்சங்காடு ஆகியவை காணப்படுகின்றன. கோவிலின் வடபுறமாக, கெம்மம்பட்டி, ராமன்பட்டி, புல்லாம்பட்டி, நமங்காடு, கடுக்காமரத்துக்காடு, தலக்காடு, கொட்டக்காடு, ஒரலை மரத்தூர், சிங்காரத் தோப்பு, செட்டிகாடு, பாத்திரமடவு, சோத்தாங்காடு, எருக்கலாங்காடு ஆகியவை அமைந்துள்ளன. மேற்குறிப்பிட்ட கிராமங்களில் பெரிய கிராமங்களாக ராமன்பட்டி, கெம்மம்பட்டி, பாத்திரமடவு, பெரிய குளம் ஆகியவற்றைக் கூறலாம். இவற்றில் ஒவ்வொன்றிலும் சுமார் 60 வீடுகள் காணப்படுகின்றன. இதரக் கிராமங்கள் மிகவும் குக்கிராமங்களாக 15 முதல் 30 வீடுகளையே கொண்டுள்ளன. மலையின் வடபுறமாக உள்ள கிராமங்களுக்கு மின்வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இம்மலைவாழ் மக்கள் மலையாளி வகுப்பைச் சார்ந்தவர்கள். மலையாளி என்பது பிறப்பியல்புபடி மலையில் வசிப்பவர் அல்லது அதை ஆட்சி செய்பவர் என்று பொருள்படும். இவர்கள் பேசும் மொழி ஒருவிதக் கலப்புத் தமிழ் மொழியாகும். சேலம் மாவட்டத்தில் காணப்படும் முக்கிய மலைகளில் ஒன்றான கொல்லிமலையிலிருந்து தம் மூதாதையர் காலத்தில் இவர்கள் குடிபெயர்ந்ததாக நம்பப்படுகிறது.

பாலமலைக் கிராமங்கள் அனைத்தும் கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் இயங்குகிறது. இருந்தும், ஒவ்வொரு கிராமத்திற்கும் ஊர்க்கவுண்டர்கள் உள்ளனர். இவர்கள் கிராமத்தில் சாதாரணமாக ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்றனர். ஊர்க்கவுண்டர் எனும் பதவி பரம்பரைப் பதவியாக விளங்குகிறது. இம்மலைக் கிராமப் பகுதிகள், சிறிய மலைச் சரிவுகளையும், சமமான பகுதிகளையும் கொண்டு விவசாயத்தில் நல்ல முன்னேற்றத்துடன் காணப்படுகின்றன.

இங்கு கேழ்வரகு, சாமை, கம்பு, தினை, அவரை, கொள்ளு ஆகியவை சாதாரணமாகப் பயிரிடப்படுகின்றன. இப்பயிர் தானியங்களிலிருந்து தயாரிக்கப்படும் கஞ்சி, கூழ், களி முதலியவற்... ய உணவாக உட்கொள்கின்றனர். சிறப்புப் பயிராக அரிசி, நிலக்கடலை,

ஜா.ரா. அசோகன்
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சேலம்.

மஞ்சள் ஆகியவை பயிரிடப்படுகின்றன. சித்தேஸ்வரர் கோவிலின் வடபுறமாக ஓடும் ஓடையிலிருந்து, எண்ணெய் இயந்திரங்களின் (ஆயில் மோட்டார்) மூலம் நீர் இறைக்கப்பட்டு விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

மேலும், கிராமங்களில் காணப்படும் குடிநீர்க் கிணறுகள் மட்டுமின்றி பட்டா நிலங்களில் காணப்படும் சொந்தக் கிணறுகளும் விவசாயத்திற்குப் பயன்பூடுத்தப்படுகின்றன. பயிரிடப்படும் பயிர்கள் அனைத்தும் சொந்த உபயோகத்திற்கே பயன்படுத்தப்படுகின்றன. இதரத் தேவையான பொருட்களை மலை அடிவார ஊர்களில் பெற்றுக்கொள்கின்றனர். மலை அடிவாரக் கிராமங்களான குருவரெட்டியூரில் ஞாயிறு சந்தையும்; கொளத்தூர், அந்தியூரில் முறையே வெள்ளி, திங்களில் சந்தைகளும் நடைபெறுகின்றன. மேலும், கண்ணாமூச்சியில் உள்ள அரசு விநியோகக் கடையின் மூலம் தமக்கு வேண்டிய அரிசி, மண்ணெண்ணெய், பாமாயில் ஆகியவற்றை இவ்வூர் மக்கள் பெறுகின்றனர். விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ள இவர்கள் சமவெளியின் பல பகுதிகளுக்கும் சென்று தினக்கூலியாக விவசாயத் தொழில் பார்க்கின்றனர்.

இதரத் தொழில்களாக ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு ஆகியவையும் மேற்கொள்ளப்படுகின்றன. வளர்க்கப்படும் ஆடுகள் சந்தைகளுக்கு ஓட்டிச் சென்று விற்கப்படுவதுண்டு. ஆனால் வளர்க்கப்படும் மாடுகள் நிலத்தை உழுவதற்கே பயன்படுத்தப்படுகின்றன. பலவகைப்பட்ட மரங்களுடன் வாகை, ஊஞ்சை, சரக்கொன்றை, புளி, பலா, தென்னை, பனை ஆகியவையும் காணப்படுகின்றன. புளி உரிய பருவக்காலத்தில் சேகரிக்கப்பட்டு சமவெளியில் காணப்படும் பூலாம்பட்டிச் சந்தையில் விற்கப்படுகிறது. விவசாயத்திற்கு உரங்களும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், அனைத்துப் பொருட்களும் தலைச் சுமையாக மலைக்குக் கொண்டு வரப்படுகின்றன. பட்டுப்பூச்சி வளர்ப்பிற்காக மல்பெரி செடிகள் பயிரிடப்படுவது குறிப்பிடத்தக்கது.

கிராமத்தில் காணப்படும் வீடுகள் பெரும்பாலும் மண்ணாலேயே கட்டப்



செம்மம்பட்டிக் கிராமம்

பட்டுள்ளன. அவற்றிற்குக் கூரையாக, மலைகளில் அதிக அளவில் காணப்படும் கிணாங்கு என்ற புல்லையே பயன்படுத்துகின்றனர். ராமன்பட்டி, செம்மம்பட்டி ஆகிய கிராமங்களில் தற்பொழுது அரசின் சார்பில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. இவை கல்லால் கட்டப்பட்டு கல்நார் ஓடுகள் (Asbestos) அல்லது சீமை ஓடுகளால் வேயப்படுகின்றன. அரசின் சார்பில் ராமன்பட்டியிலும், கடுக்காமரத்துக் காட்டிலும் பள்ளிகள் இயங்குகின்றன. ராமன்பட்டியில் எட்டாவது வரை படிக்க வசதியும், கடுக்காமரத்துக்காட்டில் ஐந்தாவது வரை படிக்க வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. உணவு, உடை, உறைவிடம் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. மருத்துவ் வசதிக்காக, தமிழ்நாடு டேனிடா திட்டத்தின் கீழ் துணைச் சுகாதார நிலையம் ராமன்பட்டியில் இயங்குகிறது. மேலும் மேட்டூர் அரசு மருத்துவமனையிலும், கொளத்தூர் அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்திலும் மருத்துவ வசதிகள் பெறுகின்றனர். குழந்தை பிறப்பு பெரும்பாலும் மலைகளிலேயே நடைபெறுகிறது. சிரமம் ஏற்பட்டால் தொட்டில்களில் அல்லது கட்டிலில் படுக்க வைத்து கீழே கொண்டு வந்து விடுகின்றனர். கொளத்தூரை மையமாகக் கொண்டு இயங்கும் அஞ்சல் அலுவலகம் மூலம், தபால்கள் நடைப் பயணமாக வரும் தபால் சேவகரால் சேர்க்கப்படுகின்றன.

திருமண உறவுகள் பெரும்பாலும் மலைக் கிராமங்களுக்குள்ளேயே நடைபெறுகின்றன. சிலசமயம் இதர மலைகளிலும் சம்பந்தம் வைத்துக்கொள்கின்றனர். பரிசல் பணமாக மாப்பிள்ளை இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ரூபாய் வரை தர வேண்டியிருக்கிறது. பெண்ணிற்கு ஒரு பவுன் அல்லது இரண்டு பவுனாக அவரவர் வசதிக்கேற்றவாறு நகை போட்டு திருமணம் செய்து வைக்கின்றனர். விவாகரத்தும், மறுகல்யாணமும் பழக்கத்தில் உள்ளது.

ஒவ்வொரு கிராமத்திலும் தனித்தனியாக மாரியம்மன் கோவிலும், விநாயகர் கோவிலும் உள்ளது. கோவில் விழாக்கள் தனித்தனியாகக் கிராமங்களில் கொண்டாடப்படுகின்றன. மாரியம்மன் விழா பங்குனி மாதத்தில் 3 நாட்கள் முதல் 15 நாட்கள் வரை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பொங்கல் வைத்து, கடா வெட்டிக் கொண்டாடுகின்றனர். பொங்கல் சமயத்தில், தை நோன்பின்போது பொங்கல் மட்டும் மாரியம்மனுக்குப் படைக்கப்படுகிறது. சித்தேஸ்வரர் கோவிலில் புரட்டாசி, மாசி அம்மாவாசைத் தினங்களில் சிறப்பாகப் பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. பெரிய குளம் கிராமத்தில் வைக்கப்பட்டிருக்கும் சித்தேஸ்வரர் சிலை மாசி அம்மாவாசை சமயத்தில் கோவிலுக்குக் கொண்டு செல்லப்பட்டு பூசை செய்விக்கப்படுகிறது.

விவசாயம், மின் வசதி, மருத்துவ வசதி ஆகியவற்றுள் ஓரளவு முன்னேற்றத்துடன் காணப்படும் இக்கிராம மக்கள், விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் ஆடு வளர்ப்பு, கரை கட்டுதல், பயிர் வளர்ப்பு ஆகியவற்றிற்குக் கடன் வசதி பெற்றுப் பயன் பெறுகின்றனர். ●





# தருமபுரி மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

டாக்டர் கொ. சத்தியகோபால், இ.ஆ.ப.
திட்ட அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர்
தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம்
தருமபுரி

தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகமானது, கம்பெனிச் சட்டத்தின் கீழ் 7.11.75-இல் தோற்றுவிக்கப்பட்டது. கழகத்தின் முக்கிய நோக்கம் இம்மாவட்டத்தின் கிராம, நகர்ப்புறங்கள் மேம்பாடு அடைவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அதற்கான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவது. மேலும் உள்ளாட்சி நிறுவனங்களில் நிதி ஆதாரங்களை, மேம்படுத்துவதற்காகப் பேருந்து நிலையம், அங்காடி தொகுப்புகள், வங்கிக் கட்டடங்கள் போன்றவைகளை மானிய திட்டத்தின் கீழ் கடன் வழங்கி ஏற்படுத்திக் கொடுக்கிறது. இதுவரை 18 கிராமம் மற்றும் பேரூராட்சிகளுக்கு ரூ.40.22 இலட்சத்திற்குக் கட்டடங்கள் கட்டியும் அதில் ரூ.13.38 இலட்சம் மானியமும் அளித்துள்ளது.

மேலும், இக்கழகத்தின் சுயநிதி ஆதாரம் மேம்பாடு அடையும் வகையிலும் அதே சமயத்தில் தருமபுரி மாவட்டம் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் அடைய சுமார் 65.75 இலட்சத்தில் அங்காடி தொகுப்புகள் வங்கிக் கட்டடங்கள் கட்டியும், சுற்றுலா வளர்ச்சியுடைய ஒகேனக்கல், தீர்த்தமலையில் தங்கும் விடுதி, கடைகள் சுமார் ரூ.16.25 இலட்சத்திலும் மற்றும் விளையாட்டுத் துறையில் மற்ற வளர்ச்சியடைந்த மாவட்டங்களில் இல்லாத வகையில் நீச்சல் குளம் விளையாட்டு அரங்கம், உள் விளையாட்டு அரங்கம் போன்றவற்றிற்கு மானியம் வழங்கி விளையாட்டுத் துறைக்குக் கட்டிக் கொடுத்துள்ளது.

மேலும், நாகமங்கலத்தில் 128 ஏக்கர் தரிசு நிலத்தைச் சீர் செய்து பட்டு எடுக்கத் தேவையான மல்பரிச் செடிகளைப் பயிரிட்டும், மாந்தோப்பை ஏற்படுத்தியும் மற்ற அரசுப் பண்ணைகளுக்கு ஒரு முன்மாதிரிப் பண்ணையாகத் திகழ இக்கழகம் பெரிதும் பாடுபட்டு வருகிறது. வரும் நிதியாண்டில் மேலும் பல பகுதிகளில் பழப்பண்ணைகள், பட்டு வளர்ச்சிப் பண்ணைகள் ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகள் உள்ள இடங்களில் கிராமச் சாலைகள், தகவல் தொடர்புகளை மேம்படுத்துதல், வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், பட்டு வளர்ப்புத் திட்டம் தோட்டக்கலை, ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற இளைஞர்கள் சுய வேலைவாய்ப்புத் திட்டம், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், வேளாண்மைப் பெருக்குத் திட்டம், சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் ஆகிய திட்டங்களும், அறிவியல் - தொழில் நுட்பத் திட்டம், பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்புத் திட்டங்கள் ஆகியவையும் இந்நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களாகும். இத்திட்டங்களுக்கான திட்டமிடல், செயலாக்கம், கணிப்பாய்வு ஆகிய பணிகள் இந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் அவர்களின் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தோடு ஒருங்கிணைக்கப்பட்டு, இந்நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

மனிதனின் அத்தியாவசியத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம், ஆகியவற்றினைப் பெறுவதற்கான வேலைவாய்ப்பை உருவாக்கித் தருதல், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள அடித்தள மக்களுக்கு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் அளித்தல், ஆகிய திட்டங்களில் செயலாக்

கத்தினால் தருமபுரி மாவட்டம் இன்று ஒரு முன்னோடி மாவட்டமாக இருந்து வருகிறது.

'நமது கிராமங்கள் முழுமையாக வளர்ந்து விட்டால் கலைத்திறனும், செயல்திறனும் மிகுதியாக உள்ள மனிதர்களுக்குக் குறைவே இருக்காது. கிராமக் கவிஞர்களும், கிராமக் கலைஞர்களும், கிராமக் கட்டடக் கலைஞர்களும் பன்மொழிப் புலவர்களும் ஆராய்ச்சியாளர்களும் அங்கிருப்பார்கள்' - அண்ணல் காந்தியடிகளின் இந்த எண்ணங்கள் முழுவதும் முழு வடிவம் பெறும் வகையில் திட்டப் பணிகள் இம்மாவட்டத்தில் முழு வேகத்தில் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1990-91 வரை வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள 64.541 அடித்தள மக்கள் பயனடைந்துள்ளனர். 1991-92-ஆம் ஆண்டில் மட்டும் வறுமைக்கோட்டிற்கும் கீழே உள்ள 5,487 மக்கள் பயனடைந்துள்ளனர் இத்திட்டத்தின் மூலம் 23,470 ஆதிதிராவிடர் பழங்குடியினப் பெருமக்களும், 27,547 பெண்களும் பயனடைந்து உள்ளனர். இதன் மூலம் நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது.

**ஆதிதிராவிடப் பழங்குடியினருக்குக் குடியிருப்பு வசதிகள்**

ஜகவர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 12,776 வீடுகள் கட்டி வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு வீட்டு வசதி செய்து தரப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் மட்டும் 2,200 தார்சு வீடுகள் கட்டப்பெறுகிறது. இது விரைவில் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்படும். இன்னும் 8,561 நபர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இவை நிதி வசதிக்கேற்ப படிப்படியாகக் கட்டிக் கொடுக்கப்படும்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுக்கான மிகப் பயனுள்ள திட்டம் ஜீவன்தாரா கிணறு வெட்டும் திட்ட மாகும். இத்திட்டத்தின்கீழ் பொருளாதார நிலையில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள விவசாயிகளுக்கு இலவசமாக கிணறுகள் வெட்டிக் கொடுக்கப்படும். 1990-91-இல் 100 கிணறுகள் வெட்டப்பட்டன. 1991-92-ஆம் அண்டில் 900 பாசனக் கிணறுகள் வெட்டப்படுகின்றன. இதற்காக ரூ.145.62 இலட்சம் நிதி ஒதுக்கீட்டினை அரசு அளித்துள்ளது.

**சாலை வசதிகள்**

1990-91-ஆம் ஆண்டிற்கு முன் இம் மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு சாலை வசதி செய்யப்பட்டிருந்தது:

| | |
|---|---|
| 1. மண் சாலைகள் | - 1181.77 கி.மீ. |
| 2. கப்பிச் சாலைகள் | - 249.00 கி.மீ. |
| 3. சரளைக்கல் சாலைகள் | - 1233.22 கி.மீ. |
| 4. தார்ச் சாலைகள் | -. 307.16 கி.மீ. |





1990-91-ஆம் ஆண்டில் 223.10 கி.மீ. இரண்டடுக்குச் சரளைக் கற்கள் சாலையும், 93.30 கி.மீ., தார்ச் சாலையும், அமைக்கப்பட்டது. 1991-92-ஆம் ஆண்டில் 82.35 கி.மீ. கற்சரளைச் சாலையும், 77.50 கி.மீ. தார்ச் சாலையும் அமைக்கப்பட்டு வருகிறது. இது தவிர சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் நெடுஞ் சாலைக் கிராமப் பணித்துறையின் (கிராமச் சாலைகள்) மூலம் 48.40 கி.மீ. தார்ச் சாலையும் அமைக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் படிப்படியாகப் பேருந்துச் சாலைகள், தார்ச் சாலைகளாக மாறும், போக்குவரத்து வசதிகள் எளிதாக்கப்பட்டு எரிபொருள் சேமிப்புக்கு வழி வகுக்கும்.

ஒரு நிரந்தரக் கட்டடமே இல்லாத ஆரம்பப் பள்ளிகள் இல்லை என்ற நிலையும், 442 ஊராட்சிகளுக்கு அலுவலகக் கட்டடங்களும் கட்டி முடிக்கப் பெற்றுள்ளன.

பாசன ஆதாரங்களை மேம்பாடு செய்ய 900 கசிவு நீர்க்குட்டைகள் கட்டப்பெற்றுள்ளன. இதனால் நிலத்தடி நீர் உயரவும், அதன்மூலம் உணவு உற்பத்தி பெருகவும் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் வறட்சியின் கொடுமையினால் பாதிக்கப்படும் மக்களின் துயர்த் துடைப்புத் திட்டங்கள் மாவட்டம் முழுவதும் பரவலாக ஆங்காங்கே செயல்படுத்தப்பட்டு வந்தன. 1985-86-ஆம் ஆண்டு முதல் குறிப்பிட்ட நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. தமிழக அரசின் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் 34 கசிவு நீர்த் தேக்கக் குட்டைகளும். ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 60, கசிவு நீர்த் தேக்கக் குட்டைகளும் கட்டப்பெறுகின்றன. இத்திட்டம் முடிவடையும் போது பாசனக் கிணறுகள் நீருற்றைப் பெருக்கிக் கொள்ளவும், அதன்மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்கவும் ஏதுவாக இருக்கும்.

### அட்டைப்பட விளக்கம்

**முதல் அட்டை:**

'வெளிச்சம்' - மதுவிலக்குப் பிரச்சார நாடகத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார் (1.5.92).

**நான்காம் அட்டை:**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தூத்துக்குடி விமான நிலையத்தைத் திறந்து வைத்து, ரூ.700 கோடிக்கான நலத் திட்டப்பணிகளைத் தொடங்கி வைத்தார் (30.4.92)

**மனித வாழ்வின் எரிசக்தியின் முக்கியத்துவம்**

தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் 1985-ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் இயங்கி வருகிறது. நாகரீக உலகில் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப ஏற்கெனவே உள்ள கரிசக்திகளோடு இயற்கை நமக்கு அளித்துள்ள காற்று, சூரிய ஒளி போன்ற சக்திகளை மனிதனின் அன்றாட வாழ்வுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்திக் கொள்ளும் அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் அரூர் பகுதி மக்களின் மேம்பாட்டுக்காக 1989-90-இல் எரிசக்தித் திட்டம் தொடங்கப்பட்டது. 1991-92-இல் பர்கூரில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரூர் வட்டாரத்தில் எரிசக்தி நிறுவனத்தின் மூலம் கீழ்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

மக்களின் அன்றாட வாழ்வில் உணவு அவசியமாகும். இதற்குத் தேவைப்படும் எரிபொருள்களான விறகு, எரிமூட்டை, பிற எரிபொருள் சாதனங்களைச் சிக்கனப்படுத்த மேம்படுத்த தூளா அடுப்புகள் 2,600 அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 15 முதல் 20 சதம் எரிபொருள் சிக்கனத்துடன் புகை, வீட்டில் தங்காமல் வெளியேறிவிட வசதியாக உள்ளது. இதற்கான முழுச் செலவும் எரிசக்தி நிறுவனமே ஏற்கிறது.

விவசாயத்திற்குத் தேவையான நீர் பாய்ச்ச மின் மோட்டார்கள் மற்றும் ஆயில் இன்ஜின்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவைகளில் குறைந்த அழுத்தத்தில் அதிக அளவில் நீர் பாய வசதியாக உராய்வு குறைந்த ஃபுட்வால்வுகள் வழங்கப்படுகின்றன. இதற்கான செலவில் 75 சதம் அரசு ஏற்கிறது. இதுவரை அரூர் ஒன்றியத்தில் 740 நபர்கள் பயனடைந்துள்ளனர். உணவு சமைக்க சரியான முறையில் அடுப்புகள் அமைக்காத காரணத்தால் எரிபொருள் பெருமளவில் விரயமாகிறது. இதைக் கட்டுப்படுத்த 'பிரியாக்கினி' (எரிபொருள் சிக்கன உலோக அடுப்பு) என்ற அடுப்புகள் வழங்கப்படுகின்றன. இது எரிபொருளைச் சுமார் 20 சதம் சேமிக்க வழி செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் அரூர் ஒன்றியத்தில் 850 நபர்கள் பயன் அடைந்துள்ளனர். இதற்குரிய அரசு மானியம் 75 சதம் ஆகிறது.

இயற்கை நமக்களித்துள்ள வரப்பிரசாதமான சூரிய ஒளியைக் கொண்டு உணவு சமைக்கும் 6 அடுப்புகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. இதற்கு அரசு ரூ.400 நிதி உதவி அளிக்கிறது. சம்பந்தப்பட்ட நபர் ரூ.650 செலுத்தினால் போதுமானது. ஓரளவு சக்தி படைத்தவர்கள் இதை விரும்புகின்றனர். இதன் தேவை தற்போது அதிகரித்துள்ளது.

வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களில் ஓரளவு வசதி படைத்தவர்களுக்கு நிலத்தை உழுவதற்கு உறுதுணையாகக் கலப்பைகள் பூட்டப்பட்ட, ஒரு டன் எடைக்குக் குறையாமல் பளு ஏற்றிச் செல்லும் பல நோக்கு வசதி கொண்ட மாடுகள் பூட்டப்பட்ட 5 வண்டிகள் கடந்த ஆண்டுகளில் 5 வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 6 வண்டிகள் வழங்கப்பட உள்ளன. இதற்கான மொத்த செலவினம் ரூ.75,000 ஆகிறது. இதில் 75 சதம் மானியமாக வழங்கப்படுகிறது.

பர்கூர் வட்டாரத்தில் நடப்பு நிதியாண்டில் கீழ்க்கண்ட பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன.

1. குழாய்க் கிணற்றில் காற்றாடி அமைத்து நீர் இறைத்தல்
2. வீட்டு உபயோகத்திற்கென 10 சூரிய ஒளி அடுப்புகள் 10 வழங்குதல்.
3. நீர் இறைக்க வசதியாக 200 உராய்வு குறைந்த ஃபுட்வால்வுகள் வழங்குதல்.
4. மேம்படுத்தப்பட்ட 1000 தூளா அடுப்புகள் அமைத்தல்
5. எரிபொருள் சிக்கனத்திற்கான 400 'பிரியாக்கினி' உலோக அடுப்புகள் வழங்குதல்.
6. வேளாண்மை உபயோகத்திற்கு நிலத்தில் 4 மருந்து தெளிக்கும் ஸ்பிரேயர் வழங்குதல்.

மேற்கண்ட செயல் திட்டங்களை நிறைவேற்றவும், அவைகளில் செயல்பாடுகளைப் பொது மக்களுக்கு விளக்கவும் மொத்தம் இவ்வாண்டு பர்கூர் ஒன்றியத்திற்கு மூன்று இலட்சம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

**கரிமவாயுத் திட்டம்**

இத்திட்டம், இம் மாவட்டத்தில் 1981-82-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்த கரிமவாயுக் கலன்

அமைப்போர்க்கு கலன் கொள்ளளவுக்குத் தக்க வாறு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. கரிம வாயுக் கலன்களைப் பயனடைவோர் சொந்தச் செலவிலோ அல்லது வங்கிக் கடன் மூலமாகவோ அமைத்துக் கொள்ளலாம். 1981 முதல் இன்று வரை இம்மாவட்டத்தில் 3,250 கலன்கள் அமைக் கப்பட்டுள்ளன.

நடப்பு நிதி ஆண்டிற்குக் குறியீடு 250-க்கு இதுவரை 125 கரிம வாயுக் கலன்கள் அமைக்கப் பட்டுள்ளன.

கரிம வாயுக் கலன்கள் கே.வி.ஐ.சி., தீனபந்து, மற்றும் ஜனதா என மூன்று வகைப்படும். அவை களில் கே.வி.ஐ.சி. மற்றும் தீனபந்து வகை மிகச் சிறந்தது. கரிமவாயுக் கலன்கள் டர்ன்கீ அமைப் பாளர் உதவி கொண்டும், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மூலமாகவும் அமைக்கப்பட்டு வரு கின்றன. அமைக்கப்பட்ட கரிம வாயுக் கலன்களில் ஏதாவது பழுது ஏற்படின் கலன்களைப் பழுது பார்க்க தொழில் நுட்ப உதவி, மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

விறகுக்காகக் காடுகளை அழிப்பதைத் தடுப் பதும் எரிபொருள் சிக்கனத்தைக் கடைப்பிடிப்ப தும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

### சாண எரிவாயுவின் பலன்கள்:

1. கரிமவாயுக் கலனிலிருந்து கிடைக்கும் வாயு எரித்துச் சமையல் செய்ய உதவுகிறது. வீடுகளைச் சுத்தமாகவும் வைத்திருக்கலாம்.

2. மாண்டில் பொருத்தி கரிம வாயுவைக் கொண்டு ஒளி விளக்கு எரிக்கலாம்.

3. கரிம வாயுவைக் கொண்டு டீசல் என்ஜின் களையும் இயக்கலாம்.

4. கரிம வாயுக் கலன்களில் வெளியேறும் சாணக்கரைசல் மறுபடியும் சக்திவாய்ந்த உரமாகப் பயன்படுகிறது- அமோக விளைச்சலுக்கும் உறு துணையாயிருக்கிறது.

கரிமவாயுக் கலன் கட்டி முடித்த பின்பு பராமரிப்புச் செலவும், எரிபொருள் செலவும் ஏற்படுவதில்லை.

### மேம்படுத்தப்பட்ட அடுப்புகள்

இத்திட்டம் 1982 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டிற்கு மேம்படுத்தப்பட்ட 4,000 அடுப்புகள் கிராமங்களில் பயிற்சி பெற்ற நபர்கள் மூலம் செயலாக்கப்படுகிறது. இவ்வடுப்பு (சுகாத் மாடல்) மண்ணினால் பல பாகங்களாகச் செய்து, சுட்டு, பின்பு பயனாளிகள் விரும்பும் இடத்தில் அமைத்துத் தரப்படுகிறது. மேம்படுத்தப்பட்ட அடுப்புகள் திட்டம் ஊராட்சி ஒன்றிய அலுவல கங்கள் மூலமாகச் செயலாக்கப்படுகிறது. மேம் படுத்தப்பட்ட அடுப்பு ஒன்றுக்கு ரூ.62 செலவு செய்யப்பட்டு இத்தொகை முழுவதும் மானியமாக வும் வழங்கப்படுகிறது.



### நாகரிகம்

நாகரிகம் என்ற சொல்லுக்கு, குஜராத்தி மொழியில் நல்ல நடத்தை என்று பொருள்.

- அண்ணல் காந்தியடிகள்.

இந்நிதியாண்டில் இம்மாவட்டத்திற்கு 5,000 குறியீட்டிற்கு இதுவரை 4,283 மேம்படுத்தப்பட்ட அடுப்புகள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும் இத்திட்டத்தினால் விறகு சிக்கனமாகப் பயன்படுத்துவதோடு, விறகுக் காகக் காடுகள் அழிக்கப்படுவது கணிசமாகத் தடுக்கப்படுகிறது. குறைந்த விறகில் வெப்பத்தை வீணாக்காமல் ஒரே அடுப்பில் விறகை எரித்து இரண்டு பாத்திரங்களில் ஒரே நேரத்தில் குறைந்த கால அளவில் சமையல் செய்யலாம்.

### அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் பயின்றோரின் தொழில் வளர்ச்சித் திட்டம்

மைய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் ஆதரவுடன் 1985-86-ஆம் முதல் இத்திட்டம் தருமபுரி மாவட்டத்தில் செயல் படுத்தப்பட்டு வருகின்றது. இம்மாவட்டத்திலுள்ள அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் பயின்றவர் களை ஊக்கப்படுத்தி அவர்கள் சுய தொழில்கள் அமைக்க அனைத்து உதவிகளும் இத்திட்டத்தின் மூலம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 79 அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் பயின்றவர்கள் பயனடைந்து தொழில் நிறுவனங்களை நிறுவியுள்ளனர்.

### வேலைவாய்ப்புப் பெருக்குத் திட்டம்

பல்வேறு திறன் அபிவிருத்திப் பயிற்சிகளை அளித்து அவற்றின் மூலம் சுயவேலை வாய்ப்பை அடையச் செய்ய இத்திட்டம் 1990-91- ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 69 நபர்கள் திறன் அபிவிருத்திப் பயிற்சி பெற்று சுயவேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர். நடப்பு ஆண்டில் 392 நபர்களுக்கு 12 துறைகளில் பயிற்சி அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம்

இம்மாவட்டத்தின் 4 வட்டாரங்கள் தவிர ஏனைய வட்டாரங்களில் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில் மண்வளப் பாதுகாப்பு, நவீன முறை புன்செய் விவசாயம், தோட்டக்கலை, வனவளம், நீர்வளம் பெருக்குதல், பட்டு வளர்ச்சி முதலிய இனங்களின் கீழ், நடப்பு ஆண்டில் ரூ.183 இலட்சத்திற்குப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை சுமார் ரூ.136 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காகும் செலவு மைய, மாநில அரசு களால் சமமாக வழங்கப்படுகின்றன. ●

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.



பதிவு எண். M. 7370
Licence No. TN/MS(C)/PP-23




தமிழ்நாடு அவை ... சப்பகம்
22 ...
எழும்பூர், சென்னை-600008
335/5

# விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்



கதர் பருத்தி ரகங்கள்
ஆயத்த ஆடைகள்
கதர் பாலியஸ்டர்
பாப்டா
மற்றும் உல்லன்

காதிகிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108.


பொதுமக்கள் அளித்த மனுக்கள் மீது

# மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 9.3.92 முதல் வாரந்தோறும் ஆயிரக்கணக்கான பொதுமக்களை, மாவட்டவாரியாகச் சுழல்முறையில் சந்தித்து அவர்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்று குறைகளைக் கனிவுடன் கேட்டறிந்து அவர்களின் துயர்துடைக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் உடல் ஊனமுற்றோர், வயதான பெரியவர்கள் மற்றும் தாய்மார்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், அனாதைகள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் ஆகியோர் தங்களது குறைகளான முதியோர் ஓய்வூதியம், குடியிருக்க இடம், வேலைவாய்ப்பு, கடன் உதவி, காவல்துறையின் பாதுகாப்பு, நிலப்பட்டா, குடும்ப அட்டை, பணியிட மாறுதல், பண உதவி மற்றும் தேவையான அடிப்படை வசதிகள் வேண்டி மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் மனுக்களை அளித்து வருகிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொது மக்களின் குறைகளைப் பரிவுடன் கேட்டறிந்து, உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டு வருகிறார்கள்.

முதல்கட்டமாக 598 மனுதாரர்களின் மனுக்களின் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டு 190 நபர்களுக்கு முதியோர் ஓய்வூதியத் தொகையும், 247 மனுதாரர்களின் வேண்டுகோளுக்கிணங்க, தக்க போலீஸ் பாதுகாப்பும், 110 மனுதாரர்களின் கோரிய அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டது. 34 நபர்களுக்குக் கடனுதவியும், 5 நபர்களுக்குக் குடியிருக்க இடமும், 4 நபர்களுக்குப் பட்டாவும், 8 நபர்களுக்குக் குடும்ப அட்டைகளும் வழங்கப்பட்டுத் தீர்வு காணப்பட்டுள்ளது. இதர மனுக்களின்மீது தகுந்த நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தவிர, 1.6.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள், இருதய அறுவைச் சிகிச்சைக்காக 29 பேர்களுக்குத் தலா ரூ.15,000-மும், சிறுநீரகச் சிகிச்சைக்காக ஒருவருக்கு ரூ.15,000-மும் நிதி உதவி வழங்கினார்கள்.

கலப்புத் திருமணம் செய்துகொண்ட 7 தம்பதியினருக்குத் தலா ரூ.5,000-மும், விதவை மறுமண உதவித் திட்டத்தின்கீழ் ஒரு தம்பதியினருக்கு ரூ.5,000 நிதி உதவியும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் மகளிர் திருமண உதவித் திட்டத்தின்கீழ் இருவருக்குத் தலா ரூ.5,000-மும் வழங்கினார்கள்.

மேலும் 7 ஏழைப் பெண்களுக்குத் தையல் இயந்திரங்களும், சொந்தத் தொழில் தொடங்க 10 பேர்களுக்கு வங்கிக் கடனுதவியும், 11 ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகளும், ஒருவருக்கு சக்கர நாற்காலியும் வழங்கினார்கள்.

1.6.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

## இந்த இதழில்...


புதியதோர் உலகம் படைப்போம்! —புதுடெல்லியில் நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை (முழு விவரம்) ... 2
முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவு நாள் —மாண்புமிகு பிரதமர், மாண்புமிகு முதல்வர் மலர் அஞ்சலி ... 9
திரைப்பட நகர் — முதல்வர் அடிக்கல் நாட்டினார் ... 11
கோவை புதிய விமான நிலையக் கட்டடத் திறப்பு விழா ... 13
உதகை - உவகைமிகு சிறப்பிடம்! —மாண்புமிகு முதல்வர் உரை ... 17
உள்ளம் கவர் உதகை மலர்க் கண்காட்சி ... 22
பெரியார் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்: ... 24
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் தாட்கோ மூலம் வளர்ச்சித் திட்டப் பணிகள் ... 27
குழந்தை நலம் ... 29
உத்தமர் நேரு (கவிதை) ... 33
மரங்கள் நாட்டின் செல்வங்கள் ... 34
சிவகங்கையில் ரூ.2.5 கோடிச் செலவில் கட்டப்பட்ட காவலர் குடியிருப்பு ... 37
வளரும் வேளாண்மை ... 38
பண்ணைக் கழிவிலிருந்து பாங்கான காகித அட்டைகள் ... 39
ஒருமைப்பாடு மலர்ந்திட.... (கவிதை) ... 41
ஆசிய ஜோதி ... 44



தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2023
வைகாசித் திங்கள் - 19
மலர்:22 இதழ்:23
1-6-1992

# புதியதோர் உலகம் படைப்போம்!

## புதுடெல்லியில் நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை



● வளர்ச்சியின்மை என்னும் இருளைப் போக்கி...

● பண வீக்கத்தினால் ஏற்பட்டுள்ள இன்னல்களைக் களைந்து...

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறித்து விவாதித்து முடிவெடுக்க இங்குக் கூடியிருக்கும் உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட கடுமையான பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்த்து 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் முன்னேற்றத்தை நோக்கி அடியெடுத்து வைத்திருப்பது, வளமான ஓர் எதிர் காலத்திற்குக் கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது.

தேசிய வளர்ச்சி என்னும் அவசரப் பணிக்கு நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்வோம். சற்றுக் காலதாமதமானாலும் சுதந்திர இந்தியாவில் திட்டமிட்ட வளர்ச்சியின் வரலாற்றில் 8-வது ஐந்தாண்டுத் திட்டம் முக்கியமானதொரு கட்டத்தைக் குறிக்கிறது. 8-வது திட்டத்தின் அளவையும் அம்சங்களையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளும் அதே நேரத்தில் உங்களுடன் ஒரு சில கருத்துக் களைப் பரிமாறிக் கொள்ள விரும்புகிறேன்.

பொருளாதாரச் சிக்கல்கள் என்ற இருட்டுக் குகையின் முடிவில் வெளிச்சத்தை இப்போதுதான் நாம் காணத் தொடங்கியுள்ளோம். கோடிக்கணக்கான மக்களுக்கு வளமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க நாம் உறுதி கொள்ளும் அதே நேரத்தில் இந்தப் பணியில் நம்மை எதிர்நோக்கியுள்ள கடுமையான எதார்த்தங்களையும் நாம் கணக்கிற் கொள்ள வேண்டும். நாம் பேரிணப் பொருளியல் கோட்பாட்டின் சிக்கலான பகுதிகளுக்குள் செல்ல விரும்பவில்லை. ஆனால், மாபெரும் மக்கட் தொகையின் இலட்சக்கணக்கான ஏழைகளையும் கொண்டுள்ள நம்மைப் போன்ற ஒரு நாட்டின் பொருளாதாரத்தைப் பொருத்த வரையில் வளர்ச்சித் திட்டம் என்பது நம்முடைய சொந்த அனுபவத்தின் அடிப்படையில் அமைந்த நமது தயாரிப்பாக இருக்க வேண்டியது அவசியம். அதுமட்டுமல்ல, ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்னும் இறுதிச் சோதனையிலும் அது வெற்றிபெற இணக்கமான அணுகுமுறைகளை மேற்கொள்வதே புத்திசாலித்தனம் என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் வேளையில் நமது நாட்டைப் போன்ற ஒரு நாட்டின் பொங்கிப் பெருகிவரும் ஏழை மக்களுக்கு ஒரு சிறந்த வாழ்க்கையை அளிப்பது என்னும் இறுதிச் சவாலைச் சந்திப்பதற்கு, வளர்ச்சிப் பொருளாதாரம் புதிய வழிவகைகளைக் கண்டறிய வேண்டும். ஏழ்மையை அகற்றுவது என்னும் இந்தப் பிரமாண்டமான வேலையே 8-வது திட்டத்தின் மையப் பொருளாக அமைய வேண்டும். இந்த வகையில் இந்தியா மேற்கொள்ளுகின்ற சோதனை, தற்போதுள்ள சூழ்நிலையில் இணையற்றதாக இருக்க வேண்டும்.

> "ஏழை மக்களுக்கு ஒரு சிறந்த வாழ்க்கையை அளிப்பது என்னும் இறுதிச் சவாலைச் சந்திப்பதற்கு வளர்ச்சிப் பொருளாதாரம் புதிய வழிவகைகளைக் கண்டறிய வேண்டும்".

விரைந்து மாறிவருகின்ற ஓர் உலகத்தில் நாம் தன்னந்தனியாக இருந்துவிட முடியாது. வளர்ந்த நாடுகளில் கூட ம்றுபரிசீலனைக்கான அடையாளங்கள் தென்படும் இந்த நேரத்தில் உலகப் பொருளாதாரத்தோடு ஒருங்கிணைந்து செல்வது என்பது எளியது அல்ல. பண வீக்கம் கட்டுப்படுத்தப்பட வேண்டும், குறிப்பாக உணவுப் பொருட்களின் விலைவாசி உயர்வு ஏழை மக்களைப் பாதித்திருக்கிறது. அந்த ஏழைகள் நலம் காக்கப்படுவதை நாம் உறுதி செய்ய வேண்டும். எங்களைப் பொருத்த வரையில் ஒரு திறமையான பொது விநியோக முறையை ஏற்படுத்தி அரிசி தானியங்கள் ஆகியவற்றின் விலைகளை எளிய மக்கள்வாங்கக்கூடிய நிலையில் தொடர்ந்து வைத்திருக்கின்றோம்.

மாநில அரசுகள் மக்களோடு அவர்களது அன்றாட வாழ்க்கையில் நெருங்கியிருக்க வேண்டியுள்ளது. ஆகவே, உணவுப் பொருள் விலையுயர்விலிருந்து ஏழை மக்களைக் காக்கும் நிதிச் சுமையை மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. நிதிக் கட்டுப்பாட்டின் தேவை முதலீடு செய்வதற்கான நிதியாதாரங்களைத் திரட்டுதல் ஆகியவற்றை வலியுறுத்துகின்ற நேரத்தில் பட்டினியையும் இல்லாமையையும் அகற்றுவதே நமது பொருளாதாரத் திட்டத்தின் முதற் குறிக்கோளாகவும் உடனடிக் குறிக்கோளாகவும் இருக்க வேண்டுமென்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

உணவுப் பொருட்களின் விலையை ஒரு தலைப் பட்சமாக உயர்த்திவிடக் கூடாது என்பதில் மிகுந்த எச்சரிக்கையும் கவனமும் செலுத்தப்பட வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன். ஏனென்றால், மாநிலங்களின் நிதிநிலையையே தடுமாறச் செய்துவிடக் கூடியதாகும்.

வேளாண்மை ஆராய்ச்சிக்கு நாங்கள் மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறோம். மேலும், உழவர் பெருமக்களுக்குப் புதிய தொழில் நுட்பம் சென்று சேரும் வகையில் திறன்மிக்க விஞ்ஞானப் பயிற்சியையும் அளித்து வருகிறோம். அதே நேரத்தில் தமிழ்நாட்டில் மேலும் நீர்நிலை ஆதாரங்கள் அமைவதற்கில்லை என்பது குறித்தும் நிலத்தடி நீர் வெகு வேகமாகக் குறைந்துவருவது குறித்தும் நாங்கள் பெரிதும் கவலைப்படுகிறோம்.

மத்திய அரசால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற திட்டம் சம்பந்தமான குறிப்புகள் தமிழ்நாட்டில் நிலவி வருகின்ற இந்த மோசமான சூழ்நிலையைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன. தண்ணீர்ப் பற்றாக்குறை நிலவிவரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு உபரி நீரையும் வெள்ளப் பெருக்கையும் கொண்டுவர வேண்டும் என்பதில் புதிய பார்வை தேவை என்பதை அடிக்கடி நான் வற்

> "8-வது திட்டத்தின் மையக்கருத்து இந்த நூற்றாண்டின் இறுதியில் முழு வேலைவாய்ப்பு என்னும் இலட்சியமாக இருக்க வேண்டும்".

புறுத்தி வருகிறேன். துணைத் தலைவர் அவர்கள் 8-வது திட்டத்தில் படுகை நீர்ப் பரிவர்த்தனை களை நிறுவுவதற்கும் குறிப்பாக தீபகற்ப இந்தியா வின் நதிநீர்த் தொகுப்பை அமைப்பதற்கும் என்னிடம் உறுதி வழங்கியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தத் திட்டத்திற்காகப் போதுமான ஒதுக் கீடுகள் இருக்குமென நான் நம்புகிறேன். தற் போதுள்ள நீர்ப்பாசன முறையைக் குறிப்பாகக் காவிரி டெல்டாப் பகுதியை மேம்படுத்த மத்திய அரசு சிறப்பான உதவியை வழங்க வேண்டியதன் அவசியத்தை நாம் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

8-வது திட்டத்தின் மையம் இந்த நூற்றாண் டின் இறுதியில் முழு வேலைவாய்ப்பு என்னும் இலட்சியமாக இருக்க வேண்டும். விரைந்து முன் னேறுதல், நாட்டை நிர்மாணிக்கும் நற்பணியில் அதிகார வர்க்கத்தின் தடைகளிலிருந்து விடுபட்டு ஈடுகொடுத்தல் ஆகியவற்றில் தனது அடிப்படை நம்பிக்கையை மீண்டும் காணும் இலட்சியப் பயணமே 8-வது திட்டத்தின் முக்கிய அம்சமாக இருக்க வேண்டும்.

குறிப்பீட்டுத் திட்டமானது தனியார் துறை பங்கேற்பு மலரும் வகையில் உதவிகரமாக இருக்க வேண்டும். எங்களது மாநில புதிய தொழிற் கொள்கையில் இதைத் தெளிவாகவே விளக்கி யிருக்கின்றோம். தனியார் துறை ஈடுபாட்டுக்கு வசதியளிக்கும் வகையில் முனைப்பான ஓர் அணுகுமுறையோடு விரைந்து தொழில், மயமாக்கு வதில் நாங்கள் எங்களை அர்ப்பணித்துக் கொண்டி ருக்கின்றோம். இந்த முயற்சியில் மத்திய அரசின் முழு ஆதரவு எங்களுக்குத் தேவைப்படுகிறது.

புதிய தொழிற்சாலைகளுக்குக் கடனுதவி அளித்தல் குறித்து நிதிநிறுவனங்களுக்கிடையே போட்டி மனப்பான்மையை வளர்ப்பதன் அவசி யத்தை நிதிநிலைக் குழு தெளிவாக வற்புறுத்தி யுள்ளது. இந்த யோசனை வரவேற்கத் தக்கது. ஒழுங்கு முறை இல்லாத சூழ்நிலையில், முனைப் பான தொழில் வளர்ச்சியின் அதிகாரங்களும் பொறுப்பும் இப்போது முழுவதுமாக இதைப் போன்ற நிறுவனங்களையே சார்ந்திருக்கின்றன. இந்தப் புதிய சூழ்நிலையில் ஒரு நிலையான முறைக்

> **''தமிழ்நாட்டில் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் 1500 மெகாவாட் உற்பத்தி செய்யும் மகத்தான லிக்னைட் சுரங்க மற்றும் அனல் மின் திட்டத்தை நிறுவ நாங்கள் தீர்மானித்துள்ளோம்''.**

> **''சாலை அமைத்தல், குடிநீர் வழங்குதல் போன்ற அடிப்படை வசதிகளுக்குப் போதுமான ஒதுக்கீடுகளை நாம் ஏற்படுத்த வேண்டும். உண்மையான வளர்ச்சி அதனால்தான் ஏற்படும்''.**

கெனத் திட்டமிடுவது அவசியமாகும். நிதி முறைக் கான குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் பிராந்திய நிலையில் 4 அல்லது 5 தொழில் வளர்ச்சி வங்கிகளை நிறுவ யோசனை தெரிவிக்க விரும்புகிறேன். இந்த வங்கிகளின் குழுவில் மாநில அரசின் பிரதிநிதிகளை இடம்பெறச் செய்வது மேலும் பொருத்தமானதாகும். அவர் களின் செயல்முறையில் இது தெளிவை உறுதிப் படுத்தும். சென்னை ஒரு பெரிய நிதி சேவை மையமாக இருப்பதால், தென்மண்டலத் தொழில் வங்கியின் தலைமையகமாக இருக்கலாம். வேலை வாய்ப்பில் தன்னிறைவை அடைய வேண்டும் என் னும் எங்களது முயற்சியில் நாங்கள் சிறு தொழில் களுக்கும் வர்த்தகத்திற்கும் குறிப்பாக பண்ணைகள் இல்லாத கிராமப்புறங்களுக்குச் சிறப்பிடம் அளிக்க வேண்டியுள்ளது. நிதித் துறையின் சீர்திருத்தங்கள் முன்னுரிமைத் துறைக்குக் கடனுதவி அளிப்பதில் எந்த ஒரு விரோத மனப்பான்மைக்கு வழி வகுக்கக்கூடாது. மாநிலத்தில், பொருள் உற்பத்தித் துறையின் மாற்றங்கள் குறித்ததான பகுப்பு இத் துறையின் இன்றியமையாத முக்கியத்துவத்தைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. நிதி நிறுவனங் களுக்கு உதவுவதில் கருத்து வேறுபாடு இல்லாத நிலையில், அதிக அளவில் வேலை வாய்ப்பு உற்பத்தித் திறனை ஏற்படுத்தக்கூடிய முன்னுரிமை பெறத்தக்க துறைகளுக்குத் தேவையான கடனுதவி அளிப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

திட்டக் குழுவின் கடந்த கூட்டத்தில், கடந்த 20 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வகையில் எந்த ஒரு மத்திய முதலீடும் தமிழ்நாட்டுக்குக் கிடைத்த தில்லை என்பதைக் குறிப்பிட்டேன். 8-வது திட்டத்தில் மத்திய பொதுத்துறைத் திட்டங்களில் தமிழ்நாட்டிற்கான பங்கு குறித்து நான் அதிருப்தி தெரிவித்தேன். எனது வேண்டுகோள் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கிறது என்பது குறித்து மகிழ்ச்சி யடைகிறேன். சென்னையில் பொதுத்துறை சார் பில் நிறுவப்படவிருக்கும் ஏரோமேடிக்ஸ் திட்டத் திற்கு ஒப்புதல் அளித்தமைக்காக பிரதமர் அவர் களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். இந்த மகிழ்ச்சிகரமான தொடக்கத்தோடு பழைய நிலைமாறும் என்றும், 8-வது திட்டத்தில் தமிழ்நாட்டில் மத்திய முதலீடு அதிகரிக்கப்பட



> **''கல்வி, சத்துணவு, நலவாழ்வு, நலிந்தோர்க்கான திட்டங்கள் ஆகியவற்றுக்கான ஒதுக்கீடுகளுக்குச் சிறப்பிடம் தந்திருக்கின்றோம்''.**

வேண்டும் என்னும் எங்களது தொடர்ந்த வேண்டு கோளுக்கு மத்திய அரசு கூடுதல் கவனம் செலுத் திப் பரிசீலிக்கும் என்றும் நான் நம்புகிறேன்.

எரிசக்தித் துறையின் விரைவான வளர்ச்சிக்கு உயர்ந்தபட்ச முக்கியத்துவம் அளித்திருக்கிறோம். குறிப்பாக, நெய்வேலியில் 3-வது லிக்னைட் சுரங்கம் வெட்டுவது குறித்து குறிப்பிட விரும்பு கிறேன். திட்டக் குழுவில் குறிப்புகளில் இது காணப்படவில்லை. 8-வது திட்டத்தில் இதனை விரைந்து தொடங்குவது அவசியமாகும்.

அதுபோலவே தமிழ்நாட்டுக்கு எரிவாயு கொணரும் சதர்ன் கேஸ் கிரிட் பற்றிய எந்தக் குறிப்பும் காணப்படவில்லை. காவிரிப் படுகை யில் PY-3, PY-1 ஆகிய இரண்டையும் பயன்படுத் தவும் அதனுடைய தொடர்போடு எரிவாயுவைக் கொண்டு செயற்படும் 300 மெகாவாட் மின் திட்டத்தைப் பொதுத்துறை அல்லது கூட்டுத்துறை மூலம் மேற்கொள்ள விரும்புகிறோம்.

என்னுடைய இந்த ஆலோசனை கருத்திற் கொள்ளப்படும் என்று நான் நம்புகிறேன். விரைவில் நிறைவடைய இருக்கின்ற புதிய அனல் மின் திட்டங்களுக்குத் தேவையான நிலக்கரி கொண்டு வருவதற்காகச் சென்னைக்கு அருகில் எண்ணூரில் அமைக்கப்படும் துணைத் துறைமுகத் திட்டத்திற்கு உடனே ஒப்புதல் அளிக்கப்பட்டு இந்த அதிமுக்கிய மான திட்டத்துக்குரிய பணிகள் தொடங்கப்படு மென்று நான் நம்புகிறேன்.

8-வது திட்டத்தில் மின்னாற்றலுக்கான திட்ட மிடுதல், வளர்ச்சி ஆகியவற்றில் ஈடுபட தனியார் துறை அழைக்கப்பட வேண்டும் என்று அண்மை யில் அறிவிக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன். ஆனால், எல்லா மட்டங் களிலும் விரைந்து முடிவெடுக்கப்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். தமிழ்நாட்டில் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் 1,500 மெகாவாட் உற்பத்தி செய்யும் மகத்தான லிக்னைட் சுரங்க மற்றும் அனல்மின் திட்டத்தை நிறுவ நாங்கள் தீர்மானித்துள்ளோம். இந்த மாபெரும் திட்டம் மொத்தம் 7 ஆயிரம் கோடி ரூபாய் திட்டத்தில் கூட்டுத் துறை மூலம் அமைக் கப்பட இருக்கிறது. இதற்காக ஒரு புதிய கம் பெனியை நிறுவி செயல் சாத்தியக் கூறுகளைப் பற்றிய அறிக்கையை உருவாக்கி வருகிறது. இந்தத் திட்டத்திற்கான இசைவு விரைவில் அளிக்கப் படுமென்று நான் நம்புகிறேன்.

தனியார் துறையில் தூத்துக்குடியில் ஒன்றும் கடலூரில் ஒன்றுமாக ஒவ்வொன்றும் 500 மெகாவாட் திறன்கொண்ட, நிலக்கரியைப் பயன் படுத்தும் அனல்மின் திட்டங்களை உருவாக்க நாங்கள் திட்டமிட்டு வருகிறோம். இந்த மின் நிலையங்களை இயக்கத் தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்ய அனுமதி விரைவில் கிடைக்கு மென்று நான் நம்புகிறேன். சோவியத் யூனியன் துண்டு துண்டுகளாக்கப்பட்ட பின்னணியில் கூடங் குளம் அணு ஆற்றல் திட்டம் பற்றிய கருத்துக்கள் மறுபடி வகுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

நம் நாடு மிகப் பெரியது. இது ஒரு மாபெரும் சந்தை. இந்தச் சந்தையை நிலையாக வைத்திருக்கக் கூடிய சில கோட்பாடுகள் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்குத் தீங்கு பயக்கும் வகையில் மாறு தல்கள் அடைந்துள்ளன. எஃகு, நிலக்கரி போன்ற முக்கியமான பொருள்களுக்கு விலை குறிக்கும் விஷயத்தில் தெள்ளத் தெளிவாக ஒரு பாதகமான சூழ்நிலைக்குத் தமிழ்நாடு தள்ளப்பட்டிருக்கிறது. சரக்குக் கட்டணம் சமன் செய்யப்பட வேண்டு மென்ற எங்கள் வேண்டுகோளுக்கு எந்த மறு மொழியுமில்லை. குறைந்தபட்சம் தொலைதூர மாநிலங்களிலிருந்து இந்த விலை உயர்வான பொருள்களைப் பெறக்கூடிய கடுமையான நிலை யிலிருந்து நாங்கள் விடுவிக்கப்படலாம். குறிப்பாக நிலக்கரி கொண்டு வருவதில் நாங்கள் அடையும் இன்னல்களை நான் குறிப்பிடுகிறேன்.

நிலக்கரி போன்ற மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு முழுமையான வசதி மேலும் வளர வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டைப் போன்ற ஒரு மாநிலம் வெளிச்சந்தையிலிருந்து அடிப்படை மூலப் பொருட்களைக் கொண்டு வருவதற்கு ஏன்

> **''எங்கள் மாநிலத்தின் 8-வது திட்டத்தில் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் முன்னுரிமை பெறும். நிலையான வளர்ச்சி, அதிக அளவில் வேலை வாய்ப்பு, சிறந்த விநியோக் கோட்பாடு, நேரடி வறுமை ஒழிப்புக்காக வடிவமைக்கப்பட்ட சிறப்புத் திட்டங்கள் சிறப்பிடம் பெறும்''.**

அனுமதிக்கப்படக் கூடாது என்பதற்கு எந்த ஒரு காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை.

திட்டக் குழுவின் கடந்த கூட்டத்தில் வெளிப் புறச் சார்பான பொருளாதாரத்தை வளர்ப்பதற் கான வழிமுறைகளைக் குறிப்பிட்டிருந்தேன். இதைச் சாத்தியமாக்கும் இரண்டு சாதனங்களை யும் கூடத் தெரிவித்திருந்தேன். நான் குறிப் பிடுபவை வரியில்லாத் துறைமுகமும் சிங்கப் பூருடன் வணிகச் சந்தையும் ஆகும். வரியில்லா ஒரு துறைமுகத்தை அறிவித்திருப்பது தமிழகத்தில் வரியில்லா இன்னொரு துறைமுகத்தை விரைவில் அமைப்பதற்குத் தடையாக இருக்காது என்று நம்புகிறேன். இந்த இரண்டு கருத்துக்களுக்கும் விரைவில் செயல்வடிவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதில் நான் ஆர்வமாக இருக்கின்றேன். அதன் மூலம் 8-வது திட்டத்தில் நல்லதொரு வளர்ச்சி நாம் எட்டுவது உறுதி செய்யப்படும்.

சாலை அமைத்தல், குடிநீர் வழங்குதல் போன்ற அடிப்படை வசதிகளுக்குப் போதுமான ஒதுக்கீடுகளை நாம் ஏற்படுத்த வேண்டும். உண் மையான வளர்ச்சி அதனால்தான் ஏற்படும். குறிப் பாக எங்கள் மாநிலத்திலுள்ள சாலைகளின் நிலையைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**கிழக்குக் கடற்கரை தேசிய நெடுஞ்சாலை அமைப்பது பற்றியும்**, சில தேசிய நெடுஞ்சாலை களில் 4 வழிப்பாதைகள் அமைப்பதற்கும் மாநில நெடுஞ்சாலைகளைத் தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றம் செய்வதற்கும் நாங்கள் விண்ணப்பம் செய்திருந்தோம். இந்தத் திட்டங்களுக்கான விரை வான அனுமதியை எதிர்பார்க்கின்றோம். மத்திய சாலை நிதியிலிருந்து மாநிலங்களுக்குக் கூடுதலாகத் தொகை ஒதுக்குவது குறித்து விரைவான முடி வெடுக்குமாறும் நான் வேண்டிக் கொள்கிறேன். நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியிருந் தாலும் இந்த நிதிக்கு அளிக்கப்படும் கூடுதல் தொகைகள் மாநிலங்களுக்குக் கிடைக்க இன்னும் வழிவகை செய்யப்படவில்லை. சாலை மேம் பாட்டுக்காக நிதியளிப்பதற்குச் சுங்கம் வசூலிக்கும் ஒரு திட்டத்திற்கு நாங்கள் இறுதி வடிவம் தந்திருக் கின்றோம். சாலைகளைச் சரியாகப் பேணுவதற்கு நாங்கள் உயர்ந்த பட்ச முன்னுரிமை வழங்கி யிருக்கின்றோம்.

8-வது திட்டத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு நாங்கள் மிகுந்த முன்னுரிமை அளித்திருக்கின்றோம். ஒவ்வொரு குடியிருப்புக் கும் குறைந்தபட்சம் ஒரு நீர் ஆதாரத்தையாவது வழங்குகின்ற சோதனையில் நாங்கள் வெற்றி கண்டிருந்தாலும் கோடை காலத்தில் முற்றிலும் சிரமத்திற்கு உள்ளாகின்ற எண்ணற்ற குடியிருப்பு களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குகின்ற பிரமாண்டமான பணியை நாங்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு நாங்கள் வெளிநாட்டு உதவியுடன் செயல்படுத்தபடவிருக் கும் ரூ.528.50 கோடி திட்டம் ஒன்றை வகுத் துள்ளோம். இந்தத் திட்டத்திற்குக் கூடிய விரைவில் அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் நீண்டகாலமாக நிலவிவரும் கடும் தண்ணீர்ப் பற்றாக்குறை நன்றாகத் தெரிந் ததே. நான் ஆந்திர முதல்வருடன் பயனளிக்கக் கூடிய ஆலோசனைகளை நடத்தினேன். அதன் விளைவாக 1995-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் சென்னைக்கு, கிருஷ்ணா நதிநீர் கிடைக்க உறுதி செய்யும் வகையில் நாங்கள் புதிய ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடிந்திருக்கிறது. அதே காலக்கட்டத் தில் ரூ.1,180.20 கோடி முதலீட்டில் கிருஷ்ணா நீரைச் சுத்தப்படுத்தி வழங்குவதற்கான மிகப்பெரிய திட்டமொன்றை நாங்கள் வகுத்துள்ளோம். இத்திட்டம் உலக வங்கியின் ஒப்புதலுக்குக் காத் திருக்கிறது.

உண்மையில் நான்கு பெருநகர்களிலும் பிரச்சினைகள் பயமுறுத்திக்கொண்டு இருக் கின்றன. 8-வது திட்டத்தில் இந்த நான்கு பெரு நகர்களிலும் நிலவும் மோசமான நிலைமையைச் சமாளிக்க ஒரு திட்டவட்டமான முயற்சி மேற் கொள்ளப்பட வேண்டியது அவசியம். சென்னையை எதிர்நோக்கியுள்ள சில முக்கிய பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக சென்னை 2000 என்னும் ஓர் ஒருங்கிணைந்த திட்டத்தை ஏற்படுத்தியுள்ளோம். இதற்குத் தேவைப்படும் செலவினமோ பெரிய அளவிலிருக்கிறது. இந்தச் சிறப்பான நிதி ஆதாரங் களைத் தேடுவது மாநிலத்துக்கு இயலாத காரியம்.

1989-90-வது ஆண்டுக்கான 9-வது நிதித் திட்டத்தில் சென்னை எந்த ஒரு உதவி அடிப்படை யிலான பரிந்துரைகளிலும் இடம் பெறவில்லை. இந்த நான்கு பெருநகரங்களிலும் உள்ள நகர்ப்புற ஏழை மக்களின் மறுவாழ்வுத் திட்டத்திற்கும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் புதிய திட்ட மொன்றை ஏற்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஏழைகளின் பாதுகாப்பான ஏற் பாட்டிற்கு முக்கிய இடத்தை அளித்திருக்கின் றோம். அதே நேரத்தில் மனித வளத்தை மேம்படுத் துவதற்கே திட்டத்தில் முதலிடம் தந்திருக்கின் றோம். கல்வி, சத்துணவு, நலவாழ்வு, நலிந்தோர்க் கான திட்டங்கள் ஆகியவற்றுக்கான ஒதுக்கீடு களுக்குச் சிறப்பிடம் தந்திருக்கின்றோம். ஓர் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்திற்காக வெளிநாட்டு உதவியை வேண்டியிருக்கிறோம். பெண் குழந்தைக் கல்வி, கல்வியின் தர மேம்பாடு, ஆகியவற்றுக்கு இத்திட்டம் மிகவும் முக்கியமளிக் கின்றது. விரைவில் இதற்கான இசைவை எதிர்பார்க்கின்றோம். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் நாங்கள் பெற்றுள்ள வெற்றி, பரிசு பெறுவதற்குப் பதிலாக நிதி ஆதாரங்கள் மறுக்கப்படுவதற்கே வழிகோலியிருக்கிறது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினைக்குத் தேவையான அரசியல் அர்ப்பணிப்பைப் பெறு வதற்கு ஆற்றல் மிக்க ஓர் ஊக்குவிப்பை எதிர் பார்க்கிறோம். தேசிய சராசரிக்குக் கீழாகத் தனி நபர் வருமானங்கொண்ட மாநிலங்களுக்கு காட்கில் பரிந்துரைபடி நிதி ஒதுக்கீடு செய்யும் போது வருமானக் கணக்கீடு, 1971-ஆம் ஆண்டு மாநிலங்களின் மக்கள் தொகைக் கணக்கீட்டின்படி அமைய வேண்டும் என்னும் கருத்தைத் தெரி வித்துக் கொள்கிறேன். மக்கள் தொகை அடிப் படையில் 60 சதவீதப் பங்கைப் பிரித்தளிக்கும் நடைமுறைக்கு இயைபுடையதாக இது இருக்கும். மக்கள் தொகைக் குறைப்பில் மிகச் சிறப்பான பணியாற்றியிருக்கும் மாநிலங்களுக்கு நிதி ஒதுக் கீட்டைக் குறைத்து விடக்கூடாது என்று கவன மூட்ட விரும்புகிறேன். அவ்வாறு குறைத்து விடுவது முறையற்றதாகும்.

எங்கள் மாநிலத்தின் 8-வது திட்டத்தில் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் முன்னுரிமை பெறும். நிலையான வளர்ச்சி, அதிக அளவில் வேலைவாய்ப்பு, சிறந்த விநியோகக் கோட்பாடு, நேரடி வறுமை ஒழிப்புக்காக வடிவமைக்கப்பட்ட சிறப்புத் திட்டங்கள் சிறப்பிடம் பெறும், ஜவஹர், ரோஜ்ஹர் யோஜனா திட்டத்துக்கான ஒதுக் கீடுகள் குறைக்கப்பட்டிருப்பது குறித்து என் வருத் தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புற ஏழை மக்களின் கைகளில் ஊதி யத்தை நேரடியாக அளிக்கும் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடுகள் உண்மையிலே தொடர்ந்து காக்கப்பட வேண்டியவை. கடுமையான நிதி நெருக்கடி நிலையிலும் கூட ஏழைக்குத் தினசரி உணவை மறுத்துவிடக்கூடாது. விநியோக முறைகளின் நிர்வாகத்தில் புதுமை காணல், உடல்நலம் பேணல், சத்துணவு வழங்குதல், நேரடி ஏழ்மை ஒழிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகிய வற்றுக்கு நாம் சிறப்பிடம் தரப்பட வேண்டும். புதிய வழிகளை அறிமுகப்படுத்துதல் அடிப்படை





முன்னாள் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி அவர்களின் முதலாண்டு நினைவு நாளன்று (21.5.92), தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலக அலுவலர்களும், ஊழியர்களும் "பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழி" எடுத்துக் கொண்டார்கள்.

**‘‘சிறுசேமிப்பு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் வரிச்சலுகைகளை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது, சிறுசேமிப்பிற்கென்று சிறப்பாக ஏற்படுத்தப்பட்ட வசதியாக இருக்க வேண்டும்’’.**

நிலையை விரிவுபடுத்துதல் ஆகியவற்றுக்காக இந்தத் திட்டங்கள் பற்றிய இன்னும் கூர்ந்த பார்வை நமக்குத் தேவைப்படுகிறது.

முக்கியமான துறைகளிலும் புதிய துறைகளிலும் தனியார் துறை பெருமளவில் பங்கு பெறுகையில், உண்மையிலேயே நேரடிப் பொறுப்பு தனக்கு ஓரளவு குறையுமென்று மத்திய அரசு எதிர்பார்க்கலாம். சமூகப் பணிகளில் பெரும் பங்கு ஆற்றும் பொறுப்புள்ள மாநிலங்களுக்கு நிதிச்சுமை இன்னும் கூடும். எனது பார்வையில் மாநிலங்களுக்குக் குறிப்பிடத்தக்க அளவில் பொறுப்புகள் பங்கீடு செய்யப்படுகின்றனவே ஒழிய அந்த அளவுக்கு நிதி ஆதாரங்களில் பங்கீடு இருப்பதில்லை. மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு அளிக்கப்படும் நிதியுதவிகள் மேம்படுத்தப்பட வேண்டும். கடனைத் திருப்பிச் செலுத்த உயர்ந்து வரும் பொறுப்புகளும் வட்டிச் சுமைகளும் அதிகரிக்க அதிகரிக்க மாநிலங்களுக்கு அளிக்கப்படும் நிகர நிதி மாற்றம் உண்மையில் மிகக் குறைவாகவே உள்ளது. 8-வது திட்டம் கடினமான சூழ்நிலைகளில் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று நாம் ஒத்துக் கொண்டிருக்கிற அதே வேளையில், மாநிலங்களுக்கு அளிக்கப்படும் நிதியளவு உயர்த்தப்பட்டிருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். உண்மையில் ஒவ்வொரு திட்டக் காலத்திலும் இவ்வாறு அதிகமாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். 8-வது திட்டத்திலும் இது இயலும் என்றே நான் நம்புகிறேன்.

1991 டிசம்பரில் தேசிய வளர்ச்சிக் குழுவால் மறுபரிசீலனை செய்யபட்ட காட்கில் திட்டத்தால் மாநிலங்களுக்கான மத்திய உதவி பிரித்தளிக்கப் படுகிறது. தனிநபர் வருமான விவரங்களைச் சரியாகக் கணக்கிடுவதில் உள்ள சிக்கல்களை அந்தக் கூட்டத்திலேயே நான் எடுத்துக்காட்டியிருந்தேன். 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகையை தனிநபர் கணக்கீட்டுக்காக எடுத்துக் கொள்ளப்படலாம் என்னும் என்னுடைய யோசனை இந்த சிக்கலைத் தீர்த்து வைக்கக் கூடும்.

தனிநபர் வருமானம் ஒவ்வொரு ஆண்டும் கணக்கிடப்படுவதால் இந்த ஆலோசனையைச் சுலபமாக அமல்படுத்தலாம். தமிழ்நாடு சந்திக்கவிருக்கும், பல்வேறு சிறப்புப் பிரச்சினைகளுக்குள் செல்ல நான் விரும்பவில்லை. நிதி ஒதுக்கீட்டின் பொழுது இது கருத்தில் கொள்ளப்படும் என நான் நம்புகிறேன்.

நம் கடல் எல்லைப் பிரச்சினை அறியப்பட்டது. கடந்த ஆண்டு சிறு உதவியைப் பெற்றுள்ளோம். குறிப்பாக எல்லைப் பிரச்சினைகளைக் கொண்டுள்ள மாநிலங்களுக்குள்ள மத்திய அரசின் சிறப்பான நிதி ஒதுக்கீடு தொடர வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

மாநிலத் திட்டங்கள் பெரும் அளவில் வெளிநாட்டு உதவியை அடிப்படையாகக் கொண்ட நிதி ஆதாரங்களையே நம்பி உள்ளது. புதிய திட்டங்கள், மற்ற பிரச்சினைகளைக் குறித்து மத்திய மாநில அரசுகளுக்கிடையே நல்லதொரு பேச்சு வார்த்தை நடைபெற வேண்டும். வெளிநாட்டு உதவியின் அடிப்படையில் மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவிக்குப் போடப்படும் நிபந்தனைகள் குறித்து நாம் கவலைகொள்ள வேண்டியதில்லை. மத்திய நிதி நிலையறிக்கையைச் சரி செய்யும் குறுகியகாலக் கண்ணோட்டத்தோடு இதை நாம் வழங்கக்கூடாது. மாநிலங்கள் பெரும்பாலும் சமூக நலப் பிரிவில் கடினமான திட்டங்களை அமல்படுத்தி வருகிறார்கள். அவர்களைக் கூடுதல் செலவினை ஏற்கச் சொல்வது சரியாகாது. வெளியிலிருந்து பெறப்பட்ட 100 சதவிகித உதவிகள் இன்னும் சில மாநிலங்களிலுள்ள துறைகளுக்குப் போய்ச் சேராமல் உள்ளது. ஏற்கெனவே அளிக்கப்பட்ட உறுதிகளின் அடிப்படைகளில் 100 சதவிகித உதவி எந்தவித விலக்கும் இல்லாமல் மாநிலங்களிலுள்ள அனைத்துத் திட்டங்களுக்கும் ஒதுக்கப்பட வேண்டும்.

சிறுசேமிப்பு, கடன் வசதிகளை வெகுவாகக்

**‘‘8-வது திட்டத்தைத் தொடங்குகின்ற இவ்வேளையில், கோடிக் கணக்கான இந்தியர்களுக்குச் சிறப்பான வாழ்க்கையை வழங்குகின்ற நற்பணிக்கு நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்வோம்!’’**

(42—ஆம் பக்கம் பார்க்க)





# முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவு நாள்

## மாண்புமிகு பிரதமர், மாண்புமிகு முதல்வர் மலர் அஞ்சலி

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், கொடுமையான முறையில் ஸ்ரீபெரும்புதூரில் படுகொலை செய்யப்பட்டு ஓராண்டு முடிவடைந்து, 21.5.1992 அன்று முதலாம் ஆண்டு நினைவு நாள் நாடெங்கும் அனுசரிக்கப்பட்டது.

அன்னாரது நினைவு நாளை முன்னிட்டு ஸ்ரீபெரும்புதூரில் அவர் உயிர் நீத்த இடம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

ராஜீவ் காந்தி உயிர் நீத்த இடத்தில், மலர் அஞ்சலி செலுத்துவதற்காக மாண்புமிகு பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் டெல்லியிலிருந்து விமானப்படை விமானம் மூலம் 21.5.92 காலை சென்னை வந்தார்.

மாண்புமிகு பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா, திரு. வாழப்பாடி கே. ராமமூர்த்தி, மத்திய அமைச்சர்கள் ஆகியோர் ஹெலிகாப்டர் மூலம் ஸ்ரீபெரும்புதூருக்கு அன்று காலை 10 மணிக்கு வந்து சேர்ந்தனர்.

மாண்புமிகு பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஹெலிகாப்டரில் இருந்து இறங்கியவுடன், நேராக ராஜீவ் காந்தி உயிர் நீத்த இடத்திற்குச் சென்றனர். அங்கு மாண்புமிகு பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் மலர் அஞ்சலி செலுத்தினர். அவர்களைத் தொடர்ந்து மத்திய அமைச்சர்கள் திரு. சங்கரானந்த், திரு. விஜயபாஸ்கர் ரெட்டி, திரு. பொதேதார், திரு. குலாம்நபி ஆசாத், மாண்புமிகு கேரள முதல்வர் திரு. கருணாகரன், திரு. ஜி.கே. மூப்பனார், திரு. வாழப்பாடி கே. இராமமூர்த்தி ஆகியோரும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண்சிங் அவர்களும் மலர் அஞ்சலி செலுத்தினார்.

மலர் அஞ்சலி செலுத்தி முடிந்ததும், மாண்புமிகு பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் ராஜீவ் நினைவிடம் அருகே அமைக்கப்பட்டிருந்த மேடைக்குச் சென்றனர். மாண்புமிகு பிரதமர் அவர்கள், 'பயங்கரவாத எதிர்ப்பு' உறுதிமொழியை ஆங்கிலத்தில் படித்தார். அதை மாண்புமிகு தமிழக முதல்வர் உள்பட அனைவரும் திரும்பச் சொல்லி 'பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழி' எடுத்துக் கொண்டனர்.

அந்த உறுதிமொழி வாசகம் வருமாறு:

'அகிம்சை, சகிப்புத் தன்மை ஆகிய நம் நாட்டின் மரபுகளில் தளராத நம்பிக்கையுடைய இந்திய மக்களாகிய நாம், எல்லா வகையான பயங்கரவாதங்களையும் முழு ஆற்றலோடு எதிர்ப்போம் என உறுதி கூறுகிறோம். எல்லா மக்களிடத்தும், அமைதி, சமுதாய ஒற்றுமை, நல்லுணர்வு ஆகியவற்றைப் போற்றி வளர்க்கவும், மக்களுடைய உயிர்களுக்கும் மற்றும் நற்பண்புகளுக்கும் ஆபத்து விளைவிக்கும் பிரிவினைச் சக்திகளை எதிர்த்துப் போராடவும் நாம் உறுதி கொள்வோம்.''

பிரபல கர்நாடக இசை மேதை திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் பிரார்த்தனைப் பாடல்களைப் பாடினார். அதற்குப்பின் 10.40 மணிக்கு மாண்புமிகு பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஹெலிகாப்டரில் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

முன்னதாக, கோவையிலிருந்து வந்த ராஜீவ் காந்தி ஜோதியை மாண்புமிகு பிரதமர் அவர்கள் பெற்றுக் கொண்டார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும், மறைந்த மாபெரும் தலைவர் ராஜீவ் காந்திக்கு அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
என். இளங்கோ.



## அத்துமீறிக் கட்டடம் கட்டுவதைத் தவிர்க்க மாநகராட்சியின் புதிய நடைமுறை

''திட்ட அனுமதிக்கு மாறாக அத்துமீறிக் கட்டடம் கட்டுவதைத் தொடக்க நிலையிலேயே அதாவது அடித்தளம் போடும்போதே தடுத்து நிறுத்துவதற்கு ஒரு புதிய நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

''இதன்படி கோட்ட இளம் பொறியாளர், உதவிப் பொறியாளர் தங்கள் பகுதிகளில் திட்ட அனுமதி வழங்கப்பட்ட கட்டடங்கள் அனைத்தும் அடித்தளம் போடும்போதே பரிசோதனை செய்யப்பட்டு அவை யாவும் அனுமதித்த திட்டப்படியே உள்ளன என்று சான்றிதழ் ஒன்றினை மாநகராட்சி ஆணையருக்கு அனுப்ப வேண்டும். ஏதாவது மாறுதல் இருக்குமானால், அவர்கள் உடனடி யாக உரிமையாளருக்கு நோட்டீசு அளித்து மேலும் கட்டடம் கட்டுவதைத் தடுத்து நிறுத்தத் தலத்திலேயே நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்டடம் கட்டி முடியும் வரை பின்னர் ஏதும் மாறுபாடுகள் செய்யாதவாறு கண்காணிக்க வேண்டும்.

''கட்டடம் கட்டப்பிட்ட பிறகு அடித்தள மட்டத்திலேயே வேறுபாடுகளோ அத்துமீறல்களோ கண்டுபிடிக்கப்பட்டால் கோட்ட-இளம் பொறியாளர்கள், உதவிப்பொறியாளர்கள் பொறுப்பாவார்கள். உரிமையாளர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும். திட்ட அனுமதிக்குப் புறம்பாக அத்துமீறிக் கட்டடம் கட்டப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் இந்த நடைமுறை உடனடியாக அமலுக்கு வருகிறது. எனவே, அனைவரும் கட்டட விதிகளின்படி கட்டடம் கட்டுவதை உறுதி செய்ய மாநகராட்சியோடு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்'' என்று சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு. இரா. பூர்ணலிங்கம் அவர்கள் ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.

# திரைப்பட நகர்

## முதல்வர் அடிக்கல் நாட்டினார்

சென்னை - தரமணியில் இருக்கின்ற தமிழ்நாடு அரசு திரைப்படக் கல்லூரி வளாகத்தில், 28.5.92 அன்று மிக எளிமையாக நடைபெற்ற 'திரைப்பட நகர் அடிக்கல் நாட்டு விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டார்.

செய்தி சுற்றுலாத் துறைச் செயலாளர் திருமதி சி.கே.கரியாலி இ.ஆ.ப., அவர்கள், திட்ட விளக்கத்தோடு கூடிய தமது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:

திட்ட விளக்கம்:

''இந்தத் திரைப்பட நகரின் முதல் கட்டப் பணிகள் 70 இலட்சம் ரூபாய் முதலீட்டில் துவங்கும். படம் பிடிக்கத் தேவையான பள்ளி, கல்லூரி, பாலம், விமான நிலையம், புகைவண்டி நிலையம் குடிசைகள், கோயில் அரண்மனை, மாளிகைகள், நீச்சல் குளம் போன்ற எல்லாம் இங்கேயே உருவாக்கப்படும்; தண்ணீருக்குள் படம் பிடிக்கும் வசதியும் செய்து தரப்படும். ஒலிப்பதிவு, படத்தொகுப்பு, ஒப்பனை நிலையமெல்லாம் இங்கேயே அமையும்.

''இந்நகரில் - படப்பிடிப்பிற்காக வரும் நட்சத்திரங்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள் தங்க ஓய்வில்லங்களும் உருவாக்கப்படும்; சுற்றுலாப் பயணிகள் படப்பிடிப்பைக் காணச் செய்து அதன் மூலம் அரசுக்கு ஒரு வருவாயும் ஈட்டப்படும்.''





திரைப்பட நகர் - மாதிரி வடிவம்

**விளக்கேற்றி வைத்தல்:**

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் - புதிதாக அமையவிருக்கும் 'திரைப்பட நகருக்கு' அடிக்கல் நாட்டி - அதற்கான பெயர்ப் பலகைகளையும் திறந்து வைத்தார். அதன் மாதிரி வடிவமைப்பையும் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

**பூச்செண்டு:**

திரைப்படக் கல்லூரி மாணவ-மாணவிகள் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மலர்ச்செண்டும் - திரைப்படக் கல்லூரி நிர்வாகத்தினர், அலுவலர்கள் சார்பில் நினைவுப் பரிசும் வழங்கப்பட்டன.

**பங்கேற்றோர்:**

இந்த இனிய விழாவில் - மாண்புமிகு தமிழ்நாடு அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டில்லி சிறப்புப் பிரதிநிதி திரு. தம்பிதுரை அவர்களும், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர் முதலான உயர் அதிகாரிகளும் பங்கேற்றார்கள்.

**எளிய விழா:**

மிக எளிய முறையில் நடைபெற்ற இந்த விழா நிகழ்ச்சிகளைச் செய்தித்துறை இயக்குநர் திரு. க. கணேசன் இ.ஆ.ப., அவர்கள் தொகுத்து வழங்கினார்.

விழா நிறைவுற்றபின் - செய்தியாளர்கள் கேள்விகளுக்குப் பதிலளித்த செய்தித்துறை இயக்குநர் அவர்கள், "இந்தத் திரைப்பட நகருக்கு வரும் படத் தயாரிப்பாளர்கள், திரைப்படம் தொடர்பான எந்த ஒரு பணிக்காகவும் வெளியே செல்ல வேண்டிய அவசியமில்லாமல், படத்தயாரிப்புத் தொழில் எல்லாவற்றையும் இங்கேயே செய்து படத்தை முடித்துக்கொண்டு மனநிறைவோடு வெளியே செல்லத்தக்கதாக இந்நகரை ஓராண்டுக் காலத்திற்குள்ளேயே உருவாக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்" என்று குறிப்பிட்டார்.

**தனி அதிகாரி:**

மேலும் இயக்குநர் அவர்கள் விளக்கமாக அதுபற்றித் தெரிவித்ததாவது:

"இந்தத் திரைப்பட நகரம் 86 ஏக்கர் பரப்பளவில் அமையும். இதன் திட்ட மதிப்பீடு இரண்டு கோடி ரூபாய்க்குள் இருக்கலாம். இந்தியாவில் இது போன்ற திரைப்பட நகரம் இப்போது பம்பாயிலும், திருவனந்தபுரத்திலும் மட்டுமே உள்ளது; மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலோசனைப்படி, அவற்றையெல்லாம்விட மேலானதாக நவீன வசதிகளோடு இது அமையும். திரைப்பட நகரின் தனி அதிகாரியாக அரசு மூலம் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் துணை இயக்குநர் திரு. எம். சண்முகம் நியமிக்கப்பட்டிருக்கிறார்."

—நிகழ்ச்சித் தொகுப்பு: பி.எல்.ஆர்.



# கோவை புதிய விமான நிலையக் கட்டடத் திறப்பு விழா

கோவையில் புதிய விமான நிலையக் கட்டடத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்.

கோவை பீளமேடு விமான நிலையம் ரூ.10 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு அதன் தொடக்க விழா, 15.5.1992 அன்று நடந்தது. அத்துடன் ரூ.165 கோடியில் தொழில்பேட்டை மற்றும் கோவை மாவட்ட நலப்பணித் திட்டங்கள் தொடக்க விழாவும் நடந்தது.

விமான நிலையம் அருகே பிரம் மாண்டமான விழா மேடை அமைக் கப்பட்டு இருந்தது. விழா மேடை அருகே கேரளாவில் நடைபெறும் புகழ்பெற்ற 'பூரம்' திருவிழாவின் போது யானைகள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பதைப் போல 9 யானைகள் வரிசையாக நின்று இருந்தன. யானைகளின் மேல் அமர்ந்தபடி பல வண்ணக் குடைகளை யானைப்பாகர்கள் பிடித்து இருந்தனர். ஒரு யானையின் மீது, 'தமிழக முதல் அமைச்சரே வருக வருக!' என்ற வாசகம் எழுதப்பட்டு இருந்தது.

விழாவுக்கு மாண்புமிகு மத்திய சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. மாதவராவ் சிந்தியா அவர்கள் தலைமை தாங்கினார். தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் முன்னிலை வகித்தார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மேடையில் இருந்த பொத் தானை அழுத்தி விமான நிலையப் புதிய கட்டடம் மற்றும் ரூ.164 கோடி செலவிலான வளர்ச்சித் திட் டங்களைத் தொடங்கி வைத்துப் பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:

'கோவை விமான நிலைய விரி வாக்கத்தினைத் திறந்து வைக்கும் வாய்ப்பினை வழங்கியுள்ள மத்திய அரசுக்கும், இங்கே இன்றைய தினம் வருகை புரிந்து - நான்தான் இந் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண் டும் என்ற அளவுக்கு என் மீது அன்பு பாராட்டியுள்ள மாண்புமிகு மத்திய சிவில் விமானப் போக்கு வரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் மாதவராவ் சிந்தியா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'இன்றுள்ள பொருளாதார நெருக்கடியில் புதிய திட்டங்கள் எதனையும், எந்த மாநில அரசும் தொடங்க முடியாத ஓர் இக்கட்டான நிலை உள்ளதை அவர்களும் நன்கு அறிவார்கள். அத்தகைய இக்கட் டான அவல நிலை சூழ்ந்துள்ள



நேரத்தில்தான் தமிழகத்தைத் தொழில் துறையில் முதல் மாநிலமாக்கும் எங்கள் இலக்கு நோக்கி நாங்கள் விரைந்து பணியாற்றிவருகிறோம். அந்த இலக்கின் ஓர் பணிதான், இன்றைய தினம் தொடங்கப்படும் திருப்பூர் சிட்கோ தொழிற்பேட்டை ஆகும். இதேபோல் தொழில்துறையில் பின்தங்கியுள்ள பிற பகுதிகளிலும் இவ்வாண்டு தொழிற்பேட்டைகள் அமைக்கும் திட்டங்களுக்கு நிதி நிலை அறிக்கையில் வழி வகுத்துள்ளோம் என்னும் மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''



மேலும் இவ்வளவு கடுமையான நிதி நெருக்கடியிலும் பற்றாக்குறையிலும் இன்றைய தினம் திருப்பூர் தொழிற்பேட்டை மட்டுமல்லாது - கோவை மாவட்டத்திலும் ஏறத்தாழ 161 கோடி ரூபாய்க்கான நலத் திட்டங்கள் தொடங்கி வைக்கப் பட்டுள்ளன.

கோவை மாவட்டத்தில் நிலவும் கடும் குடிதண்ணீர்ப் பஞ்சத்தின் கொடுமையைக் குறைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு நீண்ட நாட்களாகக் கோரிக்கை வடிவில் மட்டுமே இருந்து வந்த திட்டங்கள் இன்றைய தினம் நிறைவேற்றப்பட்டு உள்ளன.

இவை மட்டுமல்லாது வளர்ந்து வரும் கோவை நகர் மற்றும் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளின் தேவைகளையும் மனதில் கொண்டு, உரிய மருத்துவ வசதிகளுக்கும்-தொழிலாளர் நலனுக்கும் - வீட்டு வசதி மற்றும் சுகாதார வசதி போன்ற ஏனைய வசதிகளுக்கும், திட்டம் தீட்டப்பட்டு இன்று அத்திட்டங்களுக்கான பணிகள் தொடங்கி வைக்கப் பட்டுள்ளன.

கோவை மாவட்டத்திற்கு மட்டுமல்லாது, தமிழகம் முழுமைக்கும் எங்கள் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் கடும் நிதி நெருக்கடிச் சுமைகளையும் தாங்கிக் கொண்டு எண்ணற்ற நன்மைகளைச் செய்து வருவதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

'குறிப்பாக ஏழை எளிய விவசாயிகள் பலகாலமாகவே கடன் சுமையால் விழி பிதுங்கி நிற்கும் அவலத்தை உணர்ந்து கடன் சுமையால் வாடிநிற்கும் விவசாயிகளின் வாட்டம் போக்குவோம், எனத் தேர்தல் நேரத்தில் எல்லாத் தொகுதிகளிலும் நான் நேரில் வந்து வாக்குறுதி வழங்கி இருந்தேன்.

கடந்த 10 மாத காலமாக எனது அப்பிரதான வாக்குறுதியை நிறைவேற்றும் யோசனைகளை அதிகாரிகளிடம் கேட்டு வந்தேன். அரசின் வரவு செலவுத்திட்ட நிதி நெருக்கடியைச் சுட்டிக்காட்டி அது இயலாதே என்பதை அதிகாரிகள் என்னிடம் தெளிவாகக் கூறி வந்தனர். அவர்களிடம் நான் 'அத்தகைய பற்றாக்குறையைப் போக்கும் வழிமுறைகளைக் கூறுங்கள். அரசின் வருவாயைப் பெருக்கும் திட்டங்களைக் கூறுங்கள், ஏற்றுக் கொள்கிறேன்.

'இந்நாட்டின் முதுகெலும்பாய்த் திகழும் விவசாயி, ஒடிந்து மெலிந்து ஓடாய்த் தேய்ந்து போகாது தடுக்கும் இம்முயற்சிக்கு மட்டும் குறுக்கே நிற்காதீர்கள்' எனத் திட்டவட்டமாக நான் கூறியதை அடுத்து - இன்றைய தினம், நபார்டு நிறுவனம் தள்ளுபடி என்ற பேச்சே இருக்கக்கூடாது எனக் கடுமையாக கூறிய பின்னரும் கூட நாங்கள் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவது என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி 69.07 கோடி ரூபாய் அளவிலான விவசாயிகளின் கடன் சுமையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதை அனைவரும் பாராட்டுவீர்கள் என நம்புகிறேன்.

இந்த 69 கோடியே 7 இலட்சம் கடன் சுமையை அரசு ஏற்றுக்கொள்வது என்பது வெறும் ஏட்டளவில் செய்துவிட்டு அதன் விளைவை அடுத்து வரும் அரசாங்கத்தின் தலையில் சுமத்திவிட்டுச் சென்றதைப் போல அல்லாமல், ஒவ்வொரு விவசாயிக்கும் அந்த விவசாயிக்குரிய ஊக்கத்தொகையை 'செக்' மூலம் நேரடியாக வழங்கும் அரசாங்கம், உங்கள் சகோதரி தலைமையில் அமைந்துள்ள இந்தத் தமிழக அரசு ஒன்றாகத்தான் இருக்குமே ஒழிய வேறொரு அரசாங்கமாக இருக்காது என்பதையும் பெருமிதத்தோடு கூறிக் கொள்கிறேன்.

மேலும் இதுவரையில் பணம் கட்டாது, தவணை கடந்த நிலையில் இருந்த விவசாயிகளுக்குத்தான் தள்ளுபடிச் சலுகை அரசாங்கத்தின் மூலம் முன்பெல்லாம் அறிவிக்கப் படும். ஆனால் இப்பொழுதுதான் முதல் முறையாக ஏற்கெனவே தாங்கள் வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்திய அந்த நல்ல விவசாயிகளுக்கும், அவர் செலுத்திய தொகையின் அளவைக் கணக்கிட்டுக் கடன் கட்டாத விவசாயிகளுக்குத் தற்போது வழங்கப்படும் ஊக்கத்தொகையைப் போலவே விவசாயிகள் ஏற்கெனவே கட்டிய தொகையையும் திருப்பித் தரும் அரசாகத் திகழ்கிறது உங்கள் அரசு





என்பதை மகிழ்ச்சியோடு வரவேற்பீர்கள் எனக் கருதுகிறேன்.

அடுத்து நாங்கள் ஆட்சிக்கு வந்த சில தினங்களில் இயற்கையாகவே அன்றைக்கு ஏற்பட்ட சில சூழ்நிலைகளினால் விலைவாசிகள் கூடின. ஆனால் இன்று நாங்கள் எடுத்துள்ள சில தீவிர நடவடிக்கைகளால் பொதுவாக விலைவாசிகள் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப் பட்டுள்ளன. மேலும் நியாய விலைக் கடைகளில் அரிசியின் விலையைக் கொஞ்சம் கூட்ட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டோம். அதன் காரணமாக ஏழை எளிய நடுத்தர மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அறிந்து அடுத்த கணமே 3 ரூபாய் 30 காசு என்றிருந்த அரிசி விலையை 50 காசு குறைத்து 3 ரூபாய் என அறிவித்தோமே இதைப்போல் 50 காசு அளவிற்கு அரிசி விலையைக் குறைத்த வேறு ஆட்சி ஏதேனும் உண்டா என எண்ணிப்பார்க்கக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு குறைந்த விலையில் அரிசி போடுவதால் மட்டும் அரசுக்கு ஆண்டுக்கு 400 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்பதையும், சுட்டிக்காட்டக் கடமைப் பட்டுள்ளேன். இது மட்டுமின்றி இன்றும் கூட இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் தான் நியாய விலைக் கடைகளில் அரிசி மிகக் குறைந்த விலையில் விற்கப்படுகிறது என்பதையும் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

'செயற்கரிய இத்தகைய சாதனைகளை நிகழ்த்தி வரும் எங்கள் அரசு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் மூடப்பட்டுக் கிடந்த பல தொழில் நிறுவனங்களைத் திறந்து சாதனை படைத்துள்ளது.

'புகழ்மிக்க பி அண்டு சி மில்லினைச் சென்னை நகரத்தில் நாங்கள் இயங்கச் செய்த விதமும், முந்தைய அரசரங்கத்தின் பழி வாங்கும் போக்கு காரணமாகத் திறக்கப் படாமல் இருந்த ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனத்தை மீண்டும் இயங்கச் செய்த பாங்கும், இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் உள்ள தொழிலாளர் நலம் நாடும் அமைப்புகளால் பாராட்டப்பட்டதை நீங்கள் அறிவீர்கள்.

இன்னும் மூடப்பட்டிருக்கும் சில ஆலைகளும் விரைவில் திறக்கப் படும் என்ற உறுதியை உங்கள் அனைவருக்கும் இந்த நல்லநேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நல்லநேரத்தில் வளர்ந்து வரும் தொழில் நகரான கோவை மாநகருக்கு நேர்த்தி மிக்க விமான நிலைய வசதிகளைச் செய்திட முன்வந்துள்ள மத்திய அரசிற்கும், மாண்புமிகு பிரதமர் பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கும் இங்கே வருகை புரிந்து சிறப்பித்துள்ள மாண்புமிகு மத்திய அமைச்சர் மாதவராவ் சிந்தியா அவர்களுக்கும்- தமிழக அரசின் சார்பிலும், தமிழக மக்கள் சார்பிலும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது அமையப்பெற்றுள்ள வசதிகளைக் கொண்டு இவ்விமான நிலையத்தைச் சர்வதேச விமான நிலைய அந்தஸ்துக்கு உயர்த்த முடியும் எனக்கூறப்படுகிறது.

எனவே 'தென்னகத்தின் மான்செஸ்டர்' என அழைக்கப்படும் இக்கோவை மாநகருக்கு மிக விரைவிலேயே பன்னாட்டு விமான வசதிகளையும் பெற்றுத்தர வேண்டும் என மத்தியப் பேரரசைத் தமிழக அரசின் சார்பில் இந்த நல்ல நேரத்தில் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசின் சார்பில் இந்த நல்ல நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து கொடுத்துள்ள சிவில் விமானப் போக்குவரத்து நிர்வாகத்தினருக்கும், மாநில அரசின் சார்பில் பலரும் பாராட்டும் வகையிலான பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை இங்கே நான் தொடங்கி வைக்கும் நல்வாய்ப்பினை அமைத்துத் தந்த மாவட்ட நிர்வாகத்தினருக்கும் எனது இதயபூர்வமான பாராட்டுக்

## சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ஹெக்சேன் உற்பத்திப் பிரிவு

**நா**ட்டில் பெருகிவரும் ஹெக்சேன் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஹெக்சேன் உற்பத்தி செய்யும் ஒரு பிரிவை நிறுவியுள்ளது. ரூ.10 கோடி முதலீட்டில் நிறுவப்பட்டுள்ள இந்தப் பிரிவு ஆண்டுக்கு 36,000 கிலோ மீட்டர் ஹெக்சேன் உற்பத்தி செய்யும். ஹெக்சேன் பிரித்தெடுக்கும் பிரிவு, ஹெக்சேன் பதப்படுத்தும் பிரிவு மற்றும் உற்பத்தியாகும் ஹெக்சேனை வெளியில் அனுப்பும் பிரிவு என மூன்று பிரிவுகள் இந்த ஆலையில் இயங்கும். ஹெக்சேன் எனப்படும் இந்த பெட்ரோலிய திரவம், சமையல் எண்ணெய், மருந்து வகைகள், ரப்பர், பெயிண்டுகள், வாசனைத் திரவியம் மற்றும் பிளாஸ்டிக்ஸ் போன்ற பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்குப் பயன்படும்.

உள்நாட்டில் கிடைக்கும் மற்றும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய்களிலிருந்து ஹெக்சேனை அளிக்கும் மூலப்பொருளான LSRF-ஐ உற்பத்தி செய்யும் வசதிகள் எம்.ஆர்.எல்-ல் உள்ளன. இதனால் ஹெக்சேனை எம்.ஆர்.எல். குறைந்த செலவிலேயே உற்பத்தி செய்ய இயலும். 1,000 கிலோ லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு சேமிப்புத் தொட்டிகளை இதற்காக எம்.ஆர்.எல். நிறுவியுள்ளது.

இந்தப் பிரிவுக்குத் தேவையான அனைத்துப் பொறியியல் வடிவமைப்பு, தொழில்நுட்பம் போன்றவைகளை என்ஜினியர்ஸ் இந்தியா நிறுவனமும், இந்தியப் பெட்ரோலியக் கழகமும் இணைந்து வழங்கியுள்ளன. எம்.ஆர்.எல்-ல் உற்பத்தி செய்யப்படும் ஃபுட் கிரேடு ஹெக்சேனின் தரம், ப்யூரோ ஆப் இண்டியன் ஸ்டாண்டர்டுஸ் (BIS) மையத்தாரால் பரிசோதிக்கப்பட்டு ஐ.எஸ்.ஐ. முத்திரையைப் பெற்றுள்ளது.

நாட்டில் தற்பொழுது சுமார் 400 பிரிவுகளுக்கு ஆண்டிற்கு ஏறக்குறைய 105,000 கிலோ லிட்டர் அளவு தேவைப்படுகின்ற ஹெக்சேன், ஆண்டிற்கு 15 சதவிகிதம் என்ற அளவில் உயரக் கூடும். தென்பகுதிகளில் இருக்கும் 130 பிரிவுகளுக்கு நாட்டின் தேவையில் 35 சதவிகித அளவு ஹெக்சேன் தேவைப்படுகிறது.

தற்போது இத்தகைய ஹெக்சேன் பம்பாயில் பாரத் பெட்ரோலியம், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படுகிறது. எம்.ஆர்.எல்-ல் உற்பத்தியாகும் ஹெக்சேனை எம்.ஆர்.எல். விற்பனை செய்யும் பொழுது, இது தமிழ்நாடு, பாண்டிச்சேரி, கேரளா முழுவதையும் ஆந்திரா, கர்னாடக மாநிலங்களில் உள்ள சால்வண்ட் பிரித்தெடுக்கும் பிரிவுகளின் தேவையில் 50 சதவிகிதத்தை நிறைவு செய்யும்.

இதுவரை 125 வாடிக்கையாளர்கள், ஹெக்சேன் தேவைக்காகப் பதிவு செய்துள்ளனர். எம்.ஆர். எல்-ல் கிடைக்கும் மிகுதியான ஹெக்சேனைத் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் பின்னர் பரிசீலிக்கப்படும்.

---

களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் தேசிய விமான நிலையுக்குழுத்தலைவர் ஏர்மார்ஷல் சி.கே.எஸ்.ராஜேஷ்வரவேற்றார்.

மாண்புமிகு சுற்றுலாத்துறை மற்றும் விமானப் போக்குவரத்துத் துணை அமைச்சர் திரு. பருக் மரைக்காயர் விழாவில் கலந்து கொண்டார்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. செ. அரங்கநாயகம், திரு.எஸ். முத்துசாமி, திரு. செங்கோட்டையன், திரு. எஸ். கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. இ. மதுசூதனன், திரு. ஜி. விசுவநாதன், திரு. கு.ப. கிருஷ்ணன், திரு. செல்வகணபதி, திருமதி இந்திரகுமாரி, திரு. எம். ஆனந்தன், திரு. நாகூர் மீரான், திரு. ஜெயக்குமார், திரு. ரகுபதி மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். விழா முடிவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கலைவாணன் நன்றி கூறினார்.

கோவை விமான நிலையம் ரூ.12 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டது ஆகும். பயணிகள் இருக்கும் இடம் குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளது. உள்ளே வங்கி, அஞ்சல் நிலைய வசதிகள் உள்ளன. உணவு விடுதியும் உண்டு. ஒரே நேரத்தில் 350 பயணிகள் வந்து செல்ல முடியும்.

ஓடு பாதை, தளமாக்கப்பட்டிருப்பதால், 'ஏ 320' ரக ஏர் பஸ் விமானங்கள் வந்து இறங்க முடியும். விமானங்கள் வந்து இறங்கவும், புறப்பட்டுச் செல்லவும், கண்காணிக்கவும் நவீனக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ள. இரவில் விமானம் இறங்குவதற்கு வசதியாக ஓடு பாதையில் வண்ண விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.





# உதகை-உவகைமிகு சிறப்பிடம்!

## உதகையில் மலர்க் கண்காட்சித் தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை

**எ**ழில் மிகு இயற்கைச் செல்வங்களைத் தன்னகத்தே கொண்டு, மலைகளின் அரசியாய்த் திகழும் நீலகிரி மலையில் நடைபெறும், மலர்க் கண்காட்சித் தொடக்க விழாவிலும், அரசு நலத்திட்டங்களின் தொடக்கம், மற்றும் அடிக்கல் நாட்டும் விழாவிலும் கலந்து கொண்டு, குளுமையான இச்சூழ்நிலையில், வெள்ளம் போல் திரண்டிருக்கும் இம்மாவட்ட மக்களையும், வளமும் வசந்தமும் பொருந்திய இந்நகரைக் கண்டுகளிக்க, வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளையும் சந்திப்பதில், மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

அமைதிக்கும் இயற்கை எழிலின் கண்கொள்ளாக் காட்சிக்கும் இருப்பிடமாய்த் திகழ்ந்த காஷ்மீர் பள்ளத்தாக்கு, தீவிரவாதிகளின் அதிரடி நடவடிக்கைகளுக்கு ஆளான பின்னர், இன்று இந்திய நாட்டிற்கு விரும்பிச் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் பயணிகள், அதிக அளவில் வருகை புரியும்-நேர்த்தி மிக்க ஸ்தலம்தான், நம் உதகமண்டலமாகும்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை, பச்சைப் பசேல் எனக் காட்சி அளிக்கும் வளர்ந்தோங்கிய மரங்களும் - அம்மரங்களைத் தாங்கி நிற்கும் மாமலைகளும் - பள்ளத்தாக்குகளும், இவை அனைத்தும் இணைந்த பெரும் வனங்களும்; அவற்றிடையே-உலவும் வன விலங்குகளும், வண்ணத்துப் பூச்சியிலிருந்து வண்ண வண்ண நிறங்களையும், அழகிய தோற்றங்களையும் கொண்ட பறவை இனங்களும்; அவை இடையறாது எழுப்பும் இனிய ஒலிகளும்; செல்லும் இடமெல்லாம் மணக்கும் யூகலிப்டஸ் கலந்த இனிய நறுமணமும்; கனவுலகக் காட்சி போல் அமைந்துள்ளதால், உலகம் முழுவதுமிருந்து இம்மலைகளின் இராணியாம் உதகை நோக்கி ஓடி வருகிறார்கள்.

அந்த அளவுக்குச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் இதன் காந்தச் சக்திக்கு, இம்மலையெங்கும் ஓங்கி வளர்ந்து உயர்வுடன் காட்சி அளிக்கும் மரங்களே காரணமாகும்.

எனவே தான் உதகையில் மட்டுமல்லாது, தமிழகத்தின் அனைத்து மலைப் பகுதிகளிலும் உள்ள மரங்களைப் பாதுகாக்க, முழு மூச்சான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

நமது தமிழகத்தின் வன வளத்தினைக் காப்பது, நம் ஒவ்வொருவரின் கடமையாகும். ஆண்டாண்டுக் காலமாக ஓங்கி, உயர்ந்து வளர்ந்துள்ள

மரங்களை, ஒரே நாளில் ஒரு சிலர் அழித்து விடும் கொடுமை, சில இடங்களில் நடந்து கொண்டு இருப்பதை முற்றிலும் தடுக்க, எங்கள் அரசு தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்டுள்ளது. ஒரு மரத்தை வளர்ப்பது என்பது, எத்தனைக் கடினமான காரியம் என்பதை, எல்லோரும் உணர்ந்திருந்த போதிலும், எளிய குறுக்கு வழியில், விரைவில் செல்வம் சேர்க்க வேண்டுமென்ற எண்ணத்தில், ஒரு சிலர் இது போன்ற அழிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு, இயற்கை வளத்தையே பாழாக்கி விடுகின்றனர். இவர்களுக்குத் தீய சக்திகள் சிலர் உறுதுணையாக உள்ளனர் என்பதை, நான் நன்கு அறிவேன். இவர்களை எல்லாம் கட்டுப்படுத்தவே, அரசு கடுமையான நடவடிக்கைகள் தொடர்வதோடு, கடத்தலுக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களையும் பறிமுதல் செய்ய, சட்டத்திருத்தம் ஒன்றைக் கூட அண்மையில் கொண்டு வந்துள்ளோம்.

இங்குள்ள இனிய காட்சிகளை எல்லாம் காணும்தோறும், எல்லையற்ற ஆனந்தமடைந்து




செல்கிறார்கள் இங்கே வரும் அயல்நாட்டார். இந்நாட்டாரும் திரும்பத் திரும்ப ஊட்டி சென்று வரவேண்டும், என்ற உணர்வோடு வந்து செல்கின்றனர்.

ஆனால், உதகை மலையின் பேரழகைக் காணும் ஒவ்வொரு நொடியும், என் மனதில், 'இத்தகைய இயற்கையின் எழில் செருக்கை, இம் மலைக்குச் சேர்த்திட, எத்தனைத் துன்பங்களை இம்மலை வாழ் மக்கள் ஏற்றிருப்பார்கள்?' என்ற எண்ணம்தான் மேலோங்கி நிற்கிறது.

இதனைத் தான் எனக்கு அரசியல் பாலபாடம் சொல்லித் தந்த, நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.அவர்கள் உணர்த்திச் சென்றுள்ளார்.

'சித்திரச் சோலைகளே! உம்மை நன்கு
திருத்த இப் பாரினிலே - முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ,
உங்கள் வேரினிலே'

எனும் உணர்வினைத்தான், எங்களுக்குப் புரட்சித் தலைவர் அவர்கள் ஊட்டிச் சென்றுள்ளார்.

எனவேதான் உதகமண்டலத்திற்கோ, கொடைக்கானலுக்கோ, உல்லாசப் பயணிகளின் வசதிக்கெனத் திட்டம் தீட்டுகிற அதே நேரத்தில், இம் மலைவாழ் மக்களாக இங்கேயே தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் மக்களின் நன்மைக்கென திட்டமிடுவதையும், எங்கள் தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

உல்லாசப் பயணிகளின் வசதிக்கென இங்கே செலவழிக்கப்படும் ஒவ்வொரு ரூபாயும், இங்கேயே வாழ்ந்து வரும் மக்களின் வாங்கும் சக்தியை, ஒவ்வொரு ரூபாய் அளவுக்குக் குறைத்திடும் என்பதை மனதிலே கொண்டு அந்த அளவுக்குப் பல திட்டங்கள், இப்பகுதி மக்களின் நன்மைக்காகவும், நிறைவேற்றி விட்டுத்தான், ஏனைய உல்லாசப் பயணத் திட்டங்களைத் தீட்டி வருகிறோம் என்னும் செய்தியை, மெத்த மன நிறைவோடு உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக இக்குளிர் மலைப் பிரதேசத்தில், கடுங்குளிர் காலத்தில், அக்குளிரைத் தாங்கும் உரிய கம்பளி ஆடைகள் எதுவும் இல்லாது, சணல் சாக்குகளையே கோணிகளாக்கிக் கொண்டு, தங்கள் காலத்தை கழிந்து வரும் இம் மலை வாழ் மக்களான, தோடர் மற்றும் படுகர் ஆகிய இன மக்களின் பொருளாதார நிலையினை உயர்த்த, உங்கள் சகோதரியான நான் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன் என்பதை, உணர்ச்சிப் பெருக்குடன் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், என்னை இந்த அளவுக்கு வளர்த்து உயர்த்திய பெருமக்கள் உங்களைப் போன்று, சமுதாயத்தில் அடித்தளத்து மக்கள் தான். இதனை நான் என்றென்றும் மறந்திட மாட்டேன் என்ற உணர்வினை, நன்றிப் பெருக்குடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



முதல் முறையாக இந்த ஆண்டு, 'Carnival-92' நிகழ்ச்சியை அறிமுகப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தேன். நாளைக் காலை நடைபெறவுள்ள Carnival-1992, அனைவரையும் கவர்ந்திழுக்கும் வண்ணம், அதற்கான ஏற்பாடுகளை மிகச் சிறப்பான முறையில் செய்திருப்பதாக என்னிடம் தெரிவித்துள்ளார்கள். இன்று புதிதாக உதகையின் கோடைவிழாவில் அறிமுகப்படுத்தப்படும் இந்த நிகழ்ச்சி, சுற்றுலாப் பயணிகளின் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெறும்; இனி ஒவ்வொரு ஆண்டு நடைபெறும் மலர்க் கண்காட்சிக்கு, கூடுதலான சிறப்பை இது சேர்க்கும் எனவும் நம்புகின்றேன்.

Ooty lake-ஐத் தூய்மைப்படுத்தி, விரிவாக்கி, இதனைக் காஷ்மீர் பள்ளத்தாக்கின் 'டல்' ஏரியைப் போல் சிறப்பு பெறச் செய்ய வேண்டும் என்பதே, எனது ஆசை ஆகும். ஊட்டி நகருக்குத் தேவையான குடிநீர்த் தட்டுப்பாடின்றிக் கிடைக்க, நல்லதொரு நிரந்தரத் திட்டமும் வழங்கப்பட்டுள்ளது, என்ற மகிழ்ச்சியான செய்தியையும், இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசின் சுற்றுலாக் கொள்கையை வெளியிட்டுள்ள இந்த நல்ல நேரத்தில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. மாதவராவ் சிந்தியா அவர்கள் நேற்று (15.5.92) கோவையிலும் இன்று இங்கு நடைபெற்ற விழாக்களிலும் தமிழகத்தில் சுற்றுலாத் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து மத்திய அரசு உதவும் என்று தெரிவித்தார்கள். இன்றைய தினம் வெளியிடப்படும் சுற்றுலாக் கொள்கைக் குறிப்பேட்டில் தமிழகத்திற்குத் தேவையான முக்கியச் சுற்றுலா முன் மாதிரித் திட்டங்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

தற்போது இந்தத் திட்டங்களை மாநில அரசு நிறுவனங்கள் மூலமாகவும், தனியார், கூட்டுத் துறை நிறுவனங்கள் மூலமாகவும் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. இந்த அரசுக்கு மத்திய அரசு விரைவில் அனுமதி அளிக்கும் என்றும், தேவையான நிதி உதவி வழங்கும் என்றும் மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் நேற்று என்னிடம் தந்த உறுதிக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசு ஏற்கெனவே மத்திய அரசுக்கு அனுப்பியுள்ள 'Regional Catering Institute' அமைக்கும் திட்டத்தை விரைவில் உதகையில் உள்ள 'கேத்தி' கிராமத்தில் நிறுவுவதற்கு அனுமதியும் நிதி உதவியும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்திலிருந்து இனி அனுப்பப்படும் சுற்றுலா முன் மாதிரித் திட்டங்களுக்கு மத்திய அரசு முன்னுரிமை கொடுத்து நிதி உதவியுடன் அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மத்திய அமைச்சர் சிந்தியா அவர்கள் நேற்று பேசியபோது, தமிழகத்தில் புதிய சுற்றுலாத் திட்டங்களுக்கு மத்திய அரசினை அணுகுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார் இதுபோன்ற சில புதிய திட்டங்களுக்காக நாங்கள் மத்திய அரசினைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறோம். அதற்கு அவர்கள் நாங்கள் கவனிக்கிறோம், பரிசீலனை செய்கிறோம், உங்களுக்கு இது குறித்து தெரிவிக்கிறோம் என்ற பதிலைத் தான் தந்திருக்கிறார்கள், அதனால்தான் தமிழக அரசு மேற்கொள்ளும் சுற்றுலா முன்னேற்றத் திட்டப்பணிகளை நம் சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டும், வசதிகளைக் கொண்டும் நிறைவேற்ற முனைந்து இருக்கிறோம். இது போன்ற விழாக்களில் முதல் அமைச்சரும் மற்ற மாநில அமைச்சர்களும் மத்திய அமைச்சர்களை மாநில அரசின் திட்டங்களுக்கான அனுமதி வழங்க வலியுறுத்துவதே வழக்கம். அதற்கு மத்திய அமைச்சர்கள் நாங்கள் ஆராய்கிறோம், பரிசீலிக்கிறோம்,

விரைவில் பதில் வரும் என்று தெரிவிப்பார்கள். தமிழகத்தின் வரலாற்றிலேயே ஒரு மத்திய அமைச்சர் மாநில அரசின் திட்டங்களுக்காக எங்களை அணுகுங்கள் என்று சொல்வது இதுவே முதல் முறை. அதற்காக மத்திய அமைச்சருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Palace on Wheels ரயில் விடுவது குறித்து பேசும்போது நான் ரயில்வே அமைச்சராக இருந்தபோது என்னிடம் கேட்டிருக்கலாம். நான் இப்போது சுற்றுலாத் துறை அமைச்சராக இருக்கிறேன் என்று குறிப்பிட்டார்கள். இது குறித்து மத்திய அமைச்சருக்கு ஒரு விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன். இந்த Palace on Wheels என்பது சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்தத்தான் என்பதால் இதை மத்தியச் சுற்றுலாத் துறை அமைச்சர் ரயில்வே அமைச்சகத்தைச் சுற்றுலாவை மேம்படுத்த வேண்டும் என்பதால் அவர்களை அந்தத் திட்டத்தைத் தமிழ்நாட்டிற்குப் பெற்று தரவேண்டும். இந்த Palace on Wheels என்ற பெயரை மாற்றலாம் என்று இங்கே மத்திய அமைச்சர் அவர்கள் தமிழகம் புராதன சிறப்புகளுக்கும், கலைகளுக்கும் பெயர் பெற்ற இடமாக இருப்பதால் அந்த ரயிலில் பயணம் செய்யும் சுற்றுலாப் பயணிகள் தாங்கள் மகாராஜா போல பயணம் செய்கிறோம் என்று மகிழ்வார்கள். எனவே, இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கும்போது Palace on Wheels என்ற பெயரை மாற்றாமல் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊட்டியில் ஒரு சிறிய விமான தளம் அமைப்பதற்கு ஆன அனுமதியை மத்திய அமைச்சர் அவர்கள் விரைவில் வழங்க வேண்டும். கோவையில் பெரிய விமான நிலையம் இருக்கும்போது இங்கு ஒரு விமான தளம் தேவையா என்று அமைச்சர் அவர்கள் கேட்கலாம். காஷ்மீரில் பயங்கரவாத சூழ்நிலை இருப்பதால் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் உதகைக்கு வருவதால் சாலைப் போக்குவரத்து மூலம் உதகை அடைவது சிரமமாக உள்ளது. எனவே, இந்தச் சூழ்நிலையில் உதகைக்கு ஒரு சிறு விமான தளம் அமைத்து வாயு தூத், ஹெலிகாப்டர் ஆகியவை வந்து செல்ல வசதி செய்து தர அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உதகையில் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாக்க மக்கள் உதவ வேண்டும் என்று மத்திய அமைச்சர் குறிப்பிட்டார். உதகை உலக வரைபடத்தில் சிறந்த சுற்றுலாத் தலமாக இடம்பெற இந்த மாவட்ட மக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும். அந்த உழைப்பின்றி எதையும் சாதிக்க முடியாது. நான் சிறு வயது முதற்கொண்டே உதகைக்கு வந்துள்ளேன். ஆனால், இன்று மின்விசிறியைப் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு நகரின் சுற்றுச் சூழல் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் பெருமளவில் கட்டடங்களும், தொழிற்சாலைகளும் அமையப்பெற்றதே காரணமாகும். எனவே உதகையின் சுற்றுச் சூழ்நிலையைப் பாதுகாக்க வேண்டுமெனில், இனி வரும் காலங்களில் அத்தியாவசியமான கட்டடங்கள் அல்லாது பிற புதிய கட்டடங்களும், தொழிற்சாலைகளும் அமைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது என்ற முடிவை எடுத்தால்தான், இந்த முடிவில் கண்டிப்பாக இருந்தால்தான், உதகையின் இயற்கைச் சூழலை நாம் காப்பாற்ற முடியும். பெரிய Convention Centre போன்ற அத்தியாவசியமான கட்டடங்கள் கட்டுவதற்குதான் அனுமதி வழங்கலாம். இதற்கு உதகை மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேலும் இன்றைய தினம், தமிழகத்தின் சுற்றுலாக் கொள்கையினை வெளியிடுவதில், பெருமிதம் அடைகின்றேன். சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும், அரசு, கூட்டுத்துறையின் மூலமோ, அல்லது அரசின் வழிகாட்டும் திட்டத்தின் மூலமோ, செய்து தர முடிவு செய்துள்ளோம். தமிழகத்திலுள்ள எல்லாச் சுற்றுலா மையங்களையும் மேம்படுத்த, அரசு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. அத்தகைய எங்கள் முயற்சியில் உதகை முதலிடம் பெற்றுள்ளது.

வெகு விரைவில் உதகை, உலகம் தழுவிய உல்லாசப் பயண வரைபடத்தில், சிறப்பிடம் பெறும் அளவுக்குப், பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

'உதகை - உவகை மிகு
சிறப்பிடம் - சீரிடம்'

எனும் சிறப்பை விரைவில் பெறும் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.



அந்த அடிப்படையில்தான், நீலகிரி மலையின் பூர்வீகக் குடிமக்களாகிய தோடர் இன மக்களுக்கு, எங்கள் அரசு பல நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அவற்றுள் குறிப்பிட்டுக் கூற வேண்டிய ஒன்று, ஒவ்வொரு தோடர் குடும்பத்திற்கும் 5 ஏக்கர் நிலம், வேளாண்மை செய்வதற்கு, அல்லது மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்துவதற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிலங்களை மேம்படுத்திப் பயிர் செய்வதற்காக, ஒவ்வொருவருக்கும் அதிகபட்சமாக 25,000 ரூபாய், Toda Primary Agricultural Co-operative Bank மூலமாக, நீண்ட காலக் கடனுதவி பெற, ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகையை வைத்துக் கொண்டு, அவர்கள் தங்களுக்கு அனுமதிக்கப் பட்ட அரசு நிலங்களில், தேயிலை பயிர் செய்ய



முடியாத நிலையில் உள்ளனர் என்ற செய்தி, என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

எனவே, இந்த ஆண்டு முதல், இவர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையை, 25,000 ரூபாயிலிருந்து ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி, கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்க ஆணையிட்டு உள்ளேன், என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். NABARD - நிறுவனத்தின் நிதி உதவியுடன், 7 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதன்மூலம், தோடர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 5 ஏக்கர் நிலத்திலும், தேயிலை பயிர் செய்யும் வாய்ப்பைப் பெறுவார்கள். ஆதிவாசிகளான அவர்கள், வறுமையில் வாடாமல் தடுத்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, எங்கள் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும், அவர்களைப் பாதுகாக்கும்.

இன்றைய தினம், தொழில் துறையின் கீழ் இயங்கும், INCOSERVE நிறுவனத்தின் சார்பில் BIKKETTY-இல் அமைக்கப்பட்டுள்ள, 15-வது கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலையைத் தொடங்கி வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இப்புதிய தொழிற்சாலை தொடங்கப் படுவதால், அப்பகுதியிலுள்ள சுமார் 1,000 சிறு விவசாயிகள், தங்களது தேயிலைகளை இந்தக் கூட்டுறவுத் தொழிற்சாலையில், நியாயமான விலைக்கு விற்பனை செய்து, பயனடையும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இன்றைய விழாவில், இம்மாவட்டத்திற்கு மொத்தமாக, 32.29 கோடி ரூபாய்க்கான திட்டங்களைத் தொடங்கி வைத்ததிலும், பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி வைத்ததிலும், மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

வருடா வருடம் உதகையில் நடைபெறும் மலர்க் கண்காட்சி, இந்த ஆண்டு மிகவும் சிறப்பாகவும், நேர்த்தியுடனும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகள் அனைவரும், மலர்க் கண்காட்சியைக் கண்டு களித்து, மன நிறைவோடு செல்வார்கள் என்று நம்புகிறேன். கடந்த ஆண்டுகளில் இருந்ததைப் போல், மலர்க் கண்காட்சி எனக் கூறிவிட்டு, மலர்களே இல்லாத நிலை, இந்த ஆண்டு முதல் இருக்காது என்ற உத்தரவாதத்தையும், இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.



# உள்ளம் கவர் உதகை மலர்க் கண்காட்சி

மலைகளின் அரசியாம் உதகையில் ஆண்டுதோறும் நடைபெறும் புகழ்பெற்ற வண்ணமிகு மலர்க் கண்காட்சி இவ்வாண்டு 16.5.'92-ஆம் நாள் கோலாகலமாகத் தொடங்கியது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராகப் பதவியேற்றபின், முதன் முறையாக உதகைக்கு வருகை புரிந்து மலர்க் கண்காட்சியைத் தொடங்கி வைப்பதால் இந்நிகழ்ச்சி மிகுந்த முக்கியத்துவத்தையும் பொலிவினையும் பெற்றுள்ளது. முதல்வர் அவர்களை வரவேற்க உதகை சுறுசுறுப்பாகத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டது. பச்சைப்பசேலெனும் புல் வெளிகளாலும், கவின்மிகு மலர்களாலும் தன்னை அலங்கரித்துக் கொண்டு புதுப்பெண்ணாகப் பூத்துக் குலுங்கினாள் உதகை ராணி.

16.5.1992 காலை நீண்டதொரு பச்சைக் கம்பளம் விரிக்கப்பட்டது போன்று தோற்றமளித்த தாவரவியல் பூங்காவில் குவிந்திருந்த ஆயிரமாயிரம் மக்களின் கண்கள் முதல்வரை எதிர்நோக்கியிருந்தன.

முதல்வர் அவர்கள் சரியாக 10.50 மணிக்குத் தாவரவியல் பூங்காவிற்கு வருகை தந்தார். நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் செல்வி லீலா நாயர் மலர்ச்செண்டு கொடுத்து முதல்வரை வரவேற்றார். அமைச்சர் பெருமக்கள் பலரும் அவரை வரவேற்றனர்.

பின்னர், மாண்புமிகு மத்தியச் சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. மாதவராவ் சிந்தியா அவர்கள் முன்னிலையில், உதகை மலர்க்கண்காட்சியை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் திறந்து வைத்தார். கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த பல வண்ண மலர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆர்வத்துடன் கண்டுகளித்தார்.

தாவரவியல் பூங்காவில் முதல்வர் அவர்கள் 'கினார்' எனும் மரக் கன்றை நட்டார்.

மலர்க் கண்காட்சியில் ஒட்டல் சவேரா, வெடி மருந்துத் தொழிற்சாலை, ராஜ்பவன், ஸ்டேட் பாங்கி, உபாசி, நீலகிரி மாவட்டக் கூட்டுறவு ஒன்றியம், தோட்டக் கலைத்துறை உள்பட 12 அரங்குகள் பங்கேற்றன. மொத்தம் 8,000 பூந்தொட்டிகளில் வண்ண வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கின. அனைவரின் விழிகளுக்கும் விருந்தளித்தன. 1,600 வகை ரோஜாக்களும் 150 வகை டேலியாவும், பேன்சியூ, டியூப்ரஸ், பிகோலியா, இரசாந்தம், சந்துலியம், டெலிபினியம், அன்டிரேனியம், பிரெஞ்சு மெரி கோல்டு, பிலிமிளா, லேடிஸ் பர்ஸ் மற்றும் ஆயிரக்கணக்கான வெளிநாட்டு மலர்களும் பூத்துக் குலுங்கின.

நுழைவு வாயிலில் மலர்களால் 'மலர்க் கண்காட்சி 1992' என அழகுற எழுதப்பட்டிருந்தது. மலர்களால் அலங்கார யானைகளும், மலர்க் கிரீடமும் அமைக்கப்பட்டிருந்தன.

நெஞ்சையள்ளும் இம்மலர்க் கண்காட்சி காணக் கண்கோடி வேண்டும் என வியக்காத உள்ளங்களே கிடையாது எனக் கூறலாம்.



## அரசு நலத்திட்டத் தொடக்க விழா

மலர்க் கண்காட்சியைத் தொடங்கி வைத்து விட்டு, பள்ளி மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த அரசு நலத்திட்ட தொடக்க விழா மேடைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 11.10 மணிக்கு வந்தார். விழாவுக்கு, தமிழக மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. மாதவராவ் சந்தியா அவர்கள் முன்னிலை வகித்தார். ரூ.36 கோடிக்கான அரசு நலத்திட்டப் பணிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அப்போது அடிக்கல்லின் மேல்புறம் உள்ள ஒரு மூடி திறந்து கொள்ள, அங்கிருந்து பறவைகள் விடுதலை பெற்று வானத்தில் பறந்தன.

பின்னர் புதிய வழித்தடங்களைத் தொடங்கி வைப்பதற்கு அடையாளமாக மற்றொரு பொத்தானை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழுத்தியதும், வட்டமான மேசை மீது இருந்த வட்டமான திரைச்சீலை கீழே இறங்கியது. அந்தச் சிறிய மேடையில், ஒரு சிறிய சேரன் பேருந்து காட்சி அளித்தது.

பின்னர், தமிழக அரசின் சுற்றுலாக் கொள்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் புத்தக வடிவில் வெளியிட்டார். அதன் முதல் பிரதியை, மாண்புமிகு மத்திய அமைச்சர் மாதவராவ் சிந்தியா அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இதே விழாவில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரியத்தின் ''டைம் சேரிங்'' என்ற சுற்றுலாத் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டத்தில முதலில் சேர்ந்த, கோவை சசி சாமிநாதன் மற்றும் அவர் மனைவியிடம் அதற்கான அனுமதியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

## 'கார்னிவெல்-92'

**இந்த ஆண்டு முதல் முறையாக மாண்புமிகு முதல்வர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'கார்னிவெல்-92' என்ற அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு மற்றும் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.**

**இந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு தொடக்க விழா ஊட்டியில் சி.டி.சி. சதுக்கத்தில் நடைபெற்றது. இந்த அலங்கார அணிவகுப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிடுவதற்காகத் தனியாக மேடை அமைக்கப்பட்டிருந்தது.**

**விழாவில் கலந்து கொள்வதற்காக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 17.5.92 அன்று காலை 9.55 மணிக்கு சி.டி.சி. சதுக்கத்துக்கு வந்தார். மாண்புமிகு முதல்வர் அவர்களை, மாவட்ட ஆட்சித் தலைவர் லீனாநாயர், இ.ஆ.ப. மலர்ச் செண்டு கொடுத்து வரவேற்றார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா, மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. செ. அரங்கநாயகம், திரு. எஸ். முத்துசாமி, திரு. செங்கோட்டையன், திரு. எஸ். கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. ஜி. விசுவநாதன், திரு. கு.ப. கிருஷ்ணன்,** திரு. செல்வகணபதி, திரு. நாகூர் மீரான், திருமதி இந்திரகுமாரி, திரு. எம். ஆனந்தன், திரு. ஜெயக்குமார், திரு. ரகுபதி, சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு. பொன்னுசாமி, அரசு கொறடா திரு. ச,பா. பட்டாபிராமன் ஆகியோர் வரவேற்றனர்.

சற்று நேரத்தில் மத்திய அமைச்சர் திரு. மாதவராவ் சிந்தியா அவர்கள் விழா நடைபெறும் இடத்துக்கு வந்தார். அவரை மாவட்ட ஆட்சியாளர் மற்றும் அமைச்சர்கள் வரவேற்றார்கள்.

பின்னர் விழா நிகழ்ச்சி தொடங்கியது- 'கார்னிவெல்-92' என்று எழுதப்பட்ட அட்டை 'கியாஸ்' அடைக்கப்பட்ட பலூன்களில் 'பாராசூட்' போன்ற அமைப்பில் தொங்கவிடப்பட்டு இருந்தன. அதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கொடுத்தனர். விழா தொடங்கியதற்கு அறிகுறியாக இந்தப் பலூன்களை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பறக்கவிட்டார். வண்ணப் பலூன்கள் அழகாக வானத்தில் பறந்து சென்றன. மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. மாதவராவ் சிந்தியா அவர்களும் பலூன்களைப் பறக்கவிட்டார். இதையடுத்து விழா தொடங்கியது.

முதலில், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் நாதசுரம், தவில், வாசித்தபடி கலைஞர்கள் வந்தனர்.

அடுத்து, முகப்பட்டயம் அணிந்த 9 யானைகளும் நடுவே குட்டி யானையும் நடந்து வந்தன. இதைத் தொடர்ந்து தர்மபுரி மாவட்ட போலீஸ் பாண்டு வாத்தியக் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர், நீலகிரி மாவட்ட மலைச்சாதியினரான படுகர் இனத்தவர் நடனம் இடம் பெற்றது.

அடுத்து, கேரளாவைச் சேர்ந்தவர்கள் செண்டைமேளம் அடித்தபடியும், கொம்பு வாத்தியத்தை ஊதியபடியும் மேளத்தை ஏற்றி இறக்கிக் காட்டினார்கள். அடுத்து, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அலங்கார வண்டி இடம் பெற்று இருந்தது. அதில் 'மக்கள் மனம் குளிர, மலர்ந்த முதல்வரின் முத்தான திட்டங்கள்' என்ற வாசகம் எழுதப்பட்டு இருந்தது.

(26—ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் புதிதாக 41 துணை மின் நிலையங்கள்

தமிழகத்தில் மின் விநியோகத்தை அதிகரிக்க, புதிதாக 41 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் உதகமண்டலத்தில் தெரிவித்தார்.

உதகையில் 10 கிலோவாட் துணை மின் நிலையம் ஒன்று ரூ.5 கோடி செலவில் அமைக்கப்படும். ஓர் ஆண்டுக்குள் அதற்கான பணிகள் முடிவடைந்துவிடும்.

பல்வேறு நீர்மின் நிலையங்களில் ஆய்வு நடத்தி அவற்றில் உள்ள குறைபாடுகள் பற்றி அரசுக்கு அறிக்கை அளிக்க சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

## பெரியார் மாவட்டத்தில்:

# வளர்ச்சிப் பணிகள்

பெரியார் மாவட்டத்தில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு 1992-93-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடாக 7,870 நபர்களுக்கு ரூ.245.945 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

1992-93-ஆம் ஆண்டுக்கு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூ.34.970 இலட்சம் வறட்சி நிவாரணப் பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டில் கசிவு நீர்க் குட்டைகள், சிறு பாசனக் குளங்கள் மேம்பாடு செய்தல், சாலை மேம்பாட்டுப் பணிகள் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், 106 பள்ளிக் கட்டடங்கள், ரூ.146.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க எடுக்கப்பட்டதில், இதுவரை 98 பள்ளிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் 92 ரூ.64.653 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க எடுக்கப்பட்டதில், இதுவரை 88 சத்துணவு மையங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 48 தொலைக்காட்சிப் பெட்டிகள் ரூ.7.200 இலட்சம் மதிப்பீட்டில் வழங்குவதில், இதுவரை 30 தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. ரூ.135.670 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்ட 404 ஊரகக் குடிநீர்ப் பணிகளில் இதுவரை 220 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.70 இலட்சம் செலவில் 3,500 தெரு விளக்குகள் அமைப்பதில், இதுவரை 1,754 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. 196 கி.மீ. சாலைப் பராமரிப்புப் பணிகள் ரூ.381.71 இலட்சம் செலவில் டுக்கப்பட்டதில், இதுவரை 89.36 கி.மீ. சாலைப் பராமரிப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.25.20 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்ட 20 கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கும் பணிகளில், இதுவரை 16 முடிக்கப்பட்டுள்ளன. ரூ.2.390 இலட்சம் மதிப்பீட்டில் 2 சிறுபாசனக் குளங்கள் அமைக்க எடுக்கப்பட்டதில், இரண்டும் முடிக்கப்பட்டுள்ளன.

சாண எரிவாயுத் திட்டத்தில் 1992-93-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 1,050, நிர்ணயம் செய்யப்பட்டது.



நாளது வரையில் 30 கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.

இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் கீழ், பல்வேறு கட்டுப்பாடு ஆணைகளை மீறி, பெரியார் மாவட்டத்தில் தக்க பில் இன்றி, அத்தியாவசியப் பொருட்களைக் கடத்தியும், உரிமம் இன்றிக் கள்ளச் சந்தையில் விற்பனை செய்ததையும், கண்டுபிடித்து இவ்வாண்டு ஏப்ரல் திங்களில் ரூ.41,000 மதிப்புள்ள 13.39 டன் நெல்லும், ரூ.5,631 மதிப்புள்ள 1.717 டன் அரிசியும், ரூ.52 மதிப்புள்ள 20 கிலோ கோதுமையும், ரூ.83,000 மதிப்புள்ள 10 டன் நிலக்கடலைக்காயும், ரூ.3,290 மதிப்புள்ள 1,100 லிட்டர் மண்ணெண்ணெயும், ரூ.27,978 மதிப்புள்ள 0.81 டன் மிளகாய் வற்றலும், ரூ.820 மதிப்புள்ள 150 லிட்டர் டீசலும், ரூ.258 மதிப்புள்ள 15 லிட்டர் பெட்ரோலும் கைப்பற்றப்பட்டன. இவற்றின் மொத்த மதிப்பு ரூ.1,62,029 ஆகும்.

படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டிற்கான 400 நபர்களுக்கு எதிராக 1992 ஏப்ரல் மாதம் முடிய மொத்தம் 365 நபர்களுக்கு ரூ.72.80 இலட்சம் வழங்கப்பட்டது. இதில் 3 ஆதி திராவிடர்களுக்கு ரூ.0.65 இலட்சம் அடங்கும். இத்திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 400 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1992 ஏப்ரல் வரை 764 நபர்களுக்கு ரூ.171.10 இலட்சம் கடன் வழங்க வங்கிக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதில் 402 நபர்களுக்கு ரூ.106.70 இலட்சம் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மற்றும் 212 நபர்களுக்கு 46.65 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.



வேளாண்மைக்குத் தேவைப்படும் குறுகிய கால மற்றும் மத்தியக் காலக் கடன் வசதிகளைப் பெரியார் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியும் அத்துடன் இணைக்கப்பட்ட 230 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் வழங்கி வருகின்றன. ஏப்ரல் 1992 திங்கள் முடிய குறுகிய காலக் கடன் 99.04 இலட்சமும், மத்தியக் காலக் கடன் 2.95 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. இதில் குறுகிய காலக் கடன் நலிவுற்ற பிரிவினருக்கு 58.08 இலட்சமும், மத்தியக் காலக் கடன் நலிவுற்ற பிரிவினருக்கு 2.95 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண்மை முன்னேற்றத்திற்குத் தேவையான நீண்ட காலக் கடன் வசதிகளை அளிக்க பெரியார் மாவட்டத்தில் 12 கூட்டுறவு நிலவள வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. 1992-93-ஆம் ஆண்டுக்கு ஏப்ரல் 1992 திங்கள் முடிய ரூ.0.93 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மை உறுப்பினர்களின் வேளாண்மை விளைபொருட்களைக் கொள்முதல் செய்து விற்பனை செய்யும் பணியினை, பெரியார் மாவட்டத்தில் செயல்படும் 6 கூட்டுறவு விற்பனை சங்கங்கள் சிறப்பாகச் செய்து வருகின்றன. 1992-93 நிதியாண்டுக்கு 1992 ஏப்ரல் திங்கள் முடிய இச் சங்கங்கள் 201.43 இலட்சத்திற்கு சங்க உறுப்பினர்களின் வேளாண் விளைபொருள்களைக் கொள்முதல் செய்து விற்பனை செய்துள்ளது.

கடந்த 1991-92-ஆம் ஆண்டில் 4 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்திச் செய்யப்பட்டன. நடப்பாண்டில் 8 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்திச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ஏப்ரல் 1992 வரை 48,758.200 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்திச் செய்யப்பட்டுள்ளன. 1992-93-ஆம் நடப்பாண்டில் 1,200 ஏக்கர்கள் அளவில் மல்பரிப் பயிர் இறவைச் சாகுபடியின் கீழ் கொண்டு வர இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 1992 ஏப்ரல் வரை 155.75 ஏக்கர்களில் மல்பரி இறவையின் கீழ் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டிற்கு 24 இலட்சம் மல்பரி நாற்றுக்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 1992 ஏப்ரல் வரை 11.00 இலட்சம் நாற்றுக்கள் உற்பத்திச் செய்யப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த முறையில் அதாவது உழவியல், இரசாயனம், உயிரியல், இயந்திர முறைகளை ஒருங்கிணைந்துப் பயன்படுத்தி குறைந்த செலவில் சிறப்பான முறையில் பயிர்ப் பாதுகாப்பு செய்யும் முறை பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைக்க, மாவட்ட அளவில் 440 விவசாயிகளுக்கு இருநாள் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சியில் பங்கேற்கும் விவசாயிகளுக்குப் பயணம் மற்றும் இதரச் செலவினங்களுக்கான உதவித் தொகையும், பயிர்ப் பாதுகாப்பு உபகரணங்களும், தொழில்நுட்பக் கையேடுகளும், ரூ.44 ஆயிரம் செலவில் வழங்கப்படும்.

## மலேரியா நோயைத் தடுத்திட..

சென்னை நகரில் மலேரியா நோய் தற்போது அதிக அளவில் காணப்படுகிறது. நகரில் உள்ள கிணறுகள் மற்றும் மேல்நிலை நீர்த்தொட்டிகளில் உற்பத்தியாகும் கொசுக்களின் மூலம் தான் மலேரியா நோய் பரவுகிறது. ஏறத்தாழ ஒரு இலட்சம் கிணறுகளும், 75,000 மேல் நிலைத் தொட்டிகளும் சரிவர மூடப்படாமல் கொசு உற்பத்திக்கு ஏதுவாக இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இத்தகைய கொசு உற்பத்தியினைத் தடுத்தால்தான், சென்னை மாநகரில் மலேரியா நோயினை ஒழிக்க முடியும்.

எனவே, பொதுமக்கள் அனைவரும் தங்களது வீடுகளில் உள்ள அத்தகைய நீர் நிலைகளைக் கொசு உற்பத்திக்கு இடமளிக்காதவகையில் மூடிகளைப் பொருத்தி, மாநகராட்சியின் சுகாதாரப் பணிகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுகிறோம்.

நான்கு அடி விட்டமுள்ள ஒரு கிணறு இரண்டு அங்குல சிமெண்ட் பலகையினால் மூடுவதற்கும் அதில் 1½ சதுர அடி இரும்பு தகடு மூடியைப் பொருத்துவதற்கும் ரூ.430 செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

அதேபோல் 4 சதுர அடி மேல்நிலை நீர்த் தொட்டியை மூடுவதற்கும் அதில் 1½ சதுர அடி இரும்புத் தகடு மூடி பொருத்துவதற்கும் ரூ.415 செலவாகக்கூடும்.

இத்தகைய பணியினை மேற்குறிப்பிட்ட செலவில் செய்து முடித்திட சம்மதம் அளித்துள்ள ஒப்பந்தக்காரர்களின் பட்டியல், மாநகராட்சி மண்டல அலுவலர்களிடமும் உதவி சுகாதார அலுவலர்கள், பூச்சியியல் வல்லுனர்களிடமும், கோட்ட அலுவலகங்களிலும் உள்ளது. மற்ற விவரங்களுக்குத் தொலைபேசி மூலம் எண்.584510 இணைப்பு எண்.272 தொடர்பு கொள்ளவும்.

சூரிய வெளிச்சம் படாமல் மூடிவைப்பதால் கிணற்றுத் தண்ணீர் எப்போதும் கெடுவதில்லை.

வீடுகளில் உள்ள நீர் நிலைகளைக் கொசு வளர்ச்சிக்கு ஏதுவாக வைத்திருப்பது, தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டத்தின்கீழ் குற்றமாகும்.

## குடும்ப நலம்

● சிறிய குடும்பமே வளத்துக்கு வழி என்ற அடிப்படையில் குடும்ப நலத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, இதுவரை, சுமார் 13 கோடி குழந்தை பிறப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன. 1991-இல் மட்டும் 1.2 கோடி பிறப்புகள் தவிர்க்கப்பட்டன. 1980 வரை நான்கு கோடியும், 1990 வரை 11.8 கோடியும் குழந்தை பிறப்புகள் தவிர்க்கப்பட்டன.

சிறு குடும்ப நெறித்திட்டத்தினை மக்கள் ஏற்றுக் கொள்வதற்காக அரசு தொடர்ந்து பல புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காக, சுகாதாரம் மற்றும் குடும்ப நலச் சேவையின் தரத்தை மேம்படுத்துவது தாய்-சேய் நலத் திட்டத்தை விரிவுபடுத்தி, வலுப்படுத்துவது, துறைகளிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவது ஆகியவற்றில் அரசு கவனம் செலுத்தி வருகிறது.

## பட்டு உற்பத்தியில் இந்தியாவின் பங்கு

உலகப் பட்டு உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாமிடத்தை வகிக்கிறது. 1989-90-இல் 12,016 மெட்ரிக் டன் பட்டு உற்பத்தி செய்யப்பட்டது. 1990-91இல் இது 12,665 மெட்ரிக் டன்னாக உயர்ந்தது. சென்ற நிதியாண்டில் 1991-92 டிசம்பர் வரையிலுமான ஒன்பது மாத காலத்தில் 8,523 மெட்ரிக் டன் பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பட்டு ஜவுளி வகைகள் ஏற்றுமதியும் செய்யப்படுகின்றன.

1989-90-இல் ரூ.392 கோடி மதிப்பிற்கு 358 இலட்சம் சதுர மீட்டர் பட்டு ஜவுளி ஏற்றுமதியானது. 1991-92-இல் (பிப்ரவரி 92 வரை) ரூ.600 கோடி மதிப்பிற்கு 350 இலட்சம் சதுர மீட்டர் பட்டு ஜவுளி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

(23—ஆம் பக்கம் தொடர்ச்சி)

அணிவகுப்பில் அடுத்து, சிதம்பரனார் மாவட்ட வீரர்களின் ஒயிலாட்டம் இடம் பெற்றிருந்தது. கையில் சிவப்பு நிறத் துணியைக் கட்டிக்கொண்டு, கால்களை ஒரே சீராக அடி எடுத்துவைத்து ஆடினார்கள். ஊட்டி லாரன்ஸ் பள்ளி மாணவர்களின் பாண்டு வாத்தியக் குழுவின் இசை நிகழ்ச்சியும் இடம் பெற்றது. இதே பள்ளி மாணவ-மாணவியர், கையில் வண்ணப் பந்துகளுடன் உடற்பயிற்சி செய்து காட்டினர்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களின் கோலாட்டம் நிகழ்ச்சி இடம் பெற்றது. அணிவகுப்பில் அடுத்து இடம் பெற்றது, ஆந்திர மாநிலத்தின் லம்பாடி நடனம் ஆகும். ஆண்களும், பெண்களும் பல வண்ண உடைகள் அணிந்து ஆடிய ஆட்டம் அனைவரையும் கவர்ந்தது. சுற்றுலாத் துறையின் அலங்கார வண்டிகளின் அணிவகுப்பு அடுத்து இடம் பெற்றது. பிறகு, கோவை நகரக் காவலரின் பாண்டுவாத்திய இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

தர்மபுரி மாவட்டம் பர்கூரைச் சேர்ந்த இளைஞர்களின் சேவை ஆட்டம் நடைபெற்றது. கால்களில் சலங்கை கட்டி, கையில் கம்புகளுடன் உறுமி மேளத்திற்கு ஏற்ப நடனம் ஆடினார்கள். தோட்டக் கலைத்துறை சார்பில் அலங்கார வண்டி வந்தது. அடுத்து புனித ஹில்டா பள்ளி மாணவ-மாணவிகளின் ஸ்காடிஷ் நடனம், கூட்டு உடற்பயிற்சி, பஜன் நடனம் ஆகியவை இடம்பெற்றன.

அடுத்து, போலீஸ் துப்பறியும் நாய்களின் சாகச நிகழ்ச்சி இடம் பெற்றது. முதலில் இரண்டு துப்பறியும் நாய்கள் மாண்புமிகு முதல்வர் முன்பு மண்டியிட்டு வணக்கம் தெரிவித்தன. பிறகு தீப்பந்தத்திற்குள் பாய்ந்து சாகசம் புரிந்தன.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, துப்பறியும் நாய் மலர்ச் செண்டை வாயில் கவ்விக் கொண்டு சென்று கொடுத்தது. அதை வாங்கிய முதல்வர் நாயை அன்புடன் தடவிக் கொடுத்தார்.

சீனா நாட்டுக் கதைகளில் இடம் பெறும் தீயைக்கக்கும் 'டிராகன்' என்னும் நடனமும் இடம்பெற்றிருந்தது. 40 அடி நீளமுள்ள டிராகன் விலங்கின் உருவத்தை சுமந்தபடி நடனக் கலைஞர்கள் ஆடினர்.

வனத்துறை அலங்கார ஊர்தியும் கண்ணைக் கவர்ந்தது. பாண்டிச்சேரி சார்பில், களியாட்டம், கோலாட்டம், கேரள மாநிலத்தின் தையம் நடனமும் இடம் பெற்றன. சேரன் போக்குவரத்து அலங்கார ஊர்தியுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

நிகழ்ச்சி நிறைவுபெற்றதற்கு அடையாளமாக, மாண்புமிகு முதல்வர் மற்றும் அமைச்சர்கள் பல வண்ணப் பலூன்களை வானில் பறக்க விட்டனர்.



## திண்டுக்கல் அண்ணா மாவட்டம் தாட்கோ மூலம் வளர்ச்சித் திட்டப் பணிகள்

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் (தாட்கோ) மூலம், 1991-92-ஆம் ஆண்டில் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 200 நபர்கள் பயன்பெறும் வகையில் சுய வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு ரூ.10 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தையல் மற்றும் எம்பிராயிடிங் இரண்டு சக்கர வண்டி பழுது பார்த்தல் மற்றும் வயரிங் போன்ற தொழில்களுக்குப் பயிற்சி அளித்திட ஆறு மாதத்திற்குத் தலா ரூ.250 வீதம் பயிற்சி பெறுபவர்களுக்கு வழங்கும் பொருட்டு ரூ.1,30,0 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டதில், 50 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஆயில் எஞ்சின் வழங்கும் திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்திற்கு 10 நபர்களுக்கு ரூ.50 இலட்சம் நிதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் 8 நபர்களுக்கு ஆயில் எஞ்சின் ரூ.40 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

இரட்டை மாட்டு டயர் வண்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 60 நபர்களுக்கு ரூ.3 இலட்சம் நிதி அளிக்கப்பட்டிருந்தது. இதில் 60 நபர்களுக்கு இரட்டை மாட்டு டயர் வண்டிகள் ரூ.3 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டு விட்டது.

நடப்பு நிதியாண்டில், உழவு மாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 25 நபர்களுக்கு ரூ.612 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டதில், 25 நபர்களுக்கு ரூ.612 இலட்சம் மதிப்பில் உழவு மாடுகள் வழங்கப்பட்டு விட்டன.

125 நபர்களுக்கு ரூ.5.9375 இலட்சம் மதிப்பில் இரட்டை மாட்டு வண்டி வழங்கிட அரசு நிதி ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 125 நபர்களுக்கு ரூ.5.9375 இலட்சம் மதிப்பில் இரட்டை மாட்டு வண்டிகள் வழங்கப்பட்டு விட்டன.

வேளாண்மைப் பயிற்சிகளுக்கு மருந்து தெளிக்கும் வகையில் மிதி வண்டி மற்றும் விசைத் தெளிப்பான் வழங்கும் திட்டத்தின்கீழ், 5 நபர்களுக்கு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 5 நபர்களுக்கு மதிவண்டி மற்றும் விசைத் தெளிப்பான் ரூ.10 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுவிட்டது.

ஸ்டீல் பங்க் கடை, அத்தொழிலுக்கான உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 15 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.6750 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளதில், இதுவரை 8 நபர்களுக்கு ரூ.36 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தனி நபர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 100 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்தில் 147 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டுவிட்டது.

## பிறப்புச் சான்றிதழ் விரைவில் கிடைத்திட...

"சென்னை மாநகராட்சியின் மண்டல மற்றும் கோட்ட அலுவலகங்களிலிருந்து பிறப்புச் சான்றிதழ்களைப் பெறுவதில் காலதாமதமாகிறது எனப் பொதுமக்களிடமிருந்து பல புகார்கள் வந்ததையடுத்து, மாநகராட்சி இச்சான்றிதழ்களை வழங்கும் முறையினை சற்று மாற்றிக் காலதாமதமின்றி விரைவில் வழங்க முடிவு செய்துள்ளது. தற்போது பிறப்புச் சான்றிதழ்களுக்கு மனுச் செய்த ஒருவாரக் காலத்தில் சான்றிதழ்கள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

"மேலும் பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்க்கும் தருணமாதலால் தன்னார்வம் மிக்கவர்களைக் கொண்டு விரைவில் சான்றிதழ்கள் வழங்க உதவும் பொருட்டு மண்டல அலுவலகங்களில் பிறப்புச் சான்றிதழ் வழங்கும் பிரிவில் கூடுதலாக உதவியாளர்களை மாநகராட்சி தற்காலிகமாக நியமித்துள்ளது.

"ஆகையால் பொதுமக்கள் கடைசிவரை காத்திராமல் உடனே பிறப்புச் சான்றிதழ் வழங்க மனுச்செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதன் மூலம் நெரிசலைத் தவிர்த்து ஒரே சமயத்தில் மனுக்கள் குவிந்து அதனால் தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும், பொதுமக்களுக்குப் பிறப்புச் சான்றிதழும் விரைவில் கிடைக்கும். எனவே, பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்' என்று சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. கா. அலாவுதீன் அவர்கள் ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.



# நூல் நயம்

## ஆட்சித் தமிழ்

**ஆசிரியர்: டாக்டர் த. பெரியாண்டவன்**

**வெளியீடு:**

வளர் தமிழ் பதிப்பகம்,
40, அஞ்சுகம் நகர்,
சென்னை-600 005.

பக்கம்:295 விலை:ரூ.75/-

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என விரிந்தும் இணைந்தும், உடன் பட்டும் ஒன்றியும் முத்தமிழ் எனப் பெயர் பெற்றுப் பெருமை பெற்று, தமிழ் இனத் திற்குப் பெருமை சேர்க்கும் தமிழ் மொழிக்கு 'ஆட்சித் தமிழ்' எனும் அழகிய பெயரோடு அரியதோர் அணி கலனை ஆக்கித் தந்துள்ளார், தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநர் முனைவர் பெரியாண்டவன். அவரது அரிய ஆய் வின் பயனாக அவருக்கு முனைவர் பட்டத்தினை ஈட்டித்தந்த எழில்மிக்க நூலாகவும் இது திகழ்கிறது.

ஆய்வுக் கருத்துக்களை அளித்தலோடு நில்லாது, அரசுப் பணியாளர்கள் அன்றாடம் பயன்படுத்தும் படிவங்கள், வரைவுகள், குறிப்புகள் ஆகியவற்றையும் இணைப்பாக அளித்திருப்பது பாராட்டத் தக்கது மட்டுமல்ல; மிகவும் பயன்படத் தக்கது.

தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சிமொழி யைச் செயற்படுத்தும் பணிகளோடு தொடர்பு கொண்டிருந்த தமது பட்டறி வினைப் பயன்படுத்தி, ஆட்சித் தமிழைச் செயலாக்குவதில் தாம் கண்டறிந்த சிக்கல் களையும், அவற்றைக் களையும் நெறி முறைகளையும் இந்நூலில் ஆசிரியர் விரி வாக விளக்கியுள்ளார்.

தமிழ் மொழியையும், தமிழ் இலக்கியத் தையும் வளர்க்கவும் காக்கவும் சங்ககாலம் முதல் மதுரையில் அமைக்கப்பட்ட மூன்று தமிழ்ச் சங்கங்கள், நான்காம் தமிழ்ச் சங்கம், தஞ்சைக் கரந்தையில் உமா மகேசுவரனார் தோற்றுவித்த கரந்தைத் தமிழ்ச் சங்கம், நாகைத் தமிழ்ச் சங்கம், தலைநகர்த் தமிழ்ச் சங்கம் எனப் பல் வேறு தமிழ்ச் சங்கங்கள் மேற்கொண்ட முயற்சிகளையும் பணிகளையும் இந்நூல் விவரிக்கிறது.

தமிழ் வளர்ச்சி இயக்ககம் வளர தமிழ்நாடு அரசு இயற்றிய சட்டமும், அதன் பின்னர் தமிழ் வளர்ச்சித்துறை யின் வளர்ச்சி பற்றிய அனைத்து வரலாற்றுக் குறிப்புகளும் நூலில் விரி வாகத் தரப்பட்டுள்ளன. தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தை நிறைவேற்ற முற் படும் போது ஏற்படுகிற சில சிக்கல் களைச் சுட்டிக்காட்டி அதற்குரிய தீர்வு களையும் ஆசிரியர் சுட்டிக் காட்டி யுள்ளார்.

அத்துடன் அரசின் கடிதங்கள், ஆணைகள், விண்ணப்பப் படிவங்கள் போன்றவை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக நூலில் பல் வேறு படிவங்களையும் வரைவுகளையும் தந்துள்ளார். நேர்காணல், நியமனம், பணிவரன்முறை செய்தல், தகுதிகாண் பருவம் முடித்தல், நியமனம் போன்ற பல வற்றுக்கான வரைவுகள் படிவங்கள் பலவற்றுடன் பொது வருங்கால வைப்பு நிதி, பகுதி இறுதித் தொகை பெறுதல், விண்ணப்பம் போன்றவற்றையும் தந் துள்ளார்.

இவ்வாறு பலவகையிலும் பயன்படுவ தாக இந்நூல் அமைந்துள்ளது.

—சி.ந.

## ஜீவகாருண்ய ஒழுக்கம்

**ஆசிரியர்: இராமலிங்க அடிகளார்.**

**வெளியீடு:**

காந்திய இலக்கிய சங்கம்
தமிழ்நாடு காந்தி நினைவு நிதி
மதுரை-625 020.

பக்கம்:64 விலை:ரூ.6/-

வாடிய பயிரைக் கண்டபொழுது எல்லாம் வாடிய வள்ளல் பெருமான் எழுதிய சன்மார்க்க விளக்கத்தின் முதற் பிரிவாகிய ஜீவகாருண்ய ஒழுக்கம் அவரின் தத்துவத்தின் மூலக் கூறுகளைக் கொண்டதாகும். இந்நூல் 'கேள்வி-பதில்' முறையில் அமைந்ததாகும். அண்ணல் காந்தியடிகளின் 'ஹிந்து சுயராஜ்யம்' நூலும் 'கேள்வி-பதில்' முறையில் அமைந்ததாகும். காந்தியடிகள் அகிம்சைக் கொள்கைக்கு விளக்கம் தரும் வகையில் முன்னோடியாக வந்த நூல் 'ஜீவ காருண்ய ஒழுக்கம்' அகிம்சைக் கொள் கையில் ஈடுபாடுடைய அனைவரும் படிக்க வேண்டிய நன்னூல் இந்நூல்.

—மாமூலன்

## பாரதிதாசன் கவிதைகள்

**வெளியீடு:**

வசந்தா பப்ளிகேஷன்ஸ்,
34, பெரிய தெரு,
சென்னை-5.

பக்கம்:289 விலை:ரூ.16/-

புரட்சிக்கவி, பாவேந்தர் என்றெல் லாம் போற்றிப் புகழப்படும் பாரதி தாசனின் கவிதைகள், கால காலத்துக்கும் நிற்கும் கருத்துக் குவியல்கள், காலக் கண்ணாடிகள்.

இரண்டு தொகுதிகள் இணைந்த கவிதைகள் தொகுப்பாக இது வெளி வந்துள்ளது. கண்ணைக் கவரும் வண்ண முகப்பு; கையடக்கப் பதிப்பு; இடை யிடையே எண்ண இன்பமூட்டும் எழி லோவியம், இதன் சிறப்பு. அத்தனைக்கும் கை கொடுக்கிறது அழகிய அச்சமைப்பு.

எல்லாவற்றுக்கும் மேலாக குறைந்த விலையில் - மலிவு விலையில் இந் நூலைத் தந்திருப்பது பாராட்டத்தக்கது.

எத்தனை தடவை படித்தாலும் தெகட்டாத தெள்ளமுதாய் விளங்கும் இந்நூலைப் பெரியவர் சிறியவர் என்று எல்லாத் திறத்தாரும் படித்துப் படித்துச் சுவைக்கலாமே!

தமிழ் நெஞ்சங்களில் பதிக்கத்தக்க கவிதைகள். படித்துப் பயன் பெறலாம்.

## எம்.ஜி.ஆர். கதை

### (இரண்டு தொகுதிகள்)

**ஆசிரியர்: எஸ். விஜயன்**

**வெளியீடு:**

அருள்மொழிப் பதிப்பகம்
32/20 ராணி அண்ணா நகர்
கே.கே. நகர், சென்னை-78.

பக்கம்: (ஒவ்வொரு தொகுதியும் 192 கொண்டது)

விலை: (ஒவ்வொரு தொகுதியும் ரூ.15/-)

முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கையை அப்படியே படம் பிடித்துக் காட்டும் அற்புத நூல்.

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறப்பு, வளர்ப்பு, கலை, அரசியல் தொண்டுகள் முதலானவை அழகுற எடுத்துக் கூறப்பட்டுள்ளன. எண்ணம் கவரும் வண்ண முகப்புடன், இடையிடையே அரிய புகைப்படங்களும் இடம் பெற்றுள்ளன.

இளைய தலைமுறை மட்டுமல்ல, எல்லாருமே படித்துப் பயன்பெறவும், வாழ்க்கையில் முன்னேறவும் இந்நூல் ஒரு முழுமையான வழிகாட்டியாக விளங்குகிறது என்று கூறலாம்.

—பி.வி.கிரி






# குழந்தை நலம்

உலகில் உள்ள மற்ற எல்லா நாடுகளைவும்விட இந்தியாவில் மட்டுமே குழந்தைகள் மரணம் அதிக அளவில் உள்ளது.

இது தற்போது குறைந்து வரு கிறது என்றாலும், குழந்தைகள் இறப்பு விகிதம் கணிசமாகக் குறைந்து விடவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இதற்கு முக்கிய காரணம், மக் களின் அறியாமை, போதிய கல்வி வசதிகள் இல்லாததால் மழலைகள் பற்றிய விழிப்புணர்ச்சி இல்லாமை... மழலையர்க்குத் தரமான பொருள் களை அளிக்காமல் இருப்பது, சுற்றுச் சூழல் பாதுகாப்பு இவைகள் பற்றித் தெரியாமல் இருப்பது ஆகிய வையாகும்.

இவைகளைக் கருத்தில் கொண்டே இந்தியத் தர நிர்ணய அமைவனம், குழந்தைகளுக்கான பொருள்களுக்குத் தர நியமங்களை வரையறுத்த தோடு ஐஎஸ்ஐ தர முத்திரைச் சான்றிதழ்த் திட்டத்தினையும் கொண்டு வந்துள்ளது. அவை:

1. குழந்தை உணவு, 2. குழந் தைகள் குளியல் சோப்பு, 3. பேபி இன்குபேட்டர்கள், 4. குழந்தைகள் எடை பார்க்கும் கருவிகள், 5. குழந்தைகள் பவுடர், 6. குழந்தைகள் மருத்துவமனைக் கட்டில்கள், 7. நம்பகமான, பாதுகாப்பான விளை யாட்டுப் பொருட்கள்.

இன்குபேட்டர் என்பது பற்றி நம் அனைவருக்கும் தெரியும். உரிய காலத்துக்கு முன்பே பிறந்திடும் சிசுக்களைப் பத்திரமாகப் பாது காக்கும் சாதனம் இவைகளின் செயல்திறன், பத்திரத் தன்மை, மற்றும் மின்சாரத்தால் கதகதப்பூட்டக் கூடியனவாக மருத்துவ வல்லுநர் களின் ஆலோசனையின் பேரில் உருவாக்கப்பட்டுள்ளது. இவை சரி யான முறையில் வடிவமைக்கப்படா விட்டால், மழலையர் உயிருக்கே பாதகம் விளையலாம். இதைக் கருத் தில் கொண்டே ஐ.எஸ்.3120 - 1978 என்னும் தர நியமத்தினை அமைவனம் உருவாக்கி, மழலையர் இன்குபேட்டர் தயாரிப்பாளர் களுக்கு உதவி செய்கிறது.

ஐஎஸ்:5337 - 1969 என்னும் இந்தியத் தரநியமம் மருத்துவமனை யில் குழந்தைகளுக்கான கட்டில்கள் பற்றி அதாவது இவ்வகைக் கட்டில்கள் உறுதியாகவும், மழலையர் சௌகரி யமாகவும் இருக்கும்படி வடிவமைக் கப்பட வேண்டியதன் அவசியத்தை யும் கூறுகிறது.

**சத்தான மழலையர் உணவு**

மழலையர்க்குச் சத்தான முதல் உணவு தாய்ப்பால் தான் என்பதில் வேறு கருத்து இருக்க முடியாது. அது உலகெங்கும் ஒப்புக் கொள்ளப் பட்ட கருத்தாகும். தாய்ப்பால் மட்டுமே குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை முழுமையாக அளிக்க முடியும். ஒருக்கால் தாய்ப் பால் கிடைக்காவிடில் செயற்கைக் குழந்தைகள் உணவு தேவைப்படு கிறது.

இப்படிப்பட்ட செயற்கை உணவு, குழந்தைகள் நலமாகவும், ஒழுங்காக வும், சீராகவும் வளர்ச்சி பெற ஊட்டம் நிறைந்ததாக, கலப்படமில் லாமலும் இருத்தல் அவசியம். இதைக் கருத்தில் கொண்டே

ஐஎஸ்:1547 என்னும் குழந்தைகள் உணவு பற்றியும் ஐஎஸ்:11156 என்னும் தர நியமங்களையும் உருவாக்கியுள்ளது.

தாய்ப்பாலில் காணப்படும் தாதுப் பொருள்களுக்குச் சமமாகப் பால் புரதம், பால் கொழுப்பு மற்றும் தேவையான வைட்டமின் ஏ,டீ இவைகளைச் செயற்கை உணவில் உள்ளடக்கியதாக இருக்க இந்தத் தர நியமங்கள் அமைந்துள்ளன. இந்தத் தர நியமங்களின்படி குழந்தைகள் உணவு தயாரிக்கப்பட்டு குழந்தைகளுக்கு வழங்கப்பட்டால் அது ஒரு முழுமையான உணவாக, தாய்ப்பாலுக்கு ஈடானதாகக் கருதப்படும்.

குழந்தைகள் பால் பவுடர் ஐஎஸ்ஐ தர முத்திரையுடன் கடைகளில் கிடைக்கிறது. இவைகளை வாங்கி உபயோகித்தால், மழலையர் பாதுகாப்பு நிச்சயம்.

திரவ உணவில் ஆரம்பித்து நாட்கள் செல்லச் செல்ல கொஞ்சம் கொஞ்சமாகத் திட உணவும் குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும். புரத உணவுகள் குழந்தைகள் நன்றாகச் செயல்பட உதவுகின்றன. நான்கு மாதத்திலிருந்து புரத உணவைக் குழந்தைகளுக்குக் கொடுக்க ஆரம்பிக்கலாம். குழந்தைகளுக்கு எட்டு மாதம் ஆகும்போது பால் உணவு பாதி, புரத உணவு பாதி என்ற விகிதாச்சாரத்தில் அமையும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

உணவுக் கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ், மத்திய அரசு சிறப்பு அரசிதழ் அறிக்கையின் மூலம் குழந்தை உணவுகளாகிய பால், பதப்படுத்தப்பட்ட தானிய வகைகள் தயாரிப்பைக் கட்டாய ஐஎஸ்ஐ தர முத்திரைத் திட்டத்தின் கீழ் கொண்டு வந்துள்ளது. ஐஎஸ்ஐ தர முத்திரை பெறாமல் மழலையர் உணவு வகைகளைத் தயாரிப்பதோ விற்பதோ சட்டப்படிக் குற்றமாகும்.

**பீடிங் பாட்டில்கள்...**

இவ்வகைப் பாட்டில்கள் சுலபமாகச் சுத்தப்படுத்தும்படியும் ஸ்டெரிலைஸ் என்னும் கொதிநீரில் கழுவிச் சுத்தப்படுத்தும் வகையில் அமைந்திருத்தல் அவசியம். தவிர பீடிங் பாட்டில் ரப்பர்கள் பாட்டில்களில் சரியாகப் பொருந்தியிருக்கும்படியும் கசிவு ஏற்படாதவாறும் இருத்தல் அவசியம். இதைக் கருத்தில் கொண்டே அமைவனம் ஐஎஸ்:5168 என்னும் தர நியமத்தை உருவாக்கியுள்ளது. இத்தர நியமம் பீடிங் பாட்டில்களின் வடிவமைப்பு மூலப் பொருள், கொள்ளளவு, நீள அகலங்கள், நேர்த்தித் திறன், மற்றும் அளவைகளைக் குறிப்பதாக அமைந்திருக்க வேண்டியதன் அவசியத்தைத் துல்லியமாக விளக்குகின்றது.

**• உலகிலேயே இந்தியாவில்தான் குழந்தைகள் மரணம் அதிகமாக உள்ளது. இதற்குக் காரணம் மக்களின் அறியாமையே. போதிய கல்வி இல்லாததால், குழந்தை வளர்ப்புப் பற்றி தெரியாதது, சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றி தெரியாதது ஆகியவை காரணம். இதைக் கருத்தில் கொண்டு, குழந்தைகளுக்கான உணவு, குளியல் சோப், எடைபார்க்கும் கருவி, தொட்டில், இன்குபேட்டர், விளையாட்டுப் பொருட்கள் ஆகியவற்றிற்கு 'ஐ.எஸ்.ஐ.' தர முத்திரைச் சான்றிதழ் வழங்கும் திட்டத்தினை இந்தியத் தர நிர்ணய அமைப்பு கொண்டு வந்துள்ளது.**

பீடிங் பாட்டில் ரப்பர்களில் அபாயகரமான தொத்து நோய்க் கிருமிகள் இருக்க வாய்ப்புண்டு. இதற்காக உருவாக்கப்பட்ட தர நியமமே ஐஎஸ்:3565 என்னும் இந்தியத் தர நியமம்.

**எடை பார்க்கும் கருவி**

ஐஎஸ்:2849 என்னும் தர நியமம் மழலையரின் எடை பார்க்கவென்றே உருவாக்கப்பட்ட தர நியமம்.

**பொதுச் சுகாதாரம்**

பெரியவர்களைவிட குழந்தைகளின் உடல் மிக மிருதுத்தன்மை வாய்ந்தது. அதனால் எரிச்சலோ, பாக்டீரியாக்கள் சுலபமாக உட்புகுவதோ சுலபம். இவைகளைக் கருத்தில் கொண்டே குழந்தைச் சாதனங்கள் தயாரித்தல் அவசியம்.

**சுத்தம்**

குழந்தைகளைச் சுத்தமாக வைத்திருக்க உதவுவதில் குழந்தைகள் சோப்பு மிகமுக்கியமானது. ஐஎஸ்:10523 என்ற தரநியமம் எப்படிப்பட்ட மூலப்பொருட்களை எந்தெந்த விகிதங்களில் கொண்டு சோப்பு தயாரிக்கலாம் என்பதைச் சொல்லுகின்றது.

**பேபி டால்கம் பவுடர்கள்**

அதிகப்படியான ஈரத்தினின்றும், தூசி தும்புகளிலிருந்தும் குழந்தைகளைக் காப்பது பேபி டால்கம் பவுடர்கள். இதற்காக உருவாக்கப்பட்ட தரநியமம் ஐஎஸ்:5339, குழந்தைகள் டால்கம் பவுடரில் போரிக் ஆசிட் சேர்க்கக் கூடாது.

**உடைத் தேர்வுகள்**

ஐஎஸ்: 10015 (பார்ட் 4) என்னும் தரநியமம் குழந்தைகளுக்கான சரியான அளவிலான துணிகள், வெளியுடைகள், துணிகள் தேர்வு பற்றி விவரிக்கின்றன.

**விளையாட்டுச் சாதனங்கள்**

பொம்மைகள் குழந்தைகளுக்கு வெறும் விளையாட்டுச் சாதனம் மட்டுமல்லாமல் உடல், மன வளர்ச்சிக்கும் உறுதுணை புரிகிறது. சரியாகக் கவனம் எடுத்து பொம்மைகள் தயாரிக்கப்படாவிடில் பொம்மைகள் குழந்தைகளுக்கு ஆபத்தை விளைவிக்கலாம். பொம்மைகள், கூரான முனைகளை உடையதாகவோ, கத்தி போன்ற ஓரங்களைக் கொண்டதாகவோ இருக்கக் கூடாது. இதற்காக உருவாக்கப்பட்ட தர நியமமே ஐஎஸ்: 9873 மற்றும் ஐஎஸ்:9849 இது வெவ்வேறு வயதுக் குழந்தைகளுக்கான பொம்மைகள் தேர்வு செய்யும் முறை பற்றி விளக்குகின்றன.



மேலே சொன்னவைகள் சில உதாரணங்களே. மழலையர் பாதுகாப்பில் கவனம் செலுத்தி, அவர்கள் மனம், உடல் வளர்ச்சி பெற பாடுபட்டு வருங்காலத்தில் வளமான இந்தியாவை உருவாக்கிட இன்றைய பெற்றோரும் மேலே கூறிய வழிமுறைகளைக் கடைப்பிடித்தல் இன்றியமையாததாகும்.



மாணவர் பக்கம்:



## நூலகம்

—பாப்பித்தன்

இருக்கும் அறிவைப் பெருக்கி — அறிஞர்
 இதயம் காட்டும் நூலகம்!
விரும்பும் துறையில் வளர்த்தே - நம்மை
 வாழ வைக்கும் நூலகம்!

எழுத்(து) அறிவே இருந்தால் - போதும்
 ஏணிப் படியாய் உயர்த்தியே,
அழகுப் படிப்பில், பண்பில் - சான்றோர்
 ஆக்கும் நல்ல நூலகம்!

மூன்று தமிழில், பலவாம் - மொழியில்
 முன்னேற் றிடுமாம் நூலகம்!
ஈன்ற நாட்டின், மொழியின்-பற்றை
 இனிதா யூட்டும் நூலகம்!

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கும் - உதவா
 தென்ற மொழியை நீக்கியே!
காட்டித் தொழிலைக் கற்க - வைக்கக்
 காத்து நிற்கும் நூலகம்!

கண்ணி யத்தைக் கட்டுப் - பாட்டைக்
 கடமை தன்னை உணர்த்தியே,
எண்ணும் குறிக்கோள் சிறந்து - விளங்க
 எல்லாம் புரியும் நூலகம்!

ஓய்வு நேரப் பொழுதைப் - பயனாய்
 ஓட வைக்கும் நூலகம்!
வாய்ப்பு வந்த போதில் - கற்றே
 வருவோம் நாளும் நூலகம்!

**உலக அதிசயம்:**

உலக அதிசயங்கள் பல. அவற்றுள் ஒன்று பாரோசுக் கலங்கரை விளக்கம். இது பாரோசு என்னும் தீவில் உள்ளது; 500 அடிகள் உயரம் கொண்டது.



பாரோசுக் கலங்கரை விளக்கம்

## அறிவுச்சுடர்

1. லண்டன் அமைந்துள்ள நதிக் கரையின் பெயர் என்ன?
 தேம்ஸ்.

2. தமிழ்நாட்டில் தேசிய பூங்கா எங்கு உள்ளது?
 சென்னை கிண்டியில்

3. நேரத்தை துல்லியமாக அளக்க கப்பலில் வைக்கப்பட்டுள்ள கருவியின் பெயர் என்ன?
 'ஈடியோமீட்டர்'.

4. இந்திய தேசிய காங்கிரஸ் ஸ்தாபகர் யார்?
 ஏ.ஓ. ஹியூம்.

5. மாஸ்கோ ஒலிம்பிக் ஹாக்கியில் வென்ற நாடு எது?
 'இந்தியா'

6. மின்சாரம் சேமித்து வைக்கும் கருவி எது?
 பாட்டரி

7. சென்னை நகரின் முதன் பெண் மேயர் யார்?
 திருமதி தாரா செரியன்

8. தாய்லாந்தின் தலைநகர் யாது?
 பேங்காக்

9. ஆடு தொடாவிலிருந்து கிடைக்கும் மருந்து யாது?
 வாசிகா

10. தையல் இயந்திரத்தை கண்டு பிடித்தவர் யார்?
 எலிய எஸ். ஹோவ்.

11. இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம் எது?
 சென்னை

12. ஒரிஸ்ஸாவின் தலைநகர் எது?
 புவனேஸ்வர்

ம. சந்தானம்
ஸ்ரீ லெட்சுமி டெக்னிக்கல் இன்ஸ்டிடியூட்
திருப்புவனம் 623 611
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்.



# விலங்குகளுக்கும் மருத்துவம் தெரியும்

**வ**னவிலங்குகளின் வாழ்க்கையை ஆராயச் சென்ற விலங்கியல் நிபுணர்களுக்கு ஒரு வியப்பூட்டும் செய்தி கிடைத்தது. விலங்குகளுக்கும் மருத்துவம் தெரியும்; விலங்குளிலும் டாக்டர்கள் உண்டு என்பதே அது. ஐந்தாண்டுகளக்கு முன்னர் ஆப்பிரிக்காவில் தான்சானியாவிலுள்ள மாகாலி மலை தேசீயப் பூங்காவில் ஒரு சிம்பன்சி குரங்கு நோய் வாய்ப்பட்டது. இருந்த இடத்திலிருந்து நகரக் கூட முடியாமல் தவித்த அந்த சிம்பன்சி, அருகிலுள்ள செடி, கொடிகளைச் சாப்பிடாமல் மிகவும் சிரமப்பட்டு சிறிது தொலைவு சென்று ஒரு குறிப்பிட்ட தாவரத்தைப் பறித்து அதன் சாற்றை மட்டும் மென்று குடித்துவிட்டு சக்கையை வெளியே துப்பியது 'வெரோனிகா அமைக்டாலினா' (Veronica Amygdalina) என்ற தாவரவியல் பெயர் கொண்ட அந்தச் செடியை சாதாரணமாக சிம்பன்சி குரங்குகள் தொடவே தொடாது.

மறுநாள் அதே குரங்கைக் கவனித்தபோது அது நோய் குணமாகி வழக்கமான 'குரங்குச் சேட்டைகளில்' ஈடுபட்டது. இந்தச் சம்பவத்தைக் கண்ட நிபுணர்கள் வியப்படைந்து. சிம்பன்சி குரங்குகளின் மருத்துவ அறிவு பற்றி ஆராய்ந்தனர். குறிப்பிட்ட குரங்கு பயன்படுத்திய 'வெரோனிகா' தாவரத்தை தான்சானிய மக்களும் வயிற்றுக் கோளாறுகளைக் குணப்படுத்துவதற்காக நீண்டகாலமாகப் பயன்படுத்தி வருவது தெரிய வந்தது. இந்த மூலிகை மருத்துவத்தை அவர்கள் விலங்குகளிடமிருந்துதான் கற்றார்கள் போலும்!

1987-ஆம் ஆண்டில் ஜப்பானின் கியோட்டோ பல்கலைக் கழகப் பேராசிரியர் மைக்கேல் ஹஃப் மேன் (Michael Huffman) இந்தச் செய்தியை வெளியிட்டார்.

அதைத் தொடர்ந்து கடந்த ஐந்தாண்டுகளாக குரங்குகளை ஆராயும் நிபுணர்கள், குரங்குகள் பயன்படுத்தும் 15 மூலிகைகளைக் கண்டறிந்தார்கள். வேறு சில விலங்குகளைக் கண்காணித்தபோது அவைகளும் இப்படி மூலிகைகளைப் பயன்படுத்துவது தெரிய வந்தது.

ஆண்டுதோறும் நடைபெறும் அமெரிக்க அறிவியல் முன்னேற்ற சங்கத்தின் மாநாட்டில் விலங்குகளின் மருத்துவ அறிவு குறித்து தனியாக ஒரு கருத்தரங்கே நடந்தது. ஹார்வர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர் ரிச்சர்டு ராங்கம் (Richard Wrangham) வேறொரு தகவலைத் தெரிவித்தார்.

சூரியகாந்தி குடும்பத்தைச் சேர்ந்த 'ஆஸ்பிலியா' (Aspilia) என்னும் தாவரத்தைத் சாப்பிட சிம்பன்சி குரங்குகள் 20 நிமிடம் வரை நடந்து வேறு இடங்களுக்குச் செல்வதைக் கண்டார். நாம் குழந்தைகளுக்கு வேப்பெண்ணெய், மீனெண்ணெய் கொடுப்பதைப் போல குரங்குகள் இந்த தாவரத்தின் எண்ணெயைக் கசக்கிப் பிழிந்து மூக்கிலும் வாயிலும் தடவிக் கொள்கின்றன. குரங்குகள் ஏன் இப்படிச் செய்கின்றன என்று அந்த தாவரத்தின் எண்ணெய்யை ஆராய்ந்த போது அதில் 'தயாருப்ரின்-ஏ' (Thiarubrine-A) என்னும் ரசாயனப் பொருள் இருப்பதும், அது பூச்சிகளையும், கிருமிகளையும் கொன்றுவிடும் தன்மைபடைத்தது என்பதும் தெரியவந்தது. அதை மேலும் ஆராய்ந்ததில் புற்றுநோய் ஏற்பட்ட செல்களைக் கூட அழிக்கும் சக்தி அவற்றுக்கு இருந்தது தெரியவந்தது. முதல் தடவையாக மனிதன், விலங்குகள் மூலம் ஒரு அரிய மருந்தை கண்டறிந்திருக்கிறான் என்று கலிபோர்னியா பல்கலைக் கழகப் பேராசிரியர் இலாய் ரோட்ரிகஸ் (Eloy Rodriguez) கூறினார்.

**கரடி கற்றுக்கொடுத்த பாடம்**

அமெரிக்காவில் வாழும் பழங்குடி இந்திய (செவ்விந்தியர்கள்) மக்களில் நவாஜோ இந்தியர்கள் கரடிகள் கற்றுக் கொடுத்த ஒரு மருந்தை இன்றும் பயன்படுத்திவருகின்றனர்.

வயிற்றில் புழு, பூச்சிகளினால் ஏற்படும் உபாதைகளைத் தீர்க்க லிகுஸ்டிகம் (Ligusticum) என்னும் தாவரத்தைக் கரடிகளும் செவ்விந்தியர்களும் பயன்படுத்துகின்றனர். இந்த மருத்துவத்தை மனிதர்களுக்கு கரடிகள் கற்றுக் கொடுத்த பழங்கதை ஒன்றையும் செவ்விந்தியர்கள் கூறிவருகின்றனர்.

விலங்குகளில் யானைகள், டால்ஃபின்கள் போன்றவை மனிதர்களைப் போலவே மகப்பேறு மருத்துவம் பார்ப்பதை நீண்டகாலமாகவே விலங்கியல் நிபுணர்கள் அறிவார்கள்.

பிரசவ காலத்தில், வயதான பெண் பிராணிகள் உதவிக்கு வந்து பிரசவம் பார்க்கின்றன. ஆனால், மனிதர்களுக்கு இதுவரை தெரியாத சில அரிய மருத்துவ முறைகளும் மருந்துகளும் கூட பிராணிகளுக்குத் தெரிந்திருப்பதை அண்மைக்கால ஆராய்ச்சிகள் வெளிப்படுத்துகின்றன.

மத்திய அமெரிக்காவிலுள்ள கோஸ்டாரீகா நாட்டின் காடுகளில் வாழும் ஊளையிடும் குரங்குகள் (Howling Monkeys) கருத்தடை மருந்துகளைப் பயன்படுத்துகின்றன! அதுமட்டுமல்ல, ஆண்களையோ, பெண்களையோ அதிகமாகப் பெற்றுக் கொள்ளும் வழிவகைகளையும் தெரிந்து வைத்திருக்கின்றன.

பிரசவத்திற்கு முன்னும் பின்னும் ஒரு குறிப்பிட்ட தாவரத்தை ஊளையிடும் குரங்குகள் சாப்பிடுகின்றன. இப்படிச் சாப்பிடும் குரங்குகளுக்கு ஆண் குட்டிகளே அதிகம் பிறக்கின்றன.

மனிதர்கள் உள்பட எல்லா உயிரினங்களிலும், பிறக்கப்போகும் புதிய ஜீவன் ஆணா, பெண்ணா என்பதை உயிரணுவிலுள்ள 'எக்ஸ்' (X) குரோமோசோமும் (பெண்) 'ஒய்' (Y) குரோமோசோமும் (ஆண்) தீர்மானிக்கின்றன.

இவைகளில் 'எக்ஸ்' அணு அமிலத்தன்மையிலும், 'ஒய்' அணு காரத் தன்மையிலும் நன்கு தாக்குப் பிடித்து நிற்கின்றன.

கருப்பையில் அமில அல்லது காரத் தன்மையைக் கட்டுப்படுத்தும் தாவரங்களை குரங்குகள் நன்கு அறிந்திருக்கின்றன.

எஸ். சுவாமிநாதன்
நன்றி "தினமணி"



மே-27 பண்டித நேரு நினைவு நாள்:

# உத்தமர் நேரு

—பி.வி.கிரி



பண்டித நேரு
பண்பின் மேரு
எண்டிசை ஒளிரும்
இணையிலா ஜோதி!

அன்னை நாடு
அடிமை விலக
தன்னை ஈந்த
தவப் புதல்வர்

நாடும் வீடும்
நலமாய் விளங்கிட
பாடு பட்டவர்
பல்கலைச் செல்வர்!

எழுத்தில் பேச்சில்
எதிலும் வல்லவர்
பழுத்த மரமாய்ப்
பயனைத் தந்தவர்!

மழலைச் சிரிப்பில்
மயங்கிய மேதை
உழைப்பால் உயர்ந்த
உத்தமர் நேரு!

கடமையே மூச்சாய்
கருதிய வீரர்
மடமையை எதிர்த்த
மக்கள் தலைவர்!

நேருவின் கனவை
நனவாய் ஆக்கிடச்
சேருவோம்! பாரத
தேசம் சிறக்கவே!









# மரங்கள் நாட்டின் செல்வங்கள்!

மரங்கள் பூமியினைப் பசுமையாக மாற்றுகின்றன. உணவு மட்டுமல்ல; மழையினையும் கொடுக்கிறது. மருந்து, எரிசக்தி, விலங்குகளுக்கு உணவு என்று பல வழிகளில் பயன்படுகிறது. மரங்கள் மனித சமுதாயத்திற்குப் பல வகைகளிலும் உதவிபுரிகின்றன. காய், கனிகளை மட்டுமல்ல; அவை வீடுகள் கட்டவும், மரப்பொருட்கள் செய்யவும் பயன்படுகின்றன. நாம் பயன்படுத்தும் காகிதமும், மூங்கில் போன்ற மரங்களிலிருந்து பெறுகிறோம். அதில் சந்தனம், தேவதாரு, குங்குமம், யூகலிப்டஸ் முதலியவை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிகின்றன.

மரங்கள் தமது வாழுங் காலத்தில் பயன்படுவது மட்டுமன்றி அழிந்து மண்ணோடு மண்ணாகி மட்கிப்போன பின்னரும் நிலக்கரியாகவும், எரிஎண்ணெயாகவும், வாயுவாகவும் மாறிப் பயன் தருகின்றன. மரங்கள் மேகங்களைக் குளிர்வித்து மழையைப் பொழியச் செய்யும் அதிசயத்தைச் செய்கின்றன. மரங்கள் மட்டுமே கைம்மாறு கருதாது உயிர்களுக்குப் பயன்படுகின்றன. வருவாய்க்கு வழிவகுக்கின்றன. சுற்றுப் புறச்சூழலைப் பாதுகாக்கின்றன. நம்முடைய இயற்கையமைப்பு சிதையாமல் பாதுகாக்கின்றன.

ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் ஒரு மரத்தை வளர்க்க உறுதி பூண வேண்டும். வீணாக மரங்களை வெட்டுவது ஒரு சமூகவிரோதச் செயலாகக் கருதப்படவேண்டும். மக்கள்தொகைப் பெருக்கம் அதிகமான சூழ்நிலையில் மரங்களை வளர்த்து சுற்றுப்புறத்தைத் தூய்மைப்படுத்துவது முக்கியமானதொன்றாகும்.

இந்தியாவின் மொத்த நிலப்பரப்பு 329 மில்லியன் எக்டர். அதில் காடுகள் 67 மில்லியன் எக்டேர். அதாவது மொத்த நிலப்பரப்பில் 22 விழுக்காடே காடாகும். 1952-இல் வகுக்கப்பட்ட தேசியக் கொள்கையின்படி குறைந்தபட்ச 33 விழுக்காடாவது காடுகள் இருக்க வேண்டுமென்பது கட்டாயமாகும்.

சில மரங்கள் சுற்றுப்புற மாசை அகற்றப் பயன்படுகின்றன. மாமரம், காற்றில் உள்ள குளோரினையும், மல்பரி, சூரியகாந்தி, வாதா மரங்கள் சல்பர்டை ஆக்ஸைடையும், விசிறிப்பனை, அத்தி ஆகியவை ஹைட்ரஜன் ப்ளோரைடையும் அகற்ற உதவி புரிகின்றன. 50 மீட்டர் பரப்புள்ள ஒவ்வொரு பூங்காவினால் 20-30 டெசிமல் காற்றுச் சத்தத்தைக் குறைக்க முடியுமென்று டாக்டர் டி.சி. தாஸ் கணித்துள்ளார். தேசிய வனக் கொள்கையின்படி பிராணவாயு, ஈரப்பதக் கட்டுப்பாடு, பறவை, பூச்சிகள் புகலிடம், நச்சுக் காற்றைத் தூய்மைப்படுத்துதல் ஆகியவற்றுக்கு மரங்கள் வளர்ப்பது அவசியம் என்று வலியுறுத்தப்பட்டது.

மரங்கள் இயற்கையின் சுவாசப்பைகள்

மரங்களை இயற்கை அமைப்பின் சுவாசப்பைகள் என அழைப்பது பொருத்தமாகும். ஏனென்றால், மனிதனால் உருவாக்கப்படும் பலவகையான கழிவுப் பொருட்களை, கேடுகளைக் களைவதும் மரங்கள் தாம். மரங்கள் மெல்ல அசைந்தசைந்து அக்கழிவுகளிலுள்ள கரியமிலவாயு, நைட்ரஜன் போன்ற வாயுக்களைப் பிரித்து வெளி மண்டலத்தில் கலந்து விண்வெளிப் பயணத்திற்கு அனுப்புகின்றன. இதனால் உயிர் இனங்களுக்கு ஏற்படும் கேடுகள் வெகுவாகத் தடுக்கப்படுகின்றன.

எலித்தடுப்பான்களாகச் செயல்பட்டு எலியின் நாச விளைவுகளிலிருந்து காப்பாற்றுகின்றன.

ஒவ்வொரு உயிரினத்திற்கும் தனித்தனியே நுரையீரல்கள் உண்டு. ஆனால் அத்துணை உயிரினங்களுக்கும் உயிர் வாழ்வதற்கான ஒரே நுரையீரல் மரங்களிடையேதான் உள்ளது. கரியமில வாயுவினைக் கிரகித்துக்கொண்டு நமது சுவாசத்திற்கு வேண்டிய பிராண வாயுவை அளிக்கிறது. மேலும் நச்சுப்புகைகளை உள்ளீர்த்துக்கொள்கிறது. மனிதன் ஒரு நாளைக்கு 12,000 லிட்டர் முதல் 15,000 லிட்டர் வரைக் காற்றைச் சுவாகிக்கிறான். இந்த நிலையில் நம்மைச் சுற்றி வியாபித்துள்ள சுற்றுப்புறக் காற்றில் பிராண வாயுவை நிரப்பிய வண்ணம் இருக்கின்றன மரமென்னும் பைகள். மரங்கள் என்றாலே உடனே நினைவுக்கு வருவது அவற்றின் குளிர்ந்த நிழலும் சுகமளிக்கும் காற்றுமாகும்.

மரம் விடும் மூச்சால் மனிதன் மட்டுமன்றி உயிருள்ள பிற ஜீவராசிகளும் பயன்பெறுகின்றன. மரங்களைத் தவிர மற்ற உயிரினங்கள்யாவும் பிராண வாயுவை உட்கொண்டு கரியமில வாயுவினைத்தான் வெளிவிடுகின்றன. மரங்கள் தாம் இதற்கு விதிவிலக்கு. மரங்கள் மட்டுமே வாயு மண்டலத்திலுள்ள கார்பன்-டை-ஆக்ஸைடு சூரிய ஒளியினால் உறிஞ்சி அவ்வாயுவினைக் கார்பனாகவும், ஆக்ஸிஜனாகவும் பிரித்து ஒளிச்சேர்க்கை வாயிலாகக் கார்பனை மாவுப் பொருளாக மாற்றுகின்றன. இவ்வமயம் வெளிவிடும் ஆக்ஸிஜன்தான் ஏனைய உயிர்கள் சுவாசித்து வாழ வழி வகுக்கின்றது. மரங்களின் பச்சை இலைகள் ஒரு சோதனைக் கூடமாகவே செயல்பட்டு ஒளிச்சேர்க்கையின்போது ஆக்ஸிஜனை வெளியேற்றுகின்றன.



எனவே, பச்சை நுரையீரல்களின் செயல், சுவாசப்பைக்கு ஏதேனும் ஊறு விளைந்தால் உயிர்க்கு ஆபத்து ஏற்படுவது உறுதி போல மரங்கள் அழிக்கப்பட்டால் மனித உயிர்களும், மற்ற உயிர்களும் வாழும் இந்த இயற்கைச் சூழல் மாசுற்று அழிய நேரிடும் என்பது உறுதியாகும்.

50 ஆண்டு வாழும் ஒரு மரம் ஆயுட்காலத்தில் 18 இலட்சம் ரூபாய் பெறுமான சேவை புரிகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஐயாயிரம் ரூபாய் பெறுமான பிராண வாயுவை வெளியிடுகிறது. 5 இலட்சம் ரூபாய் காற்றைச் சுத்திகரிக்கும் செயலில் ஈடுபடுகிறதென்று ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளனர்.

மரங்கள் மனித இனத்தின் இதயமாக, இயற்கையின் நுரையீரலாக, பிராணவாயுவின் பிறப்பிடமாக விளங்குகின்றன. பலவற்றாலும் உதவிவரும் நமது நண்பர்கள் மரங்கள். அவைகளை அழிப்பதால் நமக்கு நாமே அழிவைத் தேடிக் கொள்கிறோம். மரத்தை வெட்டுவது ஒரு உயிரைப் பறிப்பது போன்றதாகும். மகவுக்கு ஒரு மரம் நட்டு, நீர், நிலம், காற்றின் தூய்மை, வளமான வாழ்வின் மேன்மை என உணர்ந்து போர் வேகத்தில் செயல்படுவோம்! மண் வளம் பெறுவோம்!

இத்தகைய மகத்தான சேவை புரியும் மரத்தினை நட்டு பயிரினம் செழிக்கவும், மழைவளம் பெருகவும், மண் வளம் ஓங்கவும் பேருதவிபுரியும் மரங்களை நாட்டு வளங்களாகக் கொண்டு காப்போம்.

- என். ரெங்கநாதன்
நன்றி: 'திட்டம்'




**(RABIES) வெறிநோய்**

வெறி நோய் ஒருவகை (வைரஸ்) நுண்கிருமியால் ஏற்படுகிறது. மனிதனுக்கும் மற்ற விலங்குகளுக்கும் பரவக்கூடிய கொடிய நோயாகும். விலங்குகளிடமிருந்து மனிதனுக்கும், ஓர் விலங்கிடமிருந்து மற்ற விலங்குகளுக்கும் எளிதில் பரவக் கூடியது.

**நோயால் பாதிக்கப்படும் விலங்குகள்:**

நாய், பூனை, பசுவினம், எருமையினம், ஆட்டினம், காட்டு விலங்குகளான நரி, யானை, வௌவால்.

**நோய் பரவும் விதம்:**

ஓர் விலங்கு மற்ற விலங்குகளைக் கடிக்கும்போது உமிழ் நீர் மூலமாக இந்த நோய் பரவுகிறது. காயங்களின் மீது கிருமியுடன் கூடிய உமிழ்நீர் படுதல்.

**நோய் அறிகுறிகள்:**

அ. நாய் அங்குமிங்கும் அலைதல்
1. வாயிலிருந்து அதிக உமிழ்நீர் வடிதல்
2. தாடை தொங்குதல்
3. மரம், கல் மற்ற பொருட்களைக் கடித்தல், பிற விலங்குகள் மனிதனைக் கடித்தல், வெளிச்சத்தைக் கண்டு பயப்படுதல்.

**ஆ. பசுவினம்**
**1. முரட்டுத்தனமாக இருத்தல்**
**2. வித்தியாசமான குரலில் கத்துவது**
**3. அடிக்கடி சிறுநீர் கழிப்பது**

**சிகிச்சை முறை:**

1. நோய் அறிகுறி தோன்றிய பிறகு சிகிச்சை பலனளிக்காது
2. கடிபட்ட இடத்தை சோப்புத் தண்ணீர் கொண்டு கழுவுதல்
3. வெறிநோய்த் தடுப்பு ஊசி மருந்து போடுதல்

**நோய்த் தடுப்பு முறைகள்:**

வருமுன் காப்பது நல்லது. எல்லா இனச் செல்லப் பிராணிகளுக்கும் ஆண்டுக்கு ஒருமுறை தடுப்பு ஊசி போடுதல்.

உதாரணமாக BPL தடுப்பு மருந்து, Chick Embryo தடுப்பு மருந்து

**மனிதர்களுக்கு:**

அ. உடனடியாக மருத்துவர் ஆலோசனையும் தடுப்பு ஊசி போடுதலும்
1. BPL தடுப்பு மருந்து
2. Human Diploid Cell Culture தடுப்பு மருந்து
3. Chick Embryo தடுப்பு மருந்து

ஆ. கடிபட்ட இடத்தைச் சோப்புத் தண்ணீர் கொண்டு கழுவுதல், கிருமி நாசினிகள் உபயோகிக்கக் கூடாது.

**(BRUCELLOSIS) கருச்சிதைவு நோய்**

கருச்சிதைவு நோய் ஒருவகை பாக்டீரியா கிருமியால் ஏற்படுகிறது. இந்த நோய் பசு, எருமை, ஆடுகள் பன்றிகளைத் தாக்குகிறது. இந்த நோய் மனிதனையும் தாக்கவல்லது. எளிதில் பரவும் தன்மையுடையது.

**பாதிக்கப்படும் கால்நடைகள்:**

பசுக்கள், எருமைகள் 5-6 மாதம் சினைப் பருவத்தில் இந்த நோயினால் பாதிக்கப்படுகின்றன. ஆடுகள் மற்றும் பன்றிகளும் இந்த் நோயினால் பாதிக்கப்படுகின்றன.

**நோய் பரவும் விதம்:**

அ. கருச்சிதைவு ஏற்பட்ட பசுக்கள் மற்ற கால்நடைகள் உறுப்புகளிலிருந்து வெளிப்படும் கழிவுப் பொருட்கள் மூலமாக மற்ற கால்நடைகளுக்குப் பரவுகிறது.

ஆ. இந்த நோயினால் பாதிக்கப்பட்ட காளைகளைக் கொண்டு இனப் பெருக்கம் செய்வதால் மற்ற கால்நடைகளுக்கும் பரவுகிறது.

**நோய் அறிகுறிகள்:**

பசு மற்றும் எருமையினங்களில் 5-6 மாத சினைப் பருவத்தில் கருச்சிதைவு ஏற்படுதல் அதேபோல் ஆட்டினம் மற்றும் பன்றியினத்தில் கருச்சிதைவு ஏற்படுதல்.

**சிகிச்சை முறை:**

அ. கருச்சிதைவு நோயினால். பாதிக்கப்பட்ட கால்நடைகளைத் தனியாக பிரித்து வைத்தல்

ஆ. 3 மாதங்கள் வரை சினைக்கு விடாமல் ஓய்வு கொடுத்தல்

**நோய்த் தடுப்பு முறைகள்:**

அ. மந்தைகளில் "Brucelin" சோதனை செய்து நோய் கண்ட கால்நடைகளைப் பிரித்தல்

ஆ. இயற்கை முறைக் கருவூட்டலை தவிர்த்தல்

இ. 6 மாத வயதுடைய கிடேரிகளுக்குத் தடுப்பு ஊசி போடுதல்

ஈ. செயற்கை முறை கருவூட்டல் விந்துவுடன் ஆண்டிபயாடிக் மருந்துக்கள் கலப்பது.

உ. கருச்சிதைவுக் கழிவுப் பொருட்களைச் சுகாதாரமான முறையில் அப்புறப்படுத்துதல்

ஊ. நோய் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு 3 மாதம் இனச் சேர்க்கையிலிருந்து ஓய்வு கொடுத்தல்.

—கால்நடைப் பராமரிப்புத்துறை

காவலர் குடும்பங்கள் களிப்புற

# சிவகங்கையில் ரூ.2½ கோடிச் செலவில் கட்டப்பட்ட காவலர் குடியிருப்பு

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டு எட்டு ஆண்டுகள் பறந்தோடிவிட்டன. இம்மாவட்டத்தின் அமைதிக்குப் பங்கம்வராது, பாதுகாத்து வரும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுவரும் காவலர்கள் குடும்பத்துக்கு ஒரு குடியிருப்பு இல்லையே என்ற குறை... ஆயுதப் படைக்காவலர்கள் தலைநகரில் தங்கிப் பயிற்சிபெற்று அவசர நிலைக்கு உடனே செல்லமுடியாதபடி, மதுரையிலேயே இத்தனை ஆண்டுகள் தங்கியிருந்தனர்... காவலர் பணி சிறப்புடன் அமைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், இக் குடியிருப்பைத் திறந்து உடனே காவலர்கள் குடும்பங்கள் சிவகங்கையில் குடியேற்றிடவிரும்பி ஆணையிட்டார்.

அதன் விளைவு.....

கடந்த 2.5.1992-ஆம் நாள் சிவகங்கையில் கோலாகலமான விழா... நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. காவலர்கள் குடும்பத்தில் மகிழ்ச்சி வெள்ளம்... விழாவிற்குக் காவலர்கள் தமது துணைவியார், குழந்தைச் செல்வங்களுடன் வந்து மகிழ்வோடு கலந்து கொண்டார்கள்.

விழாவிற்குத் தலைமைவகித்த மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி குத்சியாகாந்தி இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றிவைத்துப் புதிய கட்டடத் திறப்புப் பணியைத் தொடங்கிவைத்தார். மண்டலக் காவல்துறைத் துணைத் தலைவர் திரு. எஸ்.வி. வெங்கடகிருஷ்ணன், இ.கா.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தலைமைப்பொறியாளர் திரு. செ. மாடக்கண்ணு அவர்கள் திட்ட அறிக்கையைப் படித்தார்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு. திருநாவுக்கரசு அவர்கள் தமது திருக்கரங்களால் ரூபாய் 2½ கோடியில் கட்டப்பட்டுள்ள புதிய காவலர் குடியிருப்பைத் திறந்து வைத்தார். இம்மாவட்டத்தில் அறிவொளி இயக்கத்தில் ஓராண்டு நிறைவு வெற்றி விழா கேக்கையும் வெட்டினார். அறிவொளி இயக்கம் சார்பில் 475 கிராமப் பெண்களுக்குத் தரப்பட்ட கராத்தே பயிற்சியைப் பார்த்து, வியந்து பாராட்டிய மாண்புமிகு அமைச்சர், காவல்துறையைச் சேர்ந்த பயிற்சியாளர்களுக்குப் பொன்னாடை அணிவித்துப் பாராட்டினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதல் குடியிருப்புத் திறவுகோலை வழங்கிட, அதைத் தமிழகக் காவல் துறைத் தலைமை இயக்குநர் திரு. எஸ். ஸ்ரீபால், இ.கா.ப., அவர்கள் பெற்றுக்கொண்டார். மேலும் சமுதாயத்தில் நலிவடைந்த மக்களுக்கு அரசின் உதவித்தொகைகளை வழங்கினார். ஆதிதிராவிடர்களுக்கு ரூபாய் 13 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ள குழும வீடுகளை 77 பேருக்கும் வழங்கினார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கட்டடம் ஒன்றையும், ஊராட்சி மன்றக் கட்டடங்கள் மூன்றையும், கிராமங்களில் 244 தெருவிளக்குகள் அமைத்திட உதவித் தொகையையும், படித்த 100 பெண்களுக்குச் செயற்கை வைரத்துக்குப் பட்டைத் தீட்டும் தொழில்புரிய ரூபாய் 18 இலட்சத்தையும், கள்ளச் சாராயம் காய்ச்சியவர்கள் அத்தொழிலைக் கைவிட்டதால் அவர்கள் மாற்றுத் தொழில்புரிய 128 நபர்களுக்கு ரூபாய் 10 இலட்சத்தையும், வறட்சி நிவாரணப்பணிகள் மூலம் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ரூபாய் 23 இலட்சத்திற்கான நிதி உதவியையும், 7 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி ரூபாய் 33 இலட்சம் மதிப்பில் கட்டப்படுவதையும், ஆக மொத்தம் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான உதவிகளை இம்மாவட்ட மக்களுக்கு வழங்கினார்.

பின்பு தமது சிறப்புரையில் மாண்புமிகு அமைச்சர் பேசும்போது கூறியதாவது:-

'தமிழ்நாட்டில் உள்ள மக்களின் அத்தியாவசியத் தேவைகளைத் தீர்க்க புரட்சித் தலைவி அவர்களின் அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் 1992-93-ஆம் ஆண்டிற்கு ரூபாய் 6½ கோடி செலவில் மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றிப் பல திட்டங்கள் செயல்படுத்தி வருகிறோம். தமிழ்நாட்டில் வருகின்ற 3 மாதத்தில் குடிநீர்ப் பிரச்சினை ஏற்படக்கூடாது என்று கருதி, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கியுள்ளார். மேலும் எங்கெங்குக் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளதோ அந்த இடத்திற்கு அரசு அதிகாரிகள் சென்று ஆவன செய்யும்படியும் உத்தரவிட்டுள்ளார்.

தமிழக மக்களின் எதிர்காலம் ஒளிமயமாக விளங்கிடப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறார். இதன்மூலம் இந்தியாவில் தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் சிறந்த மாநிலமாக விளங்கும்...'

-இவ்வாறு அமைச்சர் பேசினார்.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கரு. முருகானந்தம், திரு. வி.எம். சுப்பிரமணியம், திரு. மா.சா.மா. இராமச்சந்திரன், திருமதி கற்பகம் இளங்கோ, திரு. கே.ஆர். இராமசாமி, திரு. மு. தென்னவன், திரு. சுந்தர்ராஜ், திரு. சத்தியமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழா முடிவில் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. கி. இராதாகிருஷ்ணன், இ.கா.ப., அவர்கள் நன்றி கூறினார்.

விழாவில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தாரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

வளர்ந்துவரும் இம்மாவட்டத் தலைநகருக்கு இப்புதிய குடியிருப்புகள் மெருகூட்டிப் பெருமை சேர்க்கும் என்பதும், 364 காவலர் குடும்பங்கள் நிம்மதியுடன் வசிக்க வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது என்றால் அது மிகையல்ல...

ரெ. இராவணன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
பசும்பொன் முத்துராமலிங்கத்
தேவர் மாவட்டம்.



வளரும் வேளாண்மை :

# கோடை காலத்தில் பட்டுப்புழு பராமரிப்பு

பட்டுப்புழு வளர்ப்பில் உண்டாகும் இழப்புக்கு அவ்வப்போது நிலவும் தட்பவெட்ப நிலையும் ஒரு முக்கியக் காரணம். நோய்களினால் 40-50 சதம், பூச்சிகளினால் 5-6 சதம் மற்றும் சீதோஷ்ண நிலையினால் 10-12 சதம் இழப்பும் உண்டாகின்றது எனக் கண்டறியப் பட்டுள்ளது. பட்டுப்புழு வளர்ப்பினை 24-28 (டிகிரி சென்டி கிரேடு) வெப்ப நிலைக்குள்தான் சாதாரணமாக வளர்க்க இயலும். வெப்பநிலை 28 டிகிரி சி-ஐத் தாண்டும்போது சீதோஷ்ணம் மற்றும் அதன் காரணமாக, 'பால்புழு' போன்ற நோயும் உண்டாகி புழு வளர்ப்புத் தோல்வியடைகின்றது. எனவே, கீழ்க்காணும் முறைகளைக் கையாண்டு விவசாயிகள் புழு வளர்ப்பினை வெற்றிகரமாகச் செயல் படுத்தலாம்.

**மின் குளிர்சாதனப்பெட்டி வைத்தல்**

★ இம்முறை மிகவும் சிறந்தது என்றாலும் அனைத்து விவசாயிகளாலும் இதைப் பின்பற்ற இயலாது மேலும் தொடர்ச்சியாக மின்சாரம் இல்லாத நிலை நமக்கு உண்டு என்பதால், இம்முறையை நாம் எப்போதும் நம்பியிருக்க இயலாது.

★ இலை சேமிக்கும் தொட்டியினைச் சாக்குப் பைகளினால் சுற்றி அதன் மேல் தண்ணீரைத் தெளித்து, இலையின் தரம் கெடாதவாறு பாதுகாக்க வேண்டும். தரமிழந்த இலைகளே நோய்க்கு முதல் காரணியாகும்.

★ ஜன்னல் மற்றும் உள்ளே திறந்த பகுதிகளில் மேற்சொன்ன முறையிலேயே, நனைந்த கோணிப் பைகளைக் கட்டி வெப்பத்தைக் குறைக்கலாம்.

★ உயரமாகக் கூரை அமைத்தால் அல்லது தென்னங்கீற்று, கோரைப் புல் மற்றும் வைக்கோல் இவற்றைக் கொண்டு கூரை அமைத்தால் வெப்பம் உள்ளே இறங்காது.

★ புழு வளர்ப்புத் தாங்கி மற்றும் இலைசேமிக்கும் தொட்டி இவற்றிற்குக் கீழே பாலிதீன் பேப்பரை விரித்து, 10 செ.மீ. உயரத்திற்கு நுண் மணல் படுக்கை அமைத்து அதன்மேல் தண்ணீரைத் தெளித்து வைக்கலாம்.

★ நல்ல காற்றோட்ட வசதி கொண்ட வளர்ப்பு அறையில் தட்ப வெட்ப நிலையைப் பராமரிக்கும் முறைகளைக் கையாளுவது எளிது என்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் தகவல் பணி மையம் அறிவிக்கின்றது.

## கோடைக்கு உகந்த பயிர்

தமிழ்நாட்டில் கடலைக்கு அடுத்த முக்கியமான எண்ணெய்வித்துப் பயிர் எள். எண்ணெய் வித்துக்களுக்கு அதிக விலை கிடைக்கும் இன்றைய காலங்களில் எள்ளை ஒரு பணப்பயிர் என்றும் சொல்லலாம். மற்றொரு சிறப்பு அம்சம் இப்பயிரை குறைந்த அளவு கிணற்று நீரைக் கொண்டு பயிரிடலாம். இப்பயிரின் நீர்த்தோகை இருபத்தைந்து சென்டி மீட்டர் (நெற்பயிருக்குத் தேவையான மொத்த நீரில் ஐந்தில் ஒரு பங்கு).

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பவானிசாகர் நீர் நிர்வாகப் பிரிவு நடத்திய ஆராய்ச்சியின் முடிவுப்படி, கோடையில் எள்ளிற்குக் கீழே குறிப்பிட்டது போல் பாசனமளிக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.

★ எள் அதிக நீரைத் தாங்கி வளரக் கூடிய பயிரல்ல. அடிக்கடி நீர் பாய்ச்சக்கூடாது. நான்கு முறை நீர் பாய்ச்சினால் போதுமானது. ஆகையால், கோடையில் குறைந்த நீர் வசதி உள்ளவர்களுக்கு உகந்த பயிர் இது.

★ முதல் பாசனம், விதைத்தவுடன் அளிக்க வேண்டும். இப்பாசனத்தைக்கொண்டு, பயிர் முளைத்து மூன்று, நான்கு இலை நிலை அடைந்துவிடும்.

★ இத்தருணத்தில் இரண்டாவது பாசனம் அளிக்க வேண்டும்.

★ மூன்றாவது பாசனம், பூக்கும் தருணத்திலும், நான்காவது காய் விளையும் தருணத்திலும் கொடுக்க வேண்டும்.

இத்துடன் கோ.1 போன்ற உயர் விளைச்சல் எள் ரகங்களைப் பயிரிட்டு கோடையில் குறைந்த அளவு பாசன வசதி உள்ளவர்கள் பயனடைய விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## வறட்சியைத் தாங்கும் தீவனப்புல்

கடந்த 14 ஆண்டுகளில் ஒன்பது புதிய நல்ல சத்துள்ள தீவனப்பயிர் ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் 1988-இல் வெளியிடப்பட்ட கோ.1 நீலக் கொழுக்கட்டைப் புல் வறட்சியைத் தாங்கி நன்கு வளர்ந்து நல்லதொரு தீவனத்தைக் கொடுக்கவல்லது. மேலும் மாடு மேய்ப்பதனால் உண்டாகும் மிதி பாட்டினால் செடிகள் பட்டுப்போவதில்லை. இந்த ரகப்புல் வேர்கள் பூமியில் இந்தச் சித்திரை மாதக் கடும் வெய்யிலையும் தாங்கி, சிறிது மழை கிடைத்தவுடன் துளிர்த்து நல்ல தீவனத்தை மேய்ச்சலுக்குக் கொடுக்க வல்லது. இதன் விதைப்புக் காலம் செப்டம்பர் அக்டோபர் (அதாவது வடகிழக்குப் பருவ மழைக்காலம்) இந்தப்புல் வடிகால் வசதியுள்ள ஒரு மண்பாட்டு மற்றும் சுண்ணாம்புச் சத்து மிகுந்த நிலத்தில் நன்கு வளரக்கூடியது. இதில் ஒன்பது சதம் புரதமும், நாற்பது சதம் மாவுச்சத்தும் சுமார் அரை சதம் சுண்ணாம்புச் சத்தும் கொண்டது. இதன் செரிக்கப்படும் திறன் 49 சதம் இந்த நீலக்கொழுக்கட்டைப்புல் ஆண்டிற்குச் சுமார் ஆறு அறுவடைகளில் எக்டருக்கு நாற்பது டன்கள் வரை பசுந்தீவனம் கிடைக்கும். ●



# பண்ணைக் கழிவிலிருந்து பாங்கான அட்டைகள்!

காகிதத் தொழிற்சாலைகள் காடுகளை அழித்து காகிதக் கூழாக்கி விட்டன. இதனால் நம் வனச் செல்வம் குறைந்து வருகிறது. ஆகவே, காகிதம் தயாரிக்க பிறிதொரு மூலப் பொருளைத் தேடும் நிலையில் உள்ளோம். பண்ணைக்கழிவுகளிலிருந்து காகிதம் தயார் செய்யும் நுட்பத்தைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் உருவாக்கியுள்ளது.

**மூலப்பொருள்கள்**

செல்லுலோஸ் கொண்ட எல்லாப் பொருளிலும் காகிதம் தயாரிக்கலாம். நார்த்தன்மை அதிகம் கொண்ட பொருள்களிலிருந்து காகிதம் தயாரித்தல், நல்ல வலுவுள்ளதாகவும், தரமுள்ளதாகவும் இருக்கும். சாதாரணமாகக் காகிதக் கூழ் தயாரிக்க மூங்கில், யூக்கலிப்டஸ், யானைப்புல், வைக்கோல், கரும்புச் சக்கை பயன்படுத்தப் படுகின்றன.

வேளாண் பல்கலைக்கழக ஆராய்ச்சியின்படி வாழை மட்டை, சோளத்தட்டு, பருத்திமார், சூரிய காந்தித்தட்டு, கம்புத்தட்டு, பார்த்தீனியம் நச்சுக்களை, நீர்த்தாமரை, தேங்காய்மட்டைத்தூள் போன்றவற்றால் வலுவுள்ள காகித அட்டைகள் தயார் செய்யலாம் என்று தெரிய வந்துள்ளது. இந்த மூலப்பொருள்களைக் கழிவுக்காகிதத்துடன் 3:1 என்ற விகிதத்தில் சேர்த்து நல்ல தரமுள்ள அட்டை தயாரிக்க முடியும்.

**மூலப்பொருட்களைத் துண்டுகளாக்குதல்**

காகிதக்கூழ் தயார் செய்வதற்கு, முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூலப் பொருளான, வாழைத்தண்டு, பருத்திச்செடி, சோளத்தட்டு அல்லது வேறு ஏதாவது அதிக அளவில் கிடைக்கக்கூடிய பயிர்த்தண்டுகளைத் தட்டு வெட்டும் கருவி மூலம் சிறு சிறு துண்டுகளாக வெட்டவேண்டும். துண்டுகள் 2 முதல் 3 செ.மீ. நீளத்திற்கு மிகைப்படாமல் இருத்தல் நல்லது. வெட்டப்பட்ட துண்டுகளைக் கழுவி சுத்தம் செய்தபின் கொதிகலனில் போடவேண்டும்.

**கொதிகலனில் வேகவைத்தல்**

சிறு துண்டுகளாகக்கப்பட்ட மூலப்பொருள்களைக் கொதிகலனில் போட்டபின் அவை நன்கு மூழ்கியிருக்கும் அளவிற்குத் தண்ணீர் ஊற்றவேண்டும். பின்பு எரிசோடா என்கின்ற உப்பை 4 சதம் என்ற கணக்கில் சேர்த்துக்கொண்டு மூலப் பொருளை நன்கு கொதிக்க வைக்க வேண்டும். இவ்வாறு செய்வதனால் எளிதில் கரையக்கூடிய மாவுப் பொருள்கள் கரைந்தவுடன் நார்ப் பொருட்கள் அப்படியே இருக்கும். 2-லிருந்து 3 மணி நேரம் இவ்வாறு கொதிகலனில் நன்கு வெந்தபிறகு, தண்ணீர் வடிகட்டி வேகவைத்த தண்டுகளைப் பிரித்துவிட வேண்டும்.

**தண்டுகளை அரைத்தல்**

வேகவைத்த தண்டுகளை, பின்பு குளிர்ந்த நீரில் நன்கு கழுவி விட வேண்டும். பின்பு அரைக்கும் எந்திரத்தில் போடவேண்டும். அரைக்கும் எந்திரத்தில் தேவையான அளவு நீர் சேர்த்து 2 மணி நேரத்திற்கு நன்கு அரைக்கவேண்டும். பின்பு அரைத்த மரக்கூழில் 3-இல் ஒரு பங்கு கழிவுக் காகிதம் சேர்த்து, மேலும் 4 மணி நேரம் நன்றாக அரைக்கவேண்டும். பின் அந்தக்கூழில் சீனக்களிமண் 5 சதம், ரோசின் என்ற பசைப் பொருள் ஒரு சதம், ராணிபால், 0.1 சதம், நீலம் 0.05 சதம், ஆலம் 3 சதம் போன்ற இரசாயனப் பொருட்களைக் கலந்து மேலும் 2 மணி நேரத்திற்கு அரைக்க வேண்டும். இந்தக் கூழைப் பிளீச்சிங் தூளைக்கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். பிளீச்சிங் தேவையில்லாத காகிதப் பொருட்களுக்கு வெறும் தண்ணீர் விட்டுக் கழுவினால் போதுமானது.

**வார்ப்பிடுதல்**

காகிதம் அல்லது காகித அட்டைகள் தயார் செய்ய ஆட்டோ வாட் என்ற வார்ப்பு இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது. தேவையான அளவு அரைக்கப்பட்ட காகிதக் கூழை எடுத்து வார்ப்பிடும் அச்சில் இடவேண்டும். தயாரிக்கப்போகும் காகித அட்டையின் அல்லது காகிதத்தின் கனத்தைப் பொருத்து, காகிதக் கூழை அளவோடு அச்சில் ஊற்ற வேண்டும். பின் வார்ப்பிடும் அச்சானது தண்ணீரில் மூழ்குமாறு செய்து, காகிதக்கூழானது ஏகத்துக்கும் சீராகப் பரவுமாறு கைகளால் செய்யவேண்டும். பின் அச்சை வெளியில் எடுக்கும்பொழுது, அச்சில் உள்ள சல்லடைத்துவாரத்தின் வழியாகத் தண்ணீர் கசிந்து காகிதக்கூழ் மட்டும் அட்டைவடிவமாகத் தங்கி விடும். பின் ஈரத்தோடு இருக்கும் இந்தக் காகிதக்கூழை மெல்லிய துணிபோல் அப்படியே அச்சை விட்டு எளிதாக எடுத்து, சமமான மரப்பலகையில் கிடத்திடவேண்டும். அடுத்தடுத்து எடுக்கப்படும் ஈரக் காகிதக்கூழ் அட்டையை, துணிகளுடன் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைத்துக்கொண்டு வரவேண்டும்.

**நீர்ப்பிழிதல்**

இவ்வாறு வார்க்கப்பட்ட ஈரக் காகித அட்டையைத் திரவ அழுத்தக் கருவியின் உதவியால் அழுத்தும் பொழுது, அந்தப் பொருள்களில் உள்ள அதிகப்படி நீர் பிழிந்தெடுக்கப்படுகிறது. இந்தத் திரவ அழுத்தக் கருவியில் 15-லிருந்து 20 வார்ப்பிட்ட அட்டைகளை ஒரே சமயத்தில் வைத்து நீரைப் பிழியலாம்.

**உலர வைத்தல்**

நீர் பிழியப்பட்ட காகித அட்டைகளைப் போர்த்தப்பட்ட துணிகளோடு அப்படியே வெய்யிலில் உலரவைக்கவேண்டும். இந்த அட்டைகள், காய்ந்த ஒரு அளவுக்கு ஈரம் குறைந்தவுடன் (சுமார் 10 சத ஈரப்பசை) மேலே ஒட்டிய துணி

களைப் பிய்த்து எடுத்துவிட வேண்டும். அதிக அளவு ஈரப்பசை இருக்கும் பொழுது துணியிலிருந்து பிரித்தால் காகித அட்டை கிழிந்துவிட வாய்ப் புள்ளது. ஆகவே, ஈரப்பதத்தில் காகித அட்டையைத் துணியிலிருந்து பிரித்த பின் நன்கு உலரவைத்துக் கொள்ளலாம்.

**சுருக்கம் நீக்கி மெருகிடுதல்**

வெய்யிலில் நன்கு உலர்ந்த காகித அட்டைகளில் நிறைய வளை வுகளும் சுருக்கங்களும் இருக்கும். இவைகளைப் போக்க காகித அட்டை களை பாலிஷ் செய்யப்பட்ட இரண்டு இரும்புத் தகடுகளுக்கு இடையில் வைத்து, கனமான இரும்பு உருளைகளின் வழியாகச் செலுத்த வேண்டும். இவ்வாறு செய்தால் சுருக்கம் நீங்கி அட்டைகள் நன்கு மெருகேற்றப்பட்டு வெளியே தள்ளப்படுகின்றன. இம்மாதிரி இரண்டு மூன்று தடவை செய்தால் நன்கு மெருகேற்றப்பட்ட அட்டைகள் கிடைக்கும். இந்த அட்டைகளை வெட்டும் கருவி கொண்டு ஓரங் களை வெட்டித் தேவையான அள விற்குச் செய்து கொள்ளலாம்.

**காகிதப் பொருட்கள், அவற்றின் பயன்கள்**

தேவையான அட்டை கிடைத்த வுடன் அவற்றை மடித்து, இரும்புக் கம்பி பொருத்தி, கோப்புகளாக மாற்றலாம். இந்த அட்டைகளை மெலிதாகக் காகித அளவில் செய் தால் அதிலிருந்து அலுவலகத்திற்கு வேண்டிய தபால் கவர்கள் செய்ய லாம். சற்றுச் கனமான தகடுகளைக் கொண்டு, அலுவலகத்தில் அலு வலர்கள் எழுதுவதற்கு உபயோகப் படுத்தும் தாங்கும் அட்டைகளாகச் செய்யலாம். தகுந்த அச்சின் உதவி யால் காகித அட்டைகளைச் சாப் பிடும் தட்டாக மாற்றலாம். இவற்றையே முட்டை தாங்கும் ஓடுகளாகக்கூட மாற்றலாம். கன மான காகிதத் தகடுகளுக்கு வார்னிஷ் பூசி பின் வண்ணம் பூசி அலங் காரக் கூரைகளாகவும் தடுப்புச் சுவர் களாகவும் பயன்படுத்தலாம். இந்த ஓடுகளைப் பயன்படுத்தி கனமான அட்டைப் பெட்டிகள் தயார் செய்து பழவகைகள் உணவு டின்கள் போன்றவற்றை அடைத்து அனுப்ப லாம்.

ஒரு டன் காகிதப் பொருட்கள் தயாரிக்கத் தேவையான தொழிலகத் தின் குறிப்புகள்.

1. தொழில் அமைக்க வேண்டிய கருவிகள், எந்திரங்கள் - ரூ.10,00,000
2. தண்ணீர்/நாள் 25,000 லிட்டர்/நாள்
3. இடவசதி 5,000 ச.அடி.
4. மின்சாரம் 25 எச்.பி.
5. வேலையாட்கள் 25/நாள்
6. வேளாண் கழிவுப்பொருள் 3 டன்/நாள்,
7. கழிவுத்தாள்கள் 1 டன்/நாள்.

காகிதப் . பொருட்களின் அடக்க விலை : 1.
காகிதக்கோப்பு ரூ.3.00
தாங்கும் அட்டை 4.50
காகித ஓடு (ச.அடி) ரூ.1.00

## எவரெஸ்ட் சிகரத்தை எட்டிய மூன்று இந்தியர்!

இந்திய-திபெத் எல்லைக் காவல்படையைச் சேர்ந்த மூவர் உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியில் ஏறி இந்தியத் தேசியக் கொடியைப் பறக்கவிட்டனர்.

15 மலை ஏறும் வீரர்கள் அடங்கிய இந்தியக் குழு எவரெஸ்ட் சிகரத்தை எட்டும் முயற்சியை இம்மாதம் துவக்கியது. இந்திய-திபெத்திய எல்லைக் காவல் படை யைச் சேர்ந்த இவர்களில் கமாண் டன்ட் சுநீல் தத்தா சர்மா, கம்பெனி கமாண்டர் பிரேம் சிங், சுபேதார் மேஜர் கன்யாலால் ஆகிய மூவரும் உலகின் மிக உயர்ந்த மலைச் சிகர மான எவரெஸ்ட் மலைச் சிகரத் தைச் சென்றடைந்து சாதனை புரிந் துள்ளனர்.

8,848 மீட்டர் உயரமுள்ள இந்த எவரெஸ்ட் சிகரத்தை. இந்தக் குழு வினர் 10.5.1992 அன்று மாலை எட்டினர்.

எட்டு ஆண்டுகளுக்குப் பின் இப்போதுதான் இந்தியர் இவ்வெற்றி யைப் பெற்றுள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது.

## எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த இரண்டாவது இந்தியப் பெண்

இந்திய-திபெத் காவல்துறை யைச் சேர்ந்த சுபேதார் செல்வி சந்தோஷ் யாதவ் 12.5.1992 அன்று வெற்றிகரமாக எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடித்தார்.

உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த இரண்டாவது பெண் சந்தோஷ் யாதவ் இந்த சாதனையைப் புரிந்த முதல் இந்தியப் பெண் பச்சேந்திரி பால். இவர் 1984-இல் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்து சாதனை புரிந்தார்.



# ஒருமைப்பாடு மலர்ந்திட...



உயர்ந்த வானில் வளைந்த மேனி
ஏழு நிறத்து வானவில் குழந்தையை
இயற்கை மழைத்துளி ஈன்றெடுக் கின்றது,
வாழ்வு நுட்பம் வரைந்து காட்டவே!

வாழைநார் மேடையில் நடனம் ஆடிடும்
மெல்லியல் சேர்க்கும் பலநிறப் பூக்கள்
சொல்லிச் செல்லும் உண்மை உணரலாம்!

ஓவியன் நெஞ்சில் அடைகாத்த எண்ணம்
வெள்ளைத் தாளில் சித்திரக் குஞ்சாய்
மேவிப் படியும் பல எழில் வண்ணம்
உள்ளத் துள்ளே போதனை செய்யுமே!

பாடகர் நாவில் ஏழு சுரங்கள்
பிணைந்து எழுப்பும் இசையும், அதனுடன்
மேடையில் பின்னணிக் கருவிகள் ஒருங்கே
இணைந்த முறையும் பாடம் சொல்லுமே!

அரிசிக் கடையிலும் தூய மல்லி,
குறுணை, சம்பா, பொன்னி, நெல்லூர்
வரிசை மூட்டைகள் பலவாய் அமைந்து
தெரிவிக் கின்ற செய்தி இதுதான்.

இந்திய நாட்டில் பற்பல மொழிகள்,
இதயம் ஊட்டிய சாதிகள் இருப்பினும்
சிந்தையில் ஒருமை இருந்தால் மட்டுமே
சிறப்புகள் விரியும்; சீர்களும் பரவுமே!

டாக்டர் மலையமான்

(8—ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறைத்திட்ட சூழ்நிலையை நாம் சந்திக்க வேண்டியுள்ளது. மாநிலங்கள் பெரும் குறைபாடுகளுடன் 8-வது திட்டத்தைத் தொடங்க வேண்டியுள்ளது. சேமிப்புகளுக்கு உண்டான சலுகைகளைச் சமீப காலத்தில் அதிகரித்திருந்தாலும் அவைகள் போதுமானவை அல்ல. வருமான வரி கட்டமைப்புகளைச் சுருக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட நீண்ட காலத் திட்டங்களில் நன்மைகள் உண்டு என்றாலும் இவைகள் மாநிலத்தில் ஏற்படுத்தியுள்ள முக்கியமான நிதிப் பற்றாக்குறையினை ஒதுக்கிட முடியாது.

இது மிகப்பெரிய மாறுதலாகையால் ஒரே ஆண்டில் நிறைவேற்றிட முடியாது. சிறு சேமிப்பு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் வரிச்சலுகைகளை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது சிறு சேமிப்பிற்கென்று சிறப்பாக ஏற்படுத்தப்பட்ட வசதியாக இருக்க வேண்டும். இதனைச் செய்யாவிடில் வருமான வரி வசூலை அதிகரிப்பதன் மூலம் நிதி நிலைமை மேம்பாடு அடைந்தாலும் எட்டாவது திட்டத்தை நிறைவேற்றுவதில் மாநிலங்கள் மிகவும் கஷ்டங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

பத்தாவது நிதிக்குழு விரைவில் அமைக்கப்பட உள்ளது. இந்தக் குழுவின் கடந்த கூட்டத்தில், 9-வது நிதிக்குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்துவதில் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் சந்திக்கும் இடர்ப்பாடுகளைப் பற்றி கூறியிருந்தேன்.

திட்டங்களை நிறைவேற்றுவதனால் ஏற்படும் செலவினங்களையும் நிதிப்பற்றாக்குறைகளையும் கருத்தில் கொள்ளாமல் மாநிலங்களுக்கு வழங்கப்படும் சுங்க வரியின் பங்கைக் குறைத்திருப்பதும் திட்டங்களை நிறைவேற்றுவதில் நடைமுறையில் உள்ள குறைபாடுகளும் சேர்ந்து, செய்யாத தவறுகளுக்குத் தமிழ்நாட்டைப் போன்ற மாநிலங்களுக்குக் கடுமையான நிதி நிலைமையை உருவாக்கியுள்ளது.

**"வளர்ச்சியின்மை என்னும் இருளைப் போக்கி, பணவீக்கத்தினால் ஏற்பட்டுள்ள இன்னல்களைக் களைந்து, புதியதோர் உலகம் படைப்போம் என்னும் நம்பிக்கை பொங்கும், இளமை பொங்கும் நவீன சமுதாயத்தை உருவாக்கப் பீடு நடை போடுவோம்!"**

**"பிரமிக்க வைக்கும் நமது அரசியல் அமைப்பு என்னும் சித்திரத்தைக் கிழித்தெறியத் துடிக்கும் அன்னிய உணர்ச்சிகளை நாம் அனுமதிக்க மாட்டோம்!"**

வருமான வருவாயில் மிகுந்த பற்றாக்குறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. 8-வது திட்டக் காலத்தைக் குறித்த மட்டில் 10-வது நிதிக்குழு அமைய விருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், இக்குழுவின் பரிந்துரைகள் 8-வது திட்டத்தின் இரண்டு ஆண்டுகளில் அமல்படுத்தப்படும். அதிகார மட்டத்தில் ஒரு ஆய்வுக் குழுவின் உதவியுடன் இது குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், 10-வது நிதிக் குழுவின் வரம்புகளை வரையறுப்பதில் மாநிலங்களும் ஈடுபடுத்தப்பட வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதிகப்படியான நிதி வசதிகளைத் திரட்டுகின்ற முயற்சிகளை மாநிலங்கள் மேற்கொண்டாலும், மிகக் கடினமான நிதிப் பற்றாக்குறை, அதைச் சந்திக்க வேண்டியிருப்பதால் அனுப்புச் சரக்கு வரி (Consignment Tax)யைப் பற்றி விரைவான ஒரு முடிவை எடுப்பது அவசியம் ஏற்படுகிறது. பல்வேறு சந்தர்ப்பங்களில் இப்பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பொதுவான ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஒரு சில விவரங்களே தீர்க்கப்பட வேண்டியுள்ளது.

முதலமைச்சர்களுடைய ஒத்துழைப்புடன் இது குறித்து விரைவானதொரு தீர்வினைக் காணலாம் என நான் நம்புகிறேன். இந்த வரியை வசூலிப்பதற்குத் தேவையான மசோதாவைப் பாராளுமன்றத்தில் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தை நான் வலியுறுத்திக் கூறுகிறேன். இந்த வரியை ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் நடைமுறைக்கு வருவதற்கான முடிவினை நாம் காணலாமெனக் கருதுகிறேன்.

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மாநிலங்கள் செய்துதர வேண்டியுள்ளது. அனைத்து அடிப்படை வசதிகளின் செலவையும் திரும்பப் பெற்றுவிட முடியாது. ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், மாநிலங்களுக்கு எந்தவித வரியும் தருவதில்லை. ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலைகளுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்த சிறப்பு மத்திய உதவி வழங்க வேண்டுமென்று நான் யோசனை தெரிவித்திருந்தேன். கார்ப்பரேஷன் வரி (Corporation tax)யில் மாநிலங்களுக்கு எந்தப் பங்கும் கிடைப்பது இல்லை. தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை



**"தமிழகத்தில் வளர்ச்சிப் பணிகளுக்காக, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ரூ.1 கோடி வழங்கப்படும் ஒரு சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது".**

வசதிகளை வழங்கும் பொறுப்பு மாநில அரசுகளுக்கு இருப்பதால், கார்ப்பரேஷன் வரியில் (Corporation tax) ஒரு பகுதியை மாநில அரசுகள் பெற மத்திய அரசு வகை செய்ய வேண்டிய நேரம் வந்து விட்டது எனக் கருதுகிறேன்.

மாறிவரும் இந்தியப் பொருளாதாரம் கடந்த காலங்களில் பொருளாதாரச் சிக்கல்கள் என்னும் புயல் கடலில் சிக்கி அலைகழிக்கப்பட்ட போது மக்களின் பொறுமை, சகிப்புத்தன்மை, மனவலிமை ஆகியவற்றுடன் வெற்றி கொண்டோம். நாம் சொல்வதெல்லாம் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று ஏற்றுக்கொள்ளமுடியாது. வளர்ந்து வரும் பொருளாதாரச் சிக்கல்களுக்கிடையே மக்கள் சிறந்த குணாதிசயங்களைத் தொடர்ந்து வெளிப்படுத்துவார்கள் என்று நாம் எடுத்துக் கொள்ள முடியாது. தேவைகளுக்காகவும், வறுமையைப் போக்கவும் தியாகங்கள் புரிய வேண்டும் என கேட்காத கொள்கை நெறிமுறைகளை நாம் வகுத்தாக வேண்டும். 8-வது திட்டத்தைத் துவக்குகின்ற இவ்வேளையில் கோடிக்கணக்கான இந்தியர்களுக்குச் சிறப்பான வாழ்க்கையை வழங்குகின்ற நற்பணிக்கு நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்வோம். பிரமிக்க வைக்கும் நமது அரசியல் அமைப்பு என்னும் சித்திரத்தைக் கிழித்தெறியத் துடிக்கும் அன்னிய உணர்ச்சிகளை நாம் அனுமதிக்க மாட்டோம். வளர்ச்சியின்மை என்னும் இருளைப் போக்கி, ,பணவீக்கத்தினால் ஏற்பட்டுள்ள இன்னல்களைக் களைந்து, புதியதோர் உலகம் படைப்போம் என்னும் நம்பிக்கை பொங்கும், இளமைப்பொங்கும் நவீன சமுதாயத்தை உருவாக்க பீடு நடை போடுவோம்.

மாண்புமிகு பிரதமர் அவர்கள் தன்னுடைய தொடக்க உரையில், சில மாநிலங்களில் வளர்ச்சித் திட்டங்களில் அரசியல் வேறுபாடு காட்டப்படுகிறது என்று கவலைப்பட்டார். தமிழகத்தைப் பொறுத்தவரையில் வளர்ச்சித் திட்டங்களில் அரசியல் பாகுபாடு காட்டப்படுவதில்லை என்று பிரதமர் அவர்களுக்கு உறுதி கூறிக் கொள்கிறேன். இந்தத் தருணத்தில் தமிழகத்தில் வளர்ச்சிப் பணிகளுக்காக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ரூ.1 கோடி வழங்கப்படும் ஒரு சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் தமிழகத்தில் அமல்படுத்தப்படுகிறது என்பதை, பிரதமர் அவர்களுக்கும் இந்த அவைக்கும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டில் மொத்தம் 386 பஞ்சாயத்து யூனியன்கள் உள்ளன. அவை அனைத்திற்கும் அரசியல் பாகுபாடு இல்லாமல் ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்பது இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுடில்லியில் 22.5.92 அன்று நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை.

## அஞ்சல்



● அஞ்சல் சேவை நாட்டுக்குத் தேவை. மார்ச் 31-ந் தேதி நிலவரப்படி நாட்டில் 1,48,719 அஞ்சல் அலுவலகங்கள் உள்ளன. இதில், 1,32,646 அஞ்சல் அலுவலகங்கள் கிராமங்களிலும், 16,073 அஞ்சல் அலுவலகங்கள் நகரங்களிலும் அமைந்துள்ளன.

1990-92-இல் 1,476 அஞ்சல் அலுவலகங்களைக் கிராமப்புறங்களில் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. நாட்டில் மொத்தம் 5,20,074 அஞ்சல் பெட்டிகள் உள்ளன. இதில் 4,36,667 கிராமங்களிலும், 83,407 நகரங்களிலும் அமைந்துள்ளன. 22.10 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கும், 4,607 மக்கள் தொகை கொண்ட பகுதிக்கும் சராசரியாக ஒரு அஞ்சல் அலுவலகம் அமைந்துள்ளது.

1990-92-இல் அஞ்சல் துறையின் வருவாய் ரூ.840.85 கோடி, செலவு ரூ.1,032.50 கோடி, பற்றாக்குறை ரூ.191.65 கோடி.

## திராட்சை



● நம் நாட்டில் 25,000 எக்டேர் நிலப்பரப்பிலிருந்து 5,35,000 டன் திராட்சை உற்பத்தி செய்யப்படுகிறது. அதிகமாக, மகாராஷ்டிரா மாநிலத்தில் பயிரிடப்படும் 9,000 எக்டேர் நிலப்பரப்பில் 1,60,000 டன் திராட்சை விளைகிறது.

உலகிலேயே அதிகபட்சமாக நெதர்லாந்தில்தான் ஒரு எக்டேருக்கு 28.5 டன் திராட்சை உற்பத்தி செய்யப்படுகிறது. அதற்கு அடுத்தப்படியாக இந்தியாவில் 21.7 டன் திராட்சை உற்பத்தியாகிறது. திராட்சை சாகுபடி மூலம் 4.5 இலட்சம் பேருக்கு நிரந்தரமாகவும், 9-10 இலட்சம் பேருக்குத் தற்காலிகமாகவும் வேலை கிடைக்கிறது.

ஆண்டுதோறும் இந்தியாவிலிருந்து எட்டு கோடி ரூபாய் மதிப்புள்ள 4,000 டன் திராட்சை ஏற்றுமதி செய்யப்படுகிறது.

# ஆசியஜோதி

**'ஆசிய ஜோதி' என்கிற அகிலப் புகழ்பெற்ற ஜவகர்லால் நேரு அவர்களின் நினைவு நாளையொட்டி (27.5.92) இந்தக் கட்டுரை வெளியிடப்படுகிறது.**

"இந்தியாவையும் இந்திய மக்களையும் மிகுந்த பாசத்தோடு நேசித்த நல்ல மனிதர் இவர்; பதிலுக்கு இந்திய மக்களும் இவரிடம் மிக அன்பு காட்டி அளவற்ற ஆதரவளித்து வந்தார்கள் என்று மற்றவர்கள் என்னைப் பற்றிப் பேசுவதையே நான் பெரிதும் விரும்புகிறேன்"— என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தவர், எழுதிக் கொண்டிருந்தவர் 'ஆசிய ஜோதி'யான ஜவகர்லால் நேரு அவர்கள் (14.11.1899-27.5.1964).

அமெரிக்க நாட்டிற்குச் சென்றிருந்த பேரறிஞர் அண்ணா அவர்களிடம்— "நேருவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்கப்பட்டது.

"அவர் கட்டி முடிக்கப்பட்ட கோபுரம்; நான் கொட்டிக்கிடக்கும் செங்கல்"— என்று பெருந்தன்மையோடு அதற்குப் பதில் கூறிப் பெருமை கொண்டார் அமரர் அண்ணா.

இத்தனைப் பெருமையுடைய நேரு பெருமகனாரின் வாழ்வு அவர் இந்தியப் பிரதமராகப் பதவி பெற்றதால் மட்டுமல்ல; செயற்கரிய செய்த செம்மல் அவர் என்பதாலுமே நீங்கா நினைவுக்கு உரியதாயிற்று.

நேருவினுடைய ஒவ்வொரு நாள் பணிகளும் அதிகாலையிலேயே- குறிப்பாகச் சொல்லுவதானால் பறவைகள் சிறகு விரிக்கும் அதிகாலைப் பொழுதிலேயே துவங்கி விடும்.

அன்றைய பொழுதிற்குள் தன்னை எதிர் நோக்கியுள்ள பணிகள் யாவை— முடிக்க வேண்டிய வேலைகள் என்னென்ன— தீர்மானிக்க வேண்டிய பிரச்சினைகள் எவையெவை என்றெல்லாம் முடிவெடுப்பதே அவரது முதல் பணியாக இருக்கும்.

பிறகுதான்- மகள் இந்திரா காந்தியோடும், தமது பேரப்பிள்ளைகளான ராஜீவ், சஞ்சய் ஆகியோருடனும், காலை உணவருந்துவார். நண்பர்களும் முக்கிய விருந்தினர்களும் கூட அந்தக் காலை நேரச் சிற்றுண்டியில் கலந்து கொள்ளுவதுண்டு. மீண்டும் அவர்கள் சந்திப்பு மறுநாள் காலை உணவின் போதுதான் இருக்கும்.

அவருக்கு அந்தக் காலைச் சாப்பாடே பெரும்பாலும் முக்கியச் சாப்பாடாக அமைந்து விடும். சாப்பிடும்போதே அலுவலகப் பணி பற்றிய விசாரணைகளும் உத்தரவுகளும் அவரிடமிருந்து பிறக்கும்.

பின்னர், வெளியே உள்ள புல்வெளியில் தம்மைக் காணக் காத்திருக்கும் பார்வையாளர்களைச் சந்திக்க வந்துவிடுவார். கிராமங்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும் வந்திருக்கும் மக்களின் துன்ப துயரங்கள் கஷ்ட நஷ்டங்களையெல்லாம் மிகவும் பொறுமையோடு செவி கொடுத்துக் கேட்பார். கொடுக்கும் மனுக்களைப் பெற்றுக் கொண்டு பதில் தரும்படிக் குறிப்பெழுதுவார். உரிய அதிகாரியிடம் சேர்ப்பார். அவரைப் பார்த்து மகிழவே பல பேர் வந்து போவார்கள்.

யாராயிருந்தாலும் சரி; 'முகஸ் துதி' பண்ணும்படியாகவோ, திருப்திப்படுத்தினால் போதும் என்ற வகையிலோ அவர் பேசியதே இல்லை; நினைப்பதை வெளிப்படையாகச் சொல்லுவார்.

"மக்கள் என்ன நினைக்கிறார்கள், என்ன கருதுகிறார்கள் என்பதை நான் தெரிந்து கொள்ள வேண்டும். ஆம்; அவர்களுடைய மனதை நான் அவசியம் புரிந்து கொண்டாக வேண்டும். ஏனெனில் நான் அவர்களை இவ்வளவு ஆண்டுகளாக நேசித்து வருகிறேன்" என்று 1963-இல் அவர் ஒரு முறை தெரிவித்தார்.



அந்த வகையிலேயே அன்னாரின் பொதுமக்கள் சந்திப்பு அமையும். அதன் பிறகு அலுவலகத்திற்குச் செல்வார். அரசு அலுவல்களில் முழுக் கவனமும் செலுத்துவார்.

அவருடைய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் புரிந்துகொண்டிருக்கும் செயலாளர்களும் தட்டெழுத்தாளர்களும் அவருடன் இரவு நீண்ட நேரம்வரையில் சளைக்காமல், களைக்காமல் வேலை பார்ப்பார்கள்.

நாளொன்றுக்கு அவர் ஐந்து மணி நேரம் தூங்கினாலே பெரிய காரியம்! வேலை நாட்களில் மட்டுமல்ல; இந்த வேலை முறைகள் விடுமுறை நாட்களில் கூட விருவிருப்போடு தொடரும். அந்த அளவுக்கு அசாதாரணமான மன உறுதி பெற்றிருந்தார் அவர். செயல்படுவதில் உற்சாகத்தையும், முடிவெடுப்பதில் துணிவையும், பல தரப்பட்ட மக்களையும் பல்வேறு இடங்களையும் நேரில் கண்டறிகின்ற ஆர்வத்தையும் அவர் ஒரு போதும் இழந்ததில்லை, மனச்சோர்வுற்றுத் தளர்ந்ததில்லை.

குறித்த நேரத்தில் எதையும் செய்ய வேண்டும் என்பார் அவர்; மற்றவர்களும் அவ்வாறே இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார். மனிதர்களிடம் மட்டுமல்ல; விலங்குகளிடமும் அவர் அன்பு காட்டினார். அதிசய இமாலய பண்டாக்களுக்கும், தமது வளர்ப்பு மிருகங்களான புலிக்குட்டிகளுக்கும் தாமே நேரில் போய்த் தீனிபோடுவது அவருக்கு மிகவும் பிடிக்கும்.

நேரமிருக்கும்போது வீட்டுத் தோட்டத்தில் உலவுவதே அவருடைய பொழுதுபோக்காக இருந்தது.

"வறுமையை ஒழிக்கவும், சர்வதேச உறவுகளை வளர்க்கவும், இந்த உலகில் சமாதானத்தை நிலைநிறுத்தவும் எனக்கு இன்னும் அதிக அவகாசம் தேவை" என்று அவர் ஒரு முறை பத்திரிகையாளர் சந்திப்பில் கூறினார்.

1964-ஆம் ஆண்டு மே மாதம் 22-ந் தேதி நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில், நிருபர் ஒருவர் நேருவிடம் கேட்டார்—

"உங்களுக்குப் பிறகு யார்?"

"என் ஆயுள் அவ்வளவு சீக்கிரம் முடியப் போவதில்லை!"— என்றார் நேரு.

அந்த அளவிற்கு மன உறுதி மிக்கவராகவும், ஊக்கம் மிக்கவராகவும் இளமை முறுக்கோடு செயல்பட்டு வந்த நேரு பெருமகனார், சீனப் படையெடுப்புக்குப் பிறகுதான் தமக்கு வயதாகி விட்டதை உணர்ந்து கொண்டவரைப் போலத் தளர்வுடன் காணப்பட்டார். மனச் சோர்வுற்றார்.

குறிப்பாக- மே மாதத்தில் அவருக்கான பணிகள் ஏராளம் இருந்தன.

முதல் ஒன்பது நாட்கள் நாடாளுமன்றக் கூட்டம் இருந்தது.

காஷ்மீரப் பிரச்னையைத் தீர்ப்பது குறித்தும், பாகிஸ்தானுடன் நல்லுறவை வலுப்படுத்துவது பற்றியும் டில்லிக்கு வந்திருந்த ஷேக் முகமது அப்துல்லாவுடன் தீவிரமாகப் பேச்சு வார்த்தை நடத்த வேண்டியிருந்தது.

அதன்பின் நேபாளம் சென்று, அங்கு நடந்த பெரியதோர் பாசனத் திட்ட அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டார்.

மே மாதம் 10-ஆம் தேதி நடைபெற்ற திட்டக் கமிஷன் கூட்டத்தில் பங்கேற்றார். நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி விவாதித்து வரையறுத்தார். 14-ந் தேதி பம்பாய் சென்று காஷ்மீர்ச் சிக்கல், அயல் நாட்டுறவு பற்றிய இரண்டு கூட்டங்களில் கலந்து கொண்டு அரியதோர் உரையாற்றினார்.

22-ஆம் தேதி நடந்த பத்திரிகையாளர் கூட்டம் பற்றித்தான் மேலே பார்த்தோம். சீனா, பாகிஸ்தான், லாவோஸ், விலைவாசி, லண்டன் பயண உத்தேசம் ஆகியவை பற்றிய பல கேள்விகளுக்கும் அவர் அதில் பதில் அளித்தார்.

23-ஆம் தேதி காலையில், இரண்டு நாள் ஓய்வெடுத்துக் கொள்ளுவதற்காக டேராடூனுக்கு விமானத்தில் சென்றார். அங்கு போயும் அவர் சும்மாயிருக்கவில்லை; முக்கியக் கோப்புகளைப் பார்த்துக் கையெழுத்திட்டார். சில புத்தகங்களைப் படித்தார். ஒரு புத்தகத்திற்கு முன்னுரை எழுதி முடித்தார்.

> எல்லாப் புத்தகங்களையும்விட சிறந்த புத்தகம் இந்தப் பரந்த உலகம்தான். உலகத்தைவிட உன்னதமான புத்தகம் வேறு கிடையாது.
>
> - பேரறிஞர் அண்ணா.

நீண்ட கால நண்பரும் சகாவுமான ஸ்ரீ பிரகாசாவை அங்கே சந்தித்துப் பேசினார், நேரு. அவரது தளர்வை உணர்ந்த ஸ்ரீ பிரகாசா, வயதேறி வருவதைச் சுட்டிக் காட்டி, "வேலைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்" என்றார். அதைக் கேட்ட நேரு, கிண்டலாகச் சிரித்துக் கொண்டார். அவரைப் பெருமூச்சோடு பார்த்தார்.

மே மாதம் 26-ஆம் தேதியன்று டில்லி திரும்பிய அவர், இரவு சிறிது நேரம் படித்துக் கொண்டிருந்துவிட்டுப் படுத்தார். மறுநாள் அதிகாலை 6.20 மணிக்கு எதிர்பாராமல் அவரது உடல் நலம் கெட்டதை அறிந்த மகள் இந்திரா, பதறிப் போய் டாக்டர்களைக் கூப்பிட்டனுப்பினார். அடுத்த சிறிது நேரத்திலேயே அவர் நினைவிழந்து விட்டார்.

மத்திய அரசின் முக்கிய அமைச்சர்களுக்கெல்லாம் செய்தி தெரிவிக்கப்பட்டது. பம்பாயில் இருந்த அவருடைய சகோதரிகள் திருமதி விஜயலட்சுமி பண்டிட், திருமதி கிருஷ்ணா ஹத்தீசிங் ஆகியவர்களும் உடனடியாக வரவழைக்கப்பட்டார்கள்.

பண்டித ஜவஹர்லால் நேருவின் திடீர் உடல் நலக் குறைவு பற்றிய செய்தி, நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் தெரிவிக்கப்பட்டது. அடுத்த சிறிது நேரத்திலேயே இந்தியாவெங்கும் இச்செய்தி பரவி விட்டது.

ஆற்றலும், அனுபவமும் மிக்க டாக்டர்களெல்லாம் ஒன்று கூடி, அவருக்குற்ற நோயின் வேகத்தைத் தணிக்க- அல்லது நீக்க தம்மால் முடிந்தவரை போராடினர். தான் பிறந்த இந்திய மண்ணுக்கு இணையற்ற பணிபுரிந்த- முழு அன்போடு இந்த நாட்டை நேசித்து, நாட்டு மக்கள் அனைவரின் நல்லன்பையும் பெற்றுக் கொண்ட - மகாத்மா காந்தியடிகளே அடிக்கடி தன்னுடைய வாரிசு என்று பெருமையோடு குறிப்பிட்டுவந்த - சுதந்திர, ஜனநாயக, மதச்சார்பற்ற, சமாதான இந்தியாவை அவரோடு இணைந்து நின்று தியாகம் பல புரிந்து உருவாக்கிய - உண்மை, ஒழுக்கம், வீரம், விவேகம், உயரிய இலட்சியம் ஆகியவற்றோடு சுமார் அரை நூற்றாண்டுக் காலம் இந்திய நாட்டுக்கும் உலகுக்குமாக அரும்பணி பல புரிந்த மனிதருள் மாணிக்கமாம் ஜவஹர்லால் நேரு அவர்கள் 1964-ஆம் ஆண்டு மே மாதம் 27-ஆம் தேதி புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு இயற்கை எய்தி விட்டார்.

இந்திய நாட்டிற்குச் சைமன் குழு வருவதை எதிர்த்த போதும் (1928), உலகப் புகழ் பெற்ற தண்டி யாத்திரையின் போதும் (1930), ஆங்கிலப் போலீஸார் வெகுண்டெழுந்து ஜவஹரைத் தடி கொண்டு தாக்கியதுண்டு- அப்போதெல்லாம் அடிபட்ட வேங்கை போல் வெகுண்டெழுந்து அந்தத் தடியைத் தாவிப் பிடுங்கி வீசி

## அட்டைப்பட விளக்கம்

முதல் அட்டை:

மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு, மாண்புமிகு பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஸ்ரீபெரும்புதூரில் முதலாண்டு நினைவஞ்சலி செலுத்தினார்கள் (21.5.92).

நான்காம் அட்டை:

உதகை, மலைவாழ் மக்களின் நடனத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பங்கேற்றார் (17.5.92).

யெறிந்த அந்த மாவீரனின் உடல் சாய்ந்துவிட்டது.

"சுதந்திரப் போர் வீரர், நவீன இந்தியாவின் சிருஷ்டி கர்த்தா, மனிதவர்க்கத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டவர் மறைந்துவிட்டார்; இந்திய சரித்திரத்தின் ஒரு சகாப்தம் முடிந்து போய் விட்டது" - என்று இந்தியக் குடியரசுத் தலைவராயிருந்த டாக்டர் இராதாகிருஷ்ணன் கலக்கத்தோடும் கண்ணீரோடும் தெரிவித்தார்.

நேரு இல்லை என்பதையறிந்த இந்திய நாடு நிலவில்லாத வானம் போல் இருண்டு போயிற்று. ஒவ்வொரு நாட்டு வானொலியும் இந்தத் துக்கச் செய்தியை உலகம் முழுமைக்கும் தெரிவித்தது. உலகமே துக்கத்தில் ஆழ்ந்தது. துயரக் கடலில் மூழ்கியது.

இந்தியாவின் தேசியக் கொடி மட்டுமல்ல; இந்தியாவிலிருந்த அத்தனைக் கட்சிகளின் கொடிகள் மட்டும் கூட அல்ல; ஐக்கிய நாடுகள் சபையின் கொடியும் அரைக் கம்பத்திலே பறக்க விடப்பட்டது.

இந்தியாவில் பன்னிரண்டு நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

தீன்மூர்த்தி மார்க்கில் இருந்த நேருவின் இல்லத்திற்குத் தங்கள் இணையற்ற தலைவரின் முகத்தைக் கடைசியாகத் தரிசிக்க மக்கள் வெள்ளம் கரை புரண்டது. இலட்சோப இலட்சம் மக்களின் விழிகள் மட்டுமல்ல; வானமும் அன்று அழுதது— ஆம், அன்று மழை!

தற்காலிகப் பிரதம மந்திரியாகக் குல்சாரிலால் நந்தா பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

மறுநாள் வியாழக் கிழமை நண்பகல் ஒரு மணிக்குத் தலைவர் ஜவகரின் உடல் பீரங்கி வண்டியிலேற்றி, காந்தி உடல் தகனம் செய்யப்பட்ட ராஜ் கட்டத்திலிருந்து, முந்நூறு கஜ தூரத்திலிருந்த 'சாந்தி வனத்'திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஆயுதப் படையைச் சேர்ந்த அறுபது வீரர்கள் அந்த வண்டியை இழுத்துச் சென்றனர், இதயம் நொந்தவாறே!

அதையடுத்து— திருமதி இந்திரா காந்தி, அவரது இளைய புதல்வர் சஞ்சய், குடியரசுத் தலைவர் இராதா கிருஷ்ணன், நேரு பெருமகனாரின் குடும்பத்தைச் சேர்ந்த மற்ற உறுப்பினர்கள், அயல் நாட்டுப் பிரதிநிதிகள்— ஆகியோர் வரிசையாகக் காரில்.

ஆறு மைல் தூரம்- வழி நெடுகிலும் வெள்ளம் போல் மக்கள் கூட்டம். அத்தனை முகத்திலும் அன்புத் தலைவனைப் பிரிந்த வாட்டம்!

, பத்து ஏக்கர் பரப்பளவுள்ள சாந்தி வனத்தில், மேடை மீது அடுக்கப்பட்டிருந்த சந்தனக் கட்டைகளின் மேலே சந்தன வண்ண மேனிப் பண்டித நேருவின் சடலம் பக்குவமாகக் கிடத்தப்பட்டது. "பண்டிட் நேரு அமர் ஹோ!" (பண்டித நேரு அமரராகட்டும்) என்ற முழக்கம் மண்ணதிர எழுந்தது.

தலைவர் ஜவாஹரின் உடலிருந்த சிதைக்கு இளைய பேரப்பிள்ளையான சஞ்சய் தீ மூட்டினார்.

அதற்கு மறுநாள், ராம் லீலா மைதானத்தில் மாபெரும் இரங்கல் கூட்டம் நடந்தது. பல்வேறு இந்திய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் அதில் பங்கேற்று, மறைந்து போன மனிதருள் மாணிக்கத்திற்கு- ஆசிய ஜோதிக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

மே மாதம் 29-ந் தேதியன்று பார்லிமெண்ட் கூடியது. "பண்டித நேரு தம் ஆயுள் முழுதும் எவைகளுக்காகவெல்லாம் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருந்தாரோ, அந்த இலட்சியங்களாகிய உலக சமாதானம், உலக முன்னேற்றம், தேச ஒற்றுமை, தேசிய ஒருமைப்பாடு, தேசிய சுபிட்சம் ஆகியவற்றுக்காகத் தொடர்ந்து பாடுபடுவோம்" என்று அக்கூட்டத்தில் உறுதி எடுத்துக் கொள்ளப்பட்டது.

மே மாதம் 30-ந் தேதியன்று சஞ்சய்யும், அவரது சகோதரர் ராஜீவும் அஸ்திகளைச் சேகரித்தார்கள். ஜவாஹர்லால் நேரு பிறந்த இடமான அலகாபாத்தில் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகியவை கலக்கும் திரிவேணி சங்கமத்தில்- தலைவர் ஜவாஹர் தமது உயிலில் எழுதி வைத்திருந்தபடி- ஜூன் மாதம் 8-ந்தேதி சிறிதளவு அஸ்தி கரைக்கப்பட்டது. மீதி அஸ்திச் சாம்பல் அளவோடு பல்வேறு மாநிலங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு பல நதிகளில் கரைக்கப்பட்டது. ஜூன் மாதம் 12,13 தேதிகளில், பாக்கி அஸ்தி விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டு வானிலிருந்து வயல் வெளிகளிலே தூவப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில், பண்டித ஜவாஹர்லால் நேரு தம்முடைய உயிலில் என்ன எழுதி வைத்திருந்தார் என்பதைத் தெரிந்து கொள்ளுவது நல்லது.

1954-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21-ந் தேதியன்று, தலைவர் ஜவஹர் எழுதியிருந்த உயில் சாசனத்தின் சில முக்கியப் பகுதிகள் வருமாறு:

இந்திய மக்களின் அபரிமிதமான அன்பையும் பிரியத்தையும் நான் பெற்றிருக்கிறேன். நான் என்னதான் பணியாற்றினாலும் இதில் ஒரு சொற்பப் பகுதியைக் கூட என்னால் திருப்பிக் கொடுக்க முடியாது; சொல்லப் போனால் அன்பெனும் அரிய பொருளுக்குக் கைம்மாறே இருக்க முடியாது. பலர் வியந்து போற்றப்பட்டுள்ளனர்; சிலர் தொழுது வணங்கப்பட்டுள்ளனர். ஆனால் இந்திய மக்களில் சகல பிரிவினரும் என்மீது அளவற்ற அன்பைக் காட்டி வருகின்றனர். அதில்



நான் திக்குமுக்காடிப் போனவன். என் வாழ்வில் எஞ்சியிருக்கக் கூடிய ஆண்டுகளில் என் மக்களுக்கும் அவர்களுடைய அன்புக்கும் நான் அருகதையற்றவனாகி விடக்கூடாது என்ற விருப்பத்தை மாத்திரமே நான் தெரிவிக்க முடியும்.

எண்ணற்ற எனது தோழர்களுக்கும் சகாக்களுக்கும் இதைவிடவும் அதிகமாக நான் கடன்பட்டிருக்கிறேன். மாபெரும் முயற்சிகளில் நாங்கள் கூட்டாளிகளாக இருந்திருக்கிறோம்; அவைகளின் தவிர்க்க முடியாத விளைவுகளாகிய வெற்றிகளையும் துயரங்களையும் பகிர்ந்துகொண்டிருக்கிறோம்.

என்னுடைய மரணத்திற்குப் பின், எனக்காக மதச் சடங்குகள் எதையும் நடத்த வேண்டாம் என்பதை முழு அந்தரங்கச் சுத்தியுடன் குறிப்பிட விரும்புகிறேன். இத்தகைய சடங்குகளில் எனக்கு நம்பிக்கையில்லை; வெறும் ஐதீகத்திற்காகக் கூட இவற்றிற்கு உட்படுவது மோசமானதாகவும், நம்மையும் பிறரையும் ஏமாற்றுவதற்கான முயற்சியாகவுமே இருக்கும்.

நான் இறந்தபின் என்னுடைய உடலைத் தகனம் செய்து விட வேண்டும் என்று விரும்புகிறேன். அயல் நாட்டிலே நான் இறந்தால் என்னுடைய உடலை அங்கே தகனம் செய்து அஸ்தியை அலகாபாத்துக்கு அனுப்ப வேண்டும். இந்த அஸ்தியில் ஒரு சிறு கைப்பிடியளவு எடுத்து கங்கையில் போட வேண்டும்; அதில் பெரும் பகுதியைக் கீழே குறிப்பிட்டுள்ள முறையில் காலி செய்ய வேண்டும்; இந்த அஸ்தியில் சிறிதளவையும் மீதம் வைக்கவோ, சேமித்து வைக்கவோ கூடாது.

என்னுடைய அஸ்தியில் ஒரு கைப்பிடியளவை அலகாபாத் வழியாகச் செல்லுகின்ற கங்கையில் போட வேண்டும் என்று நான் விரும்புவதற்கு என்னைப் பொருத்தவரை மதரீதியான முக்கியத்துவம் எதுவும் இல்லை. இவ்விஷயத்தில் மத உணர்வு எதுவும் எனக்குக் கிடையாது. அலகாபாத் வழியாகச் செல்லும் கங்கை, யமுனை நதிகளுடன் குழந்தைப் பருவம் முதலே எனக்குப் பாசம் இருந்து வருகிறது; வயது ஆகஆக இந்தப் பாசமும் வளர்ந்து வந்திருக்கிறது. பருவகாலங்கள் மாறும் போது அவற்றின் பல்வேறு தோற்றங்களைக் கவனித்திருக்கிறேன். நீண்ட நெடுங்காலமாக அவற்றுடன் தொடர்பு கொண்டு அவற்றில் ஓடும் தண்ணீரின் சரித்திரம், புராணம், வளமுறை, பாடல், கதை ஆகியவைபற்றி நான் அடிக்கடி சிந்திப்பதுண்டு.

இயற்கை அழகு என்பது, ஆண்டவனின் புன்சிரிப்பு, இசை என்பது, அவனுடைய குரல்.

— ஜான்சன்.

குறிப்பாக, கங்கை இந்தியாவுக்கே உரிய நதி; இந்நாட்டு மக்களின் அன்புக்குரியது. இந்நாட்டின் இன நினைவுகள், நம்பிக்கைகள், அச்சங்கள், வெற்றிப் பாடல்கள், வெற்றிகள், தோல்விகள் ஆகியவை அதனுடன் பின்னிப் பிணைந்திருக்கின்றன. எப்போதும் மாறிக் கொண்டிருக்கும்; எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும். அதே சமயத்தில், எப்போதும் கங்கையாகவே இருந்து வரும் அது, இந்தியாவின் புராதனப் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் சின்னமாக விளங்குகிறது.

நான் பெரிதும் நேசித்த இமய மலையின் பனி மூடிய சிகரங்களையும், ஆழமான பள்ளத்தாக்குகளையும் அவற்றுக்குக் கீழே உள்ளவையும் எனது வாழ்க்கை, பணி ஆகியவற்றின் நிலைக் கலனுமான வளமான, விரிவான சமவெளிகளையும் கங்கை எனக்கு நினைவூட்டுகிறது. காலைக் கதிரவனின் ஒளியில் முறுவலித்து நர்த்தனமாடிக் கொண்டும்; அந்தி மயக்கத்தில் இருளும் மருளும் மர்மமும் நிறைந்ததாயும்; குளிர்காலத்தில் ஒடுக்கமான ஓடையாக மெதுவாகச் செல்லுவதும், ஏறத்தாழக் கடல் போன்ற பரப்பையும் சமுத்திரத்தின் பயங்கரத்தை ஓரளவு கொண்டதுமான கங்கையைக் கடந்த கால இந்தியாவின் சின்னமாகவும் நினைவாகவும் நான் கருதி வந்திருக்கிறேன். அந்தக் கடந்த காலம் நிகழ்காலத்திலும் பாய்ந்து வருங்காலம் என்கிற மகாசமுத்திரத்தை நோக்கி ஓடுகிறது.

கடந்தகால வளமுறைகள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றில் பெரும் பகுதியை நான் கைவிட்டு விட்ட போதிலும் இந்தியாவைக் கட்டிப் பிணைத்து வில்லங்கப்படுத்தி, அதன் மக்களைப் பிரித்து வைத்து அவர்களுள் ஏராளமானோரை ஒடுக்கி வைத்து, உடம்பு- ஆன்மா ஆகியவற்றின் சுயேச்சையான வளர்ச்சியைத் தடுக்கின்ற விலங்குகளை இந்தியா உதறி எறிய வேண்டும் என்று நான் ஆர்வம் கொண்டிருந்த போதிலும், இவைகளையெல்லாம் நான் விரும்பிய போதிலும், அந்த கடந்த காலத்துடன் உள்ள தொடர்பை அடியோடு துண்டித்துக் கொள்ள நான் விரும்பவில்லை.

நம் உடைமையாக இருந்து வருகின்ற, இருந்து வந்திருக்கின்ற அந்த மகத்தான பிதுரார்ஜிதம் குறித்து நான் பெருமிதம் கொள்கிறேன். நினைவறியாத இந்தியாவின் கடந்த காலம் முதல், சரித்திர உதய காலம் முதல், தொடர்பு அறாமல் இருந்து வரும் சங்கிலியிலே நம்மனைவரையும் போல நானும் ஒரு கண்ணி என்பதை உணர்கிறேன். அந்தச் சங்கிலியினை நான் துணிக்க மாட்டேன்; ஏனெனில் அதைக் கருவூலமாகப் போற்றுகிறேன். அதிலிருந்து ஆதர்சம் பெறுகிறேன். என்னுடைய இந்த ஆசையின் சாட்சியாகவும், இந்தியாவின் கலாச்சாரப் பிதுரார்ஜிதத்துக்குச் சமர்ப்பிக்கும் கடைசி அஞ்சலியாகவும், என்னுடைய அஸ்தியில் ஒரு கைப் பிடி அளவை அலகாபாத்தில் ஓடும் கங்கையில் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்; இந்தியாவின் கறையைக் கழுவிக் கொண்டிருக்கும் மகா சமுத்திரத்துக்கு அது அங்கிருந்து செல்லும்.

என் அஸ்தியில் பெரும் பகுதியை வேறு விதமாகக் காலி செய்ய வேண்டும்; அதை ஒரு விமானத்தில் வைத்து ஆகாயத்தில் வெகு உயரே எடுத்துச் சென்று, இந்தியாவின் குடியானவர்கள் பாடுபட்டு உழைக்கும் வயல்கள்மீது அந்த உயரத்திலிருந்து தூவ வேண்டும் என்று விரும்புகிறேன்; இதன் மூலம் அது (அஸ்தி) இந்தியாவின் மண்ணுடனும் புழுதியுடனும் ஒன்று கலந்து, வேறுபடுத்த முடியாதபடி இந்தியாவின் பாகமாகிவிடும்.

—இவ்வாறு அந்த உயிலிலே குறிப்பிட்டு எழுதியிருந்தார் ஜவஹர்.

— இல. இராசேந்திரன்

## ரயில்

ரயில்வேயில் மின்சாரம் கிடைக்காத இடங்களில் சூரிய சக்தியைப் பயன்படுத்தி சிக்னல்கள் இயக்கப் பட்டு வருகின்றன. மண்ணெண்ணெயை சிக்னல்களில் பயன்படுத்துவதால் தொழில்நுட்பப் பிரச்சினைகள் வருவதால், மண்ணெண்ணெய்க்குப் பதிலாக சூரிய சக்தி பயன்படுத்தப்படுகிறது.

சூரிய சக்தியைப் பயன்படுத்தியதால் 1991-இல் 19,050 கிலோ வாட் மின்சாரம் சேமிக்கப்பட்டது. இது 90,200 லிட்டர் மண்ணெண்ணெய்க்குச் சமம். சூரிய சக்தி மூலம் நீரைச் சூடுபடுத்தவும், நீரைத் தூய்மைப்படுத்தவும், சிக்னல்களுக்குப் பேட்டரி மூலம் சக்தியை அளிப்பதற்கும் தொழில்நுட்பப் பொருளாதார அடிப்படையில் ரயில் நிலையங்களை மின்மயமாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ரயில் பெட்டிகள் தயாரிப்பதில் பெரம்பூர் ரயில் பெட்டித்தொழிற்சாலை 1992 ஏப்ரல் மாத இலக்கினை விஞ்சியுள்ளன. இந்த மாதத்தில், பெரம்பூர் ரயில்பெட்டித்தொழிற்சாலை 91 ரயில்பெட்டிகளைத் தயாரித்துள்ளது. நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 72 தான். கபூர்தலா ரயில்பெட்டித் தொழிற்சாலை 90 ரயில்பெட்டிகளைத் தயாரித்துள்ளது. இலக்கோ 83 தான். வாரணாசி ரயில் எஞ்சின் தொழிற்சாலை, பத்து டீசல் எஞ்சின்களை உற்பத்தி செய்துள்ளது. பெங்களூரில் உள்ள சக்கரம் மற்றும் அச்சுத் தொழிற்சாலை, 5,043 சக்கரங்களைத் தயாரித்துள்ளது. 6,855 சக்கரங்களுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

## திரைப்படம்

இந்தியாவின் முதல் திரைப்படம், 'ராஜா ஹரீஷ் சந்திரா' வெளிவந்து 80 ஆண்டுகளாகிவிட்டன. 1920-களிலேயே நமது திரைப்படத்துறை, உலகில் முக்கிய இடத்தைப் பிடித்துவிட்டது.

1920-இல் பேசும் திரைப்படம் வந்தபின்னர் திரைப்படங்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. சென்ற பத்தாண்டுகளாக உலகிலேயே அதிகத் திரைப்படங்களைத் தயாரிக்கும் நாடாக இந்தியா திகழ்கிறது.

1991-இல் பதினெட்டு மொழிகளில் 910 படங்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொருநாளும், நாட்டில் உள்ள ஏறத்தாழ 13,000 திரையரங்குகளில் ஒன்றரைக் கோடி மக்கள் திரைப்படங்களை ரசிக்கிறார்கள். கேபிள் டி.வி., வீடியோ கேசட்டுகள் ஆகியவற்றுடன், தொலைக்காட்சியும் வாரத்தில் ஆறேழு திரைப்படங்களைக் காண்பிக்கிறது.

## தொலைபேசி



1990-91-ஆம் ஆண்டுக் கணக்குப்படி, நாட்டில் மொத்தம் 50.75 இலட்சம், தொலைபேசி இணைப்புகள் செயல்பாட்டில் உள்ளன. எனினும் தொலைபேசி இணைப்புக் கோரி மேலும் 19.61 இலட்சம் விண்ணப்பங்கள் காத்துக்கிடக்கின்றன.

நாட்டிலுள்ள 216 மாநகரங்களுக்கும், 3,029 நகரங்களுக்கும் தொலைபேசி வசதி அளிக்கப்பட்டு உள்ளது. மொத்தமுள்ள 5,75,495 கிராமங்களில், 26,952 கிராமங்களில் டிரங்கால் செய்யக்கூடிய பொதுத் தொலைபேசி வசதி உள்ளது. 15,091 தொலைபேசி இணைப்பகங்கள் நாட்டில் செயல்படுகின்றன.

பொதுமக்கள் வசதி கருதி, 1990-91-ஆம் ஆண்டில் மட்டுமே 11,236 உள்ளூர்ப் பொதுத் தொலைபேசி இணைப்புகளும், 1,217 வெளியூர் பொதுத் தொலைபேசி இணைப்புகளும், 192 எஸ்.டி.டி. பொதுத் தொலைபேசி இணைப்புகளும் நாடு முழுவதும் நிறுவப்பட்டு உள்ளன.

## சுற்றுலா



கடந்த ஆண்டில் வெளிநாடுகளிலிருந்து 17,79,849 சுற்றுலாப் பயணிகள் இந்தியா வந்துள்ளனர். இதன் மூலம் ரூ.3,317 கோடி அன்னியச் செலாவணி கிடைத்துள்ளது. இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான், ஆஸ்திரேலியா, கனடா, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, இத்தாலி, சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, பாகிஸ்தான், வங்க தேசம் ஆகிய நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் இந்தியா வந்துள்ளனர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568936, 568937

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.




தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23


ஓராண்டுச் சாதனைகள்

சிறப்பு மலர்

# தமிழரசு


16.6.1992 & 1.7.1992 விலை: ரூ. 2



ஆணையர்,
தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
16 ஜூலை 1992
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்,
சென்னை - 600





335/6

## விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்



கதர் பருத்தி ரகங்கள்
ஆயத்த ஆடைகள்
கதர் பாலியஸ்டர்
பாப்டா
மற்றும் உல்லன்

காதிகிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108.




# தமிழ்நாடு அரசின் ஓராண்டுச் சாதனைகளை விளக்கும் சிறப்புக் கட்டுரைகள் - செய்திகள்...

### 23-வது ஆண்டில் தமிழரசு

'தமிழரசு 23-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. அரசின் அறிவிப்புகள், ஆக்கப்பணிகள், சாதனைகள் குறித்த செய்திகள், தமிழ்ச் சான்றோர்கள், தேசத் தலைவர்கள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள், அறிவியல் புதுமைகள், கவிதை மாலைகள், மாணவர்க்குரிய கட்டுரை, கவிதைகள் என இப்படிப் பல்வேறு பயனுள்ள எழுத்தோவியங்களை வழங்கித் தொண்டாற்றி வருகிறது 'தமிழரசு'.

அரசின் சார்பில் நடத்தப் பெறும் ஏடு என்ற போதிலும், பொதுமக்கள் விரும்பிப் படிக்கும் பொலிவு மிக்க ஏடாக தமிழரசு விளங்கி வருகிறது.

'தமிழரசு' இதழுக்கு, தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் வாசகர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், முகவர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எங்களது மனம் கனிந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகிறோம்.

—ஆசிரியர்


தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2023
ஆனித் திங்கள் - 17
மலர்:23 இதழ்:1
16-6-1992 இதழும், 1.7.1992 இதழும் இணைந்தது.

# உங்கள் நம்பிக்கை வீண் போகாது!



தமிழகத்தில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும், மிகப்பெரிய இமாலய வெற்றியை வாக்காளப் பெருமக்கள் எங்கள் மீது பெரும் நம்பிக்கை வைத்து எங்கள் அரசுக்கு வழங்கியுள்ள நிலையில், அனைத்துத் தொகுதிகளையுமே எனது சொந்தத் தொகுதிகளாகக் கருதி நான் பணியாற்றுவதுதான் - இன்றைய காலகட்டத்தில், என்மீது அளவு கடந்த நம்பிக்கை வைத்துள்ள தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் - அனைத்துத் தொகுதி மக்களுக்கும் நான் செலுத்தும் நன்றிக் காணிக்கையாகும்.

வினை விதைத்தவர்கள் இன்று வினையை அறுவடை செய்து கொண்டுள்ளனர்; நாம் தினை விதைத்தோம்; எனவே, அதை நாட்டு மக்களுக்கான நல்ல திட்டங்களாக அறுவடை செய்து படைத்துக் கொண்டிருக்கிறோம்.

என்னை முதலமைச்சராக நம்பி ஏற்றுக் கொண்டீர்களே - உங்கள் நம்பிக்கை வீண் போகவில்லை என்பதை விளக்கவே இப்போது இவற்றை நான் குறிப்பிடுகின்றேன்.

—மாண்புமிகு முதல்வர்
புரட்சித்தலைவி டாக்டர்
ஜெ. ஜெயலலிதா

*(21.8.1991 அன்று பர்கூர் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து)*





"தொழில் வளர்ச்சியில் தமிழகம் வியத்தகு முன்னேற்றம் கண்டு வருகிறது. தொழில் துறையில் பெண்களுக்கு முன்னுரிமை, பாதிக்கப்படும் தொழிலாளர்களின் நலனுக்காக மறுவாழ்வு நிதி, சிறு தொழில் முன்னேற்றம் முதலான தொழில் வளத்துக்குத் தொழில் துறை தொடர்ந்து தக்க உதவிகளை - சலுகைகளை வழங்கி வருகிறது."

# தமிழகத்தின் தொழில் கொள்கை

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குத் தொழில் வளர்ச்சியே முக்கியமாகும். இதனை உணர்ந்து பாரதியார், ''உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்று பாடியுள்ளார்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் தொழில் வளர்ச்சியில் பின் அடைந்து இருந்த நிலையை மாற்றி அமைத்து அகில இந்திய அளவில் தொழில் வளர்ச்சியில் தமிழகம் முன்னணியில் திகழ வேண்டுமென்ற குறிக்கோளை அடைவதற்கு, தொழில் முன்னேற்றத்தை முன் உரிமையோடும், வேகத்தோடும் தூண்டுகிற வகையில் சில சிறப்பு நடவடிக்கைகளைத் தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது.

எந்த ஒரு தொழில் வளர்ச்சிக்கும் அடிப்படை ஆதாரங்களாகிய நிலம், நீர், மின்சாரம் ஆகிய இம்மூன்றும் தங்குதடையின்றிக் கிடைக்க ஏற்பாடு செய்து தரவேண்டும். இதனைக் கருத்திற்கொண்டு தான் இந்த அரசு பொறுப்பு ஏற்றவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4.7.91 அன்று தொழிலதிபர்களின் கூட்டத்தைக் கூட்டி அவர்கள் பிரச்சினைகளையும் கருத்துக்களையும் கேட்டு அறிந்தார்கள். அவர்கள் தெரிவித்த கருத்துக்கள், ஆலோசனைகள் ஆகியவற்றின் அடிப்படையில் 20.1.92 அன்று தமிழகத்தின் வரலாற்றிலேயே முதன்முதலாகப் புதிய தொழில் கொள்கையை நாட்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள்.

இப்புதிய தொழில் கொள்கை, அடிப்படை வசதி மேம்பாடுகள், முதலீடு மேம்பாடுகள், ஊக்கச் சலுகைகள், வரிச் சலுகைகள், சிறு தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்பு உள்ள பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த

அணுகுமுறை ஆகும். தொழில்கொள்கையைச் செயல்படுத்த இந்த அரசு தேவையான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

ஏற்கெனவே அமைந்துள்ள தொழில் பகுதிகள், தொழில் வளாகங்கள், தொழில் பேட்டைகள் ஆகியவற்றிற்குத் தேவையான அடிப்படை வசதிகளை அமைத்துத் தருவதற்குத் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (Tamil Nadu Corporation for Infrastructural Development - TACID) நிறுவப்பட்டு செயலாற்றி வருகிறது. இக்கழகத்திற்கு அரசின் பங்குத் தொகை மூலதனமாக ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இம்மாநிலத்திற்கு உள்ளும், வெளியிலும் தொழில் முனைவோரைக் கண்டறிந்து அவர்களுக்கு ஊக்கமும், ஆலோசனைகள் வழங்கவும், தொழில் தொடங்கத் தேவையான பல்வேறு அரசுத் துறைகளின் அனுமதியினைப் பெற்றுத் தரவும், உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்ய உதவும் வகையில் தொழில் ஆலோசனை நல்கவும் தமிழ்நாடு தொழில் ஆலோசனை மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவு (Industrial Guidance and Export Promotion Bureau) விரைவில் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மிகப் பெருந்தொழில்கள் அமைவதனை ஊக்குவிக்கும் வகையில் எவ்வித நிபந்தனையும் இன்றி இவ்வரசு கீழ்க்கண்ட சலுகைகளை, இடம் பற்றிய நிபந்தனையின்றி அறிமுகப் படுத்த உள்ளது.

ரூபாய் 200 கோடிக்கு மேல் உள்ள முதலீடுகளுக்கு மானியத் தொகையாக ரூபாய் ஒரு கோடியும், வரிச்சலுகை/தள்ளிவைப்பு/விற்பனை வரி/ஒத்திவைப்பு ஆகியவற்றில் 6 ஆண்டுகள் தள்ளுபடி/12 ஆண்டுகள் ஒத்திவைப்பு.

ரூபாய் 300 கோடிக்கு மேல் உள்ள முதலீடுகளுக்கு மானியத் தொகையாக ரூபாய் ஒரு கோடியும், வரிச்சலுகை/தள்ளிவைப்பு/விற்பனைவரி/ஒத்திவைப்பு ஆகியவற்றில் 7 ஆண்டுகள் தள்ளுபடி/14 ஆண்டுகள் ஒத்திவைப்பு.

தொழில் துறையில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இவ்வரசு தொழில் துறையில் மொத்த எண்ணிக்கையில் 30 விழுக்காடுகளுக்கு மேல் மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் புதிய தொழில்களுக்குக் கூடுதல் சலுகையாக முதலீட்டில் 5 விழுக்காடுகளும், உச்ச அளவாக ரூ.5 இலட்சமும் சிறப்பு மானியம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மற்றும் எல்லாத் தொழில் பேட்டைகளிலும் தொழில் வளாகங்களிலும் உள்ள தொழில் கூடங்களில் முக்கிய தொழில் முனைவோருக்கு 30 விழுக்காடு தொழில் கூடங்களுக்கு அரசு மனைகள் ஒதுக்கப்படுகின்றன. இவ்வாண்டு 800 மகளிருக்குத் தொழில் முனைவோருக்கான சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.



தனியார் துறையில் புதிய தொழில்கள் தொடங்க முன்வரும் நிறுவனங்களுக்கு ஆலோசனைகள் மற்றும் உதவிகளையும் நல்கும் வகையில் டிட்கோ மற்றும் எல்காட் நிறுவனங்களில் 'வழிகாட்டும் சேவை' துறை என்ற (Escort Sector Project) புதிய பிரிவும் உருவாக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்யும் பொருட்டு அவர்களை ஈர்ப்பதற்குப் புதுடில்லியில் உள்ள தமிழக அரசின் ஆணையர் (Resident Commissioner) தலைமையில் வெளிநாட்டு ஊக்குவிப்பு ஒருங்கிணைப்புப் பிரிவு (Foreign Investment Promotion Corporation)ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நலிவுற்ற தொழில் பிரிவுகளைச் சீர் அமைத்து நவீனப்படுத்தும்போது, பாதிக்கப்படும் தொழிலாளர்களின் நலனுக்காக மறுவாழ்வு நிதி (Labour Rehabilitation Fund) என்ற புதிய திட்டம் நமது மாநிலத்தில் முதன்முதலாகக் கொண்டு வரப் பட்டுள்ளது.

நிலக்கோட்டை வட்டத்தில், வேளாண் தொழில் வளாகத்தை அமைத்திடத் தேவையான 413.35 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தர்மபுரியில் பர்கூரிலும், திருநெல்வேலியில் கங்கைகொண்டானிலும், பெரியார் மாவட்டத்தில் பெருந்துறையிலும், காயிதே மில்லத் மாவட்டத்தில் பனங்குடியிலும், ஒவ்வொன்றும் சுமார் ரூ.20 கோடி முதல் ரூ.30 கோடி செலவில் 4 புதிய தொழில் வளர்ச்சி மையங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

வேதாரண்யம் உப்புத் தொழிற்சாலையில் உற்பத்தி ஆகும் உப்பைப் பயன்படுத்தி காஸ்டிக் சோடா தயாரிக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கூட்டுத்துறை நிறுவனமாகிய தமிழ்நாடு பெட்ரோ ப்ரார்டக்ட்ஸ் என்ற நிறுவனம் மத்திய அரசின் இசைவுக் கடிதம் பெற்று, மேற்படி தொழிற்சாலையை விரைவில் அமைக்கவுள்ளது.

இவ்வரசு எடுத்த தீவிர முயற்சியின் காரணமாக, 3½ ஆண்டுகளாக மூடிக்கிடந்த ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் நிறுவனம், இவ்வாண்டு பிப்ரவரி திங்கள் 3-ஆம் நாள் திறக்கப் பட்டுச் செயல்பட்டு வருகிறது. இவ்வாலை திறப்பதற்கு 3 கோடி ரூபாயை அரசு குறைந்த வட்டியில் கடனாகக் கொடுத்துள்ளது. மேலும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கூட்டுத் துறை நிறுவனமாகிய, தமிழ்நாடு பெட்ரோ ப்ராடக்ட்ஸ் நிறுவனம் ரூ.6.03 கோடியைப் பங்கு மூலதனமாக முதலீடு செய்ய அரசு அனுமதித்துள்ளது. இதன் காரணமாக 2,000 தொழிலாளர்கள் மீண்டும் வேலைவாய்ப்பு பெற்றுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள மின்னணுத் தொழிற்சாலைகளை உலகளவில் பெருமையடையச் செய்ய அரசு ஆவன செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக ஒருங்கிணைந்த சுற்றுகள் (Integrated circuits) தயாரிக்கும் ஒரு தொழிற்சாலை ஒன்றினை ரூ.300 கோடி அளவில் கூட்டுத் துறையில் அமைக்க எல்காட் உத்தேசித்துள்ளது.

இவ்வரசு எடுத்த தீவிர முயற்சியின் காரணமாக, நீண்ட நாளாக ஆவலுடன் எதிர்பார்த்த சென்னை மணலி அரோமாடிக்ஸ் (NAPCO) நிறுவனத்தில், பெட்ரோலிய, இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்யும் அரோமாடிக்ஸ் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனம் ஒன்று அமைக்கத் தேவையான மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுள்ளது.

இதற்காக 1655 ஏக்கர் நிலம் கையகப்படுத்த உள்ளது. இத்திட்டம் ரூ.1,380 கோடியில் செயல் படுத்தப்படவுள்ளது. இதன் மூலம் சுமார் 20,000 பேர்கள் வேலைவாய்ப்பு பெறக்கூடும்.

அரசு அவ்வப்போது அறிவிக்கும் சலுகைகள் பல்வேறு பெரிய நடுத்தர மற்றும் சிறிய தொழில்களுக்குக் கிடைப்பதற்காகத் தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகள் என்று தமிழகத்தில் சில பகுதிகள் அறிவிக்கப்பட்டு இருந்தன. பின்தங்கிய பகுதிகளுக்கென அரசு அவ்வப்போது அறிவிக்கும் சலுகைகள் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில், மற்றும் சிறிய தொழில்களுக்குக் கிடைப்பதற்கு வசதியாக மேலும் சில பகுதிகளைப் பின்தங்கிய பகுதிகளென அரசு அறிவித்துள்ளது. மேலும், கீழ்க்கண்ட சில பகுதிகளைப் பின் தங்கிய பகுதிகளாக அறிவித்துள்ளது.

| | | |
|---|---|---|
| கோயம்புத்தூர் | - | அவினாசி |
| காமராசர் | - | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| சேலம் | - | இராசிபுரம் |
| புதுக்கோட்டை | - | புதுக்கோட்டை |
| சிதம்பரனார் | - | சாத்தான்குளம் |
| திருநெல்வேலி-கட்டபொம்மன் | - | பாளையங்கோட்டை |

மின்சக்தியில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையைப் போக்குவதற்காக மத்திய அரசு அறிவித்துள்ள புதிய தொழில் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, இவ்வரசும் தொழில் துறையில் திருவாளர் மக்னெல்லி பாரத் இன்ஜினியரிங் கம்பெனி (Mcnally Bharath Engineering Company Limited) என்ற நிறுவனத்துடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமாக TIDCO-வைக் கூட்டு முனைவோர்களாக நியமித்து அரசு அங்கீகரித்துள்ளது. இத்திட்டம் ரூ.7,000 கோடி முதலீட்டில் தொடங்கப்படும்.

தொழில் முனைவோர், புதிய தொழில் நுட்ப உத்திகளைக் கொண்டும், மேல் நாடுகளில் கடைப் பிடிக்கும் முறைகளைக் கொண்டும் முன்னோடித் திட்டங்கள் உருவாக்குவதற்காகத் தொழில் நுட்ப உத்தி மூலதன (Venture Capital Fund) நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி வழங்கப்பட்டுள்ளது.

சிறு தொழில்கள் முன்னேற்றத்திற்கு இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சிறு தொழில்களைப் பதிவு செய்யும் முறையை எளிதாக்கவும், மாவட்டத் தொழில் மையங்களில் பெறப்படும் விண்ணப்பங்களை விரைவில் தீர்வு செய்ய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்வரும் 5 ஆண்டுகளில் தமிழகத்தில் ஒரு இலட்சம் சிறு தொழில்கள் தொடங்குவதற்குத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போதுள்ள சிறு தொழில்கள் மற்றும் வேறு வகைப்படும் தொழில்களுக்கும் கீழ்க்கண்ட விகிதத்தில் குறைந்த அழுத்த மின்சாரம் வழங்குவதற்கு மானியத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது.

1. முதல் ஆண்டு சிறு தொழில் பிரிவு உபயோகித்த மொத்த மின் கட்டணத்தில் 40 சதவீதம்.

2. 2-வது ஆண்டு சிறு தொழில் பிரிவு உபயோகித்த மொத்த மின் கட்டணத்தில் 30 சதவீதம்

3. 3-வது ஆண்டு சிறு தொழில் பிரிவு உபயோகித்த மொத்த மின் கட்டணத்தில் 20 சதவீதம்.

சிறு தொழில் பிரிவிலும் வளர்ச்சி வேகத்தை அதிகரிக்க முதலீட்டுத்தொகைக்கான மானியத்தை வழங்கத் திட்டங்கள் தீட்டி, ஒவ்வொரு நிலையிலும் வழங்க அரசு எண்ணியுள்ளது.

இவ்வாறு இந்த அரசு பொறுப்பு ஏற்றபின், தொழில் வளர்ச்சியில் வியத்தகு முன்னேற்றம் காண முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்துறையில் தனிக் கவனம் செலுத்தி, தமிழகத்தைத் தொழில் துறையில், இந்தியாவில் ஒரு முன்னணி மாநிலமாக்க எல்லா வகையிலும் செயலாற்றி வருகிறார்கள். குறிப்பாகத் தமிழகத்தில் எந்தப் பகுதியிலும் தொழில் தொடங்க முனைவோர்களுக்கு, இவ்வரசு எல்லா ஒத்துழைப்பும் நல்கி, அனைத்து உதவிகளும் செய்ய முன்வந்துள்ளது.



# நிதி நெருக்கடியிலும் நிலையான பணிகள்



**"கடுமையான நிதிநிலை நெருக்கடியிலும், தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு, முன்னேற்றப் பணிகளைச் செயல்படுத்துவதில் மிகவும் சிறந்த வகையில் செயல்பட்டு உள்ளது."**

அரசு கடுமையான நிதி நெருக்கடியில் இருந்த தருணத்தில், புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா தலைமையிலான புதிய அரசு பொறுப்பேற்றது.

ரூ.1600 கோடி மதிப்புள்ள திட்டத்திற்கான பற்றாக்குறை ரூ.898 கோடியாகவிருந்தது. ஏழை மக்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்காகத் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்றவுடன் முதல் நடவடிக்கையாக, நாட்டு மதுவை ஒழித்து, மதுவிலக்குக் கொள்கை அமல்படுத்தப்பட்டது. இதன் விளைவாக வருமான இழப்பீடு ரூ.322 கோடியாகும். ரூ.1600 கோடி திட்டத்தை ஒப்புநோக்கில், ரூ.1220 கோடி பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு இயலாத நிலையில் அரசு இருந்தது.

அரசு நிதி நிலையைச் சீர்படுத்துவதற்காகத் தேவையான நடவடிக்கைகள் எடுத்தது. எடுக்கப் பட்ட நடவடிக்கைகள், பஸ் கட்டண உயர்வானாலும், அல்லது மின் கட்டணச் சீரமைப்பானாலும் ஏழை மக்கள் பாதிக்கப்படாதவண்ணம் கவனமாகச் சரிசெய்யப்பட்டது. ஏழை மக்களின் நலனைப் பாதுகாக்கவே அரசு நிதி நிலையை மேம்படுத்த எல்லா நடவடிக்கைகளை எடுத்தது. நிர்ணயிக்கப்பட்ட விலையில் அத்தியாவசியப் பண்டங்கள் ஏழை மக்களுக்குக் கிடைப்பதற்காக அரசு சிறப்பு நடவடிக்கைகள் எடுத்தது.

இந்த நாட்டில் தமிழ்நாட்டில்தான் பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசியின் விலை குறைவாக இருப்பது என்பது தமிழகத்திற்குப் பெருமை சேர்ப்பதாகும். மையத் தொகுப்பின் விலை அதிகரிப்பு காரணமாக விலையினைத் திருத்துவதற்கான அவசியத்தில் இருந்தபொழுதிலும், அரசு ஏழைகளின் தேவைகளுக்கு மதிப்பளித்து அரிசியின் விலையை நாட்டிலேயே குறைவாக இருக்கும்படி சரிசெய்யப்பட்டு வருகிறது. இவ்வாறாக, அரசின் நிதி ஆதாரங்களைப் பெருக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேசமயத்தில் அரசு எப்போதும் ஏழைகள் பாதுகாப்பில் கவனம் செலுத்தி வருகிறது.

கடுமையான நிதிநிலை நெருக்கடியிலும், தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு முன்னேற்றப் பணிகளைச் செயல்படுத்துவதில் மிகவும் சிறந்த வகையில் செயல்பட்டு உள்ளது.

நிதி நெருக்கடி காரணமாக, 1991-92-ஆம் ஆண்டிற்காக ரூ.1600 கோடி திட்டத்தை நிறைவேற்ற இயலாது என்ற காரணத்தால் மைய திட்டக்குழு 1992-93 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடாக ரூ.1460 கோடியாகக் குறைக்க வற்புறுத்தியபொழுது, முதலமைச்சர் தமிழ்நாட்டிற்கு இது ஏற்புடைத்தல்ல. என்றும், 1991-92 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீட்டு முழுவதையும் நிறைவேற்றும் என்று உறுதி செய்ததோடல்லாமல், 1992-93 ஆம் ஆண்டிற்கான உயர்ந்தத் திட்ட மதிப்பீடாக ரூ.1751 கோடி கோரினார்.

1991-92 ஆண்டிற்கான ஆண்டு ஒதுக்கீடு முழுமையாக நிறைவேற்றியது என்பது பெருமைக்குரிய விஷயமாகும். அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடான ரூ.1600 கோடி திட்டத்திற்கெதிராக ரூ.1650 கோடி திட்டச்செலவாகச் செலவிடப் பட்டது. 1992-93 ஆம் ஆண்டிற்கான ரூ.1751 கோடி ஆண்டுத் திட்டத்தை மையத் திட்டக்குழு ஏற்பளிப்பதில் முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வெற்றி கண்டுள்ளார்.



**மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், ஒரு சிறுவனின் இருதய அறுவைச் சிகிச்சைக்காக 1.6.92 அன்று தலைமைச் செயலகத்தில் நிதியுதவி வழங்கினார்.**

முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டின் முன்னேற்றத் திட்டங்களைப் பாதுகாக்க சிறப்பு நடவடிக்கைகள் எடுத்தார். மையத் திட்டக் குழுவினருடன் 1992 ஏப்ரல் மாதம் நடந்த விரிவான விவாதத்தினைத் தொடர்ந்து தமிழகத்திற்கு முதன்மையாகக் குறிப்பிட்ட திட்ட ஒதுக்கீடான ரூ.6500

1992-97 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள் தயாரிக்கும் தருணத்தில் மையத் திட்டக்குழு நிதி ஆதாரங்கள் ரூ.6500 கோடி திட்ட ஒதுக்கீட்டை அனுமதிக்கும் அளவிற்கு இருக்க வேண்டும் என தெரிவித்தது.

கோடியில் இருந்து உயர்வு ஒதுக்கீடான ரூ.10,200 கோடிக்கான திட்ட மதிப்பீடு பெறமுடிந்தது.

எட்டாவது ஆண்டுத்திட்ட மதிப்பீடு கணிசமாக உயர்த்தப்பட்டதைத் தமிழ்நாட்டு மக்களின் நலம் நாடும் அனைவராலும் வரவேற்கப்பட்டது. எல்லாத் திட்டங்களையும் சரியாக நிறைவேற்றுவதற்காக அரசு அதிக அளவில் உறுதி கொண்டு உள்ளது. முன்னேற்றப்பணிகளுக்கு நிதி வசதிகள் செய்து தரப்பட்டன. அரசு மிகக் கடுமையான காலகட்டத்தைக் கடந்து கொண்டிருந்தாலும், செலவினங்களில் தொய்வு ஏற்படாதவாறு கவனித்துக்கொண்டது.

அரசின் முன்னேற்றப்பணிகளுக்கு முத்தாய்ப்பு வைத்தாற்போல் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் முதல் நிலை அரசுக்குத் தரப்பட்டுள்ளது. பல்வேறு துறைகளின் முயற்சியினாலும், இந்தத்திட்டங்களை நிறைவேற்றுவதற்குக் குறித்த காலத்தில் நிதி வசதி அளித்ததனாலும் இது சாத்தியமாயிற்று. வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களை நிறைவேற்றுவதில் அரசு நல்ல முறையில் செயல்பட்டது.

மைய அரசால் நிர்ணயிக்கப்பட்ட ரூ.195 கோடி என்ற அளவைக்காட்டிலும் ரூ.240 கோடி கூடுதல் மைய உதவியாக அரசு பெற்றது. நிதி நெருக்கடி இருந்தபோதிலும், திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதில் அரசின் சாதனை நிச்சயமாக வரவேற்கப்படவேண்டியது.

## இலாபத் தொழில்

***கலங்கிய நீரில் மீன் பிடிப்பது கலபம்தான். ஆனால் அதைவிடச் சுலபம், தேங்கிய நீரில் மீன் வளர்ப்பது! இலாபமும் கூட. ஒரு எக்டேர் பரப்பளவு நீரில் ஆண்டுக்கு 15 டன் மீன் பிடிக்கலாம் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.***

***மத்திய உயிரியல் நுட்பத் துறையின் ஆதரவில் இத்தகைய திட்டமொன்று சென்னைப் பல்கலைக் கழகத்தில் வெற்றிகரமாகச் செயலாக்கம் பெற்றுள்ளது.***

***சிறிய, மிகச் சிறிய விவசாயிகள், வியாபார ரீதியில் எக்டேர் ஒன்றில் ஆண்டுக்கு ஐந்து முதல் பதினைந்து டன் கார்ப் மீனை அறுவடை செய்வதற்கான தொழில் நுட்பத் திட்டங்கள் உருவாகி வருகின்றன.***






★ **இந்தியாவிலேயே, தன்னிறைவுத் திட்டங்களை மிகச் சிறப்பாக நிறைவேற்றியுள்ள மாநிலம் தமிழ்நாடு அரசு தான் என்று மத்திய அரசே பாராட்டியுள்ளது.**



# காவல்துறையின் சாதனைகள்

**"இந்தியாவிலேயே தமிழகக் காவல் துறையானது நிகரற்றதெனப் போற்றப் படுவதாகும்; மாண்புமிகு முதல்வர் அவர்களின் பொறுப்பில் உள்ள அத் துறைச் சாதனைகள் இங்கே அணிவகுக் கின்றன:"**

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின், அரசின் எல்லாத் துறைப் பணிகளும் செம்மையாக முடுக்கி விடப்பட்டன.

குறிப்பாக உள்துறையின் பணி சிறப்புறத் தொடர்கிறது.

கடந்த காலத்தில் காவல்துறை, தீயணைப்புத்துறை, சிறைத் துறை போன்ற சீருடைப் பணியாளர்கள் பணியாற்றுகின்ற துறைகளில், சார்நிலைப் பணிகளுக்கான பணியாளர்கள், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் தெரிவு செய்யப்பட்டு வந்தனர்.

இத்துறைகளுக்கான / சார்நிலைப் பணியாளர் தேர்வினைச் சீரான முறையில் நடத்திடவும், அவ்வப்போது தற்காலிக அடிப்படையில் நடைபெறும் தேர்வுகளைத் தடுத்திடவும் வேண்டி, தமிழ்நாடு சீருடைப் பணிகளுக்கான தேர்வு வாரியம் ஒன்றினைத் தமிழக அரசு நிறுவியுள்ளது. இக்குழு தற்சமயம் காவல் துறையில் இரண்டாம் நிலைக் காவலர் பணிக்கு ஆட்களைத் தெரிவு செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது; விரைவில் பிற சார்நிலைப் பணிகளுக்கான ஆட்களைத் தெரிவு செய்யும் பணியை இந்த வாரியம் மேற்கொள்ளும்.

**காவலர்களுக்கு உணவுப் படி**

பாதுகாப்புப் பணிக்கு அனுப்பப்படும் காவலர்களுக்கு, இதுவரையில் காவலருக்கும் தலைமைக் காவலருக்கும் ரூ.6 மட்டுமே ஒரு நாள் உணவுப்படியாக அளிக்கப்பட்டது. ஆய்வாளரும், உதவி ஆய்வாளரும் ரூ.7.50 இவ்வகையில்

பெற்றனர்.

24.9.91 அன்று சட்டமன்றப் பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றும் பொழுது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவலர்க்கு வழங்கப்படும் உணவுப் படி உயர்த்தப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, அரசு ஆணை (நிலை) எண். 456, உள்துறை, நாள் 17.3.92-இல் பாதுகாப்புப் பணிகளுக்கு அனுப்பப்படும் காவலர்க்கு கீழ்க்கண்டவாறு உணவுப் படியினை உயர்த்தி, அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

அதன்படி, இரண்டாம் நிலைக் காவலருக்கும், லான்ஸ் நாயக்குக்கும் நாளொன்றுக்கான படி ரூ.16-ம், தலைமைக் காவலருக்கும், முதனிலைக் காவலருக்கும் ரூ.20-ம், உதவி ஆய்வாளருக்கும், ஆய்வாளருக்கும் ரூ.30-ம் வழங்கப்பட்டு வருகிறது.

**காவல்துறை அலுவலர்க்குக் கருவிக் கலன்கள் பெட்டிப் படி**

காவல்துறை அலுவலர்களுக்கு 16.3.1992-க்கு முன்னர் வரை மாதாந்திரக் கருவிக் கலன் பெட்டிப் படி ('கிட்' படி) பின்வருமாறு வழங்கப்பட்டு வந்தது.

| | |
|---|---|
| துணைக் காவல் கண்காணிப்பாளர் | ரூ.30 |
| உதவி ஆய்வாளர்/ஆய்வாளர் | ரூ.20 |
| தலைமைக் காவலர் | ரூ.15 |

24.9.91 அன்று சட்டமன்றப் பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல்துறை அலுவலர்க்குக் கருவிக் கலன்கள் பெட்டிப் படி ('கிட் படி') உயர்த்தப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து அரசு ஆணை (நிலை) எண்.458, உள்துறை, நாள் 17.3.92-இல் காவல்துறை அலுவலர்க்குக் கீழ்க்கண்டவாறு கருவிக் கலன்கள் பெட்டிப் படியை ('கிட் படி') உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

1. காவலர்/தலைமைக் காவலர்/லான்ஸ் நாயக்/நாயக் ஹவில்தார் ரூ.25

2. உதவி ஆய்வாளர்/ஆய்வாளர் ரூ.30

3. துணைக் காவல் கண்காணிப்பாளர்/கூடுதல் காவல் கண்காணிப்பாளர்/மற்றும் காவல் கண்காணிப்பாளர் (இந்தியக் காவல் பணி அந்தஸ்து சாராத) தளவாய்கள் (இந்தியக் காவல் பணி சாராத) துணைத் தள வாய்கள்/உதவித் தளவாய்கள். ரூ.40



**சீருடைப் படி**

காவ்லதுறை அலுவலர்களுக்கு (இந்திய காவல் பணி அந்தஸ்து பெறாத காவல்துறை கண்காணிப்பாளர் முதல் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் வரை) சீருடைப் படி கீழ்க்கண்ட விகிதத்தில் அளிக்கப்பட்டு வந்தது

ஆரம்பக்காலச் சீருடை மானியம் ரூ.750

சீருடை மானியம் புதுப்பிக்கப்படும் போது (ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது.) ரூ.250

24.9.91 அன்று சட்டமன்றப் பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல்துறை அலுவலர்களுக்குச் சீருடைப் படி உயர்த்தப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, அரசு ஆணை (நிலை) எண். 457, உள்துறை, நாள் 17.3.92-இல், காவல்துறை அலுவலர்களுக்குக் கீழ்க்கண்டவாறு சீருடைப் படியை உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

ஆரம்ப காலச் சீருடை மானியம் ரூ.1,500

சீருடை மானியம் புதுப்பிக்கப்படும் போது (ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை) ரூ.500



**காவல்துறையை நவீனப்படுத்துதல்**

இலங்கைத் தீவிரவாதிகள்/பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல்களைத் தொடர்ந்தும் தமிழ்நாட்டில் அவர்களின் பயங்கரவாத நடவடிக்கைகளை எதிர்த்து அடக்குவதற்காகவும் திட்டங்கள் வகுப்பதற்கான விரிவான செயற்குறிப்பிற்கு சிறப்பு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, ஆயுதங்கள், வெடி மருந்துகள், விரைவில் செல்லுதல், அதிரடிப்படைப் பயிற்சி, கூடுதலான படைப் பிரிவுகள், வெடிகுண்டைச் செயலிழக்கச் செய்யும் பயிற்சி - சாதனம், பாதுகாப்புச் சாதனம், மேம்படுத்தப்பட்ட தொலைத் தொடர்புச் செய்தி - பயிற்சி ஆகியவைகளில் மாநிலக் காவல்துறையை வலுப்படுத்துவதற்கான ரூ.80.450 கோடி செலவாகும் விரிவான செயற்குறிப்பு ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. மத்திய அரசும் இதற்கான தொடக்க உதவித் தொகையாக ரூ.10 கோடி வழங்கியுள்ளது. இந்தத் தொகையை மாநிலக் காவல்துறையை நவீனப்படுத்துவதற்காக 100 டெம்போ டிரேக்ஸ் (Tempo Trax), வெடிகுண்டைச் செயலிழக்கச் செய்யும் (Ammunition Bomb Disposal) படைத் தளவாடம், நுண் அலை இலக்க அமைப்பு (Micro Wave Digital) போன்ற சாதனங்கள் வாங்குவதற்குத் தமிழக அரசு பயன்படுத்தியது. மேலும், 123 டெம்போ டிரேக்ஸ்களையும், 269 மீயுயர் மின் அலைப்பெட்டிகளையும் (VHF Sets) வாங்குவதற்காக முறையே ரூ.339.85 இலட்சம், (ரூ.262.00 + 77.85 இலட்சம்) ரூபாயையும் 1991-92-ஆம் ஆண்டில் அரசு வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் காவல்துறையை வலுப்படுத்தியதில், இவ்வாண்டில் பெரிதும் சாதனை ஏற்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழ்நாடு காவல்துறை வீட்டு வசதிக்கழகம்**

காவல்துறையின் நீண்டநாளைய தேவையை உணர்ந்த தற்போதைய அரசு 1991-ஆம் ஆண்டு நவம்பரில் தமிழ்நாடு காவல்துறை வீட்டு வசதிக் கழகத்தை ஏற்படுத்தியது. தமிழ்நாடு காவல்துறையினர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம், காவல்துறைப் பணியாளர்களுக்கு 80 சதவீதம் வீட்டுவசதி செய்துகொடுக்கும் திட்ட இலக்கினை அடைய, ஒவ்வோராண்டும் 3,000 குடியிருப்புகள் கட்டப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அதற்கிணங்க 1992-93-ஆம் ஆண்டில் 1000 வீடுகள் கட்டக் கருதப்பட்டுள்ளது. இதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

**சிறப்புப் பாதுகாப்புப் படைப் பிரிவை ஏற்படுத்துதல்**

மிகவும் முக்கியமான பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்பொருட்டு, தேசியப் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பு அளிக்கும் அதே அடிப்படையில் முதலமைச்சருக்கும் ஏனைய முக்கியப் பிரமுகர்களுக்கும் அருகிலிருந்தே பாதுகாப்பு அளிக்கத் தமிழ்நாடு அரசு, சிறப்புப் பாதுகாப்புப்படை ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.



**இந்தியத் துணைக்கண்டத்தில் - திறமைக்கும் நேர்மைக்கும், வளர்ச்சிக்கும் உயர்வுக்கும், இலஞ்ச ஊழலற்ற தன்மைக்கும் எடுத்துக்காட்டான அரசு தமிழக அரசு ஒன்றே எனும் பெயர் எடுக்கும் வகையில் எங்கள் பணி அமையும்**

**முற்றிலும் மகளிரே நிருவகிக்கும் காவல் நிலையம்**

சென்னை மாநகரில் முற்றிலும் மகளிரே நிருவகிக்கும் காவல் நிலையம் ஒன்றைத் தமிழ்நாடு அரச புதிதாக ஏற்படுத்தியுள்ளது. இக்காவல் நிலையம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறக்கப்பட்டுச் செயல்படத் தொடங்கியுள்ளது.

**உணவுப் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்கும் திட்டம்**

உணவுப் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்கும் திட்டம் தற்போது காவல்துறைப் பணியாளர்களுக்கு மட்டும் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தை அதிகரிப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இவ்வாறு இந்தச் சலுகையை அதிகரிப்பதன் மூலம் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்களின் விலையில் 50 சதவீதத்தை அரசு ஏற்க இயலும்.

**விளையாட்டுகளும் போட்டி விளையாட்டுகளும்**

சென்னையில் 1991 டிசம்பரில் நடைபெற்ற 35-வது அனைத்திந்தியக் காவலர் விளையாட்டுப் போட்டியில் துப்பாக்கி சுடுவதில் தமிழ்நாடு காவல்துறை ஒட்டுமொத்த வீரருக்கான கோப்பையை வென்றது. மேலும் நாய் விளையாட்டுப் போட்டிக்கு ஒன்றும், அறிவியல் சார்ந்த துப்பு துலக்கும் பணிக்கு ஒன்றுமாக மேலும் இரண்டு தங்கப் பதக்கங்களைத் தமிழ்நாடு காவல்துறை பெற்றுள்ளது.

**நலத் திட்டங்கள்**

காவல்துறையில் உள்ள பணியாளர் - அலுவலர்களுக்கான பின்வரும் நலத் திட்டங்களுக்குத் தமிழ்நாடு அரசு அனுமதியளித்துள்ளது

1. தமிழ்நாடு காவல்துறை நலநிதிக்கு ஒட்டு மொத்த ஆண்டு மானியமாக அளிக்கப்பட்டுவந்த ரூ.5 இலட்சம் 1991-92 முதற்கொண்டு ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

2. பணியிலிருக்கும்போது மிகுந்த வீரதீரத்துடன் செயல்பட்டதால் இறந்த காவல்துறைப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு அளிக்கப்பட்டுவந்த தனிக் கருணைத் தொகை 1.00 இலட்சம் ரூபாயாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

3. பணியிலிருக்கும்போது, மிகுந்த வீரதீரத்துடன் செயல்பட்டதன் விளைவால் காயமடைந்த காவல்துறைப் பணியாளர்களுக்குத் தனிக் கருணைத்தொகை ரூ.1,500-லிருந்து ரூ.20,000 வரையில் வழங்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

4. காவல்துறைப் பணியாளர்கள் பணியில் இருக்கையில் வீர தீரச் செயலில் ஈடுபட்டு இறந்து விடுவோர்களேயானால், அவருடைய வாரிசுதாரருக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற ஊதியம், குடும்ப ஊதியத் தொகையாக அப்பணியாளர் வயது முதிர்வு ஒய்வுபெறும் நாள் வரையில் வழங்கப்படும். அதன் பின்னர், செயலிலுள்ள ஆணைப்படி

**★ இந்தியத் திருநாட்டின் ஒருமைப் பாட்டையும் ஒற்றுமையினையும் பேணிக் காப்போம்; இழந்த நம் உரிமைகள் அனைத்தையும் விரைந்து மீட்போம்!**

**— மாண்புமிகு முதல்வர்**

கிடைக்கக்கூடிய குடும்ப உதவித்தொகை வழங்கப்படும்.

5. காவல்துறை, தீயணைப்புத்துறை, சிறைத்துறை போன்ற சீருடைத் துறைகளில் பணியாளர்களைப் பணியில் அமர்த்துவதற்குத் தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் நியமன வாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

6. காவல்துறைப் பணியாளர்களுக்கு அலுவலர்களுக்கு ஆடை அணி பணிப்பை பராமரிப்புப் படிகள், உணவுக் கட்டணங்கள், சீருடைப் படிகள் ஆகியவை உயர்த்தப்பட்டுள்ளன.

காவல்துறைப் பணியாளர்களின் பயனுக்காகச் சென்னை மாநகரில் ஓய்வு இல்லம் ஒன்று கட்டுவதற்கும், 17 மாவட்டங்களிலுள்ள 135 காவல் நிலையங்களோடு இணைந்துள்ள குடியிருப்புகளில் நவீன கழிப்பிடங்கள் கட்டுவதற்கும் அரசு கருதியுள்ளது.

**தீயணைப்புத் துறையில் வசதிகளும் சலுகைகளும்**

**புதிய கோட்டம் உருவாக்குதல்**

காமராசர் கோட்டத்தை, இராமநாதபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட இராமநாதபுரம்-பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கோட்டமாகவும், விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்ட காமராசர் கோட்டமாகவும் இரண்டாகப் பிரித்து அரசு ஆணை வழங்கியுள்ளது. இப்புதிய கோட்டம் 1.3.1992 அன்று முதல் இயங்கி வருகிறது.

**புதிய தீயணைப்பு நிலையங்கள் துவக்குதல்**

1. இவ்வரசு பதவியேற்றபின் 1991-92-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட ஒன்பது இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்க ஆணையிடப்பட்டுள்ளது.

திரூர் - செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், அனுப்பானடி - மதுரை மாவட்டம், நாவல்பட்டு - திருச்சிராப்பள்ளி மாவட்டம், கணபதி - கோயம்புத்தூர் மாவட்டம், பவானி - பெரியார் மாவட்டம், கும்மிடிப்பூண்டி - செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், ஊத்தங்கரை - தர்மபுரி மாவட்டம், துவரங்குறிச்சி - திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆர்க்காடு - வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம்.

2. 1992-93-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட 6 இடங்களில் புதியதாகத் தீயணைப்பு நிலையங்கள் துவக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

கொளச்சல் - கன்னியாகுமரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை - தர்மபுரி மாவட்டம், சேத்தியாத்தோப்பு - தென்னார்க்காடு மாவட்டம், வேதாரண்யம் - நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், மண்டபம் - இராமநாதபுரம் மாவட்டம், வில்லிவாக்கம் - சென்னை மாவட்டம்

ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க ஆகும் செலவினம் பின்வருமாறு:

தொடர் செலவினம் ரூ.5.13 இலட்சம், தொடராச் செலவினம் ரூ.12.14 இலட்சம்

**புதிய வாகனங்கள் ஒப்படைத்தல்**

இவ்வாண்டு 5 நோயாளர் ஊர்திகள் வாங்கப்பட்டு நிலையங்களுக்கு வழங்கப்பட்டன. மேலும், விருத்தாசலம், முசிறி, ஒரத்தநாடு, சங்ககிரி மற்றும் சோழவந்தான் ஆகிய இடங்களில் அமைந்துள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு நோயாளர் ஊர்திகள் வழங்க இவ்வரசு ஒப்பளித்துள்ளது. இதற்காகும் மொத்த செலவினம் ரூ.14 இலட்சமாகும்.

**பணியாளர் தேர்வுக்குழு அமைத்தல்**

இதுவரை நிலையத் தீயணைப்பு அலுவலர்களைத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையமும், தீயணைப்பாளர்களைத் தீயணைப்புத் துறையும் தேர்வு செய்தன. நிலையத் தீயணைப்பு அலுவலர் மற்றும் தீயணைப்பாளர்களைக் காவல் மற்றும் சிறைத்துறைக்குத் தேவையான பணியாளர்களுடன் சேர்த்துத் தேர்ந்தெடுக்கத் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுவை அரசு தற்பொழுது அமைத்துள்ளது.

—தொடர்ச்சி 77-ஆம் பக்கம்



# தமிழ்நாட்டில் நீதி நிர்வாகம்



மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்

**கே.ஏ. கிருஷ்ணசாமி**

**“இந்த ஓராண்டுக் காலத்தில், தமிழ்நாட்டில் நீதிநிர்வாகம் மிகவும் சிறந்து விளங்குவதைப் புள்ளி விவரங்களோடு விளக்கும் கட்டுரை இது.”**

பன்னெடுங்காலத்தொட்டே, நீதி நிருவாகம் என்பது இன்றியமையாத பணிகளில் ஒன்றாக அனைத்து அரசு அமைப்பிலும் கருதப்பட்டு வந்துள்ளது. தமிழகத்தில் நீதித்துறையின் வளர்ச்சியும், அவற்றிற்கான அடிப்படை வளர்ச்சிகளும் குறிப்பிடத்தக்க வகையில் மேம்பாடு அடைந்துள்ளன. நீதித்துறை சுதந்திரமாகச் செயல்படுவதற்கான தகுந்த சூழ்நிலையை உருவாக்கித் தருவதில் இவ்வரசு எப்போதும் விழிப்புடன் இருந்து வருகிறது. சிறந்த சேவையினை வழக்காடும் மக்களுக்கு வழங்குவதற்குத் தேவையான நீதித்துறைக்கான கட்டடங்கள், மனித சக்தி மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியவைகளை அரசு வழங்குகிறது.

**மாநில அளவிலான நீதித்துறையின் படி அமைப்பு பின்வருமாறு**

சட்ட அதிகாரகளின் படியமைப்பானது தலைமை வழக்குரைஞரே தலைமை அலுவலராகவும், அரசு உரிமையில் வழக்குரைஞர், கூடுதல் அரசு உரிமையியல் வழக்குரைஞர், அரசு வழக்குரைஞர், குற்றவியல் வழக்குரைஞர், கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர் போன்றோரை உள்ளடக்கியது.

1991-92-ஆம் ஆண்டு நீதி நிருவாகத்தில் அரசின் சாதனை பின்வருமாறு

**சென்னை உயர்நீதிமன்றம்**

உயர்நீதிமன்றம் 28 நீதிபதிகளுடன் செயல் ஆற்றி வருகிறது. வழக்குகளை விரைந்து முடிக்கும் நோக்கத்துடன் நீதிபதிகளின் எண்ணிக்கையை 32-ஆக உயர்த்துவது தொடர்பாகத் தமிழ்நாடு அரசு அளித்த் செயற்குறிப்பிற்கு மத்திய அரசு இசைவளித்துள்ளது.

**நிதித்துறை ஒதுக்கீடு**

1991-92-ஆம் ஆண்டில் நீதி நிருவாகத்திற்கு நிதியினை ஒதுக்கீடு செய்வதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1988-89-ஆம் ஆண்டில் நீதி நிருவாகத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டத் தொகையான ரூ.24.48 கோடிக்கு மாறாக 1991-92-ஆம் ஆண்டில் ரூ.40.19 கோடியும், 1992-93-ஆம் ஆண்டில் ரூ.45.99 கோடியும் உயர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**புதிய நீதிமன்றங்கள் அமைத்தல்**

மூன்றாகப் பிரிக்கப்பட்ட இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத்



சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள செல்வி நீதிபதி காந்த குமாரி பட்நாகர் அவர்களுக்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் சென்னை ராஜ்பவனில் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார் (15.6.'92). மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

தேவர், காமராசர் மாவட்டங்களில் மாவட்ட நீதிமன்றங்கள் ஏற்படுத்த அரசு ஏற்கெனவே அனுமதி வழங்கியிருந்த போதிலும், இடையில் ஏற்பட்ட சில இடர்ப்பாடினால், நீதிமன்றங்களை அமைப்பது காலதாமதமாகியது. 1991-92-ஆம் ஆண்டு இந்த இடர்ப்பாடுகள் நீக்கப்பட்டு, புதிய நீதிமன்றங்கள் விரைவில் துவங்கவிருக்கும் நிலையில் உள்ளோம். இந்நீதிமன்றங்கள் இப்பகுதிகளில் வாழும் மக்களின் நீண்ட நாள் தேவையினை நிறைவு செய்யும்.

**உரிமையியல் நீதிமன்றங்கள்**

இராமநாதபுரம் மாவட்டத்துக்காக, இராமநாதபுரத்தில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்துக்காக சிவகங்கையில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

காமராசர் மாவட்டத்துக்காக ஸ்ரீவில்லிபுத்தூரில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

சிதம்பரனார் மாவட்டத்துக்காக தூத்துக்குடியில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்துக்காகத் திருவண்ணாமலையில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

**குற்றவியல் நீதிமன்றங்கள்**

இராமநாதபுரம் மாவட்டத்துக்காக, இராமநாதபுரத்தில் நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்துக்காக, சிவகங்கையில், நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்.

காமராசர் மாவட்டத்துக்காக ஸ்ரீவில்லிபுத்தூரில் நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்.

**1991-92-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட நீதிமன்றங்கள்**

**உரிமையியல்**

1. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், கொடைக்கானல்
2. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், நிலக்கோட்டை.
3. துணை நீதிமன்றம், இராணிப்பேட்டை.

**குற்றவியல்**

நீலகிரி மாவட்டத்தில், கோத்தகிரியில் நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்.

சந்தனமரக் கடத்தல் குற்றங்களை விசாரிக்க, வட ஆர்க்காடு- அம்பேத்கர் மாவட்டத்தில், திருப்பத்தூரில் நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களுக்காக தனி நீதிமன்றம்.

### காசநோயைக் குணமாக்க

**இந்தியர்களில் 1.5 சதவிகிதம் பேர் காசநோயால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். பொதுவாக, காசநோயைக் குணமாக்குவதற்கு நீண்ட கால மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. அதாவது 18 முதல் 24 மாதங்கள். குறுகிய கால மருத்துவ முறை 212 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, இது 6 முதல் 8 மாதங்களாகக் குறைக்கப்பட்டுவிட்டது. சராசரியாக ஒவ்வொரு ஆண்டும் 12 இலட்சம் புதிய காசநோயாளிகள் கண்டு பிடிக்கப்படுகிறார்கள். கிராமப் புறங்களில் காசநோயைக் கண்டு பிடிப்பதற்காக, ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையமும், மாதமொன்றுக்கு 50 சளி பரிசோதனைகளை நடத்த வேண்டும் என முடிவு செய்யப்பட்டுள்ளது.**

பயங்கரவாத-நாசவேலைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட வழக்கை விசாரிப்பதற்கென்றே அமைக்கப்பட்ட நீதிமன்றம்.

உடனடித் தேவை காரணமாக - அதாவது, தற்செயல்விடுப்பில் செல்லுதல் போன்ற காரணத்தினால் தனி நீதிபதி தற்காலிகமாக அலுவலகம் வராத நேரத்தில், வழக்குகளை விசாரிக்கும் பணி தடங்கலின்றி நடைபெற கூடுதல் நீதிபதி ஒருவரை அரசே நியமித்துள்ளது.

**1991-92-ஆம் ஆண்டில் நீதிமன்றக் கட்டடங்கள் குறித்த செலவினங்கள்**

1991-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 8-ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 4 கோடி செலவில் கட்டப்பட்ட உயர்நீதிமன்றக் கூடுதல் வளாகத்தினைத் துவங்கி வைத்தார்.

1991-92-ஆம் ஆண்டில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களுக்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

1. உயர்நீதிமன்றக் கட்டடத்திற்கும் புதிய கட்டடத்திற்கும் இணைப்பு வழி கட்டுதல் ரூ.10.50 இலட்சம்.
2. கூடுதல் உயர்நீதிமன்றக் கட்டடத்தை முன்பகுதியில் சிமிட்டி வண்ணப்பூச்சு பூசுதல் ரூ.2.50 இலட்சம்.
3. இராணிப்பேட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றக் கட்டடத்திற்கு மேம்பாட்டுப் பணிகள் ரூபாய் ஒரு இலட்சம்.
4. பல்வேறு நீதிமன்றங்களுக்குச் சிறப்பு பழுது பார்ப்புப் பணிகள் ரூ.8.65 இலட்சம்
5. உயர்நீதிமன்றத்தில் புதிய நிருவாகத் தொகுதிக்குத் தேவையான அறைகலன்கள் வாங்குதல் ரூ.27.91 இலட்சம்.
6. 41 உருக்குப் பதிவேட்டு அடுக்குகள் வாங்குதல் ரூ.1.25 இலட்சம்.
7. இராமநாதபுரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் வழக்குரைஞர்கள் சங்கக் கட்டடம் கட்டுதல் ரூ.237 இலட்சம்.

**தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு**

ஏழை எளியவர்களுக்கு அரசியலமைப்புச் சட்டப்படி ஆலோசனை நல்குவதற்காகத் தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு உருவாக்கப்பட்டு உள்ளது. இவ்வாலோசனைக் குழு 1977-ஆம் ஆண்டிலிருந்து சமுதாயத்தில் பின்தங்கியவர்களை வழக்காடும்போது



**★ உலக உயிர்களில் அறிவு திரம்பப்பெற்ற உயிர் - பகுத்தறிவுள்ள உயிர் மனிதன்தான், அவன் தன் அறிவைப் பயன்படுத்தினால் மிகச் சிறந்த செயல்களையெல்லாம் சாதிக்க முடியும்.**

**—தந்தை பெரியார்**

அவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. 1991-92-ஆம் ஆண்டில் ரூ.91 இலட்சமும், அவ்வாறே 1992-93-ஆம் ஆண்டில் ரூ.91 இலட்சமும் தமிழ்நாடு அரசு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்துள்ளது.

**சட்டமியற்றல்**

**தமிழ்நாடு பொதுச் சொத்து அழிப்பு மற்றும் இழப்பைத் தடுத்தல் சட்டம்**

பொதுச் சொத்துக்கள் சேதமடைவதைத் தடுக்கும் பொருட்டு, தமிழக அரசு 1992-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இந்தச் சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தில் எவர் சேதம் விளைவித்தாரோ அவரிடம் மட்டுமன்றி அத்தகைய சேதங்களுக்குப் பொறுப்பாளியாக உள்ள அரசியல் கட்சி அல்லது பிற இனக்குழுவிடமிருந்து சேதத்தில் மதிப்புத் தொகையினை வசூலிக்க வழி செய்கிறது.

**தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நலநிதி திருத்தச் சட்டம் - 1992**

வழக்குரைஞர்கள் மன்றத்தின் கருத்துக்களை ஏற்று வழக்குரைஞர்கள் வக்காலத்துக்கு ஆஜராவதற்கான குறிப்பாணைகள் அல்லது ஆஜர் ஆவதற்கான ஏனைய ஆவணங்களைத் தாக்கல் செய்வது ஆகியவற்றின் போது நீதிமன்றத் தபால்தலையுடன் சேர்த்து, தற்போது ஒரு ரூபாய் என்று இருப்பதற்குப் பதிலாக 2 ரூபாய் மதிப்புள்ள வழக்கறிஞர் மன்றத் தபால் தலைகளை ஒட்ட வேண்டும் எனவும், பிற கருத்துக்களையும் ஏற்று திருத்தச் சட்டம் ஒன்றை 1992-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அரசு கொண்டு வந்துள்ளது. இத் திருத்தச் சட்டத்தின் மூலம் வழக்குரைஞர்கள் நலநிதியின் நிதி வளம் அதிகரிக்கும் எனவும் அதனால் வழக்குரைஞர்கள் மன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான நிவாரணம் கிடைக்கும்.

தமிழக அரசு, நீதித்துறையின் தேவைகளை உணர்ந்து அத்தேவைகளைப் படிப்படியாக நிறைவேற்றவும் நீதித்துறை தனித்தும், வழக்காடும் மக்களுக்கு நீதி விரைவாகக் கிட்டும் வகையிலும் செயல்படத் தகுந்த சூழலை உருவாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**சிறைத்துறை**

தமிழகத்தில் சிறைகளை நவீனப்படுத்தும் வகைக்காக மத்திய அரசு நிதி உதவியுடன் ரூ.864 இலட்சங்கள் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இவற்றில் மைய அரசு ரூ.432 இலட்சமும் மாநில அரசு ரூ.432 இலட்சமும் செலவு மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. மைய அரசு வழங்கும் தொகை ரூ.432 இலட்சத்தில் சில திட்டங்களுக்கு 100 சதவிகித மானியமும் சில திட்டங்களுக்கு 50 சதவிகித மானியமும் அளிக்க ஒப்புதல் கொண்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள மொத்த செலவுத் தொகை ரூ.864 இலட்சத்தில் ஏற்கெனவே ரூ.359 இலட்சத்திற்குச் சிறைச்சாலைகளை நவீனப்படுத்த பல்வேறு திட்டங்களைச் செயலாக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது மைய அரசு தமிழகத்தில் சிறைச்சாலைகளை நவீனப்படுத்த பல்வேறு திட்டங்களைச் செயலாக்குவதற்கு ரூ.235.59 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இவற்றிற்கு மாநில அரசு தன் பங்குத் தொகையாக ரூ.45.23 இலட்சம் வழங்க வேண்டும். எனவே 31.3.92 நாளிட்ட அரசாணை எண். 555-இல் தமிழகத்தில் சிறைச்சாலைகளை மேம்படுத்துவதற்குப் பல்வேறு திட்டங்களை மேற்கொள்ள மொத்த செலவினத்தொகை ரூ.280.82 இலட்சத்திற்கு அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.●

# வருவாய்த்துறையின் வளமான பணிகள்

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்

**எஸ்.டி. சோமசுந்தரம்**



**"வீட்டு மனைப்பட்டா, நிலப்பட்டா வழங்குதல், நிலம் கையகப்படுத்துதல், உபரி நில ஒப்படைப்பு, மாவட்டங்கள் பிரித்தல், வறட்சி நிவாரணப் பணிகள் முதலான பணிகளை வகுத்தும், தொகுத்தும் விரைவாய் செயலாற்றி வருகின்றது வருவாய்த் துறை."**

சமுதாய வளர்ச்சிக்கு வழிகோலிவரும் துறைகளில் வருவாய்த் துறையும் ஒன்று. வீட்டுமனைப் பட்டா, நிலப்பட்டா வழங்குதல், மாவட்டங்களைப் பிரித்தல், நிலச் சீர்திருத்தம் முதலான பணிகள் இவற்றுள் அடங்கும்.

**வீட்டுமனைப்பட்டா வழங்குதல்**

ஜூலை 1991 முதல் மார்ச்சு 1992 வரை 4,57,672 வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன. அதன் விவரம் வருமாறு

ஆதிதிராவிடர் 1,77,343, பழங்குடியினர் 3,660, ஏனையோர் 2,76,669 மொத்தம் 4,57,672.

**விவசாய நிலப்பட்டா**

ஜூலை 1991 முதல் மார்ச்சு 1992 வரை 6,372 பேருக்கு விவசாய நிலப்பட்டா வழங்கப் பட்டுள்ளது. மொத்தம் 6,426.55 ஏக்கர் நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் விவரம் கீழ்வருமாறு

ஆதிதிராவிடர் 1,207, பழங்குடியினர் 16, ஏனையோர் 5,149, பயனாளிகள் மொத்தம் 6,372.

**நிலம் கையகப்படுத்துதல்**

அரசுத் துறைகள், அரசுப் பொது நிறுவனங்கள் மற்றும் இரயில்வே துறையினர் கையகப் படுத்தியும் பயன்படுத்தாமல் பல ஆண்டுகளாக வெற்று நிலங்களாக வைத்திருக்கும் நிலங்களை அரசு திரும்பப் பெற்று, வேறு பொது நோக்கங்களுக்காகவும், ஏழை எளிய மக்களுக்காகவும் ஒதுக்கீடு செய்துதர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**மாவட்டங்களைப் பிரித்தல்**

1. 1991-92-ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தை தஞ்சாவூர் மாவட்டம் என்றும், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரித்து ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் 18.10.91 முதல் இயங்கி வருகிறது.

2. 1992-93-இல் தென்னார்க்காடு மாவட்டத்தை தென்னார்க்காடு மாவட்டம் என்றும், வள்ளலார் மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரிக்கலாமென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

3. மாவட்ட நிர்வாகம் மக்களை நெருங்கிச் செயல்படவும், மக்களின் குறைகளை நன்கு களைவதற்கும், சிறப்புத் துணை மாவட்டாட்சித் தலைவர் மற்றும் அவருக்கு உதவி செய்யத் துறை அலுவலர்களுடன் கூடிய 'பொது மக்கள் குறை தீர்க்கும் பிரிவு' என்ற பிரிவு ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் செயல்பட தற்போது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. வட்ட அலுவலகங்களில் பொது மக்கள் அடிக்கடி செல்வதைத் தடுப்பதற்காக 3 முதல் 4 கிராமங்கள் அடங்கிய ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு மண்டலத் துணை வட்டாட்சியரை அரசு நியமித்துள்ளது.

5. சாதிச் சான்றிதழ்களை விரைந்து வழங்குவதற்கு ஏற்றவகையில், மாணவர்களிடமிருந்து சாதிச் சான்றிதழ்கள் கோரி மனுக்கள் பெறப்பட்ட அன்றே அவர்களுக்குச் சாதிச் சான்றிதழ்களை வழங்க வேண்டுமென்று அரசு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தக்க அறிவுரைகளை வழங்கியுள்ளது.

6. சாதிச் சான்றிதழ்கள், வருமானச் சான்றிதழ்கள் மற்றம் சொத்து மதிப்புச் சான்றிதழ்கள் போன்றவை வழங்கும் முறை குறித்து அரசு சுருக்கமாக அறிவுரைகளை வெளியிட்டுள்ளது.

**நிலச் சீர்திருத்தம்**

**பினாமி நிலம் எடுத்தல்**

நீண்ட நெடுங்காலமாக வெளிப்படையாய் வராமல் இருக்கும் பல்லாயிரக்கணக்கான பினாமி நிலங்களைக் கையகப்படுத்தி, அந்நிலங்களை நிலமற்ற விவசாயிகளுக்கே சொந்தமாக்கும் குறிக்கோளின்படி, 1958-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து 1960-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6-ஆம் நாள் வரையிலான காலத்தில், மிகை (உபரி) நிலங்களை விற்பனை, கொடை, ஒப்படைவு, ஏற்பாடு, பாகப்பிரிவினை ஆகியவற்றில் எந்த வகையிலேனும் அல்லது பிற எந்த வகையிலேனும் செய்யப்பட்ட நில உரிமை மாற்றங்கள் அனைத்தையும் சட்டப்படி செல்லாதவையாக ஆக்கும் வகையிலும், நிலமற்ற ஏழைகளுக்கு அந்த நிலங்களை வழங்கவும், சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவையில் 3.10.1991 அன்று நிறைவேற்றப்பட்டது. இச்சட்ட முன்வடிவுக்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**உபரி நில ஒப்படைப்பு**

1991-92-ஆம் நிதியாண்டு முதல் மே திங்கள் வரையில் 4,721 நபர்களுக்கு 5,115 ஏக்கர் நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டன. 1991-92-ஆம் நிதியாண்டில் 2,500 ஏக்கர் மிகை நிலங்கள் தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்ய மைய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. ஆனால் 4,524 ஏக்கர் நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை மிஞ்சியுள்ளதால், மைய அரசின் பாராட்டைப் பெற்றுள்ளது.

**பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு**

உழுபவனுக்கே நிலத்தை உரிமையாக்கும் வகையில் சட்டம் இயற்ற அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. பயிரிடும் குத்தகைதாரரின் நலன்களைப் பாதுகாக்க நில உரிமையாளர்களுக்கும் பொது நம்பகங்களுக்கும் மற்றும் குத்தகைதாரர்களுக்கும் ஏற்படக்கூடிய வழக்குகளைத் தீர்த்து வைக்க ஐந்து வருவாய் நீதி மன்றங்கள் இருந்தன. தற்போது மேலும் 6 வருவாய் நீதி மன்றங்களை மன்னார்குடி, திருவாரூர், கும்பகோணம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, லால்குடி ஆகிய இடங்களில் ஏற்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளது.

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைக்கிறார் (18.10.1991).



### குத்தகைப் பதிவு செய்தல்

விவசாய நிலங்களைப் பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களது பெயரினைப் பதிவு செய்வதற்காக உதவும் வகையில், நிலமற்ற ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த ஒருவரும், பயிரிடும் குத்தகைதாரர் ஒருவரும், மற்றும் சமூக நல ஊழியர் மூவரும் அடங்கிய புதிய ஆலோசனைக் குழுக்களைச் சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து வட்டங்களிலும் அமைக்க அரசு முடிவெடுத்துள்ளது.

### குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம்

விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை முறைப்படுத்துவதற்காக அரசு 1948-ஆம் ஆண்டைய குறைந்த பட்ச ஊதியச் சட்டத்தைத் தமிழ்நாடு முழுவதும் சீரான முறையில் செயல்படுத்த உள்ளது.

### நகர்ப்புற நிலச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நில ஒதுக்கீடு

தமிழ்நாடு நகர்ப்புற உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட வெற்று நிலத்தில், 9 எக்டேர், 25 ஏர், 84 சதுர மீட்டர் நிலத்தை அரசுத் துறைகள், அரசு கழகங்கள், வீட்டுவசதி வாரியங்கள், நிறுவனங்கள், ஆகியவற்றிற்கு 1.7.91 முதல் 31.5.92 வரை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

### குடியிருப்புப் பட்டா வழங்குதல்

குடியிருக்க வீடு இல்லாத விவசாயி, விவசாயத் தொழிலாளர் அல்லது கிராமப்புற கைவினைஞர் ஆகியோருக்கு 1991-92-ஆம் நிதியாண்டு முடிய 1,81,609 குடியிருப்புப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

### வருவாய்த்துறைக்கட்டடங்கள் மற்றும் பிற முக்கிய வசதிகள்

1991-92-ஆம் நிதியாண்டில் இரண்டு வட்டாட்சியர் அலுவலகங்கள் ஒவ்வொன்றும் சுமார் ரூ.43 இலட்சம் செலவில், பரமத்திவேலூர் (சேலம் மாவட்டம்) மற்றும் இராமநாதபுரம் (திருநெல்வேலி- கட்டபொம்மன் மாவட்டம்) வட்டாட்சியர் அலுவலகங்களைக்கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. இதே நிதியாண்டில் காங்கேயம் (பெரியார் மாவட்டம்), பென்னகரம் (தருமபுரி மாவட்டம்), கந்தர்வக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்) மற்றும் ஏற்காடு (சேலம் மாவட்டம்) ஆகிய ஊர்களிலுள்ள வட்டாட்சியர் அலுவலகங்களை விரிவுபடுத்த ரூ.8 இலட்சத்திற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

பரமக்குடி, கொடைக்கானல், பழனி, கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் சைதாப்பேட்டை கோட்ட அலுவலகங்கள் புதிதாகக் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதே நிதியாண்டில், உத்திரமேரூர் வட்டாட்சியரின் அலுவலகத்தின் புதிய கட்டடத்தை, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்.



★ சாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி 'இந்தியா எங்கள் நாடு' என்னும் ஒற்றுமை உணர்வைப் பேணுதல் தற்போது காலத்தின் கட்டாயம் ஆகும். பல்வேறு இன மக்கள் வாழும் மொழிவாரி மாநிலங்கள் சேர்ந்த கூட்டாட்சியின் தொகுப்புதான் நம் குடியாட்சி.

1992-93-ஆம் நிதியாண்டில் பரமத்திவேலூர் (சேலம் மாவட்டம்), இன்னொரு வட்ட அலுவலகம் (வருவாய் நிருவாக ஆணையரால் தெரிந்தெடுக்கப்பட வேண்டியது) மற்றும் கொடைக்கானல் வருவாய்க் கோட்ட ஆட்சியருக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு வட்டாட்சியருக்குக்குடியிருப்பு கட்ட அனுமதி வழங்கப்பட உள்ளது. இந்த மாநிலத்தில் உள்ள எல்லா பிர்கா வருவாய் ஆய்வாளர்களுக்குப் புதிய குடியிருப்பு கட்டிக் கொடுப்பதை அரசு கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளது.

மொத்தமுள்ள 1,081 பிர்காக்களில் 1,071 பிர்கா ஆய்வாளர்களுக்குக் குடியிருப்புகள் இது வரையில் கட்டுப்பட்டுள்ளது. தற்போது மீதமுள்ள 10 பிர்கா ஆய்வாளர்களுக்குப் புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கு இந்த நிதியாண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பிர்கா வருவாய் ஆய்வாளர்களுக்கும் குடியிருப்புகள் கட்டும் சாதனை நிறைவு பெறுகிறது.

இந்த நிதியாண்டில் தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சியாளருக்குக் குடியிருப்பு மற்றும் 'முகாம்' அலுவலகம் சுமார் ரூ.23 இலட்சத்தில் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதில், ரூ.10 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள வட்டாட்சியர் அலுவலகங்களில், இடநெருக்கடி உள்ள ஐந்து வட்டாட்சியர் அலுவலகங்கள் விரிவுபடுத்தி கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவை குறித்து வருவாய் நிருவாக ஆணையரின் முடிவான அறிக்கை பெறப்பட்டு ஆணைகள் வழங்கப்படும். தற்போது உள்ள மாவட்ட ஆட்சியர்களின் அலுவலகங்களில், வரும் பொதுமக்கள் வசதிக்காகவும், அங்கு பணிபுரியும் ஊழியர்களின் வசதிகளுக்காகவும் குளிர்மின்கலன்கள் பொருத்தப்பட இருக்கின்றன. இந்த வகையில் திண்டுக்கல்-அண்ணா மாவட்டம், காமராசர் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் ஆகிய மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் குளிர் நீர் மின்கலன்கள் வசதிகள் செய்யப்படும். இதே நிதியாண்டில் மேலும் ரூ.12 இலட்சம் செலவில் சில வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் அலுவலகங்கள் ஆகியவற்றில் இந்த வசதிகள் ஏற்படுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### இயற்கை இடர்ப்பாடுகள் மற்றும் எதிர்பாராத விபத்துக்கள்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 3.7.91 அன்று சட்டப்பேரவையில் அறிவித்ததற்கிணங்க, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், நல்லூரில் இயற்கை எரிவாயுக் கசிவு ஏற்பட்டதால், அப்பகுதி மக்களின் பாதுகாப்பைக் கருதி போக்குவரத்து மற்றும் உணவுச் செலவுகளுக்காக ரூபாய் ஒரு இலட்சம் முன்னாள் தஞ்சை மாவட்டாட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டது.

ஜூன், ஜூலை 1991-இல் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த பெருமழையின்போது ஏற்பட்ட பாதிப்பை மதிப்பிட ஒரு குழு அனுப்பப்பட்டு, அக்குழுவின் பரிந்துரைக்கேற்ப ரூ.55,996 இலட்சம் நிவாரணப்பணிகளுக்காக வழங்கப்பட்டது.

சென்னையில் புயல் வெள்ளம் மற்றும் தீ விபத்தினால் முழுவதும் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.600-ம், பகுதியாய்ப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.300-ம் பிற பகுதிகளின் முழுவதும் பாதிக்கப்பட்ட குடிசைக்கு ரூ.250-ம் மானியமாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நவம்பர் 1991ல்ஏற்பட்ட புயல் வெள்ளத்தினால் கடலோர மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இயற்கை இடர்ப்பாடு நிதியிலிருந்து 3,547.6 இலட்சம் ரூபாய் அளித்து நிவாரணப்பணிகளைப் போர்க்கால அடிப்படையில் அரசு மேற்கொண்டது. 1991-92-இல் இயற்கை இடர்ப்பாடு நிதியிலிருந்து வெள்ள நிவாரணப் பணிகளுக்கென ரூ.3,604.6 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. இயற்கை இடர்ப்பாடுகள் நிதியிலிருந்து 1991-92-க்கு ஒதுக்கப்பட்ட தொகைக்கு அதிகமாகவே செலவு செய்து சாதனை படைத்துள்ளது.



மாண்புமிகு ஆந்திரப்பிரதேச முதல்வர் டாக்டர் என். ஜனார்த்தன ரெட்டி அவர்கள், 4.6.92 அன்று நெல்லூரில் நடைபெற்ற திரைப்பட விருதுகள் (நந்தி விருதுகள்) வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு நினைவுப் பரிசினை வழங்கினார்.

### வறட்சி நிவாரணப் பணிகள்

1991-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நிலவிய வறட்சி நிலைமையை ஆராய்ந்து தமிழ்நாடு அரசு 30.11.1991 வரை ரூ.8.69 கோடி பல்வேறு வறட்சி நிவாரணப் பணிகளுக்கு வழங்கியது.

1.1.1992-க்குப் பிறகு கோயம்புத்தூர், காமராசர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், திருநெல்வேலி-கட்டபொம்மன், மதுரை, திண்டுக்கல்-அண்ணா, பெரியார், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, சேலம், சிதம்பரனார் மாவட்டத்தில் கடுமையான வறட்சியினால் பாதிக்

கப்பட்டதையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.6.72 கோடி செலவில் ஆழ்துளைக் கிணறுகள் உட்பட பல்வேறு குடிநீர்ப் பணிகளுக்காக 30.4.92 வரை செலவு செய்ய அனுமதி வழங்கினார்கள்.

தற்பொழுது தமிழ்நாடு முழுவதும் எல்லா மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது என அரசுக்குத் தெரியவந்தது. எனவே, 30.4.92-க்குப் பிறகும் வறட்சி நிவாரணப்பணிகளைத் தொய்வு இல்லாமல் தொடர்ந்து செயல்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலும் ரூ.6 கோடி, மே மற்றும் ஜூன் திங்களில் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

**வேளாண்மை வருமான வரி**

விவசாயிகளுக்கு உதவி அளிக்கும் வகையிலும் வரி வசூலிப்பதில் தொல்லைகளைத் தடுப்பதற்குமான ஒரு நடவடிக்கையாக நெல், கரும்பு, மஞ்சள், வெற்றிலை, வாழை, தென்னை, சோளம், கம்பு, நிலக்கடலை, பருத்தி, எள் முதலான மலைத் தோட்டப் பயிரல்லாத பிற பயிரினங்கள் அனைத்தின்மீதும் விதிக்கப்படும் வேளாண்மை வருமான வரியினை அறவே விலக்குவதற்காக இந்த அரசு சட்டம் 40/91 மூலமாக ஏற்கெனவே சட்டத்திருத்தம் செய்துள்ளது.

மேலும் நிகர வருமான விலக்களிப்பு வரம்பை ரூ.10,000 லிருந்து ரூ.22,000 ஆக உயர்த்தியுள்ளது. அது மட்டுமல்லாமல் மலைத் தோட்டப் பயிர்கள்மீது மட்டுமே வேளாண்மை வருமான வரியை முடிவு செய்து சட்டத்திருத்தம் செய்துள்ளது. நிலைப்படுத்தப்பட்ட (Standard Acres) முறையிலிருந்து சாதாரண ஏக்கர் முறைக்கு 8 சாதாரண ஏக்கர் வரையில் வரி விலக்களித்து ஒட்டு மொத்தமாக வரி செலுத்துவதற்குரிய நில வரம்பை 40 ஏக்கரிலிருந்து 50 ஏக்கர்களுக்கு உயர்த்தியுள்ளது. இந்தச் சட்டத் திருத்தங்கள் மூலமாகச் சுமார் 45,000 விவசாயிகள் பயனடைகிறார்கள்.



மக்கள், தமக்குச் சேவை செய்வதற்காகவே தன்னிடம் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள் என்பதால் - அத்தொண்டிற்காக மாத ஊதியம் பெறுவது முறையல்ல'' என்று கூறி, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாத ஊதியமாகப் பெயரலவிற்கு ஒரே ஒரு ரூபாய் மட்டுமே பெற்றுக்கொண்டு வருகிறார்

**நில அளவைப் பதிவேடுகளைக் கணிப்பொறியில் செயலாக்குதல்**

தமிழ்நாடு அரசு, மைய அரசு உதவியுடன், 25 இலட்ச ரூபாய் செலவில் நில அளவைப் பதிவேடுகளைக் கணிப்பொறியில் செலவாக்கும் திட்டத்தை முதன்மைத் திட்டமாக, சேலம் மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்தது.

**வருவாய் நிர்வாகத்துறையினை மேம்படுத்துதல் மற்றும் நிலஅளவைப்பதிவேடுகளைச் சீராக்குதல்**

மைய அரசு 1991-92-ஆம் ஆண்டு, வருவாய் நிர்வாகத்தினை மேம்படுத்தவும், நிலஅளவைப் பதிவேடுகளைச் சீராக்குவதற்கும் ரூபாய் 148 இலட்சத்திற்கு மிகையாமல் அளிக்க நிர்வாக ஒப்புதலை வழங்கியுள்ளது. மேலும் 1991-92-இல் மாநில அரசு ரூ.74 இலட்சத்தினை மேற்கண்ட திட்டங்களுக்காகச் செலவிட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் தன் பங்காக மத்திய அரசு ரூ.74 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

**நிலஉடைமை மேம்பாட்டுத் திட்டத்தில் தவறுகளைக் களைதல்**

நிலஉடைமை மேம்பாட்டுத் திட்டத்தில் முறைகேடுகள் நடந்துள்ளதாக அரசின் கவனத்திற்கு வந்ததன் அடிப்படையில், பத்திரிகையின் வாயிலாகத் தவறுகளை திருத்தி ஆணையிடவும், ஒவ்வொரு குறுவட்டத்திலும் 5 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்களும் முகாமிட்டு தவறுகளைத் திருத்தி ஆணையிடவும் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

**நிலஅளவைப் பதிவேடுத் துறையில் உள்ள தொகுப்பூதிய பணியாளர்களை நிரந்தரமாக்குதல்**

1982-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டப் பணிக்காகப் பல்வேறு இனங்களில் தொகுப்பூதியத்தில் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். அப்பணியாளர்களில் இவ்வரசு பதவியேற்ற நாளிலிருந்து கீழ்க்கண்ட துறைகளில் நிரந்தரப் பணியாளர்களாக (ஊதிய ஏற்ற முறையில்) நியமிக்கப்பட்டனர். 1. சார்பதிவாளர் அலுவலகம் 25, 2. ஊட்டச்சத்துத் துறை 82, 3. கருவூலத் துறை 6.

இவ்வாறு வருவாய்த்துறை பல நிலைகளில் பணியாற்றி மாவட்ட வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிகிறது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட வேண்டும்.





# எல்லோருக்கும் கல்வி



மாண்புமிகு கல்வி அமைச்சர்

## செ. அரங்கநாயகம்

**”‘எல்லோருக்கும் கல்வி’ என்பதே அரசின் இலட்சியம். அந்த அடிப்படையில் கல்வித் துறை அரும்பணிகள் ஆற்றி வருகின்றது.“**

‘கண்ணுடையோர் என்போர் கற்றோர்’ என்றார் வள்ளுவர். அதற்கிணங்க, அனைவரும் கல்விக் கண் பெற அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தி வருகின்றது.

எல்லோருக்கும் கல்வி என்னும் திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டில் 6-11 வயது பிரிவில் 0.85 இலட்சமும், 11-14 வயது பிரிவில் 1.25 இலட்சம் மாணவ மாணவிகளை கூடுதலாகச் சேர்க்க வேண்டும் என்பது இந்திய அரசு கருதியுள்ள இலக்காகும்.

அதன்படி 1991-92-ஆம் கல்வியாண்டில் தொடக்கக் கல்வியில் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட மாணவ மாணவிகளின் விவரம் வருமாறு:-

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 6-11 வயது பிரிவின் கீழ் 4.25 இலட்சம் 11-14 வயது பிரிவின் கீழ் 6.25 இலட்சம் மாணவ மாணவிகளைக் கூடுதலாகச் சேர்க்க வேண்டும் என்பது இந்திய அரசு நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்காகும்.

1991-92-ஆம் ஆண்டில் 1,000 இடைநிலையாசிரியர் பணியிடங்கள் (இளநிலை) மாதம் ரூ.800 தொகுப்பு ஊதியம் வீதம் அனுமதிக்கப்பட்டது.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்கள் இன்னும் ஊரக வளர்ச்சித்துறையினராலேயே பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1991-92-ஆம் ஆண்டில் இக்கட்டடப் பராமரிப்பிற்காகவும் பழுது பார்ப்பதற்காகவும் ரூ.4 கோடி ஊரக வளர்ச்சித்துறை இயக்ககத்தற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மாணவர்கள் பள்ளிகளை விட்டு பெருமளவில் இடையில் நிறுத்திவிடுவதைத் தவிர்க்க, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம், இலவசச் சீருடை வழங்கும் திட்டம், இலவசக் காலணி வழங்கும் திட்டம், பள்ளி செல்லும் மாணவர்களுக்கு இலவசப் பஸ் பாஸ் வழங்கும்

4

திட்டம் 1-ஆம் வகுப்பில் படிக்கும் குழந்தைகளுக்கு இலவசப் பலகைகள் வழங்கும் திட்டம் முதலியன நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களினால் பயனடைவோர் 62.09 இலட்சம் ஆவார்கள். சத்துணவுத் திட்டம் சமூக நலத்துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பெண்களின் முன்னேற்றத்தினைக் கருத்திற் கொண்டு ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை பெண் ஆசிரியைகளை மட்டுமே நியமனம் செய்தல் வேண்டும் என்று அரசு ஆணை வழங்கியுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில் 27 ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த 13.1.92-இல் ஆணை வழங்கப்பட்டுள்ளன.

நிதி உதவியற்ற 8 ஆரம்பப் பள்ளிகள் துவக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளன. 14 நிதி உதவியற்ற ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அனுமதி வழங்கப்பட்டுள்ளன:

**மைய அரசு உதவியுடன் கூடிய திட்டங்கள்**

**கரும் பலகைத் திட்டம்**

1987-88 முதல் மூன்று கட்டடங்களாக இத்திட்டத்தின் கீழ் ஓராசிரியர் தொடக்கப் பள்ளிகளை மேலும் ஒரு ஆசிரியர் பணியிடம் வழங்கி ஈராசிரியர் பள்ளிகளாக உயர்த்துதல், சரியான கட்டட வசதி இல்லாத தொடக்கப் பள்ளிகளுக்கு இரண்டு அறைகள் கொண்ட கட்டடங்கள் கட்டித் தருதல், கற்பிப்பு உபகரணங்கள் வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு மைய அரசு ஒதுக்கீடு செய்த தொகை, இதுவரை மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் ஆகிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

கூடுதலாசிரியர் பணியிடங்கள் வழங்கி ஓராசிரியர் பள்ளிகளை ஈராசிரியர் பள்ளிகளாக உயர்த்தும் திட்டத்தின் கீழ் மூன்று கட்டங்களிலும், 1,829 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் வழங்கப்பட்டன. பணியிடங்கள் அனைத்தும் முழு அளவில் பயன்படுத்தப்பட்டு 1829 ஓராசிரியர் பள்ளிகள் ஈராசிரியர் பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. இதுவரை கூடுதல் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கிய வகையில் 1204.28 இலட்சம் ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளன. செலவிடப்பட்டுள்ள தொகையில் 31.3.1992 வரையில் 754.32 இலட்சம் ரூபாய்கள் மைய அரசிடமிருந்து திரும்பப் பெறப்பட்டுள்ளது.

கற்பிப்பு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், மூன்று கட்டங்களிலும் 29,075 பள்ளிகளுக்குக் கற்பிப்பு உபகரணங்களும் நூலகப் புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மைய அரசு இத்திட்டத்திற்காக வழங்கிய நிதி ஒதுக்கீடு 2306.66 இலட்சம் ரூபாய்களாகும்.

தொடக்கப் பள்ளிகளுக்கு இரண்டு அறை கட்டட வசதி செய்து தரும் திட்டத்தின் கீழ், மூன்று கட்டங்






★ கிராமப்புறங்களில்- வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பங்களைத் தேர்வு செய்து- ஒருங்கிணைந்த மானியம், வங்கிக் கடன்களுடன் கூடிய திட்டத்தை அமலாக்கல் ஆகியவற்றின் மூலம் அவர்களின் வறுமையை ஒழிக்க ஊரக வளர்ச்சித்துறை முனைந்து செயலாற்றி வருகிறது.

களுக்குச் சேர்த்துக் கட்டடங்கள் கட்டுவதற்கு 1,197 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டன. 809 பள்ளிகளில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. 388 பள்ளிகளில் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

**நடுநிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வியினை மேம்படுத்தும் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், நடுநிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதற்காக இரண்டு கட்டங்களில் நடுநிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் பெட்டகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மூன்றாவது கட்டத்தில் 328 நடுநிலைப் பள்ளிகளுக்கு 1991-92-இல் அறிவியல் பெட்டகங்கள் வழங்குவதற்கு மைய அரசு ரூ.5.25 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு அனுமதித்துள்ளது.

**தொழில் நுட்பவியல் மூலம் கல்வியின் தரத்தினை உயர்த்துதல்**

இத்திட்டத்தின் கீழ் முதல் கட்டத்தில் 2666 தொடக்கப் பள்ளிகளுக்கு வானொலி மற்றும் ஒலிப் பதிவுக் கருவிகள் வழங்கப்பட்டன. இதற்காக மைய அரசு ரூபாய் முப்பது இலட்சங்கள் ஒதுக்கீடு செய்தது.

இரண்டாவது கட்டத்தில், மைய அரசு ரூபாய் எழுபது இலட்சங்கள் ஒதுக்கீடு செய்தது. 6222 தொடக்கப் பள்ளிகளுக்கு, வானொலி மற்றும் ஒலிப் பதிவுக் கருவிகள் வழங்கப்பட்டன.

மூன்றாவது கட்டத்தில், மைய அரசு ரூபாய் நூறு இலட்சங்கள் ஒதுக்கீடு செய்தது. 10,000 பள்ளிகளுக்கு வானொலி மற்றும் ஒலிப் பதிவுக் கருவிகள் வழங்கப்பட்டன.

**பள்ளிக் கல்வி**

6-18 வயது தொகுதியினரின் கூடுதல் மாணவர் சேர்க்கைக் காரணமாக கூடுதலாகத் தேவைப்படும் ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு அரசு, கீழ்க் குறிப்பிட்டுள்ள ஆசிரியர் பணியிடங்களை 1991-92-ஆம் ஆண்டு அனுமதித்துள்ளது:

1. இடைநிலை ஆசிரியர்கள் (மாதம் ரூ.800 தொகுப் பூதியம்) .. 1200 பணியிடங்கள்

2. உயர் பள்ளித் தலைமையாசிரியர்கள் .. 20 பணியிடங்கள்

3. பட்டதாரி ஆசிரியர்கள் (இளநிலை) தமிழாசிரியர்கள் (இளநிலை) (மாதம் ரூ.1,400 தொகுப்பூதியம்) 145 பணியிடங்கள்

4. முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் (இளநிலை) (மாதம் ரூ.1,750 தொகுப்பூதியத்தில்) 120 பணியிடங்கள்

**பள்ளிகளுக்குச் சுற்றுப்புறச் சூழல் கல்வி**

பள்ளிகளில் சுற்றுப்புறச் சூழல் கல்வித் திட்டம் முதற்கட்டமாக தென்னார்க்காடு மாவட்டத்தில் ரூ.34 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டமான ரூ.33.86 இலட்சம்



★ மனிதனுடைய ஒழுக்கம், நாணயம்; நேர்மை முதலானவை- அவற்றை உடைய மனிதனுக்குப் பெருமை அளிப்பது மாத்திரமல்லாமல், அவனைச் சுற்றியுள்ள எல்லா மக்களுக்கும் நன்மை அளிப்பதுமாகும்.

—தந்தை பெரியார்

செலவில் தருமபுரி மாவட்டத்திலுள்ள 1,746 தொடக்க மற்றும் 173 நடுநிலைப் பள்ளிகளில் 1991-92-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. பள்ளிகளில் செடிகள் வளர்த்தலும், பயன் தரும் மரங்கள் மற்றும் பிற மரங்களைப் பள்ளி வளாகத்தில் வளர்த்து சுற்றுப்புறச் சூழலைச் சிறப்படையச் செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**அறிவியல் கல்வி - தொழிற்கல்வி**

1986-ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் போதிக்கப்படும் அறிவியல் கல்வியின்தர மேம்பாடு சிறப்பாய் வலியுறுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 1,769 உயர்நிலைப் - மேல்நிலைப் பள்ளிகள் ரூ.599.98 இலட்சம் பெறுமானமுள்ள அறிவியல் உபகரணங்கள் மற்றும் நூல்நிலைய நூல்கள் ஆகியவற்றைப் பெற்றுள்ளன. மேலும் நடுவணரசின் திட்டத்தின் கீழ் கல்வியை தொழிற்கல்வியாக மாற்றும்பொருட்டு, 940 புதிய தொழிற்கல்விப் பிரிவுகள் துவங்க 340 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ.568.55 இலட்சம் செலவில் உபகரணங்கள் மற்றும் கட்டடம் ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. கிராமப்புற மாணவர்களிடையில் திறமை மிக்க மாணவர்களைத் தேர்ந்தெடுத்து ஊக்குவிப்பதற்கான திட்டமொன்றைச் செயல்படுத்த அரசு முடிவெடுத்து, அத்திட்டத்தின்படி, கிராமப்புறங்களில் படிக்கும் மாணவ மாணவியருக்கு எட்டாம் வகுப்பின் இறுதியில் மாவட்ட அளவில் ஒரு தேர்வு நடத்தி தேர்ச்சியில் முதலில் வரும் 50 மாணவர்கள் மற்றும் 50 மாணவியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு மாணவ மாணவிக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.1,000 வீதம் ஊக்குவிப்புப் படிப்புதவித் தொகை அம்மாணவ மாணவி பன்னிரண்டாம் வகுப்பு முடிக்கும் வரை அளிக்கப்படும்.

**பள்ளிகளில் புதிய கட்டடங்கள் கட்டுதல்**

அரசுப் பள்ளிகளுக்குப் போதிய வகுப்பறைகள் இல்லாததால் 64 அரசு உயர்நிலை - மேல்நிலைப் பள்ளி



களில் மூன்று வகுப்பறைகள் "ஹட்கோ" நிதி உதவியுடன் ரூ.300 இலட்சம் செலவில் புதிய கட்டடங்கள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. 1989-90 வரை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட 39 பள்ளிகளுக்கு ஆய்வுக்கூட உபகரணங்களுக்காக ரூ.35 இலட்சம் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**பள்ளிகள் திறத்தல்**

1991-92-இல் 21 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், 20 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், மிகப் பின்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்தில் 7 உயர்நிலைப் பள்ளிகள் அமைக்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம்**

கல்வியில் மேன்மை நிலையையும் சிறுபான்மைப் பிரிவினர்களின் கல்வி நிலையங்களில் திறமையான நிர்வாகத்தையும் ஏற்படுத்தவும் மற்றும் முறையான கல்வித் தரங்களை உறுதி செய்வதற்காகவும் ஆசிரியர்களுக்குப் பணிப்பாதுகாப்பிற்கு வகை செய்வதற்கும் தேவையான ஒழுங்குமுறைப்படுத்தும் நெறிமுறைகளை ஏற்படுத்த வேண்டும் எனக் கருதப்பட்டது. இதற்கென 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவு தயாரிக்கப்பட்டு சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டு 28.4.92 அன்று நிறைவேற்றப்பட்டது.

**அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளுக்கு நிதி உதவி வழங்குதல்**

கடந்த பல ஆண்டுகளாக அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் பல (தொடக்க, உயர்நிலை மற்றும் மேநிலைப் பள்ளிகள்) அரசின் நிதி உதவி இன்றி இயங்கி வந்தன (பள்ளி முழுவதுக்குமோ அல்லது பள்ளியின் சில பிரிவுகளுக்கோ). இவற்றில் சிறுபான்மைப் பள்ளிகள் சிலவற்றுக்கு நிதி உதவி வழங்குவது குறித்து சென்னை உயர் நீதிமன்றம் ஆணைகள் பிறப்பித்திருந்தது. இப்பொருள் பல ஆண்டுகளாக அரசின் பரிசீலனையில் இருந்து வந்தது.

தற்போதைய அரசு ஜூன் 1991-இல் ஆட்சிக்கு வந்த உடன் இவ்விஷயத்தைத் தீவிர ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு மாநில அரசின் நிதி நிலைக்குட்பட்டு இப்பிரச்சினைக்கு நியாயமான பரிகாரம் வழங்க வேண்டும் என்று கருதியது. பொருத்தமான வரன்முறைகளின் அடிப்படையிலும் இப் பள்ளிகளின் கோரிக்கைகள் குறித்து நியாயமான பரிகாரத்தை அரசுக்குப் பரிந்துரை செய்வதற்காக வல்லுநர் குழுக்களை அரசு நியமித்தது. அவ் வல்லுநர் குழுக்கள் வழங்கிய அறிக்கைகளின் அடிப்படையில் 1987-88-ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரும் தொடங்கப்பட்ட அனைத்து அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளுக்கும் வல்லுநர் குழுக்கள் பரிந்துரைத்த ஆசிரியர் - மாணவர் விகிதத்தின் அடிப்படையில் அனுமதிக்கத்தக்க பணியிடங்களுக்கு அரசு நிதி உதவி வழங்கலாம் என அரசு முடிவு செய்தது. இதன்படி இத்தகைய 332 சிறுபான்மை மற்றும் சிறுபான்மையினரல்லாத அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஆரம்ப, உயர்நிலை மற்றும் மேநிலைப் பள்ளிகள் பயனடையவும் விதத்தில் ஆண்டொன்றுக்கு ரூ.2.60 கோடி செலவில் 746 பணியிடங்களுக்கு அரசு 1.6.91 முதல் அரசு மானியம் அனுமதித்து 1.4.92 அன்று அரசாணைகள் வெளியாகியுள்ளன.

**முழு எழுத்தறிவுத் திட்டம்**

நூறு சதவீத எழுத்தறிவு இயக்கம் மக்கள் சக்தியையும், தன்னிறைவுத் தொண்டு நிறுவனங்களின் உதவியையும் திரட்டி 15- 35 வயதுப் பிரிவு மக்கட்கு முழுமையான எழுத்தறிவு வழங்க 1991- 92-ஆம் ஆண்டு முதற் கட்டமாக கீழ்க்கண்ட ஏழு மாவட்டங்களில் அறிவொளி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு 18.34 இலட்சம் பேருக்கு எழுத்தறிவு அளிக்கும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, திருநெல்வேலி கட்டபொம்மன், வட ஆர்க்காடு-அம்பேத்கர், மதுரை.

இரண்டாவது கட்டமாக 1992-93-இல் மேலும் கீழ்க்கண்ட பத்து மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இராமநாதபுரம், கோயம்புத்தூர், தர்மபுரி, பெரியார், திண்டுக்கல்-அண்ணா, சென்னை, தென் ஆர்க்காடு, சேலம், நாகப்பட்டினம்-காயிதே மில்லத், தஞ்சாவூர். எஞ்சிய மாவட்டங்களில் 1993-94-இல் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மேற்கண்ட திட்டத்திற்கான நிதியை மத்திய மாநில அரசுகள் 2:1 என்ற விகிதத்தில் ஏற்கும்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், புதிய கல்விக் கொள்கைக்கிணங்க தயாரிக்கப்பட்ட 1 முதல் 12 வரையிலான வகுப்புகளுக்குத் தரமான பாட நூல்களை நியாயமான விலையில் வெளியிடுகின்றது.

1991-92-ஆம் கல்வி ஆண்டில் 457 இலட்சம் பாடநூல் படிகள் மாநிலத்திலுள்ள 118 இலட்சம் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும், மாநில அரசின் இலவசப் பாட நூல் வழங்கும் திட்டத்தின் கீழ், ரூ.18.30 கோடி பெறுமானமுள்ள 3.36 கோடி பாட நூல் படிகளை இந்நிறுவனம் வழங்கியுள்ளது. இவற்றால் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் 64 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர். பாட நூல் நிறுவனம் குறிப்பேடுகளையும் தயாரித்து மாணவர்களுக்குச் சீரான விலையில் வழங்கி வருகிறது. 1991-92-ஆம் ஆண்டு ரூ.325 இலட்சம் பெறுமானமுள்ள குறிப்பேடுகள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**கல்லூரிக் கல்வி**

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் புதிய பெண்கள் கல்லூரி ஒன்றை ரூ.32.39 இலட்சம் செலவில் அடிப்படை வசதிகளுடன் 1991-92-ஆம் ஆண்டில் நிறுவுவதற்கும், 1992-93-ஆம் கல்வி ஆண்டில் வேலை வாய்ப்பிற்குரிய படிப்புப் பிரிவுகளுடன் செயற்படுவதற்கும் அரசு ஆணையிட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட படிப்புப் பிரிவுகள் அக்கல்லூரியில் அளிக்கப்படும்.

1. இளஅறிவியல் (கணிதம்)
2. இளஅறிவியல் (கணிப்பொறி அறிவியல்)
3. இளங்கலை (Corporate Secretaryship)
4. இளங்கலை (Bio Chemistry)

இது ஓர் பெண்கள் கல்லூரி என்பதால் மாணவியர் விடுதி ஒன்றும் இணைக்கப்பட்டிருக்கும்.

பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சி அமைப்புகள் மற்றும் நிலைக்கட்டளைகளைச் சிறந்த முறையில் மேலாண்மை செய்வதற்காகவும் அதன் அலுவலல் முறைக்குழு நீண்டகாலத் திட்டங்களைத் தீட்டுவதற்கும் நிறைவேற்றுவதற்கும் இயலும் வகையில் மேற்படி அறக்கட்டளையின் மேலாண்மை அரசிடம் மேவியிருக்கச் செய்யும் கால அளவை மேலும் மூன்று ஆண்டுகட்கு நீட்டிக்க வகை செய்யும் எண்ணம். 1992-ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப்பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக்கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டம் 1992-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இயற்றப்பட்டது.

**1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு**

கல்வியில் மேன்மை நிலையையும், சிறுபான்மைப் பிரிவினர்களின் கல்வி நிலையங்களை நிருவகிப்பதில் திறப்பாட்டையும் எய்துவதற்கு விழைகின்ற ஒழுங்குமுறைப்படுத்தும் வகைமுறைகளைச் செய்வதற்கும் முறையான கல்வித் தரங்களை உறுதி செய்வதற்காகவும் ஆசிரியர்களுக்குப் பணிப்பாதுகாப்பிற்கு வகை செய்வதற்காகவும் வேண்டி, 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவு தயாரிக்கப்பட்டு சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டு 28.4.92 அன்று நிறைவேற்றப்பட்டது. அது குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்குப் பின்னர் சட்டமாக வெளியிடப்படும்.

**தொழில்நுட்பக் கல்வித் துறை**

கடந்த ஓராண்டில் தொழில்நுட்பக் கல்வித் துறை கீழ்க்கண்ட சாதனைகளை எய்தியது:

பொறியியற் பட்டப்படிப்பிற்கான வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் அரசு மானியம் பெறும் 3 பொறியியற் கல்லூரிகளிலும் கல்லூரி ஒன்றுக்குக் கூடுதல் மாணவர் சேர்க்கை 24 என்ற விகிதத்தில் ஆணை வழங்கப்பட்டது. தற்காலிகமாக மூடி வைக்கப்பட்டிருந்த இரண்டு தனியார் பொறியியற் கல்லூரிகள் மீண்டும் துவக்கப்பட்டன.





★ காலம் மாறக்கூடியது;
மாறிக்கொண்டுதான் இருக்கும்;
காலத்திற்கேற்பக் கருத்தில்
மாற்றம் வேண்டும்; மாறாத
சமுதாயம் மறைந்து விடும்.

—அறிஞர் அண்ணா

* அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஒப்புதலுடன் கூடிய முழு நேர எம்.இ. (என்விரோன் மெண்ட்டல் என்ஜினியரிங்) பாடம் கோவை அரசினர் பொறியியற் கல்லூரியில் துவங்கியது.

* இத்துறையின்கீழ் இயங்கிவரும் கல்லூரிகளில் வளர்ந்துவரும் பொறியியற் துறைகளில் பட்டப்படிப்புகள் துவங்கப்பட்டன.

அ. கணிப்பான் பொறியியலில் 1991-92-ஆம் ஆண்டு முதல் பட்டப்படிப்பு ஒரு கல்லூரியில் துவங்கப் பட்டது.

ஆ. மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் துறையில் பட்டப்படிப்பு 1991-92-ஆம் ஆண்டு முதல் ஒரு கல்லூரியில் தொடங்கப்பட்டது.

* பின்தங்கிய மாவட்டமான தர்மபுரியில் உள்ள பர்கூரில் பொறியியற் கல்லூரி தொடங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

* மலைவாழ் மக்களின் நலனுக்காக நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் நீலகிரி தோட்ட உரிமையாளர் களின் கூட்டமைப்பினால் நடத்துப்பெறும் பல்தொழில் நுட்பப் பயிலகம் 1991-92-ஆம் ஆண்டு முதல் செயல் படத் துவங்கியது.

* ஆதிதிராவிட மாணவர்களுக்கு 'ஆட்டோமொபைல் என்ஜினியரிங்'-இல் பயிற்சி பெறத்தக்க வகையில் 10 ஆதி திராவிட மாணவர்கள் சென்னையிலுள்ள இந்துஸ்தான் தொழில் நுட்பப் பயிலகத்தில் பயிற்சி பெற சிறப்பு ஆணைகள் வழங்கப்பட்டன.

* மகளிர் தொழில் நுட்பப் பயிலகங்கள் மகளிர் மட்டுமே முதல்வராகப் பணியாற்றும் நிலையினை உண் டாக்க ஏதுவாக அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

மாணவர்களின் நலனைக் கருதி தொழில் நுட்பப் பயிலகங்களில் (Polytechnic) சேர்வதற்கான அதிகப் பட்ச வயது வரம்பினைத் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பு மாணவர்களுக்கு 22 ஆண்டிலிருந்து 25 ஆண் டாகவும், மற்றவர்களுக்கு 20 ஆண்டிலிருந்து 22 ஆண்டாகவும் உயர்த்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

* சுயநிதிப் பொறியியற் கல்லூரிகளிலும் தொழில் நுட்பப் பயிலகங்களிலும் பயிலும் / கட்டணச் சலுகை பொருந்தும் வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. நுட்பப் பயிலகங்களிலும் பயிலும் மாணவர்களுக்கு அரசு நிறுவனங்களால் இயக்கப்படும் பேருந்துகளில் 50 சதவிகித கட்டணச் சலுகை பொருந்தும் வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

கீழ்க்கண்ட பொறியியற் கல்லூரிகளில் பல ஆண்டு களாகத் தொடர்ந்து வந்த ஆசிரியர் பற்றாக்குறையினைப் போக்கும் முயற்சியாகக் கூடுதலாக ஆசிரியப் பணி யாளர்கள் பணியமர்த்த ஆணைகள் வழங்கப்பட்டன

அ. அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை.
ஆ. அழகப்பா பொறியியற் கல்லூரி, காரைக்குடி
இ. அரசினர் பொறியியற் கல்லூரி, திருநெல்வேலி
ஈ. தியாகராசர் பொறியியற் கல்லூரி, மதுரை

* சேலம் அரசினர் பொறியியற் கல்லூரியில் கூடு தலாக மாணவியருக்கென விடுதிகள் ரூ. 21 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

* சேலம் அரசினர் பொறியியற் கல்லூரியில் ரூ. 28 இலட்சம் செலவில் மின்னணுவியல் மற்றும் தொடர் பியல் துறைக்கெனத் தனியாகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன.

மாமல்லபுரம் சிற்பக் கலைக் கல்லூரியில் மாணவர் விடுதி கட்டவும் கூடுதலாக வகுப்பறை வசதிகள் உண் டாக்கவும் ரூ.29 இலட்சம் செலவில் திட்டங்கள் நிறை வேற்றப்பட்டு வருகின்றன.

திருநெல்வேலி அரசினர் பொறியியற் கல்லூரியில் ரூ.14.50 இலட்சம் செலவில் கூடுதல் கணிப்பான் மைய வசதிகள் அமைக்கப்பட்டன.

தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்திற்குக் கூடுதலாக சுமார் 10,000 சதுர அடி அளவிலான கட்டடங்கள் கட்டும் பணி நிறைவேறியது.

சென்னை மையத் தொழில் நுட்பப் பயிலகத்தில் முதுநிலை பட்டயப் படிப்பிற்கெனக் கணிப்பான் மையம் அமைக்கப்பட்டது.

* கனடா நாட்டின் பல்வேறு நாடுகளின் வளர்ச்சிக் கான அமைப்பின் நிதியுதவியுடன் தொழில் நுட்பப் பயிலகங்களின் ஆசிரியர்கள் கனடா நாட்டில் கற்பித் தலுக்கான முறைகளில் பயிற்சி பெறத் திட்டம் செயல் பட்டு வருகிறது.

**பல்கலைக்கழகக் கல்வி**

பல்கலைக்கழகங்களின் ஒட்டுமொத்த பராமரிப்பு மானியம் கடைசியாக 1986-87-இல் உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டது. பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு, பல்கலைக்கழக மானியக்குழு ஊதிய விகிதங்கள் நடை முறைப்படுத்தப்பட்டாலும், ஆசிரியரல்லாத ஊழியர் களுக்கு ஐந்தாவது ஊதியக் குழுவின் ஊதிய விகிதங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டாலும், சில அகவிலைப்படி தவணைகள் வழங்கப்பட்டாலும், பல்கலைக்கழகங் களின் செலவினங்கள் கணிசமாக அதிகரித்து பல்கலைக் கழகங்களில் நிதி நெருக்கடியினை தவிர்ப்பதற்காக, இந்தப் புதிய அரசு, பல்கலைக்கழகங்களின் ஒட்டுமொத்த பராமரிப்பு மானியத்தினை 1.4.1991 முதல் உயர்த்தி நிர்ணயம் செய்து ஆணை வெளியிட்டுள்ளது. இந்த உயர் நிர்ணயத்தினால், அரசுக்கு ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக ரூ.7 கோடி (ரூபாய் ஏழு கோடி) நிதிச்சுமை ஏற்படும்.





**சட்டங்கள்**

அரசு பதவியேற்றபின்பு, பல்கலைக்கழகங்களின் செயல்பாட்டினைச் செம்மைப்படுத்துவதற்காக, பல் கலைக்கழகச் சட்டங்கள் திருத்தப்பட்டன. புதியவர்கள் பல்கலைக்கழகங்களின் அமைபுகளில் உறுப்பினர்களாகப் பதவி வகிக்கவகை செய்யும் வழியில், தகுந்த மாற்றங்கள் செய்து திருத்தங்கள் செய்யப்பட்டன. பல்கலைக்கழகங் களின் துணைவேந்தர்கள் நியமன விஷயத்தில் வேந்தர், இரண்டாவது பட்டியலொன்றைப் பெற்று, அதிலிருந்து ஒருவரைத் துணை வேந்தராக நியமனம் செய்யக்கூடிய வகையில் திருத்தங்கள் செய்யப்பட்டன. பல்கலைக்கழக உறுப்பினர்களின் பதவிக் காலத்தினை அவர்களது தேர்வு மையம், நிறுவனம் மற்றும் பணிக்காலத்தோடு இணைத்து மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் சேர்த்து ஒரு பொதுவான பல்கலைக் கழகச் சட்டம் கொண்டுவரும் பொருள் அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.

1986-ஆம் ஆண்டைய தேசியக் கல்விக் கொள்கை யில், மாநிலங்களில் உயர்கல்வித் தரத்தினை உயர்த்தவும் இணைத்துச் செயல்படுத்தவும், ஒரு உயர்கல்வி மாநில மன்றம் நிறுவப்படுவது குறித்து பரிந்துரைகள் உள்ளன. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் நிறுவுவதற்கான சட்ட முன்வடிவு கடந்த வரவு-செலவு திட்டச் சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்டது. வரும் ஆண்டில் இந்த மன்றம் நிறுவப்படும்.

**ஈரோடு பல்நோக்கு விளையாட்டரங்கம்**

பெரியார் மாவட்டத்திலுள்ள ஈரோட்டில் வ.உ.சி. பூங்காவில் பல்நோக்கு விளையாட்டரங்கம் ஒன்று ரூ.62 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. இவ்விளையாட் டரங்கம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காங்கேயத்தில் 22.1.92 அன்று திறந்து வைக்கப்பட்டது. இவ்விளையாட்டரங்கத்தில் வி.ஐ.பி. கூடம் (Gallery) ஒன்றும், 3000 பார்வையாளர்களுக்கான கூடம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 100 விளையாட்டு வீரர்கள் தங்கி ஓய்வு பெறுவதற்கான ஓய்வுக் கூடமும், அலுவலக அறைகள், சிறகு பந்து (Shuttle-cock Indoor Stadium) உள் விளையாட்டு அரங்கமும், விருந்தினர்கள் தங்குவதற்கான அறைகள் விளையாட்டுப் பொருட்கள் வைக்கும் அறை, மாற்றுடை அறை, குளியல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் அமையப் பெற்றுள்ளது.

இவ்விளையாட்டரங்கில் 400 மீட்டர் டிராக் வசதி, கால்பந்து களம், வளையப் பந்து களம், கையுந்துப் பந்து களம், கூடைப்பந்துக் களம் மின்ஒளி அமைப்புடன் (Flood-lit) கபாடி, கோ-கோ களம் ஆகியவைகள் அமையப்பெற்றுள்ளன. மேலும் உள்விளையாட்டரங்கில் சிறகுப் பந்து, ஷட்டில் பேட்மிட்டன், டேபிள் டென்னிஸ், ஜிம்னாஷியம் மற்றும் பளு தூக்கும் விளையாட்டுக்கள் விளையாட வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

**10-வது ஜவகர்லால் நேரு தங்கக்கோப்பை அழைப்பு பன்னாட்டுக் கால்பந்துப் போட்டி, 1993.**

10-வது ஜவகர்லால் நேரு தங்கக்கோப்பை அழைப்பு பன்னாட்டுக் கால்பந்துப் போட்டியை 1993 ஜனவரியில் நடத்தும் சிறந்த வாய்ப்பு தமிழ்நாட்டுக்குத் தரப்பட்டுள் ளது. சென்னை நேரு விளையாட்டு அரங்கத்தில் இந்த பெருமைக்குரிய போட்டியை நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. தற்போது உள்ள நேரு விளையாட்டு அரங்கத்தைப் பன்னாட்டுத் தரம் உள்ளதாக மேம் படுத்தும் நோக்கத்தோடு புதுப்பிக்கவும், புதுமையாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அரங்கத்தைப் புதுப் பிப்பதற்கு ஆகும் உத்தேசச் செலவு சுமார் முப்பது கோடி ரூபாய்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஐந்து கோடி ரூபாய் நல்கும்படி இந்திய அரசைக் கேட்டுள்ளார். நேரு விளையாட்டு அரங்கத்தை 1993 நேரு கோப்பைப் போட்டியை நடத்தும் அளவிற்குப் புதுப்பிக்கவும், மேம்படுத்தவும் இந்திய அரசு உடனடியாக இரண்டு கோடி ரூபாய் நல்கியுள்ளது. மாநில அரசு ஐந்து கோடி ரூபாய் வழங்கத் திட்டமிடப்பட்டுள்து. எஞ்சிய தொகை வள்ளல்கள் மற்றும் விளையாட்டை விரும்பும் மேன் மக்கள் முதலானோரிடமிருந்து நன்கொடையாகப் பெறப் படும். இந்த விளையாட்டு அரங்கில் வணிகக்கடை அறை களும் அமைக்கப்படவிருப்பதால் சென்னை மாநகராட்சி இதற்காக வங்கிகளிடமிருந்து கடன் வசதியையும் பெற முடியும். நேரு விளையாட்டு அரங்கைப் புதுப்பிக்கவும் புதுமையாக்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

# மது 'விடம்' நெருங்காதீர்

கவிஞர் பல்லவன்



மதுவிடம் நெருங்காதீர்-மயக்கும்
மது'விடம்' நெருங்காதீர்!
(மதுவிடம்)

மதியினை அழிக்கும்!
மரணத்தை அழைக்கும்!
இதயத்தை அரிக்கும்!
எலும்பையும் எரிக்கும்!
(மதுவிடம்)

குலப்புகழ் சிதைக்கும்!
குடும்பத்தைக் குலைக்கும்!
வளர்ச்சியைக் தடுக்கும்!
வாழ்க்கையைக் கெடுக்கும்!
(மதுவிடம்)

வருவாயைப் பறிக்கும்!
வறுமையை அளிக்கும்!
குருமொழி பழிக்கும்!
கொலைவெறி வளர்க்கும்!
(மதுவிடம்)

பெண்களை வதைக்கும்!
பிள்ளையை உதைக்கும்!
அன்னையை வெறுக்கும்!
அறிவுரை மறக்கும்!
(மதுவிடம்)

விழிகளை உருட்டும்!
வீதியில் புரட்டும்!
பழிசெய விரட்டும்!
பகையினைத் திரட்டும்!
(மதுவிடம்)



# மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டும் மருத்துவ நலப் பணிகள்

"சுகாதாரம் மற்றும் மருத்துவ நலம் அளிப்பதில், நாட்டில் அனைத்து மாநிலங்களைக் காட்டிலும், தமிழகம் முன்னோடியாகத் திகழ்கிறது. 'புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மருத்துவ நலத்திட்டம்' கிராமப் புறங்களில் உள்ள ஒவ்வொரு துணைச் சுகாதார மையத்திலும், நகராட்சிப் பகுதியிலுள்ள சுகாதார மையங்களிலும் ஒரு சுகாதார முகாம் நடத்தப்படுகிறது."



மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
**எஸ். முத்துசாமி**

சுகாதாரம் மற்றும் மருத்துவ நலம் அளிப்பதில் நாட்டில் அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் தமிழக அரசு முன்னோடியாகத் திகழ்கிறது.

தமிழகம் முழுவதும் விரிந்து பரந்து சீராகச் செயல்பட்டு வருகின்ற சுகாதாரம் மற்றும் மருத்துவ நிறுவனங்கள், மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் பணிகளை ஆற்றிவருகின்றன. இந்நிறுவனங்களில், போதுமான மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் ஆகியோரை மாநில அரசு நியமித்துள்ளது. நவீன முறையில் நோய்களைக் கண்டறிந்து தக்க மருத்துவம் அளிப்பதற்கு வசதியாக இந்நிறுவனங்களில் நவீன கருவிகள் வாங்கப்பட்டு மருத்துவச் சிகிச்சை அளிப்பதில் முன்னேற்றம் காணப்படுகிறது.

இந்தச் சூழ்நிலையில் மக்களுக்கான சுகாதார முகாம் என்ற புரட்சிகரமான கருத்து அனைவருடைய கவனத்தையும ஈர்த்துள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 18.1.1992- ஆம் நாளன்று "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மருத்துவ நலத்திட்டம்" என்ற நல்வாழ்வுத் திட்டத்தைத் தொடங்கினார்கள்.

இத்திட்டத்தின்படி, கிராமப்புறங்களில் உள்ள ஒவ்வொரு துணைச் சுகாதார மையத்திலும், நகராட்சிப் பகுதியில் உள்ள சுகாதார மையங்களிலும் ஒரு சுகாதார முகாம் நடத்தப்படுகின்றது. கிராமப்புறங்களில், 5,000 மக்கள் தொகை கொண்ட இடத்தில் ஒரு துணைச் சுகாதார மையம் உள்ளது. பொதுவாக அப்பகுதியில் உள்ள மக்களுக்கு உதவியாகக் கிராமச் சுகாதாரச் செவிலியர் ஒருவர் பணிபுரிந்து வருகிறார். இவர், பேறுகாலத்திற்கு முன்னர் பதிவு செய்தல், இரும்புச்சத்து மாத்திரைகளை (Folic acid tablets) வழங்குதல், இசிவுநோய்த் தடுப்பூசி போடுதல், மகப்பேறு இடத்தை நிர்ணயிப்பதில் கருவுற்ற தாய்மார்களுக்கு உதவுதல் போன்ற தாய் சேய் நலப்பணிகளைச் செய்து வருகிறார். மகப்பேறு காலத்தைத் தொடர்ந்து, குழந்தைகளுக்குத் தடுப்பு ஊதி போடுதல் போன்ற எல்லாப் பணிகளையும் அவர் செய்கிறார்.

ஆரம்பச் சுகாதார நிலையங்களில் நோயாளிகள் மருத்துவர்களின் உதவியை நாடிவரும்போது, செவிலியர், மருத்துவரின் உதவிக்கு ஏற்பாடு செய்கிறார்கள். துணைச் சுகாதார நிலையங்கள்

அமைந்த பகுதியில் வாழும் மக்கள், அரசு மருத்துவரிடமிருந்து மருத்துவ அறிவுரை பெறுவதற்கு ஆரம்பச் சுகாதார நிலையங்களக்குச் செல்ல வேண்டியுள்ளது. ஏழை, எளிய மக்களின் இத்துன்பங்களைப் போக்க மாண்புமிகு முதலமைச்சர் அறிமுகப்படுத்திய இத்திட்டத்தின் கீழ் மருத்துவர் குழு ஒன்று ஒவ்வொரு துணைச் சுகாதார நிலையத்தையும் பார்வையிட்டு, சுகாதார முகாமை ஏற்படுத்தி நோயாளிகளைப் பரிசீலனை செய்கிறது. இம் முகாம்கள் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை செயல்படுகின்றன. ஒவ்வொருவரையும் மருத்துவப் பரிசோதனை செய்வது மட்டுமன்றி, மக்கள் சுகாதார அறிவு பெறவும், இம்முகாம் வாய்ப்பு அளிக்கிறது. இரத்தம், சிறுநீர், சளி முதலியவற்றை உடனடியாகச் சோதனை செய்ய ஒரு ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுநரும் இருக்கிறார். மக்களைக் கண் சம்பந்தமாக நோய்களிலிருந்து காப்பாற்றி கண் சிகிச்சைகளும் நடத்தப்படுகின்றன.



குறிப்பிட்ட பகுதியில், நோயின் தன்மையைக் கண்டறிய இம்முகாம்கள் நடத்தப்படுகின்றன. தோல் நோய்கள், மூச்சுக் கோளாறு நோய்கள் மட்டுமன்றி, இதயம் சம்பந்தப்பட்ட நோய்களும் அறியப்படுகின்றன. அரசின் இந்நன்முயற்சிக்கு நோயாளிகளிடத்தில் மருந்துகளைப் பகிர்ந்தளிப்பதற்காக மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உதவி செய்கின்றன.

சுகாதார ஆய்வு முகாம்களை மக்கள் விரும்பி வரவேற்கின்றனர். அவர்கள் பெருந்திரளாக வந்து, அரசு அளிக்கும் இந்த நல்வாழ்வுத் திட்டப் பணிகளை நன்கு பயன்படுத்திக் கொள்கின்றனர்.

நோய் கண்டுள்ளவர்கள் என்று இம்முகாம்களின்போது கண்டறியப்பட்டவர்களுக்குத் தொடர்ந்து சிகிச்சையளிக்க நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

**கூடுதல் படுக்கை வசதிகளை ஏற்படுத்துதல்**

இவ்வாண்டில், அரசு, ஒவ்வொரு வட்ட மருத்துவமனையிலும் குறைந்தது 32 படுக்கைகளுக்கு வகை செய்வது என்ற குறிக்கோளை எய்தியுள்ளது. இந்தக் குறிக்கோளை எய்த 14 வட்ட மருத்துவமனைகளிலுள்ள படுக்கைகளில் எண்ணிக்கை 222 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், படுக்கைகளின் எண்ணிக்கை 1000-லிருந்து 1020 ஆக அரசு உயர்த்தியுள்ளது.

**மக்களுக்கு மருத்துவ வசதிகளை அளித்தல்**

போதுமான அளவுகளிலும், தரங்களிலும், வகைகளிலும் மருந்துகள் கிடைத்தாலன்றி மற்றப்படி, பல்வேறு அடிப்படை வசதிகளை நிறவினாலும், மருத்துவப் பணியாளர்களைப் பணியிலமர்த்தினாலும், மக்களுக்கு மருத்துவச் சேவை புரிதல் என்ற குறிக்கோளை எய்த இயலாது என்பதை அரசு நன்கறியும்.

மருத்துகளை வாங்குவதற்காக மருந்துகள் ஒதுக்கீடு பற்றி மாண்புமிகு முதலமைச்சர் இவ்வாண்டில் ஆய்வு செய்தார். மருந்துப் பொருள்களின் விலை அதிகரித்ததன் காரணமாக ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளைச் சரி செய்வதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் மருந்துப் பொருள்களுக்கான ஒதுக்கீட்டை உடனடியாக உயர்த்துவதற்கு அவர் ஆணை பிறப்பித்தார். 1991-92- ஆம் ஆண்டு தொடக்கத்தில் சுமார் ரூ.43 கோடியாக இருந்த ஒதுக்கீடு அதே ஆண்டில் மேலும் ரூ.6 கோடி உயர்த்தப்பட்டு, 1992- 93-ஆம் ஆண்டில் ரூ.53 கோடியாக மேலும் அதிகரிக்கப்பட்டது. 1991-92-ஆம் ஆண்டில் வட்ட/மாவட்ட/மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் போதுமான அளவு மருந்துப் பொருள்கள் இல்லை.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இப்பிரச்சினையைத் தீர்க்க அவசர நடவடிக்கைகள் எடுக்குமாறு ஆணை பிறப்பித்தார். அதன்படி, அரசு தலையிட்டு, 15 நாட்களுக்குள் ரூ.6 கோடி மதிப்புள்ள மருந்துகளைக் கொள்முதல் செய்து, பிரச்சினையை முழுவதுமாகத் தீர்த்தது. தற்போது அனைத்து மருத்துவமனை களிலும் போதுமான அளவில் மருந்துகள் கிடைக்குமாறு செய்யப்பட்டுள்ளது.

மருந்து கொள்முதல் கொள்கையில் நீண்ட காலச் சீர்திருத்தத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியம் பற்றி அரசும் உணர்ந்துள்ளது. மருத்துவமனைகளில் தரமான மருந்துகளைப் பயன்படுத்த அவற்றை வாங்குவதற்குத் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அனைத்து மருத்துவமனைகளிலும் போதுமான அளவு மருந்துகள் கிடைப்பது குறித்து மாநிலத்தில் உள்ள அனைவரும் பாராட்டியுள்ளனர்.



**ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பணி**

கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு உரிய நேரத்தில் முறையாக மருத்துவ வசதிகளை அளிக்க வேண்டிய அவசியம் பற்றி அரசு உணர்ந்துள்ளது. மாநிலத்தில் பெருமளவு காலியாக இருந்த பதவிகள் இவ்வாண்டில் நிரபப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிந்தெடுக்கப்பட்ட சுமார் 500 மருத்துவர்கள் நேரடியாகக் கலந்தாலோசித்த பின்னர் பணியிலமர்த்தப்பட்டனர். மாவட்டத் தலைமையிடத்திலிருந்து மருத்துவர்கள் குழு அடிக்கடி ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குச் சென்று அவற்றைப் பார்வையிட்டதன் மூலம் உரிய நேரத்தில் ஆரம்பச் சுகாதார நில்லயங்களைத் திறந்து, மக்களுக்கு மருத்துவ வசதிகள் அளிப்பது சீராக்கப்பட்டுள்ளது.

**பணியாளர் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை**

மருத்துவ நலப்பாதுகாப்பில் தொடர்ந்து பெரும் மேம்பாட்டினைக் கொண்டுவரும் பொருட்டு, அனைத்துப் பணியாளர்ச் சங்கங்களுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. மருத்துவப் பணியை மேம்படுத்துவதிலுள்ள நிருவாக இடையூறுகள், முட்டுக்கட்டைகள் ஆகியவற்றைக் கண்டறிவதற்காகப் பல்வேறு பணியாளர் சங்கங்களுடன் சுமார் 38 கூட்டங்கள் நடத்தப்பட்டன. நம்முடைய மருத்துவமனைகளில் உள்ள மருத்துவப் பணிகளில் அளவை அதிகரிக்க அனைத்துச் சங்கங்களும் முன் வந்துள்ளன. பணியாளர் சங்கங்களின் நியாயமான கோரிக்கைகளும், குறைகளும் உடனுக்குடன் கவனிக்கப்படும் என்று அரசு, அச்சங்கங்களுக்கு உறுதியளித்துள்ளது. மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனைகளில் மருத்துவப் பணிகளை மேம்படுத்துவதைப் பற்றி அரசு, பணியாளர் சங்கங்களுடன் கலந்துபேசி, அதுகுறித்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி விவாதிக்கும் பொருட்டு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை மருத்துவக் கல்லூரி/அரசு பொது மருத்துவமனை மற்றும் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் கூட்டங்கள் நடத்தியது.



**மாவட்ட மருத்துவமனைகள்**

மக்களுக்கு மருத்துவச் சிகிச்சை அளிப்பதை விரைந்து மேம்படுத்தும் பொருட்டு, அரசு கோயம்புத்தூர், நீலகிரி மாவட்ட மருத்துவ அலுவலர்கள் அனைவருடனும் விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. இக்கூட்டங்களில் பல்வேறு வட்ட மருத்துவமனைகளில் வெவ்வேறு சிறப்பு மருத்துவப் பிரிவுகளை அமைப்பதற்கான வாய்ப்புகள் பற்றி விவாதிக்கப்பட்டன. துப்புரவு, குடிநீர், பொதுமக்கள் பாதுகாப்பு, கட்டடங்கள் முதலியன போன்ற உள்ளூர் மருத்துவமனைகளில் காணப்படுகின்ற பிரச்சினைகள் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டன. இவ்விவாதங்களில் கிடைத்த அனுபவங்கள் அடிப்படையில், அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**எய்ட்ஸ் சிகிச்சைப் பிரிவு**

தமிழ்நாடு மாநிலத்தில் எய்ட்ஸ் நோய் குறித்த அச்சம் நன்கு உணரப்பட்டு வருகின்றது. இந்த அச்சத்தைப் போக்குவதற்கு எய்ட்ஸ் நோய் தடுப்புப் பிரிவு ஒன்றை அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இப்பிரிவு, அதிக அளவில் தொற்று நோய் உண்டாக்கும் கிருமிகள் பரவி 'எய்ட்ஸ்' நோய் உண்டாவதைத் தடுப்பது தொடர்பான பணிகளை வரையறுத்து ஒருங்கிணைத்துச் செயலாக்கும்.

**முதலமைச்சரின் பொது நிவாரண நிதி**

இதய நோய்கள், சிறுநீரகச் செயல் இழப்பு ஆகியவற்றில் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகள் மருத்துவ முறையில் அவற்றுக்குத் தீர்வுகாண பெருந்தொகை செலவு செய்ய வேண்டியுள்ளது. இந்நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கென மருத்துவமனைகளில் சிறந்த அடிப்படை வசதிகளுக்கு வகை செய்யப்பட்டிருப்பதுடன், இந்நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தொகை வழங்கி, அரசு தாராளமாக நிதியுதவி வழங்கி வருகிறது. மாற்றுச் சிறுநீரகம் பொருத்துவதற்கும், இருதய வால்வுகளை (Valve Replacement) மாற்றியமைப்பதோடு, இருதய அறுவைச் சிகிச்சையை மேற்கொள்வதற்கும், அரசு ரூ.20,000 வரையில் நிவாரண உதவித் தொகையை

உயர்த்தி வழங்குகிறது. ஏனைய வகைகளைச் சேர்ந்த இருதய அறுவைச் சிகிச்சைக்கு ரூ.15,000 வரையில் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. உதவி தேவைப்படுவோர் அரசினை அணுகும்போது அவர்களுக்கு நிவாரண உதவி வழங்குவதற்குரிய நடைமுறையை அரசு தளர்த்தி உள்ளது.

### பணி அமைப்பு நிலை நிருவாகம்

தமிழ்நாடு மருத்துவப் பணியில் மருத்துவர்களாகப் பணியாற்றும் மருத்துவர்கள், தாங்கள் சிவில் அறுவைச் சிகிச்சை மருத்துவர்களாகப் பதவி உயர்வு அடைவதற்குமுன்னர்;பல ஆண்டுகள் சிவில் உதவி அறுவைச் சிகிச்சை மருத்துவர்களாகப் பணியாற்றி வருகின்றனர். பணி அமைப்பு முறையில் தேக்க நிலை ஏற்பட்டு மருத்துவர்களிடையே ஆர்வமின்மை ஏற்படுத்துகின்றது. இம்மருத்துவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, மருத்துவப் பணி அமைப்பு நிலை திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 427 மருத்துவர்களின் பதவித்தரத்தை பொருத்தமான வகையில் நிலையுயர்த்தி ரூ.3,000-4,500 என்ற சம்பள விகிதத்தில் சிவில் அறுவைச் சிகிச்சை மருத்துவர்களாகப் பதவி உயர்த்தவும், முதுநிலை சிவில் அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள் 188 பதவிகளை ரூ.3,700 - 5,000 சம்பள வீதத்தில் பதவி உயர்த்தவும், அரசு ஆணை பிறப்பித்தது; இத்துடன் 404 முதுநிலை சிவில் உதவி அறுவைச் சிகிச்சை மருத்துவர்களின் பதவித் தரத்தை ரூ.2,500 - 4,200 என்ற சம்பள வீதத்தில் நிலையுயர்த்தி வருகின்றது. தமிழ்நாடு மருத்துவப் பணிகளில் பதவி உயர்வு வாய்ப்புகளை மேம்படுத்துவதோடு கூட, செவிலியர்கள், மருந்தாளுநர், பரிசோதனைக் கூட தொழில் நுட்ப வல்லுநர்கள் ஆகியோர் உட்பட துணை மருத்துவப் பணியாளர்களின் பிரச்சினைகளையும் அரசு கவனித்து வருகின்றது.

### குறைகள் தீர்க்கும் திட்டம்

மருத்துவமனைகளிலும், ஏனைய மருத்துவ நிறுவனங்களிலும் பணிபுரியும் பல்வேறு பணியாளர்கள், தொழிலாளர்கள், ஆகியோரின் குறைகளைத் தீர்க்க, அரசு உரிய முறையை ஏற்படுத்தியுள்ளது. பணியாளர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து, வகைப்படுத்த அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள், மருத்துவ அலுவலர்கள், இணை இயக்குநர்கள், மருத்துவக் கல்லூரித் தலைவர்கள் ஆகியோர் அனைவரும் ஒவ்வொரு மாதத்திலும் முதல் திங்கள்கிழமை அன்று குறை தீர்க்கும் நாளை நடத்துகின்றனர்.

### மருத்துவமனைகள் குறித்த மாவட்டக் குழு

சுகாதாரம் மற்றும் மருத்துவ நிறுவனங்களின் செயல்பாட்டை ஆய்வு செய்ய, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. இக்குழு, நிலைமையை அறிந்து, தேவையான மேம்பாடுகளைச் செய்வது குறித்து உள்ளூர் நிருவாகத்திற்கு ஒரு வாய்ப்பளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



பெண்களின் நிலை உயரும் போது ஆண்களின் நிலையும் உயரும், இவ்விருவரின் நிலையும் உயரும்போது மனித சமுதாயத்தின் நிலையே உயர்ந்துவிடும்

—காந்தியடிகள்

### குடும்பநலம்

தமிழ்நாடு 1991-92-ஆம் ஆண்டில் குடும்ப நல அறுவைச் சிகிச்சையில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டு மக்களுக்கு அளிக்கப்படும் சேவையை மேற்கொண்டும். மேம்படுத்தும் வகையில் தமிழ்நாட்டு மக்கள், அவர்களின் நீண்ட காலப் பயனுக்காகக் குடும்பநலத் திட்டத்தை ஏற்றுக் கொள்வதில் அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த அரசு, மேலும் 2 நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

1. ஒரேயொரு அல்லது இரண்டு பெண் குழந்தைகள் உயிரோடிருக்கிற குடும்பத்தின் உறுப்பினர் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும்போது அக்குடும்பத்தின் பெயரில் ரூ.2,000 வைப்பீடு செய்யப்படும்.

2. குடும்ப நலத்திட்டத்தை ஏற்றுக் கொள்பவர்களின் பயனுக்காக, பரிசுச் சீட்டுத் திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும், குடும்பநலத் திட்டத்தை ஏற்றுக் கொண்டவர்களிடையே ஒவ்வொரு திங்களிலும் பரிசுச் சீட்டு குலுக்கப்படும், பரிசு பெற்றவர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்படும். பரிசு பெற்றவர்களுக்கு முதல் பரிசாக 7.5 கிராம் எடையுள்ள ஒரு தங்கப்பதக்கமும், இரண்டாம் பரிசாக ஒவ்வொன்றும் 3.75 கிராம் எடையுள்ள மூன்று தங்கப்பதக்கங்களும் வழங்கப்படும்.

### ஏனைய சிறப்புத் திட்டங்கள்

அரசு இந்த ஆண்டு முதற்கொண்டு இந்திய மக்கள் தொகைத் திட்டம் V-ஐ, 8 புதிய நகரங்களுக்குத் நீட்டிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தும். இதேபோன்று, 'யுனிசெப்' நிறுவனம், உலக வங்கி ஆகியவற்றின் உதவியுடன், 1.4.92-ஆம் நாள் முதல் குழந்தை உயிர்க்காப்பு - தாய்மை நலத் திட்டம் செயல்படுத்தப்படும். ●



## போக்குவரத்துத் துறை

# திட்டங்களும் எட்டிய சாதனைகளும்

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்

**கே.ஏ. செங்கோட்டையன்**

**“கடந்த ஓராண்டில் மட்டும் புதிதாகச் சேர்ந்துள்ள பேருந்துகளின் எண்ணிக்கை 377. தொடங்கப்பட்ட புதிய வழித்தடங்கள் 371. இதனால் பயனடைந்த கிராமங்கள் 345. பயனடைந்த மொத்த மக்கள் தொகை 6.59 இலட்சம். இந்த ஆண்டில் மட்டும் வாங்கப்பட்ட புதிய பேருந்துகள் 1981.”**



இந்தியப் பெருநாட்டில் எந்த ஒரு மாநிலத்திற்குள் சென்று பார்த்தாலும், கேட்டாலும் ஒரு ஏகோபித்த கருத்தை நாம் அறிய முடியும். அது இந்தியாவிலேயே தமிழகம் தான் போக்குவரத்துத் துறையிலே மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது என்பது தான். இது ஒன்றும் மிகைப்பாட்டின் வெளிப்பாடல்ல. உண்மையின் நிலைப்பாடு!

ஏறத்தாழ 4¾ கோடி தமிழக மக்கள் வாழும் இந்த மாநிலத்தில் செயல்படும் பயணிப் பேருந்துகளின் எண்ணிக்கை 20,000-க்கும் சிறிது அதிகமாகும். அதில் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு மட்டுமே சொந்தமானவை 13,977 ஆகும். தனியாருக்குச் சொந்தமான பேருந்துகள் சுமார் 6,000-க்குச் சற்று அதிகமாகும். இந்த 14,000 பேருந்துகளும் தமிழக அரசின் 16 போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமானவையாகும். ஏற்கெனவே 15 அரசு போக்குவரத்துக் கழகங்களாகப் பணியாற்றிய நிலைமையை மாற்றி, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைப்படி 1.4.1992 முதல் காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு மறைந்த முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் அவர்களின் பெயரில் 16- வது போக்குவரத்துக் கழகம் தொடங்கப்பட்டு செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் சுமார் 650 பேருந்துகளுடன் தற்போது செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு செயல்படும் 16 போக்குவரத்துக் கழகங்களிலும் பணியாற்றும் மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு இலட்சத்து எண்பதாயிரமாகும்.

இவர்களெல்லாம் இந்த அரசுப் பேருந்துகளை நேரப்படி இயக்குவதன் காரணமாகத்தான் தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் அன்றாடம் பகல் இரவு என்று இல்லாமல் ஆயிரக்கணக்கான பேருந்துகள் செயல்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஒரு காலத்தில் பகல் நேரத்தில் மட்டும் தான் பஸ் பயணம். இரவு நேரப் பயணங்கள் என்பவை பெரும்பாலும் இரயில்வே மூலமாகத் தான் இருந்தது. இப்போது இருபத்தி நான்கு மணி நேரமும் பல இடங்களிலிருந்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பேருந்துகள் இடையறாது இயக்கப்படுகின்றன.

இதன் காரணமாக ஏறத்தாழ நாளொன்றுக்குச் சுமார் ஒரு கோடிக்கும் அதிகமான பயணிகள் எந்தவிதச் சிரமமும் இன்றிப் பயணம் செய்ய முடிகிறது. சென்னை நகரில் மட்டும் பல்லவன் போக்குவரத்துக் கழகம் சுமார் 35 இலட்சம் மக்களைச் சுமந்து செல்கிறது.

இவ்வளவு மக்களைச் சுமந்து செல்லும் பேருந்துகளைச் சரியான முறையில் பராமரித்து வைத்திருந்தால்தான் சொகுசான பயணத்தையும் குறிப்பிட்ட காலப் பயணத்தையும் எந்த ஒரு போக்குவரத்துக் கழகமும் உறுதி செய்ய முடியும். அந்த வகையில் இரவு நேரப் பராமரிப்பு, இரவு நேரத்தில் சுத்தம் செய்தல், பயன்பாட்டின் காரணமாக ஏற்படுகிற பழுதுகளை நீக்கி பயணத்திற்கு உதவியாக இருக்கும் வகையில் வாகனங்களை வைத்திருப்பது போன்ற அனைத்துப்பணிகளையும் ஒவ்வொரு போக்குவரத்துக் கழக நிர்வாகமும் மேற்கொண்டுள்ளன.

கடந்த ஓராண்டுக் காலப் புரட்சித் தலைவியின் புனித ஆட்சியில் ஒரு நாள்கூட இந்தத் துறையில் வேலை நிறுத்தம் என்னும் நிலை ஏற்படவில்லை. கடைந்தெடுத்த கம்யூனிச வாதம் பேசி ஆட்சிக்கு வந்தவர்கள் ஆட்சியில்கூட அடிக்கொரு வேலை நிறுத்தம் நடைபெறும் இந்த நாட்களில் இங்கே தமிழகத்தில் தன்னேரிலாத ஆட்சி நடத்தும் தாய்க்குலத்தின் ஒளி விளக்கு, டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே தேசிய காரணம் தவிர்த்து வேறு எந்தக் காரணத்தாலும் இங்கே வேலை நிறுத்தம் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. அதற்குக் காரணம் அன்னையின் பரிவும் ஆற்றல் மிக்க தலைமையின் அறிவு சார்ந்த ஆட்சி முறையுமாகும்!

அவருடைய ஆட்சியின் சாதனையைப் பட்டியல் போட்டுக் காட்டுவதென்பது

இரவு நேரத்தில் கண்சிமிட்டும் விண்மீன்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுவதற்கு ஒப்பாகும். எங்கெங்கு நோக்கினும் சக்தியடா என்பதைப் போல் இங்கே எங்கெங்கே நோக்கினும் சாதனையடா என்றுதான் சொல்லத் தோன்றும்.

எனவே இந்தச் சாதனைகளையெல்லாம் தொகுத்துக் காட்டிட முயன்றால் அதுவே ஒரு தொகை நூல்போலாகிவிடும். இருப்பினும் முக்கியமான சிலவற்றையேனும் இங்கே கோடிட்டுக் காட்டுவது புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியின் சாதனைகளைப் பொது மக்கள் அறிந்து கொள்ள உதவியாக இருக்கும்.

கடந்த ஆண்டில் மிகச் சிறந்த சாதனைகளாகக் கீழ்க்காணும் சாதனைகளை மட்டும் இங்கே பட்டியல் போட விரும்புகிறேன்.

கடந்த ஓராண்டில் மட்டும் புதிதாகச் சேர்ந்துள்ள பேருந்துககளின் எண்ணிக்கை 377. தொடங்கப்பட்ட புதிய வழித்தடங்கள் 371. இதனால் பயனடைந்த கிராமங்கள் 345. பயனடைந்த மொத்த மக்கள் தொகை 6.59 இலட்சம். இந்த ஆண்டில் மட்டும் வாங்கப்பட்ட புதிய பேருந்துகளின் எண்ணிக்கை 1981. இதில் கழிவு செய்யப்பட்ட பழைய பேருந்துகளுக்குப் பதிலாக விடப்பட்டவை 1404. எஞ்சிய 577 பேருந்துகள் புதிய வழித்தடங்களிலும், ஏற்கெனவே உள்ள வழித்தடங்களிலும் இயங்கிவரும் பேருந்துகளோடு கூடுதலாகச் சேர்க்கப்பட்டு இயக்கப்பட்டவையாகும்.

மேலும், சாலை வசதி கொண்டு 1000-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட எல்லாக் கிராமங்களுக்கும் இந்த ஆண்டின் முடிவுக்குள் போக்குவரத்து வசதி செய்ய தமிழகக் காவல் தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் அன்னையின் ஆணைப்படி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்.

தஞ்சை மாவட்டத்தில் கிடைக்கும் இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி வேறு சில நிறுவனங்கள் உதவியுடன் சோழன் போக்குவரத்துக் கழகம் டீசலுக்கு மாற்று எரிபொருளாக (C.N.G.)

பயன்படுத்தி வெள்ளோட்ட முறையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் ஒரு பேருந்து இயக்கிவைக்கப்பட்டதும் ஒரு சீரிய சாதனையாகும்.

சென்னையில் உள்ள திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இயங்கும் துரிதப் பேருந்துகள் உள்ள நிலையம் மிகுந்த இட நெருக்கடியில் சிக்கியிருந்ததன் காரணமாக திருவிதாங்கூர் மன்னர் பூங்காவின் இடம் இணைக்கப்பட்டு பேருந்து நிலையம் விரிவாக்கப்பட்டது. சென்னையிலிருந்து புறப்படும் துரிதப் பேருந்துகள் அனைத்தும் பாரிமுனையிலிருந்து இயக்கப்படுவதோடு,




வெளியூர்களிலிருந்து சென்னை நோக்கி வரும் துரிதப் பேருந்துகள் அனைத்தும் எம்.யு.சி. மைதானத்தில் நிறுத்தப்படும் நிலையும் இந்த ஆண்டில் உருவாக்கப்பட்டவையாகும்.

இந்தியாவிலேயே முதன் முதலாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தான் துரிதப் பேருந்துகளில் ஒரு இடத்திற்குச் செல்லவும் சென்று திரும்பவுமான முன்பதிவு செய்யும் முறையை அறிமுகப்படுத்தியது.

மதுரை மற்றும் திருச்சியிலிருந்து சென்னைக்குச் சென்று திரும்பவும் மேலும் சென்னையிலிருந்து பெங்களூருக்குச் சென்று திரும்பும் பயணிகளுக்கு முதன்முறையாக இவ்வசதி தற்போது செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் பிற இடங்களுக்கும் விரைவில் அமல்படுத்த உள்ளது. பயணம் செய்யும் நாளுக்கு 9 நாட்களுக்கு முன்னரே முன்பதிவு செய்யும் வசதி இங்கே ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

மேலும் சென்னை நகரைப் பொறுத்தவரை பல்லவன் போக்குவரத்துக் கழகம் இந்த ஆண்டில் ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தியது பயணிகளிடையே நல்ல வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.

பயணியர் விரும்பியவாறு பயணம் செய்ய மாதாந்திரச் சலுகைப் பயணச் சீட்டுக்களைப் பயணிகளின் நலனை முன்னிட்டு வழங்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயண அட்டையை யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். இது மாற்றத் தக்க ஒன்றாகும்.

இந்தப் பயண அட்டையை வாங்குவதன் மூலம் ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் - கணக்கின்றி - பல்லவன் போக்குவரத்துக் க்ழகப் பேருந்துகள் மூலம் பயணம் செய்யலாம்.

இதற்குரிய மாதாந்திரச் சலுகைப் பயணச் சீட்டுக்கான கட்டணம் ரூ.200. வாரச் சலுகைப் பயணச் சீட்டுக் கட்டணம் ரூ.50 ஆகும். விரும்பியவாறு பயணம் செய்யும் தினப் பயணச் சீட்டுக்கான பயணக் கட்டனம் ரூ.10.

சில போக்குவரத்துக் கழகங்கள் மூலம் சந்தைப் பேருந்துகள் என்னும் புதியவகைப் பேருந்துகள் இயக்கப்பட்டு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விற்பனைக்குக் கொண்டு சென்றுவர வழிவகை செய்யப்பட்டுள்ளது.



மேலும் இந்த ஆண்டு, குடந்தை நகரில் நடைபெற்ற மகாமகப் பெருவிழா நம் அனைவரின கண்ணையும் கருத்தையும் கவர்ந்த விழாவாகும். 20 இலட்சம் மக்கள் கூடி மகாமகக் குளத்தில் நீராடித் தூய்மை பெற்றார்கள். இப்பெருவிழாவையொட்டி இரயில் மூலம் பயணம் செய்த சுமார் 20 இலட்சம் பக்தர்களைத் தவிர, அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான சுமார் 2,500 பேருந்துகள் மூலமாக 39,380 நடைகள் இயக்கப்பட்டு சுமார் 32.34 இலட்சம் பயணிகளின் பயணம் இனிதாக்கப்பட்டது. 16.2.1992 முதல் 20.2.1992 வரை இயக்கப்பட்ட இந்த 39,380 நடைகளில் எங்கேயும் ஒரு சிறு விபத்துக்கூட இல்லாமல் பேருந்துகளை இயக்கிய பெருமை நமது போக்குவரத்துக் கழக நிர்வாகங்களுக்கும் ஊழியர் பெருமக்களுக்குமே உரியதாகும்! இவையெல்லாம் அன்னையின் ஆணைப்படி துல்லியமாகக் கணக்கிடப்பட்டு செயல்படுத்தப்பட்ட திட்டங்களாகும்.

இந்த ஆண்டிலே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மகளிருக்கு என ஒதுக்கப்பட்ட இருக்கையில் சில மாற்றம் செய்யப்பட்டு அவர்களின் பயணம் தொல்லையற்றதாகவும் பயமற்றதாகவும் இருக்கும் வகையில் உறுதி செய்யப்பட்டது.

அதேபோல, இரயில்வேக்களில் உள்ளதைப் போல் பேருந்துகள் புறப்படும்வரை 'வி.ஐ.பி.-க்கள் இருக்கைக்கு வி.ஐ.பி.-க்கள் வரவில்லை என்றால் ஆர்.ஏ.சி. என்னும் முறை மூலம் இட ஒதுக்கீடு செய்யப்படுவதும் இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அநேகமாகத் துரிதப் பேருந்துகள் 3 ஆண்டுக்குள்ளும், சாதாரணப் பேருந்துகள் 6 ஆண்டுக்குள்ளும் புதய பேருந்துகள் மூலம் புதிதாக மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நீண்ட தூரப் பயணம் மேற்கொள்ளும் பேருந்துகளில் சோதனை அடிப்படையில் முதல் கட்டமாக 10 'ஒயர் லெஸ்' வசதியைப் பொருத்துவதற்கான நடவடிக்கை இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

*சமூக நல நடவடிக்கைகள்*

இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத் திருக்கோயில்களின் திருப்பணிக்காக என்று ஒரு தனியான



**★ நமக்குள்ளே மறைவாக உறங்கிக் கொண்டிருக்கும் சாதி, இன, மதவாத பலவீனத்தின் தன்மைகளை உணர்ந்துதான், இந்தியாவின் முதல் சுதந்திர தினத்தை வரவேற்றபோது டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் 'நாளைக் காலை முதல் நமது தவறுகளுக்காக நாம் வெள்ளைக்காரர்களைக் குறை கூற முடியாது' என்று கருத்துத் தெரிவித்தார். அவரது இந்த வார்த்தைகளுக்கு ஆழமான அர்த்தங்கள் உண்டு!**

நிதியைத் திரட்ட மேற்கொண்ட நடவடிக்கைக்கு உதவியாக அரசு போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் பல இலட்சக் கணக்கான ரூபாயை நிதியாக வழங்கியுள்ளார்கள்.

8-ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு இலவசப் பயணமும், 8-ஆம் வகுப்பு வகுப்புக்கு மேற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு 50 சதவீத சலுகைக் கட்டண சீட்டுக்கள் கழகப் பேருந்துகளில் வழங்கப்பட்டது. ஆயினும் இவையனைத்தும் அரசு பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகள் போன்ற கல்வி நிலையங்களில் படிப்பவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த நிலை இந்த ஆண்டு அன்னையின் ஆணையால் மாற்றப்பட்டு, தனியார் கல்லூரிகள், சுயநிதி பெறும் கல்வி நிலையங்களைச் சார்ந்த மாணவ மாணவியர்க்கும் 50 சதவீதம் சலுகைக் கட்டணப் பயண வசதி நீட்டிக்கப்பட்டது இந்த ஆண்டின் மற்றொரு முக்கிய சாதனையாகும்.

சாலை விபத்துக்களைத் தவிர்ப்பதன் அவசியத்தை உணர்த்தவும் விபத்து இல்லாத பயணத்தை உறுதி செய்யவும் விபத்து இன்றிப் பேருந்துகளை இயக்கும் ஓட்டுநர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட ஊக்கத் தொகையை மேலும் ரூ.50 கூடுதலாக உயர்த்தி வழங்கப்பட ஆணையிடப்பட்டது.

மேலும் தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு மேல் விபத்தின்றி பணி செய்த ஒட்டுநர்களுக்கு முந்தைய ஆண்டில் வழங்கப்பட்ட தொகையைக் காட்டிலும் கூடுதலாக ரூ.25 இந்த ஆண்டு முதல் அளிக்கப்பட்டு வருகிறது.

சாலைப் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்த முகாம் நடத்தப்பட்டு பொது மக்கள் மாணவ மாணவியர், மற்றும் ஊழியர்களிடையே சாலை விபத்துக்களைக் குறைப்பதற்கான மன நிலை உருவாக்கப்பட்டது.

இந்த வகையில் சாலைப்பாதுகாப்பை விளக்கும் வழிமுறைகளை வீடியோ படங்கள் மூலமாக இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் தயாரித்து தொலைக்காட்சி மூலமும், தனிக் காட்சிகள் மூலமும் பொதுமக்களைச் சென்றடையும் நிலை உருவாக்கப்பட்டது.

**தொழிலாளர் நல்வாழ்வுத் திட்டங்கள்**

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை யேற்ற கடந்த ஓராண்டுக் காலத்தில்

ஊழியர்களோடு ஒரு இணக்கமான நல்லுறவை வளர்த்துக் கொள்ள அவற்றின் பிரதிநிதிகளோடு வாய்ப்புக் கிடைத்த பாதெல்லாம் கலந்துரையாடல்களை மேற்கொண்டு அவர்களின் கருத்துக்களைக் கேட்டு இயன்ற வரை நிறைவேற்றி வந்துள்ளது.

இதன் காரணமாக, பணிக்காலத்தில் இறந்துபோகும் போக்குவரத்துக் கழக ஊழியர்களின் குடும்பங்களும், அரசு ஊழியர்களின் குடும்பங்களைப் போன்றே 1.8.1991 முதல் ரூ.60.000 நிதியுதவி பெறும் நிலை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆணையால் உருவாக்கப்பட்டது. தி.மு.க. ஆட்சியில் உதவித் தொகை ரூ.20,000-லிருந்து ரூ.40,000 ஆக உயர்த்தப்படும் என்று வெறும் வாக்குறுதி மட்டுமே கொடுக்கப் பட்டிருந்த நிலையை மாற்றி 1.9.89 முதல் 31.7.91 வரை இறந்த ஊழியர் குடும்பங்களுக்கும் உண்மையாகவே அவர்கள் அந்தப் பயணப் பயனை அடையும் நிலையும் இந்த ஆண்டு உருவாக்கப்பட்டது. ரூபாய் ஒரு கோடி முதலீட்டில் போக்குவரத்துக் கழக ஊழியர்களின் வீட்டுவசதித் திட்டங்களுக்கான சுழல்நிதி உருவாக்கப்பட்டது.

பெருகி வரும் தொழில் நுட்பப்பணியாளர்கள் மற்றும் பொறியாளர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு, போக்குவரத்துக் கழக ஊழியர்களின் குழந்தைகளுக்காக என்றே ஏற்கெனவே பெருந்துறையிலும் ஈரோட்டிலும் மருத்துவ மற்றும் பொறியியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் பொறியியல் கல்லூரியில் மொத்தம் 180 மாணவர்களே ஆண்டுதோறும் அனுமதிக்கப் பட்டனர். அதில் 50 சதவீதம் போக்குவரத்துக் கழக ஊழியர்களின் பிள்ளைகளுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு முதல் இக்கல்லூரியில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 240 ஆக உயர்த்துவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டதன் காரணமாக, இனிமேலும் 30 போக்குவரத்துக் கழக ஊழியர்களின் குழந்தைகளுக்கு அதிகமாக இடம் கிடைக்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

அதுமட்டுமல்ல, போக்குவரத்துக் கழகங்களின் நிதியையும் ஊழியர்களின் பங்குத் தொகையையும் பயன்படுத்தி இந்த ஆண்டு முதல் திருநெல்வேலி, பர்கூர், குரோம்பேட்டை, ஆகிய மூன்று இடங்களில் புதிதாக 3 பாலிடெக்னிக்குகள் அமைப்பதற்கான ஆணையையும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பிறப்பித்து பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பட்டயதாரர்களாக, மாறும் நிலை இந்த ஆண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

அடுத்து தாமாக முன்வந்து ஓய்வு பெற முன்வருவோருக்கு எஞ்சிய பணிக் காலத்திற்கு ஆண்டுக்கு ரூ.7,500 மொத்த உதவிப் பணம் கொடுக்கப்பட்டு வந்த நிலையை மாற்றி இனி அவர்கள் ஆண்டுக்கு ரூ.8,500 ஆகப் பெறும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி விமான நிலையப் பணிகள் முடிவடைந்து இவ்விமான நிலையம் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு 30.4.92 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் திறமையுடன் செயல்பட அவ்வப்போது வழங்கப்பட்ட ஆலோசனை காரணமாக பல கோடி ரூபாய் செலவு மிச்சப்படுத்தப்பட்டதோடு அக்கழகம் ஈட்டிய லாபத் தொகையும் அதிகரித்தது.

மோட்டார் வாகன வரி மற்றும் போக்குவரத்துத் துறையில் ஈட்டிய சிலபல சாதனைகளையும் கூட இங்கே குறிப்பிடுவதே சாலப்பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். 50 சிசி வரையுள்ள அனைத்து 2 சக்கர வாகனங்களுக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டது.

சென்னை நகரிலுள்ள நான்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் உரிமங்கள் வழங்குதல், தகுதிச் சான்றிதழ் வழங்குதல் ஓட்டுநர், நடத்துநர் உரிமம் அளித்தல் ஆகிய பணிகளை விரைந்து முடிப்பதற்காக ரூ.13.50 இலட்சம் செலவில் கணிப்பொறிகள் அமைக்கப்பட்டு நடவடிக்கைகள் துரிதப் படுத்தப்பட்டுள்ளது. 10,000 பதிவுகளுக்கு மேற்படும் ஒவ்வொரு வட்டாரப் போக்குவரத்து நிலையத்திலும் ஒரு புதிய யூனிட் , அலுவலகம் திறப்பதற்கான ஆணையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த ஆண்டிலே பிறப்பித்து அது செயல் படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை நகரில் பெருகிவரும் தேவையைக் கருத்தில் கொண்டு நான்கு போக்குவரத்துப் பிரிவு அலுவலகங்கள் பெரம்பூர், வளசரவாக்கம், தண்டையார்ப் பேட்டை, திருவல்லிக்கேணி ஆகிய பகுதிகளில் கடந்த ஆண்டு அமைக்கப்பட்டன.

திருப்பூர், விழுப்புரம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வந்த பிரிவுப் போக்குவரத்து அலுவலகங்கள் தனியதிகாரம் பெற்ற வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக நிலை உயர்த்தப் பட்டுள்ளது.

நீலகிரி, தர்மபுரி, புதுக்கோட்டை, நாமக்கல் ஆகிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்குக் கடந்த ஆண்டிலே ஜீப்புகள் வழங்கப்பட்டன.

வேறு எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்குப் போக்குவரத்துத் துறை அலுவலகங்களில் 145-க்கும் மேற்பட்ட பணியிடங்கள் மாண்புமிகு இதய தெய்வம் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் அனுமதி அளிக்கப் பட்டு பணியில் வேகமும் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதியும் உருவாக்கப்பட்டன.

மாசுக்கட்டுப்பாட்டு நடவடிக்கையில் ஒரு பகுதியாக மோட்டார் வாகனங்கள் தகுதிச் சான்றிதழ் பெறும்போது மாசுக் கட்டுப்பாட்டுச் சோதனைக்கும் உட்பட வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டு அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

**—இவ்வாறாகப் போக்குவரத்துத் துறைப் பணிகள் தமிழகத்தில் மேம்பட்டு விளங்குகின்றன.**



# உள்ளாட்சித் துறையின் உயரிய பணிகள்...

**திரு. அழகு திருநாவுக்கரசு**
**மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்**

**'ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் முக்கியக் குறிக்கோள் தமிழகத்தில் உள்ள கிராமப் புறங்களை மேம்படுத்துவதே என்பதை இந்த ஓராண்டுக் காலச் சாதனைகளே உறுதிப்படுத்தும்' என்பது இங்கே விளக்கப்படுகிறது.**

"நாட்டின் பொருளாதாரம் கிராமங்களில்தான் வாழ்கின்றது.

கிராமங்கள் வளர்ச்சி பெற்றால்தான் நாடு வளர்ச்சியடைய இயலும்"

- என்ற அண்ணல் காந்தியடிகளின் அரிய கருத்தை நடைமுறைப் படுத்தும் வகையில் அறிஞர் அண்ணா அவர்களும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், கிராமங்களின் வளர்ச்சியில் நாட்டம் செலுத்தியது போன்றே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களும் பெரிதும் ஆர்வம் கொண்டு அனைத்து. முயற்சிகளும் மேற்கொண்டுள்ளார். ஆட்சி அமைக்க வாக்களித்த கிராமப்புற மக்களின் நலனும், நகர்ப்புற மக்களின் வளனும் காக்கப்படுவதற்கு எல்லா வகையிலும் கடந்த ஓராண்டில் தக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

பிறப்பிலிருந்து இறப்புவரை மக்களின் வாழ்க்கையில் பின்னிப் பிணைந்து இருப்பது நகராட்சி நிர்வாகமும், ஊராட்சி நிர்வாகமும் ஆகும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தனது சட்டமன்றக் கூட்ட உரையில் 4.9.91 அன்று சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி முதலீட்டில் கிராமங்களின் அடிப்படைத் தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று தெளிவுபடுத்தினார்கள். 20.11.91-ஆம் நாளிட்ட 385-ஆம் எண் அரசு ஆணை மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சாலை மேம்பாடு, தொடக்கப் பள்ளிக் கட்டடம் கட்டுதல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவுக் கூடங்கள் கட்டுதல், கிராமக் குடிநீர்த் திட்டம், தெருவிளக்கு அமைத்தல், சிறிய நீர்ப்பாசன ஆதாரங்களை மேம்படுத்துதல், வரத்துக் கால்வாய்களைத் தூர் எடுத்தல், தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் முதலிய கிராமத்தின் இன்றியமையாத தேவைகள் அனைத்தும் 1992 செப்டம்பர் முடிய ஓராண்டில் நிறைவேற்றப்படும்.



1991-92-ஆம் ஆண்டுக்கு ரூ.194.64 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1992-93- ஆம் ஆண்டிற்கு இதே போன்ற தொகை ஒதுக்கப் படும்.

ஊரக வளர்ச்சித் துறையின் முக்கியக் குறிக்கோள் வறுமைக் கோட்டிற்கு கீழ் கிராமப்புறத்தில் வாழும் குடும்பங்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு ஒருங்கிணைந்த மானியம், வங்கிக் கடன்களும் கூடிய திட்டம் மூலம் வறுமையை ஒழிப்பதாகும்.

கிராமங்களில் பயன் உள்ள கூடுதல் வேலைவாய்ப்பினை வேலையற்ற விவசாயக் கூலிகளுக்கும் குறைந்த வேலை உள்ள நபர்களுக்கும் ஆண், பெண் இருபாலர்க்கும் சமுதாயப் பணிகள் செய்ய வாய்ப்பு அளித்து வேலைவாய்ப்பினை ஏற்படுத்த அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கிராமங்களில் நிலையான சொத்துக்களை உருவாக்கி அதன் மூலம் கிராமத்தில் அடிப்படை வசதிகளை வலுப்படுத்தி கிராமப்புற பொருளாதாரத்தில் சீரிய முன்னேற்றம் காண்பதும், கிராம ஏழைகளின் வருமானங்களைப் பெருக்குவதும் ஊரக வளர்ச்சித்துறையின் தலையாய பணியாகும்.

தனிநபர், சமுதாய சாண எரிவாயுக்கலன்கள் அமைத்தும் புகை இல்லாத அடுப்புகள் நிறுவியும், மாற்று எரிசக்தி மேம்பாடு செய்து தேசீயக் கண்ணோட்டத்தில் செயல்படுவதும் ஊரக வளர்ச்சித் துறையின் சீரிய செயல்பாடாகும்.

தேசீயக் கண்ணோட்டத்தில் காடுகள் பெருக்கும் திட்டத்தில் ஓர் அங்கமாகப் பல எக்டேரில் சமுதாயக் காடுகள் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஏற்படுத்திச் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாத்தலை மிக முக்கியப் பணியாக ஏற்றுச் செயல்படுத்தி வருகிறது ஊரக வளர்ச்சித் துறை.

ஊரக வளர்ச்சித்துறையின் மிக முக்கியக் குறிக்கோள், கிராமப்புறங்களிலிருந்து மக்கள் நகரங்களை

நாடி வேலை தேடிவரும் நிலையை மாற்றி, கிராமங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடச் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை விரைந்து நிறைவேற்றுவது ஆகும்.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டம், கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கிராம மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றும் சீரிய திட்டம். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் ஒரு கோடி வீதம் மொத்தம் ரூ.386 கோடி முதலீட்டில் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. ரூ.386 கோடியை இரண்டு நிதியாண்டுகளில் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

1991-92-ஆம் ஆண்டிற்கு ரூ.194.64 கோடி ஏற்கெனவே ஒதுக்கப்பட்டு 1992-93-ஆம் ஆண்டிற்கு எஞ்சிய தொகை ஒதுக்கப்படவிருக்கிறது.

21.8.1991-இல் தர்மபுரி மாவட்டம் பர்கூர் பேரூராட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் புரட்சிமிகு குடியிருப்புத் திட்டம் ஒன்றினைத் தொடங்கி வைத்துப் புதிய வரலாறு படைத்திட்டார்கள். இந்த மாதிரிக் கிராமியக் குடியிருப்புத் திட்டத்தில் மனைகள், சமுதாயக் கூடம், விளையாட்டு மைதானம், தொடக்கப் பள்ளி, அங்காடி, பூங்கா, நூலகம், தாய்சேய் நல நிலையம், வழிபாட்டு இடங்கள், சாலைகள், மேல்நிலை நீர்த் தொட்டி, தெருவிளக்குகள் ஆகிய அனைத்து வசதிகளும் அமைக்கப்படும். மொத்த மதிப்பீடு ரூ.3 கோடியில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்களுக்குச் சாதி, மத இன வேறுபாடு இன்றி வீட்டு வசதி அளிப்பது இப்புதிய அரசின் நோக்கமாகும். ஒரே குடியிருப்பு வளாகத்திற்குள் அனைத்து வசதிகளும் உள்ளடங்கிய மாதிரிக் குடியிருப்பு வளாகமாக அமையும்.

'புரட்சித் தலைவி ஜெயலலிதா நகர்' என்று அழைக்கப்படும் இந்த ஏற்றமிகு கிராமக் குடியிருப்புத் திட்டம், வரும் ஆண்டுகளில் எல்லா மாவட்டத் தலைநகர்களிலும் அமைக்கப்பட அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. சமதர்மச் சமுதாயம் மலர்ந்திடப் புரட்சிமிகு திட்டமாக அமைந்த இது மக்க வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும்.



**பெண்மை, தாய்மை, இறைமை என்ற மூன்று நிலைகளிலும் பெண்களை மதித்துப் போற்றினால்தான் இந்த உலகம் பெண்ணினத்திற்குப் பெருமை சேர்க்க முடியும்!**

கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டமும் கிராமங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களில் வருமானத்தைப் பெருக்கிட வழிகாணும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமும் சுய வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் ஊரக இளைஞர் சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டமும், கிராமப்புற மகளிர், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டமும் தேசிய சாண எரிவாயுத் திட்டமும் தேசிய மேம்படுத்தப்பட்ட அடுப்புகள் திட்டமும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டமும் தொடர்ந்து முனைப்புடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கிராமப்புறங்களில் நிறைவேற்றப்பட்டுவரும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம், பேரூராட்சிகளிலும் விரிவுபடுத்தப்படவிருக்கிறது. அதற்காக அரசு தக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 647 பேரூராட்சிகளில் வாழும் ஒரு கோடி மக்கள் பயன்பெறுவர். 354 பேரூராட்சிகளில் இதுவரை குடிநீர்த் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 141 பேரூராட்சிகளில் திட்டப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

ஊராட்சிகளுக்குத் தரம் மிக்க குழல் விளக்குகள், சோக்குகள், ஸ்டார்டர்கள் ஆகியவற்றை நிர்ணயித்த விலையில் வாங்கிட வேண்டுமென்பதற்காக உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. உயர்மட்டக் குழுவின் பரிந்துரையை ஆழ்ந்து ஆய்ந்த பின்னர், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தரம் வாய்ந்த உற்பத்தியாளர்களான எச்.எம்.டி. நிறுவத்தினர், மைசூர் லாம்ப்ஸ் ஆகிய நிறுவனத்திடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட விலையில் குழல் விளக்குகள், காப்பர் சோக்குகள், ஸ்டாட்டர்கள் வாங்க அரசு ஆணையிட்டது. இதனால் தெருவிளக்குகள் அடிக்கடி கெட்டுப் போகாமல் கிராமங்களின் இருளைப் போக்கி ஒளியேற்றியுள்ளது இந்த அரசு. தெரு விளக்குகளைக் கூடப் பராமரிக்க இயலாத நிலையிலுள்ள ஊராட்சிகளுக்குத் தெரு விளக்குச் சாதனங்கள் வாங்கவும் மின் கட்டணம் செலுத்த வகை செய்யும் முறையிலும் ரூ. 3 கோடியை அரசு மானியமாக வழங்கியுள்ளது. இதன் மூலம் எல்லாத் தெரு விளக்குகளும் ஒளிர்வதற்கு அரசு உறுதி செய்துள்ளது.

1988-89-ஆம் ஆண்டு முதல் செயல்படும் தீவிர சுகாதாரத் திட்டத்தை இந்த அரசு மேலும் முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. பழுதுபடும் கைப்பம்புகளால் கிராம மக்கள் குடிநீருக்குத் துயரடையாமல் இருக்க, 1991-92-ஆம் ஆண்டுக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்க ஒதுக்கியிருந்த மானியத் தொகை ரூ.300 இலட்சத்தை ரூ.395 இலட்சமாக அரசு உயர்த்தியுள்ளது. பின்னர் 1992, பிப்ரவரியில் கைப்பம்பு, விசைப்பம்பு மானியத்தை உயர்த்தியும் அதனைப் பிரித்து வழங்க வரன்முறைகளை வகுத்தும் அரசு ஆணையிட்டுள்ளது.

### நகராட்சி நிர்வாகம்

நகராட்சிகள், மாநகராட்சிகள் நிர்வாகம் நகர மக்களுடைய அடிப்படைத் தேவைகளான பொதுச் சுகாதாரம், கழிவுப் பொருட்களை அகற்றுதல், சாலை வசதிகள், கல்வி, நோய்த் தடுப்பு, குடிநீர் வசதிகள் ஆகியவற்றை அன்றாடம் அளித்து வருகிறது. இந்த அமைப்புகளின் நிதிநிலை பல ஆண்டுகளுக்கு முன்னர் எவ்வாறு இருந்ததோ அதே நிலைமையில் இன்றும் இருந்து வருகிறது. நகராட்சி, மாநகராட்சி அமைப்புகளின் நிதி நிலைக்கும் செய்ய வேண்டிய பணிகளுக்கும் உள்ள பற்றாக்குறை மிகப் பெரிய அளவில் உள்ளது. இதனால்தான் 1.4.1992 முதல் தொழில் வரியைப் புதிய விகிதங்களில் வசூலிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மேலும் நகராட்சிகளின் நிதி ஆதாரங்களைத் திறம்பட நிர்வகிப்பதற்கான வழிவகைகளை ஆராயவும் நகராட்சி நிர்வாகச் சீர்திருத்தத்திற்கும் 'வல்லுநர் குழு' ஒன்று அமைக்கப்படவுள்ளது.

நகராட்சிப் பணிகளைக் கண்காணிக்க மக்கள் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட உள்ளன. மக்கள் குறைகளை உடனுக்குடன் களைவதற்கு வசதியாக 'மக்கள் குறை தீர்க்கும் நாள்' நடத்தப்படுகின்றது. வாரத்திற்கு ஒரு நாள் உயர் அதிகாரிகளே நேரில் மக்கள் குறைகளை அறிந்து அவற்றைத் தீர்க்க ஏதுவாகும்.

ஹட்கோ நிறுவனத்தின் நிதி உதவியுடன் குறைந்த செலவில் கழிப்பிடங்கள் அமைப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1992-93-ஆம் ஆண்டில் 40 நகராட்சிகளில் இத் திட்டம் விரிவுபடுத்தப்படும். 1994-ஆம் ஆண்டிற்குள் நகராட்சிகளிலுள்ள உலர் கழிப்பிடங்கள் அனைத்தும் அகற்றப்படும்.

நகரர்ட்சிகளின் முக்கியப் பகுதிகளில் சிறப்புத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கழிவுப் பொருட்களை முழுமையாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உசிலம்பட்டி, கூத்தாநல்லூர், குளித்தலை, ஆவடி, வந்தவாசி ஆகிய ஐந்து பேரூராட்சிகளும் நகராட்சிகளாக மாற்றி அமைக்கப். படும்.

திருச்சிராப்பள்ளி, சேலம் நகராட்சிகளும் மாநகராட்சிகளாகவும், திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் நகராட்சிப் பகுதிகள் இணைக்கப்பட்டு திருநெல்வேலி மாநகராட்சியாகவும் உயர்த்தப்படவுள்ளன.

### மாநகராட்சிகள்

சென்னை மாநகரை அழகுபடுத்துவதற்கு 'எழில்மிகு சென்னை 2000' என்ற திட்டம் 1,250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படுகிறது. சாலைகள், பாலங்கள், அடுக்குமாடி வாகனம் நிறுத்துமிடம், போக்குவரத்து மேம்பாடு, மழைநீர் வடிகால்கள், தெருவிளக்குகள், கால்நடைகளை அகற்றுதல் முதலிய பணிகள் ரூ.240 கோடி செலவில் முதல் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சிப் பணிகளை மேம்படுத்த இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணியைச் சேர்ந்த 5 அதிகாரிகளைத் துணை ஆணையாளர்களாக அரசு நியமித்துள்ளது. சொத்து வரி, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ரூ.10 கோடி கூடுதலாகப் பெறப்பட்டது.

சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான நேரு விளையாட்டு அரங்கினை இடித்துவிட்டு அனைத்து நாடுகள் அளவிலான பல்வேறு விளையாட்டுகளை நடத்திட அனைத்து நாட்டு விளையாட்டு அரங்கிற்கு நிகரான விளையாட்டு அரங்கினை ரூ.30 கோடி செலவில் அரசு அமைத்திடவுள்ளது. 1993, ஜனவரி மாதத்திற்குள் இத் திட்டம் முடிவுறும்.

சென்னை நகரில் நடைபாதை வாசிகள் இரவில் தங்குவதற்கு ரூ.40 இலட்சம் செலவில் விடுதிகள் கட்டப்படுகின்றன. கோயம்புத்தூரிலும் ரூ.20.50 இலட்சம் செலவில்

**புதுடில்லியில் உள்ள புகழ்பெற்ற சிரோமணி நிறுவனம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு மகிளா சிரோமணி (சிறந்த பெண்மணி) விருது வழங்கிச் சிறப்பித்தது. 10.6.92 அன்று டில்லி யில் அளிக்கப்பட்ட அவ்விருதினை, அங்குள்ள தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி டாக்டர் எம். தம்பிதுரை அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பில் பெற்று வந்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களிடம் வழங்கினார்.**



இதற்கெனக் கட்டடம் கட்டப்பட வுள்ளது.

மதுரையில் வைகை ஆற்றின் குறுக்கே கல் பாலத்திற்கு மேலாக ரூ.700 இலட்சம் செலவில் உலக வங்கியின் உதவியுடன் ஒரு மேம் பாலம் கட்டப்படுகிறது. மதுரையில் தற்போது மத்தியப் பேருந்து நிலையம் உள்ள இடத்தில் பல அடுக்கு மாடி களைக் கொண்ட நவீன பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளில் (சென்னைக் குடிநீர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உட்பட) சுமார் 3 இலட்சம் அலுவலர்களும் பணியாளர்களும் உள்ளனர். அவர்கள் தகுதிக்கேற்ப ஒரு சிறு தொகையை நன்கொடையாகப் பெற்று, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பெயரில் ஒரு மருத்துவக் கல்லூரியும் பொறியியல் கல்லூரி யும் துவக்கப்படவுள்ளன. இக் கல்லூரி களில் குழந்தைகளுக்கு ஒரு குறிப் பிட்ட சதவிகித அளவு இடங்கள் ஒதுக்கப்படும். இதில் துப்புரவுப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அவர் களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகித இடங்கள் ஒதுக்கப்படவுள்ளன.

தற்போது உள்ளாட்சி அமைப்பு களில் தனித் தனியாக இயங்கி வரும் பல்வேறு பயிற்சி நிறுவனங்களை ஒருங்கிணைத்து ஒரே அமைப்பின்கீழ் செயல்படுவதற்கு "உள்ளாட்சி நிர்வாகப் பயிற்சி நிறுவனங்களின் இயக்ககம்" என்ற அமைப்பு உரு வாக்கப்படுகிறது. இந்த இயக்ககம் மேற்சொன்ன மருத்துவக் கல்லூரி யையும் பொறியியல் கல்லூரியையும் நிர்வகிக்கும். ஒவ்வொரு துப்புரவுப் பணியாளரின் குழந்தையும், எதிர் காலத்தில் ஒரு மருத்துவராக, பொறியாளராக வரவிருக்கும் அரிய வாய்ப்பு உருவாகும் சிறப்புமிகு வாய்ப்பு இதனால் ஏற்பட்டுள்ளது.

இந்த அரசு பதவியேற்றதும் பொது மக்களின் விருப்பத்திற்கிணங்க ஒதூர், திருத்துறைப்பூண்டி பேரூராட் சிகள் நகராட்சிகளாக உயர்த்தப் பட்டன.

நகராட்சிகளின் நிதிநிலையை உயர்த்தும் பொருட்டு, தொழில் வரியை மாற்றியமைக்க ஒரு புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. மக்கள் மேற்கொள்ளும் பணி அல்லது தொழில் அடிப்படையில் தொழில் வரி வசூலிக்கப்படும். இதனால் நகராட்சிகளின் வரு மானம் உயரும்.

**தமிழ்நாடு நீர் வழங்கல் கழிவுநீர் அகற்றும் வாரியம்**

சென்னை மாநகர் தவிர தமிழகத்தில் பிற பகுதிகள் யாவற் றிற்கும் நீர் வழங்குவதும் கழிவு நீர்க்கால் வசதிகளை ஏற்படுத்தித் தருவதும் இந்த வாரியத்தின் பணி யாகும். இதுவரை குடிநீர் வழங்கப் படாத 2,483 குடியிருப்புகளுக்கு 1992, மார்ச் மாதத்திற்குள் எவ் வாறாயினும் குடிநீர் வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 1,418 ஆதி திராவிடக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 31.12.1991-க் குள் இத்திட்டத்தை நிறைவேற்றியது.

1992-93-ஆம் ஆண்டில் ரூ.64.50 கோடி செலவில் 3,653 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கத் திட்டமிட்டு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

1992-93-இல் 33 பேரூராட் சிப் பகுதிகளில் ரூ.10 கோடி செலவில் குடிநீர்த் திட்டம் நிறை வேற்றப்படவிருக்கிறது.

1992-93-இல் 13 வறட்சி பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு அரசு ரூ.4.49 கோடி ஒதுக்கீடு செய் துள்ளது.

9,000 கிராமப்புறங்களுக்கு ரூ.530 கோடி செலவில் குடிநீர் வழங்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு உலக வங்கிக் கடனுக்காக அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத் தினால் 40 இலட்சம் பேர் பயன் பெறுவர்.

1991-92-இல் 19 நகராட்சி களிலும் 41 பேரூராட்சிகளிலும் குடிநீர் வழங்கும் திட்டம் மேற் கொள்ளப்பட்டு 12 திட்டங்கள் முடிவுற்றன. இதற்கு ரூ.20.74 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1992-93-இல் ரூ.31.80 கோடி செலவில் 17 குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட உள்ளன.

உதகையில் கழிவுநீர்க்கால் திட் டத்தை ரூ.7.61 கோடி செலவில் நிறைவேற்றுவதற்கும் கோவையில் கழிவுநீர்க்கால் திட்டத்தை விரைந்து மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது. திருச்சிக்குக் கழிவுநீர் வடிகால் திட்டம் ரூ.6.760 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர் களின் ஆணைப்படி ஒகேனக்கல் குடிநீர் வழங்கும் திட்டம் ரூ.250 கோடி செலவில் மேற்கொள்ளப் படுகிறது. இதனால் கிருஷ்ணகிரி, தர்மபுரி நகராட்சிகளும் 7 நகரப் பேரூராட்சிகளும் பர்கூர் தொழில் பேட்டையும் தர்மபுரியிலுள்ள 3,300 குடியிருப்புகளும் பயன் பெறும். மாண்புமிகு முதலமைச்சர் ஆணைப்படி காங்கேயம் குடிநீர் வழங்கு திட்டம் ரூ.20.43 கோடி செலவில் நிறைவேற்றப்பட உள்ளது.

நாகப்பட்டினத்திற்கு ரூ.9 கோடி செலவிலும், தேன்கனிக்கோட் டைக்கு ரூபாய் ஒரு கோடி செல விலும் குடிநீர் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சென்னைக் குடிநீர் வாரியம்**

இவ்வாரி யத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர கற்றுத் திட்டங்களுக்குப் போதிய அளவில் அரசிடமிருந்து நிதி உதவி கிடைக்கப் பெற்றது. குடிநீர்ப் பிரி வின் கீழ் 5 திட்டங்களுக்காக ரூ.37.88 கோடிக்கும், கழிவு நீர் அகற்று வசதியின் கீழ் 10 திட்டங் களுக்கு ரூ.34.35 கோடிக்குமாக மொத்தம் ரூ.72.23 கோடி மதிப் பீட்டிற்கு அரசால் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதே காலத் தில் அரசு ரூ.31 கோடி அளவுக்கு நிதியுதவியும் அளித்துள்ளது. இதனைக் கொண்டு பெருமளவில் திட்டங்களின் செயல் முன்னேற்றத் தினைச் செய்ய முடிந்தது.

இந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றானது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ஆந்திர மாநில மாண்புமிகு முதலமைச்ச ருடன் கலந்து ஆலோசித்து கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்துவதில் ஏற்படும் அனைத்து இடர்ப்பாடுகளையும் நீக்க வழிவகை செய்ததாகும். இதே சமயத்தில் உலக வங்கிக் குழுவும் இந்தத் திட்டத்தைப் பற்றி ஆய்வு நடத்தியது. அடுத்த ஆண்டிற்குள் உலக வங்கியிடமிருந்து நிதியுதவி வரத்தொடங்கும் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

தமிழக அரசு உதவியுடன் இந்த வாரியம் பெருமளவில் நகரின் கழிவுநீர் அமைப்பினைச் சீரமைக் கும் பணியினை எடுத்துக் கொண் டுள்ளது. இந்தத் திட்டத்தில் 50 ஆண்டுகளுக்கும் மேலாகச் செயலில் உள்ள கழிவுநீர்க் குழாய்களைச் சுத்திகரிப்புச் செய்வது, கழிவு நீரேற்று நிலையம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றின் செயல்திறனை மேம்படச் செய்வது ஆகியவை அடங்கும். இந்தப் பணி களுக்காக இந்தக் கால கட்டத்தில் ரூ.3.58 கோடி செலவு செய்யப் பட்டுள்ளது.



மற்றும் ஒரு முக்கியப் பணியாகச் சுமார் 700 தனியார் தெருக்களிலும் சுமார் 60 பொதுத் தெருக்களிலும் கழிவுநீர்க் குழாய்கள் போடப்பட்டு, கழிவுநீரகற்று வசதி செய்யப்பட்டுள் ளது. இந்தப் பணிக்காக இந்தக் கால கட்டத்தில் ரூ.6 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

நகரத்தின் குடிநீர் விநியோகம் நாளொன்றுக்கு 55 மில்லியன் காலன் அளவாகச் சீரான அளவில் விநியோகம் செய்யப்பட்டது. நகரின் பொதுமக்களுக்கு ஒரே சீராகக் குடிநீர் கிடைக்கப் பெறுவதற்காகப் பழமையான, தூர்ந்த குடிநீர் விநி யோகக் குழாய்கள் புதிய குழாய் களாக மாற்றி அமைக்கப்பட்டது. இந்தக் காலத்தில் இந்தப் பணி களுக்கு மட்டும் ரூ.4.24 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இதுவரை குடிநீர் வசதி இல்லாத பகுதிகளுக்கு 180 தெருக் களில் ரூ.2.80 கோடி செலவில் புதிய குடிநீர்க் குழாய்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

**சிறப்புப் பணிகள்**

நாட்டிலேயே முதன்முறையாகக் கழிவுநீரை மீள்பயன்பாடு செய்யும் திட்டத்தை இவ்வாரியம் மேற் கொண்டுள்ளது. இத்திட்டத்திற்காக உயிரியல் முறையில் சுத்திகரிப்புச் செய்யப்பட்ட கழிவுநீர் நாளொன் றுக்கு 2.5 மில்லியன் காலன் அளவில் சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு வழங்கப் பட்டு வருகிறது. இந்நிறுவனம் ஓரளவு சுத்தரிகரிக்கப்பட்ட கழிவு நீரை மேலும் இரசாயன முறையில் சுத்திகரிப்புச் செய்து தனித் தொழிற் சாலையில் குளிர வைக்கும் நீர்த் தேவைக்குப் பயன்படுத்திக் கொள் கிறது.

இதே வகையில், சென்னை உரத் தொழிற்சாலைக்கு நாளொன்றுக்கு 3.75 மில்லியன் காலன் சுத்திகரிக் கப்பட்ட கழிவுநீர் விரைவில் வழங் கப்படும். மேலும் மணலியில் உத் தேசிக்கப்பட்ட 'டாடா கோதாரி' இரும்புத் தொழிற்சாலை மற்றும் 'நாப்கோ' நிறுவனம் ஆகியவற்றுக்கு 10 முதல் 15 மில்லியன் காலன் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை வழங்க சாத்தியக் கூறுகள் உள்ளன. இது தவிர, தற்போதுள்ள 'ஸ்பிக்' நிறுவனம், பெட்ரோ கெமிக்கல் பிராடக்ட்ஸ் எண்ணூர் அனல்மின் நிலையம் ஆகியவற்றின் கூடுதலான நீர்த்தேவையையும் சமாளிக்க முடியும்.

**கழிவுநீர் மறு உபயோகத்தின் மூலம் வனவளர்ப்பு**

இந்த ஓர் ஆண்டில் இவ்வாரியம் அதன் கழிவுநீர்ப் பண்ணை நிலத் தில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரி னைக் கொண்டு மரம் வளர்க்க முடியும் என்பதை வெற்றிகரமாகச் செயல்படுத்திக் காட்டியது. நேசப் பாக்கத்தில் 1.5 ஏக்கர் நிலபரப்பில் சோதனை அடிப்படையில் சுபாபுல், போலியேஜ் வகை, சுபாபுல் மர வகை, மேட்ச்வுட், தேக்குமரம், ஆகியவகையான மரங்கள் வளர்க் கப்பட்டுள்ளன. இதில் கண்டுள்ள வெற்றியை அடிப்படையாகக் கொண்டு, இந்த ஆண்டில் நேசப் பாக்கம், கோயம்பேடு இடங்களில் 120 ஏக்கர் பண்ணை நிலம் உழப் பட்டு மண் பதப்படுத்தப்பட்டு, வன வளர்ப்பு விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

சமதர்மச் சமுதாயத்தை அமைத் துச் சமுதாயத்தின் அனைத்துப் பிரி வினருக்கும் நலனும் வளனும் சேர்த் திட முனைந்து செயல்பட்டுவரும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தலை மையில் இயங்கும் தமிழக அரசு, மக்கள் நலப்பணிகளைத் தொடர்ந்து செயலாற்றும் பணி தொடரும். ●

---

***ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தை இந்தியாவின் பழத்தோட்டம் என்று வர்ணிக்கலாம்.***

***நமது மொத்த ஆப்பிள் விளைச்சலில் 75 சதவிகிதம் (எட்டு இலட்சம் டன்) இம்மாநிலத்தில் விளைகிறது! 1987-88-இல் அங்கு விளைந்த பழங்களின் எடை 26.64 மில்லியன் டன்கள். நாட்டில் பழ மரங்கள் பயிரிடப்பட்டுள்ள மொத்த நிலப்பரப்பில் ஆறு சதவிகிதமும், மொத்த பழ விளைச்சலில் மூன்று சதவிகிதமும் இங்கேதான்.***

***கி.மு. 1,000 ஆண்டிலிருந்தே மித வெப்ப மண்டலத்தில் விளையும் பழ வகைகளை, இந்த மாநிலத்தில் பயிரிடப்பட்டன என்பது 'சுவையான' செய்தியாகும்!***

---

"அரிசி உற்பத்தி எப்போதும் இல்லாத அளவிற்கு உயர் அளவாக இவ்வாண்டு 71.07 இலட்சம் மெட்ரிக் டன் அளவை அடைந்தது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 14.87 இலட்சம் மெட்ரிக் டன் என்ற உயர்ந்த அளவை எட்டியுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது."



# வேளாண்மைத் துறையின் மேலான சாதனைகள்

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்

**கு.ப. கிருஷ்ணன்**

**மா**ண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு பொறுப்பேற்ற இந்த ஓர் ஆண்டில் இத்துறையானது, வேளாண் உற்பத்தி, வேளாண் பெருமக்களின் நலன் ஆகியவற்றை தனது இரு கண்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் வேளாண் உற்பத்தி அதிகரிக்கவும், வறுமை அகலவும், வேளாண் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், குறிப்பாக ஏழை, எளிய மக்களின் வாழ்வு வளம்பெறவும், சீரிய இலட்சியப்பாதையை முன் நிறுத்தி இவ்வரசு முழு மூச்சுடன் பல்வேறு வேளாண் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி உள்ளது.

வேளாண் பணிகள் தொடங்கப்படும் காலத்தில் பொறுப்பேற்றுக் கொண்ட தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு, வேளாண் பெருமக்களுக்கு வழங்கிய அறிவுரைகள், ஆக்கப் பூர்வமான மானிய உதவிகள் ஆகியவற்றை, உழவர் பெருமக்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள்.

அரிசி உற்பத்தி எப்போதும் இல்லாத அளவிற்கு உயர் அளவாக இவ்வாண்டு 71.07 இலட்சம் மெட்ரிக் டன் அளவை அடைந்தது. இது பெருமை அளிக்கக் கூடியது ஆகும். மொத்த உணவு தானிய உற்பத்தி 90.70 இலட்சம் மெட்ரிக் டன்களாக உயர்ந்துள்ளது.

எண்ணெய் வித்துக்கள் 14.87 இலட்சம் மெட்ரிக் டன் என்ற உயர்ந்த அளவை எட்டியுள்ளது. மேலும் எண்ணெய் வித்து உற்பத்தியை அதிகப்படுத்த ரூபாய் 23.82 இலட்சம் செலவில் நீர் சேமிப்புக்கருவிகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. கரும்பு உற்பத்தி 245 இலட்சம் மெட்ரிக் டன்களை அடைந்து உள்ளது.

தேர்தல் வாக்குறுதியில் அறிவித்துள்ளபடி 8 மாவட்டங்களில் ரூபாய் 75 இலட்சம் செலவில் 5,000 எக்டேர்களில் தரிசு நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது





தமிழகத்தில் "செம்பனை" என்னும் பாமாயில் மரங்கள் வளர்க்க ரூபாய் 28.80 கோடி செலவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, ரூபாய் 1.07 கோடிக்கு விதைகள் வாங்கி நாற்றாங்கால் அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது.

விவசாயிகளிடையே உற்சாகத்தை ஏற்படுத்தி, உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில், "பயிர் விளைச்சல் போட்டி" திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. இது நல்ல வெற்றியும் பெற்றுள்ளது. இத்திட்டத்தில் நெற்பயிருக்கு 1990-91-ஆம் ஆண்டிற்கான முதல் பரிசு ரூ.50,000 என்றும், இரண்டாவது பரிசு ரூபாய் 25,000 என்றும், மாவட்ட அளவில் முதல் பரிசு ரூபாய் 5,000 என்றும் இரண்டாவது பரிசு ரூபாய் 3,000 என்றும் வழங்கப்பட்டது. இப்புதிய திட்டத்தால், எக்டேருக்கு 5 மெட்ரிக் டன் ஆக இருந்த சராசரி நெல் உற்பத்தி அளவு 6 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டு நெல் பயிரிடப்பட்ட பரப்பளவு 23 இலட்சம் எக்டேர்.

"தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின்" கீழ் வேளாண்மை வளர்ச்சிக்கு இவ்வாண்டு ரூபாய் 10 கோடி செலவிடப்பட்டு உள்ளது.

1991-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பெய்த புயல், மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கீட்டில், விதை, உரம், பூச்சி மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த அளவுக்கு வேளாண் சலுகைகள் எந்த மாநிலத்திலும், எந்தக் காலத்திலும் வழங்கப்படவில்லை என்பது நினைவு கூர்ந்து பெருமைப்படத்தக்கது.

இராசாயன உரங்களின் விலையேற்றத்தை ஈடு செய்ய சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு விலையேற்றத்திற்கு முன்பு இருந்த விலையிலேயே இரசாயன உரங்கள் வழங்குவதற்கு, மத்திய அரசிடமிருந்து ரூபாய் 53,973 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, மானிய விலையில் இரசாயன உரங்கள் வழங்கப்பட்டது.

நுண்உயிர் உரங்களின் அதிகத் தேவையைக் கருத்தில் கொண்டு கடலூரில் உள்ள "உயிரின உற்பத்தி மையம்" ரூபாய் 13.5 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டு உயிரின உர உற்பத்தித்திறன் ஒரு ஆண்டிற்கு 10 இலட்சம் பொட்டலங்களிலிருந்து 15 இலட்சம் பொட்டலங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

"தேசீய நீர்ப் பிடிப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம்" 14 மாவட்டங்களில் 84 வட்டாரங்களில் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தில் ஐந்து ஆண்டுகளில் ரூபாய் 35.61 கோடி ஒதுக்கீட்டில் 89,025 எக்டேரில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாண்டு இத்திட்டத்திற்கு ரூபாய் 80 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"

என்ற பாட்டுக்கனல் பாரதியின் கனவை நனவாக்க வந்த புதுமைப்பெண் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள "நவரத்தினத் திட்டங்கள்" வேளாண் களத்தில் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ள வேளையில், புதிய வேளாண் உற்பத்திப் பெருக்கத்திற்கும், உழவர்தம் உயர்விற்கும் 21 புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புதுமைத் திட்டங்கள் மக்களைச் சென்றடைந்து மக்களின் மனதைக் குளிர்வித்துக் கொண்டுள்ளது. ●



# சாதனை படைக்கிறது!

பி.வி.கிரி



ஏழை எளியோர்
ஏற்றம் பெறவே
-எண்ணிலாத் திட்டங்கள்
வாழ்வில் ஒளியை
ஏற்றி வைக்கவே
- வகையான சட்டங்கள்!

உழவும் தொழிலும்
ஓங்கி வளரவே
- உதவுகின்ற அரசு
மழலைச் செல்வம்
மகிழ்ந்து உண்ணவே
- மகிழ்கின்ற அரசு!

பள்ளிக் கட்டடம்
பலப்பல எழவே
- பணிகள் ஏராளம்
துள்ளி ஆடிடத்
துறையும் உண்டு
- தொண்டுகள் தாராளம்!

அன்னைத் தமிழில்
ஆயிரம் பணிகள்
- அழகாய் நடக்கிறது
எண்ணம் கவரும்
எண்ணிலாக் கலைகள்
- ஏற்றம் பெறுகின்றது!

கால்நடை வளர்ச்சி
காவல் துறையும்
- கணக்காய் வளர்கிறது
பால்வளம் பெருக
பாசனம் சிறக்க
- பயனோ தெரிகிறது!

கண்ணைக் கவரும்
கைத்தறித் துணிகள்
- கைவண்ணம் மிளிர்கிறது
விண்ணை முட்டும்
ஆலயப் பணியோ
- அடுக்காய்த் தொடர்கிறது!

குடிநீர் எங்கும்
குறைவின்றிக் கிடைத்திட
- கடமை விரைகிறது
வீடுகள் மனையும்
வேலை வாய்ப்பும்
- சிறப்பாய் இருக்கிறது!

பட்டிக் காட்டிலும்
போக்கு வரத்து
- பாங்காய் நடக்கிறது
பொட்டல் காடும்
பொய்த்த பூமியும்
- பொன்னாய் மாறுகிறது!

கூட்டு உறவும்
காட்டு வளமும்
- கைகோத் திடுகிறது
நாட்டு வளமும்
நல்வாழ் வுமே
- நாளும் சிறக்கிறது!

சமூக நலமும்
சுற்றுலா வளர்ச்சியும்
- சீராய் நடக்கிறது
சமமாய் மகளிர்
சகலமும் பெறவே
- சாதனை படைக்கிறது!







# பொதுப்பணித் துறையின் பொன்னான பணிகள்



மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

## எஸ். கண்ணப்பன்

”பாசனம், கடலரிப்புத் தடுப்பு, நிலத்தடி நீர், காவிரி நீர்த்தகராறு, கிருஷ்ணா நதிநீர் ஆகிய பணிகள் குறித்தும், மின்சாரம், நெடுஞ்சாலைகள் ஆகிய பணிகள் குறித்தும் பொதுப்பணித்துறை பொறுப்புடன் செயலாற்றி வருகின்றது.“

பொதுப்பணித்துறை, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்தே தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் மிகத் தொன்மை வாய்ந்த அரசுத் துறைகளில் ஒன்றாகும். இத்துறை 1853-ஆம் ஆண்டில் 'லார்டு டெல்ஹவுசி' என்ற ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்டது. இன்று விரிந்து பரந்து வளர்ந்து பொதுமக்களின் இன்றியமையாதத் தேவைகளை நிறைவு செய்யும் அரும் பணிகளை ஆற்றி வருகிறது.

இத்துறை, பாசனத் திட்டங்களை வகுத்து, செயல்படுத்தும் பணிகளையும் நிலத்தடி நீர் ஆய்வு, பாசனத் திட்டங்களைக் கண்டறிதல், அத்திட்டங்களைச் செயல்படுத்துதல், பராமரித்தல் போன்ற பணிகளையும் ஆற்றி வருகிறது. இத் துறை அரசு அலுவலகங்கள், அரசு நிறுவனங்கள், பள்ளிகள் மருத்துவமனைகள், வீட்டுவசதிக் குடியிருப்புகள் முதலியனவற்றிற்குக் கட்டடம் கட்டும் பொறுப்பையும் மேற்கொண்டு வருகிறது.

சாலைகளையும் நெடுஞ்சாலைகளையும் அமைத்து, பராமரிக்கும் பொறுப்பும் இத்துறையைச் சார்ந்ததே ஆகும்.

**தமிழ்நாடு பொதுப்பணித்துறை**

**சாதனைப் பட்டியல்**

தமிழ்நாடு பொதுப்பணித்துறை, பல்வேறு துறைகளைக் கொண்டுள்ளது.

**பாசனத்துறை**

பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களைச் செயல்படுத்தி, பராமரித்து வருதல், மாநிலங்களுக்கிடையிலான ஆறுகள் குறித்த பிரச்சினைகள், பாசனம் தொடர்பான கொள்கை முடிவுப் பிரச்சினைகள் ஆகியவற்றிற்குப் பொறுப்பு வகிக்கிறது.

தமிழ்நாட்டில் 50 அணைகள் உள்ளன; சுமார் 12,550 கி.மீட்டர் நீளத்திற்குச் சுமார் 4,900 கால்வாய்கள் உள்ளன; 24 இலட்சம் எக்டேருக்கும் மேற்பட்ட பாசனப்பகுதிகள் உள்ளன. இத்துறையின் பல்வேறு நடவடிக்கைகள் பற்றிய சாதனைப் பட்டியலைப் பின்வரும் குறிப்புகள் தெற்றெனப் புலப்படுத்துவதைக் காணலாம்.

தற்போது, ரூ.251 கோடி செலவிலான பதினேழு பெரும் பாசனத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால் புதிதாக் 19,416 எக்டேர் புன்செய் நிலங்கள் பாசனத வசதிப் பெறும்; 1,688 எக்டேர் நிலங்கள் பாசன இணைப்பு கிடைக்கும், 7,182 எக்டேர் நிலங்கள் நிலையான பாசனம் பெறும்.

தற்போது, ரூ.66.22 கோடி செலவிலான நான்கு புதிய பெரும் பாசனத் திட்டங்கள், இராமநாதபுரம், திண்டுக்கல்-அண்ணா, காமராசர் ஆகிய மாவட்டங்களின் பெரும் பகுதிகள் பயன் பெறும்.

தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டங்களில் ரூ.101.85 இலட்சம் செலவில் ஆறு நடுத்தர, பெரும் திட்டங்களுக்குப் புதிதாக அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

உண்மையில், 1991-92-ஆம் ஆண்டில் பாசனத்திற்குக் கொண்டுவரப்பட்ட பாசனப் பரப்பளவு



11,03,028 எக்டேர் (27,25,581 ஏக்கர்) ஆகும்.

**தேசிய நீர் நிருவாகத் திட்டம்**

பாசன வளத்தை நல்ல முறையில் பயன் படுத்திக் கொள்வதே இத்திட்டத்தின் நோக்க மாகும். பல்வேறு பாசனத் திட்டப் பணிகளின் கீழ் 1,53,400 எக்டேர் பரப்பு பயனடையும் ஆயக் கட்டுதாரர்களுக்காக தமிழ்நாடு அரசு, ரூ.52.70 கோடி வழங்கியுள்ளது. இவை, நடந்தேறிவரும் திட்டங்களுக்கும், புதிய திட்டங்களுக்கும் பயன் படுத்தப்படும். பழைய அணைகளை வலுப்படுத்து வதற்கான அணைப் பாதுகாப்பு உறுதித் திட்டம்.

பெரியாறு, கொடகனாறு, பேச்சிப்பாறை, மணிமுத்தாறு, வீடுர், உப்பாறு, பொன்னியாறு, கோமுகி ஆகிய அணைகளின் கட்டுமானம் நீரியல் ஆகியவற்றை மறு சீரமைப்பதற்காக உலக வங்கி யின் நிதியுதவி ரூ.42 கோடி செலவிடப்படும். இத்திட்டம், கோடிக் கணக்கில் முதலீடு செய்வதற் கேற்ப பாதுகாப்பு அளிப்பதற்கு உறுதியளிக்கும் திட்டமாகும்.

**கடல் அரிப்புத் தடுப்புப் பணிகள்**

தமிழ்நாடு மாநிலம் 1000 கி.மீட்டர் தூரத் திற்குப் பரவலான கடற்கரையைக் கொண்டுள் ளது. சென்னை, தஞ்சாவூர், கன்னியாகுமரி ஆகிய கடற்கரைப் பகுதிகளை, கடல் அரிப்பின் அழிவு களிலிருந்து பாதுகாப்பது அவசியமாகும்.

பொதுச் சொத்துக்களையும், தனியார் சொத் துக்களையும் பாதுகாப்பதற்கும், கடல் அரிப்புத் தடுக்கும் பணி அவசியமானதாகும்.

வட சென்னையில் எண்ணூர் நெடுஞ் சாலைக்கு, ரூ.4.24 கோடி செலவில் பாது காப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருவது இதற்கு ஓர் உதாரணமாகும்.

**சிறுபாசனம்**

பொதுப்பணித்துறையின் இந்தப் பிரிவு, ஏரிப் பாசன ஏற்பாட்டின் கீழ் வராத, 40 எக்டேருக்கும் அதற்கும் அதிகமாகப் பரப்புள்ளபாசனப் பகுதி யின் பராமரிப்பைச் செயல்படுத்துகிறது. இங்கு, இது ஒரு மிகைப்படியான கருத்தாகும். தமிழ் நாட்டில், ஐரோப்பியப் பொருளாதாரக்குழு உதவியுடன் ஏரிப்பாசன ஏற்பாடு இரு நிலை களில் நவீனப்படுத்தப்படுகிறது.28,780 எக்டேர் பயனடையக் கூடிய மேல் நிலையிலுள்ள, 1,206 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நிலை II-இல், மொத்தம் 22,332 எக்டேர் ஆயக்கட்டுப் பகுதி களுக்குப் பாசன வசதி அளிக்க, 152 மானாவாரி ஏரிகளுக்கு நீர் வழங்கவும், 2,080 எக்டேர் பரப்பு பயன்பெறும் வகையில் 80 முன்னாள் ஜமீன் ஏரிகளை நவீனப்படுத்த முன்னோடித் திட்டம் ஒன்றை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள் ளது. இதற்கு 55 கோடி ரூபாய் அனுமதிக்கப் பட்டுள்ளது. 33.74 கோடி ரூபாய் செலவில் 137 ஏரிகள் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அவற்றில் 27 ஏரிகள் தொடர்பான பணிகள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன.

**புதிய பெருந் திட்டம்**

அயல்நாட்டுப் பொருளாதாரக் கூட்டுறவு நிதி (ஜப்பான்) அல்லது ஐரோப்பிய பொருளாதாரக் குழு நிலை II-லிருந்து நிதியுதவி பெறுவதற்காக 200 கோடி ரூபாய் செலவில் 2,500 ஏரிகளை நவீனப்படுத்துவதற்கான திட்ட அறிக்கை ஒன்று மத்திய அரசின் நீர்வள அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. VIIIவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்காக 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**1992-93-ஆம் ஆண்டுப்பகுதி II திட்டங்கள்**

16 மாவட்டங்கள் பயன்பெறும் வகையில், 354.92 இலட்சம் ரூபாய் முடிவான செலவில் 19 சிறுபாசனச் சிறப்புத் திட்டங்களுக்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

**பெரியாறு வைகை பாசன ஏற்பாட்டை நவீனப்படுத்தல்**

மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங் களில் 60,000 எக்டேர் பரப்புக்குப் பாசன வசதியளிக்க, கேரளாவில் மேற்கு நோக்கிப் பாயும் பெரியாறு ஆற்றின் நீரை, கிழக்கு நோக்கித் திருப்பி விடுவதற்காக 1895-ஆம் ஆண்டில் பெரியாறு அணை கட்டப்பட்டது.

வைகையாற்றில் பெருகிவரும் நீரைத் தேக்கி வைத்து, இரண்டு மாவட்டங்களில் உள்ள ஆயக் கட்டுப் பகுதிகள் பயன்பெறும் வகையில் அந்த நீரைத் திறந்து விடுவதற்காக, 1959-ஆம் ஆண்டில் வைகை அணை கட்டப்பட்டது.

இவ்விரு பாசன ஏற்பாடுகளில் பெரிய அள விலான பழுதுபார்ப்புப் பணிகளும், சீரமைப்புப் பணிகளும், 1977-ஆம் ஆண்டு முதல் உலக வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் உலக வங்கியின் கடன் உதவியை முழுவதுமாகப் பயன்படுத்தி இரண்டு நிலைகளில் முடிக்கப்பட்டுள்ளன. நீர் பெறுவதற்கு மேலும் வசதியாக இருக்கும் பொருட்டு, இணைப்புக் கால்வாய் அமைக்கும் பணி தற்போது முழு மூச் சுடன் நடைபெற்று வருகிறது. இதனால், திண்டுக்கல்-அண்ணா, மதுரை ஆகிய மாவட்டங் களில் 1,620 எக்டேர் நிலம் பாசன வசதி பெறும்- 1992 மார்ச்சு வரை ரூ.84.79 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டில் மேற்கொண்டும் ரூ.12.65 கோடி செலவிடக் கருதப்படுகிறது.

**நிலத்தடி நீர்**

கிணறுகள், துளைக் கிணறுகள் ஆகியவற்றைத் தோண்டுவதற்காக தகுந்த இடங்களைத் தெரிந் தெடுப்பதற்கும், தற்போதுள்ள கிணறுகளை ஆழப் படுத்துவதற்கும் விவசாயிகள், பொதுமக்கள் அரசுத் துறைகள் ஆகியோருக்கு இப்பிரிவு ஆலோ சனை நல்குவதோடு அறிவியல் ஆய்வு மூலம் வங்கிக் கடன்களைப் பெறுவதற்கும் அவர்களுக்கு உதவி செய்கிறது.

**காவிரி நீர்த்தகராறு**

1990-ஆம் ஆண்டில் மத்திய அரசால் அமைக் கப்பட்ட காவிரி நீர்த்தகராறு நடுவர் மன்றம், தமிழ்நாட்டிலுள்ள மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு, 205 டி.எம்.சி. நீர் விடுமாறு கர்நாடக மாநிலத் திற்கு உத்தரவிட்டு இடைக்கால ஆணை பிறப் பித்தது. தமிழ்நாடு சட்டமன்றம் இந்த ஆணையை உடனடியாகச் செயற்படுத்த வேண்டுமென்று விரும்பியது. கர்நாடக மாநிலம் பாதுகாப்பு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தது, கர்நாடக அரசு பிறப் பித்த அவசரச் சட்டம் அரசியலமைப்புச் சட்டத் தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்குப் புறம் பானது என்று உச்ச நீதிமன்றம் 22.11.91-ஆம் நாளிட்ட தன்னுடைய ஆணையில் அறிவித்தது. இரு மாநிலங்களின் முதலமைச்சர்களும், பிரதம அமைச்சரைச் சந்தித்து, காவிரி வடிநிலத்தில் வசிக்கும் அனைவருக்கும் உரிய அளவு பயன்களை அளிப்பதைக் கருத்திற்கொண்டு நீர், தேசிய ஆதாரமாகக் கருதப்பட வேண்டுமென்பதை ஒப்புக் கொண்டனர். நீர் திறந்துவிடுவது பற்றி இவ்வரசு 14.5.92 அன்று மனு செய்து கொண்ட தன்பேரில், தற்போது இவ்விஷயம் உச்ச நீதி மன்றத்திடம் பரிசீலனையில் உள்ளது.

**கிருஷ்ணா நதி நீர் குடிநீர் வழங்குத் திட்டம்**

சென்னை மாநகருக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவை அதிகரிப்பதற்காக கிருஷ்ணா ஆற்றி லிருந்து 15 டி.எம்.சி. நீர் பெறுவதற்கு, தமிழ்நாடு அரசு, ஆந்திரப் பிரதேச அரசுடன் 1983 ஏப்ரலில் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. 1992-93-ஆம் ஆண்டில் தெலுங்கு கங்கைத் திட்டப் பணிகளுக்குத் தமிழ்நாட்டின் பங்காக தமிழ்நாடு அரசு ரூ.50 கோடி வழங்கியுள்ளது.

கண்டலேறு-பூண்டி கால்வாய், பூண்டியி லிருந்து செம்பரம்பாக்கம் ஏரிக்குச் செல்லும் இணைப்புக் கால்வாய், செம்பரம்பாக்கம், செங்குன்றம் ஏரிகளின் முழு நீர்த்தேக்க அளவை உயர்த்துதல் போன்ற பல்வேறு திட்டப் பணிகள்




★ உணவு உற்பத்தியில் வரலாறு காணாத சாதனை அளவான 90.7 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவைத் தமிழக அரசு எட்டியுள்ளது; அரிசி உற்பத்தி 71 இலட்சம் மெட்ரிக் டன்களாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டின் எல்லைக்குள் முழு வேகத்தில் நடை பெற்று வருகின்றன.

இதுகாறும் பாசனம் குடிநீர் வழங்கல் துறை யின் சாதனை விளக்கப்பட்டது. மின்சாரத் துறை யின் பணிகளின் சிறப்பைக் காண்போம்.

**மின்துறை**

தமிழ்நாட்டில் 26.3.92-லிருந்து மின் வெட்டு இல்லை என்பது குறித்து நாம் பெருமைப்படலாம். பின்வரும் மின் உற்பத்தி நிலையங்களில் 222.250 மெகாவாட் மின்சாரம் கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகிறது. தூத்துக்குடி அனல் மின் நிலையம் பிரிவு IV-210 மெகாவாட் நரி மணம் எரிவாயு விசையாழி திட்டம் - 10 மெ.வா. புளியங்குளம் காற்றாலைகள் 1.5 மெ.வா. மணவக்கண்டி புனல் மின் திட்டம் (0.75 மெ.வா.).

தூத்துக்குடி அனல்மின் நிலையம் 1991-ஆம் ஆண்டில் 60.95 சதவீத மின் சக்தியை உற்பத்தி செய்து சாதனை புரிந்துள்ளது. இந்த அனல் மின் நிலையம் ஆறாவது முறையாகப் பாராட்டத் தக்க விருதினைப் பெற்றுள்ளது.

1991 ஜூலையிலிருந்து 1992 ஜூன் வரை யில் மொத்தம் 4,17,813 மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 41,520 மின் இணைப்புகள் வேளாண்மைப் பம்பு செட்டு களுக்குக் கொடுக்கப்பட்டவையாகும். 1992 மார்ச் வரையில் 27,388 தெருவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. மின் உற்பத்தி செய்வதில் தனியார் துறை பங்கேற்பதற்கு ஊக்கம் அளிக்கப் படுகிறது. சில திட்டங்கள் அவர்கள் பொறுப்பில் விடப்பட்டிருக்கின்றன.

300 மெகாவாட் பிள்ளைபெருமாள் நல்லூர் எரிவாயு விசையாழி மின் உற்பத்தித் திட்டம்.

500 மெகாவாட் தூத்துக்குடி அனல் மின் உற்பத்தித் திட்டம் நிலை - IV 1000 மெகாவாட் கடலூர் அனல் மின் நிலையம். அரசு புதிய தொழில் கொள்கைப்படி 100 சதவீத, ஏற்று மதியை நோக்கமாகக் கொண்ட தொழிற் பிரிவு களுக்கும் (EOU) புதிய திட்டங்களுக்கும், தொழில் வளர்ச்சியை முன்னிட்டுப் பல சலுகைகளை வழங்குகிறது. பொதுப்பணித்துறையின் மற்றொரு முக்கியப் பிரிவைப் பார்ப்போம்.





★ பரந்த எல்லைகள் கொண்ட நம் இந்தியா போன்ற ஒரு பெருநாட்டில் நாம் விரும்பாமலேயே நமக்குள் தோன்றுகிற பிரச்சினைகள் ஏராளமாக உள்ளன. மாநிலங்களிடையே இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படும் போது நியாயமும், நியாயத்தின் அடிப்படையில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் தான் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க முடியும்.

**நிறைவேற்றப்பட்ட முக்கியக் கட்டடப் பணிகள்**

1. சென்னை, உயர்நீதிமன்றத்திற்குக் கூடுதல் கட்டடம் ரூ.413.00 இலட்சம் செலவில் கட்டப் பட்டது.

2. விருதுநகரில் காவல்துறைப் பணியாளர் குடியிருப்புக் கட்டடம் ரூ.167.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

3. இராமநாதபுரத்தில் காவல்துறைப் பணி யாளர்களுக்குக் குடியிருப்பு ரூ.229.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

4. சிவகங்கையில் காவல்துறைப் பணியாளர் களுக்குக் குடியிருப்பு ரூ. 230.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

5. கோயம்புத்தூரில் சட்டக்கல்லூரியும் விடுதி யும் ரூ.95.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

6. விருதுநகரில் ஆயுதக் காவல்படைப் பணி யாளர்களுக்குக் குடியிருப்புகள் ரூ.215.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

7. தமிழ்நாட்டில் புயல் புகலிடம் (35 எண் ணிக்கை) ரூ.127.00 இலட்சம் செலவில் கட்டப் பட்டது.

ஒரு நாட்டில் அமைந்துள்ள சாலைகளின் தரமும், அவற்றின் மேம்பட்ட தன்மையும், அந் நாட்டில் பொருளாதார வளர்ச்சியும் ஒன்றுக் கொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை யாகும்.





தமிழ்நாடு நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள் துறை, அரசு ஒப்புதல் அளிக்கும் பல் வேறு திட்டங்களின் கீழ் பெரும் பாலங்கள் கட்டுதல்ப் சாலைகள் அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

49,000 கி.மீ. நீளமுள்ள அரசு சாலைகளைப் பராமரிப்பதுடன், இத்துறை, 5223 கி.மீ. நீளமுள்ள சாலைகளைப் புதுப்பிக்கும் பணியை யும் மேற்கொண்டது.

5 ஆண்டுக்கால அளவில், ரூ.150 கோடி செலவில், மிகவும் மோசமாகப் பழுதடைந்துள்ள சாலைகளை மீண்டும் அமைக்கும் பணி குறித்த சிறப்பு பழுது பார்ப்புத் திட்டம் ஒன்று தொடங்கப் பட்டது. 1991-92-ஆம் ஆண்டில், 782 கி.மீ. நீளச் சாலைகள் மீண்டும் போடப்பட்டன.

134 பெரிய, சிறிய பாலங்கள் கட்டி முடிக்கப் பட்டன. மேலும் 46 பாலங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. ரூ.30 கோடி செலவில், தனியார் அமைப்புகள் மூலம் சாலைகளை மேம்படுத்தும் பணியும், இதற்காக செலவிட்ட தொகையை சுங்கம் வசூலிப்பதன் மூலம் திரும்ப பெறுவதும் ஒரு புதிய அம்சமாகும். இந்த முறை, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் செயற்படுத்திப் பார்க்கப்பட்டு வருகிறது.

**கிழக்குக் கடற்கரைச் சாலை**

ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் ரூ.53 கோடி செலவில், திருவான்மியூரிலிருந்து கடலூர் வரை இருவழிப்பாதை அமைக்கும் பணி தொடங் கப்பட்டுள்ளது. அது, சிறந்த முறையில் நடை பெற்று வருகிறது. ரூ.13 கோடி ஏற்கெனவே செலவிடப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டில் ரூ.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தேசிய நெடுஞ்சாலைகள்**

இவ்வாண்டில் ரூ.408 இலட்சம் செலவில் முதல்சாலைப் பணிகளும், ரூ.49 இலட்சம் செல வில் வேலூர் மாற்றுச் சாலைப்பணிகளும், ரூ.47 இலட்சம் செலவில் ஏனைய பாலம் கட்டும் பணிகள் முதலியனவும் முடிக்கப்பட்டுள்ளன.

**தேசிய நெடுஞ்சாலை-45**

தேசிய நெடுஞ்சாலை-45-இல் தாம்பரத் திலிருந்து விழுப்புரம் வரையிலான பகுதி ரூ.72 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாண்டில் செலவு ரூ.7.2 கோடியாகும்.

**தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம்**

நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.10 கோடி செலவில் மூன்று பெரும் பணிகளுக்கும், ரூ.45 கோடி செலவில் வேறு 13 பணிகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மொத்தத் திட்டச் செலவு ரூ.150 கோடியாகும்.

# ஆதிதிராவிடர் மேம்பாடு : அரசு உதவிகள்

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
எம். ஆனந்தன்

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் 15.2.1974-ஆம் ஆண்டு 1956-ஆம் ஆண்டு கம்பெனிச்சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

வீடற்ற ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டித் தருவதற்கு நிறுவப்பட்ட இந்நிறுவனம், 1980-81-ஆம் ஆண்டு முதல் ஆதி திராவிடர் மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டுச் செயலாற்றி வருகிறது.

கடந்த ஆண்டு 1991-92-இல் தாட்கோ நிறுவனம் 18 மாணவ மாணவியர் விடுதிகள் 2 பழங்குடியினர் மாணவ விடுதிகள், 8 பள்ளிக் கட்டடங்கள், ஒரு ஜி.டி.ஆர். பள்ளிக் கட்டடம், 10 சமுதாயக் கூடங்கள் மற்றும் 268 ஜீவன்தாரா கிணறுகள் ஆக ரூ.451 இலட்சம் செலவில் கட்டிக் கொடுத்துள்ளது.

நடப்பாண்டில் கீழ்க்கண்ட பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைத் தாட்கோ நிறைவேற்றியுள்ளது.

**சுய வேலைவாய்ப்புத் திட்டம்:**

வேலையின்றி அவதிப்படும் ஏழை இந்து ஆதி திராவிடர்களுக்குச் சுயவேலை வாய்ப்பு அமைத்து வாழ்வளிக்க இத்திட்டம் செயல்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் நபர் ஒன்றுக்கு அதிகப்பட்சம் ரூ.10,000 வரை மானியத்துடன் கூடிய கடனாக வழங்கப்படுகிறது. இதில் 50 விழுக்காடு தாட்கோ மானியமாகவும், எஞ்சிய 50 விழுக்காடு வங்கிக் கடனாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மளிகைக் கடைகள், பெட்டிக் கடைகள், ரெடிமேடு ஆடைகள் தயாரித்தல்-முதலியன வழங்கப் படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 8,000 ஆதி திராவிடர்களுக்கு ரூ.400 இலட்சம் மானிய உதவியுடன் கடன் வழங்கப்பட்டது.



“ஆதிதிராவிடர் மேம்பாட்டிற்காக, வீட்டு வசதி, பள்ளிக் கட்டடங்கள், விடுதிகள், சமுதாயக் கூடங்கள், ஜீவன்தாரா கிணறுகள் வெட்டுதல் ஆகிய பணிகள் சிறப்பாக நிறைவேற்றப்படுகின்றன. சுயவேலை வாய்ப்புத் திட்டம், சிறு தொழில் கடன் ஆகியவையும் அவர்கள் வாழ்க்கைத்தரம் உயர வழி வகுக்கின்றன.”

**சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்:**

தாட்கோவில் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம் முக்கிய இடம் பெறுகிறது. இத்திட்டம் தாட்கோவில் முழு மானியத்துடன் “ட்ரைசம்” திட்டத்திற்கு இணையாக 6 மாதக் காலத்திற்குச் செயல்படுத்தப்படுகிறது. படித்து வேலை வாய்ப்பின்றி இருக்கும் ஆதி திராவிடர் இளைஞர்கள், பள்ளிப் படிப்பினை இடையில் நிறுத்திய மாணவர்கள் இத்திட்டத்தினால் பயன் பெறுகின்றனர். பயிற்சி முடிந்தபின் மானியத்துடன் வங்கிக் கடன் வழங்கப்பட்டு சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்த இத்திட்டம் பயனுள்ளதாக அமைந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் வானொலி மற்றும் தொலைக்காட்சி பழுதுபார்த்தல், ஜெம் கட்டிங், வெல்டிங், எலக்ட்ரிசியன், ப்ளம்பிங், டர்னிங், மோட்டார் வாகனப் பழுதுபார்த்தல், தையல் பயிற்சி ஆகிய தொழில்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**இப்பயிற்சிக்காக நிதி உதவி 6 மாதங்களுக்கு நபர் ஒன்றுக்கு கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது.**

1. மாதம் ஒன்றுக்கு உதவித்தொகை ரூ.250/-
2. பயிற்சியாளர்களுக்குச் சம்பளம் மாதம் 1-க்கு ரூ.75/-
3. மூலப் பொருட்கள் வாங்க மாதம் 1-க்கு ரூ.25/-

பயிற்சிக்காகக் கருவிக் கலப்பெட்டி ரூ.500 மதிப்புக்கு ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் வழங்கப்படுகிறது.

நடப்பாண்டில் 2,307 நபர்களுக்கு ரூ.59.982 இலட்சம் செலவில் முழு மானியத்துடன் பயிற்சி அளிக்கப்பட்டது.

**விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த திட்டங்கள்:**

விவசாயம் மற்றும் உணவுப் பொருட்கள் உற்பத்திப் பெருக்கத்திற்குக் கீழ்க்கண்ட திட்டங்களை ஆதி திராவிட விவசாயிகளுக்குத் தாட்கோ மானியத்துடன் வழங்கப்படுகிறது. இத்திட்டங்கள் மாவட்ட மேலாளர்கள் தாட்கோ மூலமாகவும், விவசாயப் பொறியியற் பிரிவு மூலமாகவும் செயல்படுத்தப்படுகின்றன.

வித்துக்கள், பூச்சி மருந்துகள், விவசாயக் கருவிகள் போன்றவை தாட்கோ வழங்கும் மானியத்துடன் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.



★ நம்மை வாய்ச்சொல் வீரர்களாக்கப் பெறப்பட்டதல்ல சுதந்திரம். பல நூறு ஆண்டுகளாகத் தேங்கிக் கிடந்த சோம்பலை விரட்டி, நம்மை நாமே வளர்த்துக் கொண்டு, வாய்மை மிக்க ஓர் சமுதாயத்தை உருவாக்க நாம் பெற்ற உந்து சக்தியே சுதந்திரம் ஆகும்.

கறவை மாடுகள், வெள்ளாடு, செம்மறி ஆடுகள், முயல் வளர்த்தல், வெள்ளைப் பன்றி வளர்த்தல், கோழிப் பண்ணை அமைத்தல் போன்ற திட்டங்கள் தாட்கோ மானியத்துடன் கால்நடைத் துறை மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

**கீழ்க்கண்ட திட்டங்கள் ஆதி திராவிடர் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு மானியத்துடன் வழங்கப்படும்:**

1. ஆழ்குழாய்க் கிணறு.
2. பம்பு செட்டுடன் கூடிய மின்மோட்டார் அமைத்தல்.



3. எண்ணெய்ப் பொறிகள் வழங்குதல்.
4. பம்பு அறைகள் அமைத்தல்.
5. இரு எருதுகளுடன் கூடிய டயர் வண்டி.
6. உழவு மாடுகள் (ஜதை).
7. இரு மாடுகள் கொண்ட மாட்டு வண்டி.
8. சைக்கிளுடன் கூடிய விசைத்தெளிப்பான்.
9. இரும்புப் பங்குகள் வழங்குதல்.



**சிறு தொழில் கடன் திட்டம்:**

இத்திட்டத்தின்மூலம் மானியத்துடன் விளிம்புத் தொகைக் கடனாக ஏழை ஆதி திராவிடர், மலை வாழ் மக்கள் மற்றும் மதம் மாறிய ஆதி திராவிடர் கிருத்துவர்கள் ஆகியோருக்குச் சுயமாகத் தொழில் செய்ய உதவி செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 50 விழுக்காடு மானியமும், 25 விழுக்காடு விளிம்புத் தொகையாகவும், எஞ்சிய 25 விழுக்காடு வங்கிக் கடனாகவும் அதிகப் பட்சமாக ரூ.5,000 வரை வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் 540 பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

**தனி நபர் தொழில் முனைவோர் திட்டம்:**

ஆதி திராவிடத் தனி நபர் தொழில் முனைவோர்களை உருவாக்கும் சிறப்புத் திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது. 1990-91-ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்ட இத்திட்டத்தில் இது வரை 2,400 தொழில் முனைவோர் உருவாக்கப் பட்டுள்ளார்கள். ஆதி திராவிடர் தொழில் முனைவோர்களுக்கு, அவர்களின் விருப்பம் தகுதி பயிற்சி ஆகியனவற்றிற்கேற்ப ரூ.5 இலட்சம் வரை மானியம் மற்றும் வங்கிக்கடன் வழங்கப்படுகிறது. தாட்கோ மானியமாக ரூ.15,000 மற்றும் மானியம் ரூ.85,000 அல்லது சொத்து மதிப்பில் 20 விழுக்காடுகள், இதில் எது குறைவோ அவற்றை 4 விழுக்காடு வட்டி விகிதத்தில் 10 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தும்படி வழங்கப் படுகிறது. எஞ்சிய தொகையை வங்கிக் கடனாக வழங்கப்பட்டு சொத்துக்கள் உருவாக்கப்படுகின்றன.

வருவாய் ஈட்டும் திட்டங்களான லாரி, மினி வேன்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள், ட்ராக்டர் மற்றும் ட்ரெயிலர், இரசாயனத் தொழிற்சாலை, கம்ப்யூட்டர் மையங்கள், செயற்கை வைரங்கள் தீட்டும் தொழில், ஏற்றுமதி ஆடைகள், ஜிராக்ஸ் முதலியன வழங்கப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் 879 ஆதி திராவிடர் தனி நபர் தொழில் முனைவோர்களைத் தாட்கோ உருவாக்கி யுள்ளது.

இது தவிர, அரசு மற்ற 22 துறைகளின் மூலமாக ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகப் பல அரிய திட்டங்களைத் தாட்கோ நிறைவேற்றி வருகிறது.

நடப்பாண்டில் பல்வேறு திட்டங்கள் மூலமாக ரூ.2,653 இலட்சம் செலவிடப்பட்டு, 65,738 ஆதி திராவிடர் மக்கள் பயனடைந்துள்ளனர். ●



★ குறைகூறியே பழக்கப்பட்ட சில தீய சக்திகள் அரசின் கவனத்தைத் திசைதிருப்ப, சில விரும்பத்தகாத முறைகளைக் கையாளுகின்றன. அத்தகைய தீய சக்திகளின் எதிர்ப்புகளை முறியடித்து, தொடர்ந்து மக்கள் சேவையில் ஈடுபட முழுமையாக நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம்.

—டாக்டர் எம்.ஜி.ஆர்.



# தொழிலாளர் நலம் பெற...





மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்
**எஸ். ரகுபதி**

**“தொழில் உறவுகள் தொடர்கின்றன; தொழிலாளர் நலம் பெருகுகின்றன. தொழிலாளர்கள் வாழ்க்கைத்தரம் உயரவும், அவர்களது உரிமைகளை நிலைநாட்டவும் அரசு கருத்துடன் செயலாற்றி வருகிறது. தொழில் தகராறுகள் தீரவும், பிரச்சினைகளை சுமுகமாக முடிவு செய்யவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.”**

தமிழக அரசு தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் தொழிலாளர்களும், நிர்வாகத் தினரும் நேரிடையாக, தங்கள் வளர்ச்சியையும் நிறுவன வளர்ச்சியையும் குறித்துப் பேசி தாங்களே முடிவெடுக்கும் கூட்டு முயற்சியையே ஊக்கு விக்கிறது.

உழைக்கும் வர்க்கத்தினரின் பணி நிலைமையினை வரன்முறைப்படுத்துவதற்காகவும், அவர்களுக்காக நலன் திட்டங்கள் சரிவரப் பெறப்படும் வகையிலும் இவ்வரசு மிகவும் முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது. மேலும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட்டு சமூகத்தில் நல்லதொரு அந்தஸ்தைப் பெற்று வாழும் விதத்தில் அவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதில் தமிழக அரசு கண்ணும் கருத்துமாக உள்ளது

அரசு பதவியேற்ற நாளிலிருந்து கடந்த ஓராண்டுக் காலமாக தமிழகத்தில் தொழில் உறவு நிலைமை மிகவும் சுமுகமாகவே இருந்து வருகிறது. தொழிலாளர் துறை ஆணையரின் தலைமையின் கீழ் இயங்கி வரும் தமிழ்நாட்டிற்கான சமரச அமைப்புத் தொழில் தகராறுகள் ஏற்படும் முன்னரே அவற்றை இனம் கண்டு அவை வரும் முன்னரே நல்லதொரு தீர்வு கண்டு, பிரச்சினைகளைச் சுமுகமாக முடிவு செய்யும் விதத்தில் மிகவும் முனைப்பாகவும் ஆக்கபூர்வமாகவும் பணியாற்றிட் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள மொத்த 20,366 தொழில் நிறுவனங்களில் 10,77,724 தொழிலாளர்கள் உள்ளனர். அதில் 11.6.92 அன்று உள்ளபடி 14 தொழில் நிறுவனங்களில் மட்டுமே வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்பினால் 5,124 தொழிலாளர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

ஜூலை 1991 முதல் மே 1992 மாதம் முடிய உள்ள காலத்தில் தமிழக அரசின் தொழிலாளர் துறை சமரச அலுவலர்களால் மொத்தம் உள்ள 13,330 தொழிற்தகராறுகளில் 11,470 தொழிற் தகராறுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

**முக்கியமான தொழிற் தாவாக்கள்**

**1990-91-ஆம் ஆண்டிற்கான போனஸ் பிரச்சினை**

தமிழ்நாட்டில் உள்ள நூற்பாலைகளின் தொழிலாளர்கள் 30% போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கும் பொருட்டு வேலைநிறுத்த அறிவிப்புக் கொடுத்து பின்னர் 22.10.91 முதல் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். மாண்புமிகு முதலமைச்சரின் அறிவுரையின்படி மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப் பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இதனைத் தொடர்ந்து தொழிலாளர் நலத்துறை ஆணையர் அவர்கள் 1989-90-ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்ட அதே சதவிகித போனஸ் வழங்கும் படி 1.11.91 அன்று அறிவுரை வழங்கினார். இவ்வறிவுரை வழங்கப்பட்ட பின்னரும் தென்னிந்திய நூற்பாலைகள் சங்கத்தைச் சார்ந்த பல உறுப்பினர்கள் அறிவுரைப்படியான போனஸ் வழங்க




வில்லை. 15.11.91 அன்று மொத்தமுள்ள 524 நூற்பாலைகளில் 43,500 தொழிலாளர்களைக் கொண்ட 98 நூற்பாலைகள் வேலைநிறுத்தம் செய்தன. இதன் பின்னர் தென்னிந்திய நூற்பாலைச் சங்கத்தினரின் கருத்துக்களையும் கேட்டறிந்து, மாண்புமிகு தமிழக முதல்வர் கடந்த ஆண்டில் வழங்கப்பட்டதைப் போன்றே இவ்வாண்டும் போனஸ் வழங்க வேண்டும் எனவும், அத்தொகையை இரு தவணை முறைகளில் முறையே 22.11.91 மற்றும் 7.1.92 ஆகிய இரு தேதிகளுக்கு முன்னர் வழங்க வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்கள்.

நலிவுற்ற நூற்பாலைகளைப் பொறுத்த வரையில் 15% போனஸ் வழங்கவேண்டும் எனவும், அறிவுரை வழங்கினார்கள். இம்மாநிலத்திலுள்ள நூற்பாலைகளின் போனஸ் பிரச்சினை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரையின் பேரில் சுமூகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

மேலும் இன்ஜினியரிங், சர்க்கரை, சிமெண்ட், தோட்ட நிறுவனங்கள் மற்றும் பத்திரிகைக்காகித ஆலைகள் போன்ற பெரிய தொழில் நிறுவனங்களில் ஏற்பட்ட போனஸ் பிரச்சினை கடந்த ஓராண்டில் இவ்வரசின் தலையீட்டினால் சுமூகமாகத் தீர்க்கப்பட்டது.

**மூடிய ஆலைகளைத் திறத்தல்**

1.4.91 முதல் பணி முடக்கம் செய்யப்பட்டிருந்த பி அண்டு சி மில் இவ்வரசின் சீரிய முயற்சியினாலும், இத்துறை அலுவலர்களின் கடும் முயற்சியினாலும் 13.4.92 முதல் மீண்டும் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தமிழக அரசு பின்னி ஆலை நடைமுறை மூலதனத்திற்காக, பாரத வங்கிக்கு ரூ.10 கோடிக்கு உத்திரவாதம் அளித்துள்ளது. இந்த உத்தரவாதம் 6 மாதக் காலத்திற்கு அல்லது இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கிக்கு நிர்வாகம் வழங்கியுள்ள திட்டத்திற்கு ஒப்புதல் கிடைக்கும் வரை இவற்றுள் எது முன்னதாக முடியுமோ அதுவரை அமலில் இருக்கும்.

பெருங்களத்தூரில் 7.2.1989 முதல் மூடிக்கிடந்த 3,086 தொழிலாளர்களைக் கொண்ட தி ஸ்டாண்டர்டு மோட்டார் புராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிட், என்னும் நிறுவனம் இவ்வரசின் பெரு முயற்சியினால் 4.2.1992 முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

கோவையில் 13.11.84 முதல் இயங்காமலிருந்த வசந்தா மில்ஸ் என்னும் நிறுவனம் மீண்டும் திறப்பது சம்பந்தமாக இத்துறை அலுவலர்களின் பெருமுயற்சியினால் 24.2.92 அன்று தொழிற்தகராறுகள் சட்டம் 1947-ன் பிரிவு 12(3)ன் கீழ் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

**மூடப்பட்ட நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு உதவித் தொகை அளித்தல்**

இவ்வரசு பொறுப்பேற்ற இந்த ஓராண்டுக் காலத்தில் மூடப்பட்ட நிறுவனங்களில் உள்ள 18,962 பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 75,84,400 உதவித் தொகையாக பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது.

**தொழிலாளர் நலச் சட்ட அமலாக்கம்**

**சட்டங்கள், சட்ட திருத்தங்கள், அறிக்கைகள், விதிவிலக்குகள் மற்றும் தமிழ்நாடு எடைகள் மற்றும் அளவைகள் தரம் (அமலாக்கம்) விதிகள், 1989.**



தமிழ்நாடு எடைகள் மற்றும் அளவைகள் தா (அமலாக்கம்) விதிகள் 1989-இல் உள்ள 4-வது அட்டவணையில் செய்யப்பட்டுள்ள திருத்தங்களின்படி, ஒரு கிலோ கிராம் வரையிலும் அளவுள்ள உணவு எண்ணை விற்பனை செய்யப்படும்போது அளவு, மூலமும் ஒரு கிலோ கிராம் எண்ணெய்க்கு மேல் விற்பனை செய்யப் படும்போது எடை போடுவதன் மூலம் மட்டுமே உரிய அளவைக் கணக்கிட வேண்டும் என்றும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது

**தோட்டத் தொழிலாளர் சட்டம்**

தோட்ட நிறுவனங்களில் பணிபுரியுப தொழிலாளர்களுக்குப் போதுமான மருத்துவ வசதிகள் கிடைக்க செய்ய வேண்டியும், அந்த வசதிகளைப் பெற்றுத் தர வழிமுறைகளைப் பரிந்துரை செய்யவும் ஒரு துணைக் குழுவை அமைத்துள்ளது.

**குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948**

கடந்த ஜூன் 1991 முதல் மே 1992 வரையிலான காலத்தில் 1948- ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் அரசு கீழ்க்கண்ட தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை நிர்ணயம் மறு நிர்ணயம் செய்துள்ளது.

**நிர்ணயம்**

1. காகிம் மற்றும் காகிதம் சார்ந்த தொழில்

**மறு நிர்ணயம்**

1. கம்பளித் தரைவிரிப்பு மற்றும் சால்வை நெசவுத் தொழில்
2. தோல் மற்றும் தோல் தயாரிப்புத் தொழில்
3. உப்பளத் தொழில்
4. தீப்பெட்டி மற்றும் பட்டாசு தயாரிக்கும் தொழில்
5. ஜவ்வரிசித் தொழில்
6. ஆட்டோமொபைல் பணிமனைத் தொழில்
7. ஓட்டல் மற்றும் உணவு நிறுவனங்கள் தொழில்
8. அச்சகத் தொழில்.

தொழிலாளர் நலச் சட்டங்களைச் சீரிய முறையில் அமல் செய்யும் பொருட்டு கடந்த ஓராண்டுக் காலத்தில் அரசு கீழ்க்கண்ட புதிய பதவிகளை இத்துறையில் ஏற்படுத்தி உள்ளது.

1. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தை அமல்படுத்துவதற்காக மட்டும் 6 தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள் பதவிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

2. வட ஆர்க்காடு-அம்பேத்கர் மற்றும் திருவண்ணாமலை- சம்புவராயர் மாவட்டங்களிலுள்ள விற்பனையாளர்களின் எடையளவுகளை முத்திரை செய்வதற்காகவ 8 முத்திரை ஆய்வாளர்கள் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

3. சென்னை மற்றும் கோவையில் உள்ள ஸ்டோரேஜ் டாங்குகளைச் சரிபார்க்கும் பணிக்காகவே 2 தொழிலாளர் துணை ஆய்வாளர்கள் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**நலத் திட்டங்கள்**

**பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி**

பீடித் தொழிலாளர்களுக்கு அரசு மானியம் மற்றும் கடன் தொகையில் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 1,000 வீடுகள் கட்டுவதற்காக அரசு திருநெல்வேலி-கட்டபொம்மன மாவட்டத்தில் மேலப்பாளையம் மற்றும் முக்கூடலில் நிலம் கையகம் செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், உரிய பயனீட்டாளர்களைத் தேர்வு செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இது முடிவுற்றதும் வீடு கட்டும் பணி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மேற்கொள்ளப்படும்.




**கட்டடத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத் திட்டம் ஏற்படுத்துதல்**

அமைப்பு ரீதியற்றத் துறைகளில் ஒரு பெரும்பான்மையான பகுதியினர் கட்டடத் தொழிலாளர்களாகும். இத்தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்வதோடல்லாமல், 1982-ஆம் வருட தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் (பணி நிரந்தரம் மற்றும் வேலை நிலைமை) சட்டத்திலுள்ள சலுகைகளை இத்தொழிலாளர்களும் பெற வகை செய்ய அரசு உத்தேசித்துள்ளது. இதைத் தவிர இத்தொழிலாளர்களுக்கென் வைப்பு நிதி, பணிக்கொடை, பேறுகால சலுகைகள் போன்ற பயன்களோடு விபத்து மற்றும் நோய்வாய்ப்பட்ட நேரங்களில் நிதி உதவி கிடைக்கும் வகையில் அரசு தனியாக ஒரு நலத் திட்டத்தினை உருவாக்கவும் உத்தேசித்துள்ளது.

**மகளிர் பிரிவு ஏற்படுத்துதல்**

பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை கணக்கெடுப்பு, பல்வேறு தொழில் நிறுவனங்களில் அவர்களது வேலைவாய்ப்பு, வேலை நிலைமை மற்றும் அவர்களுக்கென ஏற்படுத்தப்



பட்டுள்ள நல வசதிகள் போன்ற விவரங்களைச் சேகரிக்கும் பொருட்டு அரசு 'மகளிர் பிரிவு' ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. மேற்படி மகளிர் பிரிவின் தலைவராகத் தொழிலாளர் உதவி ஆணையர் நிலையில் ஒரு பெண் அலுவலர் பணியமர்த்தப்பட்டுள்ளார். பெண் தொழிலாளர்கள் பற்றிய கணக்கெடுப்பு, பெண் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், பெண் தொழிலாளர்களின் உடல் நலம் குறித்து புதிய மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் பெண் தொழிலாளர்களின் முன்னேற்றம் குறித்தும் கருத்து தெரிவித்தல், குழந்தைகள் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு என நலத்திட்டங்கள், கருத்தரங்குகள், கருத்தாய்வுகள் நிகழ்த்த ஆலோசனைகள் கூறுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள இவர் பணிக்கப்பட்டுள்ளார். மேலும், சம ஊதியச் சட்டத்தினை அமலாக்கம் குறித்த பணியும் இவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

**தொழிலாளர் மறு வாழ்வு நிதி ஏற்படுத்துதல்**

பொதுவாக நவீனப்படுத்துதலாலோ அல்லது தொழில் நுட்ப மேம்பாட்டினாலோ அல்லது நலிவடைந்த/மூடப்பட்ட நிறுவனங்களினாலோ ஆட்குறைப்பு அல்லது வேலையின்மையோ ஏற்படுகின்றது.

எனவே, அங்ஙனம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களை கண்டறிந்து அவ்விதம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க வேண்டிய நிலையுள்ளது. அவற்றுள் ஒன்றாக அரசால் கண்டறியப்பட்டதுதான், அங்ஙனம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கென வகுக்கப்பட்ட நல நிதித் திட்டம் ஆகும்.

பெரிய, நடுத்தர, சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில் நிறுவனங்களுக்காகவே, சமீபத்தில் அரசு ஒரு புதிய தொழிற்கொள்கையினைப் போதுமான நிதி சலுகைகளுடன் அறிவித்துள்ளது. இப்புதிய தொழிற்கொள்கையினால் தொழிலாளர் புனர்வாழ்வு நிதியினைத் தொடங்கவும், இந்த நிதியினைக் கொண்டு நிறுவனங்களைச் சீரமைக்கும் போது அதில் உள்ள தொழிலாளர்கள் பயனடைய ஏதுவாகும். இந்த நல நிதியை எவ்வாறு அமைப்பது மற்றும் அமல்படுத்துவது என்பது பற்றிய வழிமுறைகளை அரசு ஆராய்ந்து செயல்படுத்தும். இந்த நல நிதிக்கு ரூ.50 கோடி நிதி உதவி அளித்து உதவும்படி மைய அரசை தமிழக அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

**பீடித் தொழிலாளர்களுக்கெனக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல்**

பீடித் தொழிலாளர்கள் சுரண்டப்படுவதைத் தடுக்கவும், அவர்களுக்குச் சேர வேண்டிய சலுகைகளை அவர்களைப் போய்ச் சரிவர சேர்வதற்கெனவும், பீடித் தொழிலாளர்களுக்கென நிறுவனங்களை தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்துவது பற்றி அரசு சிந்தித்து வருகிறது. எனவே, இதனைக் கருத்திற்கொண்டும், மூலதனம், பணியாளர் அமைப்பு மற்றும் விற்பனை நிலைகளைக் கருத்திற்கொண்டும் ஒரு வரைவுத் திட்டத்தினை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நல வாரியம்**

தொழிலாளர்களின் நலனுக்காகக் கடந்த ஓராண்டில் கீழ்க்கண்ட இடங்களில் இவ்வரசு தொழிலாளர் நல மையங்கள்/குழந்தைகள் காப்பகங்கள்/படிப்பகங்களை ஏற்படுத்தியுள்ளது.

1. தேனியிலுள்ள பழனிச் செட்டிப்பாளையம்.
2. ஈரோட்டில் உள்ள பள்ளிப்பாளையம்.
3. இராஜபாளையத்திலுள்ள துலுக்கப்பட்டி (குழந்தைகள் காப்பகம்)
4. வடலூர் (படிப்பகம் மற்றும் குழந்தைகள் காப்பகம்)

**தொழிலாளர்களின் குழந்தைகளுக்காகப் பொறியியல் கல்லூரி அமைத்தல்**

கல்வித் தகுதியின் அடிப்படையில் தற்போது தொழிலாளர்கள் தங்கள் குழந்தைகளைப் பொறியியல் கல்லூரியில் சேர்க்க இயலாத நிலை உள்ளது. மேலும், சுய பொருளாதார அடிப்படையில் இயங்கும் பொறியியல் கல்லூரிகளிலும் தங்கள் குழந்தைகளைச் சேர்த்துப் படிக்க வைப்பதற்குப் போதிய பொருளாதார வசதி இல்லாத நிலையிலேயே தொழிலாளர்கள் காணப்படுகிறார்கள். தொழிலாளர்களின் இந்த இக்கட்டான நிலையிலிருந்து அவர்களை மீட்கும் பொருட்டாகவும், அவர்களது குழந்தைகளும் பொறியியல் பட்டம் பெற்று பொறியாளர்களாக உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த அரசு தொழிலாளர் நல வாரியத்தின் மூலமாக, தொழிலாளர்களின் குழந்தைகளுக்காகவே ஒரு பொறியியல் கல்லூரி தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

தற்போது சுமார் 12 இலட்சம் தொழிலாளர்கள் தொழிலாளர் நல நிதியில் சந்தா செலுத்தி வருகின்றனர். ஒவ்வொரு தொழிலாளியிடமிருந்தும் அவர்கள் விருப்பப்படி ரூ.250-ஐ 5 மாத சுலப தவணைகளில் பிடித்தம் செய்யவும், நிர்வாகத்திடமிருந்தும் அவர்கள் விருப்பப்படி தொகை வசூலித்து பொறியியல் கல்லூரி தொடங்க அரசு தீர்மானித்துள்ளது. இதனால் சுமார் 15 கோடி ரூபாய் வசூலாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் ரூபாய் 8 கோடி பொறியியல் கல்லூரி ஆரம்பிப்பதற்கும், மீதமுள்ள தொகை நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டு அதில் கிடைக்கும் வட்டி பொறியியல் கல்லூரி நடத்துவதற்கான செலவிற்குப் பயன்படுத்தப்படும். ●



# வீட்டு வசதித் துறை ஆற்றிடும் வியத்தகு பணிகள்

மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர்
**டி.எம். செல்வகணபதி**

**"வீட்டு வசதித்துறை, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் - ஆகியவற்றின் கடந்த ஓராண்டுக் காலப் பணிகளைத் தொகுத்து வழங்கும் கட்டுரை இது."**



உண்ண உணவு; உடுத்த உடை, வசிக்க வீடு ஆகிய மூன்றும் மக்களின் முக்கியத் தேவைகளாகும். இவற்றில் ஆழ்ந்த கவனத்தோடு செயல்பட்டு வரும் தமிழக அரசு எல்லோருக்கும் வீட்டு வசதி கிட்டச் செய்வதில் முனைப்போடு செயலாற்றி வருகிறது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1961-ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, மாநிலம் முழுவதுமாகச் செயல்பட்டு வருகிறது. 1991-92-ஆம் ஆண்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 23,170 குடியிருப்புகளை ஏற்படுத்தி உள்ளது. இவற்றில் வீடுகள், மனைகள் மற்றும் அடுக்குமாடி வீடுகளும் அடங்கும்.

**குறைந்த வருவாய் பிரிவினருக்காக வீட்டு வசதித் திட்டம்**

இத்திட்டமானது ஆண்டொன்றிற்கு ரூ.12,601 முதல் ரூ.26,400 வரை வருமானமுள்ள குடும்பத்தினர் பயன்பெறுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகள் ஒவ்வொன்றிற்கும் நிர்ணயிக்கப்பட்ட விலை மதிப்பீடு ரூ.50,000 ஆகும். 1991-92-ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 9,287 குடியிருப்புகளை (வீடுகளும் மற்றும் மனைகளும்) கட்டியுள்ளது.

**நடுத்தர மற்றும் உயர்தர வருவாய்ப்பிரிவனர்க்காக வீட்டு வசதித் திட்டம்**

நடுத்தர வருவாய்ப்பிரிவினருக்காக வீட்டு வசதித் திட்டம் ஆண்டொன்றிற்கு ரூ.26,401 முதல் ரூ.44,400 வரை வருமானமுள்ள குடும்பத்தினர் பயன்பெறுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகள் ஒவ்வொன்றிற்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை மதிப்பீடு ரூ.1,75,000 ஆகும். 1991-92-ஆம் ஆண்டில் இத்திட்டங்களின் கீழ் 4,952 குடியிருப்புகள் (மனைகள் வீடுகள் மற்றும் அடுக்கு மாடி வீடுகள்) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ளன.

**சிறிய மற்றும் நடுத்தர நகர வீட்டு வசதித் திட்டம்**

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீட்டு வசதிகளை ஏற்படுத்துவதற்காக, மாநிலம் முழுவதும் உள்ள அனைத்துச் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீடுகள் கட்டுவதற்கான ஒரு சிறப்புத் திட்டத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், வருகின்ற 5 ஆண்டுகளில் ஒரு இலட்சம் குடியிருப்புகள் கட்டப்படும் முதல் கட்டமாக 77 நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. 7 நகரங்களில் ரூ.1,042 இலட்சம் மதிப்பீட்டில் 1,230 வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. மேலும் 6 நகரங்களில் ரூ.1,555 இலட்சம் மதிப்பீட்டில் 2,126 வீடுகள் கட்டும் பணிகள் விரைவில் தொடங்கவிருக்கின்றன. மீதமுள்ள நகரங்களில், நிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றன. கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.





## தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை, மதுரை, சேலம், கோயம் புத்தூர், திருச்சி, வேலூர், ஈரோடு தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பூர் ஆகிய 10 முக்கிய நகரங் களில் 967 எக்டேர் பரப்பளவில் ரூ.246.41 கோடி மதிப்பீட்டில் தன்னிறைவு வீட்டு மனைத் திட்டத் தின் கீழ் 70,000 மனைகளை உருவாக்கி வருகிறது. இதற்காக திட்டக்காலம் 1988 அக்டோபர் மாதம் முதல்1995 மார்ச் மாதம் முடிய ஆகும்.

இதுவரை 24 திட்டங்கள் உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு உள்ளன. 31.3.1991 முடிய 6 திட்டங்கள் முடிக்கப்பட்டு உள்ளன. மேலும் 4 திட்டங்கள் உருவாக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றன. இத் திட்டத்தில் மேலும் 8000 தன் னிறைவு மனைகள் திட்ட மதிப் பீட்டில் ஏற்பட்ட சேமிப்பின் மூலம் உருவாக்கி மொத்தம் 78,000 தன் னிறைவு மனைகள் உருவாக்க திட்ட மிடப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் ரூ.3,281 இலட்சங்கள் செலவழிக்கப்பட்டு, 16,000 தன் னிறைவு மனைகள் உருவாக்கப் பட்டுள்ளன.

## தமிழ்நாடு அரசு ஊழியர்கள் வாடகை வீட்டு வசதித் திட்டம்

இத்திட்டம், மாநிலத் தலைநகர் மாவட்டம், வருவாய்க் கோட்டத் தலைமை இடத்தில் அரசு ஊழியர் களுக்கு வாடகைக் குடியிருப்புகள் அளிப்பதற்காக உருவாக்கப்பட்டு உள்ளது. அரசின் சார்பில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி, குடியிருப்பு களைப் பராமரித்து வருகின்றது. 1991-92-ஆம் ஆண்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 520 அடுக்கு மாடி குடியிருப்புகளைக் கட்டி யுள்ளது.

## நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாட்டில் உள்ள எல்லா முக்கிய நகரங்களிலும் நிலங்களைக் கையகப் படுத்தி வருகின்றது. நில உரிமை யாளர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தும் பொருட்டு வீட்டு வசதி வாரியத்தின் நிர்வாகப் பொறி யாளருக்கு உரிமை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது (அரசு நிலை ஆணை எண் 35 நாள் 8.1.1991) நிலங்களின் விலையை நிர்ணயம் செய்ய மாவட்ட ஆட்சி யாளரைத் தலைவராகக் கொண்ட குழுவின் முன்பு ஒப்புதல் பெறப் படும். இக்குழுவின் தலைவராக மாவட்ட ஆட்சியாளரும், இதன் உறுப்பினர்களாக நகர-ஊரமைப்புத் திட்டத்தின் துணை இயக்குநரும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் நிர்வாகப் பொறியாளரும் இருக்கு மாறும் அரசு உத்தரவிட்டுள்ளது. தனியார் நிலங்களைப் பேச்சு வார்த் தைகளின் மூலம் வாங்குவதைத் துரிதப்படுத்தலாம் என வாரியம் நம்புகிறது. இருந்த போதிலும், பெறுநகர்ப் பகுதியில் நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு நிலம் கையகப் படுத்தும் நெறிமுறைகள் தொடரப் பட வேண்டும்.

## சாதனைகளின் சுருக்கம்

1991-92-ஆம் ஆண்டில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் பல்வேறு திட்டங்கள் மூலமாக ரூ.116.50 கோடி செலவில் 23,170 குடி யிருப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

## தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

குடிசைப்பகுதிகளை அகற்றியும் குடிசைப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டும், குடிசை வாழ் மக்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதும் தான் அரசின் கொள் கையாகும். அரசின் கொள்கையைச் செயற்படுத்த தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஏற்படுத்தப் பட்டது.

கடந்த ஓராண்டுக் காலத்தில், மேலே கூறியுள்ள அரசின் கொள் கையைத் திட்டவடிவமாக்கி நிறை வேற்றுவதற்கென, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினால் கீழ்க் காணும் திட்டங்கள் செயற்படுத்தப் படுகின்றன.

## குடிசை மாற்றுத் திட்டம்

இது, குடிசைப்பகுதிகளை அகற்றி பல மாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கென அரசினால் வகுக்கப் பட்ட நலத்திட்டமாகும். இவ்வாறு கட்டப்படும் குடியிருப்புகள் ஏற் கெனவே குடிசைப்பகுதிகளில் வசித்து வந்த மக்களுக்கு ஒதுக்கப் படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் சென்னை மற்றும் மற்ற நகரங்களில் உள்ள குடிசை வாழ் மக்களுக்கு ரூ.10.38 கோடி செலவில் 2,666 குடியிருப் புகள் கட்டப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், குடிசைப் பகுதிகள் மேம்பாடு செய்யப்பட்டு, அப்பகுதிகளில் குடிசை வாழ் மக் களின் மேம்பாட்டிற்காகச் சாலைகள், குடிநீர், கழிவுநீர், வடிகால் மற்றும் தெருவிளக்குகள் போன்ற அடிப் படை வசதிகள் செய்யப்படுவதுடன். மனை உரிமையும் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தில் ஒரு பகுதியான இத் திட்டம்,உலக வங்கி நிதியுடன், சென்னை மற்றும் மாநிலத்தின் முக்கிய 9 நகரங்களான மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், வேலூர், ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் மேற் காணும் நகரங்களில் ரூ.3.50 கோடி செலவில் 12,264 குடும்பங் களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

## விரைவுபடுத்தப்பட்ட குடிசை மேம்பாட்டு திட்டம்

இத்திட்டத்தின் கீழ், சுகாதார மில்லாத குடிசைப்பகுதிகளை மேம் பாடு செய்து அப்பகுதிகளில் சுற்றுப் புறச் சூழலை மேம்படுத்தும் பொருட்டு, குடும்பத்திற்கு ரூ.1,500 வீதம் செலவு செய்து, பொது குடி நீர்க் குழாய், பொதுக் கழிப்பிடம், சாலை மற்றும் தெரு மின்விளக்குகள் அமைக்கப்படுகின்றன. இத்தொகை அரசினால் மானியமாக அளிக்கப் படுகிறது. இத்திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்குள் வராத நகரங்களில் மட்டுமே பொது வாகச் செயல்படுத்தப்பட்டு வரு கிறது.

இத்திட்டத்தின் கீழ், ரூ.1.50 கோடி செலவில் மற்ற நகரங்களில் உள்ள 10,000 குடும்பங்களுக்கு அடிப்படை வசதியான சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள் செய்து தரப்பட்டுள்ளன.

## நடைபாதையில் வசிப்போருக்கு வீடுகள் கட்டும் திட்டம்

சென்னை நகரில் நடைபாதை யில் வசித்து வரும் மக்களை அவ் விடங்களிலிருந்து அகற்றி, சென்னைப் பெருநகரத்தின் பல பகுதிகளில் குடி யேற்றம் செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகளின் மானிய உதவியுடனும் ஹட்கோ நிறுவனம் வழங்கும் கடனுதவியுடனும் அடிப் படை வசதிகளுடன் கூடிய மனைகள் மேம்பாடு செய்யப்பட்டு மைய வீடு களும் கட்டித்தரப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ், ரூ.0.34 கோடி செலவில் 1,542 குடும்பங் களுக்கு மனைகளில் மைய வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. இத்துடன், ரூ.0.31 கோடி செலவில் 1,911 குடிசை வாழ் இளைஞர்களுக்கு ஆக்க வளமுடைய பயிற்சி அளிக்கப் படுகிறது.

## கடன் வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், குடிசை வாழ் மக்கள் தாங்களாகவே வீடுகள் கட்டிக் கொள்வதற்காக ரூ.8,000 கடனுதவி வழங்கப்படுகிறது. இக் கடன் மூன்று தவணைகளில் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ், 3,715 குடும்பங்களுக்கு ரூ.3.04 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

## நேரு வேலை வாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.4,150 வீதம் உறைவிட நிலையை உயர்த்தி வழங் கப்படுகிறது. இந்நிதி உதவி கடன் மற்றும் மானிய வடிவில், ரூ.3,150 ஹட்கோவிலிருந்து கடனாகவும், ரூ.800 மற்றும் ரூ.200 முறையே மத்திய அரச மற்றும் மாநில அரசால். மானியமாகவும் வழங்கப்படுகிறது. இக்கடன் 10 ஆண்டுகளில் மாதத் தவணைகளில் திருப்பி செலுத்தப் படவேண்டும்.

இத்திட்டத்தின் கீழ், உறைவிட



நிலையை உயர்த்த கடனாக 4,776 குடும்பங்களுக்கு ரூ.2.02 கோடி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடிசைப்பகுதிகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 16.11.91 அன்று பார்வையிட்டார்கள். இப்பகுதிகளை மண்ணிட்டு நிரப்பி இங்கு வாழும் மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட வேண்டுமென்று முதலமைச்சரின் ஆணையை நிறைவேற்றும் முகத்தான், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ரூ.82.135 கோடி மதிப்பீட்டில், ஹட்கோ கடனுதவியாக ரூ.69.813 கோடியுடனும், மாநில அரசின் மானியமாக ரூ.12.323 கோடியுடனும் 15,000 குடியிருப்புகளைக் கட்டம் கட்டமாகக் கட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவிருக்கிறது. ரூ.4 கோடி செலவில் ஹட்கோ நிதியுதவியுடன் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளைச் செப்பணிடும் பணியும் மேற்கொள்ளப் படவிருக்கிறது.

**வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள்**

தமிழ்நாட்டில் வீட்டு வசதி சங்கங்களைப் பொறுத்த வரையில், வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களில் பதிவாளர் அதன் நிர்வாகத் தலைமைத் துறை பொறுப்பாளராக அமைந்துள்ளார்.

இத்துறை, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் மூலமாக மாநில அளவில் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தையும், கீழ் மட்டத்தில் முதன்மைக் கூட்டுறவுச் சங்கங்களையும் செயல்படுத்தி வருகின்றது. கடந்த ஓராண்டுக் காலத்தில், கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுத்தும் அனைத்துத் திட்டங்களும் எந்த ஆண்டும் இல்லாத அளவுக்குச் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்றன.

**கிராமப்புற வீட்டு வசதித் திட்டம்**

கிராமப்புறத்தில் வசித்து வரும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்கள் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் மூலம் வீடு கட்டிக் கொள்வதற்கான நிதி உதவியானது மாநில அரசின் மூலமாக 1978-79-ஆம் ஆண்டிலிருந்து அளிக்கப்பட்டு வருகிறது. சென்னை மாவட்டத்தைத் தவிர்த்து மற்ற மாவட்டங்களில், ஒரு வட்டத்திற்கு ஒரு வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் என்ற அடிப்படையில் 165 வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. 1991-92-ஆம் ஆண்டில், ஒரு வீட்டிற்கு ரூ.1,500 என்ற வீதம் ரூ.450 இலட்சங்கள் அரசிடமிருந்து மானியமாகப் பெற்று, கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 30,000 வீடுகளைக் கட்டி முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 30,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கடந்த ஓராண்டில் மொத்த இலக்காகிய 30,000 வீடுகளையும் அரசு கட்டியுள்ளது.



**★ சமுதாயத்தின் கட்டுப்பாடுகள் ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்தின் கட்டுப்பாடுகளாக அமைய வேண்டும்; புறத்தில் உள்ளது வேறு- அகத்தில் உள்ளது வேறு என்று இருந்தால் எந்தச் சமூகக் கட்டுப்பாடோ அல்லது சட்டமோ இலட்சியத்தில் வெற்றி காண முடியாது.**

**—டாக்டர் எம்.ஜி.ஆர்.**

கிராமப்புறங்களில் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாகக் குறைந்த வருவாய் மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்காகச் செயல்படுத்தும் திட்டங்கள்:

கிராமப்புறங்களில் 30,000 வீடுகள் கட்டுவதற்கான நிதி உதவி வழங்கும் திட்டப்பணிகளுக்கும் மேலாக, வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் 1989-90-ஆம் ஆண்டு முதலாகக் குறைந்த வருவாய் மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினர்களும் வீடுகள் கட்டுவதற்காகக் கடனுதவி அளித்து வருகின்றன. இதற்காக வீட்டு வசதி இணையம் ஹட்கோவிடமிருந்து நிதி உதவி பெறுகிறது. 1991-92-ஆம் ஆண்டில் குறைந்த வருவாய்ப் பிரிவின் கீழ் 1,504 வீடுகள் கட்டப்பட்டு ரூ.494.00 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இதைப் போன்று நடுத்தர வருவாய்ப் பிரிவின் கீழ் 1,789 வீடுகள் கட்டப்பட்டு ரூ.952.00 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம்**

இத்திட்டமானது, நகர்ப்புறக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாக மாநிலத்தின் பெரும்பாலான ஊராட்சிகளிலும் மற்றும் எல்லா நகராட்சி பகுதிகளிலும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வில்லங்கம் இல்லாத வீட்டு மனைப் பட்டாக்களை உடைய உறுப்பினர்களே வீடு கட்டுவதற்கான கடனுதவி பெறத் தகுதி உடையவர் ஆவர். இத்திட்டத்தின் மூலம் மாநகராட்சிப் பகுதியில் வசிப்பவர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் முதல் ரூ.1.5 இலட்சமும், நகராட்சி மற்றும் மாநகராட்சியின் சுற்றுப் பகுதிகளில் வாழும் பிரிவினருக்கு ரூ.80,000 முதல் ரூபாய் ஒரு இலட்சம் வரையிலும் கடனுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டில் நகர்ப்புற வீட்டு வசதிச் சங்கங்களின் உறுப்பினர்களால் 9,057 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதற்கு ரூ.111 கோடி நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு முந்தைய ஆண்டில் (1990-91) ரூ.101 கோடி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

**கிராமப்புறங்களுக்கான மாநில வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டம் (சுப்ரா)**

கிராமப்புறங்களில் உள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்களின் வீடுகளை மேம்படுத்தும் பொருட்டு, கிராமப்புறங்களுக்கான மாநில வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டம் இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு சிறந்த திட்டமாக அரசால் துவங்கப்பட்டுள்ளது. ஒரு வீட்டிற்கு வழங்கப்படும் நிதி உதவி பின்வருமாறு:

'ஹட்கோ' நிறுவனத்திடமிருந்து பெற்று வழங்கப்படும் கடன் ரூபாய் 2,000, இதில் அரசின் மானியம் ரூபாய் 500, பயனீட்டாளரது பங்கு ரூபாய் 500, ஆக மொத்தம் ரூபாய் 3,000.

இத்திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் வசிக்கும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் தங்களுடைய வீடுகளை மேம்பாடு செய்வதற்காகக் கடனுதவி அளிக்கப்படுகிறது. அதாவது, ஓலை வேயப்பட்ட கூரைக்குப் பதிலாக ஓடு வேய்தல், சுவர்களை உறுதிப்படுத்துதல், சுகாதார வசதி மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவைகளுக்காகக் கடன் உதவி அளிக்கப்படுகிறது.

1991-92-ஆம் ஆண்டில், 10,000 வீடுகள் மேம்படுத்துவதற்காக ரூ.50 இலட்சங்கள் அரசு மானியமாக வழங்கியுள்ளது. இதற்காக 10,000 பயனீட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இத்திட்டத்தின் செயல்பாடு சாதனை, நடப்பு நிதியாண்டில் (1992-93) கொண்டு வரப்படும்.

1991-92-ஆம் ஆண்டில் ரூ.120.81 கோடி செலவில் 50,484 வீடுகள் கட்டப்பட்டுள்ளன இதற்கு முந்தைய ஆண்டில் (1990-91) ரூ.108.47 கோடி செலவில் 43,554 வீடுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்**

சென்னைப் பெருநகர் பகுதியில் உருவாகும் எல்லா வளர்ச்சிப் பணிகளுக்கும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நகர் மற்றும் ஊரமைப்புத் திட்டம் 1971 பிரிவு 49-ன் படி திட்ட அனுமதி வழங்குவதன் மூலம் வளர்ச்சிப் பணிகளை ஒழுங்குபடுத்துகிறது. முழுமைத் திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ள வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளின் படி திட்ட அனுமதி வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு ஜனவரி-பிப்ரவரி மாதங்களில் நிலுவையில் உள்ள திட்ட அனுமதி வழங்கக் கோரி பெறப்பட்ட விண்ணப்பங்களைக் குறைக்கும் நோக்கத்தோடு தனி முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971-இல் கீழ்க்காணும் சில திருத்தங்களைக் கொண்டு வரலாமா என்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

அ) ஒப்புதல் இல்லாமலும், விதிகளிலிருந்து விலகியும், கட்டியுள்ள கட்டடங்களுக்கு விதிகளை விலக்கி மற்றும் தளர்த்தும் பொருட்டு, ஒரு வரன்முறைக் கட்டணத் தொகை வசூலிப்பது;

ஆ) ஒப்புதல் இல்லாமல் மற்றும் விதிகளிலிருந்து விலகி கட்டியுள்ள கட்டடங்களுக்கு மின்சாரம் மற்றும் குடிநீர் அளிப்பதை மறுப்பது பற்றி அதற்கான சட்டங்களைத் திருத்துவது;

சென்னைப் பெருநகர் பகுதிக்கான முழுமைத் திட்டத்தின் முதல் பகுதி 1975-1991-இல் ஆண்டிற்குத் தயாரிக்கப்பட்டது.

சென்னைப் பெருநகர் பகுதிக்கான இரண்டாவது முழுமைத் திட்டம் 1991-2011 தயாரிக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**மறைமலை நகர்த்திட்டம்**

மறைமலை நகர்த்திட்டம் 3,300 ஏக்கர் நிலப்பரப்பில் 20 ஆண்டுக் காலத்திற்குள் ஒரு இலட்சம் மக்கள் வாழத்தக்க வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதுவரை 1,445 மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 2,704 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**மணலி புது நகர்த் திட்டம்**

மணலி புது நகர்த் திட்டம், 1,450 ஏக்கர் நிலப்பரப்பில்



**மேதகு மொரீஷியஸ் நாட்டுக் குடியரசுத் தலைவர் திரு. வீராசாமி ரிங்காடு அவர்கள் 3.6.'92 அன்று சென்னைக்கு வருகைதந்தார். மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அவரையும், அவரது குடும்பத்தாரையும் மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண சிங், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா ஆகியோர் வரவேற்றனர்.**

75,000 மக்கள் 20 ஆண்டுகளுக்குள் குடியேற்றத் தக்க வகையில் பகுதிப் பகுதியாகச் செயல்படுத்தப் படுகிறது. இதுவரை 8,724 மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 1760 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

மத்திய வர்த்தகப் பகுதியில் உள்ள அழுகு பொருள், துணி வகைகள், உணவு தானியங்கள் ஆகியவற்றின் விற்பனைத் விற்பனைத் தலத்தை கோயம்பேட்டிற்கு மாற்றுவதன் மூலம் மத்திய பகுதியில் நெரிசலைத் தவிர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் ரூ.50.4 கோடி செலவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2,229 கடைகள் அழுகு பொருள் சந்தைக்கான கட்டுமானப் பணி முடிக்கப்பட்டுள்ளன. பூக்கடைகளுக்கான 456 கடைகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. காய்களுக்கான 1,381 கடைகள் முடிவடையும் தறுவாயில் உள்ள.

சாத்தங்காடு என்ற சென்னை நகரின் வடபகுதியில் உள்ள இடத்தில் நவீனமாக அனைத்து வசதிகளுடன் இரும்பு மற்றும் எஃகு மொத்த அங்காடி அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.17 கோடி ஆகும். திட்டப் பணிகள் முடிந்து அங்காடி திறக்கப்பட்டு விட்டது. 484 கடைகளுக்கான மனைகள் அதற்குரியவர்களிடம் கொடுக்கப்பட்டு விட்டன.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உள் வட்டச்சாலையின் வடபகுதியில், சுமார் 535 ஏக்கர் பரப்புள்ள நிலங்களை கையகப் படுத்தி அதனை மேம்படுத்தும் திட்டம் ஒன்றினைச் செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.30 கோடிகள்.

தமிழ்நாட்டில் உலக வங்கி உதவியுடன் ரூ.632 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு நகர வளர்ச்சித் திட்டம் என்றதொரு மாபெரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. ரூ.354 கோடி செலவில் சென்னை மாநகருக்கான திட்டப்பணிகள் விரைவாகவும், சீராகவும் நடைபெறச் செய்ய சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆவன செய்து வருகிறது.

> ★ நாட்டில், கற்றறிவாளர்கள் இருக்கின்றனரோ- அதைத் கொண்டுதான் நாட்டு முன்னேற்றத்தை மதிப்பிட இயலும்.
>
> —அறிஞர் அண்ணா

தன்னிறைவு வீட்டுமனைகள், குடிசைப் பகுதி மேம்பாடு, போக்குவரத்து மேம்படுத்துதல், பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குப் பேருந்துகள் வாங்குதல், மேலும் உள்ளாட்சி நிறுவனங்கள் வருவாய் வரத்தக்க வசதித் திட்டங்களைத் தீட்டவும், தொழில் நுட்ப மற்றும் நிதி உதவியும் இத்திட்டத்தின் கீழ் அடங்கும்.

**முன்னோடி நகர வளர்ச்சித் திட்டம்**

முன்னோடி நகர வளர்ச்சித் திட்டம் என்றதொரு புதிய திட்டம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில், சென்னையில் தனியாரிடமிருந்து குறைந்த வருவாயினருக்கான தன்னிறைவு, மனைகளை வாங்குதல் மற்றும் அடிப்படை வசதிகள், சமுதாய வசதிகள், வீட்டு மேம்பாட்டு கடனுதவி வழங்குதல் என்பவை அடங்கும். இது ஒரு தனியார் மற்றும் அரசு நிறுவனம் என்ற ஒரு கூட்டு திட்டமாக இருக்கும். இத்திட்டத்தில் சேரும் மனைகள் மேம்படுத்தும் தனியார்களுக்கு நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ், விலக்கு அளிக்க வழிவகை செய்யும் நோக்கம் உள்ளது. 10,000 மனைகள் ரூ.13.5 கோடி மதிப்பீட்டில் மக்களுக்குத் தரப்பட உள்ளது.

**அடையார்-கடற்கரைப் பகுதித் திட்டம்**

சென்னையில் கிரீன்வேஸ் சாலையில் 45 ஏக்கர் பரப்பில் அடையாறு கடற்கரைப் பகுதி வளர்ச்சித் திட்டம் ஒன்றினைச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் செயல்பாட்டிற்காக அரசு கொடுத்துள்ளது.

இந்த நிலப்பரப்பில், அலுவலகக் கட்டடங்கள், கேளிக்கைகளுக்கான வளாகம், பூங்காக்கள், விளையாட்டு அரங்கங்கள் முதலியவைகள் உள்ளடங்கிய ஒரு ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட இருக்கிறது.

**சுயசார்பு நகரங்களில் வளர்ச்சித் திட்டம்**

தமிழக அரசின் முயற்சியின் விளைவாக, மைய அரசு குடியிருப்பிற்கான ஐக்கிய நாடுகளின் மையத்திற்குச் சுய சார்பு நகரங்களின் வளர்ச்சித் திட்டத்தில், சென்னை நகரை இணைத்துக் கொள்ளப் பரிந்துரை செய்துள்ளது. இப்பரிந்துரையை ஐக்கிய நாடுகளின் மையம் ஏற்றுக் கொண்டு சென்னை நகரை இத்திட்டத்தில் சேர்த்துள்ளது. தெற்கு ஆசிய நாடுகளில் சென்னை நகரம் மட்டுமே இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளது. தேவைகளின் அவசரத்திற்கு ஏற்ற வகையில், பிரச்சினைகளை வரிசைப்படுத்தி, இனங்கண்டு கொள்ளுதல், நிர்வாகம் தொழில் நுட்பம் மற்றும் அர்சியல் நிலையில் செயல் திட்டங்களைத் தயாரித்தல், முக்கியச் செயலாக்கக் காரணங்களின் ஒத்துழைப்பை விழைதல் மற்றும் திட்டத்தைச் செயலாக்க ஒத்துழைப்பை அளித்தல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

**உள்ளாட்சி உதவித் திட்டம்**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினால் வசூலிக்கப்படும் திட்ட மேம்பாடு கட்டணத்தின் ஒரு பகுதி சென்னைப் பெருநகரில் உள்ளடங்கியுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு அவைகளால் மேம்படுத்தப்படும் திட்டப் பணிகளுக்குச் செலவிட அளிக்கப்படுகிறது.

**சுற்றுப்புற சுகாதாரத் திட்டம்**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஜப்பானிய அரசு உதவியுடன் சுற்றுப்புறச் சுகாதாரத் திட்டத்திற்கான ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறது.

**தொழில் நுட்ப ஆய்வுகள்**

சென்னைப் பெருநகருக்கான போக்குவரத்துத் திட்டம் தயார் செய்ய ஒருங்கிணைந்த போக்குவரத்து மற்றும் சாலை நெருக்கடி பற்றிய ஆய்வு முன்னேற்றத்தில் உள்ளது. ●



# உணவுத்துறையின் ஒப்பற்ற சாதனைகள்

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்
## ஜி. விஸ்வநாதன்

**“தமிழ்நாட்டில் மொத்தம் 21,986 நியாய விலைக்கடைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 20,916 கடைகளைக் கூட்டுறவுச் சங்கங்களும், மீதமுள்ள 1,070 கடைகளைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் நடத்தி வருகின்றன. கிராமப்புறங்களில் 17,394 நியாய விலைக்கடைகளும், நகர்ப்புறங்களில் 4,592 கடைகளும் இயங்கி வருகின்றன.”**

மக்கள் உயிர் வாழ இன்றியமையாதது உணவே ஆகும். இந்த இன்றியமையா உணவுபொருட்களைப் பொது மக்கள் போதுமான அளவிலும் நியாயமான விலையிலும் பெறச் செய்வதே தமிழக அரசின் கொள்கையாகும். ஆக்கப் பூர்வமான பொதுவிநியோக முறையினைப் பராமரிப்பதாலும், மக்களால் அதிக அளவில் உபயோகிக்கப்படும் இன்றியமையாப் பொருட்களின் விலைகளைக் கண்காணிப்பதாலும், பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளைச் செயல்படுத்துவதாலும், மாநிலத்தில் நுகர்வோர் இயக்கத்தை ஊக்குவிப்பதாலும் அரசு மேற்கண்ட தனது கொள்கையை வெற்றிகரமாகச் செயல்படுத்த முடிகிறது.

மேற்கண்ட தமிழக அரசின் கொள்கையை நடைமுறைப்படுத்துவதே உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் பணியாகும். இக்கொள்கையினை இத்துறை வெற்றிகரமாகச் செயலாக்க உணவுபொருள்கள்



வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் உணவு பொருள் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுக் காவல்துறை துணைத் தலைவர் ஆகிய இரண்டு துறைத் தலைவர்களுடன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் ஆகிய 2 அரசு நிறுவனங்கள் உறுதுணையாக உள்ளன. 1986-ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்புகள் ஆகியனவும் இத்துறைக்குப் பெரிதும் உதவுகின்றன.

உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரின் கீழ் ஒரு இணை இயக்குநரும் மேலும் 2 துணை இயக்குநர்களும் இயங்கி வருகின்றனர். சென்னை மாநகரம் வடக்கு மற்றும் தெற்கு எனப் பிரிக்கப்பட்டு இரண்டு துணை ஆணையாளர்களின் கீழ் இயங்கி வருகிறது. மேலும், சென்னை மாநகரம் 10 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் ஒரு உதவி ஆணையாளரின் கீழ் இயங்கி வருகின்றன. மாவட்டங்களைப் பொருத்தவரையில் வட்ட மற்றும் மாவட்ட வழங்கல் அதிகாரிகள் உணவுப் பொருள் வழங்கும் பணியினை மேற்கொண்டுள்ளனர்.

1955-ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ், மாநில அரசு பிறப்பித்துள்ள கட்டுப்பாட்டு ஆணைகளை செயல்படுத்த குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையினர் உதவுகின்றனர். இந்தக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் காவல் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டிலும் மற்றும் உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர், வனத்துறைக்கான குற்றப் புலனாய்வுக் காவல்துறைத் தலைவர் ஆகியோரின் கண்காணிப்பிலும் இயங்கி வருகின்றனர்.

1972-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரசின் மொத்த நுகர்வோராகச் செயல்பட்டு மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் இந்திய உணவுக் கழகம் மற்றும் மத்திய வர்த்தக கழகம் ஆகியவற்றிடமிருந்து பெற்று கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நியாயவிலைக் கடைகளுக்கும் வழங்குகிறது. இந்த நிறுவனம் கொள்முதல், சேமிப்பு, பதப்படுத்துதல், தேவையான இடங்களுக்கு உணவுத் தானியம் மற்றும் இன்றியமையாப் பொருட்களை கொண்டு செல்லுதல், விநியோகித்தல், விற்பனை செய்தல், அரசின் நலன் பயக்கும் திட்டங்



களைச் செயல்படுத்துதல், அதற்கு தேவையான மூலதனம் நிதி ஆதாரங்கள் தேடுதல், தொழில் நுட்பம் மேலாண்மைச் சேவைகள், ஆலோசனை உதவிபோன்ற பணிகளைச்செய்து வருகின்றது இந்நிறுவனத்தால் பல பொருள் அங்காடிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 1957-ஆம் ஆண்டு நிறுவப்பட்டு 1958-59-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் விவசாய விளை பொருள்கள், விதைகள், உரங்கள் விவசாயச் சாதனங்கள் மற்றும் அறிவிப்பு செய்யப்பட்ட பொருட்களுக்கு அறிவியல் ரீதியிலான சேமிப்பு வசதியுடன் கூடிய சேமிப்புக் கிடங்கு வசதியை இந்நிறுவனம் அளிக்கிறது.

### பொது விநியோக முறை

மத்திய அரசு பொது விநியோக முறையின் கீழ், மக்களுக்கு வழங்குவதற்காக அரசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய், மண்ணெண்ணெய் ஆகியவற்றை மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்கிறது. இந்த இன்றியமையாதப் பொருட்களை மக்களுக்கு வழங்கும் பொருட்டு தமிழகத்தில் மொத்தம் 21,986 நியாயவிலைக் கடைகள் இயங்கிவருகின்றன. இவற்றில் 20,916 கடைகளைக் கூட்டுறவுச் சங்கங்களும் மீதமுள்ள 1,070 கடைகளைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் நடத்தி வருகின்றன. கிராமப் புறங்களில் 17,394 நியாய விலைக் கடைகளும் நகர்ப் புறங்களில் 4,592 கடைகளும் இயங்கி வருகின்றன. மக்கள் சுலபமாகச் சென்று வாங்கக்கூடிய வகையில் நியாயவிலைக் கடைகளை அமைத்தல் என்பது பொது விநியோக முறையின் நான்கு முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். குறிப்பிட்ட வகை இன்றியமையாப் பொருட்கள் சுலபமாய் கிடைத்தல், மக்கள் வாங்கத் தக்க வகையில் நியாயமான விலையில் கிடைத்தல் ஆகியவை பொது விநியோக மற்ற குறிக்கோள்களாகும்.

தமிழகத்தில் உள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் ஒரு நியாய விலைக்கடை இயங்கி வருகிறது. பொது விநியோகத்தில் நியாய விலைக் கடைகள் நடத்த தனியார் தமிழகத்தில் அனுமதிக்கப்படுவதில்லை. அரசு நிறுவனத்தின் 21,986 நியாய விலைக்கடைகளைத் தவிர மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேவைப்படும் இடங்களில் பகுதி நேர நியாய விலைக்கடைகளைத் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவை தவிர 11 நடமாடும் நியாய விலைக்கடைகள் வட ஆர்க்காடு- அம்பேத்கர், திண்டுக்கல்- அண்ணா, திருநெல்வேலி- கட்டபொம்மன், நீலகிரி, பெரியார், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் இயங்கி நெடுந்தூரம் உள்ள, எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளில் வசிக்கும் மக்கள் அத்தியாவசியப் பொருட்களைப் பெற உதவுகின்றன.

மாநிலத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களும் பொதுவிநியோகத்தின் மூலம் பயன் அடைகின்றன. அனைத்துக் குடும்பங்களும் நியாய விலைக்கடைகளின் மூலம் வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்களைப் பெறுவதற்காக அவர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது தமிழகத்தில் சுமார் 125 இலட்சம் குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன. இவை இந்த ஆண்டு முடிவு வரை புழக்கத்தில் இருக்கும். குடும்ப அட்டைகளில் உள்ள குடும்பத் தலைவரின் வருமானம் மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையினைச் சரி செய்யும் பொருட்டு சமீபத்தில் அனைத்துக் குடும்பங்களுக்கும் ஒரு வினாப்பட்டியல் தரப்பட்டு சரியான விவரங்கள் அவர்களிடமிருந்தே பெறப்பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள போலி குடும்ப அட்டைகளைக் களைய தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பொதுவிநியோகத்தில் வழங்கப்படும் பொருட்களின் முக்கியமானது அரிசியாகும். ஆனால், மாநிலத்தில் அரிசி உற்பத்தித் தேவையை நிறைவு செய்ய இயலாதவாறு பற்றாக்குறையாக உள்ளது பொதுவிநியோகத்திற்கு தேவையான அரிசி கீழ்க்காணும் முறைகளில் பெறப்படுகிறது;

காவிரி டெல்டா பகுதியில் ஏகபோகக் கொள்முதல் முறையில் விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்தல்;

அறுவடைக்காலங்களில், தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டங்கள் முழுவதும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரியலூர், உடையார் பாளையம், முசிறி, குளித்தலை, லால்குடி, திருச்சிராப்பள்ளி வட்டங்களிலும் தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம், காட்டுமன்னார் கோயில் வட்டங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி, ஆவுடையார்கோவில், அறந்தாங்கி வட்டங்களிலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் விவசாயிகளிடமிருந்து நேரிடையாகக் கொள்முதல் செய்கிறது.

1.7.1991 முதல் 14.9.1991 வரையிலான ஒரு சிறிய இடைவெளி தவிர, 1991-ஆம் ஆண்டு முழுவதும் காவிரி டெல்டாப் பகுதி முழுவதும் ஏகபோகக் கொள்முதல் அமலில் இருந்தது. 1992-ஆம் ஆண்டு சம்பாப்



பருவம் 16.12.91-இல் ஆரம்பித்து 30.6.92 வரை தொடரும். இதில் 31.5.92 வரை பெறப்பட்ட நெல்லின் அளவு 12.15 இலட்சம் டன்களாகும். 1990-91-ஆம் ஆண்டின் சம்பாப் பருவத்தில் பெறப்பட்ட நெல்லின் அளவு 10.50 இலட்சம் டன்கள்தான் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

### மத்திய அரசு ஒதுக்கீடு

மத்திய அரசு ஒவ்வொரு மாதமும் பொது விநியோகம் மூலம் வழங்குவதற்காக மாநிலங்களுக்கு அரிசி ஒதுக்கீடு செய்கிறது. மாதம் ஒன்றுக்குக் குறைந்த பட்சம் 75 ஆயிரம் டன் அரிசி ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசை இந்த அரசு கேட்டுள்ளது. 1991-ஆம் ஆண்டு பொது விநியோகத்தில் அரிசியின் நுகர்வு மிக அதிக அளவான 17.31 இலட்சம் டன்னை எட்டியுள்ளது. 1990-ஆம் ஆண்டின் நுகர்வு 12.33 இலட்சம் டன்கள். அதிக அளவு ஏகபோக கொள்முதல் மற்றும் மத்திய அரசின் கூடுதல் ஒதுக்கீடு ஆகியவற்றின் மூலம் இந்த அதிக அளவு நுகர்வினைச் சமாளிக்க முடிந்தது.

### அரிசி ஆலையாளர்கள் மற்றும் மொத்த வணிகர்களிடமிருந்து வர்த்தக லெவி மூலம் கொள்முதல்

தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு நெல்/அரிசி கொள்முதல் (லெவி) ஆணையின் பகுதி 3-இன் படி உரிமம் பெற்ற ஆலையாளர்கள் மற்றும் வணிகர்களிடமிருந்து அவர்களிடம் உள்ள இருப்பில் 50 சதவிகிதத்தை அரசு நிர்ணயிக்கும் கொள்முதல் விலையில் லெவியாகப் பெற அரசுக்கு அதிகாரம் உள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் வர்த்தக லெவி மூலம் பெறப்பட்ட அரசியின் அளவினைக் காணும்போது மிகக் குறைந்த அளவே, அதாவது சராசரியாக 6 சதவிகிதம்தான் பெறப்பட்டுள்ளது என்பதை அறியலாம். இந்தச் சிறிய அளவு அரிசியினைப் பெற பெருத்தஅளவில் பணமும் நேரமும் செயல் திறனும் விரயமாகிறது. மேலும் பல முறைகேடுகளுக்கும். இம்முறை இடமளிக்கிறது. மேலும் மாவட்டங்களிடையே தாராளமாக அரிசி எடுத்துச் செல்வது இயலாத நிலையில் அரிசி இருப்புக் குறைவான மாவட்டங்களிலும், வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலும் வெளி அங்காடிகளில் அரிசி விலை உயர்ந்திருந்தது. தவிரவும் அரிசி வியாபாரிகள் வர்த்தகர் லெவியினை நீக்கினால் வெளி அங்காடி அரிசி விலை கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாயிலிருந்து 1.50 ரூபாய் வரை குறையுமென உறுதி அளித்தனர். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு அரசு 29.1.92 முதல் வர்த்தக லெவி முறையினை நிறுத்தி வைத்தது- வெளி அங்காடியில் அரிசி விலை கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய்க்கு மேலும் குறைந்துள்ளது. அரசின் மேற்கண்ட முடிவு சரியானதெனக் காட்டும். வர்த்தகர்கள் அரிசி அதிகமுள்ள மாவட்டங்களிலிருந்து தேவையான மாவட்டங்களுக்கு அரசியினை எடுத்துச் செல்ல முடிந்ததால் தென் மாவட்டங்களில் அரிசி விலை குறைவு பெருமளவில் உள்ளது.

### மேற்கூறிய முறைகளில் பெறப்படும் அரிசி பொதுவிநியோகத்திற்குப் போதாவிட்டால் வெளிச்சந்தையில் வாங்குதல்

பொது விநியோக முறையின் தேவைகளை மேற்கண்ட கொள்முதல் மூலம் சரிகட்ட முடியவில்லையெனில், மத்திய அரசின் அனுமதியைப் பெற்று அரசு வெளிச்சந்தையில் அரிசி வாங்குகிறது.

மத்திய அரசு அரிசியின் விலையை அவ்வப்போது ஏற்றினாலும்கூட மாநில அரசு அரிசியின் விலையை ஏற்றாமல் உள்ளது. தற்போது சாதாண ரக அரிசி கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாய் என்ற விலையிலும் சன்ன மற்றும் மிகச் சன்ன அரிசி கிலோ ஒன்றுக்கு 3.00 ரூபாய் என்ற விலையிலும் விற்கப்படுகிறது. இவ்வாறு குறைந்த விலையில் அரிசி விற்கப்படுவதால் ஒவ்வொரு ஆண்டும் அரசு அதிகத் தொகை மானியமாக அளிக்கவேண்டி உள்ளது. 1992-93-ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் இதற்காக 343 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பொது விநியோக முறையில் அரிசி தற்போது பெரியவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா 4 கிலோ மற்றும் சிறியவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 2 கிலோ என்ற அளவில் அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 12 கிலோவிற்கு மிகாமல் வழங்கப்பட்டு வருகிறது.



**ஆங்கில மொழியின் ஆதிக்கத்தால் தமிழில் கல்வி கற்பதைத் தவிர்த்துவிடலாம் என்கிற எண்ணம் எவருக்காவது இருந்தால், அவர்கள் தயவுசெய்து தங்களது எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்.**

மாதந்தோறும் பொது விநியோக முறை மூலம் வழங்குவதற்காக மத்திய அரசு மாநிலத்திற்கு 30 ஆயிரம் மெட்ரிக் டன் கோதுமை வழங்குகிறது. கிலோ ஒன்றுக்கு 2.60 ரூபாய் என்ற விலையில் விற்கப்படுகிறது.

மத்திய அரசு இம்மாநிலத்திற்கு நபர் ஒருவருக்கு 425 கிராம் என்ற விகிதத்தில் 1986-ஆம் ஆண்டில் இருந்த மக்கள் தொகை 530 இலட்சம் என்ற கணக்கில் 1.2.1987 முதல் மாதந்தோறும் 22,500 மெட்ரிக் டன்கள் லெவி சர்க்கரை ஒதுக்கீடு செய்து வருகிறது. ஆனால் மக்கட் தொகை கணக்கெடுப்புத் துறை இயக்குநரின் கணக்குப்படி 1.3.91-இல் இம் மாநிலத்தின் மக்கட் தொகை 557 இலட்சமாகும். எனவே, மாநிலத்தின் தேவைக்கும் விநியோகத்திற்கும் இடையே பற்றாக்குறை உள்ளது. ஆகவே, மைய அரசின் ஒதுக்கீடு போதுமானதாக இல்லை. இந்த நிலையில் மாநிலத்தின் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் சர்க்கரையைச் சீராக வழங்க வேண்டும் என்பதற்காக, இவ்வரசு நபருக்கு ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு இரண்டு கிலோ என்று நிர்ணயித்து 1.10.1989 முதல் நடைமுறைப் படுத்தி வருகிறது. மாதம் ஒன்றுக்கு இம் மாநிலத்திற்கு 31 ஆயிரம் மெட்ரிக் டன் சர்க்கரை வழங்க வேண்டும் என மத்திய அரசை இவ்வரசு கேட்டு வருகிறது. பொது விநியோகத்தில் சர்க்கரையின் விலை 6.90 ரூபாயாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

ஒரு குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ பாமாலின் வழங்கினால்கூட இம்மாநிலத்திற்கு மாதம் ஒன்றுக்கு 13 ஆயிரம் டன் பாமாலின் தேவைப்படுகிறது. அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக மத்திய அரசு பாமாலின் இறக்குமதியை வெகுவாகக் குறைத்துவிட்டது. இதன் காரணமாக இம்மாநிலத்திற்குப் பாமாலின் ஒதுக்கீடு வெகுவாகக் குறைக்கப்பட்டதுடன், சில மாதங்களில் பாமாலின் ஒதுக்கீடு செய்யப்படவே இல்லை. பொது விநியோக முறையின் மூலம் பாமோலின் வழங்கப்படாதது பொதுமக்களுக்கு ஒரு

பெரும் குறையாக இருந்ததோடு, வெளி அங்காடியில் சமையல் எண்ணெயின் விலை வெகுவாக உயர ஆரம்பித்தது. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு பொது விநியோகத்தில் பாமோலின் வழங்குவதற்காக மாநில அரசு நேரடியாக அதனை இறக்குமதி செய்யத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே மேற்கொண்டார். அவரது பெரு முயற்சியின் காரணமாக மத்திய அரசின் இறக்குமதி செய்யப்படும் எண்ணெயின் விலையை ரூபாய் நாணயத்தில் அளிக்கும் திட்டத்தின் கீழ் 18,000 மெட்ரிக் டன்கள் பாமோலின் இறக்குமதி செய்ய முடிந்தது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதியும் பெறப்பட்டது. இந்த முயற்சிகளின் காரணமாக மாநில அரசால் குடும்ப அட்டைதாரர்களுக்கு, உதிரி எண்ணெய் கிலோ ஒன்றுக்கு 25 ரூபாய் என்று மத்திய அரசு விலை நிர்ணயித்திருந்தாலும் கூட, கிலோ ஒன்றுக்கு 22.50 ரூபாய்க்குப் பாமோலின் வழங்க முடிந்தது.

பொது விநியோக மூலம் மண்ணெண்ணெய் வழங்குவதற்காக, ஆண்டினை குளிர்காலம், கோடைகாலம், மழைக் காலம் என மூன்றாகப் பிரித்து மத்திய அரசு மாநிலங்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குகிறது. சென்னை அதன் புறநகர் பகுதிகள் மற்றும் மாவட்டத் தலைநகரங்கள் ஆகியவற்றில் மாதம் ஒன்றுக்குக் குடும்ப அட்டை ஒன்றுக்கு 10 லிட்டர் வீதமும் மற்ற நகராட்சி பகுதிகளின் மாதம் ஒன்றுக்கு அட்டை ஒன்றுக்கு 6 லிட்டர் வீதமும், பேரூராட்சிகள் மற்றும் நகரிய பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு அட்டை ஒன்றுக்கு 5 லிட்டர் வீதமும், கிராமப் பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு அட்டை ஒன்றுக்கு 3 லிட்டர் வீதமும் மண்ணெண்ணெய் விநியோகிக்கப் படுகிறது. விலை லிட்டர் ஒன்றுக்கு 2.80 ரூபாயாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தம் 530 மொத்த மண்ணெண்ணெய் வணிகர்கள் உள்ளனர். நியாயவிலைக் கடைகளைத் தவிர சுமார் 2,900 தனியார் சில்லறை வணிகர்கள் மண்ணெண்ணெய் வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். சில்லறை விற்பனையாளர் பதிவுச் சான்றிதழ் பெற்று இவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்து வருகிறார்கள், இவர்கள் தவிர, 2,800 கை வண்டிக்காரர்கள் குடும்ப அட்டைதாரர்களின் அதிகப்படியான மண்ணெண்ணெய் தேவையை நிறைவுசெய்கிறார்கள்.

சிறு வணிகர்கள் மற்றும் தேநீர்க் கடைகள் வைத்திருப்பவர்கள் தங்களது மண்ணெண்ணெய்த் தேவைக்கு கைவண்டிக் காரர்களையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. இந்த சிறு வணிகர்களின் சிரமத்தைப் போக்கும் வகையில் இந்த அரசு பொறுப் பேற்றபின் இவர்களுக்கு மாதத்திற்கு 30 லிட்டருக்கு மேற்படாமல் தொழிற்சாலைக்கு வழங்கப்படும் விலையில் மண்ணெண்ணெய் வழங்கலாம் என ஆணையிட்டுள்ளது. இது சோதனை முறையில் தற்போது சென்னை, மதுரை நகரங்களில் அமல்படுத்தப்படும்.

இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் மண்ணெண்ணெய் முழுவதுமாக எடுக்கப்பட்டு விநியோகம் செய்யப்படவேண்டும் என்பதில் இவ்வரசு உறுதிகொண்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு கணிப் பொறி மேலாண்மைத் தகவல் முறை அரசால் உருவாக்கப்பட்டு இவ்வாண்டு ஏப்ரல் மாதம் முதல் நடைமுறையிலுள்ளது.

மக்களுக்குப் பொது விநியோகம் மூலம் வழங்கப்படும் இன்றியமையாதப் பொருட்கள் நல்ல தரத்துடனும் சரியான எடையுடனும் வழங்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும் பொருட்டு அரசு நியாய விலைக் கடைகள் அளவிலும், வட்ட அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலும்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1.6.92 அன்று தலைமைச் செயலகத்தில்- ஏழைப் பெண்களுக்குத் தையல் இயந்திரம் போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.







★ சமுதாயத்தில் மக்கள் வாழ்வதற்காக ஏற்றத் தாழ்வற்ற சமதர்மச் சமுதாயத்தை அமைக்க வேண்டும்; சமுதாயத்திலே பொருளாதாரத்தையும் சமுதாய அமைப்பையும் சமுத்துவ நிலைக்குக் கொண்டுவர வேண்டும்; சமநிலைக்குக் கொண்டுவர வேண்டும்.

டாக்டர் எம்.ஜி.ஆர்.

விழிப்புப் பணிக்குழுக்கள் அமைத்துள்ளது. எடைக் குறைவினைத் தவிர்க்கும் பொருட்டு அரிசி நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலேயே தரப் படுத்தப்படுகிறது. கடைகளின் மீதான மேற்பார்வை வலுப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடை பணியாளர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளது. விழிப்புப் பணிக் குழு உறுப்பினர்களுக்கு அவர்கள் கடமைகள், செயல்பாடு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் கட்டளைகளுக்கிணங்க வலிவூட்டப்பட்ட பொது விநியோகத் திட்டம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதி, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப்பகுதி போன்ற பகுதிகளில் 1.1.1992 முதல் இம்மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் குடும்ப அட்டை பெறாதவர்கள் அனைவருக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. இவற்றிற்குத் தேவையான அனைத்து உள்ளமைப்புகளும் ஏற் படுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்களிடமிருந்து நெல் மற்றும் அரிசி கள்ளத்தனமாகக் கடத்தப்படுவதைக் குறித்து பெறப்படும் தகவல்களைப் பதிவு செய்ய ஜார்ஜ் டவுன் மண்டலத்தில் உள்ள உணவுபொருள் வழங்கல் உதவி ஆணையர் அலுவலகத்தில் ஒரு கட்டுப்பாட்டு அறை திறக்கப் பட்டுள்ளது. 1991-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 1992-ஆம் ஆண்டு சனவரி மாதம் வரை மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 15 நபர்களை 1980-ஆம் ஆண்டு கள்ளச்சந்தைத் தடுப்பு, இன்றியமையாப் பொருட்கள் வழங்கலை பராமரித்தல் சட்டத்தின் கீழ் காவலில் வைத்தனர். உணவுக் கலப்படச் சட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டு 17,828 சட்டபூர்வ மாதரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. அவற்றில் 1,179 மாதிரிகளில் கலப்படம் செய்யப் பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதே காலத்தில் 1,015 இனங்களில் குற்ற வழக்குகள் தொடர்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் இந்த காலத்தில் ரூபாய் 1.96 இலட்சம் அபராதத் தொகை விதிக்கப்பட்டது. 1991-ஆம் அண்டில், 1977-ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகளின் கீழ் 6,638 குற்ற வழக்குகளும் 1985-ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டத்தின் கீழ் 1,015 குற்ற வழக்குகளும் அனுமதிக்கப் பட்டன. இதே காலத்தில் மேற்சொன்ன சட்டங்களின் கீழ், முறையே 6.69 இலட்சம் ரூபாய் மற்றும் 22.86 இலட்சம் ரூபாய் அபராதத் தொகை விதிக்கப் பட்டது.

**விலை ஏற்றத்தை தடுத்தல்**

வெளி அங்காடியில் இன்றியமையாப் பொருட்களின் விலையை மாநில அரசு தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இதனால் இயல்பு மீறிய விலை ஏற்ற இறக்கம் ஏற்படும்போது சரியான நடவடிக்கை எடுக்க முடிகிறது. உயர்ந்து வரும் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அரசு விலைகளுக்கான குழு ஒன்றினை அமைத்தது. இக்குழுவின் பரிந்துரைகளின் படி, வெளி அங்காடியில் பொருட்களின் விலையினைக் கட்டுப்படுத்தும் வகையில் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கங்கள் பருப்பு, மிளகாய், தனியா, கடுகு, மிளகு, வெல்லம், தேயிலை போன்ற 27 பொருட்களை விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாக வாங்கி வெளி அங்காடி விலையை விடக் குறைந்த விலையில் விற்று வருகின்றன. இவை தவிர கட்டாயமாகவோ அல்லது தாமாகவோ, உணவுப் பொருட்களின் விலையினை வியாபாரிகள் குறைக்க செய்வதற்காக, அரிசி, மிளகாய் வற்றல், சமையல் எண்ணெய், பயிறுவகைகள், காய்கறிகள் வியாபாரிகளுடன் தொடர்ந்து கூட்டங்கள் நடத்தப்பட்டன. வர்த்தக லெவியினை 29.1.1992 முதல் நிறுத்தி வைத்ததும், விலை உயர்வினைத் தடுப்பதற்காக மேற்கொண்ட ஒரு முயற்சியே ஆகும். இதனால் லெவி அங்காடியில் அரிசி விலை குறிப்பிடத்தக்க வகையில் குறைந்தது. இந்தப் பலமுனை நடவடிக்கைகள் காரணமாக உணவுப் பொருட்களின் விலைகள் வெகுவாக குறைந் துள்ளது.

**நுகர்வோர் பாதுகாப்பு**

1986-ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டப்படி, கீழ்க்கண்ட அமைப்புகளை இம்மாநில அரசு உருவாக்கியுள்ளது.

1. மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழு;
2. மாநில நுகர்வோர் குறைதீர்க்கும் ஆணையம்;
3. மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் அமைப்புகள்.

**நலத்திட்டங்கள்**

இத்துறையின் மேற்கண்ட பணிகளைத் தவிர தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டத்திற்கு தேவையான அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் போன்றவற்றைச் சத்துணவு மையங்களில் நேரிடையாக வழங்கும் பணியினைச் செய்து வருகிறது. மேலும் பணியாளர் நலத்திட்டத்தின் கீழ் காவல் துறை, தீயணைப்புத்துறை, சிறைத்துறைப் பணியாளர்களுக்கு அரசு ஆணைகளின் படி இன்றியமையாப் பொருட்களை மானிய விலையில் இக்கழகம் வழங்கி வருகிறது. மேலும், இலங்கை அகதிகளுக்கும் இன்றியமையாப் பொருட்களை இக்கழகம் வழங்கி வருகிறது●

**மகளிர் விடுதி**

**பணிபுரியும் மகளிர் தங்குவதற்கான விடுதிகள் நாடெங்கிலும் 605 உள்ளன. இவற்றில் 38,685 பணி புரியும் மகளிர் தங்குவதற்கு வசதி உள்ளது. அவற்றுள், 205 விடுதிகளில் 5,275 குழந்தைகளைப் பகல் பொழுதில் கவனித்து கொள்ளும் வசதியும் உண்டு.**

**கடந்த ஆண்டு இறுதி வரை மகளிர் விடுதிகளுக்காக ரூ.2.84 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 60 விடுதிகள் உள்ளன. இவற்றில் 3,038 பணி புரியும் மகளிர் தங்குவதற்கு வசதி உண்டு. இருபது விடுதிகள் 520 குழந்தைகளைப் பகல் பொழுதில் கவனித்துக் கொள்ளும் வசதியும் கொண்டிருக்கின்றன.**

# பணிபுரியும் சிறுவர்களுக்கு நலநிதி



“ தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறுவர்களுக்கு, மருத்துவ வசதி, பொழுதுபோக்கு வசதி, கல்வி வசதி அளிக்கக்கூடிய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தும் பொருட்டு ஒரு நல நிதியைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது. ”

தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறுவர்களுக்கு, மருத்துவ வசதி, பொழுதுபோக்கு வசதி, கல்வி வசதி அளிக்கக்கூடிய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தும் பொருட்டு, ஒரு நல நிதியைத் தமிழக அரசு 1.1.'91 முதல் உருவாக்கியுள்ளது.

தீப்பெட்டித் தொழிற்சாலை அதிபர்கள், ஒரு தொழிலாளிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.2 வீதம் அளிக்க ஒப்புக் கொண்டுள்ளனர். 54,924 தீப்பெட்டித் தொழிலாளர்கள் இதனால் பெரும் பயனடைவர். மாநில அரசும் இதற்கு இணையாகத் தன் பங்காக, ஆண்டு ஒன்றிற்கு ஒரு தொழிலாளிக்கு ரூ.2 வீதம் அளிக்கும். தற்போது இந்தத் தொகையை ரூ.2-லிருந்து ரூ.10 ஆக உயர்த்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தைப் பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டுள்ள 18,558 தொழிலாளர்களுக்கும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. காமராசர், சிதம்பரனார், திருநெல்வேலி கட்டபொம்மன், வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டங்களில், ஏற்கெனவே அமலிலுள்ள இந்தத் திட்டம், மதுரை, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி மற்றும் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டங்களுக்கும் தற்போது விரிவுப்படுத்தப் பட்டுள்ளது.

இந்தத் தொழிலாளர் நல நிதியை நிர்வகிக்கும்பொருட்டு, எந்த மாவட்டங்களில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அதிக அளவில் அமைந்துள்ளனவோ அம்மாவட்டங்களில் அந்த மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவை இந்த அரசு அமைத்துள்ளது.

தமிழ்நாட்டில், தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் குழு மற்றும் தனி நபர் விபத்து மற்றும் ஆயுள் ஈட்டுறுதித் திட்டம் ஒன்றை அரசு ஏற்படுத்தி உள்ளது. இத்திட்டம் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் 10-லிருந்து 65 வயது வரையிலுள்ள தொழிலாளிகளுக்குப் பொருந்தும்.

இந்தத் திட்டத்தின் கீழ் சந்தாத் தொகை ஆண்டிற்கு ஒரு நபருக்கு ரூ.6 ஆகும். இந்தத் தொகையைத் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினர் கொடுக்கின்றனர். இந்தத் திட்டத்தின் கீழ் ஒருவர் உச்சவரம்பாக ரூ.50,000/- பெற முடியும். 1.7.'91-லிருந்து தேசியக் காப்பீட்டுக் கழகத்தினரால் இந்தத் திட்டம் அமல் செய்யப்பட்டு வருகிறது.

பட்டாசுத் தொழிற்சாலைகளில் சிறுவர்கள் பணிபுரிவதைத் தடுக்கும் பொருட்டு, மேற்படித் தொழிற்சாலைகளில் சோதனைகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களை முடுக்கிவிடுமாறு தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளருக்கு ஆணைகள் இடப்பட்டுள்ளன. மேலும், சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினர், வேலைசெய்யும் தொழிலாளர்களின் வயது பற்றிய சான்றிதழ்களைக் குறிப்பிட்ட படிவத்தில் பராமரித்து வருகின்றனரா என்பதைக் கண்டறியும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பதற்காகத் தொழிலாளர்களால் வேண்டப்படும் வயதுச் சான்றிதழ்களை, அவர்களது பிறந்த தேதி சான்றிதழ்களுடன் ஒப்பிட்டுச் சரி பார்த்து, பின்னர் வயதுச் சான்றிதழ் வழங்கப்படவேண்டும் என்று கிராம நிர்வாக அதிகாரிகளுக்கும், வட்ட ஆட்சியருக்கும் தக்க அறிவுரைகள் வழங்குமாறு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார்கள்.

அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளிகளுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு, சிவகாசியில் ஒரு பயிற்சி நிலையம் நடப்பு ஆண்டில் தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டது. அரசும் இந்தப் பயிற்சி நிலையத்தைத் துவக்க தற்போது அனுமதி அளித்துள்ளது.

கடந்த 4.3.'92 அன்று மண்டலத் தொழிலாளர் நிலையம், அடையாறு, சென்னை-20, என்னும் இடத்தில், இத்துறையினரால் 'தேசியப் பாதுகாப்பு நாள்' கொண்டாடப்பட்டது. அப்போது 'பாதுகாப்பு மேம்பாடு' பற்றிய ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டதும் இங்கே குறிப்பிடத்தக்கது.



“ கிராமக் கைவினைஞர்களுக்கு
வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில்
கதர் கிராமத் தொழில்கள்
பெருமளவில் வளர்ந்து வருகின்றன. ”



மாண்புமிகு ஊரகத் தொழில் வளர்ச்சித்துறை அமைச்சர்
**எஸ். நாகூர் மீரான்**

# கண்ணுக்கினிய கதர் உற்பத்தி

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், ஊரக வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கிராமப் பகுதிகளில் கதர் கிராமத் தொழில்களை மேம்படுத்துவதற்குரிய திட்டங்களை வகுத்து, வளர்ச்சியுறச் செய்து, ஒருங்கிணைத்துச் செயல்படுத்தும் நோக்கத்துடன் 1.4.1960-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது.

வாரியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு

அ. ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்பை ஏற்படுத்துதல்.

ஆ. உள்ளூர்ப் பகுதிகளில் கிடைக்கும் வசதிகளை பயன்படுத்தி விற்பனை செய்யக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல்.

இ. மக்களிடம் தற்சார்பு நிலையை ஏற்படுத்தி சமுதாய விழிப்புணர்வை வளர்த்தல்.

பம்பாயில் செயல்படும் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள 96 கிராமத் தொழில்களில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 57 கிராமத் தொழில்களை கீழ்க்காணும் மூன்று அடுக்கு முறையில் செயல்படுத்தி வருகிறது.

1. வாரியத்தின் சொந்தத் தொழில் அலகுகள்
2. வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்
3. வாரியத்தின் நிதி உதவி பெறும் தனி நபர் கைவினைஞர்கள்.

கதர்த் திட்டங்கள், உண்ணா எண்ணெய் சோப்புத் தொழில்கள் ஆகியவை வாரியத்தின் சொந்தத் தொழில் அலகுகளாகச் செயல்படுகின்றன. பனைத் தொழில், கந்தசாரி வெல்லம் தயாரிக்கும் தொழில், பருப்பு, தானிய வகைத் தயாரிப்பு, தும்பு, சுண்ணாம்பு, மூங்கில், பிரம்புத் தொழில் போன்ற தொழில்கள், கூட்டுறவு அமைப்புகள், தனிநபர் கைவினைஞர் மூலமாகச் செயல்படுத்தப்படுகின்றன. ஏனைய அனைத்துத் தொழில்களும் வாரியத்தின் தொழில் பிரிவுகள், தொழில் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தனிநபர் கைவினைஞர் அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

கதர்

வாரியம் 694 கிராமிய நூற்பு மையங்

களையும், 82 கதர் உற்பத்தி மையங்களையும் செயல்படுத்தி வருகிறது. கதர் தொழில்கள் மூலம் சுமார் 50,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதில் மகளிர் மட்டும் 37,000 பேர் என்பது குறிப்பிடத்தக்கது.

புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் கதர் தொழில்கள் மூலமாக கூடுதலாக 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

வாரியத்தின் கீழ் முன்னரே 159 கதர் அங்காடிகள் இயங்கி வருகின்றன. புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் புதிதாக 19 கதர் அங்காடிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வாரியத்தின் கதர் பிரிவின் கீழ் 22 பட்டு அலகுகள் செயல்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டு ரூ.20.29 கோடியாக இருந்த பட்டு உற்பத்தி, தமிழக அரசின் இந்த ஓராண்டு ஆட்சிக் காலத்தில் ரூ.22.80 கோடிக்கு அதிகரித்துள்ளது. இது 11 சதவிகிதம் அதிகமாகும்.

பெரும்பாலும் கதர் உற்பத்தி அலகுகளும், பட்டு உற்பத்தி அலகுகளும், கிராமிய நூற்பு நிலையங்களும் கிராமப் புறங்களில் அமைந்துள்ளன. புதிய அரசின் ஆட்சிக் காலத்தில் 20 தொழிற் கூடங்களும், 6 கிடங்குகளும் ஒவ்வொன்றும் ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. கட்டடப் பணிகள் முடிந்தவுடன் இதுவரை வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வந்த வாரிய அலகுகள் சொந்தக் கட்டடத்தில் செயல்படும்.

பாலியஸ்டர் நூல் இழைகளை இதுவரை கூட்டுறவு நூற்பு ஆலைகளிலிருந்தும் தேசியப் பஞ்சாலைக் கழகத்திலிருந்தும் வாரியம் வாங்கி வந்தது. இப்புதிய அரசு காலத்தில் பாலியஸ்டர் - பருத்தி இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து பாலியஸ்டர் பட்டைகள் தயாரிக்கும் அலகுகள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றின் மூலம் தயாரிக்கப்பட்ட பாலியஸ்டர் பட்டைகள் சுமார் 100 கிராமிய நூற்பு நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

### கிராமத் தொழில்கள்

ஊரகப் பகுதிகளில் கிடைக்கின்ற மூலப் பொருட்களையும், மனித சக்தியையும் முறையாகப் பயன்படுத்தி அப்பகுதிகளில் வறுமையை அகற்றுவதற்கு வாரியம் கிராமத் தொழில் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குறைந்த மூலதனத்தில் அதிகப்படியான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதே கிராமத் தொழில் திட்டங்களின் சிறப்பாகும். இவ்வாரியத்தின் கீழ் 239 துறை அலகுகளும், 1,635 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன.



மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 1.6.92 அன்று, ஊனமுற்ற ஒரு சிறுவனுக்கு மூன்று சக்கர வண்டி வழங்கி உதவினார்.

இவற்றில் கதர் கூட்டுறவுச் சங்கங்களும் அடங்கும். முந்தைய ஆண்டில் ரூ.251.59 கோடியாக இருந்த உற்பத்தி இப்புதிய அரசின் ஆட்சிக் காலத்தில் ரூ.277.17 கோடிக்கு உயர்ந்துள்ளது. இது 10 சதவீதம் அதிகமாகும். இதைப்போலவே கிராமத் தொழில் பொருட்கள் விற்பனையும் ரூ.280.77 கோடியிலிருந்து இப்புதிய அரசின் காலத்தில் ரூ.310.14 கோடிக்கு உயர்ந்துள்ளது. இது 11 சதவீதம் அதிகமாகும்.

கிராமத் தொழில் பொருட்களை விற்பனை செய்வதற்காகவே 9 கிராமிய தொழிற் பேட்டைகள் விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. விற்பனையை மேலும் அதிரிக்க இப்புதிய அரசின் காலத்தில் திருவண்ணாமலையில் ஒரு புதிய கிராமத் தொழில் பொருட்





களை விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வாரியம், சென்னை குறளகத்தில் மிகப் பெரிய கதர் அங்காடியை நடத்தி வருகிறது. இக்கதர் அங்காடியில் கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் ஆண்டு விற்பனை ரூ.12.90 கோடியைத் தாண்டியுள்ளது. கதர், கிராமத் தொழில் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், கைவினைப் பொருட்கள், இல்லத் தேவைக்கான பொருட்கள் இக்கதர் அங்காடியில் விற்பனையாகின்றன. விற்பனையை மேலும் அதிகரித்திடவும், சென்னை நகர் முழுவதும் பொது மக்களிடம் விளம்பரம் செய்யும் நோக்கத்துடன் இந்த அரசின் ஆட்சிக் காலத்தில் ஒரு நடமாடும் ஊர்தி வாங்கப்பட்டு விற்பனையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

### பனைத் தொழில்

இந்தியாவில் தமிழ்நாட்டில் பனை மரங்கள் அதிகம் உள்ளன. ஏறத்தாழ 5 கோடி பனை மரங்கள் தமிகத்தில் இருக்கின்றன. இதன்மூலம் அதிக அளவில் பனைத் தொழிலில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஆரம் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்கள், மாநில பனை வெல்லக் கூட்டுறவு இணையம் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. உண்ணும் பொருட்களாகிய பதனீர், பனஞ் சர்க்கரை, பனங் கற்கண்டு, பனைவெல்லம், பனை மிட்டாய் வகைகள் மற்றும் உண்ணாப் பொருட்களாகிய பனை நார், தூரிகை, பனை ஓலைப் பொருட்கள் முதலியவை உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

பனைத் தொழில் மூலம் அதிக அளிவல் அன்னியச் செலாவணி ஈட்டப்படுகிறது என்பது சிறப்பான ஒன்றாகும். ஒரு ஆண்டுக்குச் சுமார் ரூ.1.55 கோடிக்குப் பனந்தும்பு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பதநீர் இறக்கும் காலங்களில் கிராமியக் கைவினைஞர்களுக்கு அதிகப்படியான வேலைவாய்ப்பும், பதநீர் இறக்காத காலங்களில் முறையான அளவில் அதிகப்படியான வேலைவாய்ப்பும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. பனைத் தொழில் செய்து பதநீர் இறக்கும் தொழிலாளர்கள், விபத்துக்குள்ளாகி மரணமடைய நேர்ந்தால் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.10,000 உதவித் தொகை அவர்களுடைய குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது.

பனைத் தொழிலின் முக்கியத்துவத்தை மனதில் கொண்டு, இத்தொழிலை மேலும் வளர்ச்சியடையச் செய்திட வேண்டி, பனைத் தொழிலுக்கு என ஒரு வாரியம் ஏற்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்து, 20.4.92-இல் தமிழகச் சட்டப் பேரவையிலும் இது அறிவிக்கப்பட்டுள்ளது.

### சோப்புத் தொழில்

வாரியம் வழக்கமாக சலவைச் சோப்பும், குளியல் சோப்பும் உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகிறது. வாரியத்தில் டிட்டர்ஜெண்ட் சோப்பும், உற்பத்தி செய்யப்படுகிறது; மேலும், இதற்காக புதுக்கோட்டை, மூலங்குடி (நாகப்பட்டினம்), பண்ருட்டி (தென்னார்க்காடு), பல்லடம் (கோவை) கொடுங்கையூர், காங்கேயம் (பெரியார்) முதலிய 6 இடங்களில் டிட்டர்ஜெண்ட் சோப்பு அலகுகள் இப்புதிய அரசின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சோப்பு உற்பத்தி செய்ய ஆசிட் சிலரி ஒரு அத்தியாவசியமான இரசாயனப் பொருளாகும். இந்த இரசாயனப் பொருள் உற்பத்தி செய்யும் 2 அலகுகள் தஞ்சை நெடுந்தெருவிலும், கோவை மாவட்டம் நல்லூரிலும் இந்தப் புதிய அரசின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மிகவும் பின்தங்கிய ஏழை மக்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய தொழில் தோல் தொழிலாகும். இத்தொழிலில் ஏழ்மை நிலையில் உள்ள காலணித் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற தோல் தைக்கும்

தையல் இயந்திரத்துடன், காலணி தொழிற் கூடம் ஒவ்வொருவருக்கும் வழங்கும் சிறப்பான திட்டத்தை இவ் வாரியம் செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின் மூலம் 1981-82-ஆம் ஆண்டு முதல் 7,250 தொழிற் கூடங்கள் வாரியத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளன. ஒரு தொழிற் கூடத்தின் மதிப்பு தையல் இயந்திரத்துடன் சுமார் ரூ.10,000 ஆகும். இப்புதிய அரசு இவ்வாண்டில் மட்டும் ஏழை காலணித் தொழிலாளர் களுக்கு 2000 தொழிற் கூடங்கள் வழங் கிட ரூ.200 இலட்சம் அனுமதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### மட்பாண்ட தொழில்

இத்தொழிலின் கீழ், விருத்தாச் சலத்தில் இதற்கு முன் செயலற்றுப் போயிருந்த ஒரு மட்பாண்ட அலகை வாரியம் மேற்கொண்டு வழவழப்பான பீங்கான் மட்பாண்டங்கள் தயாரிப் பதன் மூலம் இந்த புதிய அரசின் காலத்தில் இவ்வலகு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வலகில் உற்பத்தியாகும் பொருட்கள் சென்னை கதர் அங்காடியில் விற்பனை யாகின்றன.

### செயற்கை இரத்தினக் கற்கள் பட்டைத் தீட்டும் தொழில்

செயற்கை இரத்தினக் கற்களுக்குப் பட்டைத் தீட்டும் தொழில் வாரியம் எடுத்துக்கொண்டுள்ள ஒரு புதிய தொழிலாகும். இத்தொழிலில் பயிற்சி பெற்றுள்ள தொழிலாளர்களை உறுப் பினர்களாகக் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, அவற்றின் மூலம் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. திருச்சி மாவட்டத்தில் ஸ்ரீரங்கம், அல்லித் துறை, மனச்சநல்லூர் ஆகிய மூன்று இடங்களில் 3 கூட்டுறவுச் சங்கங்கள் இப் புதிய அரசின் காலத்தில் தொடங்கப் பட்டுள்ளன.

### மின்னணுத் தொழில்

மின்னணுத் தொழிலும் இவ்வாரியத் தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒரு நவீன தொழிலாகும். இப்புதிய அரசின் காலத் தில் 217 உறுப்பினர்களைக் கொண்டு (பெரும்பாலும் பெண்கள்) 5 கூட்டுறவுச் சங்சங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர்களுக்குப் போதிய வேலைவாய்ப்பு இத்தொழில் மூலம் அளிக்கப்பட உள்ளது.

### கூட்டுறவு

கிராமப்புறங்களில் பல்வேறு தொழில் களில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களைக் கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பின்கீழ் கொண்டுவந்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து, அவர்களது வாழ்க் கைத் தரத்தை மேம்படுத்த இப்புதிய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது. அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் மூலப் பொருள்கள், மனித சக்தி, போக்குவரத்து வசதிகள் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டு, வெவ்வேறான கூட்டுறவுச் சங்கங்கள் தொழில் வாரியாக அமைக்கப்படுகின் றன. முன்னரே செயல்பட்டு வரும் 1,579 கூட்டுறவுச் சங்கங்களுடன் இந்த அரசின் காலத்தில் 56 கூட்டுறவுச் சங் கங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தச்சு கொல்லு, ஸ்கேன் விஷன், மின் னணு செங்கல், சுண்ணாம்பு, மட் பாண்டம், பாய் முடைதல், புளி பக்குவப் படுத்துதல், பழப்பக்குவப்படுத்துதல், செயற்கை வைரப்பட்டை தீட்டுதல் அவற்றை வழவழப்பாக்குதல், தோல் பொருட்கள் தயாரித்தல் ஆகிய தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், தமிழ்நாடு முழுவதும் உள்ள பல்லாயிரக்கணக்கான கைவினைஞர்கள் இவ்வாரியத்தின் மூலம் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர்.

இப்புதிய அரசு 1,090 நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் பட்டை விழு துகள் வழங்கிடவும், செயற்கை வைரம் பட்டைத் தீட்டும் தொழிலாளர்கள் பயன் பெறவும், குறளகம் கதர் அங்காடியில் கம்ப்யூட்டர் பணப்பதிவு செய்யும் இயந் திரம் வாங்கவும் பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ.17.43 இலட்சம் வழங்கியுள்ளது.

கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் வரன்முறைகளுக்குட்பட்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், பல்வேறு தொழில் செய்யும் தனிப்பட்ட கைவினைஞர்களுக்கு நிதி உதவி செய்து வருகிறது. இதுவரை பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள 67,170 கைவினைஞர்களுக்கு நிதி உதவி செய்யப்பட்டுள்ளது. புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் மட்டும் 5,000 கைவினைஞர்களுக்குத் தமிழகம் முழுவதிலும் பல்வேறு தொழில்களின்கீழ் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாரியத்தின் மூலம் சென்ற ஆண்டுவரை மொத்தம் 9.99 இலட்சம் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு வரை 10.83 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் மட்டும் சுமார் 83,100 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பது சிறப்பான ஒன்றாகும்.

மேற்கண்ட செயல் திட்டங்கள் மூலம் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் ஏழை மக்களின் துயர் துடைக்க வேண்டும் என்ற இப்புதிய அரசின் இலட்சியங்களை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தனது பெரும் பங்கை ஆற்றி வருகிறது. ●


தமிழரசு

சந்தா விவரம்

தமிழ் ......... ஓராண்டு = ரூ.24
அரையாண்டு = ரூ.12

ஆங்கிலம் ... ஓராண்டு = ரூ. 12
(அரையாண்டுச் சந்தா கிடையாது)

விவரங்களுக்கு :
உதவி இயக்குநர் : தமிழரசு,
(விற்பனை மற்றும் விநியோகம்)
அரசினர் தோட்டம், சென்னை-600 002.




—12-ஆம் பக்கத் தொடர்ச்சி

### தீயணைப்புத்துறை சேமநலநிதிக்கான அரசு மானியம்

இவ்வாண்டு முதல் இந்நிதிக்கு அரசு வழங்கும் மானியம் ரூ.60,000 லிருந்து ரூ.1,50,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

### டெரிகாட்டன் சீருடை வழங்குதல்

உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் பதவிக்குக் கீழுள்ள அனைத்து அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் கடந்த ஆண்டு வரை ஒரு செட் டெரி காட்டன் சீருடையும், ஒரு செட் பருத்தி நூலாலான சீருடையும் வழங்கப்பட்டன. இனிமேல் இவர்களுக்கு இரண்டு செட் டெரிகாட்டன் சீருடை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

### உபரிப்பணிப்படி மற்றும் உணவுப்படி உயர்த்துதல்

நிலையத் தீயணைப்பு அலுவலருக்குக் கீழுள்ள பணியாளர்களுக்கு அளிக்கப் படும் உபரிப்பணிப்படி மற்றும் உணவுப் படி ஆகியவற்றை உயர்த்தி அரசு ஆணை யிட்டுள்ளது.

### இரண்டு சக்கர வாகனங்களுக்கு வரி விதிப்பு விலக்கு

தமிழ்நாட்டின் ஆளும் கட்சியான அ.இ.அ.தி.மு.க. தனது தேர்தல் அறிக் கையில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால், 50 சிசி திறன் கொண்ட இரு சக்கர வாகனங் களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்களிக் கப்படும் என்று தெரிவித்தது.

அவ்வாறே இவ்வரசு பதவி ஏற்றபின் 50 சிசி திறனுள்ள இரு சக்கரவாகனங் களுக்கு வரி விலக்களித்துள்ளது.

மேலும் ஒப்பந்த ஊர்திகளான ஆம்னி பேருந்து மற்றும் சுற்றுலா பேருந்துகளுக்கு ஒரு காலாண்டுக்கு ஒரு இருக்கைக்கான மோட்டார் வாகன வரி ரூ.2,000-லிருந்து ரூ.500 ஆக 1.4.90 முதல் குறைக்கப்பட்டது. அவ்வாறே மாற்றுப் பேருந்து ரிசர்வ் பேருந்துகளுக்கான வரி விகிதம் சாதாரணப் பேருந்துகளுக்கான வரி விகிதத்தில் 4-இல் மூன்று பங்கு மட்டும் செலுத்த வரி விகிதம் குறைக்கப் பட்டது. (முன்பு இவ்வரி விகிதம் சாதாரணப் பேருந்துகளுக்கு ஒத்த அள விலேயே இருந்தது.)

லாரி உரிமையாளர்கள் சங்கத்திட மிருந்து, பெறப்பட்ட முறையீடுகளின் அடிப்படையில், எடை ஏற்றப்பட்ட நிலை யில் 13,000 கிலோவிலிருந்து 15,000 கிலோ கிராம் வரையுள்ள சரக்கு வாகனங் களின் வரி விகிதம் ரூ.2,490-லிருந்து ரூ.2,190 ஆக 1.10.91 முதல் குறைக் கப்பட்டது.

### மோட்டார் வாகன விபத்துக்களுக்கான நிவாரணத் தொகை அதிகரித்தல்

முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதி 1978-79 முதல் ஏற்படுத்தப்பட்டு, விபத்தில் உயிரழந்தோர் மற்றும் காய முற்றோருடைய உறவினருக்கு விரைவில் நிவாரணத் தொகை அளித்து வருகிறது. 1991-92-இல் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் அறிவித்தவாறு கருணைத் தொகை வீதங்கள் உயர்த்தப்பட்டுள்ளன.

### கணிப்பொறிமயமாக்குதல்

இவ்வரசு, சென்னை மாநகரிலுள்ள நான்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் கணிப்பொறிகளை (Computer) நிறுவுவதற்கு 13.50 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது.

### ஏற்றுமதி ஏறுமுகம்

சுறுசுறுப்பு பானம் தேனீரைத் தந்திடும் தேயிலையின் ஏற்றுமதியும் விறுவிறுப்பாகவே உள்ளது. கடந்த நிதியாண்டில் (1991-92) ரூ.1,157 கோடி மதிப்புள்ள 210.39 மில்லியன் கிலோ தேயிலை இந்தியாவிலிருந்து ஏற்றுமதி ஆகியுள்ளது. அதற்கு முந்தைய நிதியாண்டில் (1990-91) ரூ.1,071 கோடி மதிப்புள்ள 199.17 மில்லியன் கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது.




★ மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கும் திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் நிதியாண்டில் 4,121 குடும்பங்களுக்கு ரூ.68.21 இலட்சம் செலவில் நிலங்களைக் கையகப்படுத்தி வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டது.

பணியைக் குறித்த நேரத்தில் எவ்விதக் குறைபாடின்றி முழுமையாக விரைவாக ஆற்ற நினைக்கும் இந்த யுகத்தில் கணிப் பொறியின் பயன்பாடு பெரிதும் உதவும். கணிப்பொறியின் உதவியோடு போக்கு வரத்துத் துறை, பொதுமக்களுக்கு உரிய வாறு, பயனுள்ள முறையில் சிறந்த வேலை செய்ய முடியும்.

**கவுண்ட்டர் முறை ஏற்படுத்தல்**
**(Counter System)**

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங் களிலிருந்து தரகர்களை நீக்கவும், பொது மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யவும், போக்குவரத்துத் துறை, அனைத்து அலு வலகங்களிலும் கவுண்ட்டர் முறையைக் கொண்டு வந்துள்ளது.

**சென்னை மாநகரில் 4 போக்குவரத்துப் பிரிவு அலுவலகங்கள் ஏற்படுத்தல்**

பொதுமக்கள் சென்னை மாநகரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங் களுக்குச் செல்ல நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியிருப்பதால் ஏற்படும் இடர்ப்பாட்டைக் களைவதற்காக அரசு, சென்னை மாநகரில், பெரம்பூர், வளசரவாக்கம், தண்டையார்ப்பேட்டை மற்றும் திருவல்லிக்கேணி ஆகிய நான்கு போக்குவரத்துப் பிரிவகளைத் தொடங்கி யுள்ளது.

**எல்லைப்புறப் பகுதிகளில் சோதனைச் சாவடிகள் ஏற்படுத்துதல்**

பிற மாநிலங்களிலிருந்து வரும் வண்டிகள் மோட்டார் வண்டி வரி ஏய்ப்புச் செய்வதைத் தடுக்கும் பொருட்டு, பின்வரும் குறிப்பட்ட சில பகுதிகளில் சோதனைச் சாவடிகளை ஏற்படுத்த அரசு அனுமதித்துள்ளது.

கோபாலபுரம் (கோயம்புத்தூர் மாவட்டம்), இராணிப்பேட்டை (வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம்), பர்கூர் (பெரியார் மாவட்டம்)

இச்சோதனைச் சாவடிகள் அனைத்தும் செயல்பட்டு வருகின்றன.

**மாசுக் கட்டுப்பாடு**

மாசுக் கட்டுப்பாடு குறித்து தற்போது அதிக அளவு கவனம் செலுத்த வேண்டி யுள்ளது. தற்போது காற்றுத்தூய்மை கெடுவதற்கு மோட்டார் வண்டிகளே பெரிதும் காரணமாக விளங்குகின்றன. இவ்வாறு மாசுபடுவதைக் கட்டுப்படுத்த மோட்டார் வண்டிகள் புகை, ஆவி முதலியவற்றை எந்த அளவுக்குத்தான் வெளியேற்றலாம் என்பது குறித்து மத்திய அரசு சட்டப்படி வரையறுத்துள்ளது. வரையறுக்கப்பட்ட அளவிற்கு மேல், புகை முதலியவற்றை வெளியேற்றும் வண்டிகளின் உரிமையாளர்கள், அவ் வண்டிகளிலுள்ள குறைபாடுகளைக் களைந்து சோதனைக்காக வண்டிகளை மீண்டும் கொண்டுவர வேண்டும்.

மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு இத்திட்டத்தை இந்த அரசு செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனைச் செயல்படுத்துவதில் முதற்கட்டமாகச் சென்னையில் உள்ள சரக்கு வண்டிகள் தகுதிச் சான்றிதழ் பெறும்போது மாசுச் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தனது பணியாளர்கள் மற்றும் கருவிகள் கொண்டு இப்பணியைச் செயல்படுத்து மாறு ஆணையிடப்பட்டுள்ளது. இவ் வாரியம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் தவிர பிற இடங்களில் சோதனைகளை மேற்கொள்ளாது.

இத்திட்டம் சென்னையில் 19.2.1992 அன்று முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**நாட்டுடைமையாக்கல்**

பேருந்துகளை முழுமையாகத் தேசிய மயமாக்குவது என்பது முந்தைய அரசின் கொள்கையாக இருந்தது. இக்கொள்கை யின்படி, தனியார் உரிமையாளர்கள் பேருந்துகளைத் தொடர்ந்து இயக்குவது இயலாது. தற்போதைய அரசு, பொது மக்களின் நலன் கருதி, தனிப்பட்ட உரிமையாளர்கள் தற்போது இயக்கி வருகின்ற ஒப்புதல் அளிக்கப்பட்ட வழித்தடங்களிலேயே அவர்கள் பேருந்து களைத் தொடர்ந்து இயக்கலாம் என முடிவு செய்துள்ளது. தற்போதைய அரசின் கொள்கைக்கு இணங்க, ஒரு சட்டமுன்வடிவு அதாவது தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் (தனி விதித் துறைகள்) சட்டம் 1992 சட்டமன்றப்பேர வையில் நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்ப நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது மேற் சொன்ன சட்ட முன்வடிவானது குறைந்த எண்ணிக்கையில் பேருந்துகளைத் தற் போது இயக்கிவரும் தனியார் உரிமை யாளர்கள் தொடர்ந்து ஒப்புதலளிக்கப்பட்ட வழித்தடத்தில் தங்கள் பேருந்துகளை ஓட்டுவதற்குப் பாதுகாப்பு அளிக்கும்.

**முன் கட்டணம் செலுத்தி ஆட்டோவில் பயணம் செய்தல் முறை**

ஆட்டோ ஓட்டுநர்கள் மீட்டர் கட்டணத் திற்கு மேல் கூடுதல் கட்டணம் கேட்பது, குறிப்பிட்ட இடங்களுக்கு வர மறுப்பது, மீட்டர் போடாமலேயே ஓட்டுதல் போன்ற பல புகார்கள் பொதுமக்களிட மிருந்து பெறப்பட்டுள்ளன.

எனவே, முன்கூட்டியே கட்டணம் செலுத்தி ஆட்டோவில் பயணம் செய்யும் முறையை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனை செய்து முதற்கட்டமாகச் சென்னையில் திருவள்ளுவர் பேருந்து நிலையத்திலும், எழும்பூர் மற்றும் சென்ட்ரல் இரயில் நிலையங்களிலும், மதுரையில் அண்ணா மற்றும் பெரியார் பேருந்து நிலையங்களிலும் மற்றும் இரயில் நிலையத்திலும் அமல்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ் விடங்களிலிருந்து ஆட்டோக்கள் நகரின் பல பகுதிகளுக்குக் குறிப்பிட்ட கட்டண வீதத்தில் விடப்படும். கிலோமீட்டருக்கு ரூ.3 என்ற வீதத்தில் கட்டணம் நிர்ணயிக்கப்படும். இம்முறையினால், பொதுமக்களுக்கு இரயில் மற்றும் பஸ் நிலையங்களில் ஆட்டோ அமர்த்துவதில் உள்ள சிரமங்கள் தவிர்க்கப்படும். இம் முறை 1.6.1992 முதல் மதுரையில் அமலுக்கு வருகிறது. சென்னையில் விரைவில் அமலுக்கு வரும்.

**1992-93 பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள்**

1992-93 பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் புதிய போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் கூடுதல் பணியாளர்கள், புதிய கட்டடங்கள் ஆகியன ஏற்படுத்த அரசு ரூ.76.67 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் புட்டுள்ளது. ●



**மதியை அறியாதவனும், விதியை அறியாதவனும், வாழ்க்கை நிலையை அறியாதவனும், அறம் செய்யாதவனும், மனத்தை அடக்காதவனும், பெரியோரை வணங்காதவனும் ஆன்மீக நெறியில் முன்னேற முடியாது.**

- அண்ணல் காந்தியடிகள்.

# வண்ணக் கைத்தறிகளுக்குப் பெருகிடும் வரவேற்பு!

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்
**இ. மதுசூதனன்**



**“கண்ணைக் கவரும் வண்ணக் கைத்தறித் துணிகளுக்கு இன்று உலகெங்கும் பெரும் வரவேற்பு உள்ளது. கைத்தறி நெசவாளர்களுக்கு அரசு பல உதவிகளையும், சலுகைகளையும் அளித்து வருகிறது.”**

குறைந்த வருவாய் ஈட்டும் கைத்தறி யாளர்களுக்கு நிறைந்த வருவாய் அளிக் கும் பொருட்டு கைத்தறியை விசைத்தறி யாக மாற்றும் பத்தாண்டுத் திட்டம்.

● கைத்தறியிலேயே உற்பத்தியைப் பெருக்கவும், உயர்ரகத் துணிவகை உற்பத்தி செய்யவும், நெசவாளர் வருவாயினை அதிகரிக்கவும், கைத்தறி களை நவீனப்படுத்தும் ஐந்தாண்டுத் திட்டம்.

● கூட்டுறவில் உள்ள நெசவாளர் இறந்து போனால் வழங்கப்படும் காப்பீட்டுக் கருணைத் தொகை ரூ.12,000-லிருந்து ரூ.17,000 ஆக உயர்த்தியது.

● இறந்து போன கூட்டுறவுக் கைத்தறி யாளர் குடும்பத்திற்கு மாதம் ரூ.250 வீதம் 10 ஆண்டுகளுக்கு நெசவாளர் குடும்ப ஓய்வூதியம்.

● கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் களுக்கு ரூ.25,000 மதிப்பீட்டில் தறிக் கூடத்துடன் கூடிய 2,000 குடியிருப் புகள் கட்டுதல்.

● டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை யின் கீழ் கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் களின் பிள்ளைகளின் மேல் படிப்பிற்கு ஆண்டொன்டிற்கு ரூ.1,000 முதல் ரூ.2,000 வரை 16 மாணவர்களுக்கு நிதியுதவி நல்கி கல்வி முன்னேற்றத்திற்கு வழிவகுத்தல்.

● அடிப்படை வசதி ஏதுமின்றி சமூக ரீதியில் பின்னடைந்துள்ள 'விளாகம்' நெசவாளர் கிராமத்தினைத் தத்தெடுத்து அங்குள்ள நெசவாளர்களின் சமூகப் பொருளாதார நிலை உயர்விற்கென ரூ.25 இலட்சம் செலவு மேற்கொள்ளல்.

● ரூ.42.00 கோடி செலவில் 120 இலட்சம் கிராமப்புற நிலமற்ற ஏழை விவசாயிகள் மற்றும் நகர்ப்புறக் குடிசை வாழ் மக்களுக்கு வேட்டி, சேலைகள் இலவசமாக விநியோகித்தல்.

● கைத்தறித் துணிகள் விற்பனையினை மேம்படுத்த காஞ்சிபுரத்தில் பட்டு ரகங் களுக்கெனவும், ஈரோட்டில் பருத்தித் துணி இரகங்களுக்கும் பிரத்தியேகமாகப் பல்மாடி விற்பனை வளாகங்கள் அமைத்தல்.

**கைத்தறி நெசவாளர்கள் சமூக மற்றும் பொருளாதாரத்தில் மேம்பாடடைய தமிழக அரசின் பொன்னான திட்டங்கள்**

மக்களின் அத்தியாவசியத் தேவை களில் முக்கியமானது ஆடை. பன்னெடுங் காலமாகக் கைத்தறி மக்களின் ஆடைத் தேவையினைப்பூர்த்தி செய்வதில் பெரும் பங்காற்றி வருகிறது. தொழில் நுணுக்க மும், கலைவண்ணமும் வழிவழியாக வந்த கைத்திறனும் ஒருங்கிணைந்த இத் தொழில் தமிழகத்தில் பல்வேறு பகுதி களிலும், குக்கிராமங்களிலும் வாழ்ந்து வரும் கணிசமான ஏழை மக்களுக்குப் பிழைப்பதற்கு வழிவகுக்கின்றது என் பதனையும், இவர்களில் பெரும்பாலோர் இன்னும் பழைய தறிகளிலேயே விலை மதிப்பு குறைவான துணிகளை உற்பத்தி செய்வதால், தங்களின் அன்றாட மற்றும் அத்தியாவசியத் தேவைக்குக்கூட ஊதியம் ஈட்ட முடியாத நிலையில் வறுமையின் கோரப்பிடியில் சிக்கி தவிப்பதனை ஏழை மற்றும் நலிவடைந்த மக்களின் நலனில் பெரிதும் அக்கறை கொண்ட இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது.

இவ்வாறு நலவுற்று இருக்கும் இலட்சக் கணக்கான ஏழை நெசவாளர்களின் துயரினைத்துடைக்க புரட்சித் தலைவியின் ஆட்சியில் வாழ்க்கைத் தேவைக்கேற்ப வருவாய் கிடைக்க வழிகோலும் உயரிய நோக்குடன், மாறிவரும் விஞ்ஞான யுகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் தொழில்நுட்ப யுக்திகளை இத்தொழிலிலும் புகுத்தி, அதன் மூலம் உற்பத்தியினைப் பெருக்கும் முகத்தான் இச்சாமான்ய அரசு 37,500 கைத்தறிகளை 75,000 விசைத் தறிகளாக மாற்றும் ஒரு புரட்சிகரமான திட்டத்தினைப் படிப்படியாக வரும் பத்து ஆண்டுகளின் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி நிதி உதவி யுடன் 1991-92-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்துகின்றது.

இத்திட்டத்தின் மூலமாக 1991-92 மற்றும் 1992-93-இல் முறையே 500 மற்றும் 2,500 கைத்தறி நெசவாளர் குடும்பங்கள், பொருளாதாரத்திலும் சமூகரீதியாகவும் மேம்பாட்டினை அடைவர்.

நெடுங்காலமாகவே உபயோகித்து வரும் பழமையான கைத்தறிகளில் சிரமப் பட்டு உழைத்தும், போதிய உற்பத்தியின் மையால் குறைந்த வருவாயினையே கூலி யாகப் பெற்று வாழ்க்கையின் முன்னேற்ற



மின்றி இன்னலுறும் ஏழை நெசவாளர்களின் துயர்துடைக்க புரட்சி செல்வியின் தலைமையிலான தமிழக அரசு அவர்களின் ஊதிய உயர்வினுக்காகவே வரும் ஐந்தாண்டுகளில் ரூ.42.31 கோடி செலவில் 50,000 தொன்மையான கைத்தறிகள் தற்கால உற்பத்தித்தேவைக்கேற்ப நவீனப்படுத்தப்படவுள்ளன. இதன் வாயிலாக 50,000 நெசவாளர் குடும்பங்கள் செழிப்படைய உள்ளன.

வாழ்க்கை முழுவதும் மக்களின் மானம் காக்க ஆடை நெய்து, வறுமையில் உழன்று வாழும் ஏழை நெசவாளர் இறப்பின் அவர்களது குடும்பத்தினர் பிழைக்க வழியின்றி அல்லல்படும் அவல நிலையை மாற்றி அக்குடும்பத்தின் துயர் துடைக்கவும், அக்குடும்ப நலம் பேணவும் எளியோர்களின் நிலமையினை நன்குணர்ந்த இவ்வரசு அவர்களுக்கு பொருளாதார ரீதியில் உதவும் வகையில் முதன் முதலாக ஏன் இந்தியாவிலேயே வேறெங்கும் இல்லாத ஒரு முன்னோடியாக நெசவாளர்கள் ஓய்வூதிய திட்டத்தினை செயல்படுத்துகின்றது. இதன்மூலம் ஓர் நெசவாளர் இறந்தால் அன்னாரது குடும்பத்திற்கு 10 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து மாதந்தோறும் ரூ.250 ஓய்வூதியமாக அரசினால் வழங்கப்படும். அத்துடனின்றி இயற்கை எய்திடும் நெசவாளர்கள் குடும்பத்திற்கு இதுகாறும் வழங்கப்பட்டு வந்த கருணைத்தொகையாக ரூ.12,000 கூட தற்போது கணிசமாக உயர்த்தப்பட்டு ரூ.17,000-மாக வழங்கப்படுகிறது.

இத்தகைய புரட்சிகரமான திட்டங்கள் மூலமாக வருவாயினை ஈட்டும் குடும்பத் தலைவனை இழக்க நேரிடும் நெசவாளர் குடும்பங்கள் பொருளாதாரச் சிக்கல்களில் சிக்கி தவிப்பது சீரழிவது தடுக்கப்பட்டு அவர்களது குடும்பத்தினரும் சமூகரீதியில் நல்ல நிலையில் வாழ்ந்து வளமடைய தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் இத்தகைய சீரிய திட்டங்களை நெசவாளர்களின் நல்வாழ்வுக்கென்று ஆய்ந்தறிந்து செயல்படுத்தியுள்ளார்.

செய்யும் தொழிலனைத்தும் சீர் தூக்கிப் பார்க்குங்கால் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை என்பது சான்றோர் வாக்கு. இத்தகைய சிறப்பான தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களில் பெரும்பான்மையினர் வாழ்வதற்கும், தொழில் செய்வதற்கும் போதிய இடவசதியற்ற இல்லங்களில் வாழ்ந்துவரும் நெசவாளர்களுக்கு தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள், ஒவ்வொரு வீடும் ரூ.25,000 மதிப்பீட்டில் சுமார் 2,000 குடியிருப்புகள் இவ்வாண்டு தமிழக அரசினால் கட்டப்படவுள்ளது. இதனால் 2,000 நெசவாளர்கள் குடியிருப்பு வீடுகள் பெற்று நலமடைவார்கள்.

நெசவாளர்களின் பிள்ளைகளும் பிறரைப்போல நன்கு க்ல்வி பயின்றும், போதிய நிதிவசதி இல்லாத காரணத்தால் தொடர்ந்து படிக்க பொருளுதவி நல்குவதற்கென்றே மறைந்த பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட 'டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை'. இதன் மூலமாக, கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர்களின் பிள்ளைகளின் மேல் படிப்பிற்கென ஆண்டுதோறும் ரூ.1,000-லிருந்து ரூ.2,000 வரை 16 மாணவர்களுக்குக் கல்வி முன்னேற்றத்திற்கென நிதியுதவி வழங்கப்படுகிறது.

பொதுவாக நெசவாளர்கள் கிராமப் பகுதிகளில் தான் வாழ்ந்து வருகின்றனர். நெசவாளர்கள் நிறைந்துவாழும் பல கிராமங்களில் இன்றும் எத்தகைய சமூக முன்னேற்றம் எய்தாத நிலை உள்ளது. அதாவது இக்கிராமங்கள் சமூக ரீதியில் மிகவும் பின்தங்கி, அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத காரணத்தினால் தினம் கடினமாக உழைக்கும் இம்மக்கள் பல வகை நோயால் பாதிக்கப்படுகின்றனர். எனவே, இந்த நிலைமாற, நெசவாளர்கள் நிறைந்துள்ள கிராமங்களைச் சுகாதார மற்றும் சமூக அமைப்பில் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையில் முதற்படியாக புரட்சித் தலைவியின் தலைமையில் ஆன இந்த அரசு செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள 'விளாகம்' என்ற கிராமத்தினைத் தேர்ந்தெடுத்துள்ளது. ரூ.25.00 இலட்சம் செலவில் அக்கிராமத்தினை அனைத்து நிலையிலும் மேம்படவைக்கவும் குறிப்பாக நெசவாளர்களின் நலன் பேணவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவும் இந்தியாவிலேயே முன்மாதிரியாக நமது மாநிலத்தின் தான் செயல்படுத்தப்படுகிறது என்பதால் நமது முதல்வர் நெசவாளர்களின் நலனில் எவ்வளவு ஈடுபாடு கொண்டுள்ளனர் என்பது தெளிவாகின்றது.

மக்களின் அத்தியாவசியத் தேவையில் ஒன்று உடை. பெரும்பான்மையான ஏழை மக்கள் பண்டிகைக் காலங்களில் கூட தங்களுக்கெனப் புத்தாடைகள் வாங்கப் போதிய வசதியின்றி வறுமையில் வாழும் நிலையை நன்குணர்ந்த ஏழைகளுக்கான இவ்வரசு, ரூ.42 கோடி செலவில் 120 இலட்சம் நிலமற்ற ஏழை விவசாயிகள் மற்றும் நகர்ப்புறக் குடிசை வாழ் மக்களுக்கு வேட்டி, சேலைகள் இலவசமாக வழங்கி அவர்களுக்கு உதவியது மட்டுமின்றி, இத்திட்டத்தின் மூலமாக, தமிழகம் முழுவதுமுள்ள நெசவாளர்கள் ஆண்டுதோறும் தொடர்ந்து வேலைவாய்ப்புப் பெறவும் வழிவகுத்துள்ளது.

பெண்ணுரிமைக்கெனப் பாடுபட்ட தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா தாய்க்குலம் என்று அழைத்துப் போற்றிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழித்தோன்றல் புதுமைப் பெண், புத்துலகச் சிற்பி புரட்சித்தலைவியின் ஆட்சியில் முற்றிலும் பெண்களுக்கெனவே ஒரு கூட்டுறவு நூற்பாலை பர்கூரில் நிறுவப்பட உள்ளது. இதன்மூலமாக, பல நூறு பெண்கள் வேலைவாய்ப்பு பெறுவர். இதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் பல மூலைமுடுக்குகளில் உள்ள நெசவாளர்களின் கைத்திறனால் தயாராகும் பல்வேறு நேர்த்திமிகு கைத்தறி துணிவகைகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து ஒரே இடத்தில், பலரும் அவைகளைப் பார்த்து தேர்ந்தெடுத்து வாங்க வழிவகைகாணும் முகத்தான் முதல் முதலாகப் பட்டுத் துணிவகைகளுக்கெனக் காஞ்சிபுரத்திலும் பருத்தித் துணிவகைகளுக்கென ஈரோட்டிலும், ரூ.9 கோடி செலவில் விற்பனை வளாகங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் உற்பத்தியாகும் துணிவகைகளில் விரைந்து விற்பதுடன் கைத்தறித் துணிவகைகளுக்கு மக்களிடையே உள்ள நன்மதிப்பும் உயரம் என்பது திண்ணம்.






# பூரண மதுவிலக்கு

**குடிப்பழக்கத்தால் ஏற்படும் கேடுகள் குறித்து பொதுமக்களிடையே பிரச்சாரம் செய்யவும், இது தொடர்பாக தக்க நடவடிக்கைகள் எடுக்கவும் அரசு செயலாற்றி வருகின்றது.**

பூரண மதுவிலக்கே, தற்போதைய அரசின் கொள்கையாகும். மது, தமிழகத்தில் உள்ள ஏழை மக்களின் வாழ்க்கையில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது. மதுவை அருந்தி தங்களுடைய வாழ்க்கையை அழித்துக் கொள்ளும் மக்களைக் காப்பாற்றும் நோக்குடன், நாட்டு மதுக் கடைகளை மூடுவதால் அரசுக்கு ரூபாய் 391 கோடி ஒரு முழு ஆண்டிற்கு ஏற்படும் வருவாய் இழப்பையும் பொருட்படுத்தாது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றவுடன் முதல் நடவடிக்கையாக 16.7.'91-ஆம் நாள் மலிவுவிலை மதுக்கடைகளை மூடினார்.

நாட்டு மதுக்கடைகளை நடத்துவதில் அல்லது விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கையை எடுத்துள்ளது. அரசு.

மதுவிலக்குக் காரணமாக ஏற்படும் நற்பயன்கள் குறித்தும், குடிப் பழக்கத்தால் ஏற்படும் கேடுகள் குறித்தும் பொதுமக்களிடையே பிரச்சாரம் செய்யவும், இது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய தகுந்த நடவடிக்கைகளை வகுக்கவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாநில அளவிலான மது விலக்குப் பிரச்சாரக் குழு ஒன்று 11.9.91- ஆம் நாள் அமைக்கப்பட்டது. இக் குழுவின் முதற் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில் 22.10.91 அன்று சென்னையில் கூடியது. கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட கருத்துக்களை வெளியிட்டார்.

நாடகங்கள் முதலியவற்றின் மூலமாக மதுவின் தீமைகளை விளக்கும் பிரச்சாரங்களைச் செய்வதற்கான வழிவகைகளை வகுக்க வேண்டும்.

மதுவின் தீமைகளை விளக்கும் முழுநீள பிரச்சாரப் படத்தை அரசே எடுப்பதற்கான வழிவகைகளை வகுக்க வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில், குடிப்பழக்கத்தின் தீமைகளை மக்களுக்குத் தெரிவிக்கும் பிரச்சார நாடகம் தயாரிக்கும் பொறுப்பு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் உறுப்பினர் - செயலரான திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 'வெளிச்சம்' என்ற நாடகத்தை அவர் தயாரிப்பதற்கும், நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் ரூபாய் 2 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது, 'வெளிச்சம்' நாடகம் தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலும் நடைபெற்று வருகின்றது.

திரைப்படம் தயாரிப்பதைப் பொறுத்தவரை, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 85 இலட்சம், குடியின் கொடுமைகளை விளக்கும் பிரச்சாரப் படமான 'நீங்க நல்லா இருக்கணும்' தயாரிப்பதற்காக திருவாளர்கள் ஜீ.வி. பிலிம்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் படத்தின் தொடக்க விழா 29.4.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தப் படம் 2.10.92 காந்தி ஜெயந்தி அன்று வெளியிடப்படவுள்ளது.

# பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைச் சாதனைகள்

**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோர் வாழ்க்கைத் தரம் உயர அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. அதை விளக்குகிறது இக்கட்டுரை.**

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்
**டி. ஜெயக்குமார்**



பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோரின் மேம்பாட்டிற்காக, தமிழ்நாடு அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. 1991-ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கீட்டின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கட் தொகை 556 இலட்சமாகும். இவ்வாரி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| | |
|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் ... | 67.15% |
| தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ... | 19.53% |
| இதர இனங்கள் ... | 13.31% |

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்குத் தரமான கல்வி வசதியளிக்கும் பொருட்டுப் பள்ளிகள், மாணவர் விடுதிகள், படிப்புதவித் தொகைகள், சம்பளம், சிறப்புப் பயிற்சி முதலிய பல வழிகளில் அரசு உதவி வருகிறது. 57,194 மாணவர்களின் நன்மைக்காகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையானது 285 பள்ளிகளை நடத்தி வருகிறது.

“ பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் சிறந்த முறையில் கல்வி கற்கும் பொருட்டு இத்துறையானது 771 மாணவர் விடுதிகளை நடத்தி வருகிறது. இவற்றில் 43,538 மாணவர்கள் உள்ளனர்.

பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும், மாணவர் விடுதிகளில் இல்லாத இவ்வினத்தைச் சேர்ந்த பிற மாணவர்களுக்கும் அரசு படிப்புதவித் தொகைகளை வழங்கி வருகிறது. இதற்கு மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.12,000-க்குள் இருக்க வேண்டும். பயிற்சிக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம், புத்தகங்களுக்கான கட்டணம் ஆகியவை படிப்புதவித் தொகையில் அடங்கும். 9-ஆம் வகுப்பிலிருந்து இந்த உதவி மாணவர்களுக்குக் கிடைக்கிறது. படிப்புதவித் திட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த 3,68,642 மாணவர்களும், மிகப் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த 2,28,431 மாணவர்களும் பயன் பெறுகின்றனர்.

### 1991-92-ஆம் ஆண்டுச் சாதனைகள்

இத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளின் பராமரிப்பை ஒழுங்குபடுத்தும் வகையில், ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு நிர்வாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது. பள்ளித் தலைமையாசிரியரைத் தலைவராகவும், நான்கு பெற்றோர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் (இரண்டு ஆசிரியர் பிரதிநிதிகள் மற்றும் இரண்டு பெற்றோர் பிரதிநிதிகள்) விடுதியின் காப்பாளர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டும் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

பணி சார்ந்த பயிற்சிகளில் சிறப்புப் பயிற்சி பெற விரும்பும் மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக அரசு உதவி செய்கின்றது. 450 மாணவர்களுக்குச் சுருக்கெழுத்துப் பயிற்சியும், 125 மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சியும் மற்றும் 50 மாணவர்களுக்குக் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சியும் ரூ.8.97 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டுள்ளது. பணி சார்ந்த பயிற்சிகளின் கீழ் பயன் பெறுபவர்களின் எண்ணிக்கை 1992-93-ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது. சுருக்கெழுத்துப் பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை 450-லிருந்து 1,000 ஆகவும், கணினிப் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை 125-லிருந்து 500 ஆகவும், கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை 50-லிருந்து 500 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1992-93-ஆம் ஆண்டில் ரூ.66.36 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களில் சில பிரிவினர் சில சிறப்புத் திட்டங்களின் கீழ் பயனடைகின்றனர். ரூ.6,400-க்குள் ஆண்டு வருமானமுள்ள அந்தந்தத் தொழில் செய்பவருக்கு 4,000 சலவைப் பெட்டிகளும், 500 முடி திருத்தும் கருவிகளும் மற்றும் 500 கல்லுடைக்கும் கருவிகளும் இலவசமாக வழங்கப்பட்டன. முடி திருத்தகம், தேய்ப்பகம் மற்றும் நடமாடும் தேய்ப்பகம் அமைக்கக் கோரும் சலவையாளர்களுக்கு ரூ.2,000-லிருந்து ரூ.5,000 வரை இவ்வரசு நிதியுதவியளித்து வருகின்றது.

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கும் திட்டத்தையும் அரசு செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் 1991-92-ஆம் நிதியாண்டில் 4,121 குடும்பங்களுக்கு ரூ.68.21 இலட்சம் செலவில் நிலங்களைக் கையகப்படுத்தி வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. 1992-93-ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கு ரூபாய் ஒரு கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் மாணவியருக்கென்றே ரூ.35.50 இலட்சம் செலவில் 25 புதிய விடுதிகள் திறக்கப்பட்டுள்ளன. 1991-92-ஆம் ஆண்டில் ரூ.65.85 இலட்சம் செலவில் 7 விடுதிக்குக் கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மக்களின் கல்வி, பொருளாதார மற்றும் சமூக நிலையை உயர்த்துவதற்காக இதுபோன்ற பல திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தி வருகின்றது. ”

**அடுத்த இதழிலும்...**

**தமிழ்நாடு அரசின் ஓராண்டுச் சாதனைகள் பற்றிய — இன்னும் சில துறைகள் குறித்த கட்டுரைகள் 'தமிழரசு' அடுத்த இதழிலும் (16.7.'92) தொடரும்...**



**சென்னையில் 3.6.92 அன்று நடைபெற்ற 'உகாதி' தெலுங்குப் புத்தாண்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும், மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. ஜனார்த்தன ரெட்டி அவர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.**








## சீரிய வண்ணம் செயல்படும்

# செய்தி-மக்கள் தொடர்புத் துறை

**செய்தி-மக்கள் தொடர்புத் துறையானது, புதிய அரசு பொறுப்பேற்றபின் ஆற்றியுள்ள சிறப்பான பணிகளின் பட்டியலாக விளங்குகிறது இந்தக் கட்டுரை:**

தமிழ்நாட்டில் புதிய அரசு மலர்ந்த பின் அரசுத் துறைகள் அனைத்துமே போட்டி போட்டுக் கொண்டு செயல்பட்டு வருவதை நாடறியும்.

அதிலும் குறிப்பாக-மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மேலான நிர்வகிப்பில் உள்ள செய்தி- மக்கள் தொடர்புத் துறையானது சீரிய வண்ணம் செயல்பட்டு வருகிறது என்றால் உண்மை - வெறும் புகழ்ச்சியில்லை.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை சிறப்புற ஆற்றிவரும் பணிகள் பற்றி எல்லோர்க்கும் தெரிவிப்பது எமது கடமையாகும்.

**டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடத்தை மாற்றி அமைத்தல்**

சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடத்தை ரூ.1.25 கோடி செலவில் எழில்மிக்கதாக மாற்றி அமைப்பது எனத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் பணி தமிழ்நாடு மாநில கட்டுமானப் பணிக்கழகத்திடம் (Tamil Nadu State Construction Corporation) ஒப்படைக்கப்பட்டு 1.1.1992 அன்று இதற்கான முதல்கட்டப் பணி துவங்கியது.

**டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படத்தைச் சட்டப் பேரவையில் திறந்து வைத்தல்**

மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப்படத்தைச் சட்டப் பேரவையில் 31.1.92 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார். இத்திருவுருவப் படம் ஒன்றரை மாதக் காலத்தில் வண்ணமுற வரைந்து முடித்தது ஆகும்.

**டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடுதல்.**

முன்னாள் முதல்வர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்தநாளை 1992 முதல், ஒவ்வொரு ஜனவரித் திங்கள் 17-ஆம் நாளன்று மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் கொண்டாடுவது என அரசு முடிவு செய்துள்ளது.

அதன்படி 17.1.1992 அன்று டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்த நாளை மாநில அளவில் சென்னையிலும், மற்ற மாவட்டங்களிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.





**மகாகவி பாரதியின் இல்லத்தைப் புதுப்பித்தல்**

திருவல்லிக்கேணியில் உள்ள மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லத்தைப் புதுப்பிக்க அரசு ரூ.5 இலட்சத்தை ஒதுக்கியுள்ளது.

**வள்ளுவர் கோட்டத்திற்குக் குளிர் சாதன வசதி**

25.3.1992 அன்று சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததற்கு இணங்க, வள்ளுவர் கோட்டம் 1992-93-ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதி செய்யப்படவுள்ளது.

**திரைப்பட நகரம் அமைத்தல்**

திரைப்படங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான சகல அம்சங்களையும் கொண்ட ஒரு திரைப்பட நகரைத் தரமணியிலுள்ள திரைப்படப் பயிற்சிக் கல்லூரியில் அமைக்கும் பணியினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் 28.5.1992 அன்று துவக்கி வைத்தார்கள்.

**குடியின் தீமைகளை விளக்கும் திரைப்படம் தயாரித்தல்**

குடிப்பழக்கத்தின் தீமைகளை விளக்கும் ஒரு திரைப்படத்தை ரூ.85 இலட்சம் செலவில் தயாரிக்க அரசு முடிவு செய்துள்ளது. இத் திரைப்படத்தைத் தயாரிக்கும் பொறுப்பு G.V. பிலிம்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**குடியின் தீமையை விளக்கும் நாடகம்**

குடியின் தீமைகளை விளக்கும் 'வெளிச்சம்' என்ற நாடகத்தைச் சென்னையிலும், மாவட்டத் தலை நகரங்களிலும் நடத்த அரசு தீர்மானித்துள்ளது. ரூ.2 இலட்சம் செலவில் இந்த நாடகத்தைத் தயாரிக்கும் பொறுப்பு நேஷனல் தியேட்டர் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

**தரமான, குறைந்த செலவில் தயாரிக்கப்படும் திரைப்படங்களுக்கு உதவித் தொகை வழங்குதல்**

தரமான, குறைந்த செலவில் தயாரிக்கப்படும் திரைப்படங்களை ஊக்குவிக்கும் வகையில் அவைகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை அரசு அமல்படுத்தி வருகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ், முன்பு குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு, 12 முதல் 20 பிரதிகள் வரை வெளியிட்ட திரைப்படங்களுக்கு ரூ.1.50 இலட்சமும், 21 முதல் 30 வரை பிரதிகள் எடுக்கப்பட்ட திரைப்படங்களுக்கு ரூபாய் ஒரு இலட்சமும் வழங்கப்பட்டு வந்தது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை



**ஆசிரியர் பணி என்பது ஒரு புனிதமான கடமை; தன்னைவிடத் தன் மாணவர்கள் பெருமை பெற வேண்டுமென்ற தாயுள்ளம் கொண்டவர்கள் ஆற்றும் அரும்பணியே ஆசிரியர் பணியாகும்.**

ஏற்ற பிறகு, குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான 45 திரைப் படங்களுக்குத் தலா ரூ.2 இலட்சம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்கென ரூ.90 இலட்சம் ஒதுக்கப்பட்டது. தரமான படங்களைத் தேர்ந்தெடுக்க நிபுணர் குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது.

**சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள் ஆகியோருக்கு விருதுகள் வழங்குதல்**

சிறந்த மூன்று தமிழ்ப் படங்களுக்குக் கீழ்க் கண்டவாறு முன்பு விருதுகள் வழங்கப்பட்டு வந்தன.

முதல் பரிசு - ரூ.1,00,000-மும், ஒரு கேடயமும்

இரண்டாம் பரிசு - ரூ.50,000-மும், ஒரு கேடயமும்

மூன்றாம் பரிசு - ரூ.25,000-மும், ஒரு கேடயமும்

சிறப்புப் பரிசு - ரூ.25,000-மும், ஒரு கேடயமும்

**புதிய அரசு இந்த விருதுத் தொகையைக் கீழ்க் கண்டவாறு அதிகரித்துள்ளது.**

முதல் பரிசு - ரூ.1,25,000-மும், ஒரு கேடயமும்

இரண்டாம் பரிசு - ரூ.75,000-மும், ஒரு கேடயமும்

மூன்றாம் பரிசு - ரூ.50,000-மும், ஒரு கேடயமும்

இதுவரை திரையுலகில் சிறந்த நடிகர்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கென 5 பவுன், 3 பவுன் (மொத்தம் 27 பதக்கங்கள்) எனப் பதக்கங்கள் வழங்கப்பட்டு வந்தன. இப்புதிய அரசு அனைவருக்கும் தலா 5 பவுன் மதிப்புள்ள பதக்கங்களை வழங்க முடிவு செய்துள்ளது. இப்பரிசுகளுக்கு உரியவர்களைத் தேர்ந்தெடுக்க அரசு ஒரு நிபுணர் குழுவை நியமித்துள்ளது.

**பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை அதிகப்படுத்துதல்**

பத்திரிகையாளர்களுக்கு இது வரை வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத் தொகையான ரூ.400-ஐ, ரூ.500-ஆக உயர்த்த 1.4.1992 அன்று அரசு ஆணை பிறப்பித்தது.

**மதுரையில் உள்ள அரசு கிளை அச்சகத்தை நவீனப்படுத்துதல்**

மதுரையிலுள்ள அரசு கிளை அச்சகத்தை நவீனப்படுத்த ஒரு ஆப்செட் இயந்திரத்தையும், மற்றும் இரண்டு புதிய இயந்திரங்களையும் வாங்க ரூ.11 இலட்சத்தை ஒதுக்கி 26.11.1991 அன்று அரசு ஆணை பிறப்பித்தது.

**சென்னையில் உள்ள அரசு மத்திய அச்சகத்தை நவீனப்படுத்துதல்**

சென்னையிலுள்ள மத்திய அச்சகத்தை நவீன படுத்தும் வகையில் 5 கணிப்பொறி இயந்திரங்களை வாங்க அரசாங்கம் ரூ.11 இலட்சத்தை ஒதுக்கியுள்ளது. ●



# அறநிலைய ஆட்சித்துறை ஆற்றும் அரும்பணிகள்



**"தமிழகத் திருக்கோயில்களைப் பாதுகாக்கவும், திருக்கோயில் பாதுகாப்புப் படை நிறுவவும், அர்ச்சகர்களுக்கு மாத ஒய்வு ஊதியம் வழங்கவும் இதுபோன்ற பல சிறப்புப் பணிகளில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அரிய பணகள் ஆற்றி வருகின்றது."**

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை மற்றும் திருக்கோயில்கள் நிர்வாகத்தை - மேம்பாட்டைக் கவனிப்பதற்காக ஆலய நிர்வாக வாரியம் 13.12.1991 அன்று அமைக்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும் 18 அலுவல் சார்பற்ற, அலுவல் சார்ந்த பெருமக்களை உறுப்பினர்களாகவும் கொண்டு இவ்வாரியம் செயல்பட்டு வருகிறது. மாவட்டம் தோறும் 12 நபர்கள் கொண்ட மாவட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 17 மாவட்டக் குழுக்கள் ஆலய நிர்வாக வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழகத் திருக்கோயில்களைப் பாதுகாத்துப் பராமரிக்கத் தேவையான நிதி ஆதாரத்தைப் பொது மக்களிடமிருந்து பெறும் வகையில் 'முதலமைச்சரின் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி' ஏற்படுத்தப்பட்டுள்ளது. 9.6.'92-ஆம் நாள் வரையில் ரூ.4.15 கோடி சேர்ந்துள்ளது.

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பகோணத்தில் நடைபெறும் மகாமகம் திருவிழா கடந்த 18.2.92-ஆம் நாளில் மிகச் சிறப்பாக நடத்தப்பெற்றது. இதற்காகச் சுமார் ரூ.46 இலட்சம் செலவில் பல்வேறு திருப்பணி வேலைகள் செய்து முடிக்கப்பட்டன.

தமிழ்நாட்டில் உள்ள சிறப்பு மிக்க திருக்கோயில்களையும் அவற்றில் உள்ள விலைமதிப்பற்ற சிலைகள் மற்றும் ஆபரணங்களைப் பாதுகாக்க 'திருக்கோயில் பாதுகாப்புப் படை' ஒன்றை நிறுவ முடிவெடுக்கப்பட்டுள்ளது. இப்படையில் ஆயிரம் இரண்டாயிரம் நிலைக் காவலர்களும், 3,000 முன்னாள் ராணுவ வீரர்களும் பங்கு பெறுவார்கள். இவ்வமைப்பிற்கு ஆண்டொன்றுக்கு ரூ.528 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

விலைவாசி உயர்வு மற்றும் பூசைப் பொருட்களின் விலை உயர்வைக் கருத்தில் கொண்டு கன்னியாகுமரி தேவசம் வாரியத்திற்கு வழங்கப்பட்டு வரும் ஆண்டு அரசு மானியம் ரூ.13.5 இலட்சம் தவிர, கூடுதலாக ரூ.3 இலட்சம் கடந்த 21.10.91 அன்று வழங்கப்பட்டது. இது தவிர முதலமைச்சரின் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் ஆண்டுதோறும் வழங்க முடிவெடுக்கப்பட்டு இந்த ஆண்டிற்கான தொகை ரூ.10 இலட்சத்தை வழங்க 4.5.92 அன்று ஆணையிடப்பட்டது.

சென்னை மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலின் திருக்குளத்தைத் திருப்பணி செய்து மீண்டும் வரலாற்றுச் சிறப்புமிக்க தெப்பத் திருவிழாவினை நடத்த ரூ.105 இலட்சம் செலவில் பணிகளைச் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. ரூ.35 இலட்சத்தில் இதற்கான முதற்கட்ட பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிருவாகம் இன்னும் சிறப்பாக நடைபெற தற்போதுள்ள 8 மண்டலங்களை 10 மண்டலங்களாகப் பிரித்து ஆணையிடப்பட்டுள்ளது. சிவகெங்கை, வேலூர் ஆகிய இடங்களைத் தலைமையிடங்களாகக் கொண்டு புதிய மண்டலங்கள் கடந்த 20.2.1991 அன்று முதல் செயல்பட்டு வருகின்றன.

தூத்துக்குடியிலும், திருவண்ணாமலையிலும் புதிய உதவி ஆணையர் அலுவலகங்களை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டு 1992-93- ஆம் ஆண்டில் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் உத்தரவிடப்படவுள்ளது. இவ்விரு அலுவலகங்கள் வரப்பெறின் மொத்த உதவி ஆணையர் அலுவலகங்கள் 17-லிருந்து 19 ஆக உயரும். இதற்காக அரசிற்கு ஆண்டொன்றிற்கு ரூ.20 இலட்சம் செலவாகும்.

தமிழ்நாட்டில் குறிப்பிட்ட 10 இடங்களில் சுமார் ரூ.8 இலட்சம் செலவில் அர்ச்சகர்களுக்கும், பூசாரிகளுக்கும் தினசரி பூசை முறைகள் குறித்து புத்தறிவுப் பயிற்சி (Refresher Course) அளிக்க முடிவெடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது.

திருவாரூரில் உள்ள உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையத்தில் சீரான தட்ப வெட்பம் மற்றும் ஈரத் தன்மையைப் பராமரிப்பதற்காக ரூ.9 இலட்சம் செலவில் குளிர் சாதன வசதிகள் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய ஏற்பாட்டால் அம்மையத்தில் உள்ள சிலைகள் பழுதின்றிப் பாதுகாத்துக் காக்கப்பட்டு வரும்.

இருபது ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது அடைந்து ஓய்வு பெற்றுள்ள, வறிய நிலையில் உள்ள வேதபாராயணம் செய்வோர் நாலாயிரம் திவ்யப்பிரபந்தம் பாடுவோர், அரையர் சேவை செய்வோர் அடங்கிய 100 நபர்களுக்கு மாதம் ரூ.300 ஓய்வூதியம் வழங்க 18.12.92- அன்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இருபது ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயதைக் கடந்த ஓதுவார்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியத் தொகை ரூ.250-லிருந்து ரூ.300 ஆக உயர்த்தி வழங்க 20.11.91 அன்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேபோன்று, இருபது ஆண்டுகள் பணிபுரிந்து 60 அகவை அடைந்த வறிய நிலையில் உள்ள 500 அர்ச்சகர்களுக்கு மாதம் ரூ.300 ஓய்வூதியம் வழங்கும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது.

பணியின்போது இறந்துவிடுகின்ற திருக்கோயில் பணியாளர் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த குடும்ப நல நிதி ரூ.10,000- லிருந்து ரூ.20,000 ஆக உயர்த்தி 10.1.92 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

1976-ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து கள்ளத்தனமாகக் கடத்திச் செல்லப்பட்ட தஞ்சாவூர் மாவட்டம்,



பத்தூரிலுள்ள அருள்மிகு விசுவநாதசாமி திருக்கோயிலிலுள்ள விலைமதிப்பிட முடியாத நடராசர் உலோகத் திருமேனியை இலண்டன் நீதிமன்றம் முதல் அதன் பாராளுமன்ற மேல்சபை வரை நீண்டகாலமாக வழக்காடி மீட்கப்பட்டது. 9.8.1991 அன்று இதற்கென்று நடைபெற்ற சிலை மீட்புப் பெருவிழாவில் இலண்டனிலுள்ள இந்தியத் தூதுவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் அந்தச் சிறப்புமிக்க உலோகத் திருமேனியை ஒப்படைத்தார். அச்சிலை மீண்டும் பிரதிஷ்டை செய்யப்படுவதற்காகத் திருக்கோயில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சைவத்திற்கு ஒன்றும், வைணவத்திற்கு ஒன்றும் என்ற வகையில் தமிழ்நாட்டில் இரு ஆகமக் கல்லூரிகள் விரைவிலே அமைக்கப்பட இருக்கின்றன. கல்லூரிகளுக்கான இடங்கள் குறித்து தெரிவுசெய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

**உலமா ஓய்வூதியத் திட்டம்**

தமிழக அரசு பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முன்னோடியாக உள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள பள்ளிவாசல்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்று வறிய நிலையிலுள்ள மௌல்வி, பேஷ், இமாம், அரபு மொழி ஆசிரியர் ஆகியோருக்கு மாதம் ரூ.250 அவர்களது ஆயுட்காலம் வரை உலமா ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. 1991-92-ஆம் ஆண்டில் ஏற்கெனவே பயன்பெற்று வரும் 1,200 எண்ணிக்கையை அதிகரித்துக் கூடுதலாக 100 உலமாக்களுக்கு உலமா ஓய்வூதியம் வழங்கியுள்ளது. இதனால் தமிழ்நாட்டில் உலமா ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை 1,300 ஆக உயர்ந்தது. மேலும் 1992- 93-ஆம் ஆண்டில் மேலும் கூடுதலாக 100 உலமாக்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு அரசு முடிவெடுத்து ஆணை பிறப்பிக்கப்படவுள்ளது. இதனால் உலமா ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை 1,400 ஆக அதிகரித்து வறிய நிலையிலுள்ள பலருக்கும் பயன் கிடைக்கும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.


தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23
சிறப்பு மலர்
ஓராண்டுச் சாதனைகள்